
# காமதேனுவின் முத்தம்!



'காலச்சக்கரம்' நரசிம்மா

# காமதேனுவின் முத்தம்!

'*காலச்சக்கரம்*' நரசிம்மா

ஸ்ரீ பதிப்பகம்

ஸ்ரீ பதிப்பகம்

புதிய எண்.17, பழைய எண்.16,

ஸ்டேட் பாங்க் காலனி விரிவு,

2வது பிரதான சாலை, நங்கநல்லூர்,

சென்னை - 600 061.

தொலைபேசி : 7038304765 / 8050785817

# நூல் விவரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | காமதேனுவின் முத்தம்! |
| நூலாசிரியர் | : | 'காலச்சக்கரம்' நரசிம்மா |
| நூல் உரிமை | : | எழுத்தாளருக்கு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு, டிசம்பர் 2017 |
| தாள் அளவு | : | 1 x 8 கிரௌன் |
| தாளின் தன்மை | : | 11.6 ம.ப. |
| பக்கங்கள் | : | 504 |
| விலை | : | ரூபாய் 300.00 |
| பதிப்பகம் | : | ஸ்ரீ பதிப்பகம்<br>புதிய எண்.17, பழைய எண்.16,<br>ஸ்டேட் பாங்க் காலனி விரிவு,<br>2வது பிரதான சாலை, நங்கநல்லூர்,<br>சென்னை - 600 061.<br>தொலைபேசி : 7038304765 / 8050785817 |

# முன்னுரை

**ந**ண்பர்களே..

வணக்கம்!

'காலச்சக்கரம்' நரசிம்மாவாகிய எனது அடுத்த படைப்பு, 'காமதேனுவின் முத்தம்' இதோ உங்கள் கையில்! எனது புதினங்களை நீங்கள் முன்பே படித்திருந்தாலும், இந்த புதிய நாவல் சற்றே வித்தியாசமானது. முதன்முறையாக, ஸ்ரீ பதிப்பகத்திற்கு நான் எழுதும் புதினம் இது. வழக்கமாக, சரித்திரம் + மர்மம், ஆன்மீகம் + மர்மம், அரசியல் + மர்மம், குடும்பம் + மர்மம் என்று புதினங்களை புனைந்து வரும் நான், பெண்களால் நடத்தப்படும் இந்த பதிப்பகத்திற்கு, பெண்களை மிகவும் ஈர்க்கும், காதலை, காதல் + மர்மம் என்கிற எனது வழக்கமான ஃபார்முலாவுடன் கையாண்டிருக்கிறேன்.

ஆங்கில இலக்கியத்தின் பின்பாக ஓடிக் கொண்டிருந்த என்னை, என் தாய் நாவலாசிரியர் கமலா சடகோபன்தான் தமிழ் இலக்கியத்தின்பால் திருப்பினார். ஆங்கில மாதவியின் பின்னால் ஓடிக்கொண்டிருந்த நான், தமிழ் கண்ணகியை நாடி வந்தேன். ஆங்கில நீரையும், தமிழ்ப்பாலையும் பிரித்துப்

பருகும் அன்னப் பறவையாக இருந்தவன் தமிழுக்கு மட்டும் தொண்டாற்றும் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

என் தந்தை சித்ராலயா கோபு பல வெற்றித் திரைப்படங்களை எழுதியவர். கல்யாண பரிசு, காதலிக்க நேரமில்லை, உத்தரவின்றி உள்ளே வா, கலாட்டா கல்யாணம், காசேதான் கடவுளடா, துவங்கி பாட்டி சொல்லைத் தட்டாதே வரை பல நகைச்சுவை விருந்துகளை அளித்தவர். எனக்கும் ஒரு கட்டத்தில் திரைப்பட மோகம் வந்தது. ஆனால், என் அம்மாவின் அனுமதி கிடைக்கவில்லை. எனவே சின்னத் திரையில், கிருஷ்ணா காட்டேஜ், அபிராமி, வித்யா போன்ற தொடர்களை எழுதினேன். ஆயினும், திருப்தி கிட்டவில்லை. சோர்ந்து போய் இருந்த என்னை, என் அம்மாதான் ஊக்குவித்து, 'காலச்சக்கரம்' என்கிற அரசியல் மர்ம நாவலை எழுத தூண்டினார். இதுவே எனது முதல் நாவல். தொடர்ந்து 'ரங்கராட்டினம்' என்கிற ஆன்மீக மர்மம், 'சங்கதாரா', 'பஞ்சநாராயண கோட்டம்', 'கர்ண பரம்பரை', 'குபேரவன காவல்' மற்றும் 'அந்தப்புரம் போகாதே அரிஞ்சயா' என்று தொடர்ந்து எழுதி வருகிறேன். 'காமதேனுவின் முத்தம்' எனது எட்டாவது நாவல்.

புராண கால மிருகங்களான யாளி, காமதேனு, புருஷா மிருகம், ஹம்ஸ பக்ஷி போன்றவை என்னைப் பெரிதும்

கவர்ந்தவை. குறிப்பாக, நவராத்திரி கொலுவில், அழகிய பெண்முகத்துடனும், பசுமாட்டின் உடலுடனும், மயிற் தோகையுடனும் காணப்படும் காமதேனு பொம்மையைக் காணும் போதெல்லாம் என்னுள் ஒருவித பரவசம் பரவும். பெண்மையின் கம்பீரத்தை முகத்திலும், கோமாதாவின் தாராளத்தை உடலிலும், மயிலின் அழகை தோகையிலும் கொண்டுள்ள காமதேனுவை போன்றே ஒவ்வொரு பெண்ணும், தனது சுற்றத்தை வாழ வைக்கிறாள் என்பதுதான் புராணங்களின் செய்தி. காமதேனுவை பற்றி பல ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டுள்ளேன்.

நான் நிர்வாக ஆசிரியராக பணிபுரியும், தி இந்து ஆங்கில நாளேட்டின் சின்னத்திலும் காமதேனு காணப்படுவதால், ஒருவேளை எனக்கு அதன் மீது ஒருவித பற்று ஏற்பட்டதோ என்னவோ! இந்த நாவலின் முக்கிய பாத்திரமே காமதேனுதான்.

நம்மை சுற்றி பரவியுள்ள தெய்வீகம், அவ்வப்போது நமக்கு சூசகமாக தகவல்களை தெரிவித்துக் கொண்டுதான் இருக்கிறது. நாம்தான், அதனைப் புரிந்து கொள்ளத் தவறி வருகிறோம். இந்த நாவலில், தெய்வீகம் சற்று வெளிப்படையாகவே தனது சூசக தகவல்களை தெரிவித்து வர, அதனை நன்கு பயன்படுத்திக் கொள்கிறது ஒரு குடும்பம்.

ஒரு கட்டத்தில், அவர்கள் அந்த பலன்களை தொடர்ந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற பேராசையில் தவறு செய்கின்றனர். காமேஷ் என்கிற வாலிபனுக்கு, தேனுகா என்கிற பெண்ணுக்கும் இடையே காதல் தோன்றிவிட, அவர்களது முதல் முத்தம் பெரிய பிரச்னையை ஏற்படுத்தி விடுகிறது. தெய்வீகம் அவர்களது காதலுக்கு எதிராக இருக்கிறது. மனித சக்தி, தெய்வீக சக்தி ஆகியவற்றை கடந்து அவர்களது காதல் நிறைவேறியதா?

தொடர்ந்து படியுங்கள்..

ஆயிரம் நாவல்களை எழுதி நூலக தட்டுகளில் தூசி படிந்து கிடைப்பதை விட, நான்கு நாவல்கள் எழுதினாலும், அவை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் தவழ வேண்டும் என்று விரும்புகிறேன். செய்தித்தாள் பணியில் இருப்பதால் வருஷத்திற்கு ஒன்றிரண்டு நாவல்களுடன் நிறுத்தி விடுகிறேன். ஓய்வுக்கு பிறகே நிறைய எழுத திட்டமிட்டுள்ளேன்.

ஏற்கனவே 'சிறகுகள் பதிப்பகம்' என்ற பெயரில் குடும்ப நாவல்களை வெற்றிகரமாகப் பதிவிட்டு வரும் 'ஶ்ரீ பதிப்பக' சகோதரிகளின் இலக்கிய ஆர்வம் என்னை மலைக்க வைக்கிறது. ஶ்ரீலக்ஷ்மி என்று அவர்கள் எழுதுவதை என்

அம்மா அறிந்திருந்தால் மிகவும் பெருமைப்பட்டிருப்பார். காரணம் அவர்கள், எனது அம்மாவின் குடும்ப நண்பர்கள். அவர்களுக்கு எழுதுவதை நான் பெருமையாக கருதுகிறேன். இந்நாவல் வெளியிடும் திருமதி. உஷா ஸ்ரீநிவாசன், திருமதி. லதா ஸ்ரீதர் மற்றும் இதனை உருவாக்குவதில் உதவிய திருமதி சந்திரிகா, டிடிபி செய்த திருமதி சாந்தி ஆகியோர்களுக்கு என் நன்றி.

எனக்குத் தொடர்ந்து ஆதரவு நல்கி வரும் வாசகர்களுக்கும் நன்றி.

**'காலச்சக்கரம்' நரசிம்மா**

**98417 61552**

**tanthehindu@gmail.com.**

# பதிப்புரை

**ஸ்ரீ**லஷ்மி சகோதரிகளான நாங்கள், முதன் முறையாக குறுகிய காலகட்டத்தில் வேகமாக வளர்ந்து வருபவரும், அதே சமயத்தில் தனக்கென பிரத்தியேகமான பாணியை வைத்துக்கொண்டு மர்மம், காதல், ஆன்மீகம், சரித்திரம் என்று தன் படைப்புகளை வாசகர்களுக்கு கொடுத்து வரும் புகழ்பெற்ற நாவலாசிரியர் திரு 'காலச்சக்கரம்' நரசிம்மாவை எங்களது 'ஸ்ரீ பதிப்பகத்தின்' மூலம் அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

பெண்களால் மட்டும் நடத்தப்படும் இந்த 'ஸ்ரீ பதிப்பக'த்திற்கு கொஞ்சம் கூட சந்தேகமே படாமல் 'உங்களால் முடியும். கட்டாயம் ஜெயிப்பீர்கள்' என்று எங்களை உற்சாகப்படுத்தி, ஆதரித்து தன் படைப்பை எங்களுக்குப் பதிப்பிக்க கொடுத்த அவரின் பெருந்தன்மையைக் கட்டாயம் பாராட்டியே தீர வேண்டும். அன்னாருக்கு எங்கள் அன்பு கலந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இப்புஸ்தகத்தை எங்களுடைய உறவின குடும்ப நண்பருமாகிய திரு, நரசிம்மாவுடைய - மதிப்பிற்குரிய மறைந்த புகழ்பெற்ற நாவலாசிரியை திருமதி. கமலா


சடகோபன் அவர்களும், அவரின் உற்ற தோழியும் எங்களுக்கு எழுத்தறிவித்து தமிழார்வத்தை ஊட்டி வளர்த்த எங்கள் தாய் திருமதி. சுபத்ரா ராமஸ்வாமி அவர்களுக்கும் இரு புஸ்தகத்தை சமர்ப்பிக்கிறோம்.

எங்களைத் தொடர்ந்து ஆதரித்து ஊக்குவிக்கும் பிரியா நிலையம் திரு. ராஜசேகர் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம், மேலும் எங்கள் எழுத்துப் பணியிலும் பதிப்பகத் துறையிலும் துணை நின்று வழி நடத்தும் திரு ஸ்ரீனிவாசன், திரு. ஸ்ரீதர், திரு. ரவி, திரு, விஜயசாரதி, திரு, ரகுராமன் மற்றும் எங்கள் சகோதரி திருமதி, சந்திரிகா ரவி, திருமதி ஜெயந்தி சாரதி, திருமதி. சுபஸ்ரீ அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

'காலச்சக்கரம்' நரசிம்மாவுடைய புஸ்தகங்களை தொடர்ந்து படித்து ஆதரவு கொடுக்கும் அனைத்து வாசக தோழமைகளுக்கும் எங்கள் நன்றிகள்.

**ஸ்ரீலஷ்மி சகோதரிகள்**

# காமதேனுவின் முத்தம்!


S. MuruGakani
X. 9903

# அத்தியாயம் 1

**கா**மதேனுபுரி -

என்கிற கோவூர் ஒரு சிறிய கிராமம்தான்! ஆனால் அதன் மையத்தில் இருந்த தேனுகாம்பாள் உடனுறைந்த காமேஷ்வரரின் ஆலயம் மிகவும் பிரம்மாண்டமானதாகக் காண்பிக்கப்பட்டது. மொத்த கிராமத்தையும் திரட்டி கோவிலின் வெளிப் பிரஹாரத்தில் வைத்து விடலாம் போல இருந்தது. அந்தக் கோவிலின் மதிற்சுவர்களின் பூச்சுகள் உதிர்ந்து, உள்ளே அடுக்கி வைக்கப்பட்டிருந்த செம்மையை இழந்திருந்த அந்த செங்கற்கள், போவோர் வருவோரைப் பார்த்து இளித்துக் கொண்டிருந்தன. ஒன்பது அடுக்குகளைக் கொண்ட கோவிலின் ராஜகோபுரம் ஆங்காங்கே சிதைந்து உச்சியில் இருந்த மணற்கலசங்கள் காணாமல் போயிருந்தன.

சோழ மன்னன் எவரோ தனது பக்தியுணர்வையும், கலையார்வத்தையும் உலகத்திற்கு பறைசாற்ற எண்ணி எழுப்பியிருந்த அந்த விஸ்தாரமான ஆலயம், இன்றைய பகுத்தறிவு பகலவன்களின் புறக்கணிப்பால் பாதிக்கப்பட்டு, வருமானமும் இல்லாததால், அறநிலையத் துறையின் அலக்ஷியத்திற்கும் ஆளாகியிருந்தது.

# காமதேனுவின் முத்தம்!

கோவிலின் வாசலில் கட்டப்பட்டிருந்த மாவிலைத் தோரணங்களும், எலும்புக்கூட்டிற்கு புடவை உடுத்தியது போன்று காணப்பட்ட அந்த கிழவியின் கவிழ்க்கப்பட்ட மூங்கில் கூடையின் மீது பரப்பியிருந்த பூச்சரங்களும் மட்டும் இல்லாமல் இருந்தால், கோவிலின் பூஜை நடைபெறுவதற்கான அறிகுறிகளே இல்லாமல் போயிருக்கும்.

உள்ளே -

கோவிலின் அர்ச்சகர் நாகநாத குருக்கள் தேனுகாம்பாளுக்கும், காமேஷ்வரருக்கும் அலங்காரம் செய்துக் கொண்டிருந்தார். காமதேனு வாகனத்தில் அமர்த்தப்பட்டிருந்த இருவரும், ஒரு காலத்தில் வைர, வைடூரியங்களாலும், தங்க ஆபரணங்களாலும் தங்களையே அலங்கரித்துக் கொண்டிருக்க வேண்டும். காரணம், சன்னிதியில் உள்ளே, பொக்கிஷங்களை பத்திரப்படுத்துவதற்கென்றே நிலவறை ஒன்று இருந்தது. விதேஷி படையெடுப்புகளாலும், சுதேஷி லவட்டுதல்களாலும் நிலவரை சுத்தமாக வழித்தெடுக்கப்பட்டு எதற்கும் பிரயோஜனமில்லாமல் இருந்தது.

வெறும் முத்து மற்றும் ஜிமிக்கி வேலைபாடுகளுடன் கூடிய வெல்வட் துணியை ஈசனுக்கும், யாரோ மனமுவந்து

அளித்திருந்த பட்டுச்சேலையை தேனுகாம்பாளுக்கும் சாற்றினால் அலங்காரம் பூர்த்தியாகிவிடும்.

நாகநாத குருக்கள் ஒரு இற்றுப்போன காசுகள் உதிர்ந்த ஹைதர்காலத்து காசுமாலையை அம்பாளுக்கு சாற்றினார். பெரிய வீட்டிலிருந்து கூடை நிறைய மலர் மாலைகளை அனுப்பியிருந்தனர், பெரிய வீட்டார். அந்த மாலைகளைக் கொண்டுதான் இன்றைய அலங்காரத்தை ஒப்பேற்ற வேண்டும். அலங்காரம் செய்து கொண்டிருந்த நாகநாத குருக்களின் பார்வை காமதேனு வாகனத்தின் மீது விழுந்தது.

பெரிய வீட்டார் இன்னும் சற்று நேரத்தில் கோவிலுக்கு வந்து விடுவார்கள். அவர்கள் வந்து தீபாராதனையை ஏற்றுக்கொண்ட பின்தான் உற்சவ மூர்த்திகளை வெளியே மஹாமண்டபத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

காமதேனு வாகனத்தின் கழுத்தில் நீலப்பட்டுத் துணி ஒன்றை போட்டு, மாலைகளை சாற்றியபோது தன்னையும் அறியாமல் அவர் கைகள் நடுங்கின. என்றும் இல்லாத திருநாளாக பரபரப்பும், படபடப்பும் அவரிடம் அதிகரித்தன.

பெரிய வீட்டு பாண்டி சகோதரர்கள் மனங்களை காமதேனு அன்று குளிர்விப்பாளா?

# காமதேனுவின் முத்தம்!

பெரிய வீட்டார் வசித்து வந்த பாண்டிய ராஜ்யம் என்கிற மாளிகையைப் பற்றி தெரிந்துக் கொள்வதற்கு முன்பாக அன்றாடம் வெறிச்சென்று காணப்படும் அந்தக் கோவிலில் அன்று மட்டும் சிறிது பரபரப்பு காணப்படுவதற்கான காரணத்தை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

18 வருஷங்களுக்கு ஒருமுறை அந்த கோவிலில் நடைபெறும் சுபகாயை யாகம் அன்று நடைபெற இருந்தது. சுபகாயை யாகம்தான் அந்த கோவிலின் தனிச்சிறப்பு. வேறு எங்கும் இத்தகைய நடைபெற்று வருவதாக கேள்வியில்லை.

காமதேனுவைக் குறித்து செய்யப்படும், அது சுபகாயை யாகம், ஊருக்கு வளத்தை கொழிக்கச் செய்யும் என்று கூறப்பட்டது. உண்மைதான். ஆனால், ஒரு காமதேனு அங்காடிகூட இல்லாத அந்த கிராமத்தில் வளத்தையும், செல்வச்செழிப்பையும் காண வேண்டும் என்றால் அதற்குரிய இடமாக திகழந்தது. 'பாண்டிய ராஜ்யம்' என்கிற பெரிய வீட்டார் வசித்த வீடுதான்.

"நீ எப்படி என்னை காண்கிறாயோ, நான் அப்படியே உனக்கு தோன்றுவேன்?" கிருஷ்ண பரமாத்மா மட்டும்தான் இப்படி கூறியதாக கருதிவிட வேண்டாம். 'பாண்டிய ராஜ்யம்' வீடு கூட அப்படித்தான்!

அரண்மனையாக பார்ப்பவருக்கு அரண்மனையாகவே காட்சி தரும். நந்தவனமாக நோக்கினால் அழகிய தோட்டமாகவே தோன்றும். பண்ணை வீடு என்று நினைத்தால் இங்குமங்கும் ஓடியாடி ஏவல் புரியும் பண்ணையாட்கள் கண்ணில் படுவார்கள். புராதன வீடு என்றால் அகன்ற திண்ணைகளுடனும், தூண்களுடனும் கம்பீரமாகத் தோன்றும்.

இவை எதுவுமே வேண்டாம். சென்னை போயஸ் கார்டன் பகுதியின் ஆடம்பர குடியிருப்பாக அதைக்காண விரும்பினாலும், அப்படியுமாக நவீன மோஸ்தரில் எல்லா வசதிகளுடன் நிற்கும்.

பெரிய குடும்பத்தின் அண்ணன் தம்பிகள் கூட்டாக வசித்ததால், ஒவ்வொரு தலைமுறையைச் சேர்ந்தவனும் தான் கற்றுணர்ந்த நவீன யுக்திகளை வசிக்கும் வீட்டில் வெளிப்படுத்தத்தானே செய்வார்கள்.

கோஹூர் கிராமமே பெரிய வீட்டாருக்குத்தான் சொந்தம் எனலாம். கிராமத்தைச் சுற்றி பரந்து விரிந்த பச்சை பசேலென்ற வயல்கள் அனைத்துமே அவர்களுடையதுதான்.

கோவிலைச் சுற்றி இருந்த அக்ரஹார வீடுகள், அடுத்தச்சுற்றில் இருந்த குடியானவர்களின் வீடுகள் மற்றும் அடுத்தச் சுற்றில் ஆங்காங்கே சிதறிக்கிடந்த குடிசை வீடுகள்

எல்லாமே பெரிய வீட்டிற்கு சலாம் போடுபவைதான். கோவிலின் அழுது வடியும் வெளிகளின் நடுவே உயர்ந்து நிற்கும் அந்த மூன்றடுக்கு மாளிகைதான் பெரிய வீடு என்று ஊர் மக்களால் அழைக்கப்படும் பாண்டிய ராஜ்யம் மாளிகை.

பொதுவாக வேலை இல்லாமல் அந்தப் பக்கம் போகவே பயப்படுவார்கள் ஊர் மக்கள். வம்பு, வழக்கு நிலத் தகராறுகள் வந்தால் மட்டுமே, மக்கள் பெரிய வீட்டை நாடி செல்வார்கள்.

கேட்டில் இருந்து வீட்டிற்கு செல்வதற்கு முன்பாக பரந்து விரிந்து வெட்டவெளி ஒன்று காணப்படும். அதில் சகோதரர்களுக்கு இடையே உள்ள தலைமுறை வித்தியாசத்தை அறிவித்தபடி, ஒரு சாரட் வண்டி, ஃபியட் கார், ஒரு மாருதி எஸ்டிம் மற்றும் ஒரு இன்னோவா வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். இதைத் தவிர இரண்டு மூன்று மாட்டு வண்டிகள். அந்தத் திறந்த வெளியைக் கடந்துச் சென்றால் அழகிய தோட்டம் ஒன்று அந்த வீட்டினைச் சுற்றி ஓடும். அந்த வீட்டின் வனப்பை மறைத்துக் கொண்டிருக்கும் பச்சை தாவணியாக அந்த தோட்டம் திகழும். தோட்டத்தின் மையத்தில் நீருற்றின் நடுவே நீரை உமிழ்ந்தபடி அமைக்கப்பட்டிருக்கும் ஒரு மீனின் உருவம் காணப்படும். பாண்டிய ராஜ்யத்தின் சின்னமே கயல்தானே?

தோட்டத்தை தாண்டிச் சென்றதும், வீட்டின் நுழைவாயிலின் இருபுறமும் மிகப்பெரிய திண்ணைகள் வழிந்திருக்கும். நுழைவாயிலுக்கு முன்பாக ஒரு சிறிய இடைகழி. அதன் இருபுறமும் திருமலை நாயக்கர் மஹாலின் மாதிரியில் பெரிய தூண்கள் இரண்டு பக்கமும் நின்றிருக்கும். இடைகழி வழியாக உள்ளே நுழைந்தால், ரெட் ஆக்ஸைட் தரைகளுடன் இரண்டு பக்கமும் வெராந்தாக்கள் பிரிந்துச் செல்லும். அந்த ரெட் ஆக்ஸைட் தரைகளில் தாயம், சொக்கட்டான், ஆடுபுலி ஆட்ட கட்டங்கள் செதுக்கப் பட்டிருக்கும். இருபுற வெராந்தாக்களின் நடுவே ஒரு பெரிய வெண்ணிலா முற்றம் விரிந்திருக்க, கம்பங்களின் வரிசைகள் இருபுறங்களிலும் வழிந்து விழும் மங்களூர் ஓடுகள் அடுக்கப்பட்ட கூரையைத் தாங்கி நிற்கும். முற்றத்தின் நடுவே ஒரு பெரிய துளசி மாடம் நிற்க, அதில் சதா சர்வகாலமும் அகல் விளக்கு ஒன்று ஒளிர்ந்துக் கொண்டிருக்கும்.

இரு பக்க வெராந்தாக்களும், நீண்ட முற்றத்தின் முடிவில், மறுபுறம் மீண்டும் இணையும் இடத்தின் மையத்தில் ஒரு இரும்புக்கதவு காணப்படும். அந்த வீட்டின் பாண்டி சகோதர்களின் உறுதியை பிரதிபலிக்கும் அந்த இரும்புக் கதவை திறப்பதற்கே நல்ல வலு தேவை.

அந்தக் கதவைத் திறந்தால் திறந்தவர்கள் மலைத்துப் போய் நிற்பார்கள். அந்தக் கதவு வரையில்தான், ஒரு கிராமத்து வீட்டின் லக்ஷணங்களை கொண்டிருக்கும், பாண்டிய ராஜ்யம். வீடு கதவுக்கு அப்பால், மூன்றடுக்குகளைக் கொண்ட நவீன மோஸ்திரில் கட்டப்பட்ட குடியிருப்பைக் காணலாம்.

பெரிய வீட்டை கட்டியவர் தான்தோணி பாண்டி, இவரது மனைவி பாஞ்சாலி. வரிசையாக செண்பக பாண்டி, செந்தூர பாண்டி, இசக்கி பாண்டி மற்றும் குணசேகர பாண்டி என்கிற நான்கு மகன்களையும், ரேணுகா என்கிற மகளையும் பெற்றார்கள். நான்கு மகன்களுக்கும் பின்புறத்தை இடித்து, அடுக்குமாடி குடியிருப்பாக கட்டித் தந்திருந்த தான்தோணி, வீட்டின் முகப்பை மட்டும் பழைய தோற்றத்திலேயே விட்டு விட்டார். சலவை கற்களால் இழைத்து கட்டப்பட்ட அந்த குடியிருப்பில் ஏ.சி.மிஷின்கள் குளிரை உமிழ்ந்து கொண்டிருக்கும். ஆனால் ஏ.சி.மிஷின்களுக்கு அநேக நேரம் வேலையே இருக்காது. பாண்டிய ராஜ்யத்தின் மூன்று புறங்களில் சூழந்திருக்கும் வயல்வெளிகளும், மரங்களும் இதமான காற்றை வீட்டிற்குள் அனுப்பும்.

கேட்டில் நிறுத்தப்பட்டிருக்கும் காவலாளிகளைத் தாண்டி, வெட்ட வெளியிலும், தோட்டத்திலும், வேலை செய்துக் கொண்டிருக்கும் பணியாளர்களின் கேள்விகளுக்கு பதில் தந்து

விட்டு, நுழைவாயில் இடைகழித் திண்ணையில் சித்ரகுப்தன் கணக்காக அமர்ந்து கணக்கு வழக்குகளை எழுதிக் கொண்டிருக்கும் சிவநேசனிடம் அனுமதி பெற்ற பிறகே இரும்புக் கதவை கடந்து வீட்டிலுள்ளவர்களைச் சந்திக்க முடியும்.

அந்த அடுக்குமாடியில் கீழ்த்தளத்தில் பெரிய பாண்டி என்கிற செண்பக பாண்டி தன் மனைவி அங்கையற் கண்ணியுடன் வசித்து வந்தார். அங்கண்ணி என்று ஊரால் அழைக்கப்படும் அங்கையற்கண்ணியைக் கண்டால் பெரிய பாண்டிக்கே பயம். கண்களால் பேசியே மற்றவர்களை அடக்க வல்லவள்.

முதல் மாடியில் செந்தூர பாண்டியும் அவன் மனைவி கற்பகமும், இரண்டாம் மாடியில் இசக்கி பாண்டியும் அவன் மனைவி கலாவதியும் வசித்தனர்.

அந்த அடுக்குமாடி குடியிருப்பின் மூன்றாவது மாடியிலிருந்து, கர்ப்பிணியான தன் மனைவி தமயந்தியின் கையை ஆதூரத்துடன் பிடித்தபடி, கீழே செல்வதற்காகப் படிகளை நோக்கி நடந்தான், கடைசி பாண்டி, குணசேகரன்.

"யம்மாடி! மூணு மாடி இறங்கணுமே! இவ்வளவு உயரம் வீடு கட்டின உங்கப்பாரு ஒரு லிஃப்ட் வச்சிருக்கக் கூடாதா?" தமயந்தி சிணுங்கினாள்.

"அவரு பெயரே தான்தோணி! எங்களையெல்லாம் கலந்தாலோசிக்காம, தான்தோன்றிதனமா அவரே வீடு கட்டினாரு! லிஃப்ட் வைக்கும்படி சொல்லறதுக்கு எங்களுக்கு தோணலை! நீ கவலைப்படாதே! உன் பிரசவத்துக்குள்ளாற லிஃப்ட் வச்சுடறேன்னு பெரியண்ணன் சொல்லிச்சு.." குணசேகரன் அவளை புன்னகையுடன் பார்த்தபடி அவளுடன் படிகளில் இறங்கினான்.

நான்கு சகோதரர்களில் குணசேகரனே அழகன். நல்ல உயரமும், கம்பீரமும் கோதுமை நிறத்தையும் கொண்டவன். தமயந்தி சென்னையில் பெரிய டாக்டர் குடும்பத்தைச் சேர்ந்தவள்தான். குணசேகரனின் பணத்திற்கும் அழகிற்கும் மயங்கி கிராமாந்தரம் என்றாலும் பரவாயில்லை என்று அவள் தந்தை பெண்ணை தந்து விட்டார். தமயந்தியின் தாய் இறந்து விட்டதால், அவள் பெரியம்மா டாக்டர் ஜெகதாதான் கல்யாண ஏற்பாடுகளை முன்னின்று நடத்தினாள்.

"ஏங்க! யாகம் முடியறதுக்கு ரொம்ப நேரமாகுமா? என்னால இப்படி வயத்தை சாய்ச்சுகிட்டு மணிக்கணக்கா கோவிலுல உட்கார்ந்திருக்க முடியாது?" தமயந்தி கூறினாள்.

பேசியபடி அவர்கள் இரண்டாவது தளத்தை அடைய, குணசேகரனின் மூன்றாவது அண்ணன் இசக்கியும், அவன் மனைவி கலாவதியும்.. அவர்களுடன் சேர்ந்துக்கொண்டனர்.

"நல்லா சொன்னே போ! தமை.. நீதானே இன்னைக்கு முக்கியம். 18 வருஷத்துக்கு ஒரு நடக்குற இந்த சுபகாயை யாகத்துல, நம்ம குடும்பம் சேர்ந்த கர்ப்பிணி பொண்ணுங்க யாராவது இருந்தா அவங்களுக்கு காமதேனு காட்சி கிடைக்கும். அதோட அவங்களுக்கு தெய்வ அம்சத்தோட குழந்தை பிறக்குமாம்! போன தடவை நம்ம வீட்டுல யாரும் கர்ப்பமடையலை. 36 வருஷத்துக்கு முன்னாடி நடந்த யாகத்துல, நம்ம மாமியாருக்கு காமதேனு காட்சி கிடைச்சு தெய்வீகமா பொண்ணு பொறந்துச்சாம்! அதுக்கப்புறம்தான் நமக்கெல்லாம் இவ்வளவு வசதி கிடைச்சுதாம்." கலாவதி சற்றே பருத்திருந்த தன் தேகத்தை சிரமத்துடன் படிகளில் இறங்கியபடிப் பேச, அதனால் மூச்சு வாங்க தொடங்கினாள்.

"உங்க மூணு பேரோட பிள்ளைகளைப் படிக்க ஊட்டிக்கே அனுப்பிட்டு, இப்ப என் குழந்தைக்காகக் காத்திருக்கீங்க!

போங்க அண்ணி! இவ்வளவு பெரிய வீட்டுல பசங்க விளையாடாம, போர் அடிக்குது! ஏன் அண்ணி உங்க பிள்ளைகளை ஊட்டிக்கு அனுப்பினீங்க?"

"ஆமா நாங்க பெத்தோம்! மூணு பேருக்கும் பொண்ணில்லை! காமதேனு பொறக்கும்னு எதிர்பார்த்தா, அனுமாரா வந்து பொறந்திருக்கு! நீ வேணுமினா பாரு உன் வயத்துல அந்த காமதேனுவே பிறப்பா! உன் பொண்ணு தெய்வக் குழந்தையா இருக்கும் பாரேன்!" கலாவதி சொல்ல தமயந்தி தன் கணவனைக் கேள்வியுடன் பார்த்தாள்.

"தெய்வீகக் குழந்தையா?"

"ஆமா தமை! நம்ம குடும்பத்துல யாகம் நடக்கும் போது பெண் குழந்தை பிறந்தா, அதுக்கு தெய்வீகச் சக்தி இருக்கும்னு நம்பிக்கை! குடும்பத்துல சுபிக்ஷம் பெருகுமாம்.." குணசேகரன் சொல்ல, தன் தம்பி விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான் இசக்கி.

"ஆமாம்மா! யாகம் நடக்கிற சமயத்துல நீ கர்ப்பவதியா இருக்கே! உனக்கு நிச்சயம் பொண்ணுதான் பொறக்கும், பாரேன்" இசக்கி சொல்ல நால்வரும் இரண்டாவது மாடியை அடைந்தனர்.

"என்ன.. தயாரா?" கீழிருந்து பெரிய அண்ணி அங்கண்ணியின் குரல் கேட்டது. அவளுக்குப் பின்பாக கையில் மங்கலப் பொருட்களுடன் நின்றிருந்தாள் இரண்டாவது அண்ணி கற்பகம்.

"பெரியண்ணன் எங்கே?" கடைசி சில படிகளை கடந்தபடி குணசேகரன் கேட்டான்.

"அவரும் செந்தூரமும் கிளம்பி கோவிலுக்குப் போயிட்டாங்க நம்மை பின்னாடி வரச்சொன்னாங்க." என்றபடி அங்கண்ணி கால்தண்டைகள் ஒலிக்க நடக்க, அனைவரும் அவளைப் பின் தொடர்ந்தனர்.

தமயந்தி சற்றே தயங்கினாள். "கொஞ்சம் இருங்க.. நான் பின்னாடி போயிட்டு வந்துடறேன்." என்றவள் கீழ் போர்ஷனின் டாய்லெட்டை நோக்கி நடந்தாள்.

குணசேகரன் அவளது பிரச்னையை புரிந்து கொண்டு, இரும்புக்கதவை கடந்து, முற்றத்து துளசி மாடத்தருகே நின்று அவளுக்காக காத்திருந்தான்.

டாய்லெட்டிலிருந்து வெளிவந்து கைகால்களை கழுவிக்கொண்டு நிமிர்ந்தபோது, தமயந்தியின் கண் சட்டென்று நிலைகுத்தி நின்றன.

# காமதேனுவின் முத்தம்!

மூலையில் இருந்த இருட்டறையின் ஜன்னல் மேடையில் அமர்ந்து தலைவிரி கோலமாய் மாமியார் பாஞ்சாலி இவளையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தமயந்தியின் கல்யாணம் முடிந்து புகுந்த வீட்டினுள் நுழைந்த போதுதான், அவளது மாமியார் சித்த ஸ்வாதீனம் இல்லாதவள் என்கிற தகவலே இவளிடம் சொல்லப்பட்டது. அம்மா இல்லாத பெண் என்பதால், அவள் அப்பா பணக்கார இடம் என்கிற ஒரே காரணத்திற்காக இவளிடம் எல்லா தகவல்களையும் மறைத்து விட்டிருந்தார். ஆனால், கம்பீரமான தன் கணவனின் அருகாமையில் தமயந்திக்கு இது ஒரு பெரும் குறையாக தோன்றவில்லை. பைத்தியக்கார மாமியார் என்பதால் அவள் அருகே செல்வதை தவிர்த்து விடலாம் என்கிற நிம்மதியே அவளுள் தோன்றியிருந்தது. குணசேகரனும், தமயந்தியும் பாஞ்சாலியின் கால்களில் விழுந்து ஆசி கோரிய போது, அவள் அதை உணராமல் 'இடி இடி' என்று சிரித்துக் கொண்டிருந்தாள். அதன்பிறகு கூடிய வரையில் பாஞ்சாலியின் கண்களில் படுவதைத் தவிர்த்து வந்தாள் தமயந்தி,

இப்போது, பாத்ரூம் போய்விட்டு வெளியில் வந்ததும் தன்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த மாமியாரை

சங்கடத்துடன் பார்த்தாள். சத்தம் செய்யாமல், அங்கிருந்து விலகுவதற்கு யத்தனித்தாள் தமயந்தி.

திடீரென்று -

பாஞ்சாலி தனது கைகளை ஜன்னல் கம்பிகளின் வழியாக வெளியே நீட்டி, தமயந்தியை நோக்கி வீசினாள்.

"புது மருமவளே! உன்னை கோவிலுக்கு அழைச்சுக்கிட்டு போறாங்களா? வேணாம்! அவங்களோட கோவிலுக்குப் போகாதே! உன் குழந்தை நாசமாப் போயிடும்!" பாஞ்சாலி கிசுகிசுத்தக் குரலில் தமயந்தியை எச்சரித்தாள்.

தமயந்தி வெலவெலத்துப் போய் நின்றாள்.

முதன் முறையாக தன் மாமியார் பேசிக் கேட்கிறாள் அவள். கோவிலுக்கு போகாதே! குழந்தை நாசமாப் போயிடும் என்கிறாளே!

அண்ணிகளோ தெய்வாம்சம் உள்ள குழந்தை பிறக்கும் என்கிறார்களே! முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதே!

தமயந்தியின் முதுகுதண்டு ஜில்லிட்டது. மாமியார் பாஞ்சாலி இவளை எச்சரிக்கிறாளா? இல்லை சாபமிடுகிறாளா?

பயத்தால் மேனி நடுங்க, சற்று வேகமாக முற்றத்தில் காத்திருந்த குணசேகரனை நோக்கி நடந்தாள்.

"என்னங்க! உங்க அம்மா.. என்கிட்டே பேசினாங்க!" குரலில் பீதியுடன் சொன்னாள்.

"நிஜமாவா..!" வியப்புடன் மனைவியைப் பார்த்தான் குணசேகரன்.

"அம்மாவோட குரலை கேட்டே 12 வருஷம் ஆச்சு! உன்கிட்டே எப்படி திடீர்னு பேசினாங்க? நீ யாருன்னு புரிஞ்சுக்கிட்டாங்களா?"

"பாத்ரூம் போயிட்டு கைகால் கழுவிட்டு திரும்பினேன். என்னையே வெறிச்சாங்க கைகளை ஜன்னல் வழியா ஆட்டி, 'புது மருமவளே'ன்னு கூப்பிட்டாங்க.. அப்புறம் அபசகுனமா பேச ஆரம்பிச்சாங்க. கோவிலுக்கு போகாதே உன் குழந்தை நாசமாப் போயிடும்னு சபிச்சாங்க.."

தமயந்தியின் குரலில் வருத்தம் தொனித்தது. கண்களும் லேசாக கலங்கின.

"ச்சீ! இதுக்கு போய் ஏன் அழறே தமை! அவங்கதான் மறை கழண்ட கேஸுன்னு தெரியுமில்லை! கோவிலுக்கு போனா குழந்தை எங்கேயாவது நாசமாப் போகுமா! இதுலயே நீ புரிஞ்சுக்கலாமே, அவங்க பைத்தியம்னு! வா பேசாம.. கோவிலில் யாகத்தை ஆரம்பிக்கப் போறாங்க!"

தமயந்தியை சமாதானம் செய்தபடி குணசேகரன் நடக்க, தொடர்ந்து மௌனமாக தமயந்தி நடந்தாள்.

அவர்கள் இருவரும் கோவிலில் நுழைந்ததும் யாகம் நடைபெறும் மஹாமண்டபத்தை நோக்கி நடந்தனர். நான்கு தூண்களை தாம்புக்கயிற்றினால் பிணைத்து, பெரிய வீட்டு உறுப்பினர்கள் யாகத்தை பார்ப்பதற்காக சிறப்புப் பகுதியை ஏற்படுத்தியிருந்தனர் கோவில் அலுவலர். அந்தப் பகுதியில் ஜமுக்காளம் விரிக்கப்பட்டு, அலுவலக அறையிலிருந்து 'அல்மனார்டு' பெடஸ்டல் ஃபேனை அங்கே நிறுத்தியிருந்தனர். கயிற்றுக்கு வெளியே கிராம மக்கள் அமர்ந்திருந்தனர்.

"பெரியவரே! யாகத்தைத் தொடங்கலாமா..?" நாகநாத குருக்கள் அனுமதிகோர, பெரிய பாண்டி தனது மீசையை சுட்டுவிரலால் நீவியபடி தலையசைத்தார்.

'சுக்லாம் பரதரம்' என்று வெளியூரிலிருந்து தருவிக்கப் பட்டிருந்த சிவாச்சாரியர்கள் சிலர் தங்கள் தலையில் குட்டிக் கொள்ள ஹோமமம் தொடங்கியது. சரியாக யாக குண்டங்களின் முன்பாக காமதேனு வாகனத்தில் அமர்ந்திருந்த தேனுகாம்பாளும், காமேஷ்வரரும், அங்கு அமர்த்தப் பட்டனர்.

# காமதேனுவின் முத்தம்!

ஹோம குண்டத்தின் அக்னி வளர்க்கப்பட்டு "ஓம் சுபகாயை வித்மஹே! காமதாத்ரியை தீமஹி! தன்னோ தேனு: பிரசோதயாத்!" என்று மந்திர உச்சாடனங்களை துவக்கினார். சிவாச்சாரியர்கள் நெய் வார்க்கப்பட குண்டங்களில் அக்னி ஜ்வாலை கொழுந்து விட்டெரிந்தது. சுற்றி இருந்தவர்களை வெம்மைத் தாக்கியது.

தூண் ஒன்றில் சாய்ந்தபடி அமர்ந்திருந்த தமயந்தி, அந்த அனலைத் தாங்க முடியாமல் சிரமப்பட்டாள். புகை மூட்டம் தாளாமல் அவ திணற முகமெங்கும் வியர்வை ஆறாக பொருள் திணறலுடன் குணசேகரனைத் திரும்பிப் பார்க்க,

அவன் யாகத்தில் லயித்திருந்தான்.

அடிவயிற்றில் வேதனை அதிகரிக்க, தன் முன்பாக அமர்ந்திருந்த அங்கண்ணியின் தோளை தட்டினாள்.

"அங்கண்ணி! எனக்கு உடம்பு என்னவோ பண்ணுது! மயக்கமா வருது! நான் காத்தாட வெளியில போய் உட்காந்துக்கறேன்!" என்ற தமயந்தியை பரிவுடன் பார்த்தாள், அங்கண்ணி. அவள் படும் அவதியை உணர்ந்து கொண்டவள், கயிற்று தடுப்புக் வெளியே உட்கார்ந்திருந்த அங்காயியை உதவிக்கு அழைத்தாள்.

"அங்காயி, தமயந்தியை காத்தாட கோவில் பிரஹாரத்துல உட்கார வையேன். பூர்ணஹுதியின் போது அவ வந்தா போதும்.." என்று அங்கண்ணி சொல்ல, அங்காயி எழுந்து வந்து, தமயந்தியை கைத்தாங்கலாகப் பிடித்தபடி மஹாமண்டபத்தை விட்டு வெளியே அழைத்துச் சென்றாள்.

"கவலைப்படாதே ஆயி! உனக்கு நல்லபடியா பிரசவம் ஆகும்! வயிறு குவிஞ்சு கிடக்குதைப் பார்த்தாக்க பொண்ணுதான் பிறக்கும்னு தோணுது. பிரஹாரத்துல வெய்யிலா இருக்கும்! கோவிலுக்கு பின்னாடி நந்தவனத்து நாலுகால் மண்டபத்துல நல்லா காத்து வரும். நிழலாவும் இருக்கும். உன்னை அங்கே உட்கார வைக்கிறேன். தன்னால ஆயாசம் போயிடும்.." என்றபடி தமயந்தியை நந்தவனத்திற்கு அழைத்துச் சென்றாள், அங்காயி.

"இங்கே யாரும் வரமாட்டாங்க! இப்படியே கொஞ்ச நேரம் படுத்துக்க ஆயி! பூர்ணஹுதி சமயத்துல நான் வந்து அழைச்சுட்டுப் போறேன்."

அங்காயி சொல்ல, தமயந்தி தலையசைத்தாள்.

அங்காயி கிளம்பி போனதும், நாலுகால் மண்டபத்தின் தூணில் சாய்ந்துக் கொண்டாள். அந்த நந்தவனத்தில் இல்லாத மரங்களே இல்லை. செடிகளில் வண்ண மலர்கள்

பூத்துக்குலுங்க காற்றில் அசைந்த அவை நறுமணத்தைப் பரப்பின. அந்த இதமான காற்றும், ரம்யமான காட்சியும், தமயந்தியை தாலாட்ட கண்களில் உறக்கம் தென்பட்டது. அப்படியே அந்த மண்டபத்தில் தன் தேகத்தை கிடத்தியவள் கண்களை மூடினாள்.

தொலைவில் மந்திர உச்சாடனங்கள் கேட்க, பறவைகளின் கூவல்களும் இடையிடையே ஒலிக்க, சற்று நேரம் கண்களை மூடியபடி இந்த ஒலிகளை கிரஹித்தவள், அப்படியே உறங்கி போனாள்.

எவ்வளவு நேரமாக உறங்கிக்கொண்டிருந்தாளோ, பூர்ணாஹூதி தொடங்க, டமாரமும், கோவில்மணியும் ஒலித்தன. சட்டென்று, தேகம் தூக்கிவாரிப்போட, தமயந்தி கண்விழித்தாள். நந்தவன நாலு கால் மண்டபத்தில் தான் படுத்திருப்பதை உணர்ந்து நிதானமாக எழுந்து உட்கார்ந்தாள்.

சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்தாள். அங்காயி வருகிறேன் என்றாளே! இன்னும் காணோமே. அவளுக்காக காத்திருப்பதா, இல்லை தானாக மஹாமண்டபத்திற்கு போவதா? யோசனை யுடன் அமர்ந்திருந்தாள் தமயந்தி.

அப்போது -

எங்கிருந்தோ தெய்வீகமான நறுமணம் அந்த நந்தவனம் முழுவதும் வீசியது. காற்று சற்று பலமாக வீச, மரங்கள் பூக்களைச் சொரியத் தொடங்கின. 'கண கண' என்கிற மணியோசை தொலை தூரத்தில் ஒலித்து நந்தவனத்தை நோக்கி வரத்தொடங்கியது. 'ஜல் ஜல்' என்று நாட்டியமாடுபவர்கள் வருவது போன்று இசையாய் சதங்கைகள் ஒலித்தன. பலர் மிருதுவான குரலில் ஒன்று சேர்ந்து பாடுவது போன்ற எதிரொலி கேட்டது. இந்த இனிமையான ஒலிகள் எல்லாமே தான் அமர்ந்திருந்த நந்தவன மண்டபத்தை நோக்கி வருவதை உணர்ந்த தமயந்தி வியப்புடன் எழுந்து நின்றாள்.

ஒருவேளை பூர்ணாஹுதி குடம் ஊர்வலமாக எடுத்து வரப்படுகிறதோ! மஹாமண்டபத்தில் இருந்து பிரஹாரத்தை சுற்றி வந்து, நந்தவனத்தில் நுழையும் வாயிலை நோக்கி, அந்த ஒலிகள் வருவதை உணர்ந்து, கைகளை கூப்பியபடி அந்த வாயிலையே நோக்கினாள். 'ம்மா' என்று இனிமையாக, கத்தியபடி அந்த வாயிலின் வழியே நுழைந்தது ஒரு தெய்வீக மாடு! மாடா? அந்த தெய்வீக மாட்டின் அழகைக் கண்டு மிரண்டு போனாள் தமயந்தி..

காரணம் -

# காமதேனுவின் முத்தம்!

நவராத்திரி கொலுவில் சற்று முன் அம்பாள் வாசகனமாகவும் இவள் பார்த்திருந்த ஒரு காமதேனுதான் ஒயிலாக அசைந்தாடியபடி நந்தவனத்தினுள் பிரவேசித்தது.

அப்சரஸ் போன்ற ஒரு பெண்ணின் அழகிய முகம் உச்சந்தலையில் பொன்னிறமாக இரண்டு கொம்புகள். அந்த முகத்தின் மூக்கிலும், செவிகளிலும் ஸ்வர்ண ஆபரணங்கள். உதட்டினில் மிளிர்ந்திருக்கும் புன்னகை. முகம் மட்டும் வசீகர பெண்ணாக இருக்க, உடல் சர்வலக்ஷணங்களும் பொருந்திய பசுமாடாக திகழ்ந்தது. பால் வண்ண நிறம், முதுகில் பெரிய திமில் மற்றும் மயிற்தோகை. அதனைச் சுற்றி நீலப் பட்டாடை திகழ, அந்த பட்டாடையைச் சுற்றி நவரத்தின ஹாரம். அதனைச் சுற்றி மல்லிகை மலர்கள். அந்த காமதேனுவின் நீண்ட வால் முடியை சீவி பின்னியது போல அழகிய சீரான பின்னலாகத் திகழ, நுனியில் மலர் கொத்து சூடியிருந்தது. காமதேனுவின் மடிகள் கனத்து நிலம் வரை நீண்டிருக்க அதன் முலைக்காம்புகளில் பால் பெருகிக் கொண்டிருந்தது.

மணிகள் கணகணவென ஒலிக்க, அதற்கேற்றார் போல் காற்சதங்கைகளும், சப்திக்க நந்தவனத்தினுள் பிரவேசித்த அந்த காமதேனு, மூலையில் இருந்த கோசாலையை நோக்கிச் சென்றது.

தமயந்தி வாயடைத்துப்போய் அந்த காமதேனு பசுவையே வெறித்துப் பார்த்தாள். கோசாலை அடைந்த காமதேனு அதனுள் நுழைவதற்கு முன்பாக சற்றே நின்று, தன் முகத்தை தமயந்தியின் பக்கமாக திருப்பி அவளை நோக்கி மிக அழகாக புன்னகைக்க, தனது சாந்தம் பொங்கிய கண்களால் அவளையே சற்ற நேரம் நோக்கிவிட்டு, பிறகு கோசாலையினுள் நுழைந்து மறைந்தது.

தமயந்தி ஒருவித பரவச நிலையை அடைந்திருந்தாள். கூப்பிய கைகளுடன் மெதுவாக கோசாலையை நோக்கி நடந்தாள். உள்ளே எட்டிப் பார்த்தபோது, காராம்பசு ஒன்றும், வெள்ளைப்பசு ஒன்றும் வைக்கோலை அசை போட்டபடி நிற்க, இரண்டு கன்று குட்டிகள் கீழே அமர்ந்திருந்தன. இவள் பார்த்திருந்த அந்த காமதேனுவை காணவில்லை.

'நான் பார்த்தது கனவா? இல்லை நிஜமா?'

குழம்பிப்போய் நின்றிருந்த தமயந்தியின் தோளில் ஒரு கைப்படர்ந்தது. திடுக்கிட்டு போய் திரும்பினாள்.

அங்காயிதான் அங்கே நின்றிருந்தாள்.

"ஆயி! இங்கே ஏம்மா வந்தது நிக்கறே?" திகைப்புடன் கேட்டாள் அங்காயி.

முகத்தில் பரவியிருந்த பரவசமும், வியப்பும் மாறாமல், அங்காயியை ஏறிட்டாள் தமயந்தி.

"அங்காயி, இந்தப் பக்கமாக ஒரு காமதேனு வந்தது. தெய்வீகமா இருந்தது. அந்த பசுவோட முகம்.. இல்லை.. ஒரு பொண்ணோட முகம் அது.. அவ.. என்னைப் பார்த்து சிரிச்சா.." அது என்று சொல்வதா, அவள் என்று சொல்வதா என்பது போல ஒரு கணம் தடுமாறினாள்.

அங்காயியின் சப்தநாடியும் ஒடுங்கியது.

"காமதேனுவைப் பார்த்தியா?"

"ஆமாம் எவ்வளவு அழகா இருந்தது தெரியுமா? கிண்கிணின்னு மணிகள் ஒலிக்க, ஜல்ஜல்னு கம்பீரமாக நடந்து வந்ததே அந்தப் பக்கத்துலயிருந்து தானே வந்தது. நீங்க பாக்கலியா?.. கோசாலைக்குள்ள நுழையறதுக்கு முன்னாடி என்னைப் பார்த்துச் சிரிச்சுட்டு உள்ளே போய் மறைஞ்சு போச்சு.." தமயந்தி புளகாங்கிதத்துடன் கூறினாள்.

அங்காயியின் குரல் பதற்றத்துடன் ஒலித்தது.

"தாயி! உன் நல்லதுக்குத்தான் சொல்றேன், நீ நிம்மதியா வாழணும்னா காமதேனு பசுவை நீ பார்த்த விஷயத்தை யார்கிட்டேயும் சொல்லாதே. குறிப்பா உன் புருஷன்

கிட்டேயும், அவரு அண்ணன்மார்கள் கிட்டேயும் சொல்லிடாதே தாயி.." அங்காயி எச்சரித்தாள்.

அன்று மாலை தமயந்திக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. கோவிலுக்கு போகாதே! உன் குழந்தை நாசமா போயிடும்! என்று மாமியார் சபித்ததை எண்ணி மனம் குமைந்தபடி கோவிலுக்கு வந்திருந்தாள். காமதேனுவின் தரிசனம் ஒரு இன்ப அதிர்ச்சிதான். அதை எண்ணி ஸ்லாகித்துப் பேசும்போது, அடுத்த அதிர்ச்சியாக இதோ அங்காயி விடுத்த எச்சரிக்கை.

"ஏன் சொல்லக்கூடாது?" தமயந்தி கேட்டாள்.

"உன் மாமியார்காரியை பைத்தியமாக இருட்டு ரூமுக்குள்ள உட்கார வச்சிருக்காங்களே! அந்த மாதிரி நீயும் நிரந்தரமா பைத்தியமா போயிடுவே! உன் குழந்தையின் வாழ்க்கையும் நாசமா போயிடும்! நான் சொல்றதைக் கேளு தாயி. காமதேனுவை தரிசனம் பண்ணின விஷயத்தை யார்கிட்டேயும் சொல்லாதே நிம்மதியில்லாத ஜன்மமா போயிடுவே..!"

அங்காயி அவளை எச்சரித்துக் கொண்டிருந்த அதே நேரம், கற்பகம் அண்ணி தண்டைகள் ஒலிக்க நடந்து வந்தாள்.

"அங்காயி தமயந்தியை அழைச்சுட்டு வரேன்னு சொல்லிட்டு வம்படிச்சுட்டு நிக்கிறவ! குருக்கள் தீபாராதனை காட்டப்போறாரு சீக்கிரம் வாங்க!" கற்பகம் கூற, அங்காயி கண்களால் எச்சரித்தபடி, அவள் கையைப் பிடித்துக்கொண்டு மஹா மண்டபத்தை நோக்கி, நடந்தாள்.

அம்பாளுக்கும், ஈசனுக்கும் நாகநாத குருக்கள் தீபாராதனைக் காட்ட, காமதேனு வாகனத்தைக் கவனித்த தமயந்தியின் தேகம் சிலிர்த்தது. சற்று முன் பார்த்திருந்த அதே நீலப் பட்டாடையும், மல்லிகை மலர்களும் காமதேனு வானகத்திற்குச் சாற்றப் பட்டிருந்தன.

தான் கண்டக் காட்சியை தன் கணவனிடம் சொல்வதா, வேண்டாமா என்று யோசித்தபடி நடந்தாள் தமயந்தி.

"ஏதாவது கண்ணில் பட்டுதா?" என்று குடும்பத்தினர் அவளை கேட்டபடி இருக்க, அமைதி காத்தாள், தமயந்தி.

அன்றிரவு -

அருகே படுத்திருந்த கணவனின் காதில் ரகசியமாக கிசுகிசுத்தாள்.

"என்னங்க இன்னைக்கு சாயங்காலம் கோவில் நந்தவனத்துல உட்கார்ந்திருந்தேன் இல்ல. அப்ப காமதேனு

பசுவைப் பார்த்தேன். என்னைப் பார்த்து சிரிச்சுட்டு, கோசாலை உள்ளே நுழைஞ்சு மறைஞ்சு போச்சு."

இவளை நம்பாமல் சிரிக்கத் தொடங்குவான் குணசேகரன் என்றுதான் தமயந்தி நினைத்தாள்.

ஆனால் -

தமயந்தி நடந்ததை கூறியதுதான் தாமதம். கட்டிலில் இருந்து துள்ளி எழுந்து, நெகிழ்ந்திருந்த தன் வேஷ்டியை இறுகக் கட்டியபடி இவளைப் பிரமிப்புடன் பார்த்தான்.

"என்ன பயப்புள்ள நீ! இவ்வளவு நிதானமாகச் சொல்றவ! எவ்வளவு பெரிய விஷயம்! அங்கண்ணி கேட்டுச்சு இல்ல! அப்ப சொல்ல வேண்டியதுதானே! ஒண்ணுமே நடக்கலைன்னு நாங்கள்ளாம் விசனப்பட்டுகினு இருக்கோமு!" என்று கூச்சல் போட்டபடி அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடினான்.

"அண்ணே! சின்னண்ணே! அங்கண்ணி!" என்ற குணசேகரன் கூப்பாடு போட, பரபரவென்று, கீழே இருந்த தளங்களில் விளக்குகள் எரிந்து கதவுகள் திறந்தன.

"என்ன விஷயம் குணா?" திபுதிபுவென்று மூன்றாவது மாடியிலிருந்து கீழே இறங்கி வந்த குணசேகரனை, இசக்கிப் பாண்டி கேட்டான்.

"தமயந்தி கண்ணுல காமதேனு தெரிஞ்சுதாம் அண்ணே.." உற்சாகத்துடன் குணசேகரன் சொல்ல, விரைவிலேயே அந்த உற்சாகம் பாண்டி ராஜ்யம் வீடு முழுவதும் பரவியது.

பெரிய வீடே அல்லோலகல்லோலப்பட்டது. மூச்சிறைக்க மூன்று மாடிகளை ஏறி வந்த அங்கண்ணி, தமயந்தியின் கன்னங்களை வழித்து தனது தலையில் இருபுறங்களிலும் சொடுக்கிக்கொண்டாள்.

"பாக்கியலட்சுமி! எங்களுக்கு எல்லாம் கிடைக்காத பாக்கியம் உனக்கு கிடைச்சிருக்கு. இனிமே நம்ம குடும்பத்துக்கு விடிவுகாலம்தான்.." என்றாள்.

அடுத்ததாக அங்கண்ணி செய்த செயல் தமயந்தியை திடுக்கிட வைத்தது.

கலாவதி கையில் எரியும் கற்பூரத்தட்டுடன் வந்து அங்கண்ணியிடம் நீட்ட, அவள் அதை வாங்கி தமயந்தியின் முகத்துக்கு எதிராக மூன்று முறை சுழற்றினாள்.

அடுத்த கணம் -

அந்த குடும்பத்தினர் அனைவரும், பெரிய பாண்டி உள்பட தமயந்தியின் கால்களில் விழுந்தனர். தன் கணவன் குணசேகரனே தனது கால்களில் விழுவதைக் கண்டு தமயந்தி பதறிப்போனாள்.

"ஐயோ என்னங்க இது! நீங்க போய் என்னை வணங்கறீங்க..?" துடிதுடித்தாள் தமயந்தி.

"உன் வயத்துல தெய்வத்தை சுமந்துகிட்டு இருக்கே! அதனால தப்பு இல்லை! நீ நிம்மதியா தூங்கு! நாளைக்கு பேசிக்கலாம்!" என்று குடும்பத்தினர் கலைந்துச் சென்றனர்.

தமயந்திக்கு தூக்கம் வரவில்லை. காமதேனுவை பார்த்த விவரத்தை உன் புருஷன் வீட்டாரிடம் சொல்லாதே என்ற அங்காயியின் எச்சரிக்கையை மீறி விஷயத்தை அவர்களிடம் சொன்னது தவறோ என்று முதல் தடவையாக நினைத்தாள் தமயந்தி.

குணசேகரன் நிம்மதியாக உறங்கிவிட, தூக்கம் வராமல், புரண்டுக் கொண்டிருந்தாள் தமயந்தி. தண்ணீர் குடிக்கலாம் என்று அவள் எழுந்தபோதுதான், 'ஹோ' என்கிற அந்த ஓலம் அவள் செவிகளில் வந்து அறைந்தது. அந்த ஓலத்தை கேட்டதும் திகிலுடன் படுக்கையறை கதவை திறந்து எட்டிப்பார்த்தாள். மீண்டும் அந்த ஓலம் கேட்க, ஹாலுக்கு

வந்து. சாப்பாட்டு அறையைக் கடந்து, மூடிய கதவின் முன்பாக நின்றாள்.

அந்தக் கதவின் பின்பாக ஒரு வெட்டவெளி பால்கனி உண்டு. துணிகளை உலர்த்துவதற்காக அமைக்கப்பட்ட பகுதி. திறக்கலாமா என்று யோசித்தபடி நிற்க, மீண்டும் 'ஹோ' என்கிற அந்த ஓலம் கேட்டது.

மூன்றாம் மாடியில்தானே இருக்கிறோம் என்று சற்றே தைரியப்படுத்திக் கொண்டு கதவைத் திறந்து, பால்கனியில் பிரவேசித்தாள். ஜில்லென்ற காற்று முகத்தை வந்து தாக்கியது.

'ஹோ' என்று மீண்டும் அந்த அழுகையான ஓலம் கேட்டது. பால்கனியிலிருந்து எட்டிப் பார்க்க, கீழே நேராக மாமியார் பாஞ்சாலி இருந்த இருட்டறை தெரிந்தது.

"படிச்சு படிச்சு சொன்னேனே! கோவிலுக்கு போவாதேன்னு! கேட்காம போனாளே! இப்ப கொலைகார காமதேனுவை பார்த்தேன்னு சொல்லிட்டு வந்து நிக்கிறாளே..! பைத்தியக்காரி!"

மாமியார் பாஞ்சாலியின் புலம்பல் தமயந்திக்கு தெளிவாக கேட்டது. தன்னைப் பற்றிதான் பேசுகிறாள் அவள் என்பதைப் புரிந்து கொண்டாள், தமயந்தி. காதுகளை கூராக்கி, உன்னிப்பாக மாமியார் சொல்வதைக் கேட்டாள்,

பாஞ்சாலியின் புலம்பல் தொடர்ந்து.

"நான் ஒருத்தி காமதேனுவைப் பார்த்துட்டு என் கண்மணிய இழந்தது பத்தாதா..? இவளும் என் கதிக்கு ஆளாகணுமா..?" பாஞ்சாலியின் ஓலம் தமயந்தியின் அடிவயிற்றைக் கலக்கியது.

அவசரமாக மீண்டும் தன் போர்ஷனுக்குள் நுழைந்து, பால்கனி கதவைச் சாற்றியவள். 'மடக் மடக்'கென்று தண்ணீரைக் குடிக்கத் துவங்கினாள்.

# அத்தியாயம் 2

**கோ**வூர் சன்னிதி தெரு!

தெருவில் நுழைந்தவுடன், எதிரே கம்பீரமாக நிற்கும் கோவில் கோபுரத்தைப் பார்க்கும்போது, இடப்புறமாக நான்காவதாக உள்ள பூட்டிக்கிடக்கும் வீட்டின், பின்புறமாக ஒரு போர்ஷனில் கந்தர் சஷ்டி கவசம் ஒலிக்கிறதே! அதுதான் பெரிய வீட்டு கணக்குப் பிள்ளை சிவநேசனின் வீடு. அந்த சிறிய போர்ஷனைப் பார்த்ததுமே கூறி விடலாம், அந்த வீட்டின் உரிமையாளரான வைதீக பிராமணர், தன் வீட்டைச் சேர்ந்த பெண்கள் மாதாமாதம் விலகுவதற்காக அமைத்திருந்த பகுதி என்று.

தற்போது அந்த வைதீக வீட்டுக்கார குடும்பம் கோவூர் தேனுகாம்பாளுக்கு பை.. பை.. ஸீரியோ.. சொல்லி விட்டு, பிட்ஸ்பர்க் மீனாக்ஷியை ஆராதித்துக் கொண்டிருக்கிறது. பிள்ளை அமெரிக்க குடியுரிமையைப் பெற்று விட்டான். நாடாறு மாதம் காடாறு மாதம் என்பது போல அமெரிக்காவில் ஆறு மாதம், கோவூரில் ஆறு மாதம் என்று வாழ்ந்து கொண்டிருந்த வீட்டுக்காரத் தம்பதிகளும், அமெரிக்காவின் குடியுரிமை வாங்கி விட்டனர். மூன்று தலைமுறையாக

வாழ்ந்திருந்த வீட்டை விற்க மனமில்லாமல், முன் பகுதியைப் பூட்டி வைத்துக் கொண்டு, பின்பகுதியை நாற்பதே ரூபாய்க்கு சிவநேசனுக்கு வாடகைக்கு விட்டார். வாடகைக்கு விட்டிருந்தார் என்று கூறுவதை விட, தன் வீட்டின் முன் பகுதியில் பூட்டிய கதவுகளுக்குப் பின்னால், அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்ல முடியாத உயர்ந்த பொருட்களுக்கு சிவநேசனை காவலாக வைத்திருந்தார் என்றே சொல்ல வேண்டும்.

ஒரு ஹால், சமையலறை மற்றும் கொல்லையில் பாத்ரூம் டாய்லெட் அவ்வளவுதான்! இந்தக் குடியிருப்பின் மொத்தப் பகுதி. இந்தச் சிறிய போர்ஷனில் சிவநேசன், மனைவி குலதனம், மகள் அருந்ததி மற்றும் மகன் காமேஷ்வரன் என்கிற காமேஷ் ஆகியோருடன் வசித்து வந்தார் சிவநேசன்.

அப்பா உரத்தக் குரலில் கூறிக்கொண்டிருந்த கந்தசஷ்டி கவசம், உறங்கிக் கொண்டிருந்த காமேஷின் உறக்கத்திற்கு தடைச்செய்தது.

"த்தஸ்ஸூ.." சலிப்புடன் ஒலியெழுப்பிய காமேஷ் போர்வையினால் தனது நெடிய உருவத்தை தலையோடு சேர்த்துப் போர்த்திக் கொள்ள, அந்தப் போர்வை அவனது தேகத்தை முழுவதுமாக மறைக்க இயலாமல் தோல்வியைக்

கண்டது. இப்போது அவனது முழங்காலிலிருந்து பாதங்கள் வரை போர்வையை விட்டு வெளிவந்திருந்தன.

கர்லாக் கட்டையைப் போன்ற அவனது இரு கால்களும் அந்தச் சிறிய ஹாலின் குறுக்காக ரயில்வே தண்டவாளங்களாக நீண்டிருக்க, வீட்டின் முன்புறத் தோட்டத்தில் பூக்களைப் பறிப்பதற்காக மூங்கில் கூடையுடன் புறப்பட்ட அருந்ததி, அவனது கால்களைத் தாண்டுவதற்கு எத்தனித்தாள். காமேஷின் உறக்கத்தை கெடுக்கக்கூடாது என்பதற்காக தனது பாதத்தை அவனது இரு கால்களின் நடுவே ஊன்றி, மற்றொரு காலையெடுத்து தாண்டிக் கொண்டிருந்த வேளையில், அகஸ்மாத்தமாக புரண்டு படுத்தான் காமேஷ். இதனால் அருந்ததியின் வலதுகால் அவனதுக் கால்களிடையே சிக்கிக்கொள்ள, தடுமாறி அலறலுடன் தம்பியின் மீதே விழுந்தாள்.

அலறல் ஒலியைக் கேட்டு சமைத்துக்கொண்டு இருந்த குலதனம் கலவரத்துடன் சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்தாள். சிவநேசனும் கந்தர் சஷ்டியை சற்று நிறுத்தி விட்டு, பதற்றத்துடன் ஹாலுக்கு வந்தார்.

தன் மீது விழுந்திருந்த அக்காவை எரிச்சலுடன் அப்பால் தள்ளியபடி எழுந்து அமர்ந்தான் காமேஷ்.

"நிம்மதியா தூங்க முடியுதா, இந்த வீட்டுல? வீட்டுக்கார ஐயர்தான் முன் போர்ஷன் சாவியை கொடுத்துட்டு போயிருக்காரு இல்லே? சாவியைக் கொடுத்தா நான் முன்போர்ஷன்னுல தூங்குவேன் இல்லே?"

எட்டிப்பார்த்த அம்மாவை சலிப்புடன் கேட்டான். ஸ்வபாவத்திலேயே நியாயமான சிந்தனையும், சட்டத் திட்டங்களை கடைப்பிடிக்கிற பையன் காமேஷ். ஆனால் அப்பாவின் கையாலாகாதத்தனமும், அம்மாவின் சகிப்புத் தன்மையும் அவன் முகத்தில் கோபமும், கடுகடுப்பும் நிரம்பி வழிவதற்கு காரணமாகப் போய்விட்டன.

யாராவது அவன் காலை மிதித்துவிட்டால் தன்னால் அவனது கை 'பளார்' என்று அவர்களது கன்னத்தை தாக்கும்! அந்த அதிர்ச்சியிலேயே அடிபட்டவர்கள் 'சாரி' என்கிற வார்த்தையை உதிர்ப்பார்கள்! 'சரி' என்று காமேஷ் போய்க்கொண்டே இருப்பான்.

"அதெப்படி முன் போர்ஷன் சாவியைக் கொடுப்பேன்? நம்மளை நம்பி அவர் சாவியைக் கொடுத்துட்டு போயிருக்காரு! நாம துஷ்பிரயோகம் செய்யக்கூடாது.." காட்டமான குரலில் கூறினார் சிவநேசன்.

"எதுக்காக இப்படிக் கத்தி பேசறாரு? அமெரிக்காவுல இருக்கிற ஐயருக்கு இவர் நியாயமா நடந்துக்கறது தெரியணுமாக்கும்..?" காமேஷ் 'ஷார்ட்ஸ்'ஸுடன் எழுந்து நிற்க, அவன் கட்டியிருந்த வேஷ்டி போர்வையுடன் பின்னிப் பிணைந்து கிடந்தது.

குலதனம் தலையிலடித்துக் கொண்டாள்.

"இதுக்கு நீ வேஷ்டியே கட்டியிருக்க வேணாம்.." என்றபடி சமையலறைக்குள் புகுந்துக் கொண்டாள்.

மகனின் கம்பீரமான தேகத்தை ஒருமுறை ஏற இறங்க நோக்கினார் சிவநேசன்.

சிறு குழந்தையாக தோளில் தொற்றிக் கொண்டு, இவரிடம் ராமாயண, மஹாபாரத கதைகளைக் கேட்ட அந்த நோஞ்சான் பிள்ளை காமேஷா இவன்? என்ன ஒரு வளர்த்தி..?

சற்றே கருத்த தேகம்தான். ஆனால் கம்பீரத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்தான். அடர்த்தியான தலைமுடி! வட்டமான முகம். அதில் இரண்டு அகன்ற குளங்களாக மினுமினுக்கும் கண்கள். தீர்மையான நாசி. அதன் கீழ் முறுக்கு மீசை! நெடியக் கழுத்து இருபுறமும் கற்பாறையான தோள்கள். அகன்ற மார்பு, சதயுதங்களாக புஜங்கள் என்று ஒரு ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த வாலிபனாகவே

தோன்றவில்லை. நிச்சயம் அவனது தேகம் சிவநேசனின் சொற்ப சம்பளத்தால் வளர்க்கப் பட்டதல்ல! அவ்வப்போது தெருக்கோடி பேப்பர் ஐயருக்காக கடின வேலைகளைச் செய்து, பணம் சேர்த்து தன் உடலை டௌன் ஜிம்முக்கு சென்று போஷித்து வருவதால்தான் இந்தக் கம்பீரம்.

இதோ -

குலதனம் அன்றுக் கிடைத்த கைக்குத்தல் அரிசியை வைத்து ஏதோ சமையலை ஒப்பேற்றிக் கொண்டிருக்கிறாள். நிச்சயம், அவளது சமையலில் அன்றாடம் கருவேப்பிலை துவையல், கருவேப்பிலை குழம்பு அல்லது கருவேப்பிலை பொடி என்று இருக்கும். வீட்டின் வாசலில்தான் கருவேப்பிலை மரமே இருக்கிறதே.

நாற்பது ரூபாயை வீட்டுக்கார ஐயரின் வங்கிக் கணக்கில் வாடகையாக செலுத்திவிட்டு எஞ்சியுள்ள நானூற்றி அறுபது ரூபாயில் குடும்பத்தை நடத்த வேண்டிய கட்டாயம் அவருக்கு. ஐநூறு ரூபாய் சம்பளத்தில் பெரிய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு கணக்கெழுதிக் கொண்டிருப்பார். ஆயிரங்களைத் தாண்டி லக்ஷங்களை கணக்கர்கள் பார்த்துக் கொண்டிருக்கிற விஷயம், அப்பாவுக்கு தெரியாது. தெரிந்தும்

தெரியாத மாதிரிக் காட்டிக் கொள்வார்கள் பெரிய வீட்டுக்காரர்கள்.

அருந்ததியும், கல்யாணத்திற்குத் தயாராகி விட்டாள் அவளது திருமணத்திற்கு மாசம் அறுபது ரூபாயையாவது சேமிக்க நினைக்கிறார், சிவநேசன்! முடியவில்லை. அவளே அக்கம்பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுக்கு ட்யூஷன் சொல்லித்தந்து, சிறுக சிறுக தன் கல்யாணத்துக்கு சேமித்து வருகிறாள். இவள் பூப்பறிக்க வீட்டின் முன் தோட்டத்திற்கு வருவதற்காக கையில் மடித்த பேப்பருடன் காத்திருக்கிறான் எதிர் வீட்டு உமையாள் மகன் செந்தில் வாத்தி! இன்று பேப்பரின் தலைப்பு செய்தி என்ன என்று போய் கேட்டால் தலையை சொறிவான். அருந்ததி காலை என்ன கலர் புடவை கட்டியிருந்தாள் என்றால் பட்டென்று பதில் வரும்.

காமேஷ் பிளஸ்-டூ வரைதான் படித்திருந்தான். நல்ல மதிப்பெண் எடுத்துதான் தேர்ச்சி பெற்றிருந்தான். ஆனால், வீட்டு சூழ்நிலையைக் கருதி, பிடிவாதமாக கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் படிக்கப் போவதாக அறிவித்து விட்டு, தெருக் கோடியிலிருந்து பேப்பர் ஏஜெண்ட் ஐயரின் எடுபிடியாக சேர்ந்து விட்டான்.

இளம்பிள்ளை வாதத்தினால் கால்கள் சூம்பிய நிலையிலிருந்த ஐயரின் மகன் விச்சுவை மோட்டார் பைக்கில் பள்ளிக்கு அழைத்துச் சென்று வருவதும் அவனை 'நொண்டி' என்று யாராவது கிண்டல் செய்தால், அவர்களைத் தேடிச்சென்று தாக்குவதும், காலை நேரங்களில் செய்தித்தாள் பண்டல்களை கடைகளில் விநியோகிப்பதும், ஐயரின் வங்கி கணக்குகளைப் பார்த்துக் கொள்வதும்தான் அவனது வேலை.

நாளடைவில் ஐயரோடு மிகவும் ஒன்றிப்போய் விட, அவன் கையில் தாராளமாக பணம் புரளக் துவங்கியதும், கரெஸ்பாண்டன்ஸ் கோர்ஸின் மீது இருந்த ஆர்வமும் காணாமல் போனது. சம்பாதிப்பதற்கு படிப்பு தேவையில்லை என்கிற அறிவிப்போடு மேற்படிப்புக்கு விடை தந்திருந்தான்.

ஒரு விதத்தில், காமேஷின் கட்டான உடலுக்கு ஐயரும் ஒரு காரணம். அவனுக்கு போஷாக்கான உணவையளித்து அவ்வப்போது அவனை டௌன் ஜிம்மிற்கு அனுப்பி 'சிக்ஸ்பேக்'கை வளர்த்துக் கொள்ளும்படி கூறியதே ஐயர்தான். ஐயருக்கு நிலங்கள் நிறைய உண்டு. அதனால் எதிரிகளும் அதிகம். பிரச்னை செய்யும் நபர்களை சமாளிக்க, தன் உடல் வலுவை நம்பி பிரயோஜனம் இல்லை என்பதை உணர்ந்திருந்த ஐயர், தன் எதிரிகளை கையாளவே. காமேஷின் உடலை போஷித்தார்.

காமேஷுக்கும் அடிதடி என்றால் கொள்ளை வசியம். வீண் வம்புக்கு போக மாட்டான்தான். ஆனால் வம்பு அவனைத் தேடி வந்தால் விடமாட்டான். பக்கத்து கிராமத்து பண்ணையார் பிள்ளை ஒரு முறை அருந்ததியின் மீது சைக்கிளால் இடித்து விட்டான் என்பதற்காக அவனைத் தேடிப்பிடித்து நையப்புடைத்து விட்டு வந்தான். அதனால் இரண்டு கிராமங்களுக்கும் தகராறு மூண்டுவிட, பிறகு பெரிய வீட்டு செண்பக பாண்டிதான் தலையிட்டு சமரசம் செய்திருந்தான்.

"ஏலே சிவநேசா! உன் மவனைக் கொஞ்சம் அடக்கி வை! காளைமாடு கணக்கா பலத்தை வச்சுகிட்டு என்ன செய்யறதுன்னு தெரியாமத் திரிகிறான். பேசாம நம்ம எண்ணை செக்கை ஒட்டச்சொல்லு. மாசம் நூத்தம்பது தரேன்!" பெரிய பாண்டி சொன்னதை மகனிடம் தெரிவித்தார், சிவநேசன்.

"ஏன்.. நீங்க ஒருத்தர் செக்கு மாடு மாதிரி பெரிய குடும்பத்தையே சுத்தி வர்றது பத்தாதா? நானும் வேற வர்றணுமா? நான் என் வழியைப் பாத்துக்கறேன்.." என்று அலக்ஷியமாக கூறி அகன்று விட்டிருந்தான் காமேஷ்.

பூக்கூடையுடன் எழுந்த அருந்ததி, தம்பியை கரிசனத்துடன் பார்த்தாள்.

"காமேஷ் காலுல அடிப்பட்டிருக்கா பாரு! நீ ஓடியாடி வேலை செய்யறவன்! உனக்கு காலு ரொம்ப முக்கியம்.." அக்கறையுடன் கேட்ட அருந்ததியை பாசத்துடன் நோக்கினாள் காமேஷ்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை!" என்றவன் வேஷ்டியை எடுத்து இறுகக் கட்டியவன், அதை முழங் காலுக்கு மேலாக மடித்துக்கொண்டு நீண்ட சோம்பல் ஒன்றை முறித்தான்.

"கோவிலுக்கு போறீயாக்கா?" காமேஷ் கேட்டான்.

"ஆமா! இன்னைக்கு ஆவணி அஷ்டமி, நாகநாத குருக்கள் அரளிப்பூ கேட்டார்.." என்றபடி வீட்டின் முன்புறம் சென்றான்.

கொல்லைப்புறத்திற்கு சென்று காலைக் கடன்களை முடித்துவிட்டு அம்மா அங்கேயே தயாராக வைத்திருந்த துணிகளை எடுத்துக்கொண்டு குளித்து முடித்தான். மீண்டும் சமையலறைக்குச் சென்ற போது, நசுங்கிய பித்தளை டம்ளரில் குலதனம் அவனுக்காக வைத்திருந்த கருப்பட்டி காபியை அருவருப்புடன் நோக்கினான், காமேஷ்.

அவன் கண் முன்னாடி பேப்பர் ஐயரின் மனைவி விசாலாக்ஷி தரும் காபி நிழலாடியது. பெரிய எவர்சில்வர் டபரா டம்ளரில் நுரைப்பொங்க கள்ளிச் சொட்டாக காபியை

கொதி நிலையில் இவனுக்குத் தருவாள். நாள் முழுவதும் அந்தக் காபியை குடித்துக்கொண்டே இருக்கலாம். அந்தக் காபியைக் குடித்தவனுக்கு கருத்த நிறத்தில் கருப்பட்டி காபியை நசுங்கிய பித்தளை டம்பளரில் கடனே என்று கொடுத்தால் எப்படி குடிக்கப் பிடிக்கும்?

பூஜை செய்கிறேன் பேர்வழி என்று சமையலறை முழுவதும் சாம்பிராணி புகையைப் பரவ விட்டிருந்தார், சிவநேசன். நீண்டநேரம் பூஜை செய்வதால் என்ன பிரயோஜனம்? கிடைக்கிற சொற்ப வருமானத்தில் சாம்பிராணி கற்பூரத்திற்கே அதிகம் செலவாகிறது. சாமிப் படங்களுக்கு தாராளமாக பூக்களை வைத்திருந்தார். உபயதாரர். வீட்டின் முன்னால் தோட்டத்தை வைத்திருந்த வீட்டுக்காரரர்!

"ஐயர் வீட்டுத்தோட்டத்துல பூக்கிற பூக்களை மட்டும் அள்ளி அள்ளி சாமி படங்களுக்கு வைக்கலாமா? இது மட்டும் துஷ்பிரயோகம் இல்லையா?" அம்மாவைப் பார்த்து காமேஷ் கேட்க, கெஞ்சும் பாவனையில் அவள் தன் இருகைகளையும் கூப்பினாள்.

"சீக்கிரம் அக்கா கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க! இப்ப செவ்வரளி பூவைத்தான் பறிக்க போயிருக்கா! அவளை விதையைப் பறிக்க வச்சுடாதீங்க!" என்றபடியே கருப்பட்டி

காபியை திரும்பிப் பார்க்காமல் பேப்பர் ஐயர் வீட்டுக்குப் புறப்பட்டான்.

குலதனத்துக்கு தெரியும் அவனுக்கு அங்கே சிறந்த காபி கிடைக்கும் என்று. மௌனமாக அதை எடுத்து, தன் வாயில் ஊற்றிக் கொண்டாள்.

காமேஷ் தன் போர்ஷனில் இருந்து வெளியே வந்து முன்பக்கமாக நடந்தான். அருந்ததி செவ்வரளியைப் பறிக்க, எதிர்வீட்டு செந்தில் பேப்பரை விரித்தபடி அதன் பின்னாலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். இம்மாதிரி வாலிபர்கள் இருக்கும் வரை நியூஸ் பேப்பர்கள் சர்குலேஷனுக்கு என்ன குறைவு? காமேஷ் நினைத்தான். காமேஷ் வாசற்புறம் வருவதைக் கண்டதும், அவசரமாக பேப்பரை மடித்துக்கொண்டு உள்ளே நழுவினான்.

காமேஷுக்கு சிரிப்பாக வந்தது. அருந்ததியின் மீது அவனுக்கு கண் இருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் தொடை நடுங்கி. தைரியமாக வந்து பெண் கேட்க வக்கில்லை. காமேஷின் வலுவான 'சிக்ஸ் பேக்'கை கண்டு அப்செட்டாகி விடுகிறான். நல்ல மனிதன்தான்! ஆனால் அவன் அம்மா உமையாள் ஒரு ராக்ஷஸி. காமேஷின் சிக்ஸ் பாக் அவளது வாய்வீச்சின் முன்பாக எடுபடாது. பேசியே ஆறு பேரை ஒரே

சமயத்தில் பேக் செய்து விடுவாள். அவள் உமையாளாக இல்லாமல் ஊமையாக இருந்திருந்தால், காமேஷ் தன் அக்காவை வாத்திக்கு மணமுடித்திருப்பான்.

தெருவில் இறங்கி நடக்க, எதிர்வீட்டு கிட்டா ஐயர் மனைவி மோஹனா வீட்டு வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

"அடேய் காமேஷா! இந்த மாசம் கலைமகள் வந்தாச்சா?" கோலம் போட்டபடி கேட்டாள் மோஹனா.

"இல்லே மாமி!" என்றவன் வியப்புடன் தெருவைப் பார்த்தான். எல்லா வீட்டு வாசலிலும் பெண்கள் கோலமிட்டுக் கொண்டிருந்தனர்.

"என்ன மாமி எல்லா வீட்டிலும் கோலம் போடறாங்க!" காமேஷ் கேட்டான்.

"நோக்கு தெரியாதா? ஒஹோ நீதான் நம்பாதவனாச்சே! இன்னைக்கு பெரியாத்து தேனுகா கோவிலுக்கு வர்றாடா! அவ பிறந்த நாளோன்னோ!" என்றாள்.

'இது ஒரு பிழைப்பு' மனதிற்குள் நினைத்துக் கொண்டான். சாமியின் அம்சம் என்று சொல்லிக் கொண்டு, ஊர் மக்களை

பயமுறுத்தி தன் வசம் வைத்துக்கொண்டு, பிறந்தநாள் அப்படி இப்படி என்று கலெக்ஷனுக்கு வருவது?

தன்னுள் மூண்ட எரிச்சலை அடக்கியபடி பேப்பர் ஐயர் வீட்டினை நோக்கி நடந்தான்.

ஐயரின் வீட்டின் முன்பாக செய்தித்தாள் பண்டல்கள் குவிக்கப்பட்டிருந்தன. சுற்றுவட்டாரக் கிராமக் கடைகளில் பண்டலை விநியோகிக்க வேண்டும்.

காமேஷ் வருவதைப் பார்த்ததும், திண்ணையில் அமர்ந்திருந்த ஐயர், மூக்கின் மீது வழிந்திருந்த தன் கண்ணாடியை சுட்டுவிரலால் உயர்த்தினார்.

"வந்துட்டியா காமா! இன்னைக்கு விச்சுவோட ஸ்கூல்ல ஏதோ விழாவாம். அவன் சீக்கிரம் போகணுமாம். எனக்கு எப்படியும் பாங்க்ல கொஞ்சம் வேலை இருக்கு! நான் பண்டல்களை எடுத்து போயிடறேன். நீ சைக்கிளை எடுத்துண்டு போய் விச்சுவை ஸ்கூல்ல விட்டுடு!" ஐயர் சொல்ல, "சரி மாமா" என்றபடி நிற்க, காமேஷை உள்ளே இருந்து மாமியின் குரல் அழைத்தது.

"வந்துட்டியா.. காமேஷ்! வந்து காபியை குடி!"

# காமதேனுவின் முத்தம்!

காமேஷ் உள்ளே நுழைந்ததும், விச்சு ஸ்கூலுக்கு தயாராகிக் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

"குட் மார்னிங் காமேஷ் அண்ணா! காபியை குடிச்சுட்டு கிளம்பலாமா? இன்னைக்கு தமிழ் மன்றம் மீட்டிங் இருக்கு! கோவூரின் பெருமைகளை பத்தி நான் பேசப்போறேன்!" விச்சு சொல்ல,

"மீட்டிங்ல பேசப்போறியா விச்சு! நம்ம ஊரைப் பத்தி பேசறத்துக்கு என்ன இருக்கு?"

அவனிடம் காபியை நீட்டியபடியே விசாலாக்ஷி வியப்பு கலந்த குரலில் பேசினாள்.

"என்னடா அப்படி சொல்லிட்டே! நம்ம ஊரு தேனுகாம்பாள் - காமேஷ்வரன் கோவிலோட பெருமை களையே நாள் முழுக்க பேசிண்டு இருக்கலாமே! போதாக்குறைக்கு, பெரிய ஆத்துல தேனுகா ரூபத்துல அந்த காமதேனுவே பிறந்திருக்காளே! இது நம்ம ஊருக்கு பெரிய பெருமைதானே!" விசாலாக்ஷி கூறியதும், காபியை குடித்து முடித்த காமேஷ், காலி தம்ளரை அவளிடம் நீட்டினான்.

"மாமி! அந்தக் கட்டுக்கதைகளை நீங்களும் நம்பறீங்களா என்ன? பதினெட்டு வருஷங்களுக்கு ஒரு முறை காமதேனு பெரிய குடும்பத்துக்கு மட்டும் காமதேனு காட்சி தருவாளாம்!

அவுங்க வீட்டுல மட்டும் வந்து பிறப்பாளாம்! அவங்களுக்கும் மட்டும் சுபிக்ஷம் அதிகரிச்சுட்டே இருக்குமாம்! விச்சு! நீ இந்த புருடாவை எல்லாம் மீட்டிங்ல பேசாதே! உன்னோட தமிழ் வாத்தியார் பகுத்தறிவு கட்சி உறுப்பினரா இருந்தா உனக்கு பரிசு கிடைக்காது!" என்றான் காமேஷ்.

"நீ வேற அண்ணா! அந்த வாத்தியாரே சாமியக்கா கிட்டே திருநீறு வாங்கிட்டு வந்தாரு. அவர் பெண்டாட்டிக்கு முட்டு வலி சொஸ்தமா ஆயிடுத்துன்னு பேசிண்டிருந்தாரு!" விச்சு சொன்னான்.

"உருப்பட்டாபோலதான்! சரி கிளம்பு!" காமேஷ் ஆணியில் மாட்டியிருந்த ஐயரின் சைக்கிள் சாவியை எடுத்துக்கொண்டு நகர்ந்தான், ஹைதர் காலத்து சைக்கிள். தன் அப்பாவின் நினைவாக வைத்திருந்தார் ஐயர். ஓட்டுபவர்களைப் படுத்தி எடுக்கும் சைக்கிள்தான். வழக்கமாக இவன் ஐயரின் பைக் சாவியைதான் எடுத்துக் கொள்வான். இன்றைக்கு அவருக்கு வேலை இருப்பதால், இவன் சைக்கிளை எடுக்க வேண்டிய சூழ்நிலை.

விச்சுவுடன் ஸ்கூலுக்கு கிளம்பியபோது தேனுகா வரப்போகிறாள் என்று அந்தச் சன்னதித்தெரு மட்டுமல்லாமல் ஊரே பரபரத்தது. அக்கிரஹாரம், குடியானவர் வீதி மற்றும்

குடிசைப் பகுதி எல்லாவற்றிலும தோரணங்களும் பூமாலைகளும் தொங்கிக் கொண்டிருந்தன. உண்மையிலேயே தேனுகா ரூபத்தில் காமதேனுதான் பெரிய வீட்டில் பிறந்திருக்கிறாளா என்ன?

"டேய் விச்சு! நீ சாமியக்காவை பாத்திருக்கியா.."

"ஓ.. பாத்திருக்கேன் கோவில்ல.." என்றான்.

தேனுகா பிறந்தது முதல் வானம் பார்த்த பூமியான கோவூரில் மழை பொய்த்ததே கிடையாது என்கின்றனர் ஊர் மக்கள்.

தேனுகாவை தங்கள் வீட்டுக்கு வரவழைத்து சுபிக்ஷத்தை தேடிக் கொண்டோம் என்று கூறும் ஊர்ப் பெண்கள் இருக்கிறார்கள்.

ஏன்? தேனுகாவிடம் பேட், பந்துகளை தொட வைத்து, கிரிக்கெட் மேட்சை ஜெயித்து கப் வென்றோம் என்று கூறும் மாணவர்கள் கூட இருக்கிறார்கள்.

உண்மையிலேயே அந்தப் பெண்ணிடம் அப்படி ஒரு மஹிமை இருக்கிறதா என்ன? அப்படியானால் பெரிய வீட்டிலேயே வேலைப்பார்த்து, தேனுகாவுடன் பழகும் அப்பா

சிவநேசனுக்கு ஏன் சுபிக்ஷம் பெருகவில்லை. மகள் அருந்ததிக்கு திருமணம் நடைபெறவில்லை.

இது ஒன்று போதாதா? அந்த தேனுகா சாமியக்காவாக ஆடும் டான்ஸ் உடான்ஸ் என்று மனதிற்குள் சிரித்துக் கொண்டான் காமேஷ்.

என்றைக்காவது ஒருநாள் இவனிடம் அவள் மாட்டினால், அவளது முகத்திரையை கிழிக்க வேண்டும். இதுவரை அவன் அவளைப் பார்த்தது கிடையாது. இவளை அந்தச் சாமியக்காவுக்கு ஒரு ரூபத்தைத் தந்து உருவகப் படுத்தியிருந்தான்.

சடைசடையாக தொங்கும் முடிகளை கொண்டை யிட்டு முகமெங்கும் மஞ்சள் பொடியை அப்பி, டிராஃபிக் சிக்னல் அளவில் குங்குமத்தை நெற்றியில் அப்பிக் கொண்டு, சாமந்தி மாலை போட்டுக்கொண்டு, போவோர் வருவோர் தலையில் வைத்து ஆசி கூறி பணம் பறிப்பவளாக அவன் மனதில் தேனுகாவை வடித்திருந்தான்.

எப்போதாவது அவள் கோவிலுக்கு வருவாள். ஆனால் இவன்தான் கோவிலுக்கு எல்லாம் செல்லும் வழக்கமில்லையே.

தேனுகாவைப் பற்றிய எண்ணங்களுடன் விச்சுவின் ஸ்கூலை நோக்கி சைக்கிளை மிதித்தான், காமேஷ்.

# அத்தியாயம் 3

**செ**ன்னை, நுங்கம்பாக்கம், ரட்லேண்ட் கேட் பகுதி பங்களா. நித்ய மூர்த்தி சமையல்காரம்மாள் நாகரத்னம் நீட்டிய காபி கோப்பையை ட்ரேயிலிருந்து எடுத்தப்படியே, பேப்பரை மேலும் கீழும் நோக்கினார். ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பார்த்ததும் கோபத்துடன் கோப்பையை டீப்பாயின் மீது வைத்துவிட்டு, இரு கைகளாலும் பேப்பரைப் பற்றியபடி அந்த செய்தியில் கண்களை மேயவிட்டார்.

"ரிடிகுலஸ்!" என்றபடி பேப்பரை பக்கத்து சோஃபாவில் கிடாசிவிட்டு மீண்டும் காபி கோப்பையை கையில் எடுத்தார்.

வெள்ளரிக்காய், ஆரஞ்ச், எலுமிச்சை கலவையை முகத்தில் அப்பிக்கொண்டு, தலைமுடியை உச்சியில் கொண்டையாகப் போட்டுக் கொண்டு, கருப்பு நிற லெங்கிங்ஸ் டாப்ஸூடன் இறங்கி வந்தாள், சுபாங்கி! தொழிலதிபர் நித்ய மூர்த்தியின் ஒரே மகள்.

"வாட் ஹேப்பண்ட்!" அவர் எதிரே வந்து 'தொபக்' என்று குஷன் சோஃபாவில் சாய்ந்தாள் சுபாங்கி.

"நேத்து ஷேராடன் ஃபங்ஷன்ல நானும் விமல்காந்தும் பக்கத்துல உட்கார்ந்திருந்தோம், நெக்ஸ்ட் மெகா பட்ஜெட் படத்துக்கு வாழ்த்துக்கள்னு கையை கொடுத்தேன். அவரு ஆரம்பிக்கிற கட்சிக்கு நான் ஆதரவு தெரிவிச்சேன்னு ஃபோட்டோவோட செய்தி போடறான். இன்டஸ்ரி மினிஸ்டர் பெத்தபெருமாள் என் ஃபிரெண்டு. இதைப் பார்த்தா என்ன நினைப்பான்?"

"ஒண்ணும் நினைக்க மாட்டார்! உங்க மூலமா எப்படியாவது விமல்காந்த் கிட்டே அடுத்த எலக்ஷன்ல டிக்கெட் வாங்கணும்னு நினைப்பார்!" சுபாங்கி புன்னகைத்தாள்.

"கன்ட்ரி இஸ் கோயிங் டு டாக்ஸ்! இதையெல்லாம் பாத்தா, எல்லாத்தையும் வித்து காசாக்கிட்டு, கிருஷ்ணா ராமான்னு ஏதாவது கிராமத்துல போய் செட்டில் ஆகிடலாம் போல இருக்கு.." நித்யமூர்த்தி சொன்னார்.

"கோடியில புரளுபவர், தொழிலதிபர் நித்யமூர்த்தியே இப்படி சொன்னா எப்படி? எத்தனை குடும்பங்கள் உங்க தொழிற்சாலையை நம்பி இருக்கு.." சுபாங்கி கேட்டாள்.

"ஆமா.. பொல்லாத குடும்பம்! ஊர் குடும்பம் எல்லாம் கல்யாணம் சீமந்தம்னு தங்கள் ஃபேமிலிய எக்ஸ்பான்ட் பண்ணிக்குது! நம்ம குடும்பத்துலதான் எக்ஸ்பான்ஷன்

ப்ளான்னே இல்லை! நானு, நீ, இதோ முணுமுணுத்துகிட்டே இருக்கிற நாகரத்னம்மா! வீட்டுக்கு வர்றதுக்கே போரடிக்குதும்மா, சுபாங்கி!"

"நீயும் சாயந்திரம் ஆனா அவுட்டிங்க போயிடுற. இந்த கிழவியோட லொள்ளு தாங்கலை."

"எனக்கு ராத்திரி ஜவ்வரிசி உப்புமா கிண்டிக்க போறேன்! அதுலயே கொஞ்சம் உங்களுக்கு எடுத்து வச்சுடறேன். சுபாங்கியும் இல்லை, புதுசா எதுக்கு சமைக்கணும்னு கேட்டாள்! எனக்கு கோபமாக வந்தது."

நித்தி புலம்ப, சுபாங்கி சிரித்தாள்.

"நீங்க என்ன சொன்னீங்க?"

"என்ன சொல்ல முடியும்! நீங்க செஞ்சா ஜவ்வரிசி உப்புமாவும் ஜவ்வரிசி பாயசம் போல இருக்கும் சொல்லி வச்சேன்! எதையாவது சொல்லி கோவிச்சுகிட்டு போயிட்டா, அப்புறம் ஆள் கிடைக்காதே.." நித்யமூர்த்தி கூற, சுபாங்கி சிரித்தாள்.

"செல்லம்! ஒரு முக்கியமான விஷயம்.." என்றபடி சுபாங்கி அமர்ந்திருந்த சோஃபாவின் பக்கத்து இருக்கைக்கு மாறினார் நித்தி.

"சொல்லுங்க டாடி!"

"உன் அத்தை வித்யாவதி நேத்து ராத்திரி ஃபோன் பண்ணினாள். இன்னைக்கு ராத்திரி நிகேத் மால்டீவ்ஸ்லிருந்து வர்றானாம்!" ஆவலுடன் மகளின் முகத்தைப் பார்த்தார் நித்தி.

"எதுக்கு திடீர்னு வர்றான்!" சுபாங்கி வியந்தாள்.

"அவனைக் கேட்டா, பாம்பே கான்ஃபரன்ஸ் அதை அட்டெண்ட் செஞ்சுட்டு, அப்படியே அம்மாவையும், உங்களையும் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்னு சொல்லுவான்! ஆனா, அவன் வர்றதுக்கு உண்மையான காரணம் என்னன்னு உனக்குதான் தெரியும்?"

நித்யமூர்த்தி கூற, சுபாங்கி பதிலளிக்காமல் வேறு அக்கம் பார்த்தாள். அத்தை மகன் நிகேத் மால்டீவ்ஸில் பெரிய ரிஸார்ட் ஒன்றை நடத்துகிறான். ஃபாரின் டூரிஸ்டுகள் கோடி கோடியாய் அவனது ரிஸார்ட்டான 'ஓசியானோ'வில் வந்து கொட்டுகிறார்கள். அதற்கு காரணம், அவன் தனது கற்பனைத் திறனைப் பிரயோகித்து புதிது புதிதாகக் கவர்ச்சி அம்சங்களை தனது ரிஸார்ட்டில் சேர்த்து வருகிறான். மூங்கில்களாலேயே படகுகளில் காட்டேஜ்களை அமைத்து கவர்ச்சி லான்டேர்ன் விளக்குகளை மாட்டி 'மிதக்கும் குடில்கள்' என்று அறிமுகம் செய்ய வெள்ளைக்காரர்கள் நடுவே அவை

பிரபலமாகிவிட்டது. ஒரு செயற்கைக் குன்றை உருவாக்கி, அதிலிருந்து விழும் நீர்வீழ்ச்சியின் நடுவே சறுக்கி பாறை ஒன்றை உருவாக்கி, குன்றின் உச்சியிலிருந்து கீழே இருக்கும் நீச்சல் குளம் வரை சறுக்கியபடி வேகமாக வந்து நீச்சல் குளத்தில் விழும் விளையாட்டு மிகவும் பிரபலம் ஆகிவிட்டது.

கோடியில் புரளும் நிகேத்துக்கு மாமன் மகள் சுபாங்கியின் மீது அமரக்காதல். ஆனால் சிறுவயது முதல் ஒன்றாகவே விளையாடி பழகியிருந்ததால் சுபாங்கிக்கு அத்தகைய எண்ணம் ஏற்படவில்லை. குபேரனைப் போன்று பணமும், மன்மதனைப் போன்ற அழகும் மீது ஈர்ப்பு தோன்றவில்லை. நித்தியமூர்த்தி, வித்யாவதி, நிகேத் மூவருமே சுபாங்கி மனதை மாற்றிக்கொண்டு 'எஸ்' சொல்லுவாள் என்கிற நம்பிக்கையில் காத்திருக்கின்றனர்.

"போன சம்மருக்கு நாம் மால்டீவ்ஸ் போனபோது அவனோட ரிஸார்ட்டை பார்த்து நீயே மலைச்சுட்டியே சுபா. ரிஸார்ட் பின்னாடி அவன் தனக்கு கட்டியிருக்கிற பங்களாவை பார்த்துட்டு வந்து அந்த நினைப்பாவே நீ இருந்தே இல்லே. அந்த மாதிரி கிரியேடிவிடி யாருக்கும் வராது. நீயும் அந்த மாதிரியே ஒரு 3D டிசைன் பண்ண போறேன்னு சொல்லிட்டு இருக்கே. வாட் மோர் டூ யூ வாண்ட், சுபா? பணம் ஏழு தலைமுறைக்கு கொட்டி கிடக்குது, நிகேத்கிட்டே.

லக்ஷணமாகவும் இருக்கான். அவனை கல்யாணம் பண்ணிக்க ஏன் யோசனை பண்ணறே?" நித்தி தன் மகளை கேட்டார். சுபாங்கி தந்தையை அலுப்புடன் பார்த்தாள்.

"டாடி! நான் அவனை கல்யாணம் பண்ணிட்டு போயிடறேன்னு வச்சுக்கோங்க! அவன் என்னை பேம்பர் செஞ்சு ராணி மாதிரி வச்சுப்பான்னு எனக்கு தெரியும்! என் காலை தரையிலேயே படவிட மாட்டான்னும் நான் புரிஞ்சுகிட்டேன்! பட்.. இதுல சுபாங்கிங்கிற தனிப்பட்ட மனுஷிக்கு என்ன இருக்கு? கோடீஸ்வரன் நிகேத்தோட மனைவி அவன் வீட்டுல எனக்கு செல்வாக்கும் சொல்வாக்கும் இருக்கலாம்! மால்டீவ்ஸை தாண்டி நான் யாரு?"

"நாகரத்னம் பாட்டி! நம்ம வீட்டுல எல்லாத்தையும் அனுபவிச்சுகிட்டு இருக்காளே தவிர, ஹூ இஸ் ஷீ? அந்த மாதிரிதான். நிகேத்தோட எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்காதான் என்னை அங்கே பார்ப்பாங்க."

"போன தடவை நாம நிகேத் வீட்டுக்கு போனப்ப அவன் சொன்ன ஒரு டயலாக்கை நீ கேட்டியா? உன் லைஃப்ல இந்த மாதிரி ஒரு வீட்டைப் பாத்திருக்கியான்னு கேட்டான். இல்லை! அந்த நிலைதான் ஏற்படக்கூடாதுன்னு நான் பாக்கறேன்."

"சுபாங்கி, இன்டீரியர் டெகரேட்டர்னுதான் நான் வெளியில சொல்லிக்கிறேன். தொழிலதிபர் நித்யமூர்த்தி பெண்ணு நான் யார்கிட்டேயும் சொல்லிக்கிறதில்லை! எனக்கு என் ஐடென்ட்டிடி முக்கியம்! என் திறமைகளைக் காட்டி நானும் ஒரு செலிபிரிடியா என்னைப் பத்தி நியூஸ் பேப்பர்ல வரணும் அப்புறம்தான் என் கல்யாணம்! என் சாதனைகள் எனக்காக பேசணும்! மிஸஸ் நிகேத்தின் சாதனைகளா இருக்கிறத விட மிஸ் சுபாங்கி சாதனையா இருக்கத்தான் நான் விரும்பறேன்!" சுபாங்கி கூறியதும் ஆயாசத்துடன் சோஃபாவில் சாய்ந்தார் நித்தி.

"அத்தையும், நிகேத்தையும் நாளைக்கு லஞ்ச்க்கு வரச்சொல்லுங்க! அத்தைப்பிள்ளையா அவன் எப்ப வந்தாலும் எனக்கு ஆக்ஷேபனை இல்லை.." சுபாங்கி கூறினாள்.

'விட்டுப் பிடிப்போம்' என்று மனதிற்குள் கூறிய நித்ய மூர்த்தி, திரும்பி கிச்சன் பக்கமாகத் திரும்பினார்.

"அந்த கிழவிகிட்டே நாளை லஞ்ச் மெனுவை கொடுத்துடு! மால்டீவ்ஸ்ல ரிஸார்ட் நடத்தறவனுக்கு கிழவி தண்டனை கொடுத்துடப்போறா!" நித்தி சொல்ல, சுபாங்கி சிரித்தபடி எழுந்தாள்.

மீண்டும் சுபாங்கி மாடியில் இருந்த தன் அறைக்கு போனபோது வானேஸா கன்சஸோ ஃபோன் செய்தாள். இவளுடன் கல்லூரியில் படித்த தோழி. ஹோட்டல் தாஜ் பாரடைஸில் ஈவன்ட் மானேஜராக இருக்கிறாள். சுபாங்கியின் செல்வசெழிப்பைக் கண்டு லேசாகப் பொறாமை உண்டு. கல்லூரியில் படிக்கும் போதே இவள் அன்றாடம் ஒரு காரில் வருவதைக் கண்டு வயிறெரிந்தவள். படிப்பிலும், காலேஜ் தேர்தலிலும் சுபாங்கியை போட்டியாக நினைத்து விரோதம் பாராட்டியவள். இப்போது ஈவன்ட் மானேஜரான பிறகு நிகழ்ச்சி ஸ்பான்சர்களுக்கு இவள் தந்தையின் தொழிற்சாலையான சுபாங்கி இன்டஸ்ட்ரீஸின் ஆதரவு தேவைப்படுகிறது. என்றும் இல்லாத திருநாளாக ஒருநாள் ஃபோன் செய்து, நட்பை புதுப்பித்துக் கொண்டாள்.

வேண்டாவெறுப்பாக சுபாங்கி, வானேஸாவின் காலை எடுத்தாள்.

"ஹாய் சுபாங்கி!"

"ஹாய்!"

"நினைவு இருக்கு இல்லே இன்னைக்கு டேபிள் டென்னிஸ் சாப்பியன்களுக்கு நீதான் கப் கொடுக்கறே! உன்னைப் பத்தி

அனௌன்ஸ் கூட செஞ்சாச்சு! சுபாங்கி இன்டஸ்ட்ரீஸ் சேர்மனோட பொண்ணுன்னு!"

சுபாங்கிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது!

"லுக் வானேஸா! ஐ ஹாவ் மை ஒன் இன்டீரியர் டெக்கரேஷன் ஃபர்ம்! அதோட நிறுவனரா என்னை அறிமுகப்படுத்தினா நான் வரேன்! சேர்மனோட பெண்ணா அறிமுகப்படுத்தறதா இருந்தா நான் வரலை!" உறுதியாக சொல்லி விட்டாள்.

அந்தப் பக்கத்தில் வானேஸா பல்லைக் கடித்துக் கொண்டு பேசுவது சுபாங்கிக்கு புரிந்தது.

"நோ ப்ராப்ளம், சுபாங்கி! நீ க்ளாமரா இருப்பேன்னுதான் உன்னை கூப்பிட்டேன். இல்லேன்னா உங்கப்பாவையே கூப்பிட்டிருப்பேன்!" என்று ஒரு பக்கெட் ஐஸ் துண்டங்களை சுபாங்கி மீது கொட்டினாள், வானேஸா.

"சரியா ஏழு மணிக்கு வந்துடு, சுபாங்கி.." என்ற வானேஸா, ஃபோனை கட் செய்தாள்.

"உன்னை வக்கிற இடத்துல வக்கறேன் பாருடி!" என்ற சுபாங்கி, குளிப்பதற்காக பாத்ரூமை நோக்கிச் சென்றாள்.

**ஹோ**ட்டல் தாஜ் பாரடைஸ்! சரியாக ஏழு மணிக்கு ஹோட்டலினுள் நுழைந்த சுபாங்கியின் ஹோண்டா சிட்டி போர்டிகோவில் நுழைய, தன்னை சிறப்பாக அலங்கரித்துக் கொண்டிருந்தாள், சுபாங்கி.

சந்தன நிறத்தில் சேலை, அதே நிறத்தில் இவளது பால் வண்ண நிறத்தை எடுத்துக்காட்டும் ஸ்லீவ்லெஸ் ரவிக்கை, கழுத்தில் சுடர்விடும் அவள் தந்தை பரிசளித்திருந்த வைர நெக்லஸ்! இரு காதுகளிலிருந்து தோள் வரை நீண்டு ஊசலாடிக் கொண்டருந்த வைர டிராப்ஸ், அலை அலையாக கூந்தல் தோளில் புரண்டுக் கொண்டிருந்து. தேவதையாக நடந்து வந்து பேரடைஸ் ஹோட்டலை உண்மையாகவே ஸ்வர்க்கப்புரியாக மாற்றியிருந்தாள்.

"ஹாய் சுபாங்கி! யூ லுக் டாஸ்லிங்!" என்று ஒப்புக்கு சொன்ன வானேஸா அவளை ஒரு டேபிளில் முன்பாக அமர்த்தினாள்.

"நீ இங்கேயே உட்கார்ந்திரு! அந்த டைம்ல கூப்பிடறேன்." என்று கூறிவிட்டு அகன்றாள்.

சுபாங்கி மௌனமாக உட்கார்ந்தபடி அந்த பாங்குவட் ஹாலுக்கு வருபவர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இன்று மாலை அவள் ஃப்ரீயாக

இருந்ததால்தான் வானேஸா கூறிய நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ஒப்புக் கொண்டிருந்தாள். டேபிள் டென்னிஸ் க்ளப்பின் பரிசளிக்கும் விழா என்றால் நிச்சயம் தினசரிகளின் ஸ்போர்ட்ஸ் பேஜ்ஜிலாவது இவளைப் பற்றி செய்தி வரும் என்று நினைத்திருந்தாள். வானேஸாவின் அழைப்புக்கு காத்திருந்தாள்.

மணி ஏழே முக்கால் ஆகியும் வானேஸா இவளை கூப்பிடவில்லை! எரிச்சலுடன் வாட்சை பார்த்தவள், வானேசாவைத் தேடினாள். சரியாக யாரோடோவோ ஃபோன் பேசியபடி வானேஸா இவளை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

சுபாங்கி அவள் நடந்து வந்த விதத்தை பார்த்தே ஏதோ பிரச்னை என்பதைப் புரிந்துக் கொண்டாள்.

"சாரி சுபாங்கி! ஆக்ஷுவலி வின்னர்ஸ் எல்லோரும் விசாகப்பட்டினத்துல இருந்து வரணும்! அவங்க நாளைக்குத்தான் வராங்க! பிரைஸ் டிஸ்ட்ரிப்யூஷன் தள்ளிப்போச்சு! ஐ வில் கால்யூ அகெய்ன்!" என்ற வானேஸாவை, ஆத்திரத்துடன் உறுத்துப் பார்த்தாள் சுபாங்கி.

"டோன்ட் கால் மீ அகெய்ன் அண்ட் வேஸ்ட் மை டைம்..!" சுபாங்கி அவளை நேரிடையாகவே தாக்கினாள்.

"இட் ஹேப்பன்ஸ் சுபாங்கி! பெரிய செலிப்ரிட்டில்லாம் கடைசி நிமிஷத்துல நிகழ்ச்சி கேன்சல் ஆகியிருக்குன்னு பேசாம போயிருக்காங்க! நீ ஃப்ரியா இருக்கேனுதான் உன்னைக் கூப்பிட்டேன்..!" என்று சொன்னாள்.

"நான் ஃப்ரீன்னு யார் சொன்னா? இதோ இப்பவே என்னோட டின்னர் சாப்பிடறதுக்கு ஒரு கெஸ்ட் வரப்போறாரு! அதை உன்கிட்ட சொல்ல வேணாம்னு தான் சொல்லலை! என்னோட பாய் ஃப்ரெண்ட்! நீ பிரைஸ் டிஸ்டிரிப்யூஷன் இருக்கு சொன்னதால் அப்படியே கொடுத்துடலாம்னு பார்த்தேன்! நீ அழைச்சதால நான் வரலை.." என்று தனக்கு ஏற்பட்டிருந்த கோபத்தில், வானேஸாவை சகட்டு மேனிக்கு திட்டினாள் சுபாங்கி. வானேஸா, அவளை முறைத்து பார்த்துவிட்டு அகன்றாள்.

சுபாங்கி கோபம் அடங்கும் வரை அப்படியே உட்கார்ந்திருந்தாள். வானேஸாவின் அழைப்பை ஏற்றுக் கொண்டதற்கு தன்னையே நொந்து கொண்டபடி தன் டேபிளில் இருந்த மெனுகார்டையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். சரி வந்ததற்கு எதையாவது ஆர்டர் செய்வோம் என்று மெனுகார்டை மேய்ந்துக் கொண்டிருந்த போதுதான் அந்த வசீகர வாலிபன் உள்ளே நுழைந்தான். இந்தி படவுலக நடிகரைப்போல் காணப்பட்டான். அவன் தனக்காக முன்பதிவு

செய்யப்பட்டிருந்த மேஜையில் வந்து அமர, பாங்குவட் ஹாலில் இருந்த அத்தனை முகங்களும் அந்த வாலிபனையே நோக்கின.

தற்செயலாக அவனை நோக்கிய சுபாங்கி அவனை எங்கேயோ பார்த்திருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டாள். சற்றுத்தள்ளி அமர்ந்து குடும்பமாக உண்டு கொண்டிருந்த குடும்பத்தைச் சேர்ந்த சிறுபெண் ஒருத்தி ஓடிச் சென்று அந்த வாலிபனிடம் ஆட்டோகிராஃப் வாங்குவதைக் கண்டதும் சுபாங்கி யூகித்து விட்டாள்.

அவன் பிரபல கிரிக்கெட் வீரன் சந்தீப் ஷங்கர்.

எப்போதாவது தந்தையுடன் கிரிக்கெட் மேட்ச் பார்ப்பது சுபாங்கியின் பழக்கம். சந்தீப் சிறந்த ஆல்ரௌண்டர் என்று அப்பா நித்யமூர்த்தி சொல்ல கேட்டிருக்கிறாள். மெனுகார்டை படிப்பது போன்று ஓரக்கண்ணால் சந்தீப்பை நோட்டம் விடத் தொடங்கினாள், சுபாங்கி,

அழகான முகத்தில் ஃப்ரெஞ்சு தாடியுடன் ஒரு காதில் தங்க வளையத்துடன் துருதுருவென தன் பார்வையைச் சுற்றி ஒட்டியபடி உடகார்ந்திருந்தான், சந்தீப். வெள்ளை டைட் பேண்ட், நேவி ப்ளூ சட்டை, அதன் மீது ப்ளேஸர் என்று கவர்ச்சியாகக் காணப்பட்ட அவனைக் கண்களால் விழுங்கிக்

கொண்டிருந்தாள் சுபாங்கி. நிகேத் இவனை விட கலராகவும், கம்பீரமாகவும் இருப்பான். ஆனால் இவனைப் போல் நிகேத் ஒரு புகழ்பெற்றவன் கிடையாதே!

அவ்வப்போது தன் கடிகாரத்தைப் பார்ப்பதும், அந்த ஹாலின் நுழைவாயிலை பார்ப்பதுமாக இருந்தான் சந்தீப்! யாரையோ எதிர்பார்க்கிறான் போலும்!

சற்று நேரத்தில் அவனுடைய மொபைல் கூவியது. ஆவலுடன் காலர் ஐ.டி.யை பார்த்தவன் புன்சிரிப்புடன் பேசினான்.

"ஹாய் தான்யா! உனக்காக நான் காத்திருக்கிறேன்!" சந்தீப் கூறினான்.

மறுபுறம் தான்யாவின் குரல் மன்னிப்பு கோரும் விதமாக வருத்தத்துடன் பேசியது!

"சாரி டியர்! திடீர்னு இந்தி பட தயாரிப்பாளர் பொப்பட்லால் என்னை புக் செய்ய வந்திருக்கார். கதை சொல்ல ரைட்டரும் வரப்பேறாரு! இன்னைக்கு என்னால வரமுடியாது சந்தீப்! மன்னிச்சுடு! நாம் அப்புறமா டின்னர் சாப்பிடலாம்!" தான்யா கூறினாள்.

சந்தீப்பின் முகம் தொங்கிப்போனது. "என்ன தான்யா இது? திடீர்னு காலை வாரிவிடறே?"

"நான் என்ன செய்யட்டும்! திடீர்னு வந்து நிக்கறாங்க. முதல் இந்திப் பட சான்ஸ். வேணாம்னு சொல்ல மனசில்லை!" என்றாள் தான்யா சௌத்ரி.. பிரபல தமிழ் நடிகை!

தான்யாவுக்கும், சந்தீப்புக்கும் காதல் என்பது ஊர் அறிந்த விஷயம், அவன் விளையாடும் மைதானங்களில் அவளும், அவளது ஷூட்டிங் மையங்களில் அவனும் சென்று ஒருவருக்கொருவர் ஆதரவு தெரிவித்துக் கொள்வது அவர்களது வழக்கம்.

இன்றும் தான்யா வருவதாகத்தான் இருந்தது. திடீரென்று பொப்பட்லால் அவர்களது டின்னரை பப்படமாக நொறுங்க வைத்துவிட்டாரே! சந்தீப் நினைத்தான்.

தான்யா அவனை சமாதானப்படுத்தினாள்.

"ஒண்ணு செய், சந்தீப் நீ என் வீட்டுக்கு வந்துடேன்! பொப்பட்டலாலையும் அறிமுகப் படுத்தறேன்! என் வீட்டுலயே டின்னர் சாப்பிடலாம்!" தான்யா அழைத்தாள்.

"நோ சான்ஸ்! இந்திப்பட புரொட்யூசர்னு சொல்றே! அடிக்கடி உன்னைக் கட்டிக்குவான்! கன்னத்தோடு கன்னம்

வச்சு தேய்ப்பான்! கேட்ட அவன் கல்ச்சர்னு சொல்வான்! எனக்கு ஒரு மாதிரி இருக்கும். சினிமாவுல உன்னை எவனாவது தோட்டாலே கடுப்பா இருக்கு! எதுக்கும் நீ பொப்பட்டலால் கிட்டேயிருந்து தள்ளியே இரு! ஆல் தி பெஸ்ட்.." என்று சொல்ல, தான்யா கலகலவென சிரித்தபடி ஃபோனை கட் செய்தாள்.

'ஆக இன்னைக்கு டேட்டிங்க ஃபனால்' என்று தனக்குள் அலறியபடி எழுவதற்காக முயன்ற சந்தீப் ஷங்கர் தற்செயலாக எதிரே தனியா அமர்ந்திருக்க சுபாங்கியைப் பார்த்தான். அவளது அழகு கண்களை உறுத்த மெதுவாக அவளை நோக்கி நடந்தான்.

"இஃப் யூ டோன்ட் மைண்ட், மே ஐ ஜாயின் யூ" மெதுவாக ஆங்கிலத்தில் கேட்டான் சந்தீப்,

இந்த ஒரு நிமிஷத்துக்காகத்தானே காத்திருந்தாள், சுபாங்கி,

"ஷ்யூர்!" என்றாள்.

"ஐ யம் சந்தீப் ஷங்கர்.."

அவன் கையை நீட்ட, அவனது இரு கை விரல்களைப் பற்றி அசைத்தாள் சுபாங்கி,

"சுபாங்கி! ப்ரொபரைட்டர், நோவா இன்டீரியர் டெகரேஷன்!"

"பை தே வே! இன்டஸ்ரியலிஸ்ட் நித்யமூர்த்தியோட பொண்ணுதானே நீங்க? உங்க கம்பெனியோட சில்வர் ஜூப்ளி விழாவோட படங்கள்ல நீங்க இருந்தீங்க!" சந்தீப் சொன்னான்.

"ஆமா! பட் எனக்கு சொந்தமாக தொழில் இருக்கு!" சுபாங்கி சொன்னாள்.

"என் கிரிக்கெட் அகாடமியை அழகுப்படுத்த ஒரு இன்டீரியர் டெகரேஷன் வல்லுனரைத் தேடிக்கிட்டு இருக்கேன். அந்த வல்லுனரா நீங்க ஏன் இருக்க கூடாது சுபாங்கி.." சந்தீப் கேட்டான்.

"உங்க அகாடமி எங்கே இருக்கு?"

"இனிமேதான் கட்டணும்.." சந்தீப் தன் தோள்களை குலுக்கினான்,

"அப்ப முதலுல எக்ஸ்டீரியரை ரெடி பண்ணுங்க. அப்புறமா இன்டீரியருக்கு வரலாம்!" சுபாங்கி சொன்னாள்,

"புரியுதுங்க! முதலுல வாய்க்கு ஏதாவது வாங்கி கொடுங்க! அப்புறம் மனசு விட்டு பேசலாம்னு சொல்றீங்க!" என்று சந்தீப் சொன்னதும் விழுந்து விழுந்து சிரித்தாள்,

சந்தீப் பேரரை கூப்பிட்டு உணவு வகைகளை ஆர்டர் செய்ய, மீண்டும் பாங்குவட் ஹாலுக்குள் வந்த வானேஸா சந்தீப் ஷங்கருடன், சுபாங்கி ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டு திகைத்து வாய் பிளந்து நின்றாள்.

சுபாங்கிக்கு பரம திருப்தி. தன்னைத் தேடி யாரோ வரப்போவதாக பொய் சொல்லியிருக்க, உண்மையிலேயே அந்த யாரோவாக சந்தீப் மாறி விட்டிருந்ததை வரவேற்றாள். வானேஸா அழைத்து தான் வந்து ஏமாறவில்லை என்கிற மெஸேஜ் வானேஸாவை அடைந்திருக்கும். மனதிற்குள் அந்த சூழ்நிலையை தனக்கு சாதகமாக மாற்றித் தந்த சந்தீப்பை வரவேற்றாள்.

அவள் யோசனையில் ஆழ்ந்திருந்த அதே சமயம், சந்தீப்பும் மும்பையில் தன் கிரிக்கெட் நண்பன் கேதன் ஷா கூறிய தகவல்களை நினைத்துப் பார்த்தான்.

இவன் தான் தான்யாவை காதலிப்பதாக கூறியபோது, அவன் சந்தீபை விசித்திரமாக பார்த்தான்.

"நடிகையை காதலி! அவள் உனது புகழுக்குப் பிரயோஜனப்படுவாள்! நடிகையை காதலிப்பதோடு நிறுத்திக் கொள்! அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா, உன்னோட செலிபிரிட்டி ஸ்டேடஸ் போயிடும்!"

"ஆசைக்கு ஒண்ணு! ஆஸ்திக்கு ஒண்ணுன்னு! பெரியவங்க நம்மளை மாதிரி கிரிக்கெட் ப்ளேயர்களுக்குத்தான் சொல்லி இருக்காங்க!"

"நடிகையை காதலி! தொழிலதிபர் பொண்ணை கல்யாணம் கட்டிக்கோ! முன்னவள் புகழுக்கும், பின்னவள் பணத்துக்கும் பிரயோஜனப்படுவாங்க!" என்று கேதன் ஷா கூறியிருந்தான்.

'நாம் ஏன் ஆசைக்கு தான்யாவையும், இந்த சுபாங்கியையும் ஆஸ்திக்கு வைத்துக் கொள்ளக்கூடாது' என்று ஏற்கெனவே சந்தீப் ஷங்கரின் மனதில் ஆசை வேருன்றி விட்டது,

சுபாங்கியை மயக்கும் கண்களால் பார்த்தான். "யூ லுக் கார்ஜியஸ்" என்றான்,

"தேங்க் யூ.. நீங்க இவ்வளவு நேரம் யாரும் கோத்திருந்தீங்க போல இருக்கே.." சுபாங்கி கேட்டாள்.

"ஆமா! என் ஃபிரெண்ட் நடிகை தான்யா சௌத்ரி! ஆனா அவ வரபோறது இல்லை.."

"ஃப்ரெண்ட்னா? லவ்வரா?" சுபாங்கி ஆவலுடன் கேட்டாள்.

"பேப்பர்காரங்க லவ்வர்ஸ்னுதான் போடுவாங்க! ஏன்னா அவங்களுக்கு பேப்பர் விக்கணும்! பட்! நாங்க லவ்வர்ஸ் கிடையாது! ரெண்டு பேரும் வெவ்வேறு துறையில் செலிபிரிட்டிகள்! எங்களுக்குள்ள ஒரு நட்புதான். இன்ஃபாக்ட் நீங்க தொழில்துறையில் ஒரு செலிபிரிட்டி! நாம ரெண்டு பேரும்கூட ஃப்ரெண்ட்ஸா இருக்கலாம்! பத்திரிகைகாரங்க நம்ம ரெண்டு பேருக்குள்ளே காதல்னு எழுதினா அதுக்கு நாம் என்ன பண்ண முடியும்?"

டேபிளில் இருந்த நாப்கினை விரித்தபடியே, சுபாங்கிக்கும் மிக அழகாக வலையை விரித்தான், சந்தீப்,

வானேஸா தங்களை பொறாமையுடன் பார்ப்பதை, கண்டு குதூகலித்தாள், சுபாங்கி, உணவு வகைகளை பேரர் கொண்டு வந்து அடுக்க, சுபாங்கிக்கு, ஒரு யோசனை தோன்ற, சந்தீப்பை ஜாடையாக நோக்கினாள்.

"சந்தீப்! அதோ அந்த கேர்ள் நிக்கிறாளே! அவள்தான் ஈவன்ட் ஹோஸ்டஸ்! அவளை கூப்பிட்டு ம்யூஸிக்கை மாத்த சொல்லுங்க! திஸ் ம்யூசிக் இஸ் சிக்கனிங்!"

சுபாங்கி சொல்ல, சந்தீப் வானேஸாவை நோக்கி சீட்டி அடித்து, ஆள்காட்டி விரலால் கூப்பிட்டான். தன்னை சந்தீப்

கீழ்த்தரமாக சமிக்ஞை காட்டி அழைப்பதைக் கண்டு முகம் கருத்துப் போக, தயங்கியபடி அவனை நோக்கி வந்தாள்.

"எஸ் சார்.."

"சேஞ்ச் தி ம்யூசிக்! மேடமுக்கு பிடிக்கலை.." என்றதும் வானேஸாவின் முகம் சுருங்கியது.

அவளை அலக்ஷியமாக ஏற இறங்க பார்த்தாள், சுபாங்கி,

'நீ கொடுத்ததை, திருப்பி வாங்கிட்டியா?' என்கிற பொருள் அந்தப் பார்வையில் தொக்கி நின்றது. ஆத்திரத்துடன் சென்றவள், இசையை மாற்ற சொல்லி விட்டு, அந்த அரங்கத்தை விட்டு வெளியேறினாள்.

"**ஹா**ய் வானேஸா!" ஃபோட்டோ ஜர்னலிஸ்ட் ஜோ ஜோ மணி அவள் முன்பாக வந்து நின்றான்.

"ஏதாவது காஸிப் கிடைக்குமா?" ஜோ ஜோ கேட்டான்.

சற்று முன் தனக்கு ஏற்பட்ட அவமானத்தால் நொந்து விட்டிருந்த வானேஸா, "ஒண்ணுமில்ல.." என்று வெறுப்புடன் கூறியவளுக்கு, சட்டென்று ஒரு யோசனை. உடனே அதை நிறைவேற்றினாள்.

"ஜோ.. ஜோ..! கிரிக்கெட் ப்ளேயர் சந்தீப் ஷங்கர் காதலியை மாத்திட்டார்! நடிகை தான்யாவை கழட்டி விட்டுட்டு, இன்டஸ்ரியலிஸ்ட் நித்யமூர்த்தி டாட்டர் சுபாங்கியை பிடிச்சுகிட்டான்! ரெண்டு பேரும் பாங்குவட் ஹாலில் தங்களை மறந்து பேசிக்கிட்டிருக்காங்க!" என்றவன் குரூர திருப்தியுடன் அங்கிருந்து நகர்ந்தாள்.

தாங்கள் இருவரும் ஜோ.. ஜோ.. மணியின் கேமராவுக்கு விருந்தாவதை அறியாமல் சுபாங்கியும், சந்தீப்பும் தங்களை மறந்து பேசிக்கொண்டிருந்தனர்.

# அத்தியாயம் 4

மூன்றாவது மாடியில் இருந்த இன்டர்காம் ஒலிக்க, தமயந்தி எழுந்து சென்று ரீஸிவரை எடுத்துப் பேசினாள்.

கீழ்த்தளத்திலிருந்து அங்கண்ணிதான் அழைத்தாள்.

"தமை! தேனுக்குட்டி எழுந்துட்டாளா? இன்னைக்கு அவ கோவிலுக்குப் போணும்! தேனுகாம்பா சன்னதியில ஊர்மக்கள் அவளுக்கு மரியாதை செய்யப் போறது நினைவு இருக்குல்லே! பொறவு, வீடு வீடா பூர்ண கும்பம் வச்சு அழைப்பாங்க! அப்புறம் பாண்டியம்மா கோவிலுக்கு போய் கோடங்கி கூட, ஊர்மக்கள் பிரச்னைகளுக்கு பரிகாரம் சொல்லணும்! சீக்கிரம் அவளை தயார்ப் பண்ணு! அங்காயியை மேல அனுப்பறேன். தேனுவை எண்ணை தேய்ச்சு குளிப்பாட்ட..!" பரபரபப்புடன் அடுக்கிக் கொண்டே போனாள், அங்கண்ணி.

பொங்கி வந்த எரிச்சலைக் கட்டுப்படுத்திக் கொண்டு வேண்டா விருப்பாக அவள் கூறுவதை செவிமடுத்துக் கொண்டிருந்தாள், தமயந்தி.

"நான் வாங்கிக் கொடுத்த குங்குமநிற வைர ஊசி புடவையைக் கட்டி கீழே அழைச்சுகிட்டு வா.. என்ன

புரிஞ்சுதா?" என்கிற உத்திரவுடன் ரிஸீவரை அங்க வைக்க, தமயந்தியும் ஆத்திரத்துடன் ரிஸீவரை வைத்தாள்.

"அம்மா! நாளைக்கு காலேஜ்ல ஸ்பெஷல் க்ளாஸ் இருக்கு நான் சீக்கிரம் போணும்! இந்த பெரியம்மாக்களோட லொள்ளு தாங்கலை! எப்பப் பார்த்தாலும் என்னை பூஜை, புனஸ்காரம்னு செய்ய சொல்றார்.."

"எல்லோர் குறி சொல்லுறவ மாதிரி என்னை முன்னாலயும் உட்காரச் சொல்லுறாங்க. எனக்கு சுத்தமாப் பிடிக்கலை நாளைக்கு நான் கோவிலுக்கு வர மாட்டேன். ஸ்பெஷல் க்ளாஸ் முடிஞ்சதும் நான் ஃபிரெண்ட்ஸோட சினிமாவுக்குப் போறேன், நீதான் பெரியம்மாகிட்டே சொல்லி எப்படியாவது நான் கோவிலுக்கு போகாம தவிர்க்கணும்!" தேனுகா தமயந்தியிடம் சொல்லியிருந்தாள்.

உறங்கிக்கொண்டிருந்த மகளை எழுப்ப மனமில்லாமல் பார்த்துக்கொண்டே இருந்தாள். அங்காயி இவளைப் பார்க்கும் போதெல்லாம். இவ்வளவு வருஷங்கள் கழித்தும் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறாள். அவள் தலைப்பாடமாக அடித்துக் கொண்டும் புகுந்த வீட்டுக்காரர்களிடம் காமதேனு விவாகாரத்தைக் கூறி தேனுகாவை தீராத தொல்லைகளுக்கு ஆட்படுத்தி விட்டதே இவள்தானே! அன்று அங்காயி

சொல்வதைக் கேட்டிருந்தால், இந்த பிரச்சனைகள் ஏற்பட்டிருக்காது அல்லவா!

இன்னும் தமயந்திக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. கோவிலில் காமதேனுவை தரிசனம் செய்த ஏழாம் நாள், சரியாக இவளுக்கு பிரசவ வலி எடுத்தது துவங்கியது. வழக்கம்போல் அங்காயிதான் பிரசவம் பார்ப்பதற்கு வந்திருந்தாள். ஆவணி அஷ்டமியன்று சரியாக 17 வருஷங்களுக்கு முன்பு பிறந்திருந்தாள் தேனுகா. கடந்த பௌர்ணமியன்று சிறப்பு பூஜை செய்கிறோம் என்று தேனுகாவை மூன்று நாட்கள் பாடாதபாடு படுத்தியிருந்தனர் ஊர்மக்கள்.

ஆனால் எல்லாவற்றையும் மூடநம்பிக்கைகள் என்று ஒதுக்கிவிடமுடியாதபடி தேனுகா பிறந்தது முதலாகவே அந்தக் குடும்பத்துக்கு எல்லாமே நன்மைகளாகவே நடந்து வருகின்றதே! சுபிக்ஷம் பண உருவில் பெருகிக் கொண்டிருந்தது. மூன்று மாடி ஏற தேனுகா சிரமப்படக்கூடாது என்று லிஃப்ட் வைக்கப்பட்டது. எல்லா வசதிகளும் வீட்டில் பெருகி விட்டன.

தேனுகா பிறந்த அன்றைக்கே பலமாக மழை பெய்யத் தொடங்கியது. அன்றுப் பிடித்த மழை மூன்று நாட்களுக்கு

தொடர்ந்து பெய்து, வானம் பார்த்த பூமியான கோவூரின் ஏரிக்குளங்களை நிரப்பியது.

‘குவா.. குவா..’ என்னும் தேனுகாவின் குரல் முதன் முறையாக ஒலிக்கத் தொடங்கியபோதே பெரிய வீட்டின் வாசலில் ஒரு கார் வந்து நின்றது.

காரிலிருந்து இறங்கிய இவர்களது தாய்மாமன் காசிலிங்கம் கையில் லெதர் பை ஒன்றுடன் பெரி. பாண்டியை நோக்கி நடந்தார்.

கடந்த இருபது வருஷங்களாகவே பேச்சு வார்த்தையின்றே உறவே முறிந்துப்போன நிலையில் பாஞ்சாலியின் உடன் பிறந்த தம்பியான காசிலிங்கம் எதற்காக திடீரென வந்தான் என்று அனைவரும் மலைத்து நிற்க, தான் சுமந்து வந்த லெதர் பையை பெரிய பாண்டியின் காலடியில் வைத்துவிட்டு, மறுபேச்சு பேசாமல், திரும்பி நடந்து காரில் விருட்டென போய்விட்டான். பெரிய பாண்டி லெதர் பையை பிரிக்க, அதன் உள்ளே பாஞ்சாலிக்கு சேர வேண்டிய 100 ஏக்கர் மஞ்சகாணி நிலங்களுக்கான பத்திரங்கள்.

சகோதரர்கள் நால்வரும் ஒருவருக்கொருவர் பார்வையை பரிமாறிக் கொண்டு கடைசியாக பிரசவம் நிகழ்ந்திருந்த அறையின் மூடிய கதவை நோக்கினர்.

குழந்தை பிறந்த வேளை, கோர்ட் வரை சென்று போராடியும் கிட்டாத தங்கள் தாய்க்குரிய மஞ்சகாணி நிலங்கள், தாமாகவே தேடி வந்துவிட்டன. மாமனின் மனமாற்றத்திற்கு காரணம் அந்த காமதேனுவின் அம்சமான குழந்தைதான்! மாமனின் மனமாற்றமே தங்கள் குடும்பத்தின் சுபிக்ஷத்திற்கு பிள்ளையார் சுழியாக கருதினர், பாண்டி சகோதார்கள்.

உடனேயே அடுத்த சுபசெய்தியை தாங்கியபடி சிவநேசன் ஒடி வந்தார்.

"பெரியய்யா! வாலிபுரத்துல நாம ஃபேக்டரி கட்டக் கூடாதுன்னு அந்த ஊர் பண்ணையார் நந்தகோபாலன் போட்ட வழக்கு தோத்துப்போச்சு! கோர்ட் ஸ்டேவை நீக்கிடுச்சு!" என்று சொல்ல, சகோதரர்களின் முகங்கள் மலர்ந்தன.

காமதேனுவோட அருள்! என்று பிரசவ அறையை பாக்கி கைகூப்பினார்கள். குணசேகரனுக்கு பெருமை பிடிபடவில்லை! அவனுக்கு மகள் பிறந்த வேளை, தடைபட்டவை எல்லாம் தானாக தேடி வருகின்றன. இனி பெரிய வீட்டில், அவன் கொடிதான் பறக்கும்.

பெண்குழந்தை காமதேனுவின் அம்சமாய் பிறந்தி ருப்பதை, பல வருஷங்களாக பொய்த்திருந்த மழை பலமாக

பெய்து நிரூபிக்க, கிராம மக்கள், பெரிய வீட்டை நோக்கிப் படை எடுத்தனர்.

தமயந்திக்கு பிறந்தக் குழந்தையை குளிப்பாட்டுவதற்காக அங்காயி எடுத்துச் சென்றாள். அவள் குழந்தையைத் திருப்பி எடுத்து வந்து மீண்டும் தொட்டிலில் கிடத்தியபோது, தமயந்திக்கு நினைவு வந்துவிட்டது. குழந்தையுடன் வந்த அங்காயியின் கண்களை அவள் கண்கள் சந்தித்தன.

'நான் எச்சரிக்கை செய்தும், விஷயத்தை சொல்லிட்டியே தாயி! இனி நீயும் உன் மகளும் என்னப்பாடு படப்போகிறீர்களோ?' என்கிற அனுதாபம் அவள் கண்களில் தொக்கி நின்றதை காணத் தவறவில்லை அவள்.

தகவலைக் கேள்விப்பட்டு ஓடி வந்தார் பாண்டியம்மன் கோவில் பூசாரி அழகர் கோடங்கி.

"ஏலே பெரியபாண்டி! நான் சொன்னாபப்ல காமதேனுவே உன் குடும்பத்துல பொறந்துட்டா. அவளுக்கு அம்மாள் பெயரையே வை! அந்தக் குழந்தையை தேனுகாம்பான்னு கூப்பிடுங்க.." என்று உத்திரவு பிறப்பித்து விட்டார்.

வனிதா. அபர்ணா, அக்ஷயா என்று நவநாகரீக பெயர்களைத் தேர்வு செய்து வைத்திருந்த தமயந்திக்கு ஏமாற்றமாக போய்விட்டது. கணவனிடம் தனது பெண்ணின்

பெயரை தான்தான் தேர்ந்தெடுப்பேன் என்று போராடிப்பார்த்து விட்டாள்.

குணசேகரன் பிடி கொடுக்கவில்லை.

"தமை இது நம்ம பொண்ணு மட்டுமில்லை! கோவூருக்கே பொண்ணு. நம்ம பொண்ணு பொறந்த உடனேயே இவ்வளவு நாள் கிடைக்காத மஞ்சகாணி நிலங்கள் தேடிட்டு வந்ததை நீயே பார்த்தே இல்லே! வழக்குகளில் ஜெயிக்கிறோம். காணாமபோன உன் அக்கா பிள்ளை கிடைச்சான்! பெரியண்ணன் பையன் மேல்படிப்புக்கு லண்டன் போவப் போறான். இதைவிட என்ன வேணும்! நம்ம பொண்ணு பெயரு தேனுகாம்பாதான். நீ வேணும்னா ஸ்டைலா தேனுகான்னு கூப்பிட்டுக்க!" என்று அந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான்.

தேனுகா பிறந்தது முதல், பல நல்ல விஷயங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

திருவிழாவில் காணாமல் போன, இரண்டு வருஷங்களாக எங்கே இருக்கிறான் என்று தெரியாமல் தவித்த தமயந்தியின் அக்கா, தேவயானியின் மகன் பேச்சு திறனில்லாத சுரேஷ் கிடைத்தாக அவளுடைய பெரியம்மா ஜெகதா ஃபோன் செய்தாள். அவனைக் காப்பாற்றி இரண்டு வருஷங்கள் தன்

வசம் வைத்திருந்த டாக்டர் ஒருவர் அவனுக்கு பேச்சுத்திறனையுமளித்து அழைத்து வந்திருந்தார். தேனுகா பிறந்த முன்றாம் நாள் இது நடந்தது.

அது மட்டுமா? கல்யாணமான புதிதில் தமயந்தி தொலைத்திருந்த இரட்டை வட செயின் பீரோவின் இடுக்கில் புதைந்து கிடந்தது.

எல்லாம் நல்ல விஷயம்தான். ஆனால் காமதேனுவின் அவதாரம் என்று தேனுகாவை கொண்டாடி, குடும்பத்தினரும், ஊர்மக்களும் செய்யும் ஆர்ப்பாட்டங்களைதான் ஒரு தாயாக தமயந்தியால் ரசிக்க முடியவில்லை. தேனுகா தூக்கத்தில் புரண்டு படுக்க, அந்த அசைவினால் தமயந்தியின் சிந்தனைகள் தடைபட்டன.

மகள் படுத்திருந்த கட்டிலை நோக்கி நடந்த தமயந்தி, அவளது நெற்றியில் கை வைத்தாள்.

"ஹாப்பி பர்த்டே தேனும்மா! எழுந்துக்கறியா நேரமாச்சே?"

"ஐயோ..! இன்னைக்கு ஸ்பெஷல் க்ளாஸ் இருக்கே!" சடாரென்று எழுந்து அமர்ந்தாள் தேனுகா. தன் தாயை கேள்வியுடன் பார்த்தாள்.

"அம்மா! பெரியம்மாக்கள் கிட்டே சொல்லிட்டியா! இன்னைக்கு கோவில் புரோகிராம் கிடையாதுன்னு.." தமயந்தியை நோக்கினாள், தமயந்திமிடறு விழுங்கினாள். இந்த விஷயத்தில் அவளால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்திருந்தாள். இன்னும் சொல்லப்போனால் பள்ளிப்படிப்பை முடித்து அவள் டௌன் காலேஜில் படிக்கப்போவதை எதிர்த்தனர், குடும்பத்தினர். இவள்தான் குணசேகரனிடம் போராடி அழுது ஆர்ப்பாட்டம் செய்து, அவளது காலேஜ் படிப்பிற்கு சம்மதம் வாங்கியிருந்தாள். அவளை காலேஜ் சேர்க்கவே பெரும் போராட்டமாக இருந்தது.

குடும்ப சாங்கியங்களுக்கு இடையூறு இல்லாமல் இருந்தால் மட்டுமே, தேனுகா காலேஜிக்கு அனுப்பப்படுவாள் என்கிற நிபந்தனையுடன்தான், ஆயிரம் சட்டத் திட்டங்களுக்கிடையே தான் அவளது காலேஜ் படிப்பு நடந்து கொண்டிருந்தது. ஆவணி அஷ்டமியான இன்று முக்கியமான சாங்கியம் இருக்கும் போது ஸ்பெஷல் க்ளாஸாவது, ஒன்றாவது.

தமயந்தி பொங்கி வந்த வெறுப்பை தன் மகளின் முன்பாகக் காட்டாமல், அவளை சமாதானப்படுத்தினாள்.

"தேனு! கோவிலுக்கு போய் இன்னைக்கு சாங்கியத்தை முடிச்சுடலாம்மா! நம்ம ஊருக்கு ஏதோ போதாத வேளையாம்!

பூஜையை செய்தா நல்லது நடக்கும்னு கோடங்கி சொல்றாரு!" என்றாள் தமயந்தி. கோடங்கி அப்படி எதுவும் கூறியிருக்கவில்லை. தேனுகாவின் இளகிய மனதை சாதகமாக கொண்டு, அவளை ஸ்பெஷல் க்ளாஸுக்கு போகாமல் தடுத்தவே. இப்படிக் கூறியிருந்தாள் தமயந்தி.

என்ன இருந்தாலும் காமதேனுவின் அம்சமல்லவா? இரக்கத்திற்கா பஞ்சம் அவளிடம்.

"அப்படியாம்மா! ஊருக்கு கஷ்டம்னா, நாம் பூஜையை நடத்துறதே நல்லது!" என்று எழுந்து தமயந்தியை ஒரு முறை ஆதுரத்துடன் கட்டித் கொண்டு, கன்னத்தில் முத்தமிட்டவள், பிறகு, பாத்ரூமை நோக்கி நடந்தாள்.

மகளை ஏமாற்றுகிறோமே என்கிற வேதனையுடன் தமயந்தி திரும்பியபோது அறையின் வாசலில் நிழலாடியது. அங்காயி தான் நின்றிருந்தாள்.

"தாயி! பாப்பாவுக்கு எண்ணை தேய்க்கணும்.." என்ற அங்காயியை தலையசைத்து உள்ளே அழைத்தாள்.

அங்காயி உள்ளே வந்ததும் தாவிச்சென்று தங்கள் குடியிருப்புக் கதவை தாளிட்டாள். அங்காயியிடம் பேசுவதற்கு இதுதான் சந்தர்ப்பம். அண்ணிகள் நந்தியாக நிற்கும் போது இவள் எங்கே குடும்ப விவகாரங்களை பேசுவது!

"அங்காயி தேனுகா டாய்லெட்ல இருக்கா! அவ தயாராகறதுக்குள்ளே நான் உன்கிட்டே சில விஷயங்களை பேசணும்!" என்ற உடனேயே அங்காயி எச்சரியையுடன் தன்னைச் சுற்றிப்பார்த்தாள்,

"நீ கோவிலுல சொன்னதை கேட்காத பலன் இதுநாள் வரைக்கும் நானும், என் பொண்ணும் அனுபவிச்சுட்டு வருறோம்! என் பொண்ணால மத்தப் பொண்ணுங்களப் போல நார்மல் வாழ்க்கை வாழ முடியலை, இந்த ஊர் மக்களோட நம்பிக்கைகள் அவளோட எதிர்காலத்தை பாழடிச்சுடுமோன்னு கவலையா இருக்கு!"

"வெட்கக்கேடு! நேத்து என் பொண்ணு காலேஜில இருந்தபோது, சில பையனுக அவளை சுத்திக்கிட்டு, நாங்க கிரிக்கெட் மேட்சுல ஜெயிக்கணும் விஷ் பண்ணுன்னு அமர்க்களம் பண்ணிட்டாங்க. அவங்க காலேஜ் கிரிக்கெட் டீமை சேர்ந்தவங்க. அவளால் ஒண்ணும் சொல்ல முடியலை! விஷ் பண்ணிட்டு வந்தா. நேத்து சாயந்தரம் கப்போடு வீட்டுக்கு வந்து அவளுக்கு நன்றி சொல்றானுங்க!"

"நம்ம கிராமத்துல இந்த கதைன்னா, அவ காலேஜ்ல பையங்க ‘சக்தி லீலை’ன்னு அவளை கிண்டல் பண்றானுங்களாம்! வீட்டுக்கு வந்து அழறா! அவ

அப்பாருகிட்டே சொன்னா, படிப்பை நிறுத்திடுவாரு. எனக்கு என்ன செய்யறதுனே தெரியலை!"

மடை திறந்த வெள்ளம் போல, அவள் பேச, அதை விட வேகமாக அவள் கண்களில் பெருகியது கண்ணீர்.

"அங்காயி! என் பொண்ணுக்கு எப்ப விடிவு காலம் பிறக்கும்?" என்கிற கேள்வியுடன் தனது மனக் குமுறல்களை ஒரு வழியாக வெளிப்படுத்தி முடித்தாள் தமயந்தி.

சிறிது நேரம் அமைதி காத்த அங்காயி பிறகு மெல்லிய குரலில் கூறினாள்.

"தாயி! உன் குடும்பத்துக்கு இது புதுசு இல்லை! இப்ப நீ கதறுகிற மாதிரி உன் மாமியார் பாஞ்சாலியம்மாவும் ஒரு நாள் என்கிட்டே கதறினாங்க! நீ அவங்களை மாதிரி பைத்தியமா போயிடக்கூடாதுன்னுதான் நான் அன்னைக்கே உன்னை எச்சரிச்சேன்மா.. நீதான் கேட்கலை!"

"உனக்கு ஒரு நாத்தி இருந்தாளே! அவ நிலைமையும் இதேதான். நீ கோவிலுல காமதேனுவை பார்த்த பொறகு தேனுகாம்மாவை பெத்த மாதிரி, பாஞ்சாலியம்மாவும் கோவிலும் காமதேனுவைப் பார்த்து, ரேணுகாவை பெத்தாங்க!" அங்காயி சொன்னாள்.

"அதனாலதான் அவங்க என்னை கோவிலுக்கு போக வேண்டாம்னு சொன்னஙங்கன்னு அப்புறம்தான் புரிஞ்சுக் கிட்டேன்.." தமயந்தி கூறினாள்.

"ஆமாம்மா! தேனுகாம்மா மாதிரியே ரேணுகா ம்மாவையும் ஊரே தெய்வமா கொண்டாடிச்சும்மா!"

"ஆனா! இப்ப யாருமே ரேணுகாவைப் பத்தி பேச மாட்டேங்கறாங்களே.." தமயந்தி கேட்டாள்.

"அது ஒரு பெரிய கதைம்மா!" அங்காயி சொல்ல, சரியாக போர்ஷனின் கதவு தடதடவென்று தட்டப்பட்டது.

அங்காயி சட்டென்று பாத்ரூமினுள் நுழைந்து துடைப்பத்தை எடுத்து பாத்ரூமை தண்ணீர் ஊற்றி கழுவத் துவங்கினாள்.

தமயந்தி கதவைத் திறந்தபோது, இரண்டாவது அண்ணி கற்பகம்தான் நின்றுக் கொண்டிருந்தாள்.

"தேனுகா! ரெடியா?"

"இப்போதான் எழுந்திரிச்சா அண்ணி டாய்லெட் போயிருக்கா! எண்ணை தேய்க்கறதுக்கு முன்ன அங்காயியை பாத்ரூமை கழுவி விடும்படி சொன்னேன். ஒரே பிசுக்கா இருக்கு! ஓரக்கண்ணால் பாத்ரூமைக் கழுவிக் கொண்டிருந்த

அங்காடி நோட்டம் விட்டாள் தமயந்தி. இவர்கள் இருவரும் விவரங்களை பரிமாறிக் கொள்வது அண்ணிகளுக்கும் தெரியக்கூடாது!"

"தாயி! பாப்பாவைக் கூப்பிடுமா! எனக்கு கோவிலை கூட்டணும்! வேலை நிறைய இருக்கு.." தன் பங்குக்கு அங்காயியும் ஒன்றுமே நடக்காதது போல கூப்பாடு போட்டாள்.

கற்பகம் சோஃபாவில் சரிந்தபடி கையில் ஒரு பத்திரிகையை எடுத்துப் பிரித்தாள். பெரிய அண்ணி அங்கண்ணிதான் இவளை வேவு பாக்க அனுப்பியிருக்கக் கூடும்! அங்காயியையும் இவளையும் தனியாக பேச விடுவதேயில்லை அங்கண்ணி.

தன் மகளை சாங்கியங்களுக்கு ஆட்படுத்தப்படுவதை தமயந்தி விரும்பவில்லை என்பதை அந்தக் குடும்பத்தினர் அறிந்திருந்தனர். குடும்பத்தின் எல்லா ரகசியங்களையும் அறிந்திருந்த அங்காயி, தன் பங்குக்கு அவள் மனதை குழப்பி விடப்போகிறாளே என்று அங்கண்ணி பயப்படுவது இயல்புதானே! அதற்காக மூன்று தலைமுறையாக அந்த வீட்டில் உழைத்து வரும் அங்காயியை வேலையை விட்டு நிறுத்தவும் முடியாது. பைத்தியகார மாமியார் பாஞ்சாலி

அங்காயியிடம் மட்டுமே வசப்படுவாள். அவளை கவனிப்பதற் காகவாவது அங்காயி இருந்தே ஆகவேண்டும். பாஞ்சாலியை குளிப்பாட்டி, ஆடை உடுத்தி, உணவு ஊட்டுவது அங்காயிதான்.

'நாம் பின்னர் ஒரு சமயம் ரகசியமாக பேசுவோம்..' என்று கண்களால் அங்காயிக்கு சமிக்ஞை காட்ட அதே சமயம் தேனுகாவும் டாய்லெட்டிலிருந்து வந்தாள்.

"தேனுக்கண்ணு! சீக்கிரமா ரெடியாகணும் என்ன? இன்னைக்கு நான்தான் உன் கூட வரப்போறேன்!"

"தெரிஞ்ச விஷயம்தானே, பெரியம்மா!" என்று சலிப்புடன் கூறியபடி பாத்ரூமினுள் தேனுகா செல்ல, அங்காயி கதவைச் சாற்றிக் கொண்டாள்.

இடக்கை நிறைய நல்லெண்ணெயை ஊற்றிக் கொண்டாள். சிவப்பு மிளகாய், சிறிது புழுங்கரிசி மற்றும் ஒரு துண்டு வெல்லத்தைக் காய்ச்சி எடுத்து வந்திருந்தாள் அங்காயி. நல்லெண்ணை சூட்டைத் தணிக்கவும், புழுங்கரிசி கூந்தலின் பொலிவுக்கும், வெல்லம் கூந்தலின் உறுதிக்கும் நல்லதாம்.

இடக்கையால் நல்லெண்ணெயை தேனுகாவின் தலையில் கவிழ்த்து உச்சியில் தேய்த்த போது, அங்காயியின் இதயத்தில் வேதனை பரவியது.

இப்படித்தானே ரேணுகாவுக்கும் இவள் எண்ணெய் தேய்ப்பது வழக்கம்! ரேணுகா! அவளை மறக்க முடியுமா என்ன? எவ்வளவு இனிமையா, வேலைக்காரிதானே என்றில்லாமல் தன் அம்மாவை அழைப்பது போல்தானே அழைப்பாள்!

தேனுகாவாவது டௌன் காலேஜில் படிக்க வருவதால், இங்கிலீஷில் தஸ் புஸ் என்று நுனிநாக்கில் பொரிந்து தள்ளுவாள்! ஆனால் ரேணுகா! யாராவது அவளிடம் கடுமையாக பேசினால்கூட, தனது வெண்முத்து பற்கள், தெரிய சிரித்தபடிதானே கேட்டுக் கொண்டிருப்பாள்.

பாவிகள்! அந்த இளங்குருத்தை என்ன செய்தார்களோ! திடீரென்று ரேணுகா தற்கொலை செய்து கொண்டாள் என்று அவளது கதையை முடித்து விட்டார்களே.

அங்காயிக்கு கவலைத் தொற்றிக் கொண்டது. இந்தப் பெண் தேனுகாவின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறதோ? அவளுக்கென்று ஒரு வாழ்க்கை அமையுமா இல்லை ரேணுகாவின் வாழ்க்கையைப் போலவே, அவள் வாழ்க்கையும் திடீரென மர்மமான முறையில் முடிந்து விடுமா?

அம்மா ரேணுகா! நீதான் உன் மருமகள் தேனுகாவின் வாழ்க்கையை நல்லா அமைச்சு கொடுக்கணும்! அண்டாவில்

பொங்க பொங்க நிரம்பியிருந்த வெந்நீரை தேனுகாவின் தலையில் ஊற்றத் தொடங்கினாள், அங்காயி..

# அத்தியாயம் 5

**வி**டியற்காலையிலேயே தன் மகன் நிகேத்தும், அண்ணன் நித்யமூர்த்தியின் வீட்டுக்கு வந்து விட்டாள் வித்யாவதி. விருந்து சமைக்கும் பொறுப்பு வந்து விட்டதே என்கிற எரிச்சலுடன், நாகரத்னம் காபி ட்ரேயில் காபி கோப்பைகளுடன் வந்தாள். அனைவருக்கும் காபி கொடுத்தபடி மாடிப்பக்கமாக பார்த்தாள்.

"இன்னுமா எழுந்து வர்றலை சுபாங்கி. எனக்கு காய்கறி நறுக்கி கொடுக்கிறேன்னு சொன்னளே.." என்றாள் நாகரத்தினம்.

வித்யாவதிக்கு கோபம் பீறிட்டது.

"ஏன் பாட்டி! அவளே சின்னப்பொண்ணு! அம்மா இல்லாத பொண்ணு. வேலை செய்ய வேணாமேனுதான் உங்களை வேலைக்கு வச்சிருக்கு! அவ காய்கறி நறுக்கித் தரமாட்டா!"

"உங்களால முடிஞ்ச சமையலை செய்யுங்க! இதுக்குதான் அண்ணா, என் மருமகளை எங்க வீட்டுக்கு அனுப்புன்னு சொல்றேன். நாங்க அவளை ராணி மாதிரி வச்சுப்போம்!" வித்யாவதி சொல்ல, முணுமுணுத்தபடி சமையலறையை

நோக்கி நடந்தாள். நாகரத்தினம், இன்னும் ஒரு வாரத்திற்கு இதைப் பற்றியே முணுத்துக் கொண்டிருப்பாள்.

"நிகேத்! ஹோட்டல், ரிஸார்ட் எல்லாம் எப்படி போய்கிட்டு இருக்கு!" நித்யமூர்த்தி கேட்டார்.

"நோ.. கம்ப்பிளைண்ட்ஸ் அங்கிள்! நல்லா போய்கிட்டு இருக்கு..!" நிகேத் சொன்னான்.

"அண்ணா! சுபாங்கி கிட்டே பேசினியா? நிகேத் அங்கே தனியா கஷ்டப்படறான். அவளைக் கல்யாணம் பண்ணி அனுப்பிட்டா என் பாடு நிம்மதி!" வித்யாவதி புலம்ப, சரியாக மாடியிலிருந்து சுபாங்கி இறங்கி வந்தாள்.

"ஹாய் நிகேத்!"

"ஹாய் சுபாங்கி!" அவளை பார்த்த உடனேயே அவன் கண்களில் காதல் பல்புகள் எரியத்துவங்கின.

"உன்னோட டியரெஸ்ட் ஃபிரெண்ட் இவ்வளவு நேரம் உன்னைத் தேடிட்டிருந்தா?" நிகேத் கிண்டல் செய்தான்.

"யார்.. ஊர்மிளாவா? வைஜெயந்தியா?" சுபாங்கி வியப்புடன் கேட்டாள்.

"ஊர்மிளா இல்லை! ஊறுகாயுமில்லை! சமையல்கார அம்மா நாகரத்தினம்! நேத்து நீ அவளுக்கு காய்கறி நறுக்கி

தரேன்னு வாக்குத் தந்திருந்தியாமே!" அப்பா நித்யமூர்த்தி சிரித்தார்.

"ஓ.. மை காட்!" எழ முயன்ற சுபாங்கியை இழுத்து உட்கார வைத்தாள், வித்யாவதி!

"சும்மா உட்காரு! உங்கப்பன் அவளுக்கு அஞ்சாயிரம் ரூபா சம்பளம் தர்றான்! அவ செய்யற வேலைக்கு அதுவே அதிகம்! நிகேத் ஊர்லேந்து வந்திருக்கான். நீ அவனோட பேசிட்டு இரு, நான் போய் கிழவிக்கு ஹெல்ப் பண்றேன்.." என்று சொல்லி விட்டு வித்யாவதி சமையலறையை நோக்கி சென்றாள்.

நித்யமூர்த்தியும் எழுந்துக் கொண்டார். எனக்கு சில ஃபோன் கால்கள் செய்யணும் என்று சொல்லிக் கொண்டிருந்த போதே அவருடைய மொபைல் அடித்தது.

"ஹலோ.. ஆ.. குட் மார்னிங், மிஸ்டர் சாரதி! என்ன.. இன்னைக்கு பேப்பர்லியா.. நான் பாக்கலியே! தாங்க்யூ! நான் பார்த்துட்டு அப்புறமா ஃபோன் பண்றேன்!"

முகம் சிவக்க மொபைலை கட் செய்தார். மீண்டும் ஒரு ஃபோன் கால் யாரோ மறுமுனையில் பேச, நித்ய மூர்த்தியின் முகத்தில் தடுமாற்றம்.

"நான் அப்புறமா.. ஃபோன் செய்யறேன்" என்று அந்த அழைப்பை துண்டித்தவர் மொபைல் ஃபோனை ஸ்விட்ச் ஆஃப் செய்தார்.

"என்ன டாடி ஆச்சு?" சுபாங்கி கேட்க, நிகேத்தும் அவரை விசித்திரமாகப் பார்த்தான்.

செய்தித்தாளைப் பிரித்த நித்திய மூர்த்தி நடுப் பக்கத்தைப் பிரித்ததும், அயர்ந்து போய் நின்றார்.

"ஸ்கௌண்டரல்!" நித்தி ஆவேசத்துடன் கூற, சுபாங்கி கலவரத்துடன் எழுந்தாள்.

"என்னப்பா ஆச்சு?"

"இதை பாரு!"

பேப்பரை அவள் கரத்தில் திணிக்க சுபாங்கி அந்த பக்கத்தைப் பார்த்து மின்சாரம் தாக்கியது போல உணர்ந்தாள்.

சந்தீப் ஷங்கரும் அவளும் பாரடைஸ் ஹோட்டலில் ஸ்வாரஸ்யமாகப் பேசியபடி விருந்து உண்ணும் ஃபோட்டோ.

'சந்தீப், தொழிலதிபர் மகள் காதல்.'

'நடிகை தான்யாவுடன் உறவு முறிவா?' என்கிற கொட்டை எழுத்துகளுடன் வெளிவந்திருந்தது.

"மை காட்!" சுபாங்கி அயர்ந்து போய் அமர்ந்தாள்.

அந்தப் பக்கத்தை எடுத்து பார்த்த, நிகேத் லேசாக தடுமாறிப்போனான். கண்களில் லேசான குழப்பத்துடன் நித்யமூர்த்தியையும், சுபாங்கியையும் பார்த்தான்.

"அங்கிள்! இது வெறும் ஃபேக் நியூஸா இல்லை இவ்வளவு கெஞ்சியும் சுபாங்கி என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேங்கிறாளே, அதற்கானக் காரணமா?" - நேரிடையாகவே நிகேத் கேட்டுவிட அரண்டுப் போனார்கள் தந்தையும், மகளும்,

"இதுக்கு அவதான்பா ஆன்சர் செய்யணும்?" உண்மையிலேயே நொந்துபோய் விட்டார் நித்யமூர்த்தி.

"நிகேத்! இதுக்கு நான் பதில் சொல்லியே ஆகணுமா? நான் எப்படிப்பட்டவள்னு உனக்குத் தெரியும்னா நீ இந்த கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாது!" சுபாங்கி சொன்னாள்.

"அப்ப நீ எனக்கு ஒரு விடையைச் சொல்லு சுபாங்கி! நான் உன்னைப் பைத்தியமா லவ் பண்ணிட்டி இருக்கேன்! உனக்காகவே ஒரு அரண்மனை மாதிரி வீடு கட்டி வச்சிருக்கேன்! நீ இல்லாம அதுல தங்க கூடாதுன்னு ரிஸார்ட்ல இருக்கிற காட்டேஜ்லேயே நான் தங்கிட்டு இருக்கேன். 24x7 உனக்காகத் தான் காத்துகிட்டு இருக்கேன்! நீ பதில் சொல்ல

மாட்டேங்கறியேன்னு ஏங்கறதுல கோடிகளை இழந்துகிட்டு இருக்கேன்! நீ 'எஸ்'னு ஒரு வார்த்தை சொன்னேனா நான் இன்னும் உத்வேகத்தோட செயல்படுவேன்!" நிகேத் உணர்ச்சிகரமாகவே சொன்னான்.

பேப்பரில் வந்திருந்த செய்தியை எண்ணி கலங்குவாளா இல்லை நிகேத் கொடுத்து வரும் அழுத்தத்துக்கு ரியாக்ட் செய்வாளா? சுபாங்கி குழம்பிப் போய் அமர்ந்திருந்தாள்.

"இவ்வளவு அழகா தன் மனசுல இருக்கறதை சொல்லிட்டான்! அப்புறம் என்ன சுபாங்கி?" நித்தி கூறினார்.

"நிகேத்! நீ எப்ப மால்டீவ்ஸுக்கு கிளம்பறே!"

"நாளைக்கு பாம்பே போயிட்டு நாளை மறுநாள் மால்டீவ்ஸ் கிளம்பிடுவேன்!"

"ஓகே! நீ பாம்பேக்கு நாளைக்கு நைட் கிளம்புவே இல்லை! அதுக்குள்ளே என் முடிவை சொல்லிடறேன்!"

"கிரேட்!" நிகேத் உற்சாகத்துடன் எழுந்தான்.

"பட் பாசிட்டிவா இருக்கும்னு நம்பறேன்!"

"நிகேத்! இந்த ஃபோட்டோவை பத்தி என்ன நினைக்கிறே!" பேப்பரை சுட்டிக் காட்டி கேட்டாள்.

"உண்மையை சொல்லட்டுமா, சுபாங்கி! நீ என்னை வேணாம்னு சொன்னாக்கூட பரவாயில்லை! ஆனா, இவனை நீ உன் லவ்வர்னு சொன்னேனா நான் உனக்காக ரொம்ப வருத்தப்படுவேன்! அவன் ஒரு மானிபுலேடர்! சந்தர்ப்பவாதி! இன்ஃபாக்ட்! அவனே கூட இந்த மாதிரி ஒரு சூழ்நிலையை உருவாக்கி, உன்னோட ஃபோட்டோ எடுத்து கிட்டு அதை தனக்கு சாதகமாப் பயன்படுத்துவான்?" நிகேத் சொன்னான்,

"அவனைப் பத்தி நீ எப்படி அவ்வளவு கரெக்டா எடைபோடறே! அவன் அப்படி செய்யக் கூடியவன்தானா?" நித்யமூர்த்தி கேட்டார்.

"அவனும், தான்யா சௌத்ரிங்கிற நடிகையும் என் ரிஸார்ட்டுக்கு வந்து தங்கினாங்க. அவன் எங்க ரிஸார்ட்ல தங்கின நாட்கள் எங்களுக்கு மிகவும் சோதனையான நாட்கள் அங்கிள்." என்று சொன்னபடி வாசலை நோக்கி நடந்தான்.

"அங்கிள்! என்னை மன்னிச்சுடுங்க! எனக்கு அர்ஜெண்டா ஒரு வேலை இருக்கு நான் லஞ்ச்சுக்கு வர முடியாது! அம்மா இருக்கட்டும். அவங்க லஞ்ச் சாப்பிட்டதும் வீட்டுக்கு அனுப்புங்க." சொன்ன நிகேத் வெளியில் சென்றவன் மீது உள்ளே வந்து சுபாங்கியை உறுத்துப் பார்த்தான்

"சுபாங்கி! நாளைக்கு நைட் நான் பாம்பே போறதுக்கு முன்னாடி உன் ரிஸல்டை சொல்வேன்னு சொன்னே! ஒரு சின்ன வேண்டுகோள்! நாளைக்கு வரைக்கும் நீ டைம் கேட்கறது, எனக்கும், இர் சந்தீப்புக்கும் இடையில் யார் பெட்டர்னு யோசிக்கிறதுக் காகத்தான்னா, ஐ யாம் சாரி! நான் போட்டியிலேருந்து விலகிக்கிறேன். இவனுக்கு சரிசமமா.. என்னை கன்சிடர் பண்றதை கூடக் கேவலமா நினைக்கிறேன். வேற யாராவது வேட்பாளர் இருக்காங்கன்னா நான் போட்டியில் தொடர்ந்து, நாளை வரைக்கும் காத்திருக்கேன்? இவன்தான் என்னோட போட்டியாளர்னா.. சாரி.. நீ எனக்கு ரிசல்ட் சொல்லவே வேண்டாம்! நான் கிளம்பறேன்!" என்றபடி விர்ரென்று கிளம்பிப் போனான் நிகேத். அவன் காரை கிளம்பிச் சென்ற விதத்திலிருந்தே அவன் கோபத்தில் இருப்பதை தந்தையும் மகளும் உணர்ந்தனர்.

நித்தி லேசான கோபத்துடன் சுபாங்கியைப் பார்த்தார்.

"அவனும் இதுக்கு மேல எப்படிம்மா பொறுமையா இருப்பான்? சாதாரண ஆம்பிளயே இந்த அலக்ஷியத்தை தாங்கமாட்டான். நிகேத் பணத்துக்கு 'நான் நீ'ன்னு பொண்ணுங்க போட்டிப் போட்டுகிட்டு அவன் பின்னாடிப் போவாங்க! அவனோ உனக்கு வாய்ப்பு மேல வாய்ப்புக் கொடுத்துகிட்டே இருக்கான். இந்த லக்ஷணத்துல பேப்பர்ல

வேற இந்த ஸ்கௌண்ட்ரலோட ஃபோட்டோ! கேம்லயே ஃபோகஸ்டா இல்லாத இவனா வாழ்க்கையில ஃபோகஸ்டா இருக்கப் போறான்! அது கிடக்கட்டும்! இவனோட எப்படி நீ ஃபோட்டோவுல மாட்டினே?" நித்தி கேட்க சுபாங்கி பதிலளிக்கத் துவங்கியபோது, அவளுடைய ஃபோன் ஒலித்தது.

காலர் ஐ.டி.யை நோக்கினாள்.

வானேஸா கன்சஸோ..

அடிப்பாவி! இந்த பேப்பர் செய்தி இவளுடைய வேலையாக இருக்குமோ! இது ஏன் எனக்கு தோணாமல் போனது?

"ஹலோ!"

"ஹலோ சுபாங்கி! வானேஸா பேசறேன்! பெரிய செலிபிரிட்டி ஆகிட்டியே! உன்னை எல்லாரும் என்ன சொல்றாங்க.. தெரியுமா? தான்யாவோட.. தமிழ்ல என்ன சொல்லுவாங்க! ஆங்.. சக்களத்தி! எப்படி எஞ்ஜாய் பண்ணறியா.. உன் பாபுலாரிட்டியை நேத்து என்ன சொன்னே! மியூசிக்கை மாத்த சொன்னே.. இல்லை! நான் உன் தலையெழுத்தையே மாத்திட்டேன்! உனக்கு தெரியுமா! சந்தீப்பும், தான்யாவும் நிஜமாகவே லவ் பண்றாங்க! அவளை விட்டுட்டு சந்தீப் உன்கிட்ட வரவே மாட்டான்! இப்ப உன்

பெயர்தான் போச்சு.. ஸீ யூ!" என்றபடி ஃபோனை வைக்க, சுபாங்கியின் ரத்தம் கொதித்தது.

"பிட்ச்! என்னோடயா, மோதறே!" நான் யாருன்னு காட்டறேன்! தன்னையும் அறியாமல் முணுமுணுத்தாள் சுபாங்கி.

"ஃபோன்ல யாரும்மா?" நித்தி கேட்டார்.

"அப்பா! இந்த ஃபோட்டோ பேப்பர்ல எப்படி வந்ததுன்னு சொல்றேன். நேத்து நான் ஹோட்டல் பேரடைஸ் போனேன் இல்லை. டிடி சாம்பியன்களக்கு அவார்டு கொடுக்க, நிகழ்ச்சி கேன்சலாயிடுச்சு. ஏன் முன்னாடியே சொல்லலைன்னு, ஈவன்ட் மானேஜர் வானேஸாகிட்டே சண்டை போட்டேன். அப்புறம் டின்னர் சாப்பிடறச்சே, தற்செயலா சந்தீப் என்னைப் பார்த்து ஹலோ சொன்னான், அப்ப ஃபோட்டோ பிடிச்சு, என்னை பழி வாங்கறத்துக்காக வானேஸா பண்ண வேலை இது!" சுபாங்கி குமுறினாள்,

"போலீஸ்கிட்டே போகலாமா?" நித்தி கேட்டார்,

"இல்லேப்பா! நான் ஒரு மறுப்பு அறிக்கை விடப் போறேன்! மறுப்பு அறிக்கையை விட்டுட்டு நிகேத்கிட்டே போய் 'எஸ்' சொல்லப்போறேன்!" தீர்மானத்துடன் சொன்னாள் சுபாங்கி.

"பிரிலியண்ட்.." உற்சாகத்துடன் எழுந்தார் நித்யா மூர்த்தி,

"நான் எல்லா பத்திரிகைகளுக்கும் மறுப்பு அனுப்பணும்! நம்ம ஆபீஸ் பி.ஆர்.ஓ. பார்த்தசாரதி கிட்ட நான் பேசணும்! அவரை என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கப்பா! நான் லஞ்ச் வரைக்கும் வீட்டுல இருப்பேன்! அத்தையை அவங்க வீட்டுல விட்டுட்டு என்னோட ஆஃபீஸ் போவேன்! பி.ஆர்.ஓ.வை என் ஆஃபீஸுக்கு வரச் சொல்லுங்க.." என்று சமையலறையை நோக்கி நடந்தாள்.

**ம**தியம் அத்தை வித்யாவதியை அவள் வீட்டில் விட்டுட்டு, தன் அலுவலகத்தை நோக்கி டிரைவ் செய்து கொண்டிருந்தாள் சுபாங்கி.

பக்கத்தில் சீட்டில் வைத்திருந்த செல் சிணுங்க, சுபாங்கி காலர் ஐ.டி.யைப் பார்த்தாள். அன்நோன் நம்பர் என்று காட்டியபடி, செல்லை எடுத்து பேசினாள்.

"சுபாங்கி!"

"எஸ்!"

"சந்தீப் ஷங்கர் ஹியர்!"

"எஸ் சொல்லுங்க!" அவன் ஃபோன் செய்யக்கூடும் என்று எதிர்பார்த்தாள்,

"சொல்லுங்க?"

"பேப்பர் பார்த்தீங்களா, சுபாங்கி."

"பார்த்தேன்! ஸ்டுபிடிட்டி டு த கோர்!" சுபாங்கி வார்த்தைகளை கடித்துத் துப்பினாள்.

"ஆனா.. இப்படி நடக்ககூடும்! நம்மால ஒண்ணும் பண்ண முடியாதுன்னு நான் நேத்தே சொன்னேனே!" சந்தீப் கூறினான்.

"எனக்கு புரியலை! நான் இதுக்கு அறிக்கையை விடப்போறேன்.." சுபாங்கி கூறினாள்.

"சுபாங்கி! இதுக்கு மறுப்பு அறிக்கை விடறதுக்கு முன்னாடி ஹோட்டல் 'தி பார்க்'கிற்கு வாங்களேன்! ஐ நீட் டு டாக் டு யூ!" சந்தீப் சொன்னான்.

"எதுக்கு?"

"ப்ளீஸ் வாங்க!" சந்தீப் சொன்னான். சுபாங்கி பார்க் ஹோட்டலை நோக்கி திருப்பினாள்.

"இப்ப அவளை எதுக்கு இங்கே வரச்சொல்றீங்க?" ரெஸ்டாரண்டில் சந்தீப்புக்கு அருகில் உட்கார்ந்திருந்த தான்யா சிணுங்கினாள்.

"புரிஞ்சுக்கோ தான்யா! நீ புகழ் பெற்ற நடிகை! நான் கிரிக்கெட் ப்ளேயர்! நாம ரெண்டு பேரும் காதலிச்சுகிட்டு இருக்கிற வரைக்கும் உனக்கும் மார்க்கெட் ஏறும்! எனக்கும் டிமாண்ட் இருக்கும்! நாம ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சுகிட்டா உனக்கும் மார்கெட் போயிடும்! எனக்கு பாபுலாரிட்டி ரேட்டிங் கம்மியாயிடும்!"

"அதனால?" தான்யா புருவத்தைத் தூக்கினாள்.

"அதனால ஆஸ்திக்கு சுபாங்கி! ஆசைக்கு நீ! நம்ம ரெண்டு பேர் காதலுக்கு ஸ்பான்ஸர் செய்யபோகுது சுபாங்கி இன்டஸ்ட்ரீஸ்.."

"நீங்க சுபாங்கியை கல்யாணம் பண்ணிகிட்டா, உங்க புகழ் மங்கிடுமே?" தான்யா கேட்டாள்.

"நாம தொடர்ந்து காதலிக்கிற வரைக்கும் என் புகழ் மங்காது!" இறுமாப்புடன் சொன்ன சந்தீப், செல்ஃஃபோனில் மணியைப் பார்த்தான்.

"நீ கிளம்பி மாடியில நம்ம ஸூட்ல காத்திரு! நான் அவளுக்கு பிரபோஸ் செஞ்சுட்டு வந்துடறேன்!" சந்தீப் சொல்ல தான்யா லிஃஃப்டில் ஏறி மாடிக்குச் சென்ற அதே சமயம் சுபாங்கியின் கார் பார்க் ஹோட்டலில் நுழைந்தது.

# அத்தியாயம் 6

**தே**னுகா கோவிலுக்கு கிளம்புவதற்காக படிகளில் இறங்கி வர, மொத்த குடும்பம் அவளுக்காக காத்திருந்தது. குங்கும நிறத்தில் மஞ்சள் பார்டருடன் கூடிய புடவையணிந்து ஒரு தேவதையைப் போல் அவள் இறங்கி வர தன்னையுமறியாமல் பெரிய பாண்டி தன் கரங்களைக் கூப்பினார்.

"அந்த தேனுகாம்பாளே இறங்கி வர்ற மாதிரி இருக்கு.." என்று அவர் கூற, பின்னால் நின்றிருந்த அழகர் கோடங்கி முன் வந்து தனது சுருக்குப் பையைத் திறந்து சுட்டு விரலில் திருநீற்றை எடுத்து தேனுகாவின் நெற்றியில் தீட்டினார்.

"குழந்தையை பத்திரமா அழைச்சுட்டு போம்மா.."

தேனுகாவுடன் கிளம்பிய கற்பகத்தை நோக்கி கூறிய செண்பக பாண்டி, அழகர் கோடங்கியை பார்த்து சமிக்ஞை செய்தபடி தனது கீழ்ப்பகுதியினுள் நுழைந்தார். அவரைப் பின் தொடர்ந்தார் கோடங்கி, கீழ்ப்பகுதியின் முன்னறையில் இருவரும் நுழைந்ததும் கதவைச் சாற்றி தாளிட்டார், செண்பகப் பாண்டி.

தேனுகாவும், கற்பகமும் பின்னால் இருந்த அடுக்குமாடி பகுதியிலிருந்து, முற்றத்தை கடந்து வந்து, சிவநேசன் அமர்ந்திருந்த திண்ணையைத் தாண்டி வந்து தோட்டத்தின் வழியாக வெட்ட வெளியை அடைந்தனர், அவர்களுக்காக சாரட் வண்டி தயாராக நின்றது. சாரட் வண்டியின் பின்னால் அமைந்திருந்த பீடத்தில் சாம்பல் நிற சஃபாரி உடையில் காண்டீபன் நின்றிருந்தான்,

தேனுகாவும், கற்பகமும் சாரட் வண்டியில் ஏறி அமர்ந்ததும், தன் கொடூர பார்வையினால் அவர்கள் இருவரையும் சுற்றி வளையம் ஒன்றை அமைத்தான், தேனுகாவிற்காக பெரிய வீட்டு சகோதர்கள் நியமித்திருந்த பாதுகாப்பு ஆட்கள் காண்டீபனும், தேனப்பனும். கட்டுமஸ்தான தேகம், கடுமையான முகம், கனத்த குரல் என்று தேனுகாவை நெருங்க முயல்பவர்களை அச்சுறுத்த வைக்கும் எல்லா அம்சங்களையுமே கொண்டிருந்தார்கள். தேனப்பன் ஒரு முன்னாள் ராணுவ வீரன்.

தேனுகாவிற்கு இவர்கள் இருவரையும் கண்டால் உதறல்தான். அதிலும் குறிப்பாக காண்டீபனின் கண் பார்வை அவளை மிகவும் அச்சுறுத்தும். இவள் அவனை கவனிக்காமல் இருந்தாலும் கூட, அவன் பார்வை தன் முதுகில் பதிந்திருப்பதை இவளால் உணர முடியும்.

ஒரு சமயம், பாண்டியம்மன் கோவிலுக்கு இவள் சாரட் வண்டியில் சென்றிருக்கும்போது, பழைய பள்ளி நண்பன் வாசவன் அருகே வந்தவன், கைக்குலுக்குவதற்காக தன் கையை நீட்டினான். இவள் அவன் கையை பற்றி குலுக்குவதற்காக குனிவதற்குள் அந்தக் கையைப் பிடித்து முறுக்கிய காண்டீபனின் இரும்புக் கரம் வாசவனை தெரு ஓரத்திற்கு தள்ளியது. நிலை குலைந்து மண்ணில் சரிந்தான் வாசவன்.

"அவன் என் ஸ்கூல் ஃப்ரெண்டு!" எரிச்சலுடன் தேனுகா காண்டீபனை நோக்கினாள்.

"உங்களை யாரும் நெருங்கக்கூடாது! நெருங்க முயற்சிக்கிறவங்களை அப்பால் தள்ளணும்னு எனக்கு கொடுக்கப்பட்ட உத்தரவு! என் ட்யூட்டியை தான் செய்யறேன்!" தனது கரகரத்த குரலில் காண்டீபன் கூறினான்.

அதன் பிறகு வாசவன் அவளுடன் பேசுவதையே நிறுத்தி விட்டான். காண்டீபனுக்கும், தேனப்பனுக்கும் பயந்து கிராம மக்கள் யாருமே அவளுடன் பேசுவதற்கு அச்சப்பட்டனர். தொலைவில் நின்று கைகளைக் கூப்புவதோடு சரி.

காண்டீபன் இவளை நோக்கி, "குட்மார்னிங் மேடம்!" என்று சொல்ல, அவனைத் தவிர்த்தபடி சாரட் வண்டியில்

ஏறினாள். தேனுகா! ஏனோ தேனப்பனை காணவில்லை. கற்பகம் காண்டீபனையே கேட்டு விட்டாள்.

"காண்டீபா! தேனப்பன் வரலியா?"

"அவன் தங்கச்சிக்கு நிச்சயதாம்பூலம்மா! தூத்துக்குடி போயிருக்கான்!" காண்டீபன் கூறினான்.

சாரட் வண்டி தேனுகாம்பாள் - காமேஷ்வரன் கோவிலை நோக்கி நகர்ந்தது. கோவிலுக்கு போய்விட்டு, கோவூர் வீதிகளை வலம் வந்தவள், கிராம் மக்கள் இவள் பிறந்த நாளை முன்னிட்டு செய்யும் மரியாதைகளை ஏற்றுக்கொண்டு, பிறகு டிரங்க்ரோடு வழியாகக் கிராமத்து எல்லையைக் காவல் காத்துக் கொண்டிருக்கும் பாண்டியம்மன் கோவிலுக்கு செல்ல வேண்டும். அங்கே தரிசனம் முடிந்ததும், சற்று நேரம் கோடங்கியுடன் அங்கேயே உட்கார்ந்து, குழந்தைகளுக்கு பெயர் வைப்பது. ஊர்மக்களின் பிரச்னைகளுக்கு உதவுவது என்று நேரத்தை கழித்து விட்டு, பிறகு பெரிய வீடு திரும்ப வேண்டும்.

காலேஜ் ஃப்ரெண்ட்ஸ் இவளுக்காக கேக் கட்டிங், பார்ட்டி, சினிமா என்று நாள் முழுவதும் ஜாலியாக கழிப்பதற்காக நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து நீட்டிய போது, இவளால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

"சாரிடி கன்னிகா! காலையில கோவில்ல பூஜையிருக்கு! முடியறதுக்கு மணி ஒண்ணு ஆகிடும்!" என்று சொல்லி விட்டாள்.

"பூசலை நங்காய்! மாலையிலாவது அடியேன்களுக்கு நேரம் ஒதுக்கி தர முடியுமா? வேண்டுமென்றால் கேக்கிற்கு பதிலாக காஞ்சிபுரம் இட்லியின் மீது சூடம் ஏற்றி அணைக்கிறோம். உனது நியமங்கள் பாதிக்கக்கூடாது என்பதற்காக.." கன்னிகா நக்கலுடன் கூற, சுற்றியிருந்தவர்கள் "ஹோ" வென்று சிரிக்க, தேனுகா கூனி குறுகி விட்டாள்.

"லுக் கன்னிகா! நீ என்ன வேணுமின்னாலும் கிண்டல் பண்ணு! உங்களுக்கெல்லாம் நான் ஒரு காமெடி பீஸா இருக்கேன்னு தெரிஞ்சு சந்தோஷப் படறேன். ஐ காண்ட் ஹெல்ப் இட்! எங்க ஊர் மக்களோட சென்டிமென்ட்டை என்னால் உதாசீனம் பண்ண முடியாது! வேணுமின்னா சினிமாவுக்கு போகலாம்! அங்கேயே கேக் கட் பண்ணிக்கோ!" என்று வாக்கு தந்திருந்தாள். வீட்டிலும் கெஞ்சி கூத்தாடி அதற்காக அனுமதியும் வாங்கிவிட்டாள்.

கன்னிகா கேரள எம்.பி. ஒருவரின் மகள். தொழில் ரீதியாக பெரிய வீட்டு சகோதரர்களுக்கு பல உதவிகளை

செய்து இருந்தார். எனவே கன்னிகாவிற்கு மட்டும் பெரிய வீட்டில் சில சலுகைகள் உண்டு!

சாரட் வண்டி கோவிலை அடைந்தது. கற்பகத்துடன் வண்டியை விட்டு இறங்கி கோவிலுக்குள் நுழைந்தாள் தேனுகா. கோவிலினுள் அவள் நுழைந்ததுமே, சன்னதி தெருவில் இருந்த வீடுகளில் இருந்தவர்கள், பூரண கும்பத்துடன், தேனுகாவை வரவேற்க தயாரானார்கள்.

சிவநேசனும், மனைவி குலதனத்துடனும், மகள் அருந்ததியுடனும் தன் வீட்டு வாசலில் பூரண கும்பத்துடன் நின்றார். அருந்ததி கையில் ஆரத்தி தட்டுடன் நின்றாள்.

சிவநேசன் மனைவியை நோக்கிப் பல்லைக் கடித்தார்.

"ஊரே தெய்வமா கொண்டாற தேனுகாகிட்டே ஆசி வாங்கினா வாழ்க்கையில் திருப்பம் எற்படும்னுதானே ஒவ்வொருத்தனும் தன் வீட்டு வாசலுல நின்னு அந்த மகராசியை வரவேற்கிறான். இன்னைக்கு ஒரு நாள் வீட்டோடு இருந்து, இந்த வைபவத்துல கலந்துக்கலாம் இல்லே! தேனுகாவோட பார்வை அவன் மேல பட்டாலே, அவன்

உருப்படுவான். நல்ல வேலை கிடைக்குமே! நீயாவது சொல்லக்கூடாதா? தனம்!" சிவநேசன் கேட்டார்.

"நீங்க வேற! அவனுக்குத்தான் இதுல எல்லாம் நம்பிக்கைக் கிடையாதே! அந்தப் பொண்ணு கிட்டே எசகுபிசகாப் பேசி, அவ தன் வீட்ல போய் சொல்லி, பிறகு உங்க வேலைக்கே அவன் உலைவச்சுடுவான். அவன் இல்லாம இருக்கறதே நல்லது!" என்று சொல்ல, அவள் கூற்றில் நியாயம் இருப்பதாகப் பட்டது சிவநேசனுக்கு.

"அப்பா! தேனுகாகிட்டே நீங்களே அவனைப் பத்தி சொல்லி ஏதாவது நல்லது நடக்கச் செய்யலாமே!" அருந்ததி கேட்டாள்.

"நீ ஏன்மா உனக்கு கல்யாணம் ஆகணும்னு தேனுகா கிட்டே கேட்க கூடாது!" சிவநேசன் கேட்டார்.

"இதையெல்லாம் போய் அந்த சின்னப்பொண்ணு கிட்டே எப்படிப்பா கேட்கறது? அவ போன தடவையே ஸ்னேஹமான பார்வையோடத்தான் என்னைப் பார்த்தா! அந்தப் பார்வையே எனக்குப் பாக்கியத்தைக் கொடுத்திருக்கணும்! ஆனா.. ஏனோ.. தெரியலை! ஒரு வேளை! பாக்கியத்திற்கு தேனுகா மாதிரி, துர்பாக்கியத்திற்கு நாம் பிறந்திருக்கேனோ என்னவோ.."

அருந்ததி கூற தம்பதிகள் வேதனையுடன் பார்வைகளை பரிமாறிக் கொண்டனர்.

கோவில் பிரஹாரத்தை வலம் வந்த தேனுகா, மீண்டும் துவஜஸ்தம்பத்தை வணங்கி விட்டு, சித்தி கற்பகத்துடன் கோவிலை விட்டு வெளியே வந்தாள்.

வரிசையாக ஒவ்வொரு வீட்டின் மரியாதையினையும், ஏற்றுக் கொண்டபடி சிவநேசனின் வீட்டின் முன்பாக வந்தாள். சிவநேசன் நீட்டிய கும்பத்தை தனது இரு கைகளால் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டவள், குலதனத்தையும், அருந்ததி யையும் புன்னகையுடன் பார்த்தாள்.

"எப்படியம்மா இருக்கீங்க? என்ன அருந்ததி? அம்மாவோட வீட்டுக்கு வரக் கூடாதா? என்னாலதான் சட்டுன்னு எங்கேயும் கிளம்ப முடியாது! நீ வரலாம் இல்லை!"

பெரிய வீட்டுப் பெண் சற்றும் கர்வம் இல்லாமல் பேசுவதைக் கண்ட அருந்ததி அவளுக்கு என்ன பதில் கூறலாம் என்று யோசிப்பதற்குள், சட்டென்று தன் பெரியம்மாவைப் பார்த்தாள். தேனுகா.

"பெரியம்மா! புடவை நெகிழ்ந்துப் போச்சு.. கொஞ்சம் அவிழ்த்து கட்டிகிட்டா பெட்டர்.." என்றவள் அருந்ததியைப் பார்த்தாள்.

"இஃப் யூ டோண்ட் மைண்ட், உங்க வீட்டுல, என் புடவை கட்டிக்கலாமா?" என்று சட்டென்று சிவநேசனின் வீட்டுக்குள் நுழைய, அருந்ததி அவளை பின்புற போர்ஷனுக்கு அழைத்துச் சென்றாள்.

வேறு வழியின்றி சிவநேசனுடனும் குலதனத்துடனும் பேசிக் கொண்டிருந்தாள் கற்பகம்.

சிவநேசன் ஒரு ஹால், மற்றும் சிறிய சமையலறை யில் குடித்தனம் நடத்துவதைக் கண்டு திகைத்தாள் தேனுகா.

"இவ்வளவு சின்ன போர்ஷனிலா குடி இருக்கீங்க?" தேனுகா தனது சேலையை அவிழ்த்தபடிக் கேட்டாள்.

"ஆமா! கோவூர்லயே பெரிய வீட்டுப் பொண்ணு நீங்க! நான் சிறிய வீட்டுப் பொண்ணு.." அருந்ததி கூற, இருவரும் குரல் விட்டு சிரித்தனர்.

"உங்கப்பா ரொம்ப பொறுமைதான்! அவர் எங்க வீட்டுல உட்கார்ந்து கணக்கு எழுதற திண்ணையே உங்க ஹாலோட ரொம்ப பெரிசா இருக்கும்!" தேனுகா சொல்லியபடி மீண்டும் தனது பட்டுச்சேலையை கொசுவத் தொடங்கினாள்.

அருந்ததி மௌனமாகப் புன்னகைத்தபடி இருந்தாள்.

"மூணு பேர் எப்படி இந்த சின்ன வீட்டுல இருக்கீங்க?" தேனுகா கொசுவ மடிப்புகளை அடி வயிற்றினில் சொருகி முந்தானையை நீவி இரு பார்டர்களும் தெரியும்படியாக இடத்தோளினில் சரித்துக் கொண்டாள்.

"மூணு பேர் இல்லை! நாலு பேர்!" அருந்ததி சொல்ல வியப்புடன் அவளைப் பார்த்தாள்.

"நாலு பேரா?"

"ஆமா! தம்பி ஒருத்தன் இருக்கான்! பெயர் காமேஷ்வரன். காமேஷ்னு கூப்பிடுவோம்! அதோ ஃபோட்டோவுல இருக்கான் பாரு!" என்று அருந்ததி காட்ட, தேனுகா அவள் சுட்டிக்காட்டிய படத்தை நோக்கினாள்.

ஜிம்மில் சிக்ஸ் பாக் உடல் அமைப்பு போட்டியில் முதல் பரிசு கோப்பையுடன் நின்றிருந்தான், காமேஷ்! அந்தப் படத்தையே உற்று கவனித்தாள் தேனுகா.

"என்ன செய்யறான்! சிவநேசன் மாமா தனக்கு பையன் இருக்கிறதா சொன்னதே கிடையாதே!" லேசான வியப்புடன் படத்தை இன்னும் பார்த்தபடியே கூறினாள்.

"பிளஸ் டூ முடிச்சுட்டான். ஆனா மேல படிக்க விரும்பலை. நியூஸ் பேப்பர் ஏஜெண்ட் ஐயர்கிட்டே வேலை பார்க்கிறான்!"

தேனுகாவுடன் அருந்ததி வாசல்பறம் நோக்கி நடந்தாள்,

"சிவநேசன்! இந்த வருஷம் அருந்ததியோட கல்யாண சாப்பாட்டை போட்டுடுங்க!" கற்பகம் சரியாக சிவநேசனிடம் கூறிக் கொண்டிருந்தாள்.

"உங்க பொண்ணு தேனுகா எங்க வீட்டுல காலை வச்சுட்டாங்க இல்லே! இனிமே நிச்சயம் அருந்ததிக்கு கல்யாணம் நடக்கும்.." சிவநேசன் கூறினார்.

"நல்லா நடக்கும்! தேனுகா மாதிரியே அருந்ததியும் எங்க விட்டு பொண்ணுதான். அவள் கல்யாணத்தை ஜமாயிச்சு புடலாம்!" சற்றே உரத்த குரலில் கற்பகம் கூற, சரியாக காற்று பலமாக வீசி, அவளது சொற்களை சுமந்துச் சென்று எதிர்வீட்டு வாத்தி செந்திலின் அம்மா உமையாளின் செவிகளினுள் போட்டது.

குரு பலன் வந்தாயிற்று என்று சொல்கிறார்களே அது இதுதான் போல் இருக்கிறது. குரு பகவான் எல்லாவற்றையும் ஒரு சக்கர சுழற்சியாகத்தான் செய்கிறார் போலும்! தேனுகாவின் சேலை நெகிழ்வானேன்! அதை சரியாகக்

கட்டிக்கொள்ள சிவநேசன் வீட்டினுள் நுழைவானேன். அதை ஸ்லாகித்து சிவநேசன் பேச, அருந்ததியும் தேனுகா போன்றே எங்க வீட்டுப்பெண் என்று கற்பகம் கூறியது உமையாள் காதில் விழுவானேன்.

"கேப்பங்கூழை முக்கி முக்கி தின்னுற குடும்பம்.." என்று சிவநேசன் குடும்பத்தை அன்றாடம் ஏசிக் கொண்டிருந்தவளின் பார்வை குரு பார்வையாக மாறியது.

சிவநேசன் குடும்பம் மீது பெரிய குடும்பம் இவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்களே, என்று அசந்து அருந்ததியை தன் மகன் செந்திலுக்கு மண முடித்தால் என்ன என்று தோன்றி விட்டது. குலதனத்தை நோக்கி மெதுவாக புன்னகை ஒன்றை வீசினாள்.

தேனுகாவும் கற்பகமும் தொடர்ந்து கோவிலைச் சுற்றி வரிசையாக மூன்று சுற்று வீடுகளின் மரியாதையையும் ஏற்றுக் கொண்டு டிரங்க் ரோடில் பயணித்துக் கொண்டிருந்தாள்.

ஐயர் சைக்கிளின் அறுந்து போன செயினை மாட்டுவதற்காக சைக்கிளை கடையில் கொடுத்து விட்டு, புளிய மரத்தடியில் நின்று டிரங்க்ரோடில் ஊர்ந்துக் கொண்டிருந்த வண்டிகளை ஸ்வாரஸ்யம் இன்றி பார்த்துக் கொண்டிருந்தான், காமேஷ்.

சரியாக -

தேனுகாவின் சாரட் வண்டி அந்தப் பகுதியை நெருங்கிக் கொண்டிருந்தது. கைகளைக் கட்டியபடி தான் நின்றிருந்த பகுதியை நோக்கி வந்து கொண்டிருந்த அந்த சாரட் வண்டியையே கவனித்துக் கொண்டிருந்தான் காமேஷ்.

அது பெரிய வீட்டின் சாரட் வண்டி என்பதைப் பார்த்த உடனேயே யூகித்து விட்டான். அன்று பிறந்தநாள் கொண்டாடும் பெரிய வீட்டின் மகராசி இந்த வழியாக பாண்டியம்மாள் கோவிலுக்கு போகிறாள் போலும்!

சற்று முன் ஐயர் மகன் விச்சுவை பள்ளிக்கு கொண்டு விடச் செல்லும்போது இவளைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தான். ஒரு வேளை, இப்போது அவளைக் காணும் சந்தர்ப்பம் இவனுக்கு கிடைக்குமோ? ஊரே சொல்வது போல் இவள் அதிர்ஷ்டத்தை வாரி வழங்கும் காமதேனுவா? ஒருவேளை இவளைப் பார்த்தால், இவன் வாழ்க்கையில் ஒரு நல்ல திருப்பம் ஏற்படுமா?

தனக்குள் கேட்டபடி, தனது விசாலமான கண்களால் அந்தச் சாரட்டின் இருக்கையை கவனித்தான்.

முதலில் தெரிந்தது கற்பகம் அண்ணிதான் சற்றே வயது அதிகமாகக் காணப்படுகிறாளே என்று அவன் நினைத்துக்

கொண்டிருந்த போதே, அந்த அழகான முகம் அவனது விழிகளைக் கட்டிப்போட்டது.

இவ்வளவு அழகானப் பெண்ணை அவன் இதுவரை பார்த்ததே இல்லையே என்று மலைத்த அவன் அந்த அழகைப் எடைப்போடுவதற்குள்ளாக எதிர்பாராத விதமாக அந்த சம்பவம் நிகழ்ந்து விட்டது.

கரும்புலோடுகளை ஏற்றி வந்த டெம்போ ஒன்று அந்தத் திருப்பத்தில் வளையும்போது, அதன் டிரைவருக்கு கட்டுப்பாடு மீறி, வண்டி நேராக தேனுகா பயணம் செய்த சாரட் வண்டியின் பின்பாக வந்து மோதியது.

பின்னால் நின்றிருந்த காண்டீபன் சரிந்துவிழ, டெம்போவில் இருந்த கரும்பு பண்டல்களும் நழுவி விழ காண்டீபன் கரும்பு குவியல்களின் அடியில் சிக்கிக் கொண்டான்.

டெம்போ மோதிய வேகத்தில் சாரட் வண்டியின் சக்கரம் சுழன்று போய் காமேஷ் நின்றிருந்த புளியமரத்தில் மோதி விழுந்தது. வலப்புற அச்சு முறிந்து வண்டி சரிய, தேனுகாவும் கற்பகமும் அலறினார்கள்.

சட்டென்று -

காமேஷ் பாய்ந்து சென்று தனது இருகைகளால் சரிந்துக் கொண்டிருந்த சாரட் வண்டியை தாங்கிக் கொள்ள, இதனால் வண்டி சரிவது நின்றுபோக, கற்பகம் வண்டியில் இருந்து மறுபக்கமாக குதித்துவிட்டாள்.

தேனுகா சாரட்டின் மறுபக்கம்தான் உட்கார்ந்தி ருந்தாள். ஆனால் வண்டி சரிந்ததால் இருக்கையின் இந்தப்பக்கம் வந்துவிட வண்டியைத் தாங்கி நின்ற காமேஷின் முகமும், அவளது முகமும் மிக அருகாமையில் இருந்தன. அவனது கண்களினுள் ஆழமாக பார்த்தாள் தேனுகா. அதே முகம்! சிவநேசன் வீட்டில் சிக்ஸ் பேக் போட்டியில் வென்று கப்பை ஏந்தியபடி பெருமிதத்துடன் நின்ற அதே கம்பீரமான முகம் இதோ தொட்டுவிடக் கூடிய தூரத்தில் இருந்தது. குலதனம் மற்றும் சிவநேசனின் சாயல்களின் கலவையாக, கடுமையும் கோபமும் நிறைந்திருந்த அதே முகம்! விசாலமான கண்கள் இவளையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாலும், அதில் இம்மியளவும் சாரட் வண்டியின் பாரத்தை ஏந்திக் கொண்டிருக்கும் வேதனை தென்படவில்லை. வண்டியைத் தூக்கி பிடித்திருந்த அவனது கைகளின் இரு புஜங்களிலும் சட்டை வழிந்து அவனை திரட்சியான பலத்தை வெளிப்படுத்த முதல் தடவையாக ஒரு வாலிபனை இவ்வளவு அருகாமையில் பார்த்திருந்ததால், தேனுகா பிரமித்துப் போனாள்.

வெண்கல மணியாக ஒலித்தது அவன் குரல்.

"நீயும் கீழே குதிச்சுடு! வண்டி விரிசல் விட்டுக்கிட்டே வருது!" காமேஷ் கூற, தன்னை மறந்து அவன் கம்பீரத்தையே ரசித்துக் கொண்டிருந்த தேனுகா கீழே குதித்தாள்.

அவள் கீழே குதித்ததும் அலக்ஷியமாக சாரட் வண்டியை அப்பால் தள்ளினான் காமேஷ்! அவன் தள்ளிய வேகத்தைப் பார்த்தாலே பெரிய வீட்டின் மீது அவனுக்கு உள்ள கோபம் தெரிய வரும். காமேஷின் பார்வை கரும்பு பண்டல்களின் கீழே சிக்கியிருந்த காண்டீபனின் மீது விழுந்தது. உடனே விரைந்து சென்று பண்டல்களை அப்புறப்படுத்தத் துவங்கினான்.

தான் பெரிய வீட்டு சாரட்டின் மீது மோதி விட்டோம் என்பதை புரிந்து கொண்டு டெம்போ டிரைவர் ஓட்டம் பிடித்திருந்தான்.

தனி ஒருவனாகவே அந்த கரும்பு குவியல்களின் அடியில் இருந்த காண்டீபனை மீட்டவன், அவன் எழுந்து நிற்க உதவினான்.

"மேடம்! உங்களுக்கு அடிபடலியே!"

காண்டீபன் பயத்துடன் தேனுகாவை கேட்டான். தேனுகாவுக்கு அடிபட்டிருந்தால் இவன்தானே பாண்டி சகோதரர்களுக்கு பதில் சொல்ல வேண்டும்?

"எனக்கு ஒண்ணுமில்லை! உங்களாலதான் நடக்க முடியலை! கால் ஃபராக்சரா பாருங்க!" பதற்றத்துடன் தேனுகா சொன்னாள்.

அவளது இனிய குரல் காமேஷை கவர்ந்து இழுத்தது. அவள் காண்டீபனின் காலை எண்ணி பதற்றப்படுவதைக் கண்டதும் உடனடியாக அவனைக் தூக்கித் தனது தோளின் மீது போட்டுக்கொண்டு. ஒரு மரத்தின் கீழே கிடத்தினான். அதற்குள் விபரத்தைக் கண்ட அக்கம் பக்கத்து வயல்களில் வேலை செய்துக் கொண்டிருந்த மக்கள் ஓடி வந்தனர்.

கட்டுமஸ்தான உடற்கட்டை கொண்ட காண்டீப்னையே காமேஷ் அனாசியமாக தூக்கிச் செல்கிறானே!

"காமேஷ்! சைக்கிள் ரெடி" சைக்கிள் கடைகாரன் குரல் கொடுக்க, காமேஷ் சைக்கிள் கடையை நோக்கி நடந்தான்.

தான் அவனுக்கு நன்றி கூட சொல்லவில்லை என்பதை உணர்ந்துக் கொண்ட தேனுகா அவன் பின்னால் விரைந்து சென்றாள்.

"ரொம்ப தேங்க்ஸ், காமேஷ்! அடி எதுவும் படாம காப்பாத்தினதுக்கு.."

தனது இனிமையான குரலால் தன் பெயரை குறிப்பிட்டதும், திகைத்துப்போய் திரும்பி அவளைப் பார்த்தான் காமேஷ்!

'என் பெயர் இவளுக்கு எப்படி? தெரிந்தது?'

சரிந்துக் கொண்டிருந்த வண்டியிலிருந்து இரு பெண்களை காப்பாற்ற வேண்டும் என்கிற உணர்வில், இருந்த காமேஷுக்கு தேனுகாவின் முழு அழகும் இப்போது தென்பட, அவளைக் கண்டு பிரமித்து நின்று விட்டான்,

இவள்தானா பெரிய வீட்டுப்பெண்!

அதிர்ஷ்டத்தை அள்ளித் தரும் காமதேனு என்று ஊரே கொண்டாடும் பெண் இவள்தானா? பாக்கியத்தை மட்டுமே தரும் இவள் பயணித்த வண்டியே விபத்துக்கு உள்ளாகியதே! அப்படியிருக்க, அவளால் எப்படி மற்றவர்களுக்கு பாக்கியத்தை தர முடியும் என்று கிராமத்து மக்கள் நம்புகிறார்கள்?

பெரிய வீட்டுப்பெண் இவ்வளவு பேரழகியா? காமதேனுவின் அவதாரம் என்று ஊரார் கூறுவதால் இவன்

மனதில் அவளை குறி சொல்லும் பெண்ணாகவே நினைத்து விட்டிருந்தான், ஜடா முடியும் மஞ்சள் குங்குமமும், அம்மனோ சாமி குங்குமமும் துலங்க கையில் வேப்பிலையுடன் அலைவாள் என்றெல்லாம் நினைத்திருந்தான்.

அவளோ நேர்மாறாக இருந்தாள். கோலிவுட் காரர்களின் கண்களில் இந்தப் பேரழகு பட்டிருந்தால் அவர்கள் தேனுகாவை கொத்திக்கொண்டு போயிருப்பார்கள், இத்தனை நாள் இப்படியொரு பேரழகி கோவூரில் இருந்திருக்கிறாள் என்பதே அவனுக்கு பெரிய அதிசயமாக தோன்றியது.

பதிலுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் மெய்மறந்து நின்றிருந்தேன் காமேஷ்

"நீங்க அருந்ததியோட பிரதர்தானே?" தேனுகா கேட்டாள்.

"ஆமாம்! உனக்கு எப்படித் தெரியும்?" காமேஷ் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

"ரொம்ப நன்றி தம்பி! எங்களைக் காப்பாத்தினதுக்கு நீங்க வண்டியை பிடிக்கலேனா நாங்க விழுந்திருப்போம். இல்லே தேனுகா! ஆச்சரியமாக இருக்கே தேனுகா! நீ வந்த வண்டிக்கு எப்படி விபத்து நடந்தது?" கற்பகம் அதிசயப்பட்டாள்.

"பெரியம்மா! இவரு சிவநேசன் மாமா மகன்!" தேனுகா சொன்னதும், கற்பகம் அதிசயித்தாள்.

"அப்படியா! சிவநேசன் தனக்கு பிள்ளை இருக்கிறதா சொல்லவேயில்லையே!" என்று வியந்தாள்.

சரியாக பெரிய வீட்டின் கார் அந்தப் பக்கமாக வந்தது. அழகர் கோடங்கியை பாண்டியம்மன் கோவிலில் கொண்டு விடுவதற்காக அந்தக் கார் வந்து கொண்டிருந்தது.

முறிந்துக் கிடந்த சாரட் வண்டியை கண்டதும் காரின் டிரைவர் திடுக்கிட்டு காரை நிறுத்தினாள்.

தேனுகா பாப்பாவோட வண்டி உடைஞ்சு கிடக்குதே பதற்றத்துடன் டிரைவர் காரைவிட்டு இறங்க, திடுக்கிட்ட கோடங்கியும் உடன் இறங்கினார்.

கோடங்கி இறங்கியதும், அவர் கண்களில் பட்ட காட்சி தங்களை மறந்து தேனுகாவும், காமேஷும் கருவரையொருவர் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததுதான்.

உறைந்து போனார் கோடங்கி. சற்று முன்தான் மூடிய கதவின் பின்னால் பெரிய பாண்டி செண்பகத்திடம் பாடம் போதித்துவிட்டு வந்திருந்தார்.

"செண்பக பாண்டி! உன் குடும்பத்துக்கு சுபிக்ஷம் நீடிக்கணும்னா காலமெல்லாம் தேனுகா கன்னியாகவே இருக்கணும்! ஆண் வாடையே அவளை நெருங்கக் கூடாது."

"உன் தங்கை ரேணுகாதான் ஒருத்தனை ரகசியமா கல்யாணம் செஞ்சுகிட்டு காமதேனுவா இந்தக் குடும்பத்துக்குத் தரவேண்டியப் பாக்கியங்களைத் தராம போயிட்டா! இந்தப் பொண்ணாவது நம்மளை ஏமாத்தாம பாத்துக்க? தேனுகாவோட வாழ்க்கையில காதல், கத்திரிக்கா கல்யாணம்னு எதுவுமே நடக்கக் கூடாது! ஆண் வாடை அவளைச் சேர்ந்தா அவளோட பாக்கியங்களை இழந்துடுவா! காமதேனு எப்பவுமே தனியாகத்தான் இருக்கும்! அதுக்கு ஜோடி கிடையாது. கன்னி கழியாம இருக்கிற வரைக்கும்தான் அவளால இந்தக் குடும்பத்துக்குச் சுபிக்ஷசங்களை அள்ளி வழங்க முடியும்! என்ன புரிஞ்சுதா?" கோடங்கி கேட்க, செண்பக பாண்டி தலையசைத்தார்.

"ஒருத்தனும் அவளை நெருங்க முடியாது அழகரே! ரெண்டு ஆளு அவளோட செக்யூரிட்டி இருபத்தி நாலு மணி நேரமும் நிக்கிறாங்க. கவலைப் படாதீங்க! ரேணுகா மாதிரி தேனுகா கிடையாது. அவளை நல்லா வளர்த்திருக்கோம்!" பெரிய பாண்டி சொன்னார்.

"எல்லாம் சரி! ரேணுகாவும் சொன்னதைக் கேட்டு நல்லபடியாகதான் இருந்தா! பாண்டியம்மன் கோவிலுக்கு தனது 17வது வயசு முடிஞ்சு 18ஆரம்பிக்கிற அன்னைக்கு வண்டியில போனப்ப, பைக்காரன் ஒருத்தன் அவ வண்டி மேல மோதினான். அப்புறம் அவ வாழ்க்கையோடயே மோதினான்.." அழகர் கோடங்கி எச்சரிக்கையுடன் பெரிய பாண்டியை உறுத்துப் பார்த்தார்.

"நான் பாத்துக்கறேன் அழகரே! நீங்க கவலைப்படாம போங்க! ஏலே முத்து! கோடங்கியை பாண்டியம்மன் கோவிலுல விட்டுட்டு வாடா! தேனும்மா போறதுக்குள்ளே கோடங்கி அங்கிட்டு போயிடணும்!" என்று கூறி இவரைக் காரில் அனுப்பி வைத்திருந்தார்.

ஆனால், நடப்பது என்ன?

ரேணுகாவின் சாரட் வண்டி விபத்துக்குள்ளான அதே இடத்தில் தேனுகாவின் சாரட்டும் விபத்துக்குள்ளாகி உள்ளதே. ரேணுகாவும் அந்த பைக்காரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தது போலவே, அந்தப் பையனும் தேனுகாவும் வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்கின்றனரே..

'யார் அந்த பையன்?' கோடங்கிக்கு மற்றொன்றும் சிந்தையில் உரைத்தது.

ரேணுகாவுக்கு 17 வயது நிரம்பி 18ஆவது வயது பவங்கும் சமயத்தில்தான் விபத்து நேர்ந்தது. தனது மஹிமைகளை இழக்கும்படி கல்யாண வலையில் அவள் விழுந்தது. அப்போதுதான். அன்றும் தேனுகாவுக்கு 17 வயது நிரம்பி 18 வயது துவங்கியிருந்தது. அவரையும் அறியாமல் அவரது தேகத்தில் ஒரு நடுக்க அலை தோன்றி மறைந்தது. வேகமாக தேனுகாவை நோக்கி நடக்கத் தொடங்கினார் அழகர் கோடங்கி!

# அத்தியாயம் 7

'தி பார்க் ஹோட்டல்' ரெஸ்டாரெண்டில், ஒரு மூலையில் அமர்ந்திருந்த சந்தீப்பின் முன்பாகச் சென்று அமர்ந்தாள், சுபாங்கி.

"தாங்க்ஸ் ஃபார் கமிங் சுபாங்கி!"

"எதுக்கு என்னைக் கூப்பிட்டீங்க சந்தீப்? பேப்பர் நியூஸை ஊர்ஜிதப்படுத்துற மாதிரி மறுநாளே நாம் சந்திச்சா, நியூஸை எல்லோரும் நம்ப மாட்டாங்களா? நான் மறுப்பு அறிக்கை விட்டாக்கூட நம்ப மாட்டாங்க!" சுபாங்கி படபடத்தாள்.

"சுபாங்கி! என்னோட நல்ல காலம்தான் நீங்க மறுப்பு அறிக்கையைவிடறதுக்கு முன்னாடியே உங்களை பிடிச்சுட்டேன்! நான் உங்களைக் கூப்பிட்டதே உங்க கிட்டே மனம் விட்டு பேசத்தான். இந்த நியூஸுக்கு மறுப்பு விடறது அவசியம்தானா?" சந்தீப் கேட்டான்.

"அஃப் கோர்ஸ்!" சுபாங்கி சொன்னாள்.

"எதனால அப்படி நினைக்கறீங்க?" சந்தீப் அவளை ஜாக்கிரதையாகப் பார்த்தான்.

"இதுல நினைக்க என்ன இருக்கு! நான் ஒரு மரியாதைக்குரியவரோட பொண்ணு! பெரிய பிஸினஸ்மேன்! இந்த மாதிரி நான் ஒரு கிரிக்கெட் ப்ளேயரோட சுத்தறேன்னு நியூஸ் வந்தா, என் ஆஃபீஸ்லயே என்னை யாரு மதிப்பாங்க? என்னோட தன்மானம் இதுல அடங்கியிருக்கு!"

"நான் அப்படி நினைக்கலே, சுபாங்கி! ஒவ்வொரு மனுஷனுக்கும் அவன் மனசுல ஒரு தேவதை பள்ளி நாட்களிலேர்ந்து குடி கொண்டிருப்பாள். அவ எங்கே இருப்பாள்னு தெரியாமத்தான் சந்திக்கிற பொண்ணுங்களை எல்லாம், இவள் அந்த தேவதையா இருக்குமோன்னு எண்ணியே பழகுவான்! ஆனா எல்லா பெண்களும் 'ஏதாவது ஒரு டைம்'ல நான் அந்த தேவதை இல்லைன்னு நிரூபிச்சுடுவாங்க! வேற வழியில்லாம, அவன் வேறு ஒரு பெண்ணை நாடுவான். இந்த தேவதையின் தேடற படலத்தை வச்சு, ஆண்கள் எல்லோருமே 'மலர் விட்டு மலர் தாவற வண்டு'ன்னு எவனோ மடையன் பாடிட்டான். தான்யா, நான் எதிர்பார்த்திருந்த தேவதை இல்லேன்னாலும், ஏறக்குறைய அடுத்த லெவல்ல இருந்ததால் அவகிட்டே பழகிட்டு இருந்தேன். ஆனா! என் மனசுல உருவேத்தி வச்சிருந்த தேவதையை நேத்துதான் முதன்முதலா பார்த்தேன். சந்தன நிற சேலையில் நேத்து பேரடைஸ் ஹோட்டல்ல உட்கார்ந்திருந்தா!"

சந்தீப்பின் வாய் ஜாலத்தில் சிக்குண்ட சுபாங்கி இமைகள் படபடக்க அவனை ஏறிட்டாள்.

'யூ பிட்ச் வானேஸா! என்ன சொன்னே ஃபோன்ல.. தான்யாவும், சந்தீப்பும் உயிருக்குயிரா லவ் பண்றாங்க! சந்தீப் என்னைத் திரும்பிக்கூட பார்க்கமாட்டார்னு சொன்னியே! இப்பப்பாரு என்னைத் தேவதைன்னு வர்ணிச்சுட்டு என் எதிரே உட்கார்ந்திருக்கான். நேத்தி, நீ திருப்பி கொடுத்ததைத் திரும்பி வாங்கிக்க!' வானேஸாவை அழைத்து கத்த வேண்டும் போல் தோன்ற, சந்தீப்பின் காதல் ததும்பும் பார்வை அவளை தடுத்தது.

"சுபாங்கி! நேத்து நைட் நான் தூங்கவே இல்லை! தான்யா ஃபோன் செஞ்சப்பக்கூட எடுக்கலை! என் மனசு உங்களை சுத்தியேதான் பறந்துக்கிட்டு இருந்திச்சு! மறுப்பு அறிக்கை கொடுத்துதான் நியூஸ் போட்ட பத்திரிகையை மூக்கறுக்கணும்னு இல்லை! அந்த செய்தியை நிஜமாக்கிக் கூட அவங்க முகத்துல ஓங்கி அறையலாம் சுபாங்கி! நான் ஒரு கிரிக்கெட் ப்ளேயர்! அஃபன்ஸ் இஸ் த பெஸ்ட் ஃபார்ம் ஆஃப் டிஃபன்ஸ்னு நம்பறேன். அதனால அந்த பத்திரிகை என்னை நோக்கிப் போட்ட ஸ்பின்னை நான் சிக்ஸரா மாத்த முடிவு செஞ்சுட்டேன். நான் உங்களை காதலிக்கிறேன்! நீங்க என்

மனைவியா கிடைச்சா நான் ரொம்பப் பெருமைப்படுவேன்!" சந்தீப் சொன்னதும், திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

நிகேத்திடம் போய் 'எஸ்' சொல்லிவிடுவது என்கிற முடிவில் இருந்தவளை மீண்டும் குழப்புகிறதே விதி! அவனையே குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள், சுபாங்கி.

"எனக்கு புரியலை சந்தீப்! நீயும் தான்யாவும் சுத்தாத இடமில்லை. ஏன் உங்க ரெண்டு பேரோட புகழும், மால்டீவ்ஸ் வரைக்கும் பரவியிருக்கு! நான் உங்களை எப்படி நம்பறது?"

தூக்கி வாரிப்போட்டது, சந்தீப்புக்கு!

'மால்டீவ்ஸ் விவகாரம் எல்லாம் இவளுக்கு எப்படி தெரியும்?'

"மால்டீவ்ஸ்ல ஒண்ணும் தப்பா நடக்கலை சுபாங்கி! அந்த ரிஸார்ட் ஓனர் நிகேத் என்கிறவன் சும்மா தான்யா பின்னாடியே சுத்திக்கிட்டு இருந்தான்! தான்யா ஸ்விம்மிங் பூல்ல நீச்சலடிக்கும் போது அவகிட்டே தப்பா நடந்துக்கிட்டான்! நான் அவனைத் தட்டிக்கேட்டேன். அவன் தன் செல்வாக்கை உபயோகிச்சு லோக்கல் பேப்பர்ல நானும், தான்யாவும் குடிச்சுட்டு கலாட்டா செய்ததா போட்டு, எங்களை ரிஸார்ட்டை

விட்டு வெளியேற்றினான்! இதுதான் விஷயம்.." சந்தீப் சொன்னான்.

'தான்யாவிடம் நிகேத் தவறாக நடந்து கொண்டானா? யாரை நம்புவது, என்றே தெரியவில்லையே!' சுபாங்கி அதிர்ந்தாள்.

"அதெல்லாம் விடுங்க சுபாங்கி! 'ஐ லவ் யூ'ன்னு நான் சொல்லிட்டேன்! உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா இல்லையா?" சந்தீப் கேட்டான்.

"தான்யாவோட இவ்வளவு நாள் சுத்திக்கிட்டு வர்றீங்க! என்னை நேத்துதான் முதல் தடவையா ரத்தமும், சதையுமா பாக்கறீங்க? அதுக்குள்ளே எப்படி என்னை கல்யாணம் பண்ணிக்கத் தோணும்.." சுபாங்கி ஆச்சரியப்பட்டாள்.

"என் மனசை திறந்துப் பேசறேன். எத்தனையோ ப்ளேயர்கள், எத்தனையோ நடிகைகளோட சுத்தியிருக்காங்க! ஆனா அவங்க யாரும் கல்யாணம் செஞ்சுக்கலை நம்ம நாட்டு ஜனங்களுக்கே ஜோடி சேக்கறதுல ஒரு ஆர்வம்! இவன் இவளுக்கு ஏத்தவன்! இவள் இவனுக்கு ஏத்தவள்னு பத்திரிக்கைகள் ஜோடி சேக்கறதால செலிபிரிட்டிகளும் நடிச்சுகிட்டு பணம் பண்ணறாங்க.. அவ்வளவுதான்! என்னையும், தான்யாவையும் சேர்த்து வச்சதே ஒரு போர்டு

மெம்பர்தான்! அதை வச்சு தன் பத்திரிகை சர்குலேஷனை வளர்த்துகிட்டாரு! அதுக்காக எனக்கும், தான்யாவுக்கும் ஒரு தொகையே கொடுத்தாரு!"

"அதனாலதான் சொல்றேன்! செலிபிரிட்டிகளின் காதல் வெறும் கண்துடைப்பு நாடகம்தான்! பெரிய பெரிய கிரிக்கெட் வீரர்களை பாரு! ஒழுங்கா கல்யாணம் பண்ணிகிட்டு சாதனைகளை செஞ்சுகிட்டு இருப்பாங்க."

"நான் அந்த வரிசையில் சேர விரும்பறேன். உன்னை மனைவியா அடைஞ்சா, நான் பெரிய லெவலுக்கு போவேன்! நீதான் என்னோட ஸ்ரீஹரிகோட்டா.." உணர்ச்சியுடன் பேசியபடி, சுபாங்கியின் கையைப் பிடித்தான்.

இதற்காகத்தானே காத்திருந்தாள் சுபாங்கி.

நிகேத்தை கல்யாணம் செய்துகொண்டு மால்டீவ்ஸ் தீவில் காணாமல் போவதைவிட சந்தீப் ஷங்கரின் மனைவியாக பொது இடங்களிலும், மேட்ச் நடைபெறும் மைதானங்களிலும், வெளிநாட்டுப் பயணங்களிலும் கேமராவில் தென்படலாமே!

சந்தீப் மனதைத் திறந்து பேசியது அவளுக்கு பிடித்திருந்தது. நிகேத்திடம் 'எஸ்' சொல்வதற்கு முன்னாடியே, சந்தீப் தன் மனதை திறந்து காட்டியது ஒரு விதத்தில்

நல்லதுதான். நிகேத்திடம் 'நோ' சொல்லி விட வேண்டியது தான் போலும்.

"என்ன சொல்றே சுபாங்கி!"

பேரர் ஒருவர் சந்தீப்பிடம் வந்தார்.

"சார்..! கால் ஃபார் யூ!"

"ஒரு நிமிஷம், சுபாங்கி!" என்ற சந்தீப் ரெஸ்டாரெண்டின் ஃபோன் ரிஸீவரை கையிலெடுத்தான்.

"என்ன சந்தீப் இன்னுமா பேசிட்டு இருக்கே? 'ஸூட்'ல தனியா இருக்க போரடிக்குது மேன்!" தான்யா சிணுங்கினான்.

"ஐ வில் பி தேர்!" என்றபடி ரிஸீவரை வைத்து விட்டு மீண்டும் சுபாங்கியிடம் வந்தான் சந்தீப்.

"ஒரு பிஸினஸ் மீட்டிங் இருக்கு சுபாங்கி! ஸோ! நான் மனசுல இருக்கிறதை கொட்டிட்டேன்! நீ என்ன செய்யப் போறே?" உரிமையுடன் 'நீ' க்கு மாறி விட்டான் சந்தீப். சுபாங்கி தன் வலையில் விழுந்து விட்டிருப்பாள் என்கிற உறுதியுடன்.

"நான் மறுப்பு அறிக்கையை விடப் போறதில்லை சந்தீப்!" என்று புன்முறுவலுடன் சுபாங்கி கூற, 'குட்' என்று அவளது தோளில் தட்டினான். சந்தீப்பின் அந்த உரிமையான தொடல்,

அவளுள் கிளுகிளுப்பை உண்டாக்க, தன் காரை நோக்கி சுபாங்கி நடக்க, சந்தீப் லிஃப்ட்டை நோக்கி நடந்தான்.

**வி**ஷயத்தை அறிந்த நித்யமூர்த்தி வானத்துக்கும் பூமிக்கும் குதித்தார்.

"அப்புறமா நீ ரொம்ப வருத்தப்படப் போறே. நிகேத்தின் கால் தூசுக்கு சந்தீப் பெற மாட்டான்.." நித்தி கர்ஜித்தார்.

'போதும்! உன் தங்கை மகன் பெருமை! நடிகை தான்யா கிட்டே மிஸ்பிஹேவ் பண்ணினவன் தானே! என்கிட்டே வந்து ஷாஜஹான் வேஷம் போடறான்! மாளிகை கட்டி வச்சிருக்கானாமே, எனக்கு!' மனத்திற்குள் கூறிக் கொண்டாள்.

"அப்பா! எல்லா ஆண்களுக்குமே வீக்னஸ் இருக்கு! ஒழுங்கா இருக்கிற ஆண்களும், சூழ்நிலை அமைஞ்சா எசகு பிசகாதான் நடந்துப்பாங்க! அதுல் ஒருத்தனை யோக்கியன், ஒருத்தனை அயோக்கியன்னு எப்படி தீர்மானிக்கிறது? தப்போ.. ரைட்டோ சந்தீப் ஈஸ் மை மேன்!" சுபாங்கி கூறினாள்.

"அப்ப எனக்கு அவ்வளவுதான் மரியாதையா? சுபா, உன்னை என் சாம்ராஜ்யத்துக்கு வாரிசா, ஆம்பிளை பிள்ளை

போல வளர்த்தேனே! ரெண்டாம் கல்யாணம் கூட பண்ணிக்காம சுபாங்கி இண்ட்ரீஸை பெரிய அளவுல வளரணும்னு பாடுபட்டது எல்லாமே வீணாப் போச்சே! இருக்கிற ஒரு பொண்ணு என்னை மதிக்கலேன்னு தெரிஞ்சப்புறம் வாழ்க்கையில இனிமே எனக்கு என்ன இருக்கு?" தொப்பென்று விரக்தியுடன் சோஃபாவில் சரிந்தார், நித்யமூர்த்தி.

அவர் மீது பரிதாபம் கொண்ட சுபாங்கி சோஃபாவின் பின்பாகச் சென்று அவர் கழுத்தை தன் இரு கைகளால் கட்டிக்கொண்டு தனது முகவாயை அவரது உச்சந்தலையில் பதித்தாள்.

"டாடி! நோ ஹார்ட் ஃபீலிங்க்ஸ்! இப்ப ஒரு சத்தியம் செஞ்சு தரேன்! நீங்க ஐயரை பார்த்து முகூர்த்தம் குறிச்சு, இந்த முகூர்த்தத்துல சந்தீப்பை கல்யாணம் பண்ணிக்கன்னு ஆர்டர் கொடுத்தாத்தான் எனக்கும், சந்தீப்புக்கும் மாரேஜ்! இல்லேனா வீ ஆர் ஜஸ்ட் ஃபிரெண்ட்ஸ்! என்னோட எல்லா விஷயங்களிலும் நீங்கதான் இறுதி முடிவு எடுக்கப் போறீங்க!" என்றபடி மாடியேறி தன் அறைக்குச் சென்றாள், சுபாங்கி.

'அது போதும்! நான் அந்த சந்தீப்புக்கு அதுக்குள்ளே ஒரு வழிப் பண்ணிடுவேன்!' என்று தனக்குள் கூறிக் கொண்ட நித்யமூர்த்தி, நிகேத்தை ஃபோனில் அழைத்தார்.

# அத்தியாயம் 8

**டா**க்டர் ஹம்ஸவர்த்தினி, அடையாரிலிருந்து பெஸன்ட் நகருக்கு வளைந்துப் போகும் பெசன்ட் அவென்யூவில் நடந்து கொண்டிருந்தாள். மரங்கள் இருபுறமும் அடர்ந்து வாக்கிங் செல்பவர்களுக்காக இயற்கையிலேயே பந்தலமைத்துக் கொடுத்திருந்த பகுதியாக விளங்கிய, தியசோஃபிக்கல் சொசைட்டியின் மதில் சுவரை ஒட்டிய ப்ளாட்ஃபார்மில் நடந்து கொண்டிருந்தாள். வெள்ளை சுரிதார், காலில் ஷூஸ், மார்பில் குறுக்காக தொங்கிய சுருக்குபையில் செல்ஃபோன், கையில் ஊசலாடிக் கொண்டிருந்த ஒரு கழி! வலது உள்ளங்கையில் சுற்றியிருந்த லெதர் பெல்ட்டில் பிணைக்கப்பட்டிருந்த 'நூடுல்ஸ்' என்கிற பொமரேனியன் நாய் அவள் பின்பாக துள்ளிக் குதித்தபடி தொடர்ந்துக் கொண்டிருந்தது. அதன் மேனியெங்கும் நூலாக முடி பரவியிருந்ததால், அதற்கு 'நூடுல்ஸ்' என்று பெயர் வைத்திருந்தாள். தன் இளமை முழுவதையும் மருத்துவ ஆராய்ச்சியிலேயே கழித்து விட்டிருந்ததால், திருமணம் செய்துக் கொள்வதைப் பற்றி சிந்திக்கவில்லை. இளமை போய் வரவா? என்று புறப்படுவதற்குத் தயாராக எழுந்து நின்றபோது, திடீரென்று பெங்களூரைச் சேர்ந்த வனமாலி என்கிற

மனோதத்தவ நிபுணர் இவளுக்கு அறிமுகமானார். செமினார் ஒன்றில் இவளது கையைப் பற்றி குலுக்கிய வேளை நல்லவேளைதான் போலும்! நிரந்தரமாக இவளது கையை பிடித்து விட்டார்.

சென்னையின் கைராசி மகப்பேறு மருத்துவர் என்கிற பட்டத்துடன் வளைய வந்த ஹம்ஸவர்த்தினியை மணந்து கொண்டு அவளது அடையார் வீட்டிலேயே ஐக்கியமாகி விட்டார். குழந்தைகள் இல்லை என்றாலும், ஊருக்கே பிரசவம் பார்த்த திருப்தியில், தான் பிரசவம் பார்த்து பிறந்த அத்தனை குழந்தைகளையும் தன் குழந்தைகளாகவே நினைத்தாள் ஹம்ஸவர்த்தினி. வாழ்க்கையில் பிரச்னைகளே ஒன்றும் இல்லை என்கிற நிலையில் காலை நேரங்களை மட்டும் தனக்காகவே ஒதுக்கிக் கொண்டாள். 'நூடுல்ஸ்'ஸுடன் அன்றாடம் பெஸன்ட் நகர் பீச் வரை வாக்கிங் செல்வாள். எல்லியட்ஸ் பீச்சில் கடலைப் பார்த்து அமைந்திருந்த வீடுகளில் ஒன்றில்தான் அவளது அருமைத் தம்பி டாக்டர் நரேந்திரநாத் வசித்து வந்தார். சென்னையில் மிகப்பெரிய சர்ஜன்களில் நரேந்திரநாத்தும் ஒருவர்.

அக்கா தம்பி இருவரும் புகழ் பெற்ற டாக்டர்களாக இருப்பதைக் கண்டு மகிழாமலேயே தாய் மீனாக்ஷி கண்ணை மூடிவிட்டாள். தந்தை பெரிய மிராசுதார் என்பதால் தனது

கிராம வாழ்க்கையும், நிலநீச்சுகளையும் விட்டு பிள்ளையோடும், பெண்ணோடும் வரத் தயாரில்லை. தொலை பேசியில் உறவு வைத்துக் கொள்வதோடு சரி! அரசாங்க அலுவல் தொடர்பாக யாரையாவது பார்க்க சென்னை வரும்போது மகனையும், மகளையும் பார்த்துவிட்டு போவார். அம்மாதிரி வரும் போது, அரிசி, பருப்பு, சர்க்கரை, காய்கறிகள் ஒரு ப்ரோவிஷன் ஸ்டோரையே உடன் எடுத்து வந்து இவர்களுக்குத் தந்துவிட்டுப் போவார். சென்னையில் ஒரு நாள் தங்க நேரிட்டாலும் முள்ளின் மீது இரு போல மாய்ந்து போவார்.

"ஊர்ல போட்டதை போட்டபடி வந்திருக்கேன்!" என்று புறப்பட்டு விடுவார். மண்ணின் மீதுள்ள தாக்கம்தான் பெற்ற செல்வங்களிடம் உள்ள தாக்கத்தைக் காட்டிலும் அதிகம்.

தந்தைக்கு பாசத்தைக் காட்டத் தெரியாததால் ஹம்ஸவர்த்தினியும், நரேந்திரநாத்தும் மிகவும் நெருக்கமாக இருந்தனர். குறிப்பாக ஹம்ஸா தம்பி நரேனின் மீது எல்லையில்லா பாசத்தைக் கொண்டிருந்தாள். நரேனுக்கும் அக்காவை விட்டால் யாரும் கிடையாது.

வாக்கிங் போகும் சாக்கில் தினமும் தம்பியை பார்த்துவிட்டு வந்தால்தான், ஹம்ஸவர்த்தினிக்கு மருத்துவ

மனையில் வேலை ஓடும். அவள் கணவர் வனமாலியும் சில சமயம் வாக்கிங் வருவார். திடீரென மனநிலை விடுதிகளில் இருந்து ஃபோன் கால்கள் வந்தால், விடியற்காலையே சென்று விடுவார்.

எல்லியட்ஸ் பீச் செல்லும் சாலையில் திரும்பிய, ஹம்ஸா, அங்கிருந்த இரண்டாவது வீட்டினுள் நுழைந்தாள். வெளியில் கிடந்த பிரம்பு நாற்காலியில் நூடுல்ஸை கட்டி விட்டு உள்ளே செல்ல, நரேந்திரநாத்தின் உதவியாளன் ராஜாராம் அவளைப் பணிவுடன் வரவேற்றான்.

"ராஜா! இன்னுமா தம்பி எழுந்திருக்கலை?" அவள் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, டர்க்கி டவலினால் தனது ஈரத்தலையை துவட்டியபடி மாடிப்படிகளில் இறங்கி வந்தார், நரேன்!

"நீ வரச்சே நான் எழுந்துக்கலைன்னா எப்படி? அப்புறம் நூடுல்ஸ் கழுத்துல இருக்கிற காலர் பெல்ட் என் கழுத்துலதானே இருக்கும்! என்னைக் கட்டி எல்லியட்ஸ் பீச் முழுக்க வாக்கிங் போய்டுவியே!" கிண்டலுடன் சிரித்தார் நரேன்.

"என்ன செய்யறது தம்பி! உனக்கு ஒரு கால்கட்டு போடப்பட்டிருந்தா நான் ஏன் உன் கழுத்துல காலர் பெல்ட்டை

போடப் போறேன்? சரி இன்னைக்கு என்ன புரோகிராம்?" ஹால் சோஃபாவில் சாய்ந்தபடி அமர, ராஜாராம் கொண்டு வந்து நீட்டிய லெமன் டீ கோப்பையைப் பெற்றுக் கொண்டாள் ஹம்ஸா.

"ஒண்ணுமில்லை.." நரேன் கூற, அவனை விசித்திரமாகப் பார்த்தான் ராஜாராம்.

"டாக்டர், இன்னைக்கு சந்தீப் ஷங்கர் உங்களை 'லஞ்ச்'க்கு இன்வைட் பண்ணியிருக்கார்!" என்றவுடன் பதறிப் போய் அவனைப் பார்த்தார்.

"ஓ.. மை காட்! எப்படி மறந்தேன்! ஆமா அக்கா! சந்தீப் ஷங்கர் ஏதோ முக்கியமான விஷயம் பேசணும்னு லஞ்சுக்கு கூப்பிட்டு இருக்கான்..!" நரேன் கூறினார்.

"இன்னைக்கு வனமாலி கூட இல்லை! சமைச்சு போடலாம்னு பார்த்தேன்! இன்னைக்குப் பார்த்து, வெளியில சாப்பிடறேன்னு சொல்றே.. ஆமா.. இந்த சந்தீப் ஷங்கர் ஃபோட்டோவை பேப்பரில் பார்தேனே! இண்டஸ்ட்ரியலிஸ்ட் நித்யா மூர்த்தி பெண்ணை லவ் பண்றான்னு போட்டிருக்கே!" ஹம்ஸா கேட்டாள்.

# காமதேனுவின் முத்தம்!

"எனக்கு தெரியலை! தான்யாங்கிற நடிகையோட தான் இவ்வளவு நாள் சுத்திகிட்டு இருந்தான்.." நரேன் சொல்லியபடி பூஜை அறைக்குள் நுழைந்தார்.

பூஜையறையில் மாட்டப்பட்டிருந்த காமதேனுவின் புகைப்படத்தை உற்றுப் பார்த்தபடி நின்றார். அவரது காதலி மற்றும் ஒரு நாள் மனைவி ரேணுகாவின் நினைவாக அவரிடம் இருந்தது, அவள் ஹோட்டல் அறையில் வைத்துவிட்டு சென்றிருந்த இந்தப் படம்தான்.

மருத்துவ மாணவனாக இருந்தபோது மோதலில் ஆரம்பித்து, காதலாக மாறி பிறகு ஒரு நாள் திருமண வாழ்க்கையாக முடிந்து போனது ரேணுகாவுடனான இவரது உறவு. அவரது அந்த காதல் கதை வெளியே உட்கார்ந்திருக்கும் அக்கா ஹம்ஸவர்த்தினிக்கு கூடத் தெரியாது. இதுவரையில் அவள் எப்படி மரணம் அடைந்தாள் என்கிற விவரம் கூட இவருக்கு தெரியாது. பனித்தக் கண்களுடன் பூஜையறையில் சற்று நேரம் நின்றிருந்தார், நரேன்.

தம்பி பூஜை செய்வதாக நினைத்து ஹம்ஸா மௌனத்தை கடைபிடிக்க சற்றுநேரம் கழித்து பழைய கலகலப்புடன் வெளியே வந்தார்.

"ஓ.. இங்கேயே இரேன் அக்கா! நான் சந்தீப்பை மீட் பண்ணிட்டு சீக்கிரம் வந்துடறேன்!" நரேன் சொன்னான்.

"இல்லை நரேன்! யூ கோ அஹெட்! ஒரு முக்கியமான விஷயம்! வனமாலிக்கு யுனைட்டட் ஹெல்த் ஆர்கனை சேஷன்லேர்ந்து மென்டல் ஹெல்த் விஷயமாக ஒரு ஆராய்ச்சி நூல் எழுதற அஸ்ஸைஸண்ட் மென்ட் வந்திருக்கு. கிராமப்புற பகுதில போய் ஒரு வருஷம் தங்கி, ஆராய்ச்சிகள் செய்யணும்னு வனமாலி நினைக்கிறார். நானும் ஒரு வருஷம் பிரேக் எடுத்துக்கிட்டு அவரோடு ஆராய்ச்சில உதவி செய்யலாம்னு பாக்கறேன். என்னோட உதவியாளர் அவந்திகா கிட்டே க்ளினிக்கை ஒப்படைச்சிட்டு நானும் வனமாலியும் ஏதாவது கிராமத்துல போய் தங்கலாம்னு நினைக்கிறேன். நீ என்ன சொல்றே.." ஹம்ஸா கேட்டாள்.

எதையோ யோசித்தபடி அமர்ந்திருந்த நரேன், ஹம்ஸா சொன்னதைக் கேட்டதும், சட்டென நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"குட் ஐடியா அக்கா! நீயும் எவ்வளவு நாள்தான் உழைப்பே! சென்னையில இருந்தா உனக்கு ரெஸ்ட் கிடையாது. மாத்தி மாத்தி உனக்கு ஃபோன் வரும்! கிராமத்துக்கு போறது நல்ல ஐடியா!" நரேன் சொன்னான்.

"குட்! நீயே ஏதாவது நல்ல கிராமமா சொல்லு" ஹம்ஸா சொன்னாள்.

"உங்க இஷ்டம்! உங்களுக்கு பிடிச்ச கிராமத்துக்கு நீங்க போங்க! ஆனா.. கோவூருக்கு நீங்க போனீங்கன்னா, நானும் உங்க கூட வந்து தங்குவேன்!" நரேன் சொல்ல, ஹம்ஸா அதிர்ந்தாள்.

"கோவூரா?"

'எதுக்காக எல்லா கிராமங்களையும் விட்டு கோவூரைத் தேர்ந்தெடுத்தான் நரேன்!'

தன் சந்தேகத்தை அவனிடமே கேட்டு விட்டாள் ஹம்ஸா!

"ஏன்னா, மென்டல் ஹெல்த் பற்றி ஆராய்ச்சி செய்யறதுக்குத் தகுந்த கிராமம் அதுதான்!" பூஜையறையில் தெரிந்த காமதேனுப் படத்தை வெறித்தபடி நரேன் சொன்னான்.

கோவூர் என்று தம்பி சொன்னதும் ஹம்ஸாவின் அடிவயிற்றில் ஒருவித கலக்கம் தோன்றியது. அவளது முகபாவமும் லேசாக மாறிவிட, அதை மறைக்க எழுந்து வாசலை நோக்கி நடந்தாள்.

"நான் கிளம்பறேன், நரேன்!" என்றாள்.

# அத்தியாயம் 9

அன்று ஞாயிற்றுக்கிழமை -

விச்சுவுக்கு லீவு என்பதால் அவனுடன் காத்தாடி விடுவதற்கு வருவதாகச் சொல்லியிருந்தான் காமேஷ். கையில் வெண்ணிற காத்தாடி மற்றும் நூல்கண்டுடன் காலையிலேயே பேப்பர் ஐயர் வீட்டுக்கு வந்து விட்டான்.

பேப்பர் ஐயரும், அவர் மனைவி விசாலாக்ஷியும் ஏதோ கோவில் திருவிழாவுக்காக கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

"காமேஷ்! ராத்திரிக்குள்ளே வந்துடுவோம். டிஃபன் கேரியர்ல இட்லி, புளிசாதம், தயிர்சாதம் எல்லாம் பண்ணி வச்சிருக்கேன். ரெண்டு பேரும் சாப்பிடுங்கோ! விச்சு! காமேஷ் சொல்றதை கேட்டுண்டு சமர்த்தா இருக்கணும்.." என்று சொல்லிவிட்டு ஐயருடன் கிளம்பினாள், விசாலாக்ஷி.

மொட்டை மாடிக்கு முதலில் விச்சுவை தூக்கி சென்று விட்ட காமேஷ், பிறகு காத்தாடி நூல்கண்டை கொண்டு வந்தான்.

புதுக்காத்தாடியை நூலில் கட்டி மெதுவாக உயரே பறக்க விட்டான். காற்றும் குறையின்றி வீச, அவர்களது காத்தாடி,

உடனே 'ஜிவ்'வென்று உயரத்துவங்கி பறக்கத் துவங்கியது. காமேஷ் இன்னும் சிறிது அதிகம் அதிகம் நூலை விட காத்தாடி இன்னும் உயரத்தொடங்கியது.

நூலை விச்சுவிடம் கொடுத்தான் காமேஷ். அவன் "ஹா.. ஹா.." என்று குரல் எழுப்பிச் தனது சந்தோஷத்தை வெளிப்படுத்தி உயரப் பறந்து கொண்டிருந்த காத்தாடியையே நோட்டம் விட்டு கொண்டிருந்தான்.

அப்போது -

தனியாக பறந்து கொண்டிருந்த அந்த வெண்ணிற காத்தாடியை நோக்கி இன்னும் சில வண்ண காத்தாடிகள் நெருங்கி வந்தன. பல்வேறு கட்சிகளின் வண்ண டிசைனில் பறந்த அந்த காத்தாடிகள் விச்சுவின் காத்தாடியை 'டீல்'லுக்கு அழைக்க, விச்சு பயத்துடன் காமேஷிடம் நூலை மீண்டும் தந்துவிட்டான்.

லாவகமாக அந்த வண்ண காத்தாடிகளை விட்டு நகர்ந்து இன்னும் சற்று உயரத்திற்கு போனான் காமேஷ். அப்போதுதான் அந்த கருப்புநிறக் காத்தாடி தங்கள் வெண்ணிற காத்தாடியை நெருங்குவதை கவனித்தான். அந்த கருப்புக் காத்தாடியை மாஞ்சா நூலில் பறக்க விட்டிருந்தான் அதற்குரியவன். விச்சுவின் கையை மாஞ்சா அறுத்து விடும்

என்பதற்காக காமேஷ் மாஞ்சா நூலை தவிர்த்திருந்தான். இதைத் தெரிந்து கொண்டோ என்னவோ அந்த கருப்புக் காத்தாடிக்காரன், இவர்கள் காத்தாடியை குறி வைத்து துரத்திக்கொண்டே வந்தான். ஒரு கட்டத்தில் அந்த கருநிற காத்தாடியின் மாஞ்சா நூல் இவர்கள் நூலை பதம் பார்க்க, இவர்கள் நூல் அறுபட, வெண்ணிற காத்தாடி வானத்திலிருந்து வட்டமிட்டு பறந்தபடி நேராக தேனுகாம்பாள் காமேஷ்வரரின் கோவிலை நோக்கிச் சென்றது.

விச்சுவின் முகம் சூம்பி போக, காமேஷ், அவனுக்கு ஆறுதல் சொன்னான்,

"கவலைப்படாதே விச்சு! நான் உனக்கு எப்படியாவது காத்தாடியை பிடிச்சு கொடுத்துடறேன்!" என்றபடி வேஷ்டியை மடித்துக்கொண்டு மொட்டை மாடியில் இருந்த ஓடுகளின் மீது கால் வைத்து ஏறிச்சென்று, அங்கிருந்து பேலன்ஸ் செய்து கோவில் பக்கமாக எட்டிப் பார்த்தான். காத்தாடி கோவிலில் இருந்த மாமரத்தில் சென்று சிக்கிக் கொண்டது.

காமேஷ் அவசரமாக இறங்கி வந்தான். "விச்சு காத்தாடி கோவில் மாமரத்துல சிக்கிகிட்டு இருக்கு! நீ வீட்டுலயே இரு! நான் போய் எடுத்து வரேன்.." என்றவன் விச்சுவை சுமந்து

கொண்டு கீழே நாற்காலியில் அமர வைத்தான். பிறகு தெருவில் இறங்கி கோவிலை நோக்கி நடந்தான்.

கோவிலை நெருங்கிய போதுதான் சாரட் வண்டி கோவில் வாசலில் நிற்பதைக் கண்டான். ஞாயிற்றுக் கிழமை என்பதால் பெரிய வீட்டார் கோவிலுக்கு வந்திருக்கக் கூடும்!

வேகமாகக் கோவிலுக்குள் நுழைந்தவன் சன்னதி பக்கம் செல்லாமல், நேராக மாமரத்துப் பக்கம் சென்றான். அந்த மரம் கோவிலுக்கு சற்று ஒதுக்குப் புறமாக இருந்தது. அதன் அடியில் பக்தர்கள் உட்காருவதற்கு தோதாக சிமெண்ட் திண்ணை மரத்தைச் சுற்றி அமைந்திருந்தது. முற்பகல் என்பதால் கோவிலில் அதிக கூட்டமில்லை. குறிப்பாக அந்த மாமரத்து பக்கம் ஆள் நடமாட்டமேயில்லை.

அந்த மரத்தை நோக்கி போகும்போதே தன் வெண்ணிற காத்தாடி இருக்கும் இடத்தை கவனித்து விட்டான். மரத்தின் உச்சியில் ஒரு மாவிலைக் கொத்தில் சிக்கி இருந்தது. அடர்த்தியான அந்த மரத்தின் ஊடே எளிதாக ஏறி அவனால் காத்தாடியை எடுத்து விட முடியும். பள்ளி நாட்களில் அந்த மரத்தில் ஏறி மாங்காய் பறித்திருக்கிறான். மரத்தின் கீழே இருந்து காத்தாடி சிக்கியிருந்த கிளையைக் கண்களால் அளவெடுத்தவன், அந்த கிளையை அடையும் வழியையும்,

பார்த்து வைத்துக் கொண்டான். பிறகு, ஒருமுறை தன்னைச் சுற்றிப் பார்த்தவன் வேஷ்டியை உருவி மடித்து, மரத்தின் அடியில் வைத்தான் 'ஷார்ட்ஸ்'ஸுடன் நின்றான். பலமுறை ஜிம்மில் பயிற்சி செய்தவனாகையால் அவனுக்கு கூச்சமாக இருக்கவில்லை. கிடுகிடுவென மரத்தில் ஏறத் துவங்கினான். எப்படியோ காத்தாடி சிக்கியிருந்த கிளையை அடைந்துவிட்டான். அந்த கிளை மரத்தி லிருந்து சற்று வெளியே துருத்திக் கொண்டிருந்தது. அதன் மீது கவிழ்ந்து படுத்தபடி காத்தாடியை நோக்கிக் கையை நீட்டினான். அவன் பாரம் தாங்காமல் கிளை மேலுங் கீழுமாக ஆட, சற்றே நிதானித்து இன்னும் சற்று முன்னேறி, கையை நீட்ட, இந்த முறை அந்த வெண்ணிற காத்தாடி அவன் கையில் சிக்கியது. அது கிழிபடாமல் மாவிலைக் கொத்திலிருந்து விடுவித்து, உள்வாங்கி, மாமரத்தில் உயரத்திலிருந்து கீழே இறங்கத் துவங்கினான். கீழ்கிளைக்கு வந்து மரத்திலிருந்து கீழே சிமெண்ட் மேடையின் மீது குதிப்பதற்காக எத்தனித்தவன் திடுக்கிட்டான்.

மரத்தின் கீழிருந்த மேடையில் பெரிய வீட்டுப் பெண் தேனுகா அமர்ந்து, ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

மேலிருந்து அவளது அடர்த்தியான கூந்தலில் சூடப்பட்டிருந்த மகிழஹாரம் மடிக்கப்பட்டு ஹேர் பின்னால்

பிணைக்கப்பட்டிருந்ததை கவனித்தான். அதன் வாசம் மேலே இருந்த அவன் நாசி வரை எட்டியது. பச்சை தாவணியும், எலுமிச்சை மஞ்சளில் பாவாடையும் அணிந்திருந்தாள். மற்றபடி எளிமையான ஆபரணங்களையே அணிந்திருந்தாள். மேலிருந்து பார்த்தபோது அவளது சங்கு கழுத்தும், பால் வண்ண முதுகும் தெரிய, காமேஷ் திணறிப் போனான்.

மடித்து வைத்திருந்த அவனது வேஷ்டி அவள் பக்கத்தில் கிடந்தது. கீழே குதித்து, அவன் தன் பாட்டுக்கு வேஷ்டியை அணிந்து கொண்டு காத்தாடியுடன் சென்றுவிடத்தான் நினைத்தான். அவள் எதிரே ஷார்ஸ்ஸுடன் இறங்குவதற்கு ஒரு மாதிரியாக இருந்தது. சரி இப்படியே உட்கார்ந்திருப்போம்.. அவள் எழுந்து போகும் வரை காத்திருப்போம் என்றுதான் நினைத்தான். ஆனால் அவள் கொஞ்சம் எழுந்து போவதாகத் தெரியவில்லை! சாங்கியம், ஏதும் இல்லாததால் தனியாகத்தான் வந்திருந்தாள். தொலைவில் துவஜஸ்தம்பத்தருகே காண்டீபன் அவளது வரவிற்காக காத்திருப்பதைக் கண்டான் காமேஷ்! அவன் காலில் சிறுகட்டு! அன்று, சாரட் வண்டி விபத்தில் கரும்பு குவியலுக்கடியில் சிக்கிய போது ஏற்பட்ட காயமாக இருக்கக்கூடும்.

மரத்தின் மேலிருந்தபடியே தேனுகா கிளம்புவற்காக காத்திருந்தான். கோவிலில் டமாரமடிக்கும் கார்மேகம் அந்த

வழியாக வந்து கொண்டிருந்தான். பெரிய வீட்டுப் பெண் தேனுகா தனியா மரத்தடியில் வீற்றிருப்பதைக் கண்ட அவன், நேராக அவளை நோக்கி நடந்தான்.

"கும்பிடறேம்மா!" தேனுகாவை நோக்கி குனிந்தான்.

அவனை நோக்கித் தலையாட்டிய தேனுகா தன் பர்ஸிலிருந்து ஒரு பத்து ரூபா தாளை எடுத்து அவனிடம் நீட்ட, கார்மேகம் இளித்தபடி அந்த ரூபாய் நோட்டைப் பெற்றுக் கொண்டான். கார்மேகத்தின் கண்கள் வேஷ்டி மடித்து வைத்திருந்த வேஷ்டியின் மீது படிந்தன.

"அம்மா.. வேட்டி!" கார்மேகம் தலையைச் சொறிந்தான்.

சற்றே நகர்ந்து, "ம்..! எடுத்துக்க!" என்று தேனுகா அனுமதி தர, மடித்துவைத்திருந்த அந்த வேஷ்டியை சட்டென்று எடுத்து கட்கத்தில் சொருகிக் கொண்டு, அவன் கிளம்பி விட்டான்.

கார்மேகம் தன் வேஷ்டியை எடுத்துக் கொண்டு போவதைக் கண்ட காமேஷுக்கு 'பகீர்' என்றது! வேஷ்டி பறிபோனால் ஷாட்ஸுடன் எப்படி வீட்டுக்கு போவது?

பரபரப்புடன் மேலிருந்து குரல் கொடுத்தான்!

"ஹலோ! என் வேஷ்டியை ஏன் அவன் கிட்டே கொடுத்தே? காத்தாடியை எடுக்கிறதுக்காக நான்தான் என் வேஷ்டியை மடிச்சு கீழே வச்சுட்டு மரத்தின் மேல ஏறினேன்! அவனை கூப்பிட்டு வேஷ்டியை வாங்கித் தா!"

காமேஷ் மேலிருந்து குரல் கொடுக்க, திடுக்கிட்டு அண்ணாந்து பார்த்த தேனுகா, கையில் காத்தாடியுடன் அவன் மரத்தின் மீது அமர்ந்திருந்த கோலத்தைக் கண்டதும் சிரித்து விட்டாள்.

"எனக்கென்ன தெரியும்! வேஷ்டியை எடுத்துக் கட்டுமான்னு கேட்டான்! அவன் வேஷ்டின்னு நினைச்சு எடுத்துக்கோன்னு சொல்லிட்டேன்!"

"ப்ளீஸ் வேஷ்டியை வாங்கிக் கொடு. பேப்பர் ஐயர் ஊர்ல இல்லே! அவர் பையன் வீட்டுல தனியா இருக்கான்! நான் போய்தான் அவனுக்கு லஞ்ச் தரணும்! அவனோட காத்தாடியை எடுத்து கொடுக்கத்தான் வந்தேன்!"

நிலைமையை யூகித்த தேனுகா, திரும்பி கார்மேகத்தை கையைத்தட்டி அழைத்தாள். திரும்பிப் பார்த்த அவன், தேனுகா தன்னை கை கையசைத்து அழைப்பதைக் கண்டதும், மீண்டும் அவளை நோக்கி நடந்தான்.

"வேஷ்டியை அங்கேயே வச்சிடு! சாமிக்காக நேர்ந்து விட்டிருக்காங்க!" என்று தேனுகா சொன்னதும் வேட்ஷ்டியை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு நின்ற அவனுக்கு இன்னுமொரு பத்து ரூபாயை நீட்ட, அவன் சந்தோஷமாக வாங்கிக் கொண்டு போனான்.

"எதுக்கு அவனுக்கு இன்னொரு பத்து ரூபாய் கொடுத்தே? வேஷ்டி என்னுடையதுதானே?" வியப்புடன் கேட்டான் காமேஷ்.

"மரத்தடியில் பெரிய வீட்டுப்பொண்ணு உட்கார்ந்திருந்தாங்க! அவள் அருளால ஒரு வேஷ்டி கிடைச்சுது! ஆனா கொஞ்ச நேரத்திலேயே அவளே அதை திருப்பி கேட்டு வாங்கிட்டான்னு சொன்னா, எனக்கு சௌபாக்கியமே இல்லை! நான் ஊரை ஏமாத்தறேன்னு சில பேர் மாதிரி அவனும் நினைச்சுட்டா என்ன செய்யறது? அதனாலதான் இன்னொரு பத்து ரூபா தந்தேன்.!"

காமேஷுக்கு வியர்த்துக் கொட்டியது.

'இவன் அவளைப் பற்றி தவறாக நினைத்திருந்தது அவளுக்கு எப்படி தெரிந்தது?'

"சரி! நீ கிளம்பு! நான் மரத்துல இருந்து இறங்கி வேஷ்டியைக் கட்டிக்கணும்!" அவளை கொஞ்சம் தூரமாகப் போகச் சொன்னான்.

"நான் காமதேனுவின் அம்சம்! இந்த கோவிலோடப் பொண்ணு! நான் இங்கேதான் உட்கார்ந்து தியானம் பண்ணப் போறேன்!" என்றபடி அந்த வேஷ்டியின் பக்கத்திலேயே மீண்டும் உட்கார்ந்து விட்டாள்.

'இது என்னடா அக்கப்போர் செய்கிறாள் இவள்?'

"ஹலோ! நான் உன் முன்னாடி இந்த கோலத்துல எப்படி கீழே வர்றது?" காமேஷ் எரிச்சலடைந்தான்.

"ஏன்? இந்தக் கோலத்துலதானே உங்க வீட்டுல நடு ஹாலுல ஃபோட்டோவுல நிக்கறீங்க? இங்கே காத்தாடி! ஃபோட்டாவுல கப்! அவ்வளவுதான் வித்தியாசம்!" தேனுகா கேலியுடன் சொன்னாள்.

காமேஷுக்கு பகீர் என்றது! 'இவள் எப்போது நம் வீட்டுக்கு வந்தாள்? ஒருவேளை அருந்ததியை பார்க்க வந்திருந்தாளோ! நீங்க அருந்ததியின் தம்பியா?' என்று விபத்து நடந்தபோது கேட்டாளே!

தயக்கத்துடன் தேனுகாவைப் பார்த்தான். "அட்லீஸ்ட் வேஷ்டியையாவது எடுத்து தா! நான் இங்கேயே கட்டிக்கிறேன்!" காமேஷ் சொன்னான்.

"பொண்ணுங்க ஆடையை எடுத்துகிட்டு கண்ணன் மரத்து மேல உட்கார்ந்த கதை படிச்சிருக்கேன்! மரத்து மேல இருக்கிற கண்ணனோட ஆடை பொண்ணு ஒருத்தி கையில் சிக்கினதை இப்பத்தான் பாக்கறேன்!"

தேனுகா 'களுக்'கென்று சிரிக்க, காமேஷுக்கு, 'சுர்'ரென்று கோபம் ஏறியது. இவள் வேண்டுமென இவனை வம்புக்கு இழுக்கிறாள். சூடாக எதையாவது சொல்லி, இவளுடைய ஆட்டங்களுக்கெல்லாம் மயங்குபவன் நான் இல்லை என்பதை உணர்த்த வேண்டும்.

"நீ முதலுல இங்கேயிருந்து கிளம்பு! அசோகவனத்து சீதை மாதிரி மரத்தின் கீழே உட்கார்ந்துகிட்டு இருந்தா எப்படி? அவனவனுக்கு வேலையில்லை?" சற்று காட்டமாகவே கேட்டதும் தேனுகாவின் சிரிப்பு மறைந்தது.

"சீதை அசோகவனத்துல, மரத்து கீழே உட்கார்ந்து கிட்டிருந்தபோது, நீ உட்கார்ந்திருந்த மாதிரி மரத்து மேல யாரு உட்கார்ந்திருந்தா தெரியுமா?" தேனுகா தன்னை மறந்து கேட்டுவிட, காமேஷின் முகம் கோபத்தால் துடித்தது. தன்னை

பெரிய வீட்டு பெண் 'அனுமார்' என்று கூறுவது புரிந்துபோனது.

'இவள் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டாள்? அதிர்ஷ்ட தேவதையே! நீ என்னை எப்படி வேணும்னாலும் கேவலப்படுத்து! நீ எனக்கு அதிர்ஷ்டங்களையும், சௌபாக்கியங்களையும் அள்ளிக் கொடுத்தா போதும்! என்று காலில் விழுந்து கும்பிடுவேன் என்று நினைக்கிறாளா?' பெரிய வீட்டின் மீது நிலவிக் கொண்டிருந்த கோபம், தேனுகாவின் பேச்சால் எரிமலையாக வெடித்தது. கையிலிருந்த காத்தாடியை கிழித்து கீழே போட்ட காமேஷ் ஆத்திரத்துடன் கீழே குதித்தான்.

மேடை மீதிருந்த வேஷ்டியை எடுத்துக் கட்டிக் கொண்டான். தேனுகாவை நெருங்கி வந்தான்.

அவள் பீதியுடன் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க, சட்டென்று எதிர்பாராத நேரத்தில் 'பளார்' என்று அவள் கன்னத்தில் ஒன்றை வைத்துவிட்டு கோவில் வாசலை நோக்கிச் சென்று மறைந்தான்.

தேனுகா ஜாடையாக காண்டீபன் பக்கமாக பார்க்க, அவன் நாகநாத குருக்கள் தந்திருந்த வெண்பொங்கலை ஆவலுடன் சுவைத்துக் கொண்டிருந்தான்.

'நல்லவேளை!' என்று நினைத்துக் கொண்டாள் தேனுகா! பிறந்த நாள் முதலாக அந்த ஊர் மக்கள் யாவருமே காலில் விழுந்து வணங்குவதையே பார்த்துப் பழக்கப்பட்டிருந்த தேனுகா, முதன் முறையாக வாழ்க்கையில் அடி ஒன்றைப் பெற்றிருந்தாள். முன்பின் அடிவாங்கி பழக்கம் இல்லாததால் எப்படி ரியாக்ட் செய்வது என்பது புரியாமல் தனது சாரட் வண்டியை நோக்கி நடந்தாள்.

# அத்தியாயம் 10

"**தா**ங்க்யூ டாக்டர்! என்னோட அழைப்பை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி!" சந்தீப் ஷங்கர், டாக்டர் நரேனின் கையைக் குலுக்கி வரவேற்றான்.

"பிளஷர் இஸ் மைன்!" என்றபடி இருக்கையில் அமர்ந்தார், நரேன்.

"என்ன ஆர்டர் செய்யட்டும்?" சந்தீப் கேட்டான்.

"லைட்டா போதும் சந்தீப்! முதல்ல சாலட், மசாலா பாப்பட் சொல்லு. அப்புறம் பார்க்கலாம்!" நரேன் சொல்ல, சந்தீப் தனக்கும் அவற்றையே ஆர்டர் செய்தான்.

"சொல்லு சந்தீப்! என்ன விஷயம்? எதுக்காக இந்த லஞ்ச் மீட்டிங்!"

தனது தொண்டையை செருமிக் கொண்டு பேசத் துவங்கினான், சந்தீப்.

"டாக்டர் நரேன்! கொஞ்ச நாளைக்கு முன்னாடி நான் தொழிலதிபர் நித்யமூர்த்தியின் மகள் சுபாங்கியை பார்த்தேன். பார்த்ததுமே, அவளைப் பிடிச்சுப் போச்சு, அவள்கிட்டே ப்ரபோஸ் செஞ்சேன். அவளுக்கும் என்னைப் பிடிச்சுப் போச்சு!

ஆனா..! அவ அப்பா நித்ய மூர்த்திக்கு ஒரு சத்தியம் செஞ்சுக் கொடுத்திருக்கா! அவர் சம்மதிச்சாதான் என்னைக் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொல்லியிருக்கா! இப்ப நாங்க ரெண்டு பேரும் கல்யாணம் செய்து கொள்வது நித்யமூர்த்தி கையிலதான் இருக்கு! அவரோட டாக்டர் நீங்க! உங்க மேல அவர் ரொம்ப மரியாதை வச்சிருக்காருன்னு தெரியும்! அதனால் நீங்கதான் எப்படியாவது அவரை சம்மதிக்க வைக்கணும்!" சந்தீப் கூறினான்.

"சாரி சந்தீப்! இதுக்காகத்தான் லஞ்ச் மீட்டிங்னு நீ சொல்லியிருந்தா நான் வந்திருக்க மாட்டேன்! இட் இஸ் நாட் மை ஜாப்! நீயே உனது திறமையால் அவரை கன்வின்ஸ் செஞ்சிருக்கணும்..!" நரேன் சொன்னார்.

"முயற்சி பண்ணினேன், டாக்டர்! அவருக்கு என்னை பிடிக்கலை! என் பேட்டிங் கூட அவருக்கு பிடிக்கலை! அவரை எப்படி கன்வின்ஸ் பண்ணுறதுன்னு தெரியலை!" சந்தீப் அவரைப் பரிதாபத்துடன் பார்த்தான்.

"லுக் சந்தீப்! என்னோட லைஃப்பே என்னால அமைச்சுக்க முடியலை! உனக்கு எந்த விதத்துல ஹெல்ப் பண்ண முடியும்னு எனக்கு தெரியலை!"

"டாக்டர்! ஐ சின்சியர்லி லவ் சுபாங்கி! அது ஒண்ணு தான் எனக்கு க்வாலிபிகேஷன்!" சந்தீப் சொன்னான்.

நரேன் யோசித்தார். "சரி! உனக்கு நான் உதவி செய்யறேன்! ஆனா ஒரு கண்டிஷன்! நீ உன்ன கேம்ல கவனம் செலுத்து! வரப்போற ஆஸ்திரேலியா டூர் செய்யற நம்ம இந்தியன் ஸ்குவாட்ல, பெயர் இருக்கும்படி செஞ்சா நான் நித்திகிட்டே பேசி கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யறேன்! உனக்காக பரிஞ்சுப் பேசறதுக்கு எனக்கு ஏதாவது ஒரு ஹோல்ட் கிடைக்கணும் இல்லே! ஆஸ்திரேலியா போற டீம்ல உன் பெயர் இருக்குன்னு தெரிஞ்ச அடுத்த நிமிஷம் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யறேன்!" நரேன் சொன்னார்.

"டன்!" என்றான் சந்தீப்.

மும்பை மரைன் டிரைவ் - ஹோட்டல் ட்ரைடெண்ட் மாடியின் உச்சி ஸ்ட்டில் கிரிக்கெட் போர்ட் உறுப்பினர் ஷ்யாம்லால் பூலே தன் உயிர் நண்பரும் 'கேட்வே ஆஃப் இண்டியா' நாளிதழின் ஆசிரியருமான சுதாகர் ராவ் பட்டேலுடன் அளவளாவிக் கொண்டிருந்தார்.

"பட்டேல் உனக்கு ஒரு விஷயம் சொல்லப் போறேன்! என் பெயரை குறிப்பிடாதே! வரும் ஆஸ்திரேலியா டூர்க்கு சிறந்த ஆல்ரௌண்டர்ங்கிற முறையில் சந்தீப் ஷங்கர் செலக்ட் பண்ணியிருக்கான்! அவன் நிச்சயமா, டீம்ல இருக்கப்போறான்! ஆனா விஷயம் டாப் சீக்ரெட்! நீ உன் பத்திரிகையில் முதல்ல பப்ளிஷ் பண்ணனும்னு உன் கிட்டே சொல்றேன்!" என்று கூற, பட்டேல் உடனே தன் பத்திரிக்கை ஸ்போர்ட்ஸ் எடிட்டர் விஷால் தேஷ் பாண்டேயை எச்சரித்து விட்டார். மறுநாள் காலையில் சந்தீப் ஷங்கரின் புகைப்படத்துடன் செய்தி வெளிவந்து விட, தாங்கள் அந்த செய்தியை தவற விட்டு விட்டோமே என்கிற ஏமாற்றத்தில் மற்ற நாளிதழ்களும் சந்தீப் ஷங்கரின் திறமைகளைப் போற்றி எழுத, சென்னை நாளிதழ்களும் சந்தீப்பின் தேர்ச்சி சென்னைக்கு கிடைத்தப் பெருமை என்றெல்லாம் ஏற்றி விட்டன.

போர்ட் தலைவருக்கு கடும் எரிச்சல்! இந்த மாதிரி புரளிகளையெல்லாம் யார் கிளப்பி விடுகிறார்கள்? போர்ட் மெம்பர்கள் யாரும் பத்திரிகையாளர்களிடம் பேசக்கூடாது என்றெல்லாம் அவசர மீட்டிங் ஒன்றை அழைத்து காய்ச்சி எடுத்துக் கொண்டிருந்தார்.

ஆனால் டாக்டர் நரேனுக்கு இதெல்லாம் எப்படி தெரியும்? நாளிதழ்களில் வந்திருந்த சந்தீப் ஷங்கரைப் பற்றிச் செய்திகளை எடுத்துக்கொண்டு, நித்யமூர்த்தி வீட்டுக்கு வந்தார்.

"பையன் பெரிய லெவலுக்கு போய் கொண்டிருக்கிறான். அவனுக்கு கேப்டன்ஸிகூட கிடைக்க வாய்ப்பு உள்ளது! அவன் மேல் உறுதியான காதலைக் கொண்டிருந்தும், உனக்கு தந்த சத்தியத்துக்காக சுபாங்கி அவனை பார்ப்பதுகூட கிடையாது! உன் ஒரே பெண்ணுக்காக நீ இதை கூட செய்ய மாட்டியா?" - நித்யமூர்த்தியை வறுத்து எடுத்தார் நரேன்.

அமைதியாக கையைக் கட்டிக் கொண்டு காலை குனிந்து மாடிப்படியில் சாய்ந்து நின்று கொண்டிருந்த சுபாங்கியை ஒரு கணம் வெறித்துப் பார்க்க, நித்யமூர்த்தி! 'தாயில்லாத அந்தப் பெண்ணின் விருப்பம் அதுவாக இருந்தால் செய்து கொண்டு போகட்டும்! அவள் தலையெழுத்துப்படி நடக்கட்டும்' என்று நினைத்தார்.

"ஒகே டாக்டர்! அவ விருப்பப்படி நடக்கட்டும்!" நித்தி சொன்னதும், சுபாங்கி ஓடோடி வந்து தந்தையின் பக்கத்தில் அமர்ந்து அவரது கன்னத்தில் முத்தம் ஒன்றை பதித்தாள்.

"என்னை தப்பா நினைக்காதே! வித்யா! என் பொண்ணு சந்தோஷம்தான் எனக்கு முக்கியம்! சந்தீப்பையே கல்யாணம் பண்ணிக்கோன்னு பச்சை கொடி காட்டிட்டேன்! வாழப்போறது அவதானே! இதனால நீ ஒண்ணும் கோவிச்சிக்கிட்டு இந்த அண்ணனை கழட்டி விட்டுடாதே!" நித்யமூர்த்தி தங்கை வித்யாவதிக்கு ஃபோன் செய்து விளக்கினார்.

"நோ, பிராப்ளம் அண்ணா! அவ எனக்கும் பெண்தான்!" என்று தைரியமாக அண்ணனிடம் சொல்லி விட்டாளே தவிர, வித்யாவதியால் விஷயத்தை ஜீரணிக் கவே முடியவில்லை!

நிகேத்துக்கு ஃபோன் செய்தாள்.

"என்னடா நிகேத்! சுபாங்கி பொண்ணு இப்படி பண்ணிட்டா!" வருத்தத்துடன் பிள்ளையிடம் சொன்னாள்.

"நீ கவலைப்படாதேம்மா! ஒரு வருஷத்துக்குள்ளே அந்த சந்தீபை உதறிவிட்டு என்கிட்டே ஓடி வருவா பாரு! அவ எனக்காகவே பொறந்தவம்மா!" நிகேத் சொன்னான்.

கல்யாண ஏற்பாடுகளை டாக்டர் நரேன் உதவியோடு செய்து கொண்டிருந்தார், நித்யமூர்த்தி. பாவம், அவர்களுக்கு தெரிய நியாயமில்லை. கிரிக்கெட் போர்ட் மெம்பர் ஷ்யாம்லால் பூலே இந்திப்பட தயாரிப்பாளர் பொப்பட்லால்

பூலேயின் அண்ணன் என்பது. அவரது படத்தில்தான் தான்யா சௌத்ரி கதாநாயகியாக நடித்து வந்தாள்!

# அத்தியாயம் 11

"**எ**க்னாமிக்ஸ் புரொபஸர் குருராஜன் அரை நாள் லீவு போட்டுவிட்டு கிளம்பிட்டாரு. ஸோ.. நா. மத்தியானம் ஃப்ரீ! கிளம்புங்க.. ஏதாவது சினிமா போகலாம்!" க்ளாஸ் லீடர் சாருலதா வந்து அறிவித்ததும், மாணவிகளிடையே பலத்த ஆரவாரம் எழுந்தது.

"சினிமா போறதைப் பத்தி பிரச்சனையில்லை ஆனா தேனுகா வந்தாதான் நான் வருவேன்!" கன்னிகா கூற, அனைவரும் தேனுகாவை ஆவலுடன் பார்த்தனர்.

"சாரி ஃபிரெண்ட்ஸ்! எங்க வீட்டுல திட்டுவாங்க!" வழக்கமான பிலாக்கணத்தைப் பற்றி தேனுகா பாடினாள்.

"உன்னோட 'ப்ளேக் கேட்' நாலு மணிக்குதானே ஆஃபீஸ் வருவான்! உன்னை நேரா உன் வீட்டுலயே விட்டுடறோம். யாராவது கேட்டா காலேஜ் புராஜெக்ட் விஷயமா சர்வே எடுக்கப் போனோம்னு சொல்லிடலாம்!" கன்னிகா கூறினாள்.

தேனுகா அரை மனதுடன் தலையசைக்க, மாணவிகளை உற்சாகம் தொற்றிக் கொண்டது.

# *காமதேனுவின் முத்தம்!*

"மாருதி தியேட்டருக்கு போகிற ரூட் 5 பஸ் நம்ம காலேஜ் கிட்டே வராது. இப்ப கிளம்பினாதான் நாம பஸ் ஸ்டாண்டுக்கு நடந்து போய் அஞ்சாம் நம்பர் பஸ்ஸை புடிக்க முடியும். படம் ஆரம்பிக்கிறதுக்குள்ளே போயாகணும்! கிளம்புங்க!" சாருலதா உத்தரவு போட, அரை டஜன் மாணவிகள் உடனே கிளம்பினார்கள்.

"நமக்கு டிக்கெட் கிடைக்குமாடி" மஞ்சு என்கிற பெண் சந்தேகம் எழுப்ப, கன்னிகா அவளை அலக்ஷியமாக நோக்கினாள்.

"நம்ம கூடத்தான் அதிர்ஷ்ட தேவதை தேனுகா வராளே! காமதேனுவின் அவதாரம்! இல்லைங்கற வார்த்தையே, அவ நம்மகூட வரும்போது இருக்காது!" கன்னிகா கூறுவதைப் பாராட்டாக எடுத்துக் கொள்வதா அல்லது கேலியாக எடுத்துக் கொள்வதா புரியாமல் குழம்பினாள் தேனுகா.

"இந்த உடான்ஸ்லாம் கோவூரோட நிறுத்திக்க. எனக்கு இதுல எல்லாம் நம்பிக்கை இல்லை!" இன்மொழி என்கிற பெண் முகம் சுளித்தாள்.

"ஒஹோ! நீ ப்ளேக் சட்டை பார்ட்டி இல்லே! நீ இருக்கிறதை மறந்துட்டேன். நீ அப்படித்தான் பேசியாகணும்! தேனுகா நம்ம கூட இருக்கிறதாலதான் நமக்கு எல்லாம்

பாஸிட்டிவா நடக்குது! நம்ம காலேஜ்ல எல்லா டிபார்ட்மெண்ட் பசங்களும், அட்டெண்டன்ஸ் போதாதுன்னு காம்பன்சேஷன் கட்டினாங்க! நம்ம செக்ஷன் மட்டும்தான் தப்பிச்சது! ஞாபகம் இருக்குல்ல?" கன்னிகா சொன்னதும், இன்மொழிக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது.

"பார்க்கலாமா? தேனுகா இல்லாமையே நான் உங்களுக்கு முன்னாடி தியேட்டருக்கு போய் டிக்கெட் வாங்கி காட்டறேன்.." இன்மொழி சவால் விட்டாள்.

"பார்க்கலாம்!" கன்னிகா அவளது சவாலை ஏற்றுக் கொள்ள..

"சும்மா இரு கன்னிகா..!" என்று தேனுகா அவளது தோளை அழுத்தினாள்.

"நீ சும்மா இரு தேனுகா! என்னதான் நடக்குது பார்க்கலாம்.." கன்னிகா சொன்னாள்.

காலேஜ் வாயிலுக்கு அனைவரும் செல்ல அங்கு டீக்கடை வாயிலில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோ ஒன்றை இன்மொழியின் கண்கள் கவனித்து விட்டன. உடனே க்ளாஸை வைத்துவிட்டு தனது வாயைத் துடைத்தபடி வந்த ஆட்டோ டிரைவரின் முன்பாகப் பாய்ந்து சென்று நின்றாள் இன்மொழி.

"அண்ணே மாருதி தியேட்டர் போகணும்..!" இன்மொழி கூற, "எவ்வளவு பேர்?" என்று மாணவிகள் பட்டாளத்தைப் பார்த்து மலைத்தான் அவன்.

"நாங்க மூணு பேர்! கமான் வயலட், தயா.." என்று அவசரமாக இரு தோழிகளை இழுத்துக்கொண்டு ஆட்டோவில் தங்களைத் திணித்துக்கொண்டாள், இன்மொழி.

ஆட்டோ விர்ரென்று கிளம்ப, சாருலதா, கன்னிகாவை கேள்வியுடன் பார்த்தாள்.

"இன்மொழி பந்தயத்துல ஜெயிச்சுடுவா போல இருக்கே!" சாருலதா சொல்ல, அலக்ஷியமாக சிரித்தாள் கன்னிகா.

"தேனுகா இருக்க பயமேன்!" என்றபடி வேறு ஏதாவது ஆட்டோ கண்களில் தென்படுகிறதா என்று நோட்டம் விட்டாள், கன்னிகா.

சரியாக, மாருதி தியேட்டர் வழியாக செல்லும் 5ஆம் நம்பர் பஸ் கல்லூரி முன்பாக இவர்கள் குழுமியிருந்த இடத்திற்கே வந்து நின்றது.

"என்ன கண்ணுகளா? மாருதி தியேட்டர் போகணுமா?" என்றபடி கண்டக்டர் எட்டிப் பார்த்தார்.

மாணவிகள் பிரம்மித்துப் போய் நின்றனர். அனைவரும் தங்களைச் சுதாரித்துக்கொண்டு ஓடிப்போய் பஸ்ஸில் தொற்றிக் கொண்டனர்.

சாருலதாவிற்கு ஆச்சரியம் தாங்காமல் கண்டக்டரையேக் கேட்டுவிட்டாள்.

"கண்டக்டர் சார்! ரூட் 5 எப்படி இந்தப் பக்கம் வருது?"

"வழக்கமான ரூட்ல கட்சி போராட்டம். அதுதான் பஸ் சுத்திகிட்டு இந்தப் பக்கமாக வருது!" என்றபடி டிக்கெட்டுகளை வினியோகித்தார்.

"இப்ப என்ன சொல்றே?" கன்னிகா வெற்றியுடன் புன்னகைத்தாள்.

"இப்பவும் நாம பஸ்ஸுலதானே போறோம். இன்மொழி ஆட்டோவுல போயிருக்கா! அவதான் முதல்ல போவாள்!" சாருலதா கூறினாள்.

"தேனுகா இருக்க பயமேன்!" மீண்டும் அதையே கூறினாள் கன்னிகா.

பஸ் ஒரு குறிப்பிட்ட இடத்தை கடக்க சாருலதா தன்னையும் மறந்து, "ஹேய்.. அதோ இன்மொழி போன ஆட்டோ!"

மாணவிகள் அனைவரும் திருப்பிப் பார்க்க இன்மொழி, தயா, வயலெட் மூவருமே பரபரப்புடன் பின்னால் பார்ப்பதும், ஆட்டோக்காரனை துரிதப்படுத்துவதும், அவன் மக்கர் செய்து கொண்டிருந்த ஆட்டோவை கிளப்ப போராடிக் கொண்டிருந்தான்.

"ஓய்!"

சாருவும், கன்னிகாவும், மஞ்சுவும் அந்த ஆட்டோவைப் பார்த்து கையசைத்தபடிக் கடக்க, அந்த ஆரவாரத்தைக் கேட்டு, இன்மொழியும் அவள் தோழிகளும் திகைத்துப்போய் அந்த 5ஆம் எண் பஸ்ஸை பார்த்தனர்.

"அஞ்சாம் நம்பர் எண் இந்தப் பக்கம் எப்படி வந்தது?" தனக்குள் முணுமுணுத்தாள், இன்மொழி.

இன்மொழி குழுவினருக்கும் சேர்த்து டிக்கெட்டுக்களை எடுத்தாள் கன்னிகா. பிறகு மூவரும் மற்றவர்களுக்காகக் காத்திருந்தார்கள். தொங்கிப்போன முகத்துடன் ஒரு வழியாக வேறு ஒரு ஆட்டோவில் வந்து சேர்ந்தனர் இன்மொழி, வயலட் மற்றும் தயா.

"உங்களுக்கு எப்படி அஞ்சாம் நம்பர் பஸ் கிடைச்சுது?" இன்மொழி கேட்டாள்.

"நான்தான் சொன்னேனே! அதிர்ஷ்ட தேவதை தேனுகா இருக்கிற வரைக்கும் எல்லாம் நம்மளுக்கு சாதகமாத்தான் இருக்கும்!" வெற்றி எக்காளமிட்டாள் கன்னிகா.

"நடந்ததைப் பார்த்தா நம்பத்தான் வேண்டி இருக்கு.." தோல்வியுடன் ஒப்புக்கொண்டாள், இன்மொழி.

தேனுகா அனைவருக்கும் கோன் ஐஸ்க்ரீம் வாங்கினாள். இன்மொழியும், வயலட் மற்றும் தயாவும், தங்கள் கோன்களை வாங்கிக்கொண்டு லிஃப்டை நோக்கி நடந்தனர். ஏற்கெனவே லிஃப்ட்டை உபயோகிக்க எண்ணி ஒரு கும்பல் காத்திருந்தது. லிஃப்ட்டின் மேலே சிவப்பு ஒளி எண் இரண்டிலேயே மினுமினுத்துக் கொண்டிருந்தது. லிஃப்ட் நகரும் வழியாகவே காணோம்.

"லிஃப்ட் ஜாம் ஆகிவிட்டது!" என்று கும்பலில் ஒருவர் அறிவிக்க, வயலெட், கன்னிகாவைப் பார்த்துக் கத்தினாள்.

"கன்னிகா லிஃப்ட் ஜாம் ஆகிடுச்சு! நான், இன்மொழி தயாவோட முன்னாடி போறேன். நீங்க பே பண்ணிட்டு வாங்க!" என்றபடி கோன் ஐஸ்க்ரீமை சுவைத்தபடி மூவரும் மூன்று மாடி ஏறத் துவங்கினர்.

ஐஸ்க்ரீம் விற்பனையாளருக்கு பணம் கொடுத்து விட்டு, லிஃப்டை கடக்கும்போது லிஃப்ட்டின் கதவு திறந்து இவர்களை அழைத்தது.

தேனுகா, கன்னிகா, சாருலதா, மஞ்சு அது நால்வரும் அலுங்காமல், நலுங்காமல் மூன்றாம் மாடியை அடைந்து மற்றவர்களுக்காகக் காத்திருந்தனர். மூன்றாம் மாடியை அடைந்த இன்மொழியும் மற்றவர்களும் இவர்களைப் பார்த்ததும் உறைந்துபோய் நின்றனர்.

"என்னடி.. லிஃப்ட்லயா வந்தீங்க?" தயா கேட்டாள்

"ஆமா! தேனுகா இருக்க பயமேன்!" கன்னிகா சிரித்தபடி சொன்னதும் மற்றவர்களின் முகத்தில் ஈயாடவில்லை.

அனைவரும் தங்கள் இருக்கைகளை நோக்கி நடந்தனர். எப்போதும் ஒன்றாகவே இருக்கும் இன்மொழி, வயலெட் மற்றும் தயா முதல் மூன்று இருக்கைகளில் அமர்ந்து விட, அடுத்து மஞ்சு, சாருலதா, கன்னிகாவுக்கு பக்கத்து சீட்டில் அமரலாம் என்று முன்னேறிய தேனுகா சற்று தயங்கினாள், அவளது பக்கத்து இருக்கையில் ஒரு வாலிபன் அமர்ந்திருந்தான். சற்று கூர்ந்து கவனித்ததில் அவன் காமேஷ் என்பதை அறிந்ததும், அவளுடைய இதயம் படபடத்தது.

அவன் அருகில் அமர்ந்தா தான் படம் பார்க்கப் போறோம்? மனதினுள் ஒருவித உற்சாகம் தோன்ற, யோசித்தபடி நின்றாள்.

காமேஷ் மனதில் கோவில் மாமரத்தடி காட்சிதான் படமாக ஓடிக்கொண்டிருந்தது. 'ஏதோ சிறுபெண் பேசிவிட்டாள். அதற்காக தன் இரும்புக் கையால அவள் கன்னத்தை தாக்கியிருக்க வேண்டாம்! வலித்திருக்குமோ என்னவோ?' என்று தன்னைத் தானே நொந்து கொண்டபடி இருந்தவன் தன் பக்கத்து இருக்கையில் ஒரு பெண் உட்காரத் தயங்கி நின்று கொண்டிருப்பதை உணர்ந்தான்.

சட்டென்று தான் எழுந்து கொண்டு விச்சுவை எழுப்பி தன் இருக்கையில் அமர்த்திவிட்டு, பிறகு தான் விச்சுவின் இருக்கையில் அமர்ந்துக் கொண்டான். தேனுகா சற்றே ஏமாற்றத்துடன் தனது இருக்கையில் அமர்ந்தாள்.

படம் துவங்கி விட, அவளது மனம் திரைப்படத்தில் ஒன்றவில்லை. காமேஷ்வரனின் கம்பீரமானத் தோற்றத்தை ஓரக்கண்ணால் கவனித்தபடி இருந்தான். அவனோ முகத்தில் எவ்வித உணர்வுகளுமின்றி படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தேனுகா ஜாடையாக தன் வலப்புறமாக பார்க்க கன்னிகா படத்தில் ஆழ்ந்து போயிருந்தாள். இது அவளுக்கு சற்றே

தைரியத்தை தர, மெதுவாக விச்சுவின் பக்கமாக நிதானமாகச் சாய்ந்தாள். பிறகு மெதுவான குரலில் பேசினாள்.

"காமேஷ்! நான்தான் தேனுகா! என்னை மன்னிச்சுடுங்க! நான் உங்களை அப்படிப் பேசியிருக்கக் கூடாது!" என்று கூற, படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த காமேஷ், விச்சு அருகே அமர்ந்திருக்கும் பெண் தன்னுடன் பேச்சு கொடுப்பதைக் கண்டு திகைப்புடன் திரும்பியவன் அது தேனுகா என்பதை அறிந்ததும் அசந்து போனான்.

"காமேஷ்! என்னை மன்னிச்சுடுங்க! நான் உங்களை புண்படுத்தற மாதிரி பேசினது தப்பு." அவள் கண்களில் கண்ணீர் மினுமினுப்பதை இருளிலும் கண்டு விட்டான் காமேஷ். சின்ன விஷயத்தை தான்தான் பெரிது படுத்திவிட்டோம் என்கிற குற்ற உணர்ச்சியில் இருந்தவன். ஊரே தெய்வமாக கருதும் ஒரு பெண்ணை அழ வைத்து விட்டோம் என்பது புரிந்து அதிர்ந்தான்.

"நீதான் என்னை மன்னிக்கணும், தேனுகா நான் உன்னை அடிச்சது தப்பு!" என்றான்.

சரியாக பக்கத்தில் கிசுகிசு என பேச்சு சத்தம் கேட்க, கன்னிகா வியப்புடன் தேனுகாவை கிள்ளினாள்.

"என்னடி? யாரு அந்த பையன்? அவனோட என்ன பேச்சு உனக்கு?"

"ச்சீ! எங்க கணக்குப்பிள்ளை மகன். நான் சினிமாவுக்கு வந்ததை அவன் அப்பாகிட்டே சொல்லாதே! அப்புறம் என் குடும்பத்துக்கு விஷயம் தெரிஞ்சுடும்னு சொன்னேன்!" தேனுகா சமாளித்தாள்.

அப்போதுதான் கன்னிகா தேனுகாவின் முகத்தைக் கவனித்தாள்.

"ஏண்டி! இதுக்குப்போய் பயந்துகிட்டு அழுதியா?" என்றவள் குனிந்து காமேஷை அழைத்தாள்.

"ஏய் மிஸ்டர்! தேனுகாவை நான்தான் சினிமா பலவந்தமாக இழுத்துக்கிட்டு வந்தேன், அவ வீட்டுல போய் சொன்னா சொல்லிக்கோ! அவளோட அதிர்ஷ்டமே அவளை காப்பாத்திக்கும் தெரிஞ்சுக்கங்க!" என்று மிரட்டினாள், கன்னிகா.

"சும்மா இருடி!" தேனுகா அவளை அடக்கினாள்.

"சந்தேகமில்லாம உங்க தோழி அதிர்ஷ்டசாலிதான். நானும், இந்தப் பையன் விச்சுவும் வந்திருக்கிற டிக்கெட்டுலதான் உங்க தோழியோட அப்பாவும், அம்மாவும் வர்றதா இருந்தாங்க! கடைசி நிமிஷத்துல் அவங்களுக்கு வேற

வேலை வந்துட்டதால், அந்த டிக்கெட்டை என் அப்பாகிட்டே கொடுக்க, அவரு என்கிட்டே கொடுத்துட்டாரு! நியாயப்படி நாங்க உட்கார்ந்திருக்கிற சீட்டுல இவங்க அப்பா, அம்மாதான் உட்கார்ந்திருக்கணும்! இதுல இருந்தே தெரியுதுங்க உங்க தோழி பெரிய அதிர்ஷ்டசாலிதான்னு!" காமேஷ் அலக்ஷியமாக கூறினான்.

தேனுகா மௌனமாக தனது இருக்கையில் சாய்ந்தாள். காமேஷ், தேனுகா இருவருக்குமே படத்தில் மனம் ஒன்றவில்லை. இவ்வளவு பெரிய பேரழகி தன்னிடம் மன்னிப்பு கேட்டு தன்னை ஒரு பொருட்டாக நினைக்கிறாள் என்பதே அவனுக்கு அதிசயமாக இருந்தது. பக்கத்தில் இருந்த விச்சுவை கண்காணிப்பதைப் போல, தேனுகாவின் பக்கமாக திரும்பி அவளை அவ்வப்போது நோட்டம் விட்டான்.

தேனுகாவும் அவளை அவ்வப்போது திரும்பிப் பார்த்து கண்களால் அவனைப் படம் பிடித்துக் கொண்டிருந்தாள். ஒரு சமயத்தில் தேனுகாவின் கண்களும் காமேஷின் கண்களும் சந்தித்துவிட, பிறகு இரண்டு ஜோடி கண்களும் திரையின் திரும்பவேயில்லை.

# அத்தியாயம் 12

**ஈ**.சி.ஆர். சாலை!

கன்ஃப்ளுயன்ஸ் என்கிற அந்த பிரம்மாண்ட கட்டடத்தில் சுபாங்கியின் திருமணத்தை நடத்த நிச்சயித்திருந்தார் நித்யமூர்த்தி. தில்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், குஜராத் என்று வடக்கு, மேற்கு, கிழக்கு என்று பல பகுதிகளில் இருந்தும் அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் கிரிக்கெட் வீரர்கள், நடிக-நடிகைகள் இதர விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவர்கள், பத்திரிக்கையாளர்கள், சமூக ஆர்வலர்கள் என்று பல செலிபிரிட்டிகள் வரக்கூடும் என்பதால் 'ஃபிஷர்மேன்ஸ் கேவ்'வில் துவங்கி, மஹாபலிபுரம் வரையில் இருந்த ரிஸார்ட்டுகள், ஹோட்டல்கள், கெஸ்ட் ஹவுஸ்கள் எல்லாவற்றையும் வளைத்துப் போட்டார் நித்யமூர்த்தி.

இன்டீரியர் டெகரேஷன் நிறுவனமான தனது 'நோவா' அலுவலகத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டு மணமேடையை பிரம்மாண்டமாக அலங்கரித்தாள் சுபாங்கி.

கல்யாண நாள் நெருங்க, நித்யமூர்த்தி நிகேத்தை தன் மகள் நிராகரித்துவிட்ட ஏமாற்றம் பின்னுக்கு நகர்ந்து கொள்ள,

தன் ஒரே மகள் திருமணம் என்பதால் ஆடம்பரமாக அதனை நடத்துவதற்கு புது யுக்திகளைக் கையாண்டார்.

கல்யாண அரங்கத்துக்குள் நுழையும் வாயிலருகே ஒரு புத்தம் புதிய ஆடி Q7 காரை வாங்கி நிறுத்தியிருந்தார். சிவப்பு நிறத்தில் மினுமினுத்த அந்தக் காரைக் கண்டு மலைத்துப் போய் நின்றாள், சுபாங்கி.

"என்ன டாடி இது?"

"புதுமணத் தம்பதிகளுக்கு என்னோட பரிசு!" என்று நித்யமூர்த்தி சொன்னதும், நெகிழ்ந்து போய் அவரை கட்டிக்கொண்டாள், சுபாங்கி.

திருமணத்திற்கு இரண்டு நாளைக்கு முன்பே பலவந்தமாக டாக்டர் நரேனை தன்னுடன் தங்க வைத்துக் கொண்டு விட்டார், நித்யமூர்த்தி.

"எனக்கு கல்யாண வீட்டுல எல்லாம் தங்கி பழக்கமில்லைடா! நான் முகூர்த்த டைம்ல வரேனே!" கெஞ்சிப் பார்த்து விட்டார் நரேன்.

"நத்திங் டூயிங்! இந்தக் கல்யாணத்துக்கே, நீ தான் காரணம்! உன்னை விடமாட்டேன்!" என்று டாக்டர் நரேனையும், தங்கை வித்யாவதியையும் கடத்திக் கொண்டு

வந்து விட்டார். நரேனின் அக்கா ஹம்ஸவர்த்தினியையும், ப்ரொஃபசர் வனமாலியையும் மகள் சுபாங்கியுடன் தானே நேரில் சென்று திருமணத்திற்கு அழைத்தார்.

தன் மகன் நிகேத்தை சுபாங்கி திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டாளே என்கிற ஆதங்கத்தை மறந்துதான் வித்யாவதி திருமண நிகழ்வுகளில் கலந்து கொண்டாள். ஆனால் அண்ணன் நித்தி தண்ணீராக பணத்தை செலவழிப்பதைக் கண்டதும், மீண்டும் அவ்வப்போது அவளுள் ஏமாற்றம் தலைத் தூக்கியது.

சமையல்கார நாகரத்னம்மா பரபரப்புடன் இங்குமங்கும் ஓடி கல்யாண வேலைகளை செய்து கொண்டிருந்தாள். அதைக் கண்டதும் புருவத்தை உயர்த்தினாள், வித்யாவதி.

"என்ன மாயம் இது? எக்ஸ்ட்ராவா ஒரு பாயசம் செய்ய சொன்னாலே, முகத்தைத் தூக்கி வச்சுப்பா! இப்ப என்னடான்னா, ஓடியாடி வேலை செய்யறாளே, அதுவும் சிரிச்சுட்டே!" வித்யாவதி கேட்டாள்.

"மாப்பிள்ளைக்கு ஆடி கார் வாங்கறதுக்கு முன்னாடி ஆடி சேலுல அந்தம்மாவுக்கு பதினஞ்சாயிரம் ரூபாய்ல ஒரு பட்டுபுடவை வாங்கி கொடுத்துட்டேன்! போனஸ் ஒரு 25,000

ரூபாய்! அதனாலதான் இந்த மாற்றம்!" நித்யமூர்த்தி சொல்ல, சுபாங்கி கலகலவென்று சிரித்தாள்.

**க**ல்யாண நாள் வந்தது. மாப்பிள்ளை தரப்பில் அவனுக்கு மிகவும் நெருக்கமான மும்பை கிரிக்கெட் ப்ளேயர் கேதன் ஷா, நடிகர் அனுப் மற்றும் தான்யா தான் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

ரிப்பனால் கட்டப்பட்டு பூங்கொத்து இணைக்கப்பட்டு வெளியே நிறுத்தப்பட்டிருந்த அந்த ஆடிQ7னை தான்யா, அனுப் கேதன் மூவருமே சுற்றி சுற்றி பார்த்தார்கள்.

அப்போதே தானும், சந்தீப்பும் அந்த காரில் பவன் வருவது போல் கனவு கண்டாள், தான்யா சௌத்ரி.

"மாப்பிள்ளைக்கு ஆடி கார் பரிசு பாரு!" சற்றே பொறாமையுடன் கேதன் ஷாவிடம் கூறினான் அனுப். கிண்டலாக சிரித்தான் கேதன்.

"சந்தீப் கிரிக்கெட் விளையாடி ஆடிக் காரை ஜெயிக்க முடியாதுன்னு அவன் மாமனாருக்கு தெரியும் போல இருக்கு! அதுதான் கல்யாண பரிசாவே கொடுத்துட்டார்!" என்றதும்

அனுப் கடகடவென்று சிரித்தான். முகூர்த்த நேரம் நெருங்கிவிட்டது. டர்பன் கட்டிய மாப்பிள்ளை சந்தீப் வெண்பட்டு வேஷ்டி சட்டையில் மன்மதனை போல் காத்திருக்க, சென்னை, மும்பை உள்ளிட்ட அத்தனை அழகு நிபுணர்களாலும் சேர்ந்து அலங்கரிக்கப்பட்ட சுபாங்கி ஒரு தேவலோக கன்னியைப்போல் மேடைக்கு வந்தாள்.

"சந்தீப்புக்கு மச்சம்பா! வாசலுல ஆடி! உள்ளே தேவதையா ஒரு லேடி! மொத்தத்துல செம ஜோடி!" கிரிக்கெட் நண்பர்கள் கிண்டலடித்துக் கொண்டிருந்தனர்.

கல்யாணத்திற்கு தான்யா நடித்த இந்திப்பட தயாரிப்பாளர் பொப்பட்லால் பூலேயும் வந்திருந்தார்.

அப்போது, சுபாங்கி, சந்தீப் மணமேடையில் உட்கார்ந்திருக்க, அவர்கள் பின்பாக முழங்காலிட்டபடி ஃபோட்டோவுக்கு போஸ் கொடுத்துக் கொண்டிருந்தாள் தான்யா சௌத்ரி,

தான்யாவின் பி.ஏ. சாய்ராம் ஓடோடி வந்தான். "மேடம் பொப்பட்லால் வர்றாரு!" என்றவுடன் தான்யா நக்கலான சிரிப்புடன் சந்தீப்பை பார்த்தாள்.

"சந்தீப் வி.வி.ஐ.பி. கெஸ்ட் வர்றாராம்! பொப்பட்லால் பூலே! அவரும் அவர் அண்ணன் ஷ்யாம்லால் பலே

இல்லேனா இந்த கல்யாணம் நடந்திருக்காது இல்லை!" என்று அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக சொல்லிவிட்டு, பொப்பட்லாலை வரவேற்கச் சென்றாள், தான்யா.

முகூர்த்த நேரம் நெருங்க, சந்தீப் சுபாங்கியின் கழுத்தில் மங்கல நாணைக் கட்டினான்.

சரியாக பொப்பட்லாலுடன் மணமேடையை நோக்கி நடந்த தான்யாவின் கண்களில் ராக்ஷஸ மானிட்டரில் அந்தக் காட்சித் தென்பட 'மளுக்' கென்று ஏதோ ஒன்று அவளுள் முறிந்தது.

சந்தீப் சுபாங்கியை திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதி தந்திருக்கக்கூடாதோ! ஆயிரம்தான் இருந்தாலும் இனி அவன் சுபாங்கியின் கணவன். சந்தீப் ஷங்கராக இவளைத் தேடி வந்தாலும், ஊர் சுபாங்கியின் கணவனுடன் இவள் ஊர் சுற்றுவதாகத்தானே சொல்லும்?

இதயத்தில் ஏற்பட்ட கனத்தை அவள் உணர்ந்தாள். அதே சமயத்தில் மற்றொரு இதயமும் அந்த திருமண காட்சியைப் பார்த்து, மன உளைச்சலில் தவித்துக் கொண்டிருந்தது.

வித்யாவதி தனக்கும், நித்திக்கும் சொந்த மாமனான ராகவானந்தத்திடம் புலம்பிக் கொண்டிருந்தாள்.

"அந்த சந்தீப் உட்கார்ந்து இருக்கிற இடத்துல நியாயமா என் பிள்ளை நிகேத் உட்கார்ந்திருக்கணும். எல்லாம் தலைவிதி!" என்று புலம்பிக் கொண்டிருந்தாள்.

"யார் பெண்டாட்டியை யார் கட்ட முடியும் வித்யா, கடவுள் போட்ட முடிச்சு எதுவோ அதுதான் நடக்கும்.." என்று அவளைச் சமாதானப்படுத்தினார் ராகவானந்தம்.

"இந்த கல்யாணம் நடக்கிறதுக்கு நீதான் காரணம்! நீ முதலுல தம்பதிகளை ஆசிர்வாதம் பண்ணுடா!" நித்யமூர்த்தி நரேந்திரநாத்தை மேடைக்கு அழைத்தார்.

தான்யா, நரேனை அலக்ஷியமாகப் பார்த்தாள். 'இந்த கல்யாணத்தை நடத்த, இவரா காரணம். பொப்பட்லாலும், அவரு அண்ணனும்தான் காரணம்!' தான்யா மனத்திற்குள் நினைத்தாள்.

'இந்த கல்யாணம் நடந்ததுக்கு டாக்டர் நரேன் காரணம் இல்லை. எங்களை ரகசியமா, ஃபோட்டோ எடுத்து உசுப்பி விட்டு, பத்திரிகைகள்ல ஃபோட்டோவை வெளியிட்டு, என்னை கேவலப்படுத்த நினைத்த வானேஸா கன்சஸோதான் உண்மையான காரணம்!' சுபாங்கி மனதினுள் எண்ணினாள்.

**அ**ன்று இரவு -

கல்யாணம் முடிந்ததா என்பதை விசாரிக்க நிகேத், தாய்க்கு போன் செய்தான். கல்யாண விவரங்களை வித்யாவதியிடம் கேட்டறிந்தான், நிகேத்,

"ரிசப்ஷனுக்கு முன்னோடி அந்த ஆடி காருல தம்பதிகள் ஊர்வலமாக வந்தாடா! ஈ.சி.ஆர். ரோடே அதிர்ந்து போச்சுடா!" என்று வித்யா சொல்லிவிட்டு, மகனை சமாதானப்படுத்த எண்ணினாள்.

"விட்டுத்தள்ளுடா நிகேத்! யார் பெண்டாட்டியை யார் கட்ட முடியும்?"

காலையில் மாமன் ராகவானந்தம் உதிர்த்திருந்த அதே வசனத்தை ஒப்புவித்தாள் வித்யாவதி,

"இல்லம்மா! சந்தீப் பெண்டாட்டியை இந்த நிகேத் கட்டி காட்டுவாம்மா!" என்றபடி ஃபோனை கட் செய்திருந்தான் நிகேத்.

அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் தான் மொபைலை ஸ்விட்ச் ஆஃப் செய்யக்கூட மறந்து திக்கபிரமை பிடித்தவளாக நின்றிருந்தாள் வித்யாவதி.

# அத்தியாயம் 13

**கா**லேஜின் சேர்மன் மறைந்துவிட்டார் அவரது அஞ்சலி கூட்டத்திற்கு அனைவரும் வெள்ளை ஆடைகளை அணிந்து வர வேண்டும் என்று சட்டம் பிறப்பித்து விட்டது காலேஜ் நிர்வாகம்.

தன்னிடமிருந்த பழைய வெள்ளைத் தாவணியை தேடி எடுத்தாள் தேனுகா. தாவணி சற்றே பழுப்பேறி யிருந்தது என்பதால் அதனை அங்காயியிடம் கொடுத்து துவைத்து, திறந்த வெளி பால்கனியில் உலர்த்த சொல்லியிருந்தாள்.

அன்றிரவு படுக்கப்போகும் போதுதான் மறுநாள் வெள்ளைத் தாவணி தேவை என்பதனை உணர்ந்து, பால்கனிக்கு சென்றாள் தேனுகா.

கொடியில் தாவணியை காணவில்லை. அதிலதானே அங்காயியை உலர்த்தச் சொல்லியிருந்தேன். யோசித்தபடி பால்கனியிலிருந்து கீழே எட்டிப்பார்த்தாள். பாஞ்சாலி பாட்டியின் ரூம் வெளியே இருந்த துணி துவைக்கும் கல்லின் மீது விழுந்துக் கிடந்தது தாவணி. காற்றில் பறந்து சென்று விழுந்திருக்கும்.

மீண்டும் உள்ளே சென்ற தேனுகா, சமையலறை விளக்கை அணைத்து விட்டு வெளியே வந்த அம்மா தமயந்தியை பார்த்தாள்.

"அம்மா! வெள்ளைத்தாவணி கீழே பாட்டி ரூம் துவைக்கிற கல்லு மேல கிடக்குது! அங்கண்ணிகிட்டே சொல்லி எடுத்து வைக்க சொல்லும்மா! காலையில வாங்கிக்கிறேன்.." தேனுகா சொன்னாள்.

அங்கண்ணியிடம் பேசுவதற்காக இன்டர்காமை நோக்கி நடந்த தமயந்தி சட்டென நின்றாள்.

"அங்கண்ணி எங்கேடி இருக்காங்க? அங்கண்ணியும், பெரிய பெரியப்பாவும், திருப்பதிசாரம் கோவிலுக்கு போயிருக்காங்க! நாளை ராவைக்குத்தான் வருவாங்க! அங்காயிதான் பாட்டிக்கு துணையா படுத்திருப்பா! நீ போய் இப்பவே தாவணியை எடுத்துட்டு வந்துடு! நாளை காலையில களேபரமா போய்டும்!" என்றபடி தமயந்தி படுக்கையறையை நோக்கி நடந்தாள்.

தேனுகா தங்கள் குடியிருப்பு கதவை திறந்து கொண்டு, லிஃப்டில் கீழே இறங்கினாள்.

அங்காயி தோட்டத்தில் மறுநாள் பூஜைக்காக பவழமல்லியைச் சேகரித்துக் கொண்டிருந்தாள். வழக்கமாக

அங்கண்ணி செய்யும் வேலை அது! அவள் தன் ஓரகத்தி கற்பகத்திடம் அந்த வேலையைச் செய்யும்படி சொல்லியிருந்தாள். பூப்பறிப்பதற்காக கீழே செல்வதற்கு சோம்பிய கற்பகம், இன்டர்காம் மூலமாக அங்காயியை அழைத்து அந்தப் பணியை செய்யச் சொல்லியிருந்தாள்.

தேனுகா தன் தாவணியை எடுப்பதற்காக கீழ் போர்ஷனுள் நுழைந்தபோது அங்கே ஆள் அரவரமின்றி ஹோவென்று இருந்தது. ஹாலைக் கடந்து போர்ஷனின் பின்புறத்தை நோக்கிச் சென்றாள். தாழ்வாரத்தை கடந்து பாஞ்சாலிப் பாட்டியின் அறை வாசலில் இருந்த தாவணியை எடுக்க குனிந்த போதுதான் கிசுகிசுவென்ற அந்த குரல் கேட்டது!

"ரேணுகா.. வந்துட்டியா?"

திகைத்துப்போய் திரும்பிப் பார்த்தாள், தேனுகா. பாஞ்சாலிப் பாட்டிதான் இவளைப் பார்த்து மலர்ச்சியால் கண்கள் விரிந்திருக்க, முகமெல்லாம் ஆனந்தம் கொப்பளிக்க, வாய் நிறைய புன்னகையுடன் ஜன்னல் கம்பி வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"பாட்டி! நான் ரேணுகா அத்தை இல்லை! தேனுகா! உன் கடைசி மகன் குணசேகரன் பொண்ணு!" தேனுகா முறுவலித்தபடி ஜன்னல் அருகே சென்றாள்.

"தெரியும் செல்லம்! என்னைப் பொறுத்தவரை என் ரேணுகாதான் திரும்பி உன் ரூபத்துல வந்திருக்கா! வாடி செல்லம்! உள்ளே வந்து பாட்டியோட ரெண்டு வார்த்தை பேசிட்டு போ! உன்னை நான் கொஞ்சியதே இல்லையே!" உன் பெரியம்மா அங்கண்ணிதான் உன்னை என்கிட்டேயே சேர்க்கலியே!

பாஞ்சாலியின் ஏக்கம் தொனித்த குரல் தேனுகாவை உலுக்கி விட்டது. வெள்ளைத் தாவணியை கையில் எடுத்துக் கொண்டு, மறுபக்கம் இருந்த அந்த அறையின் வாயிலருகே சென்றாள்.

வெளிபுறம் தாழ் போட்டிருந்தது. தோட்டத்துக்கு செல்லும்முன் அங்காயி பாட்டி வெளியே வரக்கூடாது என்பதற்காக தாழ் போட்டிருக்கக்கூடும்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த தேனுகாவை ஓடோடி வந்து வாரி அணைத்துக் கொண்டாள் பாஞ்சாலி! அவளை கட்டி மாறி மாறி முத்தமழையாக பொழிந்துக்

கொண்டிருந்தாள். அவளது உணர்ச்சிகரமான பாசப்பிடியில் திக்கு முக்காடிப் போனாள், தேனுகா.

"ரேணுகா! ஏண்டி என்கிட்டே சொல்லாம போனே! நானும் கூட வந்திருப்பேன் இல்லே!" கதறியழுத பாஞ்சாலியை சமாதானப்படுத்த, பாட்டியை அணைத்தபடி ஆறுதல் வார்த்தைகளை சொன்னாள் தேனுகா.

"பாட்டி! ஏன் பாட்டி அழறே! அத்தை தனக்கு மனசுக்குப் பிடிச்சவனோடதானே போனா? உன்னை மாதிரி கோபக்காரப் புருஷனோட பயந்து பயந்து தினம் சாகாம, சந்தோஷமான வாழ்க்கையை தேடித்தானே போனா? அதுக்கு போயி ஏன் அழறே?" தேனுகா கேட்க, அழுகையால் சிவந்த கண்களுடன் அவளை நோக்கினாள் பாஞ்சாலி.

"ரேணுகாவுக்கு என்ன நடந்ததுன்னு உனக்கு தெரியுமா? தேனுகா!"

பாட்டி! இவ்வளவு தெளிவா பேசுவதைக் கேட்டதும், திகைத்துப் போனாள் தேனுகா.

இவ்வளவு தெளிவாகப் பேசும் பாட்டியை ஏன் அங்கண்ணியும் மற்றவர்களும் பைத்தியம் என்று முத்திரை குத்தி இருட்டு அறையில் தள்ளியிருக்கின்றனர்?

"அத்தை யாரையோ காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்கன்னு தெரியும். அதனால் அவங்களோட மஹிமைகளை இழந்துட்டாங்கன்னு சொல்றாங்க!" தேனுகா சொன்னாள்.

"ஆமாண்டி செல்லம்! எல்லாம் அந்த பாழாய்ப் போன மஹிமைகளாலதான் நம்ம குடும்பத்துக்கு இந்த நிலை! யாருக்கு வேணும் மங்களங்களும், சௌபாக்கியங்களும்! என்னோட ஆசை இந்த குடும்பம் நாசமாகப் போகணும். நீ இந்த குடும்பத்துல இருக்காதே! ஓடிப்போயிடு! எவனையாவது மனசுக்குப் பிடிச்சவனைக் கல்யாணம் செஞ்சுக்கோ! இந்த பெரிய வீடு பாவப்பட்ட இடம்! இதுலேர்ந்து சல்லிகாசு கூட உன்னோட எடுத்துகிட்டுப் போகாதே! எங்கேயாவது கண்காணாத இடத்துல உன் புருஷன் சம்பாரிச்சு போடறதை வச்சுகிட்டு, சந்தோஷமா குடும்பம் நடத்து!"

"பாட்டி!"

"தெரியுமில்லை! பாட்டி பெரிய பணக்கார வீட்டுலதான் பிறந்தேன்! பரதநாட்டியம் ஆடுவேன்! பாட்டு பாடுவேன்! ஓவியம் வரைவேன்! இங்கிலீஷ் படிப்பேன்! சமைப்பேன்! ரங்கோலி போடுவேன்! கவிதை எழுதுவேன்! ஆனா எப்ப உன் பாட்டன் தான் தோணிய கல்யாணம் பண்ணிக்கிட்டேனோ

எல்லாம் போச்சு! சந்தேகம் பிடிச்சவன்! அவன் இருக்கிற வரைக்கும் நான் அழகா இருந்ததால் பூட்டின ரூம் உள்ளேயே வச்சிருந்தான். இப்ப அவன் புள்ளைங்க என்னை பைத்தியம்னு ரூமுக்குள்ளே பூட்டி வச்சிருக்கானுங்க! ஆக என் வாழ்க்கையே பூட்டின் ரூமுக்குள்ள கழிஞ்சு போச்சு! செல்லம்மா! உன் கதியும் அப்படி ஆக வேணாம்மா! நீ இந்த வீட்டுல இருந்தாக்க, உன் அத்தை போன இடத்துக்கே உன்னையும் அனுப்பிடுவாங்கம்மா! வேணாம்! கிளம்பிடு ஓடிப்போயிடு..!" பாஞ்சாலி கதற, அவளது பிடியில் சிக்குண்டிருந்த தேனுகா பாட்டியின் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

"அழாதேப் பாட்டி! ரேணுகா அத்தை எங்கே போனாங்க!" தேனுகா கேட்டதும், பாஞ்சாலியின் தேகம் குலுங்கியது. விம்மல் அதிகரித்தது. துக்கத்தால் குரல் நடுங்க தேனுகாவின் தோளில் முகவாயை வைத்து, கட்டிலின் மீது கிடந்த ரேணுகாவின் புகைப்படத்தைப் பார்த்தாள்.

"ரேணுகா எங்கேயும் போகலை, செல்லம்! பலவந்தமா அவளை போக வச்சாங்க, இந்தப் படுபாவிங்க!" என்றாள்.

தேனுகா அதிர்ந்தாள்.

"எங்கே பாட்டி?"

"மேலோகத்துக்கு! நாலு அண்ணன் தம்பி சேர்ந்து அவளை கொன்னுட்டாங்க!"

பாஞ்சாலி சொன்னதும் உறைந்துப் போனாள் தேனுகா.

"அதுக்குத்தான் சொல்றேன் செல்லம்! அவள மாதிரியே இருக்கே! ரேணுகான்னு அவ பெயர் மாதிரி தேனுகான்னு உனக்கு பெயர் இருக்கு! அவளை மாதிரியே இந்தப் பாவிங்க உன்னையும் கொன்னுடுவாங்க. ஓடிப்போயிடு! நீ யாரையாவது காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கோ! என்னடா, பாட்டியே இப்படி தப்பா சொல்லித்தராளேன்னு நினைக்காதே! இவனுக உன்னை கல்யாணம் செஞ்சு தரமாட்டாங்க! ஆமா!.. நீ யாரையாவது மனசுல நினைச்சுகிட்டு இருக்கியா?" பாஞ்சாலி கேட்டாள்.

தேனுகாவின் கண் முன்பாக காமேஷின் முகம் நிழலாடியது.

"ஆமாம் பாட்டி!" தேனுகா சற்றே வெட்கத்துடன் கூறினாள்.

"அப்படியாடி கண்ணே! அவனை குரங்கு குட்டி, குரங்கை பிடிச்சுகிற மாதிரி கெட்டியா பிடிச்சுக்க! பிடியை விடாதே!" பாட்டி சொன்னாள்.

'அனுமார்' என்று சொன்னதற்கு காமேஷிடம் அடி வாங்கியது நினைவுக்கு வர தேனுகா, தன் கன்னத்தை தடவியபடி சிரித்துக் கொண்டாள். பாட்டி சொன்னது போல், குரங்கு என்று அவன் முன்பாக கூறினால் என்ன நடக்கும்?

பட்டியின் அணைப்பில் தேனுகா யோசித்துக் கொண்டிருக்க, அங்காயி உள்ளே வந்தாள்.

பாட்டியும், பேத்தியும் பாசப்பிணைப்பில் சிக்குண்டு இருப்பதைக் கண்டதும், தன்னையும் அறியாமல் அங்காயியின் கண்களில் கரகரவென நீர் பெருகியது.

# அத்தியாயம் 14

"**பே**ப்பர் ஐயர் பைக் ஓட்டிட்டு போகச்சே திருப்பத்துல விழுந்துட்டார்..!" ஐயர் வீட்டு வேலைக்காரி காத்தாயி ஓடி வந்து தகவலைச் சொன்னாள்.

காமேஷ் உடனே அவர் வீட்டுக்கு ஓடிச் சென்றான். முழங்கால், பாதம் எல்லாம் ரத்தம் வழிய கயிற்றுக் கட்டிலில் கிடந்தார், ஐயர்.

"டர்னிங் ல ஸ்கிட் ஆயிடுத்துடா காமேஷ்! நான் பத்திரமாதான் போவேன்! என்னவோ.. போதாத வேளை!" என்று தன்னையே நொந்து கொண்டார்.

"நிலம் வித்து வந்த பணத்தை பாங்க்ல கட்டறதுக்காக போனார்டா, காமேஷ்! இந்த மாதிரி ஆயிடுத்து! நல்லவேளை! ஆத்துகிட்டேயே விழுந்தார். நான் பார்க்கவே போச்சு! பணப் பையை ஓடிப்போய் பத்திரப் படுத்தினேன். வழியில வேற எங்கேயாவது விழுந்திருந்தார்னா.. என்னத்துக்கு ஆறது?" விசாலாக்ஷி புலம்பினாள்.

"ஏண்டி சாலா! முதலுல பணப்பையைப் பத்திரப் படுத்தினேன்னு காமேஷ்கிட்ட பெருமையா சொல்றியே,

மாமிக்கு மாமாவோட பணம்தான் முக்கியம்னு காமேஷ் நினைச்சுக்க மாட்டானா?" ஐயர் கேட்டார்.

"நான் அப்படி நினைச்சுக்க மாட்டேன் மாமா! மாமி பணத்தை எடுத்து பத்திரப்படுத்தலேன்னா, பணம் போச்சேன்னு மாமியை நீங்க வாட்டி எடுத்துடுவீங்களே! அவங்க கரெக்டா தான் செஞ்சிருக்காங்க!" காமேஷ் சொன்னான்.

"நன்னா சொல்லுடா!" மாமி, ஐயரை முறைத்தாள்.

"காமேஷ்! எப்பவுமே பதவியில இருக்கிற பொம்மனாட்டிகளை சப்போர்ட் பண்ணாதே! காரணம், பொம்மனாட்டிகளுக்கு பதவிப் போச்சுன்னா, எதிரிகள் அவாளை ஒண்ணும் பண்ணமாட்டா! அவாளை சப்போர்ட் பண்ண ஆம்பளைங்களைத்தான் பழி தீர்ப்பான்கள்!" மாமா சொல்ல காமேஷ் சிரித்துக் கொண்டான். அடிபட்ட நேரத்திலும் கூட மாமாவுக்கு நகைச்சுவை தான் வருகிறது.

"மாமா! நிலம் வித்த பணத்தை என் கையில கொடுங்க! நான் பாங்க்ல கட்டிடறேன்!" காமேஷ் சொன்னான்.

"தொகை பெரிசுடா அஞ்சு லக்ஷம்! ஆதார், பான், ரேஷன், வோட்டர் ஐடி, நான் ஸ்கூலுல படிக்கச்சே கொடுத்த ரிப்போர்ட் கார்ட் எல்லாத்தையும் தரேன். போய் பாங்க்ல

கட்டிடறியா? பார்த்து.. உனக்கு தனாதிபதி செவ்வாய் விரயத்துல இருக்காம். கவனமாக போ!" என்றபடி மாமியைப் பார்க்க, மாமி எல்.ஜி. பெருங்காயம் என்று போட்டிருந்த மஞ்சம் துணிப் பையில் சுற்றியிருந்த பணத்தை அவனிடம் நீட்டினாள்.

"மாமா! ஒரு லெதர் பேக்கை கொடுங்களேன். ஸ்டைலா பணத்தை எடுத்துட்டுப் போறேன்!" காமேஷ் சொன்னான்.

"லெதர் பேக்னா, நீ பணம் எடுத்துண்டு போறேன்னு ஊருக்கே தெரியும். இந்த மாதிரி துணிப்பையில எடுத்துட்டு போனாதான் நீ நாஸ்தா வாங்கிட்டு போறேன்னு அவனவன் நினைப்பான்!" ஐயர் சொல்ல சிரித்தபடி காமேஷ் வெளியே வரவும், டாக்டர் ஐங்கரன் உள்ளே வரவும் சரியாக இருந்தது. காத்தாயி சென்று டாக்டரை அழைத்திருப்பாள்.

பைக் சாவியை எடுத்துக்கொண்டு பைக்கில் ஏறியவன், தன் சட்டையினுள் பையை சொறுகிக் கொண்டு பைக்கை கிளப்பினான். டௌன் பாங்கை நோக்கி பயணித்தான்.

தேனுகாவை சினிமா தியேட்டரில் சந்தித்த பிறகு அவன் மனதில் பலவித கேள்விகள் எதிரொலிக்கத் தொடங்கியிருந்தன. தேனுகாவின் பார்வையும், உடற் மொழியையும் பார்த்தால், அவள் அவனை நெருங்கி வருவதற்கு ஆசைப்படுபவளை

போன்று தோன்றுகிறது. பெரிய வீட்டுப் பெண் என்கிற ஹோராவில் செல்வச் செழிப்பையும், நேர்மறை நிகழ்வுகளைகுமே வாழ்க்கையில் சந்தித்திருப்பவள். கோவூர் சிறு வட்டத்தினுள் மட்டுமே உழன்று வருபவள். அந்த வட்டத்தினை தாண்டி வாழ்க்கையில் துன்பங்கள், போராட்டங்கள், சவால்கள் எதையுமே சந்திக்காமல் எல்லாம் எளிதாகவே கிடைக்கும் வாழ்க்கையை அனுபவித்து வருபவள். சோகம், சச்சரவு, வருத்தங்களை அதிகம் உணர்ந்திராதவள். அந்த வட்டத்தை உடைத்துக் கொண்டு இவனை நோக்கி நகர்ந்து வரமுடியுமா?

அப்படி வர முடிந்தாலும், இவனால் அவளை வரவேற்க முடியுமா?

அந்தக் கண் பார்வையின் மூலம் அவள் இவனுக்கு ஏதோ உணர்த்த முயல்வதை உணர்ந்திருந்தான். காமேஷ்! படபடக்கும் விழிகள் இவனைப் பார்த்ததும் ஆர்வம் கொள்கின்றன. அந்த ஆர்வம் காதலாக மாறி கனவாக மாறுவதற்குள், இவன் அவளுக்கு இதெல்லாம் சாத்தியப் படாது என்று தனது கண்பார்வையாலேயே உணர்த்த வேண்டும். காதலில் சிக்கி காயப்பட்டால் அதனை ஏற்கும் பக்குவம்கூட அவளிடம் இல்லை என்கிறபோது காதல் போன்ற விஷப்பரீட்சைகளில் அந்தப்பெண் ஈடுபடுவது

நல்லதல்ல. இனி ஒரு முறை தன் பக்கமாக அவள் அந்த பார்வையை வீசுவதற்கு இடம் தருவது நல்லதல்ல. இனி அவள் பார்வையில் படாமல் இருப்பதே நல்லது என்று நினைத்தபடி பைக்கை ஓட்டிக் கொண்டிருந்த காமேஷ் திடீரென்று சாலையைக் கடக்கும் அந்தக் கிழவியை கண்டு திடுக்கிட்டான்.

தன்னை நோக்கி பறந்து வந்த பைக்கைக் கண்டு அந்தக் கிழவி பரபரப்படைந்தாள். சாலை மறுபக்கம் போவதா இல்லை வந்த வழியே போவதா என்று குழம்பி, இப்படியும் அப்படியுமாக இருமுறை சென்று, பயத்தால் அப்படியே சாலையில் விழுந்து விட்டாள்.

சடர்ன் பிரேக் போட்டு பைக்கை நிறுத்தி காமேஷ், வண்டியை ஓரமாக திருப்பி, சைட் ஸ்டாண்டை போட்டு வண்டியை சரித்து வைத்தான். பிறகு கிழவியிடம் ஓடிப்போய் அவளைத் தூக்கி நிறுத்தினான்.

"என்ன பாட்டி! அடிபட்டுடுச்சா?" கரிசனத்துடன் அவள் சேலையில் ஒட்டியிருந்த தெருப்புழுதியை தட்டி விட்டான்!

"இல்லேப்பா கண்ணு! பயந்து போய் விழுந்துட்டேன், அவ்வளவுதான்!" கிழவி சொன்னாள்.

"வயசான காலத்துல வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டியதுதானே பாட்டி!" காமேஷ் சொல்ல பாட்டி பொக்கை வாயை திறந்து சிரித்தாள்.

"புருஷன்காரன் சீக்காளி! பிள்ளைக்குட்டி கிடையாது! நான் பனங்கிழங்கை வித்து ரெண்டு பேரோட வவுத்தை கழுவறேன்! பனங்கிழங்கு கூடையை எடுக்கத்தான் போறேன்!" சாலையில் எதிர்புறம் இருந்த கூடையை காட்டினாள்.

"என்னால போய் மார்க்கெட்ல வாங்க முடியாது கண்ணு! கோவூருக்கு சரக்கு எடுத்துக்கிட்டு போற வண்டிக்காரன் கூடையை அங்கே இறக்கிட்டு போயிடுவான்! நான் போய் எடுத்துக்குவேன்!" என்றாள் கிழவி.

காமேஷ் ரோடை க்ராஸ் செய்து கூடையை கிழவியிடம் கொண்டு வந்து தந்தான்.

"நீ க்ராஸ் பண்ணாத பாட்டி! யாரையாவது எடுத்துக்கிட்டு வந்து தரச் சொல்லு!" என்ற காமேஷ் பாட்டியிடம் பத்து ரூபா தாள் ஒன்றை நீட்டினான்.

"பனங்கிழங்கு வாங்கிக்கிறியா?" பாட்டி கேட்க, வேண்டாம் என்று தலையசைத்தபடி கிளம்பிய காமேஷ், கால் மணி நேரத்தில் பாங்கை அடைந்து விட்டான். பைக்கை

ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியவன் மஞ்சப் பையை எடுப்பதற்காக, சட்டையினுள் கையை விட்டான்.

சட்டையினுள் பை இருக்கவில்லை. பரபரப்புடன் சட்டையை தட்டிப் பார்த்தான். 'ம்ஹூம்! பை அவன் வைத்திருந்த இடத்தில் இல்லை. கீழே விழுந்திருக்கிறதா?' என்று சுற்று முற்றும் பார்த்தான்.

பை காணப்படவில்லை.

காமேஷின் வாய் உலர்ந்து போனது. பணம் காணோம் என்பதைவிட இவ்வளவு காலம் இவன் மீது பேப்பர் ஐயர் வைத்திருந்த 'நம்பிக்கை என்னவாகும்?' என்கிற கவலை தோன்ற பைக்கை மீண்டும் கிளப்பிக்கொண்டு வந்த வழியே நிதானமாக போனான். வழியில் கிழவி விழுந்த இடத்திலும், பார்த்துக் கொண்டே போனான். கிழவியின் கூடை அவன் வைத்த இடத்திலேயே இருந்தது. ஆனால் கிழவியைக் காணவில்லை. காமேஷ் தொடர்ந்து தேடிக்கொண்டே பைக்கை கோவூரின் சன்னதி தெரு வரை செலுத்திக் கொண்டே சென்றான்.

அந்த மஞ்சப்பையை காணவே இல்லை. மீண்டும் வந்த வழியே பைக்கை செலுத்திக் கொண்டே வந்தான். காமேஷ் முகம் வேதனையில் துவண்டது. ஐந்து லக்ஷம் ரூபாயை

நொடிப்பொழுதில் தொலைத்து விட்டோம்! எங்கேயோ வழியில் விழுந்திருக்கக்கூடும் யாராவது பையை எடுத்துப்பார்த்து உள்ளே ஐந்து லக்ஷம் ரூபாயை பார்த்ததும் அடித்தது ஜாக்பாட் என்று எடுத்து சென்றிருப்பான்.

இந்த எண்ணம் தோன்றியதும் காமேஷின் முகமெல்லாம் வியர்த்துப் போனது.

அப்படி நடந்திருந்தால் இவன் கதி? ஐயர் இவனை மன்னித்து விட்டாலும் கூட, தொடர்ந்து அவனுடன் பழகத் தோன்றுமா? இவன் பணத்தை அமுக்கி விட்டுக்கூட, தொலைத்து விட்டதாக நாடகம் ஆடுகிறான் என்றுதானே நினைத்துக் கொள்வார்.

எப்படி ஐயரை சமாளிக்கப் போகிறோம் என்கிற பயம் இதயத்தை கவ்வ, சாலையின் இருபுறங்களிலும், மஞ்சப் பையை தேடிக்கொண்டே சென்றான்.

அந்த மஞ்சப்பை இவனது எதிர்காலத்தையே கேள்விக்குறியாகி விட்டது போன்று பிரமை! எல்.ஜி. என்ற பையின் கொட்டை எழுத்துக்கள் காமேஷின் கண்களின் முன்னாடி நிழலாடின.

எல்.ஜி. என்றால் 'லைஃப் கான்'! என்று காமேஷுக்கு தோன்ற, கண்களில் கலக்கம் எட்டிப் பார்த்தது.

மீண்டும் டௌன் பேங்க் வரை வந்து விட்டிருந்தான், காமேஷ்! மஞ்சப்பை போன இடம் தெரியவில்லை .

அப்படியே பைக்கின் மீது அமர்ந்தபடி கையைக் கட்டிக்கொண்டு மௌனமாக பையை பறிகொடுத்து விட்ட சோகத்தில் கல்லாகச் சமைந்திருந்தான்.

அந்த இன்னோவா காரில் இருந்து தோழி கன்னிகாவுடன் இறங்கிய தேனுகா, பாங்க் பக்கத்தில் இருந்த ஃபேஷன் ஜுவல்லரிக்குள் நுழைவதற்காக படி ஏறியபோது, தற்செயலாக காமேஷைப் பார்த்தாள்.

அவன் முகத்தை பார்த்தவுடனே திகைத்துப் போனாள். காமேஷுக்கு என்னவானது! அவன் முகத்தில் ஏன் இத்தனை சோகம்! கம்பீரமும், அலக்ஷியமும் மட்டுமே குடிகொண்டிருக்கும் அவன் முகத்தில் இத்தனை குழப்பம் ஏன் காணப்படுகிறது? ஏதாவது பிரச்னையா?

பைக்கை விட்டு கூட இறங்காமல் அப்படியே பிரமைப் பிடித்தவனாக உட்கார்ந்திருக்கிறானே!

"கன்னிகா! நீ உள்ளே போய் உனக்கு தேவையானதை தேர்ந்தெடுத்துக்கிட்டு இரு! நான் வந்து உன்னை ஜாயின் பண்ணிக்கிறேன்!" என்றபடி காமேஷை நோக்கி நடந்தாள்.

"காமேஷ்!"

காமேஷ் தலையை உயர்த்தாமல் சாலை குனிந்து பார்த்தபடியே ஒரே நிலையில் இருந்தாள் நிமிர்ந்து தேனுகாவை பார்க்கக்கூட இல்லை.

"காமேஷ்! என்னாச்சு!"

மெதுவாக முகத்தை உயர்த்தி அவளை ஏறிட்டான், காமேஷ்.

"பேப்பர் ஐயர் பாங்க்ல கட்ட சொல்லி ஐந்து லக்ஷம் கொடுத்தார். இங்கே வந்து பார்த்தா பையைக் காணோம்! எங்கே விழுந்துடுச்சுன்னு தெரியலை?" காமேஷ் சொன்னான்.

அவனது அகலக் கண்களின் வெண்மையில் சிவப்பு ரேகைகள் தோன்றி அவன் உள்ளுக்குள் அழுதுக் கொண்டிருப்பதை ருஜுப்படுத்தின! அழக்கூடாது என்று தன்னை கட்டுப்படுத்திக் கொள்வதில் மட்டும்தான் ஆண்கள் உறுதியைக் காட்டுகிறார்களே. தவிர, மற்ற விஷயங்களில் அந்த உறுதியை காட்டுவதில்லை! மனதிற்குள் நினைத்தாள் தேனுகா.?

"வழியில் தேடிப்பார்த்தீங்களா.. காமேஷ்?"

"ரெண்டு தடவை பார்த்துட்டேன்.. பை போன இடம் தெரியலை!"

"கவலைப்படாதீங்க! காமேஷ் பை கிடைச்சுடும்."

'ஆறுதலா சொல்கிறாயா இல்லை. உனக்கு உள்ள காமதேனுவின் மஹிமை உன்னை இப்படி சொல்ல வைக்கிறதா..' என்பது போல் அவளைப் பார்த்தான் காமேஷ்! ஆனால் ஒன்றும் பேசவில்லை.

அவன் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டாள், தேனுகா!

"புரியுது காமேஷ்! பெரிய வீட்டுப்பொண்ணு உடான்ஸ் விடறா! அவளைப் பத்தியெல்லாம் ஸ்கூல் மீட்டிங்ல பேசாதேன்னு நீ விச்சுகிட்டே சொன்னியாமே? அவன் எனக்கு சொல்லிட்டான்."

"இப்ப நான் ஆறுதலா சொல்லலை, காமேஷ்! உன்னோட நெருங்கினவங்கதான் உனக்கு ஆறுதல் சொல்ல முடியும்! நான் என்ன உனக்கு நெருக்கமானவளா என்ன? இல்லை.. நீதான் என்னை அவ்வளவு சுலபமா நெருங்க விட்டுடுவியா?"

"இப்ப கோவூர் மக்களோட கிராம தேவதை தேனுகாவாகத்தான் சொல்றேன்! உன் மஞ்சப்பை கிடைச்சிடும்!" என்றவள் அவனை தன் கண்களால் உறுத்துப்பார்த்தாள்.

"உன் கையை நீட்டு!" தேனுகா சொன்னாள்.

பிரமிப்புடன் ஒரு இயந்திர கதியில் தன் கையை அவள் முன்பாக நீட்டினான்.

ஜிம்மில் கடின பயிற்சிகளால் காய்த்து திரண்டிருந்த அவனது உள்ளங்கையின் மீது தன் மிருதுவான கையை வைத்தாள்.

அவன் கையை பிறகு இறுகப் அமுக்கினாள். "இன்னும் அரை மணி நேரத்துல இது கையில் அந்த மஞ்சப்பை இருக்கும்" என்றவள் சட்டென்று உருண்டு திரண்டிருந்த அவனது அகல மார்பில் இதயத்தின் மீது கை வைத்தாள்.

"இந்த இதயம் சோகத்தால் துடிக்கக்கூடாது! சீக்கிரம் இதுல அமைதியும் சந்தோஷமும் வரணும்." என்றபடி தன் கையை எடுத்துக்கொண்டாள்.

"காமேஷ்! இப்பப்போய் அந்த மஞ்சபையைத் தேடிப்பாரு!" என்றாள் தேனுகா.

மந்திரிக்கப்பட்ட கோழிப்போன்று, அவள் வாக்குக்கு கட்டுப்பட்டிருந்த காமேஷ், பைக்கை 'யூ டர்ன்' செய்து வந்த வழியே சென்றான்.

அவன் பார்வை மீண்டும் தான் பயணித்திருந்த சாலையை மேய்ந்தபடியே சென்றது.

சற்று தூரம் சென்றிருப்பான். சாலையில் தவறி விழுந்த கிழவியை இவன் சந்தித்த இடம் அதோ தொலைவில் தெரிந்தது.

அந்த பகுதியை நோக்கி மெதுவாக ஊர்ந்தான், காமேஷ்!

பனங்கிழங்கு விற்றுக் கொண்டிருந்த அந்த கிழவி இப்போது கண்ணுக்கு தெரிந்தாள்.

மூங்கில் கூடையை கவித்து போட்டு அதன் மீது துண்டு ஒன்றை வைத்து நான்கைந்து கிழங்குகளை மேலாக அடுக்கி, ஆள் அரவமற்ற சாலையில் இப்படியும் அப்படியும் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

காரில் செல்பவர்களா, வண்டியை நிறுத்தி கிழவியிடம் கிழங்கு வாங்கப் போகிறார்கள்? இருப்பினும், ஏதோ உழைத்து சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகத்தானே உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்.

வேலை வெட்டி எதுவுமின்றி, சும்மா சினிமா பேனர்களையும், கடைகளையும் பராக்கு பார்ப்பதற்காக லெஃப்ட் ரைட் என்று மௌண்ட் ரோடில் அணிவகுப்பு செய்பவர்களை மதிக்கிற சமுதாயம். பொட்டல் கிராமத்தில், ஆள் அரவம் இல்லாத இடத்தில் கிழங்கு கூடையுடன் அமைதியாக உட்கார்ந்திருப்பவர்களை ஏளனம் செய்கிறது.

'சுறுசுறுப்புடன் உழைக்காமல் இருப்பதை விட, சோம்பியமர்ந்து உழைப்பது எவ்வளவோ மேல்' என்று எப்போது புரிந்து கொள்ள போகிறதோ இந்த சமூகம்.

அந்தக் கிழவியின் அருகில் தன் பைக்கை நிறுத்தினான், காமேஷ்!

சூரியவொளி கண்களை கூசச் செய்ய, கைகளால் கண்களின் மீது தடுப்பாக வைத்து அவனை ஏறிட்டாள் அந்தக் கிழவி.

"தம்பி நீயா! வா.. வா..! நீ தேடி வருவேன்னு எதிர்பார்த்துக்கிட்டே இருந்தேன். நீ கிழங்கு கூடையை குனிஞ்சு எடுக்கறச்சே, உன் பையை கீழே நழுவ விட்டிருக்கே! நீ கிளம்பி போனாட்டுதான் கவனிசேன்!"

"பையை திறந்துப் பார்த்தேன்! கத்தை கத்தை பணம்! சரி! தெருவுல வச்சுக்க வேணாமேன்னு குடிசையில் இருக்கிற என்

புருஷன்கிட்டே கொடுத்துட்டு வந்தேன். பை பத்திரமா என் குடிசையில் தான் இருக்கு வா! எடுத்துத் தரேன்!" பாட்டி சொல்ல, வார்த்தைகள் வராமல் உணர்ச்சியில் திக்குமுக்காடி போன காமேஷ், சாலை என்றும் பாராமல் கிழவியின் காலில் சரிந்தான்.

"எழுந்திரு கண்ணு! பத்து ரூவா எனக்கு நீ கொடுத்தே! உன் கையை விட்டு பணம் எப்படி போகும்?" என்றபடி கிழவி தன் குடிசையை நோக்கி நடக்க காமேஷ் அவளைப் பின் தொடர்ந்தான்.

தன் புருஷனின் தலைமாட்டில் இருந்த பையை எடுத்து அவன் கைகளில் வைத்தாள் கிழவி.

கண்களில் நீர் மல்க அந்த பையை உயர்த்தி பிடித்து அதனை நோக்கினான் காமேஷ். கொட்டை எழுத்துக்களில் எல்.ஜி. அவனை பார்த்து சிரித்தன!

"லைஃப் கான், இல்லை நான், லவ் கிஃப்ட்" என்றது அந்த மஞ்சப்பை.

"பத்திரமா போய் வாப்பா!" என்ற அந்த கிழத் தம்பதியை மீண்டும் விழுந்து வணங்கினான், காமேஷ்.

"பாட்டி! உன் பெயர் என்ன? தாத்தா பெயர் என்ன?" காமேஷ் கேட்டான்.

"என் பெயர் ராஜம்மா! அவரு பெயரு சுடலை!" கிழவி சொன்னாள்.

"சுடலை, ராஜம்மாவுக்கு காமேஷ்னு ஒரு பையன் இன்னைக்கு பொறந்திருக்கிறதா நினைச்சுக்கங்கம்மா!" என்றபடி அந்த கிழத்தம்பதியரை மலைக்க செய்து விட்டு, தன் பைக்கை நோக்கி நடந்தான். பைக்கை கிளப்புறதவற்கு முன் தன் உள்ளங்கையைப் பார்த்தவன், அதில் உணர்ச்சியுடன் ஒரு முத்தத்தைப் பதித்தான், காமேஷ்.

# அத்தியாயம் 15

**ப்**ரொஃபசர் வனமாலியின் மொபைல் ஒலிக்க அவர் காலர் ஐடியை ஒரு முறை நோட்டம் விட்டப்பின், ஃபோனை எடுத்து பேசினார்.

"ஹாய் நரேன்! வாட் எ சர்ப்ரைஸ்! இவ்வளவு காலையில கால் செய்யறே?" வனமாலி சிரித்தபடி தனது ஆச்சரியத்தைத் தெரிவிக்க, மறுமுனையில் இருந்த நரேந்திரநாத்தையும் சிரிப்பு தொற்றிக் கொண்டது.

"என்ன செய்யறது! உங்களோட சகதர்மணியும், எனது அருமை அக்காவும் வாக்கிங் கிளம்பறத்துக்குள்ள நான் உங்களை அலெர்ட் செய்யணும்னுதான் கூப்பிட்டேன். தம்பதிகள் ரெண்டு பேரும் மறந்துடப் போறீங்க! தாஜ் க்ளப்புல மத்தியானம் புதுமணத் தம்பதிகள் சந்தீப் ஷங்கருக்கும், சுபாங்கிக்கும் பார்ட்டி வைக்கிறேன். உங்களுக்கும் அக்காவுக்கும் மட்டும்தான் இன்விடேஷன் மறக்காம வந்து சேருங்க..! நேராக ஒயாஸிஸ் ஹாலுக்கு வந்துடுங்க.." என்றார் நரேன்.

வனமாலி தயங்கினார். "ந்யூலி வெட் லவ்வர்ஸ் நடுவுல, இந்த கிழத்தம்பதிகள் எதுக்குப்பா?"

"ஹலோ.. மாமோவ்! உங்க கம்யூனிட்டியில எப்படி சொல்வீங்க? அத்திம்பேர்.. அப்படித்தானே? சந்தீப்புக்கு இது வெட்டிங் பார்ட்டி! உங்களுக்கும் சகாவுக்கும் ஃபேர்வல் பார்ட்டி! நீங்க ரெண்டு பேரும் கோஹூர்ல செட்டில் ஆகப் போறீங்க இல்லியா? அதுக்குத்தான் இந்த பார்ட்டி! சீக்கிரம் வந்துடுங்க..!" என்றபடி மொபைலை ஸ்விட்ச் ஆஃப் செய்தான் நரேன்.

வாக்கிங் கிளம்பிய ஹம்ஸவர்த்தினியிடம் நரேனின் அழைப்பைப் பற்றி நினைவுப்படுத்த, அவள் உடனே தனது ஹேண்ட்பாக்கை தேடி எடுத்தாள்.

"வரும் போது ந்யூலிவெட் கப்பிளுக்கு கிஃப்ட் வாங்கிட்டு வந்துடறேங்க!" என்றபடி கிளம்பினாள்.

**தா**ஜ் க்ளப் ஹோட்டலின் ஒயாஸிஸ் ஹால்! சென்னையா? அப்படி ஒரு நகரம் இருக்கிறதா என்ன? என்று கேட்கும்படியான சூழ்நிலையில் வெளியுலக தொடர்பே இல்லாமல், மங்கிய ஒளியில், ரம்யமான அலங்காரங்களுடன் விளங்கியது ஒயாஸிஸ். ஒரு செயற்கை குளத்தின் நடுவே அமைக்கப்பட்ட திட்டினில் ஒரு குடையின் நடுவே ஐந்து

நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அந்த திட்டினை அடைவதற்கு ஒரு சிறிய மரப்பாலம்! செயற்கை அருவி ஒன்று அருகே பொழிந்துக் கொண்டிருக்க, டாக்டர் நரேன் மற்றும் அவரது விருந்தினர்கள் மீதும் விழுந்துக் கொண்டிருந்தன.

"சென்னையில இப்படி ஒரு ஹோட்டலா? நான் இதுவரைக்கும் இங்கே வந்ததேயில்லை..!"

ஹம்ஸவர்த்தினி தான் பிரமித்துப் போய் கூறினாள்.

"நான் இங்கே நிறைய தடவை வந்திருக்கேன்.." கிரிக்கெட் ப்ளேயர் சந்தீப் ஷங்கர் பெருமையுடன் கூறினான்.

"தெரியுமே! உன்னோட கேர்ள் ஃப்ரெண்டு அந்த நடிகை தான்யா சௌத்ரியுடன்தானே!" நிஷ்டூரத்துடன் சுபாங்கி மெனுகார்டை கையினால் விசிறியபடி சொன்னாள்.

சந்தீப்பின் முகத்தில் சட்டென்று இருள் கப்பியது.

"நோ.. நோ.. சுபாங்கி! முதல் நாளே நோ.. கான்ட்ரவர்ஸிஸ்! நாளைக்கு ஹனிமூன் கிளம்ப போறீங்க! இந்த டைம்ல பழசையெல்லாம் பேசக் கூடாது!" நரேன் வெய்ட்டர் கொண்டு வந்த ஸ்டார்டர்ஸை ஆவலுடன் நோக்கினார்.

"லஞ்ச் நல்லாதான் ஆரம்பிச்சிருக்கு! ஸ்டார்டஸ்ஸை பார்த்த உடனே.. கொஞ்சம் ஸ்டார்டிங் டிரபிள்! இல்லம்மா..

மிஸஸ் சந்தீப்?" ப்ரொஃபசர் வனமாலி கூறியதும் சுபாங்கி சிரிக்கத் தொடங்கினாள்.

வனமாலியை நரேன் புன்சிரிப்புடன் பார்த்தார். "என்ன மாவோவ்! காலையில ஏதாவது மென்ட்டல் ஹாஸ்பிட்டல் விஸிட்டா?" என்றதும் ஹம்ஸவர்த்தினியும் சிரித்தாள்.

"சந்தீப் நரேனை நன்றியுடன் பார்த்தான். இந்த சமயத்துல நான், நரேந்திரநாத் அங்கிளுக்குதான் தேங்க்ஸ் சொல்லணும்! அவர்தான் என் சார்பா, என் மாமனார் நித்யமூர்த்தி கிட்டே சுபாங்கியை பெண் கேட்டார்!"

சுபாங்கி, புன்சிரிப்புடன் ஹம்ஸாவைப் பார்த்தாள்.

"ஆமா, ஆன்ட்டி என் அப்பாவுக்கு இந்த மேரேஜ்ல கொஞ்சம் கூட இன்டரஸ்டே இல்லை! சந்தீப்போட கேம் கூட அப்பாவுக்கு பிடிக்காது! அழுக்குனுதான் கூப்பிடுவார்! நரேன் அங்கிள்தான் அவர்கூட பேசி சம்மதிக்க வச்சார்? ஹி ஹேஸ் காட் தி டேலண்ட்ஸ்!"

"கிழிச்சான்! உன் நரேன் அங்கிள்! தனக்கு ஒரு பொண்ணை தேடிக்கத் தெரியலை! உங்களுக்கு திருமணம் செஞ்சு வச்சுட்டானாக்கும்!" ஹம்ஸா பொய்க் கோபத்துடன் தக்காளி சூப்பை உறிஞ்சினாள்.

"சில பேருங்க, சந்தீப் மாதிரி கிரிக்கெட் ஆடுவாங்க! சில பேரு, என்னை மாதிரி மேட்ச் பார்ப்பாங்க! ஸ்டேடியத்துக்கு வர்றவங்க எல்லாரும் கிரிக்கெட் ஆட முடியுமா.. என்ன?" நரேன் சிரித்தார்.

"தப்பான உதாரணம்! நாம சாப்பிடற தக்காளி சூப் வந்த உடனேயே நாம முதலுல எதைத் தேடினோம்? பெப்பர் அன்ட் சால்ட் கன்டெய்னர்களைதானே! மேரேஜ் என்னும் தக்காளி சூப்புக்கு கணவன் மனைவிங்கிற பெப்பர் அன்ட் சால்ட் ரொம்ப அவசியம்!" வனமாலி கூறினார்.

"ஹம்ஸா ஆன்ட்டி! உங்களை அங்கிள் பெப்பர்னு கூப்பிடறாரு!" சந்தீப் கிண்டலாக சொல்ல, அவரை முறைத்தாள்.

"அவரு அப்படித்தான் சொல்வாரு, சந்தீப். டெஸ்ஸர்ட் ஆர்டர் செய்யற டைம்ல, ஸ்டார்ட்டர் ஆர்டர் செய்தவரு அவரு! எங்க மேரேஜ் நடக்கும் போது எனக்கு வயசு நாற்பது!" என்றதும் அங்கே பெரிய சிரிப்பு எழுந்தது.

சட்டென்று ஹம்ஸாவின் முகம் வாட்டமடைந்தது.

"ஜோக் இல்லை, நரேன்! நானும் ப்ரொஃபசரும் கிராமத்துல தங்கப் போறோம்! நீ தனியா என்ன செய்யப்

போறே! அட்லீஸ்ட் உன்னை கவனிச்சுக்கவாவது யாராவது வேணும்!" ஹம்ஸாவின் குரல் தழுதழுத்தது.

"ஸில்லி! ராஜாராமன் இருக்கான்! இப்ப ஸ்விக்கீஸ் கூட!.. போன் பண்ணினா பெண்டாட்டி கொண்டு வர்றதைவிட வேகமா சாப்பாடு கொண்டு வர்றாங்க! மெடிக்கல் ஷாப்புக்கு ஃபோன் பண்ணினா உடனே ஹோம் டெலிவரி! இன்னும் ஒரு மனுஷனுக்கு என்ன வேணும்?" நரேன் கிண்டலாகக் கேட்டார்.

"இட்ஸ் நாட் டூ லேட்! இப்பக்கூட நீ யாரையாவது மேரேஜ் பண்ணிக்கலாமே!" வனமாலி கூறினார்.

அனைவரின் பார்வையும் நரேன் மீது பதிந்தன.

"யெஸ் அங்கிள்! இட்ஸ் நாட் டூ லேட்! யூ கேன் மேர்ரி சம்படி!" சுபாங்கி நமத்துப் போன பிரட் துண்டத்தை ஸ்பூனால் எடுத்து வாயில் போட்டாள்.

"என்னைப் பொறுத்த வரைக்கும் லவ் லைஃப்ல நான் ரிட்டயர்டு ஹர்ட்! இனிமே என் வாழ்க்கையில லவ்ங்கிற பேச்சுக்கே இடமில்லை!" நரேன் சொன்னார்.

"வாட் டூ யூ மீன், அங்கிள்! உங்களுக்கு லவ் ஃபெய்லியரா? இவ்வளவு நாள் என்கிட்டே சொல்லவே யில்லையே! " சந்தீப் பிரமித்தான்.

"ஆமா! எனக்கு லவ் ஃபெய்லியர்னு போர்டா மாட்டிக்க முடியும்?" கிண்டலாக கேட்டார் நரேன்.

"அங்கிள்! டெல் மீ யுவர் லவ் ஸ்டோரி!" சுபாங்கி கண்களை விரித்து ஆவல் காட்டினாள்.

"ஆமா.. நரேன்! செவிக்கு உணவில்லாத போது சிறிது வயிற்றுக்கு ஈயலாமே!" வனமாலியும் சொன்னார்.

நரேன் தன் அக்காவின் முகத்தைப் பார்த்தார்.

"அக்கா! ரொம்ப நாளாவே நான் ஏன் கல்யாணம் செஞ்சுக்க மாட்டேங்கிறேன்னு காரணத்தை கேட்டே இல்லே! அதுக்குக் காரணமே என்னோட லவ் லைஃப்தான்! உங்களுக்கெல்லாம் காதலை பத்தி என்ன தெரியும்? ஐ ஆம் சாரி டு ஸே திஸ்!"

"சந்தீப், சுபாங்கி! உங்களோட மேரேஜ் ஜஸ்ட் எ மேரேஜ் ஆஃப் கன்வீனியன்ஸ்! வனமாலி, உன்னோட மேரேஜ், ஜஸ்ட் எ மேரேஜ் ஆஃப் சர்கம்ஸ்டான்ஸ்தான். சந்தீப்போட திருமணத்துக்கு தேவைகளும், உங்களோட திருமணத்திற்கு சூழ்நிலையுமே காரணம்! இதுல லவ் இருக்கிறதா தெரியலை! நான் ஸின்ஸியரா லவ் செஞ்சேன்! அதனால்தான் இன்னும் என் காதலியோட நினைவாவே வாழ்ந்துகிட்டு இருக்கேன். அதனாலதான் தேவைகளுக்கும், சூழ்நிலைக்கும்

அடிமையாகாமே, இன்னும் ஒரு காதலனாகவே வாழ்ந்துகிட்டு இருக்கேன்!" நரேனின் குரல் சோகமாக ஒலித்தது.

மற்ற நால்வரும் திகைப்புடன் பார்வைகளை பரிமாறிக் கொண்டு மீண்டும் நரேனைக் கவனித்தனர்.

"நான் மெடிக்கல் கோர்ஸ் படிச்சுட்டு இருந்தபோது ஒரு ஆக்ஸிடண்ட் நடந்தது! அப்பதான் ரேணுவை முதன்முதலா பார்த்தேன். ஒரு இளவரசி மாதிரி சாரட்ல போய்கிட்டு இருந்தாள். என் பைக்கை அவள் வண்டியில் மோதிட்டேன். விழ இருந்த அவளை காப்பாத்தின போதுதான் எங்களிடையே காதல் மலர்ந்தது..!" நரேன் சொன்னார்.

"ஹெல்மெட் போட்டு இருந்தியா இல்லையா?" வனமாலி கேட்க ஹம்ஸா அவரை எரிச்சலுடன் முறைத்தாள்.

"நரேன் மனசு வந்து தன் கதையை சொல்றதுக்கு முன் வந்திருக்கான். இந்த டைம்ல ஸில்லி ஜோக்ஸ் அடிச்சு, அவன் 'மூட்'டை கெடுக்காதீங்க!" ஹம்ஸா எச்சரித்தாள்.

"என் கதை கோவூர்ங்கிற கிராமத்துல தான் துவங்கறது!" நரேன் சொன்னதும் திடுக்கிட்டாள் ஹம்ஸா.

"கோவூரா? நாங்க தங்கப்போற அதே கிராமமா?" ஹம்ஸா கேட்டாள்.

"ஆமா.. அக்கா! அதனாலதான் அந்த கிராமத்து பெயரை உங்களுக்கு சஜஸ்ட் செஞ்சேன்! கொஞ்ச நாளாகவே என் காதலியோட நினைவுகள் எனக்கு அதிகமாக வர்றது. நீ அங்கே இருந்தேன்னா உன்னை பார்க்க வர்ற சாக்குல! என் காதலி நடமாடிய அந்த கிராமத்துல நானும் நடமாடி ஆறுதலைத் தேடிக்குவேன்!"

நரேனின் குரலில் தொனித்த சோகம் அனைவரையும் வாட்டியது.

"சாரி அங்கிள்! உங்களுக்கு கஷ்டமாயிருக்குன்னா வீ வில் டாக் சம்திங்க எல்ஸ்!" சந்தீப், நரேனை சமாதானப் படுத்தினான்.

"நோ சந்தீப்! நிச்சயம் நீ என் கதையை கேட்கணும்! உனக்கும், சுபாங்கிக்கும் இடையே இருக்கிற பந்தம் இன்னும் பலப்படும்! கேளுங்க!" நரேன் சொன்னார்.

"என்னோட காதலியின் பெயர் ரேணுகா. நான் அவளை ரேணுன்னு தான் கூப்பிடுவேன். திருவனந்தபுரத்துல ஒரு மெடிக்கல் கேம்ப். இளமையின் வேகம். அதிகமா இருந்ததால கேம்புக்கு பைக்குல போகலாம்னு தீர்மானித்து பைக்லேதான் போனேன்."

"அப்ப.. கோவூர் பக்கத்துல இருக்கிற மெயின் ரோட்ல, பைக்கை வேகமா ஓட்டிகிட்டு இருந்தேன். கொஞ்சம் தொலைவுல ஒரு சாரட் வண்டி போய்க்கிட்டு இருந்தது. வயல் வெளியில் வேலை பார்த்துட்டு இருந்தவங்க எல்லாரும் ஓடிவந்து, அந்த வண்டியில் உட்கார்ந்து இருந்தவங்கள கும்பிட்டுகிட்டு இருந்தாங்க!"

"எனக்கு வேடிக்கையா இருந்தது! யாரோ ஒரு நிலச்சுவாந்தாரோ, இல்லை ஒரு சாமியாரோ போய்கிட்டு இருக்காருன்னுதான் நினைச்சேன். யாரா இருந்தா எனக்கு என்னன்னு நினைச்சு, பைக்கோட வேகத்தை அதிகரிச்சேன். ஒரு சமயத்துல அந்த சாரட் வண்டியை ஓவர்டேக் செய்தேன். என்னோட பார்வை என்னையும் அறியாம இடப்பக்கமா திரும்பி, அந்த சாரட் வண்டி உள்ளே பார்த்தது.

"வண்டிக்குள்ளே ரெண்டு பொண்ணுங்க உட்கார்ந்திருந்தாங்க! ஒருத்தி ரொம்ப சாதாரணமா டிரஸ் பண்ணிகிட்டு, சாரட்டின் எதிர் சீட்ல உட்கார்ந்திருந்தாள். அவளைப் பார்க்கறச்சயே கம்பெனிக்கு வந்த ஒரு தோழின்னு நல்லா தெரிஞ்சுது! உத்தமபுத்திரன்ல பத்மினியோட வந்த ராகினி காரெக்டர்னு எனக்கு புரிஞ்சது. ஆனா, ஒரு இளவரசியை போல அந்த சாரட் வண்டியில உட்கார்ந்திருந்த ரேணுகாவை பார்த்ததுமே நான் அரண்டு போயிட்டேன்!

"பொதுவா.. மெடிக்கல் ஸ்டூடண்ட்ஸுக்கு காதல் வயப்படறதுல அவ்வளவா ஈடுபாடு இருக்காது. ஹ்யூமன் அனடமி படிக்கறச்சே, மனித தேகங்கள் மேல ஈடுபாடு தோணாது."

"நானும் அனாடமி படிச்சிருக்கேன்! ஆனா அப்ப ரேணுகாவை பார்த்த போது, நான் பிரமிச்சு போயிட்டேன். எவ்வளவு அழகு தெரியுமா? எனக்கு இப்பவும் அவள் அழகை வர்ணிக்க வார்த்தைகள் கிடைக்கலை! ஒண்ணு மட்டும்தான் என்னால் அப்ப தீர்மானிக்க முடிந்தது!"

"யாமறிந்த நங்கையரில் ரேணுகாவைப் போல் இனிதாவது எங்கும் காணோம் என்று!"

நரேன் இப்படிக் கூறியதுமே, ஹம்ஸாவுக்கு நினைவுக்கு வந்துவிட்டது.

ஒருமுறை, நீண்ட நாட்களாக குழந்தையின்றி வாடிய ஒரு பெண்ணுக்கு செயற்கை முறையில் கர்ப்பத்தை உண்டாக்கி அவளைக் குழந்தை ஒன்றை பெறச் செய்திருந்தாள். சந்தோஷம் தாங்காமல் குழந்தையை ஹம்ஸவர்த்தினியின் காலடியில் வைத்து நீங்கதான் டாக்டர், என் பெண் குழந்தைக்கு பெயர் வைக்கணும் என்று கூறியிருந்தான், அந்தப் பெண்ணின் கணவன்.

சட்டென்று, ஹம்ஸவர்த்தினியால் ஒரு பெயரை யோசிக்க முடியவில்லை. "ஒய்.. டோண்ட் யூ ஹெல்ப் மீ, நரேன்?" என்று அங்கிருந்த தம்பி நரேந்திரநாத்தை கேட்க, அப்போது அவன் பரிந்துரை செய்த பெயர் ரேணுகா.

ஹம்ஸா வேதனையுடன் தம்பியின் காதல் கதையைத் தொடர்ந்து கேட்டாள்.

"ரேணுகாவோட அதீத அழகு என்னை உடனேயே பாதித்து விட்டது. தன்னால் என் பைக்கின் வேகம் குறைஞ்சது! என் இதயத்தோட வேகம் அதிகமாச்சு. எதிரே லாரி ஒண்ணு வர, நான் திரும்பி என் பைக்கை அந்த சாரட் வண்டியின் பின்னாடி ஓட்ட ஆரம்பிச்சேன். ஓவர் டேக் பண்ணாம, அந்த வண்டியை தொடர ஆரம்பிச்சேன்."

"கிராமத்து ஜனங்கள், தொடர்ந்து வயல் வெளியில தங்கள் வேலைகளை நிறுத்திட்டு ரேணுகாவை கும்பிட்டுட்டு போனாங்க! அப்ப எனக்கு அவளோட பெயர் தெரியாததால, அவளோட பெயர் என்னவாயிருக்கும்? அவள் யாரு? என்கிற கேள்விகளோட அவளோட சாரட் வண்டியை தொடர்ந்துகிட்டு இருந்தேன்."

"பின்னால இருந்து அவளோட முகம் தெரியலை! திருப்பி அவளோட முகத்தை பார்க்கணும்னு ஒரு ஆசை! திருப்பி ஓவர்டேக் செய்யற மாதிரி அவளோட முகத்தைப் பார்த்தேன்."

"முதல் தடவை பார்த்ததைவிட அவள் இன்னும் அழகா இருந்தா! லாஜிக்படி ஒரு முறை, நாம் பார்த்த ஒண்ணு, இரண்டாவது முறை பார்க்கறச்சே! இன்னும் அழகா இருந்தா, நம்ம மனசுக்கு அது பிடிச்சுப் போச்சுன்னு அர்த்தம்னு நானா, நினைச்சுகிட்டு அவளை இன்னும் பலமுறை பார்க்கணும்னு நினைச்சு, ஓவர் டேக் செய்யற எண்ணத்தை கைவிட்டேன்!"

"திருப்பி ஸ்லோ டௌன் செஞ்சு, சாரட் வண்டியை முன்னால போக விட்டேன். என்னோட நடவடிக்கைகள் அந்த தோழிப் பெண்ணுக்கு சந்தேகத்தைத் தந்திருக்கணும். ரேணுகா கிட்டே ஏதோ சொல்ல அவள் முதன் முறையா என்னைத் திரும்பிப்பார்த்தா!"

"அந்தப் பார்வையை இப்ப இந்த ஒயாஸிஸ் ஹோட்டல் ஹாலுல இன்னும் என்னால் உணர முடியுது! என்ன பார்வை? கடவுள் நம்பிக்கையையே கேலி செஞ்சுக்கிட்டிருந்த காலம் இது! பார்க்க முடியாத கடவுளின் கண்ணழகை வர்ணிச்சு பாசுரங்களை எப்படி எழுதறாங்கன்னு கிண்டலடிச்சேன்! ஆனா, முதன் முறையா என்னை நோக்கிய ஒரு பார்வையை வச்சு

அன்றிரவே நான் ஒரு கவிதை எழுதினேன். அன்னைக்குத்தான் ஒரு விஷயத்தை புரிஞ்சுக்கிட்டேன். நம்ம இதயம் உருகும் போதுதான் கடவுள் நம்பிக்கை, காதல் கவிதைகள், கதைகள், ஏன் விஞ்ஞானம், விதண்டாவாதங்கள் உருவாகும்னு புரிஞ்சுகிட்டேன்."

"அந்த சாரட் வண்டியை பின்தொடர்ந்துக்கிட்டே இருந்தேன்! திருவனந்தபுரம் மெடிக்கல் கேம்ப்பை மறந்தேன்! படிப்பை மறந்தேன்! அந்தப் பொண்ணு மட்டும்தான் என் கண்ணுல தெரிஞ்சா!"

"திருப்பி அந்த சாரட் வண்டியை ஓவர்டேக் செய்யறாப்பல, ரேணுகாவைப் பார்த்தேன். இந்த முறை அவளும் என்னைப் பார்த்தாள். எங்க பார்வைகள் சங்கமித்தன. நிஜமாவே அது ஒரு புதிய அனுபவமா இருந்தது. ரேணுகா முகத்துல மெல்லிய ஒரு புன்னகை. ஆனா அது என்னைப் பார்த்து வீசப்பட்டதா.. இல்லை இயற்கையிலேயே அவளுக்கு புன்னகைக்கும் முகமான்னு எனக்கு தெரியலை. வேற ஏதாவது முகபாவம் அவகிட்டே தோணுதான்னு பார்த்துக்கிட்டே பைக்கை ஓட்டினேன்!"

"திடீரென, அவ முகத்துல ஒருவித பதற்றம்! 'ஐயோ.. பஸ்..'ன்னு ஒரு அலறல் அவளையும் மீறி எழுந்தது.

அப்பத்தான் எதிரே வர்ற பஸ்ஸை பார்த்தேன். நானும் பயத்துல மிரண்டு போயிட்டேன். எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியாம, பைக்கை இடது பக்கமா உடைச்சு, சாரட் வண்டியின் சக்கரத்துல மோதிட்டேன்."

"சாரட் வண்டியின் அச்சு முறிஞ்சு வண்டி குடை சாய, எதிரே இருந்தப் பெண் மறுபக்கமா குதிச்சுட்டா! ஆனா, ரேணுகா வண்டியோட இந்தப் பக்கம் சரிய, நான் பைக்கோட விழுந்ததையும் லக்ஷியம் செய்யாம, தாவிப் போய் அவளை ஏந்திக்கிட்டேன். பழம் நழுவி என் கையில விழுந்துவிட்டது."

"பெரிய வீட்டு பெண் வந்து சாரட் வண்டி விபத்துக்குள்ளாச்சே! என்று பதறியபடி கிராமத்து ஜனங்க எங்களை சூழ்ந்துக்கொண்ட பிறகுதான் என் கையில விழுந்த கனி எட்டாக்கனின்னு நான் புரிஞ்சுக்கிட்டேன்."

"நானும், ரேணுகாவும் எங்களை மறந்து பார்த்துக்கிட்டு இருந்தோம். அப்ப ஒரு பூஜாரி மாதிரி ஒரு ஆள் கோபத்தோட என் தோளைத் தட்டினார்."

"'தம்பி! ரொம்ப நேரமா நான் உன்னை கவனிச்சுக்கிட்டு பின்னாடி சைக்கிள்ல வர்றேன்! நீ எதுக்கு வண்டி பின்னாடியே வந்துகிட்டு இருக்கே! நீ பாட்டுல போக வேண்டியதுதானே?'

என்று கோபத்துடன் கேட்ட போதுதான், என் நிலைமையை உணர்ந்தேன்!"

"'இல்லீங்க.. நான் சாரட் வண்டியை பார்த்ததே இல்லீங்க! முதல் தடவையா பார்க்கறேன்! புதுசு புதுசா சாரட் எல்லாம் செய்யறாங்க! ஆனா.. இந்த புராதன சாரட் வண்டிக்கு அது ஈடாகுமா? என்னையும் அறியாம சாரட் வண்டியை பார்த்துகிட்டே பைக் ஓட்டினதால, எதிரே வர்ற பஸ்ஸை கவனிக்காம விட்டுட்டேன்! என்னை மன்னிச்சுடுங்க! மேடம்! உங்களுக்கு காயம் எதுவும் இல்லையே?' என்றேன்."

"என்னுடைய சமாளிப்பு அந்த பூசாரியை வாயடைக்க செஞ்சுது! எனது சமாளிக்கும் திறமை, அவளை கவந்திருக்க வேணும்! 'களுக்'ன்னு சிரிச்சா! பேய் பங்களா கதவை திறக்கச்சே 'க்றீச்'ன்னு ஒலி கொடுப்பாங்க. சினிமாவுல! ஆனா, காதல் உலக கதவு திறக்கச்சே 'களுக்'னுதானே ஒலி கேட்கும்! அந்த சிரிப்புல அவ இதயத்துல நானும், என் இயதத்துல அவளும் நுழைஞ்சுட்டோம்!" நரேன் சொன்னான்.

தக்காளி சூப் வைக்கப்பட்டிருந்த காலி பீங்கான் கோப்பைகளை ஒருவன் எடுத்துச்செல்ல, பீங்கான் கோப்பைகள் ஒன்றொடு ஒன்று, உரசும் ஒலியினால், நரேனின் கதையோட்டம் தடைபட்டது.

"ஓகே! வாட் ஷல் ஐ ஆர்டர்?" நரேன் கேட்டார்.

"எதையாவது ஆர்டர் செய்யுங்க! பட்.. யுவர் ஸ்டோரி ஈஸ் டெலிஷியஸ்" என்று - புன்னகைத்தாள்.

# அத்தியாயம் 16

**த**மயந்தி தனது மூன்றாவது மாடி பால்கனியிலிருந்து தோட்டத்தை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள். பெரிய அண்ணி அங்கயற்கண்ணியின் தம்பி மகளுக்கு திருமணம் என்பதால் குடும்பத்தினர் அனைவரும் நாகர் கோவிலுக்கு சென்றிருந்தனர். தனக்கு பதிலாக கணவன் குணசேகரோடு மகள் தேனுகாவை அனுப்பி விட்டு வீட்டிலேயே தங்கி விட்டிருந்தாள், தமயந்தி.

காற்றாட பால்கனியில் நின்றுக் கொண்டிருந்தவளின் பார்வை வீட்டை விட்டு வெளியேறி தோட்டத்திலிருந்த வேப்பமர நிழலை நோக்கி நடந்துச் சென்ற அங்காயியின் மீது பதிந்தது. அங்காயியின் நடை தளர்ந்து விட்டிருந்தது. முகமெங்கும் சுருக்கங்கள், எண்பத்தி ஐந்து வயதை எட்டிப் பிடித்திருந்தாள். மூன்று தலைமுறைகளாக, பெரிய வீட்டுக்கு விஸ்வாஸமாக வேலை செய்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய இதயத்தில் பெரிய வீட்டைப் பற்றி குறியாக ரேணுகாவைப் பற்றி நிறைய மர்மங்கள் புதைந்திருக்கின்றன. இவளும் பலமுறை அவள் இதயத்தைக் கீறிப் பார்த்து விட்டாள்.

உன் மகள் தேனுகாவைப் போலத்தாம்மா ரேணுகாம்மா! படு சுட்டி! என்றுதான் கூறுவாளே தவிர, வேறு எதையும் மறந்தும்கூட கூறிவிட மாட்டாள். இதனை சொல்லும்போதே, தனது குழி விழுந்த கண்களால் சுற்றுமுற்றும் அச்சத்துடன் பார்ப்பாள்.

ரேணுகாவின் வாழ்க்கையில் ஏதோ மர்மம் இருக்கிறதே.. யாரிடம் கேட்டால் உண்மை தெரியும், தன் கணவன் குணசேகர பாண்டியிடமே.. ஒருமுறை கேட்க முயன்று, அவனது கோபத்தை எதிர் கொண்டிருக்கிறாள் தமயந்தி.

"இன்னொரு முறை, நீ இது பத்தி என்கிட்டே பேசினா, நடக்கிற கதையே வேற!" என்று அவன் பல்லைக் கடிக்க, அதற்கு பிறகு அவன் முன்பாக ரேணுகா என்கிற பெயரையே இவள் உச்சரிப்பதில்லை. வேப்பமரத்தினடியில் அமர்ந்த அங்காயி கையில் இருந்த சிறு கத்தியினால் மரத்தின் கீழே குவிக்கப் பட்டிருந்த தென்னை ஓலைகளை கிழித்து குச்சிகளை சேகரிக்க துவங்கினாள். விளக்குமாறு செய்கின்றாள் போலும்! சாவகாசமாக, விளக்குமாற்றை தயார் செய்கிறாள் என்றால் மாமியார் பாஞ்சாலிக்கான பணிவிடைகளை செய்து முடித்து விட்டாள், போலும்!

அவளுடன் பேசி, இன்றைக்கு ஏதாவது அவளது வாயைப் பிடுங்கி, விஷயத்தைக் கறக்க முடியுமா?

முயன்று பார்ப்போமே! என்று நினைத்தபடி மூன்றாவது மாடியியிலிருந்து இறங்கி வந்தாள். கீழ்த் தளத்திற்கு வந்து, இரும்புக் கதவின் வழியாக முன்புற தோட்டத்திற்குச் செல்ல எத்தனித்தவளின் செவிகளில் அந்த அழுகை சத்தம் கேட்டது யாரோ.. கேவிக்கேவி அழுது கொண்டிருந்தார்கள்?

வியப்புடன் அங்கயற்கண்ணியின் கீழ்தள குடியிருப்பினுள் நுழைந்தாள். மாமியார் பாஞ்சாலி அடைப்பட்டுக் கிடந்த அந்த இருட்டு அறையிலிருந்துதான் அந்தக் கேவல் ஒலி வந்தது.

அடிமேல் அடி எடுத்து வைத்தவாறு, அந்த இருட்டு அறையின் ஜன்னலை நோக்கி நடந்து, உள்ளே எட்டிப் பார்த்தாள்.

உள்ளே -

மங்கிய ஒளியில் ஒரு ஃபோட்டோவை வைத்து தன் மார்போடு அணைத்தபடி, பாஞ்சாலி அழுது கொண்டிருந்தாள்.

"அடியே..! ரேணுகா இந்த பாவி வயத்துல ஏண்டி வந்து பொறந்து தொலைச்சே?" என்றபடி கதறிக் கொண்டிருந்தாள்.

தமயந்தி உறைந்து போனாள்.

தூங்கிக் கொண்டிருப்பாள் என்று நினைத்த மாமியார் ஏதோ ஃபோட்டோவை வைத்துக்கொண்டு அழுது கொண்டிருக்கிறாளே! அங்காயியை கூப்பிடலாமா?

"அத்தை! எதுக்கு அழுவறீங்க? கண்ணை மூடிட்டு தூங்குங்க.." தமயந்தி தன்னையும் அறியாமல்.. மாமியாரை சமாதானம் செய்தாள்.

பாஞ்சாலி உடனடியாக திடுக்கி தமயந்தியைத் திரும்பிப் பார்க்கவில்லை. கூந்தல் அவளது முகத்தை மறைக்க, குனிந்து தலையை நிமிர்த்தாமல் அப்படியே சற்று நேரம் அசையாமல் அமர்ந்திருந்தாள்.

பிறகு மெதுவாக அவளது தலை உயரத் துவங்கியது. முகத்தை மறைத்திருந்த முடிக்கற்றைகளின் வழியாக, தனது பார்வையை ஜன்னல் பக்கமாக ஓடவிட்டாள்.

ஜன்னல் கம்பிகளைப் பற்றியபடி நின்ற தமயந்தியை நோக்கியதும், அவளுடைய முகத்தில் சிறு மாற்றம். கையில் இருந்த ஃபோட்டோவை பற்றியபடி திடீரென்று எழுந்து ஜன்னல் பக்கம் ஓடி வந்தாள்.

"அடியே பைத்தியக்காரி! நான்தான் சொன்னேனே! கோவிலுக்கு போவாதே! உன் குழந்தை நாசமா போய்டும்னு! கேட்டியா? இப்ப உன் பொண்ணையும் தெய்வமாக்

கிட்டாங்களா? படுபாவிங்க! வேண்டாம்டி இந்த விஷப்பரீட்சை! உன் மவளை கூட்டிக்கிட்டு எங்கேயாவது கண்காணாத இடத்துக்கு ஓடிப்போ! இந்த கிராமத்துலயே இருக்காதே! நான் சொன்னதை கேட்டாக்க, நீ நல்லாருப்பே! இல்லேனா.. நீயும் இந்த இருட்டு ரூமுலதான என்னை மாதிரி கிடப்பே!.. ஓடிப்போ.. ஓடிப்போ..!"

அலறலாக துவங்கிய பாஞ்சாலியின் குரல், ஓலமாக மாறி, தோட்டத்து வேப்பமரத்தை எட்டியது. பாஞ்சாலியின் குரல் கேட்டு அங்காயி பரபரப்புடன் வீட்டை நோக்கி நடந்தாள்.

சட்டென்று பாஞ்சாலியின் குரல் 'கிசுகிசு' என்று மாறியது.

"சின்ன மருமவளே! என் வீட்டுக்காரன் தான்தோணி பாண்டி கேவலமான மனுஷன்! அவனோட ரத்தம் உன் புருஷன்! அவன்கிட்டே ஈவு இரக்கம் எதிர்பார்க்காதே! உன் பொண்ணை காப்பாத்திக்கோ! என்னை மாதிரி கோட்டை விட்டுடாதே! என் கண்மணி ரேணுகாவுக்கு நேர்ந்த நிலைமை உன்னோட மவளுக்கு நேரக்கூடாதுடீ! என்னோட மவ.. எவ்வளவு அழகு தெரியுமா?.. நீ பார்த்திருக்கியா? இதோ.. பாரு! என் மவ ரேணுகாவை!"

தன் கையிலிருந்த புகைப்படத்தை தமயந்தியின் முன்பாக காட்ட, அவள் மலைத்துப் போனாள்.

தேனுகாவைப் போன்றே பேரழகு! ஆனால் நவநாகரீகம் என்கிற பெயரில் காலத்திற்கேற்ப சில அலங்காரங்கள் தேனுகாவின் அழகை மட்டுப்படுத்தப் பட்டிருந்தன. ஆனால் படத்தில் காணப்பட்ட ரேணுகா பேரழகின் பெட்டகமாக திகழ்ந்தாள். அந்த காலத்து வடநாட்டு இளவரசிகளைப் போல் பேரெழில் பொங்க, அப்சரஸைப் போன்று திகழ்ந்திருந்தாள்.

"இவள்தான் ரேணுகாவா? அத்தை! ரேணுகாவுக்கு என்ன ஆச்சு?" பரபரப்புடன் கேட்டாள்.

"அதை எப்படியடி என் வாயால சொல்லுவேண்டி சின்ன மருமவளே.." புலம்பினாள் பாஞ்சாலி!

"பாழாப்போன காமதேனு என் கண்ணுல மட்டும் படாம இருந்திருந்தா, அந்த காமதேனுவை பார்த்தேன்னு என் புருஷன்கிட்டே நான் சொல்லாம இருந்திருந்தா இந்நேரம் என் பொண்ணு குடியும் குடித்தனமுமா, பேரன் பேத்திகளோட சந்தோஷமா இருந்திருப்பாளே.." என்று புலம்பினாள்.

"பெரியம்மா.. பெரியம்மா!" இரும்புக் கதவைக் கடந்தபடி அங்காயி குரல் கொடுத்தபடி வருவது கேட்டது.

"கிழவி வர்றா! இனி நான் பேசமாட்டேன்! நடந்ததை.. குலதனம் கிட்டே கேளு! என் மவளோட ஆத்மார்த்த சினேகிதி! கணக்கு பிள்ளை சிவநேசன் பொஞ்சாதி!" என்றவள்

அவசரமாக ரேணுகாவின் புகைப் படத்தை பெட்டியில் வைத்துவிட்டு, கட்டிலில் அமர்ந்தபடி முன்னும் பின்னுமாக ஆடியபடி, "அடேய்.." என்று குரல் கொடுத்தாள்!

உள்ளே வந்த அங்காயி, தமயந்தி ஜன்னல் பக்கமாக நிற்பதைக் கேட்டு வியந்தாள்.

"அம்மா.. நீங்களா?"

"டி.வி. பார்த்துகிட்டு இருந்தேன். அங்காயி! மாமியாரின் அலறல் கேட்டது! தனியா நீ என்ன கஷ்டப்படறியோன்னு கீழே வந்தேன். அவங்களுக்கு மாத்திரை கொடுத்தியா?" தமயந்தி கேட்டாள்.

"கொடுத்தேன்மா! தூங்கிட்டாங்களேன்னுதான் தோட்டத்துப் பக்கமா போனேன்.. நீங்க போங்கம்மா! நான் பார்த்துக்கறேன்!" அங்காயி சொல்ல, தமயந்தி கீழ் போர்ஷனை விட்டு வெளியே வந்தாள்.

அவளுக்கு ஒன்று மட்டும் உறுதியாக மனதில் பட்டது. அவள் மாமியார் பாஞ்சாலி பைத்தியமல்ல! சித்த ஸ்வாதீனம் இல்லாதவளைப் போன்று நடிக்கிறாள்.

சிவநேசனின் மனைவி குலதனம் ரேணுகாவின் உயிர்தோழியாமே! அவளை சந்தித்தால், நடந்தது தெரிய வருமா?

மாடிக்கு செல்லும் எண்ணத்தை கைவிட்டு இரும்புக் கதவைக் கடந்து, துளசிமாட முற்றத்தையும் தாண்டி, இடைகழி திண்ணைக்குச் சென்றாள் தமயந்தி.

ஏதோ திருமறை பாடலை முணுமுணுத்தபடி சிவநேசன் கணக்கு வழக்குகளை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார்.

தன்னருகே நிழலாடியதைக் கண்டு கண்களை கணக்கு புஸ்தகத்திலிருந்து உயர்த்தினார்.

"என்னம்மா! பெரியம்மாவுக்கு உடம்பு சரியில்லையா என்ன? டாக்டரை கூப்பிடவா?" கண்ணாடி மூக்கின் மீது வழிந்திருக்க, மேற்பகுதி வழியாக இவளை நோக்கினார், சிவநேசன்.

"தேவையில்லை கணக்குபிள்ளை. தூங்கிக்கிட்டுதான் இருந்தாங்க! ரேணுகாவை பத்தி ஏதாவது கனவு கண்டிருப்பாங்க!" அவரை ஜாடையாக கவனித்தபடி கூறினாள் தமயந்தி.

பட்டை பட்டையாக திருநீறு! கழுத்தில் ருத்திராக்ஷ மாலையும், மணிக்கட்டு நிறைய சிவப்பு நூல்களுமாக, சிவப்பழமாக காட்சியளித்தார்.

"சிவநேசன்! நீங்க எத்தனை வருஷமா இந்த வீட்டுல வேலை செய்துகிட்டு வர்றீங்க!"

தமயந்தி கேட்டதும், சிவநேசன் மிடறு விழுங்கினார். வீட்டு மருமகள் எவளாவது இவரது சர்வீஸைப் பற்றி கேட்டால், வீட்டில் நிலவும் வில்லங்கங்களைப் பற்றி தொடர்ந்துப் பேச போவதாக அர்த்தம் என்பது அவருக்கு தெரியாதா என்ன?

"அதுவும் ரேணுகா.. ரேணுகா!" என்று சற்று முன்பாக பெரியம்மாவின் அலறல் சத்தம் கேட்ட பிறகு, கடைக் குட்டி மருமகள் இவரது சர்வீஸைப் பற்றி கேட்கிறாள் என்றால் இவர் எச்சரிக்கை அடைந்துதானே ஆக வேண்டும்!

"நாற்பது வருஷம்மா! என் அப்பாவுக்கு உதவியா கணக்கு எழுத வந்தேன்! அவர் போனதுக்கு அப்புறம், எல்லாமே நான்தான்! மூணு தலைமுறையா இந்த வீட்டுலதான் வேலை பாக்கறேம்மா!" சிவநேசன் கூறினார்,

"ஓ.. அப்படியா? அப்ப உங்களுக்கு இந்த வீட்டு சமாச்சாரங்கள் எல்லாமே தெரிஞ்சிருக்கணுமே.. என் நாத்தி

ரேணுகாவுக்கு என்ன ஆச்சு?" தமயந்தி கேட்டதுமே, சிவநேசனின் முகம் வெளிறியது.

"அம்மா! சர்வீஸ் தான் எனக்கு 40 வருஷம்! ஆனா.. இந்த திண்ணையை விட்டு வீட்டுக்குப் போறதுக்கு மட்டும்தான் இறங்குவேன்! திண்ணையிலதான் என் ஆத்தாக்காரி என்னையப் பெத்தா? திண்ணைப் பள்ளி கூடத்துல படிச்சு, இப்ப பெரிய வீட்டு திண்ணையில் தான் நாற்பது வருஷமா உட்கார்ந்திருக்கேன்! இந்த திண்ணையைத் தவிர வேற எதுவும் எனக்கு தெரியாது!" சிவநேசன் சாமர்த்தியமாகப் பதிலளித்தார்.

"இவ்வளவு பெரிய வீட்டுல சுத்தி வந்த ரேணுகா, ஒரு தடவைக்கூட உங்க திண்ணையில் உட்கார்ந்தது. இல்லையா?" தமயந்தி கிண்டலாக கேட்க, வாயடைத்துப் போனார், சிவநேசன்.

"உங்க கணக்கு புஸ்தகத்துல, ரேணுகாவுக்கு செலவழிச்ச பணத்தை பத்தி குறிப்புகள் இருக்கணுமே! அது பத்திகூட உங்களுக்கு தெரியாதா?" தமயந்தி அவரை விடவில்லை.

"அட்லீஸ்ட் ரேணுகா இறந்து போன செலவுகள் கணக்கையாவது எழுதியிருப்பீங்க இல்லை! திதி..

கொடுத்துருப்பாங்களே! அந்த செலவும், புஸ்தகத்துல இல்லியா?" நிஷ்டூரத்துடன் வினவினாள், தமயந்தி.

சிவநேசனுக்கு வியர்த்துக் கொட்டியது. "அம்மா! எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னுதான் சொல்லணும்னு எனக்கு உத்தரவு! இந்த விஷயத்தை இதுக்கு மேல பேசாம இருக்கிறது எல்லோருக்குமே நல்லது. 'பெரிய வீடு'ன்னு பெயர் எப்ப வந்ததோ. அப்ப அதுல நடக்கற விஷயங்களும் பெரிசுதான்! அதை பத்தி எங்கள மாதிரி சின்னவங்க பேசக்கூடாதும்மா! அவ்வளவுதான் என்னால சொல்ல முடியும்!" என்ற சிவநேசன் மீண்டும் கணக்கு புஸ்தகங்களினுள் தனது முகத்தைப் புதைந்து கொண்டார்.

தமயந்தி தோல்வியுடன் மாடிப்படிகளில் ஏறத் துவங்கினாள். எப்படியும் குடும்பத்தினர் கல்யாணம் முடிந்து மறுநாள் மதியம்தான் வீட்டுக்கு வர இருந்தனர். மாலை சிவநேசன் மனைவி குலதனத்தைப் சந்தித்து பேசினால் என்ன? தமயந்தி அன்று மாலையே கோவிலுக்கு கிளம்பினாள்.

"சிவநேசன்! எனக்கு பொழுது போகலை! நான் கோவிலுக்கு போயிட்டு வரேன்! வீட்டை பத்திரமா பார்த்துக்குங்க! யாராவது ஃபோன் பேசினா, கோவிலுக்கு போயிருக்கிறதா சொல்லிடுங்க! திண்ணையை விட்டு

அந்தப்பக்கம், இந்தப் பக்கம் போகாம, வேலையை ஒழுங்கா பாருங்க!" சற்றே அதிகாரத்துடனும் கேலியுடனும் கூறிவிட்டு, சன்னதித் தெருவை நோக்கி நடந்தாள்.

மதியம் தோட்டத்தில் உலர்த்தியிருந்த கேழ்வரகை, துணியில் மூட்டைக்கட்டியபடி எழுந்த குலதனம், கேட் திறக்கப்படும் ஒலியினை கேட்டுத் திரும்பினாள்.

பெரிய வீட்டின் கடைக்குட்டி மருமகள் தமயந்தி தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் பரபரப்படைந்தாள்.

"வாங்கம்மா..! கோவிலுக்கு வந்தீங்களா?" என்றபடி வரவேற்றாள்.

"இல்லை! உங்களை பார்க்கத்தான் நான் வந்திருக்கேன்!" என்று தமயந்தி கூறியதும், திகைத்தாள்.

"என்னைப் பார்க்கவா?"

"ஆமா! என் பொண்ணு.. தேனுகாவோட எதிர்காலத்தை குறிச்சு. நான் பேசணும்" தமயந்தி சற்றே காட்டத்துடன் சொல்ல, குலதனத்தின் முகம் மாறியது.

"வாங்கம்மா! உள்ளே போகலாம்!" என்றபடி பின்புறம் இருந்த தனது போர்ஷனை நோக்கி நடந்தாள்.

குலதனம் நீட்டிய நீர்மோரை ஒரே மூச்சில் குடித்து முடித்த தமயந்தி, காலி டம்ளரை அவளிடம் நீட்டினாள்.

"குலதனம்! நீங்கதான் ரேணுகாவோட ஆருயிர் சினேகிதியாமே!"

"யார் சொன்னாங்க?" அதிர்ந்தாள் குலதனம்.

"வீட்டுல ரேணுகாவோட டைரியைப் பார்த்தேன். அதுல உங்களைப் பத்தி நிறைய எழுதியிருக்கா.." தமயந்தி சொன்னாள்.

'மாமியார் பாஞ்சாலி சொன்னாள்! அவள் பைத்தியமில்லை' என்று கூறினால், புதிதாக ஏதாவது பூதம் கிளம்பலாம் என்று ரேணுகாவின் இல்லாத டைரியின் மீது பழி போட்டாள் தமயந்தி.

சிறிய மௌனத்திற்கு பிறகு குலதனம் தலையசைத்தாள்.

"ஆமா! நானும் அவளும் சின்ன வயசுல இருவரும் இணை பிரியாத சினேகிதிங்க! அவளும் நானும் ஒண்ணாதான் சாரட் வண்டியில போவோம்." ஆமோதித்தாள் குலதனம்.

"என்னை மாதிரியே என் மாமியாரும் கோவிலுல காமதேனுவை பார்த்தப்புறம் பிறந்தாளாமே ரேணுகா! என் பொண்ணு மாதிரியே அவளுக்கும் பலவித சக்தி இருந்ததாமே?" தமயந்தி கேட்டாள்.

"ஆமாம்மா! தேனுகாம்மாள் பிடிவாதமா சில சாங்கியங்களை ஏத்துக்க மறுக்கறாங்க! ஆனா, ரேணுகா அப்படியில்லை! எல்லா சாங்கியங்களையும் ஏத்துகிட்டு கிரமப்படி செஞ்சாங்க!"

"ஒரு தடவை காமேஷ்வரர் திருவிழாவுக்கு பக்கத்து ஊர் கோவில் யானையை தருவிச்சிருந்தாங்க! திடீர்னு யானைக்கு மதம் பிடிச்சு ஓட ஆரம்பிச்சது! எல்லாரும் குய்யோ முய்யோன்னு கத்திகிட்டு ஓடினாங்க அதுல பெரிய வீட்டு சகோதரர்களும் அடக்கம்! அந்த சமயம் கோவில் உள்ளே ரேணுகாவும், நானும் இருந்தோம்! விஷயத்தைக் கேள்விப்பட்டு, ரேணுகா தைரியமா யானை முன்னாடிப் போய் நின்னா! நாம் கூட தடுத்துப் பார்த்தேன். அவள் கேட்கவேயில்லை நீங்க நம்ப மாட்டீங்க, தன் முன்னாடி வந்து நின்ன ரேணுகாவைப் பார்த்ததும் யானை பிளிறிக்கிட்டே அவள் முன்னாடி மண்டிப் போட்டது! அதுக்கப்புறம் ரேணுகா இந்த கிராமத்துக்கு தெய்வமாவே ஆகிட்டா?" குலதனம் புளகாங்கிதத்துடன் கூறினாள்.

"அவ்வளவு சக்தி வாய்ந்த ரேணுகா திடீர்னு எப்படி மர்மமா மரணம் அடைஞ்சா.." தமயந்தி கேட்டதும் வெலவெலத்துப் போனாள் குலதனம்.

"அம்மா! ராமனும், கிருஷ்ணனும் காலம் முடிவடைந்ததும் மரணம் அடைஞ்சாங்க! சில பேரோட மரணங்களை ஜீரணிக்க முடியாம நாம அதை மர்மமா நினைப்போம்! அவ்வளவுதான்! ரேணுகாவோட டைம் முடிஞ்சது! அவள் போயிட்டாள்! அவ்வளவுதான்!" ஜன்னல் வழியாக தோட்டத்தை வெறித்தபடி கூறினாள் குலதனம்.

"ரேணுகா டைம் முடிஞ்சதைப் பத்தி நான் கேட்க வரலை! என் பொண்ணு டைம்மும் அவளைப் போலவே திடீர்னு முடிஞ்சுடக்கூடாதுன்னு தான் உங்களைத் தேடி வந்திருக்கேன்!" தமயந்தி இப்படிக் கூறியதும், கண்களில் நீர் எட்டிப்பார்க்க, சடாரென்று தமயந்தியை நோக்கி பாய்ந்து வந்தாள்.

"அம்மா! உங்க மனசு என்ன பாடுபடறதுன்னு எனக்கு புரியுது! ஆவணி அஷ்டமி அன்னைக்கு கோவிலுக்கு வந்த தேனுகா, நெகிழ்ந்து போன சேலையை திருப்பி கட்டிக்க என் வீட்டுக்குள்ளே வந்தாள். அவளை பார்க்கும்போது, அசப்புல என் தோழி ரேணுகாவை பார்க்கிறது போலவே இருந்தது! அவுங்க தனியா வந்திருந்தா, ‘அசட்டு பொண்ணே, எவனையாவது கல்யாணம் பண்ணிகிட்டு நிம்மதியா

எங்கேயாவது போய் வாழு’ன்னு சொல்லதான் துடிச்சேன்! கூட உங்க அண்ணி கற்பகம் வந்திருந்ததால ஒண்ணும் பேச முடியலை! ரேணுகாவுக்கு நிகழ்ந்த கதி தேனுகாவுக்கு நிகழக்கூடாதும்மா! அவளுக்கு சீக்கிரம் கல்யாணம் செஞ்சு வச்சுடுங்க!" - தமயந்தியின் கைகளைப் பற்றிக் கொண்டு விட்டாள்.

"உங்க நல்ல மனசுக்கு நன்றி, குலதனம்! என் பொண்ணு நல்லபடியா வாழணும்னா உங்க உதவி அதுக்கு நிச்சயம் தேவை. என் மாமியார் பாஞ்சாலி மாதிரி நான் பைத்தியகாரியா, என் மகளை நினைச்சு புலம்பாம இருக்கணும்னா, நீங்க நடந்த உண்மைகளை என்கிட்டே சொல்லணும்!" தமயந்தி சொல்ல, சோர்வுடன் சுவற்றில் சாய்ந்து அமர்ந்தாள், குலதனம்.

அவள் எல்லாவற்றையும் சொல்லிவிட சித்தமாகி விட்டாள் என்பதை குலதனத்தின் முகபாவத்திலிருந்தே கண்டுகொண்ட தமயந்தி, ஆவலுடன் அவள் முகத்தைக் கவனித்தாள்.

குலதனம் பேச ஆரம்பித்தாள்.

"எல்லாமே நல்லாத்தான் போய்கிட்டு இருந்ததும்மா! ஒரு முறை, ரேணுகாவோட பிறந்த நாள் வந்தது. காமேஷ்வரர் கோவிலுல கும்பிட்டுட்டு, ஊர்மக்களோட மரியாதையை

ஏத்துக்கிட்டு, டிரங்க் ரோட் வழியா பாண்டியம்மன் கோவிலுக்கு சாரட் வண்டியில் போய்கிட்டு இருந்தோம். அப்ப ஒரு பையன் தன்னோட பைக்குல எங்க சாரட் வண்டி பின்னாடி வந்தான்."

"காதல், கல்யாணம் எல்லாம் தன்னோட வாழ்க்கைல எப்பவுமே கிடையாது. தான் ஒரு தெய்வப்பிறவின்னு அடிக்கடி சொல்லுவா. ரேணுகா! காதல், சினிமா, புஸ்தகங்கள் எல்லாமே அவள் தவிர்த்து வந்தாள். கூடிய வரையில் பையன்கள் பக்கமே திரும்பமாட்டாள்! ஊரை உலா வரும்போது கூட, பையன்கள் இருக்கிற பக்கம் போக மாட்டாள்."

"அப்படிப்பட்ட அவ, தன் அண்ணன்களுக்கு தெரியாம அனார்கலி, படத்தை என்னோட பார்க்க வந்தாள். படத்தை பார்த்த அவ, அதை பத்தி ரொம்ப நேரம் விவாதிச்சாள்! காதல் என்பது எல்லாம் பைத்தியக்காரத்தனம். அதுக்காக உயிர் கொடுக்கிறது எல்லாம் முட்டாள்தனம். கோபம், பொறாமை, எரிச்சல் போல காதலும் ஒரு துர்குணம்னு எல்லாம் பேசினா. அப்படிப்பட்டவதான் தன்னையும் அறியாம காதலுல விழுந்துட்டா! அதுவும் யாரோட? முன்பின் பார்த்திராத யாரோ ஒரு பையன், பைக்குல சாரட் வண்டி பின்னாடியே வந்தவன் மேல காதல் வசப்பட்டுட்டா! அவனை

அவள் பார்க்கவேயில்லை! நான்தான் அந்தப் பையன் நம்ம பின்னாடியே வர்றான்னு அவளுக்கு காட்டினேன்."

"அவனைப் பார்த்ததுமே, மயங்கிட்டா! இத்தனைக்கும், எங்க சாரட்டுக்கு பின்னாடி அழகர் கோடங்கி சைக்கிளுல வந்துகிட்டு இருந்தாரு! அந்த பையன் ரேணுகாவைப் பார்த்தபடி பைக் ஓட்டிகிட்டு இருந்தான். எதிர்ல ஒரு பஸ் வேகமா வந்ததை கவனிக்காம, அவன் ரேணுகாவையே பார்த்துகிட்டு பைக்கை ஓட்டினான். ரேணுகா அலறிட்டா. அவன் தன் பைக்கை எங்க வண்டி மேல மோத, அச்சு முறிந்து சக்கரம் உருண்டோடி போச்சு! வண்டி குடைசாய்ந்தது! நான் மறுபக்கமா குதிச்சுட்டேன் ஆனா.. ரேணுகா சுதாரிக்கறதுக்குள்ளே வண்டி உடைஞ்சு போச்சு. கீழே விழுந்த ரேணுகாவை அந்தப் பையன் பிடிச்சுக்கிட்டான். இந்தக் காட்சியை பார்த்தும் கோடங்கிக்கு பயங்கர கோபம்! அந்த பையன் கிட்டே சண்டைக்கு போனாரு! அவன் எவ்வளவு சமாதானம் சொல்லியும் அவர் கேட்கலை. அப்ப ரேணுகா ஒரு அணுகுண்டை தூக்கிப் போட்டாள். சுத்தி நின்ற கிராமத்து ஜனங்க எல்லாரும் ஸ்தம்பிச்சு போயிட்டாங்க!" குலதனம் கூற, அவள் குரல் நடுங்கியது.

# அத்தியாயம் 17

நரேனின் கண்களில் பரவசம் மிகுந்திருந்தது.

"நான் எவ்வளவு சமாதானம் சொல்லியும் அந்த பூஜாரி கேட்கலை! வேண்டும் என்றே நான் அந்த சாரட் வண்டியில் மோதினதா சொன்னாரு. அப்பதான் ரேணுகா ஒரு பாம்ஷெல் போட்டாள். நான் மட்டுமில்லை! சுத்தி நின்ற கிராமத்து ஜனங்க எல்லோருமே திகைச்சு போயிட்டாங்க!" நரேன் கூற, அனைவரும் அவரை ஆவலுடன் பார்த்தனர்.

"வாட் வாஸ் த பாம்ஷெல்?" சுபாங்கி தாளமாட்டாமல் கேட்டு விட்டாள்.

"கோடங்கி! நான்தான் இவரை என் பின்னாடி வரச் சொன்னேன்! இவரை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு! என்னை தேனுகாம்பாளா நினைச்சீங்கன்னா, இவரை காமேஷ்வர சாமியா நினையுங்கனு.. அந்தப் பொண்ணு சொன்னதும், அந்த பூசாரி 'ஆ'ன்னு வாய் விட்டு அலறிட்டார். ஜனங்களும் 'கிசுகிசு'ன்னு தங்களுக்குள்ள பேசிக்கிட்டாங்க! பிறகுதான் எனக்கு தெரிஞ்சது! அந்த ஊர் கோவில் ஈஸ்வரனோட பெயர் காமேஷ்வரன்! அம்மன் பெயரு தேனுகாம்பாள்னு! இதைவிட தன் காதலை யாரால அழகா தெரிவிக்க முடியும்?

ரேணுகாவைப் பார்த்த பிறகு, மெடிக்கல் கேம்ப்புக்கு திருவனந்தபுரம் போகிற எண்ணம் கைவிட்டுட்டேன்."

"நான் ரகசியமாக ரேணுகாவை பின்தொடர்ந்தேன் பாண்டியம்மன் கோவிலுல பூஜை நடத்துகிட்டு இருந்த போதே அவளோட அப்பாவும், சகோதரர்களும் அவசரமாக வந்துட்டாங்க. அவ்வளவுதானம்மா! என் வயத்துல் பாலை வார்த்தாய்ன்னு சொல்லிவிட்டு அவ அப்பா அவளை அழைச்சிட்டு போய்ட்டாரு! ஐ காட் கன்ஃப்யூஸ்டு! நிஜமாவே அந்தப் பொண்ணு என்னை லைக் பண்ணினாளா, இல்லை அந்த கோடங்கியை கேலி செய்யறதுக்காக அப்படி சொன்னாளான்னு தெரியாமா மனசு சங்கடப்பட்டது. உண்மையை தெரிஞ்சுக்கணும்னு திருவனந்தபுரம் பயணத்தை கேன்சல் செய்துட்டு, புதுக்கோட்டையிலேயே ரூம் எடுத்துட்டு தங்கிட்டேன்!"

"அப்புறம் என்னாச்சு!" ஹம்ஸவர்த்தினி படபடத்தாள்.

"கதையே கேட்கிற உனக்கே, இவ்வளவு படபடப்பா இருக்கே! எனக்கு எப்படி இருக்கும்? என் கண் முன்னாடி அவளோட உருவம் நிழலாடிக்கிட்டே இருந்தது. அந்தப் பொண்ணோட பெயரு கூட எனக்கு தெரியாது! ஆனா.. அவதான் இனிமே எனக்கு எல்லாம்ங்கிற நிலைக்கு

வந்துட்டேன். எப்படியாவது அவகிட்டே பேசணும்னு துடிச்சேன்."

"அப்ப கிராமத்துப் பொண்ணுங்க சிலர் அவகிட்டே தங்களது பிரச்னைகளை சொல்லிக்கிட்டு இருந்தாங்க! ஒரே ஒரு பொண்ணு மட்டும் அழுது தனது பிரச்னையை தனியாத்தான் சொல்லுவேன்னு சொன்னதால, அந்தப் பொண்ணை அழைச்சுட்டு, நான் பதுங்கி இருந்த மரத்துக்கு கீழே வந்து நின்னா!"

"அந்தப் பொண்ணு அழுதுகிட்டே தான் தனது புகுந்த வீட்டுல படற கஷ்டங்களை சொல்லிக்கிட்டு இருந்தது. நான் ஓசைப்படாம மரத்தின் பின்னால் இருந்து எட்டிப் பார்த்தேன். சரியா, என் பக்கமா பார்த்துக்கிட்டிருந்த ரேணுகாவோட முகத்துல பட்டுட்டேன் அவள் என்னை அடையாளம் தெரிஞ்சுகிட்டா."

"அந்தப் பொண்ணுகிட்டே எல்லாம் சரியாகி விடும்னு சொல்லிட்டு தியானம் செய்ய ஆரம்பிச்சாள். என்னடா, திடீர்னு தியானம் செய்யறாளேன்னு நான் குழம்பி நின்னேன். திடீர்னு அவள் பேச ஆரம்பித்தாள்."

"இதோ பாருங்க! உங்களை நான் பார்த்துட்டேன். நீங்க பைக் ஓட்டிகிட்டு எங்க பின்னால வந்தப்பவே நான்

உங்களைப் பார்த்துட்டேன். உங்ககிட்டே என் மனசையும் பறி கொடுத்தாச்சு! ஆனா எங்க ஊர் நம்பிக்கைப்படி, நான் ஒரு தெய்வ அம்சம் பொருந்தினவ! அதனால என் வாழ்க்கையில காதல், கீதல் கல்யாணமெல்லாம் கிடையாது! நேரத்தை வீணாக்காம, உங்க வழியே போய்க்கிட்டு இருங்க. பின்னால வர்ற வேலையெல்லாம் வச்சுக்காதீங்க! எங்க குடும்பம் ரொம்ப மோசமானது. அவ்வளவுதான் என்னால சொல்ல முடியும்னு சொல்லிட்டுத் திரும்ப கோவிலுக்கு போயிட்டா.." நரேன் கூற வனமாலி அவனை ஆர்வத்துடன் பார்த்தார்.

"இப்பதானப்பா.. கதையில சூடு பிடிக்குது.." என்றார். மீண்டும் போர் புதிதாக ஆர்டர் செய்யப்பட்ட ஐட்டங்களை கொண்டு வந்து மேஜை மீது பரப்ப, சிறிது நேரம் மௌனம் சாதித்தார், நரேந்திரநாத்.

பேரர், அப்பால் நகர்ந்ததும், சுபாங்கி ஆர்வத்துடன் கேட்டாள்.

"வாட் ஹேப்பண்ட் தென்?"

"அந்தப்பொண்ணு இப்படி சொன்னதும் எனக்கு பைத்தியம் பிடிச்சது போல ஆயிட்டேன்! அவள் பாட்டுக்கு பேசிட்டு போயிட்டா! ஆனா என்னால அவளைப் பத்திய நினைவுகளை தள்ள முடியலை. வேற என்ன செய்யறதுன்னு

அந்த புதுக்கோட்டை ரூம்லயே அடைஞ்சு கிடந்தேன். எப்படியாவது இன்னும் ஒரு முறை அவளைப் பார்த்துப் பேசணும்னு நினைச்சுக்கிட்டு இருந்தபோதுதான் நான் தங்கியிருந்த அதே லாட்ஜ்ல ஒரு அண்ணன் தம்பி தங்கியிருந்தாங்க அவங்க ஆரம்பிக்கிற புதுத் தொழிலுக்கு ரேணுகாவோட ஆசிர்வாதம் வாங்கறதுக்காக கோவூர் போகப் போறதை தெரிஞ்சுக்கிட்டு அவங்ககிட்டே பேச்சு கொடுத்தேன். அப்பதான் அவள் பெயர் ரேணுகான்னு தெரிஞ்சுகிட்டேன்."

"ரேணுகாகிட்டே ஆசி வாங்கறதுக்காக அவங்களோட நானும் வரலாமான்னு கேட்டேன். அவங்க சம்மதம் தரவே அவங்ககூட கோவூர் போனேன். பெட்டி நிறைய பணத்தை காணிக்கையாக தந்து அவங்க ஆசி கேட்டதும் ரேணுகாவோட குடும்பத்தாருக்கு அவங்க மேல நல்ல மதிப்பு. கூடப்போன என்னையும் மரியாதையா வாவேற்று உட்கார வச்சாங்க. புலியோட குகைக்குள்ளயே நான் போய் உட்கார்ந்துட்டேன். என் கண்கள் ரேணுகாவோட. தரிசனத்துக்காக அலை பாய்ந்தது. இப்படியும் அப்படியுமான என் கண்கள் சுற்ற, மாடியிலிருந்து இறங்கி வந்தாள் ரேணுகா."

"என்னைப் பார்த்ததுமே அவள் கண்கள்ல லேசா ஒருவித பதற்றம்."

"'இவரு யாரு?' என்று என்னைப் பார்த்து ரேணுகாவோட அப்பா தான்தோணி பாண்டியன் கேட்டார். எனக்கு வாய் உலர்ந்து போச்சு! நல்லவேளை! என்னை அழைச்சுட்டு போனவங்க இவரு எங்க நண்பர்னு சொல்லிட்டதால் விஷயம் அதோடு போச்சு."

"ரேணுகா! இவங்க உன்கிட்ட ஆசி வாங்க வந்திருக்காங்க. அவங்களுக்கு எல்லா முயற்சியிலயும் வெற்றி கிடைக்கட்டும்னு ஆசி கூறுமா!" தன் தந்தை சொல்ல, ரேணுகா அப்படியே கூறினாள்.

"அவளுடைய அந்த வார்த்தை எனக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியது."

"ரொம்ப நன்றிங்க! உங்களுடைய வார்ததைகள் எனக்கு பெரும் நம்பிக்கையை தர்றதுங்க"ன்னு என்று நான் சொன்னதும் அவள் முகத்தில் அந்த புன்சிரிப்பு.

"'மோர் குடிச்சுட்டு கிளம்புங்க!' என்று தான்தோணி வேலைக்காரனிடம் மோர் கொண்டு வரச்சொன்ன சமயம், சிவபூஜையில் கரடி நுழைஞ்சது.." நரேன் கூறினார்.

"அப்படின்னா?" சந்தீப் வியப்புடன் கேட்டான்

"எந்தக் கோடாங்கி என்னோட தகராறு செஞ்சாறோ அந்தக் கோடங்கி பெரிய வீட்டக்குள்ளாற வந்தார். அவர் என்னை உடனே அடையாளம் கண்டுக்கிட்டாரு!" என்று நரேன் சொல்ல.

"மைகாட்!" என்று மற்ற நால்வரும் ஏகசமயத்தில் சொல்ல, தாஜ் க்ளப் ஹோட்டலில் ஒயாஸிஸ் ஹாலில் உணவு அருந்திக் கொண்டிருந்த மற்ற மேஜைகளில் அமர்ந்திருந்தவர்கள், வியப்புடன் இவர்கள் பக்கமாக திரும்பினார்கள்.

# அத்தியாயம் 18

குலதனம் பெருமூச்சுடன் கதையை தொடர்ந்தாள்.

"அந்தப் பையன் பெயர் நரேந்திரநாத்! நரேன்னுதான் ரேணுகா கூப்பிடுவா! அவன் இன்னும் ரெண்டு பேரோட, ரேணுகாவை சந்திக்க வீட்டுக்கே வந்து ஹாலுல உட்கார்ந்துட்டான். ரேணுகாவுக்கு பயங்கர அதிர்ச்சி! இருந்தாலும் ஒண்ணும் காட்டிக்கலை! அப்பாவியா அவங்களுக்கு ஆசி கூறினாள். சரியா அந்த சமயத்துல அழகர் கோடங்கி உள்ளே வந்துட்டார். அந்த பையன் நரேன் ஹாலுல உட்கார்ந்திருந்ததை பார்த்து அதிர்ச்சி அடைஞ்சு ட்டாரு!"

"பாண்டி! அந்தப் பையன்தான் அன்னைக்கு மோட்டார் சைக்கிளை கொண்டு வந்து சாரட் வண்டியில இடிச்சுட்டு, தகராறு செஞ்சான்! என்றதுமே தந்தையும், மகன்களும் உஷாரானார்கள். ஆட்களை அழைத்து மூணு பேரையும் கம்பத்துல கட்டிப் போட்டுட்டாங்க."

"தொழில் ஆரம்பிக்கறதுக்காக உண்மையில ஆசி வாங்க வந்தவங்க, அதிர்ச்சியடைஞ்சுட்டாங்க. ஐயா! இந்த ஆள் யாருன்னு எங்களுக்கு தெரியாது. ரேணுகாம்மாகிட்ட ஆசி வாங்கணும்! உங்க வரலாமான்னு கேட்டார்! எங்களுக்கு இவரைப் ஒண்ணும் தெரியாததால் சரின்னு சொன்னோம். மத்தபடி இவருக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லைன்னு இரண்டு பேரும் சொன்னாங்க! அவர்களை அவிழ்த்துவிட்டு நரேனை மட்டும் தூணுல கட்டிப் போட்டிருந்தாங்க!"

"ரேணுகாவோட அப்பா நரேனை எதுக்காக வீட்டுக்கு வந்தேன்னு கேட்டதும் அந்தப் பையன் கொஞ்சம்கூட பயப்படலே!"

"உங்க பெண்ணை எனக்கு பிடிச்சிருக்கு! நான் பட்டணத்துல டாக்டர் படிப்பு படிக்கிறேன்! எனக்கு உங்கப் பெண்ணைக் கட்டி கொடுங்கன்னு நேரிடையாகவே கேட்டுட்டான். அவ்வளவுதான்! அதற்கு பிறகு, அந்தப் பையனுக்கு விழுந்த அடி, உங்க அடி எங்க அடி இல்லை, இரவு வரைக்கும் அவனை பெல்ட்டால விளாசிகிட்டே இருந்தாங்க! ராத்திரி அவனை அவிழ்த்துவிட்டு, அடிச்சு விரட்டிட்டாங்க! பாவம்! உடம்பு தள்ளாடியபடி வீட்டுக்கு போனான்."

"ரேணுகாவும், நானும் மாடி ஜன்னல் வழியா அவன் போறதைப் பார்த்தோம்!"

"இதுவரைக்கும் நான் அந்தப் பையனை லவ் செய்யலாமா, வேண்டாமான்னு தான் யோசிச்சுட்டு இருந்தேன். இனிமே, நான் அவனை வெறித்தனமா காதலிக்கப்போறேன்னு சொன்னாள், ரேணுகா."

குலதனத்தின் உடல் ஒரு முறை தூக்கிவாரிப் போட தமயந்தி அவளை கலவரத்துடன் பார்த்தாள்.

"அப்புறம் என்னாச்சு குலதனம்?"

"ரேணுகா தான் சொன்னபடியே அந்தப் பையன் நரேனை காதலிக்க ஆரம்பிச்சா! டாக்டருக்கு படிக்கிற பையன்தானே! பொண்ணோட ஆசையை நிறைவேத்திடாலாம்னு பாஞ்சாலியம்மாள் கதறி அழுதாங்க."

"பொண்ணுக்கு கல்யாணம் நடந்தா. நம்ம குடும்பம் எல்லா பாக்கியங்களையும் இழந்து அவளோட புருஷனின் குடும்பத்துக்கு போயிடும் பரவாயில்லையான்னு ஆவேசத்தோட கேட்டாரு, தான்தோணி பாண்டி!"

"இருக்கிற செளபாக்கியம் போதாதா.."ன்னு பாஞ்சாலி யம்மா கேட்டாங்க.

"போதாது! குடும்பத்துக்கு படியளக்குற காமதேனுவை இன்னொரு குடும்பத்துக்கு நான் தர மாட்டேன். ரேணுகா காலம் பூரா கன்னியாகத்தான் வாழப்போறா.."ன்னு.. தான்தோணி பாண்டி கூப்பாடு போட, எல்லோருமே அதிர்ந்துப் போயிட்டாங்க! தன் அப்பா சொன்னதைக் கேட்டு, ரேணுகா துடிச்சுப் போயிட்டாள். அப்ப எனக்குன்னு ஆசாபாசங்கள் இருக்கக்கூடாதா? தைரியமாக அப்பாகிட்டே போய் நின்னு கேட்டாள்.

அவள் அப்படி கேட்பாள் என்று தான்தோணி எதிர்பார்க்கவில்லை துணிந்து தன் மகள் கேள்வி கேட்டதும், அவருடைய கோபம் இரட்டிப்பு ஆனது.

"தெய்வம் மத்தவங்களோட ஆசாபாசங்களை நிறைவேத்தணுமே தவிர, அதுக்கு தனிப்பட்ட ஆசாபாசங்கள் இருக்கக்கூடாது."

தான்தோணி இப்படி சொன்னதும் ரேணுகா கோபத்தோட தந்தையைப் பார்த்தாள்.

"நான் ஒண்ணும் காரைக்கால் அம்மையாரோ, அவ்வையாரோ இல்லை. அந்தப் பையன் நரேன்தான் என் புருஷன். நான் அவனை கல்யாணம் கட்டிக்கத்தான்

போறேன்!" என்று பகிரங்கமாக சொல்லிவிட்டு தன் ரூமுக்குள்ளே போய் கதவை தாழ் போட்டுக்கிட்டாள்.

"ஏதோ கோபத்துலதான் அவள் அப்படி பேசறாள்னு எல்லோருமே நினைச்சாங்க! ஆனா.. அடுத்த வாரம்.. ஒரு நாள்.. அந்த விரும்பதாகத சம்பவம் நடந்து போச்சு!" குலனதம் கூறினாள்.

"என்னாச்சு?" தமயந்தி பதைபதைத்தாள்.

"எல்லோர் கண்ணுலயும் மண்ணைத் தூவிட்டு, ஒரு நாள் நடுராத்திரி, அந்தப் பையன் நரேன் இருந்த புதுக்கோட்டைக்கு ஓடி போய்விட்டாள், ரேணுகா."

குலதனம் இவ்வாறு சொன்னதும் உறைந்து போனாள், தமயந்தி.

விஷயம் தெரிஞ்சதும், கோவூரே பதறியது. பெரிய குடும்பத்தினர் ஆட்களை அனுப்பி ரேணுகாவை தேடியது. ஆனால் அவளோ நரேன் தங்கியிருந்த லாட்ஜுக்கே நேராக போயிட்டாள்..!

"அப்புறம்.." தமயந்தியின் குரல் சுரத்தில்லாமல் ஒலித்தது.

# அத்தியாயம் 19

"அப்புறம்.. என்னாச்சு?"

சந்தீப், சுபாங்கி, ஹம்ஸா மற்றும் வனமாலி நால்வரும், சாப்பிடக்கூட மறந்து, நரேனின் வாயையே பார்த்துக் கொண்டிருந்தனர். கடைசித் துண்டம், கோபி மஞ்சூரியனை நிதானமாக ரசித்து விழுங்கிய நரேன், காலி ப்ளேட்டை அப்பால் தள்ளிவிட்டு, டிஷ்யூஸிலிருந்து ஒன்றை உருவி, நாசூக்காக தனது உதடுகளை ஒற்றிக் கொண்டார்.

"சொல்லுடா நரேன்! டோண்ட் ப்ளே வித் அவர் பேஷண்ஸ்.." ஹம்ஸா துடிக்கும் தனது இதயத்தை நிதானப்படுத்த கோபத்தைக் காட்டினாள்.

நால்வரையும் மாற்றி மாற்றி பார்த்தார், நரேன்!

"அடுத்தது என்ன சாப்பிடறீங்க!" நிதானமாகக் கேட்டார், நரேன்!

"ஹெல் வித் யுவர் பார்ட்டி அங்கிள்!" கதையை சொல்லுங்க! சுபாங்கி கெஞ்சினாள்.

"நீ ஹனிமூனுக்கு போயிட்டு வா! மிச்ச கதையை சொல்றேன்!" நரேன் கேலியுடன் சொன்னார்.

"ஹனிமூன் கேன்சல்ட்! நீங்க கதையை மேலே சொல்லலேன்னா, நாங்க இங்கேயிருந்து நகர மாட்டோம்!" சந்தீப் சொன்னான்.

"நீ சொல்லலேன்னா, நான் இப்பவே கோவூருக்கு போய், பெரிய குடும்பத்துக்கிட்டே மிச்ச கதையை கேட்பேன்!" வனமாலி தன் பங்குக்கு மிரட்டினார்.

"சொல்றேன்! சொல்லாம, எங்கே போகப் போறேன்! உங்க எல்லோரையும் என் காதல் கதை இம்ப்ரஸ் பண்ணிட்டதாக்கும்!" நரேன் புன்னகைத்தார்.

"ரியலி அங்கிள்! வெரி அட்வென்சரஸ்! உங்களை மாதிரியெல்லாம் சந்தீப் ஹீரோ கிடையாது!" சுபாங்கி கூறினாள்.

"அங்கிள் மாதிரி எனக்கும் பேரழகோட காதலி கிடைச்சிருந்தா நானும் ஹீரோவா இருந்திருப்பேன்.." சந்தீப் கூற, ஒரு டிஸ்யூ கசக்கப்பட்டு பந்தாக பறந்து வந்து அவன் முகத்தை தாக்கியது.

"நோ.. வயலன்ஸ்! நான் மீதி கதையை சொல்லிடறேன்!" என்றபடி அந்த குறிப்பிட்ட நாளின் சம்பவங்களை அசைப்போடத் துவங்கினார் நரேன்!

# அத்தியாயம் 20

முருடிஸ் மேன்ஷனின் முதல் மாடி நான்காம் எண் அறை தட்டப்பட்டது. அப்போதுதான் உறங்கத் துவங்கியிருந்த நரேன் தளர்ந்திருந்த தனது பைஜாமா நாடாவை அவிழ்த்து கட்டியபடி, கதவை நோக்கி நடந்தான்.

தூக்க கலக்கத்தில் கதவை திறந்தவன் வாய் பிளந்து நின்று விட்டான்.

ரேணுகாதான் கையில் சிறு பையுடன் நின்றிருந்தாள்.

"என்ன.. ரேணு.. இந்த சமயத்துல அதுவும் இங்கே..!" வார்த்தைகள் கோர்வையாக வெளி வராமல், உடைந்து போய் அவனது திறந்த வாயில் இருந்து தெறித்து விழுந்தன.

"நான் என்ன செய்யட்டும், நரேன்! நீங்க பாட்டுக்கு பைக்குல போயிருந்தீங்கனா இன்னைக்கு எந்த பிரச்னையும் ஏற்பட்டு இருக்காது! காமதேனுவின் அம்சமாக இருந்த என்னை நந்திகேஸ்வரரா வந்து என் மனசுல சலனங்களை உண்டு பண்ணிட்டீங்க வீட்டுல இருந்தா, எனக்கு கல்யாணம் எல்லாம் செய்யமாட்டாங்க! இப்படி தைரியமா வெளியே கிளம்பினாதான் எனக்கு நல்லது நடக்கும்னு இருக்கிறப்ப

வந்துதானே ஆகணும். என்னை உங்களால கல்யாணம் கட்டிக்க முடியுமா.. முடியாதா? முடியாதுன்னு சொன்னா இப்பவே திரும்பி வந்த வழியே ஓசைப்படாம போய் என் ரூம்ல போய் படுத்துகிட்டு, காலையில என்னோட தெய்வீக பணிகளை தொடர்ந்து செய்யறேன்..!"

வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டாக பேசியபடி நின்றாள் ரேணுகா.

ஒரு பெண்ணுக்கு இவ்வளவு துணிச்சல் இருக்கும் போது ஆணாகிய நரேன் யோசித்துக் கொண்டு இருப்பது நியாயமா? அவன் மனசாட்சி கேள்வியாக எதிரொலித்தது.

"ரேணு! கண்டதும் காதல்னு உன்னைய பார்த்த மாத்திரத்துலயே நீ எனக்குத்தான் முடிவு செஞ்சுட்டேன். உன் கிட்டே ஒளிவுமறைவு எல்லாம் கிடையாது. நான் லோயர் மிடில் க்ளாஸ்! அப்பா இருக்கார். அம்மா கிடையாது! அக்கா ஒருத்திதான்! அவளும் கல்யாணம் செஞ்சுக்காம, டாக்டர் தொழிலுக்கு தன்னை அர்ப்பணிச்சுட்டாள்! ஆனா, என்னால் ஒரு கியாரண்டி தர முடியும்! நான் பெரிய டாக்டரா நிச்சயம் முன்னேறுவேன்! உன் குடும்பத்தார் உன்னை வச்சிருக்கறதைவிட, இன்னும் சிறப்பா உன்னை என்னால வச்சு காப்பாத்த முடியும்! என் மேல நம்பிக்கை இருக்குன்னு நீ

சொன்ன அடுத்த நிமிஷமே நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கிறேன்!" நரேன் சொல்லி முடித்திருக்க மாட்டான்.

"முழு நம்பிக்கை இருக்கு! உடனே கல்யாணம் பண்ணி குடும்பத்தை ஆரம்பிக்கலாம்! அப்பத்தான் நிம்மதியா இருக்க முடியும்!"

கோடங்கி அடிக்கடி தன் தந்தையிடம் சொல்ல வந்ததை ரேணுகாவும் கேட்டிருக்கிறாளே! ஆண் வாடை ரேணுகாவை சேரக்கூடாது! எப்போது ஆணுடம் உறவுக் கொள்கிறாளோ, அப்போது ரேணுகாவில் பாக்கியங்கள் எல்லாம் காணாமல் போய்விடுமே பாக்கியங்கள் இல்லாத ரேணுகாவை அவள் குடும்பம் திரும்பியும் பார்க்காது என்பதை அவள் உணர்ந்திருந்தாள். எனவேதான், தனது பாக்கியங்களை சீக்கிரமாகவே இழப்பதற்கு அவள் தயாராக இருந்தாள்.

"உடனடியாக திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்!" உத்தரவிட்டபடி விடுவிடுவென நடந்து வந்து அவனது அறையில் இருந்த நாற்காலியில் தொப்பென்று அமர்ந்துகொண்டாள் ரேணுகா.

அவளது வேகத்தையும், உடனடியாக முடிவுகளை எடுக்கும் தன்மையையும் கண்டு அயர்ந்துப் போன நரேன்.

தன் பின்னால் கதவைச் சாற்றிக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தான்.

ரூம்பாய் பிச்சாண்டி கீழே ஸ்டூல் ஒன்றில் அமர்ந்து கொண்டு பேசும்படம் பத்திரிகையை புரட்டிக் கொண்டிருந்தான்.

"பையா!" நரேன் மாடியில் இருந்த அழைத்ததும், பேசும்படத்தை ஸ்டூல் மீது வைத்துவிட்டு வேகமாக வந்தான்.

அவன் கண்கள் மூடியிருந்த நரேனின் ரூம் கதவையே வெறித்தது.

"என்னங்க சார்? உங்க ஆளா?" பிச்சாண்டி கேட்டான்.

"ஆமாம்! உடனடியா நாங்க கல்யாணம் செஞ்சுக்கணும்! பக்கத்துல கோவில் ஏதாவது இருக்கா?" நரேன் கேட்டான்.

"சார்! உங்க காதல் வில்லங்கமான காதல்னா இந்த ஊருல கலியாணம் பண்ணிக்காதீங்க! இந்த மாதிரி கல்யாணங்களுக்கு ஏத்த இடம் திருமயம் கோட்டை பைரவர் கோவில்தான். அங்கே யாரும் வரமாட்டாங்க! அங்கே போய் கல்யாணம் கட்டிக்கிட்டீங்கனா, வர்ற எதிர்ப்புகளை சமாளிக்க முடியும்."

"சரி! அங்கே போகறதுக்கு வண்டி ஏதாவது கிடைக்குமா?" நரேன் பரபரப்புடன் கேட்டான்.

"நம்ம தோஸ்த் வண்டியே இருக்குது சார்! பாபுன்னு பெயரு! அம்பாசிடர் கார் வச்சிருக்கான். கூப்பிடவா?" பிச்சாண்டி கேட்க, நரேன் தலையசைத்தான்.

உடனடியாக -

திருமயத்திற்கு புறப்பட்டனர். ரேணுவும் நரேனும் கோட்டை பைரவர் கோவிலில் திருமணத்தை முடித்துக் கொண்டு, அதே காரில் நேராக கன்னியா குமரிக்கு பறந்து விட்டனர்.

அன்றிரவே -

ரேணுகாவுடன் புதிய வாழ்க்கையை துவக்கி விட்டான் நரேன். பாக்கியங்கள் நிலைப்பதற்கு ரேணுகாவுக்கு எவை எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும் என்று கோடங்கி கூறியிருந்தாரோ, அவையெல்லாமே அன்றிரவு அவளுக்கு கிட்டிவிட்டது.

விளைவு -

அன்று இரவு, பெய்த மழையில், காமேஷ்வரர் கோயில் கோபுரத்தை இடி தாக்கி, மண்கலசங்கள் இடிந்து விழுந்தன.

பெரிய குடும்பத்தின் அரிசி கிடங்கில் திடீரென்று தீ விபத்து ஏற்பட்டு, மலையாக அடுக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் தீயில் கருகின.

தான்தோணி பாண்டி மகளைக் காணாமல் கோபத்துடன் மாடிப்படியிறங்க, தவறி விழுந்து இடுப்பை உடைத்துக் கொண்டார். இறக்கும் வரை அவர் வீல்-சேரில்தான் இருந்தார்.

பாஞ்சாலிக்கு நூறு ஏக்கர் மஞ்சகாணி நிலத்தை தருவதாக கூறியிருந்த அவளது தந்தை திடீரென மாரடைப்பால் இறந்துபோக, இனி சொத்து கிடைக்காது என்கிற நிலை உண்டானது.

எல்லா எதிர்மறை நிகழ்வுகளுக்கும் காரணம் ஓடிப்போன ரேணுகாதான் என்று அழகர் கோடங்கி பகிரங்கமாக அறிவிக்க, தாங்கள் பாக்கியங்களை இழந்து வருவதை உணர்ந்த பெரிய குடும்பத்தின் கோபம் ரேணுகா மற்றும் நரேனின் மீது பாய்ந்தது.

தாங்கள் பாக்கியங்களை இழந்து விட்டோம் என்றால் ரேணுகா இல்லறத்தில் ஈடுபடத் துவங்கி விட்டாள் என்பதுதான் பொருள் என்று குடும்பத்தினருக்கு தெரியாதா என்ன?

அவள் மட்டும் கையில் கிடைத்தால் வெட்டி பலி போட்டு விடுவோம்! என்றபடி ரகசியமாக அவளைத் தேடிக் கொண்டிருந்தனர்.

சரியாக தோழி குலதனத்திற்கும், சிவநேசனுக்கும் திருமணம் நடந்தது. தான் கன்யாகுமரியில் இருப்பதாகவும், தன்னால் அவளது திருமணத்திற்கு வர முடியவில்லையே என்கிற வருத்தத்தை தெரிவித்து அவளுக்கு கடிதம் எழுதியிருந்தாள் ரேணுகா!

கோவூர் போஸ்ட் மாஸ்டர், ரேணுகாவின் குண்டு குண்டான கையெழுத்தினைக் கண்டதும் பெரிய குடும்ப சகோதர்களுக்கு சேதி சொல்ல, லெட்டரைக் கொண்டு ரேணுகாவின் இருப்பிடத்தை அறிவதற்கு அவர்களுக்கு ஒன்றும் சிரமமாகவே இல்லை.

சகோதரர்கள் நால்வரும், கன்னியாகுமரியில் ரேணுகாவும், நரேனும் குடும்பம் நடத்திய ஜாகையின் முன்பாக சென்று நின்றபோது, திருவனந்தபுரத்தில் தன் படிப்பு நிமித்தமாக ஒரு செமினாரில் கலந்து கொண்டிருந்தான், நரேன்.

"**நா**ன் திருவனந்தபுரத்திலிருந்து திரும்பி வந்தபோது வீட்டுக் கதவுகள் திறந்தே இருந்தது. அதற்கப்புறம் நான் ரேணுகாவை பார்க்கவே இல்லை." நரேனின் குரல் உடைந்தது.

"கோவூர் போய் அவளைப் பார்க்க முயற்சி பண்ணலியா?" சுபாங்கி கேட்டாள்.

"இல்லை! அதற்குள் அவள் சூஸைட் செஞ்சுகிட்ட தகவல் எனக்கு வந்தது!" நரேன் கூற, அங்கே ஆழ்ந்த மௌனம் நிலவியது. தம்பியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஹம்ஸவர்த்தினியின் கண்களில் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

"**ரே**ணுகா.. தற்கொலை செஞ்சுகிட்டாளா? இல்லை.. அவ அண்ணன்மார்களால தீர்த்துக்கட்டப் பட்டாளா?" தன்னை கோபத்துடன் கேட்ட தமயந்தியை ஈரவிழிகளால் பார்த்தாள் குலதனம்.

"நான் என்னன்னு சொல்லுவேன்! கன்னியாகுமரியிலிருந்து அவளை இழுத்து வந்த பாண்டி சகோதரர்கள் அவள் கூந்தலை பிடிச்சு தரதரன்னு உள்ளே இழுத்து போனதைப் பார்த்தேன்.

அன்னைக்குத்தான் ரேணுகாவை கடைசியா பார்த்தேன். அதற்கப்புறம் என் புருஷன் கூப்பிட்டால் கூட நான் அந்தப் பெரிய வீட்டுக்குள்ளே காலை வைக்கிற வழக்கம் கிடையாதும்மா!" கதையை கூறி முடித்த குலதனம் கேவிக் கேவி அழுது கொண்டிருந்தாள்.

தமயந்தி கதையின் சோகத்தால் மனம் கனமடைந்ததாலோ அல்லது தன் மகள் தேனுகாவின் எதிர்காலத்தினை நினைத்து கலங்கியதாலோ அமைதியாக அமர்ந்திருந்தாள்.

இந்த கதை தெரியாமல் காமேஷ்வரனுடன் தியேட்டரில் ஏற்பட்ட எதிர்பாராத சந்திப்பினை மனதினுள் குதூகலத்துடன் அசைப்போட்டுக் கொண்டிருந்தாள், தேனுகா.

# அத்தியாயம் 21

**ந**ரேன் தன் காரை ஹம்ஸவர்த்தினி வீட்டு போர்டிக்கோவில் நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்த போது, ஹால் சோஃபாவில் தம்பதியர் உட்கார்ந்து கொண்டு, டைம்ஸ் நௌவை பார்த்துக் கொண்டிருந்தனர்.

"என்னக்கா! கிராமத்துல செட்டில் ஆகிற ப்ளானை டராப் செஞ்சுட்டியா.. என்ன?" வியப்புடன் கேட்டார், நரேன்.

"என்னை ஒண்ணும் கேட்காதே! எல்லாம் ப்ரொஃபசரோட முடிவு!" என்று தன் சுட்டு விரலை வனமாலியின் பக்கம் நீட்டினாள், ஹம்ஸா.

"ஒய் ப்ரொஃபசர்?" நரேன் கேட்டார்.

"உன் காதல் கதையை கேட்ட பிறகு, அந்த கோவூரில் காலை வைக்கறதுக்கு மனம் விரும்பலை! உன் காதல் நிறைவேறியிருந்தா வீடு வாங்கிண்டு கோவூர்ல செட்டில் ஆகி இருக்கலாம்! பட், உன்னை இவ்வளவு காயப்படுத்திய கோவூர்ல நாங்க வாழ விரும்பலை, பேசாம, அடையார்லயே நிம்மதியா இருக்கலாம்னு முடிவு கட்டிட்டோம்!" வனமாலி சொன்னார்.

"ப்ரொஃபசர்! கோவூர் என்னை காயப்படுத்தினது உண்மைதான்! ஆனா.. அந்தக் கோவூர்தான் எனக்கு வசந்தத்தையும் அடையாளம் காட்டிச்சு! அக்கா! நீ ஒண்ணு தெரிஞ்சுக்கணும்! நான் ஒரு பேச்சலர்னு நீ இத்தனை நாள் நினைச்சுட்டு இருந்தே! என் கதையைக் கேட்ட பிறகு நான் ஒரு விடோயர்னு புரிஞ்சுகிட்டு இருப்பே! பிடிச்சாலும் பிடிக்கலேனாலும், கோவூர் என்னோட மாமியார் ஊர். எனக்கு தனியா அங்கே இருக்க மனசு சஞ்சலப்படுது! ரேணுகாவோட நினைவுகளோட கொஞ்ச நாளைக்கு கோவூர்ல இருக்கணும்னு, ஆசைப்படறேன் அவ்வளவுதான்! ஒரு ஷார்ட் வெக்கேஷன்! நீங்க ரெண்டு பேரும் அங்கே இருந்தால் உங்களை சாக்கிட்டு அங்கே வருவேன்! யூ டோண்ட் நீட் டு பை எ ஹவுஸ் அண்ட் செட்டில் தேர்! சும்மா ஒரு மூணு மாசத்துக்கு நாம மூணு பேரும் ஒரு வீட்டை வாடகை எடுத்துட்டு ஒண்ணா இருப்போம்! என்ன சொல்றீங்க?"

நரேன் கேட்டதும் ஹம்ஸவர்த்தினி உருகிப் போனாள்.

"நரேன்! எங்களுக்கு மட்டும் யாரு இருக்காங்க. உன் சந்தோஷம்தான் எங்க சந்தோஷம்! டோண்ட் வொர்ரி! கோவூர்லயே நாம் ஒரு வீட்டை வாடகைக்கு பிடிப்போம்!" என்றாள் ஹம்ஸா.

பெரிய வீட்டுத் திண்ணையில் பென்சிலை சீவியபடி உட்கார்ந்திருந்த சிவநேசன், பழைய ஹெட்மாஸ்டர் சச்சிதானந்தம் வருவதைக் கண்டதும் மேல்துண்டை இடுப்பினில் கட்டியபடி பணிவுடன் திண்ணையிலிருந்து இறங்கினார்.

"வாங்கய்யா!"

"பெரிய பாண்டி இருக்காரா?" சச்சிதானந்தம் கேட்டார்.

"அண்ணன் தம்பிங்க நாலு பேரும் இருக்காங்க!" என்றபடி இன்டர்காமில் நாலு சகோதரர்களுக்கும் ஹெட்மாஸ்டர் வந்திருக்கும் விவரத்தைத் தெரியப்படுத்தினார் சிவநேசன்.

நாலு பாண்டி சகோதர்களும், கீழ்த்தளத்தில் குழுமி, சச்சிதானந்தத்தை உள்ளே வழி நடத்திச் சென்றார் சிவநேசன்

"வாங்கய்யா!" சகோதரர்கள் அனைவரும் அவரை காலில் விழுந்து பணிந்து வரவேற்றனர்.

"எல்லோரும் நல்லா இருக்கீங்களா?" என்றபடி சச்சிதானந்தம் சோஃபாவில் அமர்ந்தார்.

"உங்க தயவுல நாங்க நல்லா இருக்கோம்யா பெங்களூர்ல இருக்கிற உங்க மவன் நல்லாயிருக்காரா?" பெரிய பாண்டி கேட்டார்.

"அது விஷயமா சொல்லிட்டு, உங்களை பார்த்து, போயிட்டு வரேன்னு சொல்லதாம்பா வந்திருக்கேன். வயசாயிடுச்சு! ஒண்டிக்கட்டையா என்னால இங்கே இருக்க முடியலை! பெங்களூரோட வந்துடுன்னு மவன் கூப்பிடறான். சரி! கடைசி காலத்துல அவன்தானே வாரிப்போடணும்! பிள்ளை கிட்டே போயிடலாம்னு தீர்மானிச்சிருக்கேன்! இப்போதைக்கு வீட்டை வாடகைக்கு விடப்போறேன்! சென்னையில குழந்தை இல்லாத டாக்டர் தம்பதிகள் அமைதியா வாழணும்னு கிராமத்து பக்கம் இடம் தேடிட்டு இருந்தாங்க! அவர்களுக்குத்தான் என் வீட்டை வாடகைக்கு விடறேன்!" என்றார்.

"ஐயா! எங்களை விட்டுப் போறீங்களாக்கும்!" குணசேகர பாண்டி வருத்தப்பட்டான்.

"என்ன பண்ணுறது குணசேகரா? காலம் முடியப் போறது! இன்னும் பழைய ஹோதாவுல வாழ முடியுமா? நீங்க நல்லாயிருக்கணும்பா!"

"உங்களை நினைச்சு நான் ரொம்பவும் பெருமைப் படறேன்!" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, அங்கயற்கண்ணி, சொம்பு நிறைய நீர் மோரை எடுத்து வந்து அவரிடம் நீட்டினாள்.

"தாங்கம்மா!" என்றபடி அவள் தந்த நீர்மோரை வாங்கி, கடகடவென்றுக் குடித்த சச்சிதானந்தம் தனது மேல் துண்டினால் வாயை ஒற்றிக் கொண்டார்.

"அப்புறம் இன்னுமொரு விஷயம்! இப்ப அமைச்சரா இருக்கிற சுந்தரசேகர பெருமாள் என்னோட பழைய மாணவன்னு உங்களுக்கு தெரியுமில்லை.."

"தெரியும் ஐயா!" சகோதரர்கள் தலையாட்டினர்.

"அவன் நேத்து ஒரு விழாவுக்கு வந்திருந்தான். என் கிட்டே கொஞ்ச நேரம் பேசிட்டு இருந்தான். வரப்போற தேர்தல்ல, நம்ம தொகுதியில உங்க நாலு பேருல யாரையாவது நிக்க வைக்கணும்னு அவங்க கட்சியில விரும்பறாங்களாம்! நான் சொன்னா நீங்க கேட்பீங்கன்னுதான் என் மூலமா உங்களை அணுகறாங்க! எனக்கென்னவோ நீங்க இந்த வாய்ப்பை பயன்படுத்தி, நம்ம ஊருக்கு நல்லது செய்யணும்னு படுது! உங்க நாலுபேருல யாராவது எலக்ஷன்ல

நிக்கணும்! யாரு கண்டா! உங்கள் ஒருத்தருல யாராவது மந்திரியா கூட ஆகலாம்! யோசிச்சு முடிவு எடுங்க!"

சச்சிதானந்தம் கூறியதும், சகோதரர்கள் பெருமையுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ரேணுகாவினால் இழந்திருந்த சௌபாக்கியங்கள், இப்போது தேனுகாவினால் மீண்டும் ஒவ்வொன்றாக கிடைக்கத் தொடங்கி உள்ளன. மந்திரியாகும் வாய்ப்பு இவர்களில் ஒருவருக்கு கிடைத்தால் அது தேனுகா அளிக்கும் பாக்கியம்தான்.

உச்சிக் குளிர்ந்துபோன சகோதரர்கள் மீண்டும் சச்சிதானந்தத்தை பணிந்தார்கள். "ஐயா! நீங்கள் என்ன சொல்றீங்களோ, அப்படியே செய்யறோம்!"

"எனக்கு தெரிஞ்சு, உங்க நாலு பேருல துணிச்சல்காரனும், விவேகியும் இசக்கிதான். அவனையே எலக்ஷன்ல நிக்க வையுங்க." என்றதும் சகோதர்கள் பணிவுடன் தலையசைத்தனர்.

"அப்படியே செய்யறோம் ஐயா! பெங்களூர் போனாக்கூட அடிக்கடி வந்து எங்களை வழி நடத்தணும் ஐயா!" பெரிய பாண்டி கூப்பிய கரங்களுடன் சொன்னார்.

"அதுக்கென்னையா! வந்துட்டாப்போச்சு! என் வீட்டு மேல ஒரு கண்ணு வச்சுக்கோங்க! ப்ரொஃபசர் வனமாலி, டாக்டர் ஹம்ஸவர்த்தினின்னு தம்பதிங்க வாடகைக்கு வர்றாங்க!" என்றபடி விடைபெற்றார் சச்சிதானந்தம்.

"சிவநேசன்! ஐயாவை வீட்டுல கொண்டு விட சொல்லுங்க!" என்று வாயிலுக்கு சென்று உத்தரவிட்ட குணசேகரன், பெரிய வீட்டின் காம்பௌண்டுக்குள் பெரிய கார் ஒன்று நுழைவதைக் கண்டு வியப்புடன் நிதானித்தான்.

கேரள எம்.பி. முரளிதர பணிக்கர்தான் வந்து கொண்டிருந்தார். உடன் அவர் மனைவி பார்வதியும், மகள் கன்னிகாவும் வந்தனர்.

காரிலிருந்து இறங்கிய பணிக்கரை பணிவுடன் வரவேற்றான், குணசேகரன்.

"வாங்க.. வாங்க.."

"அங்கிள்! தேனுகா இல்லையா?" கன்னிகா கேட்டாள்.

"இல்லாம எங்கேமா போறா! மாடியில அவ ரூம்ல இருக்கா! போம்மா!" என்றவன், எம்.பி. தம்பதியரை கீழப்போர்ஷனுக்குள் அழைத்துச் சென்றார், குணசேகரன்.

எம்.பி.வந்திருப்பது தெரிந்ததும் மற்ற மூன்று சகோதரர்களும், தத்தம் மனைவிமாருடன் மீண்டும் கீழப்போர்ஷனில் குழும, தேனுகா, தமயந்தியுடன் கன்னிகாவும் மூன்றாம் மாடியிலிருந்து வந்தாள்.

முரளிதர பணிக்கர் நேராக விஷயத்துக்கு வந்தார்.

"என் பொண்ணு கன்னிகாவுக்கு கல்யாணம்! மாப்பிள்ளை திருநெல்வேலிகாரன். அர்ஜுன் இன்டஸ்ட்ரீஸ் அதிபர் பாலு கோபியோட மகன் அர்ஜுனுக்கு தான் கன்னிகாவை கொடுக்கிறேன். அடுத்த ஞாயிற்றுக்கிழமை குருவாயூர்ல கல்யாணம். குடும்பத்தோட எல்லோரும் வரணும்.." ஒவ்வொரு சகோதரருக்கும் தனித்தனியாக அழைப்பிதழை நீட்டினார்.

"இங்க ஒண்ணும் கிடையாதா?" பெரிய பாண்டி யோசனையுடன் கேட்டார்.

"இங்கே திருநெல்வேலியில பிள்ளை வீட்டுக்காரங்களும், நாங்களும் சேர்ந்து ஒரு ரிசப்ஷன் கொடுக்கிறோம்.." என்றதும் சகோதர்களின் முகம் மலர்ந்தது.

"பணிக்கர்! தப்பா எடுத்துக்காதீங்க! அறுவடை நேரம்! நிச்சயமா குடும்பத்தோட திருநெல்வேலி ரிசப்ஷனுக்கு வர்றோம்!" பெரிய பாண்டி கூற, எம்.பி.யின் மனைவி பார்வதி இடைமறித்தாள்.

"அப்படின்னா ஒரு கண்டிஷன்! கன்னிகா தேனுகாவை கல்யாணத்துக்கு அனுப்பணும்! குருவாயூர் கல்யாணம் முடிஞ்சு, நாங்களே பத்திரமா உங்க பொண்ணை உங்கக்கிட்ட சேர்த்துட்றோம்!"

"அது வந்து..!" பெரிய பாண்டி தயங்க, எம்.பி.யே கோரிக்கையை வைத்துவிட்டார்,

"அதெல்லாம் முடியாது! தேனுகா எங்க வீட்டுப் பெண்! சௌபாக்கியலட்சுமி! அவ எங்களோட வந்தாதான் கன்னிகா சந்தோஷமா வாழ்வாள்!"

"நீங்க தேனுகாவை எங்களோட அனுப்பறீங்க! குணசேகரன்! அடுத்த வெள்ளிக்கிழமை ராத்திரி பார்வதியே வந்து தேனுகாவை அழைச்சுகிட்டு போவாள்! அப்ப நாங்க கிளம்பறோம்! எல்லோரும் திருநெல்வேலி ரிசப்ஷனுக்கு வந்துடுங்க.." என்று விடைபெற்றனர், எம்.பி. தம்பதிகள்.

பணிக்கரின் கார் கிளம்பி போனதும் தமயந்திதான் பேச்சைத் துவக்கினாள்.

"என்னங்க! நம்மப் பொண்ணை தனியா அவ்வளவு தூரம் அனுப்பனுமா? எனக்கு என்னவோ உசிதமா படலைங்க!" தமயந்தி கூறியதைக் கேட்டதும், உள்ளே செல்வதற்காக திரும்பிய அங்கயற்கண்ணி நிதானித்தாள்.

"நல்லாருக்கே தமயந்தி. ஒண்ணுக்கொண்ணு உயிரா பழகறதுங்க! கண்ணாலம், கார்த்திக்கு அனுப்பினா என்னவாம்!" அங்கயற்கண்ணி கேட்டாள்.

"நாம என்னவோ அவளுக்கு கல்யாணம் செய்ய போறதில்லை! இப்படி ஊர் கல்யாணங்களுக்கு அவளை அனுப்பிச்சா, அவளுக்கு கல்யாண ஆசை வந்துடாதா?" சாதுர்யமாக அவளை மடக்கி தமயந்தி,

மூன்றாவது அண்ணி கலாவதி தமயந்தியின் கூற்றை ஆமோதித்தாள்.

"தமை சொல்றதும் சரிதான்! நாம் அவளுக்கு கல்யாணம் செய்யப் போறதில்லை என்கிறப்ப, எதுக்கு தேனுகாவை அனுப்பணும்!" கலாவதி கேட்க, மூத்த அண்ணி அங்கயற்கண்ணியின் ஜால்ராவான இரண்டாவது அண்ணி கற்பகம் தன் பங்குக்கு கருத்தை தெரிவித்தாள்.

"அனுப்பறது நியாயமில்லைதான்! ஆனா எம்.பி., நமக்கு பல உதவிகளை செஞ்சிருக்காரு! அவரும் அவர் மனைவியும் நேராகவே வந்து அழைச்சிருக்காங்க! நம்ம சார்பா தேனுகா போயிட்டு வரட்டுமே! துணைக்கு வேணும்னா காண்டீபனை அனுப்புவோம்.." என்றதும், சகோதரர்களுக்கு கற்பகத்தின் யோசனை பிடித்திருந்தது.

குருவாயூருக்கு காண்டீபனை தேனுகாவுக்கு துணையாக அனுப்புவது என்று பெரிய வீட்டார் தீர்மானித்தனர்.

தேனுகாவை அனுப்புவதற்கு எதிர்ப்பு காட்டுவது போல் நடித்து அவளை கேரளாவிற்கு அனுப்புவதற்கு பாடுபட்ட தமயந்தியின் நாடகத்திற்கு முதல் வெற்றி கிடைத்தது.

தன்னுடன் ஒத்துழைத்ததற்கு நன்றி தெரிவிக்க கன்னிகா குடும்பத்திற்கு ஃபோன் செய்தாள், தமயந்தி.

"**கா**மேஷ்! கும்பகோணத்துல இருக்கிற என் தங்கை பாங்க் அக்கௌண்ட் நம்பர் தரேன்! அவ அக்கௌண்டுக்கு 1000 ரூபாய் கட்டிடறியா?" என்று பேப்பர் ஐயர் கேட்டுக் கொண்டதால், அவரது பைக்கில் பாங்கிற்கு சென்று கொண்டிருந்தான், காமேஷ்!

"பாம்.. பாம்..!" என்று தொடர்ந்து ஹாரன் அடித்தபடி இவன் பின்பாக ஒரு கார் வர, எரிச்சலுடன் இவன் அந்த காருக்கு வழி கொடுத்தான். ஆனால், அந்த காரை ஓட்டியவன், காமேஷை கடந்து செல்லாமல் தொடர்ந்து ஹாரன் அடிக்க, கடுப்புடன் பைக்கை நிறுத்திய காமேஷ், திரும்பி அந்த காரை நோக்கினான்.

காரை நிறுத்திய டிரைவர், சைட் கண்ணாடியை இறக்கி, தனது கருப்புக் கண்ணாடியை கழற்றி, காமேஷை நோக்கி கையசைத்தான்.

காமேஷ் மலைத்துப் போனான்! இவனுடன் பள்ளியில் படித்த அர்ஜூன்தான் கையை அசைத்து இவனை அழைத்தான்.

பைக்கை ஒரு ஓரமாக நிறுத்தியவன் அர்ஜூனை நோக்கி ஓட, அவனும் காரிலிருந்து இறங்கி ஓடி வந்தான்.

"டேய் ஃப்ராடு! எப்படிடா இருக்கே?" காமேஷ் அர்ஜூனின் முதுகில் ஓங்கி தட்டினான்.

"ஒரு ஃப்ராடு எப்படி இருப்பான்? ரொம்ப நல்லா இருக்கேன்! இந்த ஃப்ராடுக்கு தண்டனை கொடுக்கப் போறாங்க!" அர்ஜூன் சிரித்தான்.

"என்னடா சொல்றே!" காமேஷ் வியந்தான்.

அர்ஜூன் கண்ணை அடித்து, சிரித்துக்கொண்டு தன் கையிலிருந்து அழைப்பிதழைக் காட்டியதும் காமேஷ் புரிந்து கொண்டான்.

"அடிடா சக்கை! யாருடா பொண்ணு? நீ பெரிய தொழிலதிபர் மகன்! உனக்கு கிடைக்காத பொண்ணா?

ஃபாரின்ல பொண்ணை பிடிச்சிருப்பே.." காமேஷ் கிண்டலடித்தான்.

"அதுதான் இல்லை! நம்ம ஊர் டௌன் காலேஜ்ல படிச்ச பொண்ணுதான்! கேரள எம்.பி.பணிக்கரோட பொண்ணு! ஒரு பார்ட்டியில் பார்த்தேன். 'ஐ லவ் யூ'ன்னு சொன்னேன்! சரின்னு சொல்லிட்டா!"

"அடப்பாவி.. நம்ம தமிழ்நாட்டுல உனக்கு எம்.பி.களா கிடைக்கலை? சரி! கல்யாணம் எப்ப?" காமேஷ் கேட்டான்.

"அடுத்த வாரம்! இந்தா இன்விட்டேஷன். நீ என்ன செய்யறே.. மரியாதையா ஒரு வாரம் என்னோட மாப்பிள்ளை தோழனா நான் போற இடத்துக்கெல்லாம் வர்றே! குருவாயூர், குமாரகோம், திருநெல்வேலி.."

காமேஷ் யோசித்தான். "கல்யாணத்துக்கு நிச்சயம் வரேன்டா! ஆனா.. என்னை நம்பி ஒரு ஊனமுற்ற பையன் இருக்கான்டா! அவனை நான்தான் டெய்லி ஸ்கூலுக்கு அழைச்சுட்டு போறேன். நான் அவன் அப்பாகிட்டே கேட்டு பாக்கறேன். திடீர்னு அவனை அப்படியே விட்டுட்டு வர முடியாதுடா!" காமேஷ் சொல்ல, அர்ஜுனின் கண்கள் அவனை பெருமையுடன் நோக்கின.

"ஸ்கூலுல எப்படி இருந்தியோ, அப்படியே இருக்கியே! உன் நல்ல மனசு யாருக்கு வரும்? நீ என்ன செய்வியோ எனக்கு தெரியாது! நீதான் மாப்பிள்ளை தோழன்! எங்க கூட நீ கேரளா வர்றே! அவ்வளவுதான்!" என்றபடி தன் காரை நோக்கி நடந்தான் அர்ஜூன்.

தயங்கியபடியேதான் பேப்பர் ஐயரிடம், தன் நண்பனின் திருமணத்திற்கு போக வேண்டியதை சொன்னான், காமேஷ்.

"பேஷா போயிட்டு வாடா, காமேஷ்! நானும் விசாலாக்ஷியும் விச்சுவை அழைச்சுண்டு பம்பாய் போகலாம்னு இருக்கோம்! அவளோட அக்கா பிள்ளைக்கு கல்யாணம்! அதனால நீ ஃப்ரீதான்! விச்சுவைப் பத்தி கவலைப்படாம போயிட்டு வா!" என்று விடை கொடுத்தார்.

தங்கள் வாழ்வில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தப் போகும் பிரயாணமாக அந்த கேரளா விஜயம் இருக்கப் போவதை அறியாமல் தோழி கன்னிகா திருமணத்திற்கு தேனுகாவும், நண்பன் அர்ஜூனின் திருமணத்திற்கு காமேஷும் சென்று கொண்டிருந்தனர்.

# அத்தியாயம் 22

இன்றிரவு ஆஸ்திரேலியா பயணத்திற்கான இந்திய குழுவின் பெயர் பட்டியல் அறிவிக்கப்பட்டுவிடும்.

டீமில் சந்தீப் ஷங்கரின் பெயர் இடம் பெறக்கூடும் என்று வெளிவந்திருந்த செய்தியை இதோடு ஆயிரம் முறை படித்திருப்பாள் சுபாங்கி!

'சந்தீப்பின் மனைவி சுபாங்கி தன் கணவன் இந்திய குழுவில் இடம் பெற்றதை பற்றி என்ன நினைக்கிறார்?'

'மேடம்! சந்தீப் ஆஸ்திரேலியா ஸ்குவாட்டில் இடம் பெற்றிருக்கிறாரே? அதைப் பற்றி?'

"இது எங்களுக்கு ஒரு வெட்டிங் கிஃப்ட்! அவர் டூரின்போது ஃபோகஸ்டாக இருக்க வேண்டும் என்பதற்காக எனது சந்தோஷங்களை நான் தொடர்ந்து இழப்பதற்கு சித்தமாக இருக்கிறேன்!"

தான் இவ்வாறு பதில் சொல்ல வேண்டும் என்று தனக்குத்தானே கேள்வியைக் கேட்டுக் கொண்டு கற்பனையிலேயே அதற்குரிய பதிலையும் அளித்துக் கொண்டிருந்தாள், சுபாங்கி!

எந்தக் காரணத்திற்காக சந்தீப்பை திருமணம் செய்து கொண்டிருந்தாளோ, அதற்கான பலன்களை அனுபவிக்கும் நேரம் வந்துவிட்டது.

வாழ்க்கையில் உன்னால் ஜெயிக்கவில்லை என்றால், ஜெயிப்பவருடன் உன்னையே இணைத்துக்கொள்! என்கிற வழக்கை நடைமுறைப்படுத்தவே சந்தீப்பை திருமணம் செய்துக் கொண்டிருந்தாள் சுபாங்கி!

சிறு வயதில் இருந்தே தான் புகழ் பெற வேண்டும். ஒரு செலிபிரிட்டியாக இருக்க வேண்டும் என்கிற ஆசை சுபாங்கிக்கு உண்டு. பத்திரிக்கை தொழில், சினிமா, பரதநாட்டியம் என்று பல துறைகளில் புகுந்து புறப்பட்டு அவளிடம் விசேஷ திறமைகள் எதுவும் பளிச்சிடாத காரணத்தால், அவற்றிலிருந்து ஒதுங்க வேண்டியிருந்தது. தன்னை டி.வி. கேமராக்கள் எப்போதும் விரட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்கிற ஆசையில் இருந்தவளை, ஒரு பார்ட்டியில் சந்தித்தான் சந்தீப் ஷங்கர். அவனுடைய சினிமா காதலி தான்யா சௌத்ரி வராத காரணத்தால், சுபாங்கியுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கலாமே என்றுதான் அவளுடன் உட்கார்ந்திருந்தான். அதை ஒரு பத்திரிக்கைக்காரன் படம் பிடித்து போட்டு சந்தீப்பின் புதிய காதலி என்று தலைப்பினை தர, அவ்வளவுதான்

மீடியாகாரர்களிடையே சுபாங்கியின் மௌஸ் ஏறிவிட்டது! அவளும் சந்தீப்பிடம் பசையாக ஒட்டிக் கொண்டு விட்டாள்!

பொழுதுபோகாத பத்திரிக்கைகள் சுபாங்கி மற்றும் தான்யாவிடையே மோதலை உருவாக்கிவிட சுபாங்கிக்கு புகழ் கூடியது!

அவள் சந்தீப் ஷங்கரை திருமணம் செய்து கொண்டு விட்ட நிலையில், இப்போது பத்திரிக்கையாளர்களுக்கு சுபாங்கி பெரிய ஸ்டாராக தோன்றவில்லை! இது தெரியாமல் அவள் பேட்டிகளுக்கு ஒத்திகைப் பார்த்துக் கொண்டிருந்தாள்,

ஃபோன் மணியொலிக்க, சுபாங்கி மொபைலை எடுத்தாள்!

"சுபாங்கி! சந்தீப் ஹியர்! இன்னும் ஒன் ஹவர்ல ஸ்குவார்ட்டை அறிவிச்சுடுவாங்க! அனேகமா நான் இன்னைக்கு வர்றதுக்கு லேட்டாகும்! நீ சாப்பிட்டு படுத்திடு!" என்றான் சந்தீப்.

"எங்கே போறீங்க?"

"இன்டர்வியூஸ் கொடுக்கணும்! ஐ வில் ஹேவ் டு தேங்க் தி போர்டு மெம்பர்ஸ்." சந்தீப் சொன்னான்.

"இன்டர்வ்வியூஸ்க்கு நான் வேண்டாமா?" சுபாங்கி கேட்டாள்.

"டி.வி. பைட்ஸ்க்கெல்லாம் நீ எதுக்கும்மா?" சந்தீப் திகைத்தான்.

"அட்லீஸ்ட், டோன்ட் ஃபர்கெட் டு மென்ஷன் மீ!" எரிச்சலுடன் ஃபோனை கட் செய்தாள், சுபாங்கி.

ஒரு மணி நேரம் சென்றிருக்கும். சந்தீப்பின் பெயர் அறிவிக்கப்பட்டு விட்டதா என்பதை தெரிந்து கொள்ள ரிமோட்டை கையில் எடுத்தாள் சுபாங்கி.

சரியாக ஃபோன் அடித்தது. அழைத்தது அவள் அப்பா நித்யமூர்த்தி.

"சுபாங்கி! ஐ யாம் சாரி! உன் ஹஸ்பெண்ட் சந்தீப், இந்தியன் டீம்ல இடம் பெறலை! நான் முன்னாடியே உனக்கு எச்சரிக்கை செய்தேன்! ஹி இஸ் நாட் ஏ டிவோடட் ப்ளேயர். அவனுக்கு கிரிக்கெட்ல மட்டுமில்லை! எதுலயுமே டிவோஷன் கிடையாது! அட்லீஸ்ட் உன் கிட்டேயாவது டிவோடட்டா இருக்கட்டும்!" என்று ஃபோனை கட் செய்தார்.

கல்யாணம் முடித்த உடனேயே, இவள் அப்பா ரகசியமாக கூறிவிட்டார்.

"நரேந்திரநாத் கேட்டாங்கிறதுக்காகவும், நீ சந்தீப்பை லவ் பண்றே என்பதாலயும்தான் இந்த கல்யாணத்துக்கு சம்மதிக் கிறேன்! அதர்வைஸ் ஹி இஸ் நாட் மை சாய்ஸ்..!"

தன் கணவன் இந்தியன் ஸ்குவாட்டில் இடம் பெறவில்லை என்பதை அறிந்ததும் நிலை குலைந்தாள் சுபாங்கி! புகழ் பெற்ற கிரிக்கெட் வீரனாக அன்றாடம் தலைப்புச் செய்திகளில் சந்தீப் இடம் பெறுவான் என்று நம்பியிருந்தாள். அவள் ஆனால் துவக்கமே சறுக்கலாக இருக்கிறதே!

தன் கணவனின் மொபைலுக்கு அழைக்க முயன்ற போது, ஸ்விட்ச் ஆஃப் என்று தெரிவிக்கப்பட்டது.

ஸ்குவாட்டில் இடம் பெறாத நிலையில் என்ன செய்து கொண்டிருக்கிறான்?

மீண்டும் செல்ஃபோன் அழைப்பு!

வானேஸா கன்ஸஸோதான் அழைத்தாள்.

'என்றும் இல்லாத திருநாளாக இப்போது ஏன் அழைக்கிறாள்?'

"ஹாய், சுபாங்கி"

"ஹாய் வானேஸா!" சுரத்தில்லாமல் ஒலித்தது. சுபாங்கியின் ஹாய்!

"டெல் மீ வானேஸா! என்ன விஷயம்? ஐ ஆம் நாட் வெல்!" சுபாங்கிக்கு அவளுடன் பேசுவதற்கே இஷ்டமில்லை.

"ஐ நோ, சுபாங்கி! உனக்கு எவ்வளவோ கஷ்டமா இருக்கும்! சந்தீப் இண்டியன் ஸ்குவாட்ல இடம் பெறலைங்கிறது. எனக்கே டிப்ரெஷனை தர்றது! பட் நான் எதுக்கு ஃபோன் செஞ்சேனா, உன் கணவர் அதைப் பத்தி வருத்தப்படறதாவே தெரியலை! இங்கே ஃபிஷர்மேன்ஸ் கேவ் ரிஸார்ட்ல அந்த நடிகை தான்யா சௌத்ரியோட ஜாலியாக நடனமாடிக்கிட்டு இருக்காரு! எனக்கு எப்படி தெரியும்னு கேட்கறியா? அந்த ஈவண்டுக்கு ஏற்பாடு செய்ததே நான்தான்!"

வானேஸா சிரிக்க, ஆத்திரத்தோடு செல்ஃபோனை கட் செய்தாள் சுபாங்கி! வானேஸா இவளை பழி வாங்குகிறாள். ஒரு நிகழ்ச்சிக்கு இவளது தந்தை நித்யமூர்த்தியின் ஸ்பான்ஸர்ஷிப்பை கேட்டு வானேஸா வந்தபோது, கூர்க்காவை விட்டு அவளை வெளியே போகச் சொன்னதுக்கு இந்த ஃபோன்கால் மூலம் பழி தீர்க்கிறாள்.

சுபாங்கியின் ஆத்திரமெல்லாம் சந்தீப்பின் மீது பாய்ந்தது. நிகேத்தைவிட காண்பதற்கு சற்று சுமாராகத்தான் இருந்தான் சந்தீப்! பணமும் அவ்வளவா கிடையாது! இருப்பினும் வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரனாக, பணமும் புகழையும்

வருங்காலத்தில் நிறைய சம்பாதிப்பான் என்றுதான் அவனுடன் பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டாள். துவக்கமே சரியில்லை! அன்று ஒயாஸிஸ் லஞ்ச்சின்போது, இவர்களது திருமணத்தை மேரேஜ் ஆஃப் கன்வீனியன்ஸ் என்று நரேன் அங்கிள் கூறிய போது, இருவருக்குமே கோபம் வந்தது! ஆனால் அதுதானே இன்று உண்மையாகி உள்ளது.

"சுகுமார்!" தனது செக்ரட்டரியை அழைத்தாள்.

"உனக்கு ஃபிஷர்மேன்ஸ் கேவ் தெரியுமா?"

"தெரியும் மேடம்!"

"உடனே என்னை அங்கே அழைச்சுட்டு போ!" என்று காரை நோக்கி நடந்தாள், சுபாங்கி.

"டேஞ்சர்! சுபா மேடம் ஆன் ஹர் வே டு ஃபிஷர்மேன்ஸ் கேவ்!"

சுகுமார் சந்தீப்புக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பி விட்டு டிரைவர் இருக்கையை நோக்கி நடந்தான்.

சுபாங்கியின் கார் அந்த காம்பௌண்டை விட்டு வெளியேறும் போதே, "லெட்ஸ் கோ" என்று நடன அரங்கை விட்டு தான்யாவுடன் வெளியேறிக் கொண்டிருந்தான், சந்தீப்.

அதை புன்சிரிப்புடன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள் வானேஸா.

# அத்தியாயம் 23

"நம்மளை மாதிரி கன்னிகாவுக்கு மணிக்கணக்கா அலங்காரங்கள் தேவையில்லப்பா! அவங்க கல்யாணம் எல்லாம் பத்தே நிமிஷம்தான்!" கன்னிகாவை அலங்கரித்துக் கொண்டிருந்தபோது, இன்மொழி சொன்னாள்.

"ஆமாம்மா! அவ பத்து வருஷம் காதலிச்சுட்டு பத்து நிமிஷத்துல கல்யாணம் செஞ்சுக்குவா!" மஞ்சு சிரித்தாள்.

"திருடி! எங்கேடி பிடிச்சே உன் அர்ஜுனனை? எங்களுக்கெல்லாம் ஒரு வார்த்தை கூடச் சொல்லலை!" சாருலதா கேட்டாள்.

தேனுகா அமைதியாக கன்னிகாவை அலங்கரித்துக் கொண்டிருக்க, எம்.பி.யின் மனைவி பார்வதி பரபரப்புடன் வந்தாள்.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கோவிலுக்கு வந்துடுவாங்க! நாம் கிளம்பலாமா?"

"ரெடி ஆன்ட்டி!"

"தேனுகா! உங்க தமிழ் வழக்கப்படி மாப்பிள்ளை வந்து இறங்கின உடனே நீதான் ஆரத்தி சுத்தி பாட்டு பாடணும்!"

என்றபடி பார்வதி விலக. கன்னிகா தோழியருடன் கோவிலுக்கு புறப்படத் தயாரானாள்.

குருவாயூர் கோவிலுக்கு பிள்ளை வீட்டார் வந்து சேர்ந்தவுடன், ஆரத்தி சுழற்றிய தேனுகா நிமிர்ந்த போது, அர்ஜூன் அருகே நின்றிருந்த மாப்பிள்ளை தோழன் காமேஷைக் கண்டு திகைத்துப்போய் நின்றாள்.

கேரள சேலைகளிடையே தமிழ்நாட்டு பாணியில் எம்.எஸ்.ப்ளூ நிறத்தில் சிவப்பு பார்டர் பட்டு சேலை அணிந்து நின்ற தேனுகாவும் உடனடியாக காமேஷின் கண்களை கவர்ந்து விட்டாள். ஒரு கணம்தான் அவன் கண்களில் வியப்பு ரேகை தென்பட்டது. பிறகு அவனது கண்கள் அப்பால் திரும்ப, தன்னையும் அறியாமல் ஏனோ தேனுகாவின் கண்கள் தனது பாதுகாவலன் காண்டீபனின் பக்கம் பாய்ந்தன. ஒரு ஓரமாக நின்று திருமண நிகழ்வுகளை அவன் கண்டுக் கொண்டிருந்தான்.

பத்தே நிமிஷங்களில், இன்மொழி கூறியது போல கன்னிகா அர்ஜூனின் திருமண சடங்குகள் முடிந்து விட்டன. அனைவரும், குருவாயூரப்பனின் தரிசனத்திற்கு போய்விட, காமேஷ் மட்டும் ஒரு ஓரமாக நிற்க, காண்டீபனின் கண்கள் தற்செயலாக அவனை வியப்புடன் நோக்கின.

தன்னை கரும்புக்குவியல்களின் அடியில் இருந்து காப்பாற்றிய வாலிபன் அவன்தான் என்பதை உடனடியாக அடையாளம் கண்டுக் கொண்டாள். லேசான புன்முறுவலுடன் அவனை நோக்கினாள்.

"நீங்க இங்கே எப்படி?"

"மாப்பிள்ளை அர்ஜுன் என் பள்ளித்தோழன்" என்றபடி காமேஷ் அங்கிருந்து விலகினான். தரிசனம் முடிந்ததும் மாப்பிள்ளை தங்கியிருந்த ஜாகையில் பரஸ்பர அறிமுகம் முடிந்து பெரியோர்கள் எல்லோரும் விலக, கன்னிகாவின் தோழிகளும் அர்ஜுனின் தோழர்களும் மட்டுமே குழுமியிருந்த சமயத்தில் கன்னிகாவின் பெரியப்பா மகன் மதுசூதன் உள்ளே வந்தான்.

"ஃப்ரெண்ட்ஸ்! உங்களுக்கெல்லாம் ஒரு ஸ்வீட் சர்ப்ரைஸ்! மணமக்கள் மற்றும் அவங்க ஃப்ரெண்ட்ஸ் ஆகிய உங்களை என்டர்டெய்ன் செய்ய நான் ஒரு நிகழ்ச்சி அரேஞ்ச் பண்ணியிருக்கேன்! நாமெல்லாம் ஒரு மினி பஸ்ஸுல குமாரகோம் போகிறோம். நைட் அங்கே கேம்ப் ஃபயர் ஸ்டே! நாளை காலையில போட்டிங்! திரும்பி நாளை சாயந்தரம் குருவாயூர் வந்திடுவோம்!" என்று அறிவித்ததும், அங்கே பெருத்த ஆரவாரம்.

பெரிசுகளை குருவாயூரிலேயே கழற்றி விட்டுட்டு, இளவட்டங்கள் சுமார் 16 பேர் மினி பஸ்ஸில் குமாரகோம் கிளம்பினர்.

"அப்பாடி! குடும்பத்தார் தொல்லை இல்லாம, ப்ளாக் கேட்ஸ் மிரட்டல் இல்லாம, தேனுகா நம்மோட ஃப்ரியா பழகலாம்!" சாருலதா சொல்லி முடித்திருக்க மாட்டாள்.

"மஞ்சு தங்களுக்கு பின்னால் சுட்டிக் காட்டினாள். ரொம்ப அவசரப்படறே! பின்னாடி அந்த ப்ளேக் காட் இன்னோவால வந்துக்கிட்டு இருக்கான்!" என்று அந்த மினி பஸ்ஸை பின் தொடர்ந்து கொண்டிருந்த இன்னோவாவை சுட்டிக் காட்டினாள்.

ஆனால் -

இவர்களுடைய உரையாடல் தேனுகாவை பாதித்ததாகவே தெரியவில்லை. முன் சீட்டில் புதுமணத் தம்பதிகளுக்கு பின்பாக அமர்ந்திருந்த காமேஷையே அவள் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள்.

குடை சாய்ந்த சாரட் வண்டியை தாங்கிப் பிடித்து இவளைக் காப்பாற்றிய முதல் சந்திப்பிற்கு பிறகு, கோவில் மாமர நிகழ்வுக்குப் பிறகு, தியேட்டரில் அவனைச் சந்தித்த பிறகு, இப்போது கன்னிகாவின் திருமணத்தில் மூன்றாவது முறையாக அவனைச் சந்தித்திருக்கிறாள் தேனுகா.

முதல் இரண்டு சந்திப்புகளில் இல்லாத ஈர்ப்பு இப்போது அவன் மீது அதிகமாகக் காணப்பட்டது. அவன் இவள் பக்கமே திரும்பவில்லை என்பது உண்மைதான். ஆனால் இவளோ, அவன் மீது பதித்திருந்த கண்களை வேறு பக்கம் திருப்பவில்லை என்பதும் உண்மைதான். எப்போது அவன் தன் பக்கம் திரும்புவான் என்று அவள் காத்திருந்தாள்!

காமேஷ் தேனுகாவின் பக்கம் திரும்பவில்லை என்றாலும் அவன் எண்ணங்கள் அவளைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

அன்றொரு நாள் மதியம் -

பேப்பர் ஐயர் வீட்டிலிருந்து தன் பைக் டூவீலர் லைசென்ஸை எடுப்பதற்காக வந்தவன், வீட்டின் உள்ளே தேனுகாவின் அம்மா தமயந்தியும், தன் தாய் குலதனமும் பேசிக் கொண்டிருந்ததை முழுவதும் கேட்டிருந்தான். பெரிய வீட்டுப்பெண் ரேணுகாவின் சோக காதல் கதையை கேட்டதுமே சற்றே ஆடிப் போய்விட்டான் காமேஷ்!

ரேணுகாவின் நிலை தேனுகாவுக்கும் வரக்கூடாது என்று அவளது அம்மாவின் புலம்பலையும் கேட்டிருந்தான்.

சினிமா தியேட்டரில் தன் அருகாமையில் அமர்ந்திருந்த தேனுகாவின் மீது, அவளது பேரழகின்மீது காமேஷுக்கு ஈடுபாடு தோன்றியது உண்மைதான்.

ஆனால் -

பெரிய வீட்டுப்பெண் அவள்! தெய்வீக அம்சம் பொருந்தியவளும் கூட! அதே வீட்டில் கணக்கெழுதும் கணக்குப்பிள்ளையின் மகன் இவன்! கணக்கு பிள்ளையின் மகன் தங்கள் வீட்டுப் பெண்ணை கணக்குப் பண்ணி விட்டான் என்பது தெரிந்தால், பெரிய பிரச்சனை மூளுமே!

ரேணுகாவைப் போன்றே தேனுகாவும் தனது முடிவினை மர்மமான முறையில் தேடிக் கொள்வாளே என்கிற எச்சரிக்கையுணர்வில், மனதில் தோன்றியிருந்த ஈர்ப்பை முளையிலேயே கிள்ளியெறிந்து விட்டு பிடிவாதமாக அவள் பக்கமே திரும்பாமல் இருந்தான் காமேஷ்!

ஹீரோவாக சாகசங்கள் புரிய இவனாலும் முடியும்! ஆனால் இவனது அவசரத்தால், அந்த அப்பாவிப் பெண்ணின் உயிருக்கு ஆபத்து நேருவதை அவன் விரும்பவில்லை! இதோ அர்ஜுனின் தந்தையைப் போன்று இவன் தந்தையும் ஒரு தொழிலதிபராக இருந்திருந்தால், இவனாலும் மூன்றே வார்த்தைகள், ‘ஐ லவ் யூ’ என்று சொல்லி அவளைக்

கல்யாணம் செய்துக் கொண்டிருப்பான். ஆனால், இவன் அப்பாவோ அவர்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து அவர்களின் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டு அவர்கள் விட்டெரியும் ஐநூறு ரூபாயை சம்பளமாக வாங்குபவர்.

ஐநூறு ரூபாய் கூட காலத்திற்கேற்ப தனது வடிவத்தை மாற்றிக் கொண்டு விட்டது! இவன் அப்பா இன்னும் பழையபடியேதான் இருக்கிறார். நன்றி, விஸ்வாஸம் ஆகியவற்றிற்கு இலக்கணமாய்! ஆனால், பொறுப்புகள் என்பதை பற்றி சிறிதும் கவலைப்படாதவராய்.

காமேஷும் திரும்பிப் பார்த்து, தேனுகாவின் பேரழகை கண்களால் பருக வேண்டும் என்கிற ஆவல் இல்லாமல் இல்லை! ஆனால் அப்படி திரும்பினால், அந்தப் பெண்ணின் மனதில் புதுப்புது அர்த்தங்களை தோற்றுவித்து விடுவான்.

தன் மீதே எரிச்சல் உண்டாக, பஸ்ஸின் வெளியே பரவிக்கிடந்த இயற்கைக் காட்சிகளை ரசித்தபடி சென்றான்.

காதலும் வேண்டாம்! கல்யாணமும் வேண்டாம். இப்படியே பேப்பர் ஐயர் மகன் விச்சுவுக்கு ஊழியம் செய்துக் கொண்டு, காலத்தை ஓட்டிவிடுவோம். கோவூரை விட்டு வெளியே சென்றால்தானே. சமுதாயத்தில் நிலவும் மனிதனை

மனிதன் விழுங்கும் கடும் போட்டியில் பங்கேற்கும் சூழ்நிலை உண்டாகும்! பெண் என்பவளே இந்த உலகத்தில் இல்லை என்று நினைத்துக் கொண்டு விட்டால், காதல் எப்படி உண்டாகும்? என்றெல்லாம் நினைத்தபடி சென்றுக் கொண்டிருந்தான் காமேஷ்.

குமாரகோம் வந்ததும் அனைவரும் மினி பஸ்ஸிலிருந்து இறங்கினார்கள். கன்னிகாவின் தம்பி, எம்.பி.யின் குடும்பம் என்று சொல்லி விசேஷ ஏற்பாடுகளை செய்திருந்தான். பெண்களுக்கு ஒரு ஜாகை, வாலிபர்களுக்கு ஒரு ஜாகை என்று ட்யூலிப் என்கிற ரிஸார்ட்டில் ஒதுக்கப்பட்டிருந்தன. பேக்வாட்டர்ஸ் அருகாமையில் கேம்ப் ஃபயருக்கும் ஏற்பாடு செய்திருந்தான் மதுசூதன்.

சற்று நேரம் குமாரகோமை சுற்றிப் பார்த்த பிறகு, இரவு உணவுக்குப் பிறகு, கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த தீயைச் சுற்றி அனைவரும் அமர்ந்து கொண்டனர். அர்ஜூனின் வலப்புறத்தில், காமேஷ் உட்கார்ந்திருந்தான். எதிர்புறம், இன்மொழிக்கும் மஞ்சுவுக்கும் இடையே உட்கார்ந்திருந்தாள் தேனுகா! மதுசூதன் தலையசைக்க, ஒரு கண்ணாடி ஸீஸாவில் துண்டு காகிதங்களுடன் கொண்டு வந்து, ஒரு ஸ்டூலின் மீது வைத்தான், ரிஸார்ட்டை சேர்ந்த ஒரு பணியாள்!

மதுசூதன் தனது கைகளை பலமாக தட்டி, அனைவரின் கவனத்தையும் ஈர்த்தான்.

"ஃப்ரெண்ட்ஸ்! மணமக்களையும் சேர்த்து நாம் பதினெட்டு பேர் இருக்கோம்! நான் ப்ரோகிராமை ஆர்கனைஸ் செய்யறதால் எனக்கு விதிவிலக்கு! நீங்க ஒவ்வொருவரா வந்து, கண்ணாடி ஸீஸாவுல இருக்கிற துண்டு காகிதத்தை எடுத்து அதில குறிப்பிட்டபடி கட்டளையை நிறைவேத்தணும்! யாருக்கும் விலக்கு கிடையாது!" என்றதும்,

குழுவினரிடையே ஒருவித பரபரப்பு தொற்றிக் கொண்டது. 'யெஸ்' என்று சிலர் தங்களது கட்டை விரலை உயர்த்திக் காட்டினர்.

சற்று தொலைவில் ஒரு பிரம்பு நாற்காலியில் அமர்ந்து கொண்டு, இவர்களது விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான், காண்டீபன்.

"ஹியர் வீ கோ! கன்னிகா. நீதான் முதலுல எடுக்கறே!" மதுசூதன் கூறியதும் கன்னிகா சென்று ஸீஸாவில் இருந்த துண்டு காகிதத்தை எடுத்தாள்.

"மேஜையில் இருக்கும் கேக்கை உனக்கு பிடித்தவர் முகத்தில் அப்பவும்!"

கட்டளையைப் படித்ததும், குழுவினரிடையே சிரிப்பு.

"கெட் ரெடியா.. அர்ஜுன்!" அவன் தோழர்கள் விசிலடித்து ஆர்ப்பரித்தார்கள்.

சற்றும் தயங்காமல், கன்னிகா மேஜையில் இருந்த கேக்கை முழுவதுமாக சுமந்து சென்று, அர்ஜுனின் தலையில் அபிஷேகம் செய்தாள்! ஒரே கலாட்டாதான்!

உடனடியாக பணியாளர்கள் தந்த ஈர துணியால் தன்னை சுத்தப்படுத்திக் கொள்ள தொடங்கினான் அர்ஜுன்!

"அர்ஜுன்! நெக்ஸ்ட் நீதான்!" மதுசூதனன் அறிவிக்க, காமேஷ் நிம்மதி பெருமூச்சு ஒன்றை விட்டான். கன்னிகா, அர்ஜுன் என்று வாய்ப்புகள் வட்டமாக சென்று, கடைசியாகத்தான் இவனிடம் வரும் போலும்!

அர்ஜுன் கண்ணாடி ஸீஸாவின் அருகே சென்று ஒரு துண்டு சீட்டினை எடுத்தான்.

"உனக்கு பிரியமானவரை, சுமந்துக் கொண்டு மூன்று முறை சுற்றி வா!" கட்டளைச் சீட்டுக் கூறியது.

"வித் ப்ளஷர்!" என்ற அர்ஜுன், கன்னிகாவை தூக்கிக் கொண்டு மூன்று முறை குழுவினரை வட்டமிட்டான்.

"அவ அபிஷேகம் செஞ்சா! இவன் பிரதக்ஷணம் செய்யறான் போல இருக்கு" மஞ்சு சொல்ல, தேனுகா கலகலவென்று சிரித்தாள். அந்த சிரிப்பு சத்தம் எதிரே இருந்த காமேஷுக்கும் கேட்டிருக்க வேண்டும்! கலகலவென்று சோழி உருளுவதைப் போன்று இருக்கும் தேனுகாவை பிரமிப்புடன் பார்த்தான். சிரித்துக் கொண்டே தற்செயலாக அவன் புறம் பார்த்தாள் தேனுகா! அவளுடைய சிரிப்பு உறைந்துப் போனது. இருவருடைய பார்வைகளும் மீண்டும் கலந்தன. ஒரு கணம்தான்! காமேஷ் பலவந்தமாக தனது பார்வையைத் திருப்பிக்கொண்டான்.

அர்ஜுனைத் தொடர்ந்து ஒரு வாலிபனை குடிகாரன் போல நடிக்க சொன்னது கட்டளைச் சீட்டு! ஒரு பெண்ணை அவளுக்கு பிடித்த ஒரு வாலிபனிடம் 'ஐ லவ் யூ' என்று சொல்லச் சொன்னது கட்டளைச் சீட்டு! அவள் நேராக அர்ஜுனிடம் "ஐ லவ் யூ" சொல்ல, ஒரே ஆர்ப்பாட்டம்தான்.

அடுத்ததாக மஞ்சுவின் வாய்ப்பு வந்தது.

"யாருடைய கன்னத்திலாவது ஓங்கி அடிக்கவும்" என்று கட்டளைச் சீட்டுக் கூறியது.

"தேனுகா! நல்ல வாய்ப்பு! நான் போய் உன் ப்ளேக் காட் தவடைல ஒரு அப்பு அப்பட்டா?" கையை ஓங்கியபடி மஞ்சு கேட்டாள்.

"ஐயையோ! வேற வினையே வேணாம்!" தேனுகா அலறினாள்.

"பின்னே.. நான் யாரை அடிக்கிறது? பிள்ளை வீட்டுக்காரங்க மரியாதைப்பட்டவங்க, கன்னிகா எம்.பி. பொண்ணு! உன்னை அடிக்கலாம்னா நீ காமதேனு அம்சம்! யாரை அடிக்கிறது?" என்றவளுக்கு சட்டென்று ஒரு யோசனை தோன்ற, இன்மொழி நோக்கிச் சென்றவள், அவள் கன்னத்தில் மெதுவாக அறைந்தாள்.

"சாரிடி! உன்னை விட்டா வேற ஆள் இல்லை." என்றபடி தனது இடத்திற்குத் திரும்பினாள்.

இப்போது தேனுகாவின் முறை!

சற்றே தயக்கத்துடன் தான் கண்ணாடி ஸீஸாவை நோக்கி நடந்தாள். யார் இந்த பேரழகி என்பதுபோல் குழுவில் அமர்ந்திருந்த வாலிபர்கள் அவளை அமைதியாக இமை கொட்டாமல் பார்த்தனர்.

"கமான்.. தேனுகா!" சாருலதா குரல் கொடுத்தாள்.

தேனுகா துண்டு சீட்டை எடுத்து உரக்கப் படித்தாள்.

"மது அருந்துபவர்களுக்கு க்ளாஸில் விஸ்கி, வைன் ஊற்றி பரிமாறவும்." கட்டளைச் சீட்டு கூறியது.

தேனுகா தயங்கி நின்றாள். தான் போய் குடிப்பவர்களுக்கு மது பரிமாறுவதா?

"யெஸ்.. கமான்! மதுக்கோப்பைகள் மேஜை மேல் இருக்கு! மினி பார் பக்கத்துல இருக்கு! கமான்.. அப்படியே எனக்கும் ஒரு க்ளாஸ்!" என்றான் மதுசூதனன்.

தேனுகா தயக்கத்துடன் நின்றாள்.

அப்போது -

காமேஷ் திடீரென எழுந்து மதுசூதன் அருகே அவன் காதில் கிசுகிசுத்தான். அவன் கூறுவதை கவனமாகக் கேட்டான்.

"ஃப்ரெண்ட்ஸ்! ஒரு சின்ன மாற்றம்! லுக்ஸ் லைக் மிஸ்.தேனுகா ஒரு டெம்பிள் கேர்ள்!"

"அவங்களை போய் ட்ரிங்க்ஸ் சர்வ் செய்ய சொல்றது தப்புங்கிறதால, அவங்க ஒரு பாட்டு, பாடிட்டு போகலாம் அவங்களுக்கு பதில் அவங்க வெல் விஷர் யாராவது ட்ரிங்க்ஸ் சர்வ் செய்யலாம்!" மதுசூதன் இப்படி சொன்னதும், காமேஷ்

கிடுகிடுவென்று மினி பார்ரிலிருந்து விஸ்கி, வைன், பீர் ஆகிய பானங்களை எடுத்து பலூன் க்ளாஸில் நிரப்பி, குழுவினரிடையே விநியோகித்தான்.

அவங்களுக்கு பதில் அவங்க வெல்விஷர் டிரிங்க்ஸ் பரிமாறலாம் என்று மது கூறியவுடன், காமேஷ் ட்ரிங்க்ஸ் சர்வ் செய்வதைக் கண்டதும் பரவசத்துடன் மலைத்துப் போய் நின்று விட்டாள் தேனுகா.

"மிஸ் தேனுகா.. ஒரு பாட்டு ப்ளீஸ்!" மது நினைவுபடுத்தியதும், அந்த இரவு நேர அமைதிக்கு பொருத்தமாக, டைட்டானிக் பட செலின் டியோனின், 'எவரி நைட் இன் மை ட்ரீம்! ஐ ஸீ யூ.. ஐ ஃபீல் யூ' பாட்டைப் பாடத் துவங்கினாள்.

ஒரு கிராமத்து பறவை, செலின் டியோனின் பாடலை மேல் நாட்டு உச்சரிப்பில் பாடுவதைக் கண்டு குழுவினர் மெய்மறந்து அமைதி காத்தனர். பாட்டின் தாக்கத்தினால் கல்யாண ஜோடியும், புதிதாக அமைந்த காதல் ஜோடிகளும், ஒருவரையொருவர் பார்வையால் அணைத்துக் கொண்டிருக்க, ஊசி விழுந்தால் சத்தம் கேட்கும் அமைதி அங்கே நிலவியது, கேம்ப் ஃப்யர் அருகே இருந்த நீரில் சில இரவு பறவைகள் நீராடும் ஒலியைத் தவிர வேறு ஒலியே கேட்கவில்லை,

தேனுவின் இனிமையான குரல் அந்த ரிஸார்ட்டில் எதிரொலிக்க, ட்ரிங்க்ஸை வினியோகித்துக் கொண்டிருந்த காமேஷ், தன்னை மறந்து தேனுகாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தேனுகா பாடி முடிக்கவும், காமேஷ் டிரிங்க்ஸை பரிமாறிவிட்டு தன் இடத்திற்குத் திரும்பவும் சரியாக இருந்தது. அனைவரின் கையிலும் ஒரு பலூன் க்ளாஸ், ஆனால் காமேஷின் கையில் க்ளாஸ் இல்லாததை கண்டு ஆறுதலடைந்தாள், தேனுகா.

காமேஷ் தன்னை திரும்பி பார்க்காவிடினும் அவனது உள்ளத்தில் தன்னைப் பற்றிய எண்ணங்கள் நிலவிக் கொண்டிருப்பதை அறிந்து, திருப்தியுடன் தனக்கு அடுத்து அமர்ந்திருந்த இன்மொழிக்கு என்ன சீட்டு வருகிறது என்று காத்திருந்தாள் தேனுகா. இன்மொழி கண்ணாடி ஸீஸாவிலிருந்து சீட்டை எடுத்தாள்.

'தலையை விரித்துக் கொண்டு பேயாட்டம் ஆடி குழுவினரை பயமுறுத்தவும்!' கட்டளைச் சீட்டு கூறியது.

"சாதாரணமாவே, அவ அப்படித்தான் இருப்பா" என்று கூறிய சாருலதாவை இன்மொழி முறைக்க, குழுவினர் சிரித்தனர்,

இன்மொழி பேயாட்டம் ஆடி அமர்ந்ததும், இப்போது சாருலதாவின் முறை,

சாருலதா கண்ணாடி ஸீஸாவை நோக்கி நடந்தாள். 'ஒரு புதுக்கவிதை பாடவும்' என்றது கட்டளைச்சீட்டு.

சற்றும் தயங்கவில்லை சாருலதா! நேராக கன்னிகாவின் முன்பாக சென்று நின்றாள்.

**அர்ஜூனன் கை கன்னிவில்லே!**

**இன்னும் சற்று நேரத்தில் தனியறையில்,**

**குருக்ஷேத்திர போர் மூளும்!**

**குழப்பத்தில் அர்ஜூனன் வில்லை**

**கீழே எறிந்துவிட போகிறான்!**

**கீதை சொல்ல கண்ணன்கள்**

**உள்ளே வர முடியாது!**

**அர்சுனன்தான் தைரியமாக**

**இருக்க வேண்டும்!**

என்று கூறியதும் கைதட்டல்கள் ரிஸார்ட்டையே அதிரச் செய்தது.

தொடர்ந்து அர்ஜுனனின் நண்பர்கள் கட்டளை சீட்டுகளை எடுக்க, கடைசியாக இப்போது காமேஷின் முறை,

காமேஷ் எழுந்து நின்றதுமே, தேனுகாவின் இதயம் படபடக்கத் துவங்கியது. உயரமும், கம்பீரமும் கொண்டிருந்த காமேஷை பல கன்னிகளின் கண்கள் விழுங்க மனதில் ஏற்பட்டிருந்த படபடபை அடக்கியபடி காமேஷும் கண்ணாடி ஸீஸாவை நோக்கி நடந்தான்.

தனது வலது கையை ஸீஸாவின் அகலமான வாய்க்குள் விட்டு, சீட்டுகளிடையே தன் விரல்கள் அளைந்தான். கடைசியில் ஆள்காட்டி விரலுக்கும் கட்டை விரலுக்கும் இடையேயான பிளவில் ஒரு சீட்டு சிக்கியது.

வில்லங்கமாக எதுவும் வந்துவிடக்கூடாது என்கிற நினைப்புடன் சீட்டைப் பிரித்தான். காமேஷின் முகம் வெளிறியது. தலையை மறுப்பதுபோல் ஆட்டியபடி மதுசூதனை ஏறிட்டான்!

"என்னால் முடியாது!"

"முதல்ல கட்டளைச் சீட்டைப் படியுங்க, பிரதர்!" மதுசூதன் உத்தரவிட்டான்.

அந்த குளிர் காற்றிலும், காமேஷின் நெற்றியில் வியர்வை துளிகள் அரும்பின. தயக்கத்துடன் தன் கட்டளைச் சீட்டைப் படித்தான்.

'உனக்கு பிடித்த ஒரு பெண்ணை முத்தமிடவும்..' கட்டளைச் சீட்டுச் சொன்னது.

"சாரி! என்னால முடியாது! இது என்னைக் காட்டிலும், ஒரு பெண்ணுக்கு தன்மானக் குறைவு ஏற்படலாம்! வேற ஏதாவது கட்டளைச் சீட்டை எடுக்கறேன்!"

உறுதியுடன் சொன்னான் காமேஷ்! மதுசூதனின் முகம் சீரியஸ் ஆனது!

"சாரி ப்ரதர்! இத்தனைப் பேரும் அவங்களுக்கு வந்த கட்டளைகளை நிறைவேற்றினாங்க! ஏற்கெனவே, அந்த டெம்பிள் 'கோள்'க்காக ஒரு முறை ரூல்ஸை உடைக்க சொன்னீங்க! சரி! டெம்பிள் ரிச்சுவல்ஸுக்கு மரியாதை கொடுத்து சான்ஸ் தந்தேன்! உங்களுக்காக திருப்பி ரூல்ஸ் பிரேக் பண்ண முடியாது. ப்ளீஸ்! உங்களுக்கு பிடிச்ச பொண்ணுக்கு ஒரு முத்தம் கொடுங்க! இட்ஸ் ஆல் பார்ட் ஆஃப் தி கேம்! உங்களுக்கோ, அந்தப் பெண்ணுக்கோ எந்த பிரச்சனையும் வராது!" மதுசூதன் உத்தரவாதம் தர, காமேஷ் தயக்கத்துடன் நின்றான்.

"கமான் காமேஷ்! விளையாட்டு முடிய போகுது! நீதான் லாஸ்ட்! நல்லபடியா முடிச்சுடு! கட்டளையை நிறைவேத்து!" அர்ஜுன் தன் பங்குக்கு கூற, காமேஷ் திக்பிரம்மை பிடித்தவனாக நின்றிருந்தான்.

தன் பார்வையை குழுவினரிடையே ஓட விட்டான். ஆண், பெண் பேதமில்லாமல் அனைவரும் அவனை 'கமான், கமான்' என்று ரேஸ் குதிரையை அழைப்பதுபோல் ஊக்குவித்துக் கொண்டிருந்தனர்.

தேனுகாவின் இதயத்துடிப்பு அதிகரித்தது. காமேஷ் யாரை முத்தமிடப் போகிறான்! எந்தப் பெண் அந்த பாக்கியத்தைப் பெறப்போகிறாள்?

வாட்டசாட்டமான, முகத்தில் கடுமையும், கோபமும் கொண்ட காமேஷை பார்த்ததுமே கிறங்கி போனார்கள். சில பெண்கள். அவன் ஒருவேளை தங்களை அணுக கூடுமோ என்கிற எதிர்பார்ப்புடன் அவனை உறுத்துப் பார்த்தனர்.

காமேஷ் அந்தக் கல்யாணத்துக்கே வந்திருக்கக் கூடாது என்று தன்னையே நொந்துக் கொண்டான். இப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தான் மாட்ட கொள்வோம் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை! பேசாமல் அங்கிருந்து வெளிநடப்பு செய்து விடலாமா என்று கூட நினைத்தான்.

ஆனால், அப்போது அவன் இதயத்தில் ஒரு சிறு மாற்றம்! கல்லாக இருந்த அந்த இதயத்தில் ஈரப்பசை! சாரட் வண்டி ஒன்று முறிந்து விழ, அதிலிருந்து பூங்கொத்தாய் குதித்த உருவம் அவன் கண்முன்பாக தோன்றியது. பின்பு சினிமா தியேட்டரில் அதே முகம் இவன் இதயத்தைத் துளைப்பது போல் உறுத்துப் பார்த்த காட்சியும் அவன் கண் முன் விரிந்தது.

முத்தமிட்டுத்தான் ஆக வேண்டும் என்றால் அவன் யாரை முத்தமிடப் போகிறான் என்பது அவனுக்குத் தெரியும். இப்போது முத்தமிடலாமா, வேண்டாமா என்பதுதான் அவன் பிரச்னை.

சட்டென்று -

நடப்பது நடக்கட்டும்! எனக்கு எதைப் பற்றியும் கவலையில்லை என்கிற ரீதியில் மத்தியில் எரிந்து கொண்டிருந்த கேம்ப் ஃபயரைச் சுற்றி நடந்தான். தலையை குனிந்தபடி யோசனையுடன் நடந்த காமேஷை, பெண்கள் சிலர் அவன் தன் பக்கம் வருவான் என்கிற பரபரப்புடன் நிமிர, அவனோ தன் இலக்கை நோக்கி நடந்தான். அவன் இலக்குதான் அவனுக்குத் தெரியுமே!

கேம்ப் ஃபயரை சுற்றி நடந்து எதிர் புறம் அமர்ந்திருந்த தேனுகாவின் முன்பாக சென்று நின்றான். அவன் தன் முன்பாக வந்து நிற்பதைக் கண்டதும் வெலவெலத்துப் போனாள் தேனுகா. காமேஷ் அவள் கண்களை நோக்காமல், மறுபுறம் பார்த்தபடி சட்டென்று அவளது வலது கன்னத்தில் முத்தம் ஒன்றை பதித்துவிட்டு, விருட்டென்று எழுந்து விட்டான்.

"வீ டோண்ட் அக்ரி! வி வாண்ட் எ லிப் டு லிப் கிஸ்!" மதுசூதனும் இதர குழுவினரும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

"என் பாட்டிக்கு கூட நான் இதைவிட பெட்டரா கிஸ் பண்ணுவேன் பிரதர்! பீ ரோமாண்டிக்! கிஸ் ஹர் ஆன் ஹர் லிப்ஸ்!" மதுசூதன் கிண்டலடித்தான்!

"அதெல்லாம் முடியாது! எங்க கல்சர்படிதான் நான் நடந்துப்பேன்!" காமேஷ் முறைத்தான்.

"சாரி! நீங்க நான் சொல்றபடி நடந்தாதான் இந்த கேம் முடியும்! இல்லைனா நாம இப்படியே நைட் முழுக்க உட்கார்ந்திருக்க வேண்டியதுதான். நோ.. ஃபர்ஸ்ட் நைட் ஃபார் தி வெட்டிங் கப்பிள்!" பிடிவாதமாகக் கூறினான், மதுசூதன்.

"டேய்.. காமேஷ்! என் பிழைப்புல மண்ணை போடாதேடா.. கமான்டா!" அர்ஜூன் அலறினான்.

"அவரை விட்டுடுங்க! அதெல்லாம் வேண்டாம்." அச்சத்துடன் ஈனஸ்வரத்தில் கூறினாள், தேனுகா,

"நத்திங் டூயிங்! காமேஷ்! நாங்க சொல்றதை நீங்க செஞ்சுதான் ஆகணும்! இல்லைனா நீங்க லூஸர்னு நான் அறிவிக்க வேண்டியிருக்கும் தமிழ் நாட்டு கய்ஸ் ஆர் நாட் ரோமாண்டிக் நான் சொல்லிடுவேன்!" மதுசூதன் ப்ளேக் மெயில் செய்தான்.

இது போதாதா, ஜல்லிக்கட்டு காளைகளை உசுப்பேத்த! தமிழுக்கும், ஆண்மைக்கும் களங்கம் என்றால் சும்மா இருக்குமா வாலிபம்!

காமேஷ் திரும்பி தேனுகாவைப் பார்த்தான் மழையில் நனைந்த கோழிக்குஞ்சு போல் பயத்தில் ஒடுங்கி இருந்தாள், தேனுகா.

எப்போது மதுசூதனன் சொல்வதுபோல் செய்வது என்று துணிந்து விட்டானோ, அப்போதே எவ்வித தயக்கமுமின்றி உறுதியுடன் மீண்டும் தேனுகாவுக்கு முன்பாக மண்டியிட்டான்.

மற்றவரின் கட்டாயத்தின் பேரில்தான் நான் இதை செய்கிறேன் என்கிற முகபாவம் இல்லாமல், நான் இதை விருப்பத்துடன்தான் செய்கிறேன் என்கிற தகவலை தனது குறும்பான புன்னகையால் தேனுகாவுக்கு மட்டும்

தெரியப்படுத்தியவன் சட்டென்று தன் தடித்த இதழ்களால் அவளது இதழ்களை மூடினான்.

குழுவினரிடையே பலத்த ஆரவாரம்! அந்தக் காட்சியின் தாக்கத்தில், அர்ஜூனும், கன்னிகாவின் பக்கமாக திரும்ப, ரிஸார்ட்டை அதிர வைத்தது. கரகோஷம்.

தேனுகாவின் தோழி சாருலதா அவளைத் திகைப்புடன் பார்க்க, இன்மொழியின் முகத்தில் லேசாக பொறாமை.

தேனுகா - காமேஷ்வரனின் முத்தம் காம-தேனுவின் முத்தமாக பெரும் பிரச்னைகளை ஏற்படுத்த உள்ளதை அங்கே ஒருவரும் அறியவில்லை.

காமேஷ் - தேனுகாவின் இதழ்களை முத்தமிட்ட போது, கோவூர் தேனுகாம்பாள் சன்னிதியில் சங்கிலியில் பிணைக்கப் பட்டிருந்த தூங்கா விளக்கு அறுந்து விழுந்து, கீழே உருண்டு விளக்கும் அணைந்து போனது.

பெரிய வீட்டின் வாயிலில் மாட்டப்பட்டிருந்த காமதேனுவின் படம் கீழே விழுந்து நொறுங்கியது.

காமேஷ் தன்னை முத்தமிட்டு விட்டுச் சென்ற அடுத்த வினாடி, தேனுகாவின் பதைபதைத்த பார்வை காண்டீபனின் பக்கம் திரும்பியது. அவன் தலை குப்புறக் கவிழ்ந்து

கிடந்தான். அவன் முன்பாக இரண்டு மூன்று காலி மதுபாட்டில்கள் வரிசையாக நின்றன.

காமதேனுவின் முத்தத்தை காண்டீபன் கண்டிருப்பானா? இல்லை. போதையில் அதைக் காணத் தவறிவிட்டானா?

# அத்தியாயம் 24

"**வீ**டெல்லாம் வசதியா இருக்குங்களா? இந்த வீட்டுக்காரர் ஹெட்மாஸ்டர்கிட்டேதான் நாங்க எல்லாருமே படிச்சோம்! நீங்க அவரு வீட்டுல குடி வந்திருக்கீங்கன்னு கேள்விப்பட்டு ரொம்ப சந்தோஷப்படறோம்! ரெண்டு பேரும் டாக்டர்களா வேற இருக்கீங்க! இனிமே எங்களுக்கு என்ன குறை!" வனமாலியிடம் பெரிய பாண்டி சொன்னார்.

"ரொம்ப சந்தோஷம்! ஹெட் மாஸ்டர் உங்க குடும்பத்தைப் பத்தி கூட சொன்னாருங்க! ஊரிலேயே பெரிய குடும்பம்! காமதேனுவோட அருள் கிடைச்ச குடும்பம்னு சொல்லிகிட்டே இருப்பாரு!" ஹம்ஸவர்த்தினி தன் பங்குக்குச் சொன்னாள்.

"ஒரு முறை நீங்க, எங்க பெரிய வீட்டு விருந்துக்கு வரணும்!" பெரிய பாண்டி அழைத்தார்.

"நிச்சயம் வறோம்!" வனமாலி கூறினார். ஹம்ஸவர்த்தினி கொண்டு வந்து கோப்பைகளில் ஏலக்காய் டீயை அளித்தாள்.

பாண்டி சகோதரர்கள் டீயை சுவைத்து மலைத்துப் போனார்கள்.

"அடடே! ஏலக்காய் டீ பிரமாதம்!" என்றவாறே உறிஞ்சினார்கள்.

"நீங்க ஆயிரம்தான் சொல்லுங்க! பட்டணத்துக்காரங்க வாழ்க்கையை அனுபவிக்கத் தெரிஞ்சவங்க பாருங்களேன். எங்ககிட்டே ஏலக்காய் இருக்கு, டீ இருக்கு! ஆனால் இரண்டையும் சேர்க்க தெரியலையே!" செந்தூரப் பாண்டி சொன்னார்.

"உண்மைங்க! ஒண்ணு சேர்க்காம பிரிச்சு பிரிச்சு வக்கறதால என்ன சுவை இருக்க முடியும்? ஒண்ணு சேர்த்தாத்தான் சுவை கிடைக்கும்!" ஹம்ஸவர்த்தினி சொல்ல, சகோதரர்கள் குழப்பத்துடன் அவளைப் பார்த்தார்கள்.

"அம்மா! என்ன சொல்றாங்க?"

வனமாலி அரண்டு போய் ஹம்ஸாவைப் பார்த்தார், அவள் சற்றும் அயரவில்லை.

"இல்லீங்க! சமையல் செய்யறச்சே புதுசு புதுசா ஐடம்களை தயாரிக்கணும்! இதோடு அதை சேர்த்து பார்த்தா சுவை எப்படி இருக்கும்னு ஆராய்ச்சி செஞ்சு சமையல் செய்யறதுதான் எனக்கு பிடிக்கும்! எலுமிச்சையும், டீயும் சேர்த்தா புத்துணர்ச்சி கிடைக்கும்! ஆனா நாம எலுமிச்சையே உடலுல சேர்க்கிறது கிடையாது."

"நூத்துல ஒரு வார்த்தை அம்மா! சமையலுல பாய்ச்சி செஞ்சு சமைக்கணும்தான். என் ஆத்தாகாரி கக்குழம்பு வச்சா, நாலு நாளைக்கு கையை விட்டு கணம் போவாது!" பெரிய பாண்டி பெருமையுடன் கூறினார்.

"உங்க அம்மா இப்பவும் சமைக்கிறாங்களா?" ஹம்ஸா கேட்டாள்.

"இல்லீங்க! அதுக்கு சித்த ஸ்வாதீனம் இல்லீங்க! ரூம் உள்ளாறதான் இருக்கும்! எங்களோட பேசியே யுகம் ஆகுது!" இசக்கி பாண்டி சொன்னான்.

"என் புருஷன் கைராசியான மனோதத்துவ நிபுணர். அவர் நிச்சயமா உங்கம்மாவை குணப்படுத்திடுவாரு."

ஹம்ஸா தைரியம் கூற, சகோதரர்கள் புறப்பட்டனர்.

"அப்ப நாங்க உத்தரவு வாங்கிக்கறோம்!" பெரிய பாண்டி எழுந்தார்.

கடைக்குட்டி பாண்டியின் பார்வை சுவருல மாட்டப் பட்டிருந்த புகைப்படங்களை மேய்ந்துக் கொண்டு வர, ஒரு குறிப்பிட்ட படம், அவனுள் ஒரு சிறு அதிர்வை ஏற்படுத்தியது. அந்த படத்தில் உள்ள முகத்தை எங்கோ பார்த்திருக்கிறோம் என்கிற உணர்வு எழுந்தது.

"ஐயா, இவர் யாரு?" சுவரில் மாட்டப்பட்டிருந்த நரேந்திரநாத்தின் படத்தைச் சுட்டிக்காட்டினார் குணசேகர பாண்டி.

என் தம்பிதான் என்று சொல்வதற்காக வாயெடுத்த ஹம்ஸவர்த்தினியை சட்டென பார்வையால் அடக்கினார், வனமாலி.

"அவன் என் மாணவன்! ஆராய்ச்சி உதவியாளன் இப்ப அமெரிக்காவுல இருக்கான்!" வனமாலி சொன்னார்.

வனமாலி வீட்டிலிருந்து மீண்டும் பெரிய வீட்டுக்கு காரில் சென்று கொண்டிருந்தனர்! பாண்டி சகோதரர்கள்.

"நல்ல மனுஷங்களா இருக்காங்க! இந்த மாதிரி ஒரு டாக்டர் தம்பதிகள் நம்ம ஊருல இருக்கிறதும் நல்லதுதான்!" பெரிய பாண்டி கூறினார்.

"பணம் இருக்கு செலவழிக்க! அமைதியான வாழ்க்கைக்காக வசதிகளை விட்டுட்டு கோவூருக்கு வந்து வாழறாங்களே ஆச்சரியமா இருக்கு!" செந்தூர பாண்டி கூறினார்.

"அதுதான் சந்தேகமா இருக்கு! எதுக்காக எல்லா ஊரையும் விட்டுட்டு நம்ம ஊருக்கு வந்தாங்க! அமைதியான

இடம்னா ஸ்விட்ஸர்லாந்து போகலாம்! இல்லைனா ஹிமாசல பிரதேஷ்.. எதுவும் இல்லைனா.. ஊட்டிக்கு போகலாம்! நம்ம ஊருக்கு எதுக்கு வந்தாங்க?" இசக்கி பாண்டி கேட்டான்.

"நீங்கள்லாம் கேள்வி கேட்கறீங்க! நான் பதிலையே கண்டுபிடிச்சுட்டேன்! அந்த வீட்டுல மாட்டியிருந்த ஃபோட்டோ யாருடையதுன்னு கேட்டேன் இல்லை!"

"ஆமா! அவரோட மாணவன்னு சொன்னரே! அந்த முகத்தை நான் இன்னும் மறக்கலை! ரேணுகாவை இழுத்துட்டு ஓடினானே! அந்த மோட்டார்பைக் பையன்! அவனேதான் அது!" குணசேகர பாண்டிச் சொல்ல, காரை ஓட்டிக் கொண்டிருந்த செந்தூரப்பாண்டி திடுக்கிட்டு பிரேக்கை அழுத்த கார் குலுங்கியது.

# அத்தியாயம் 25

**சு**பாங்கி, நிகேத்தின் வீட்டின் முன்பாக காரை நிறுத்தினாள். அவளுடைய அத்தை வித்யாவதி அவசர வேலையாக உடனே வரும்படி அழைத்திருந்தாள்.

தனக்கு பெங்களூரில் ஒரு மேட்ச் இருப்பதாக சொல்லி விட்டு விடியற்காலையிலேயே கிளம்பி விட்டான், சந்தீப். பொழுதை எப்படி ஓட்டுவது என்று முடியைப் பிய்த்துக் கொண்டிருந்த சுபாங்கிக்கு அத்தையின் அழைப்பு ஒரு ஆறுதலாக அமைந்தது.

வித்யாவதியும் வெளியே கிளம்புவதற்கு தயாராகவே இருந்தாள்.

"புறப்படு, சுபாங்கி! உனக்காகத்தான் காத்திருந்தேன்! வித்யாவதி, வீட்டை வேலைக்காரி வசம் ஒப்படைத்து விட்டு, இவளது காரை நோக்கி நடந்தாள்!"

"என்ன விஷயம் அத்தை!"

"இப்ப ஒண்ணும் கேட்காதே! நான் சொல்றதை மட்டும் கேளு! நான் சொல்ற இடத்துக்கு காரை ஓட்டு!" வித்யாவதி கட்டளையிட்டாள்.

சென்னையிலேயே பெரிய நகைக்கடையின் பெயரை வித்யாவதி குறிப்பிட்டதும், புருவங்களை உயர்த்தியபடி அவளை திரும்பிப் பார்த்தாள் சுபாங்கி.

தன் சுட்டுவிரலை வாயின் மீது வைத்துவிட்டு சாலையைக் காட்டி பேசாமல் காரை ஒட்டு என்கிற பாவனையில் விரலை அசைத்தாள் வித்யாவதி.

அத்தையின் வழக்கம் அது. அனாவசியமாக பேச மாட்டாள். ஒன்றிரண்டு சொற்களை மட்டுமே பிரயோகப் படுத்திதான் கூற வேண்டிய தகவலை உணர்த்துவாள்.

அந்தப் பெரிய நகைக்கடையின் முன்பாக காரை நிறுத்த, தயாராக நின்ற சிப்பந்தி காரை பார்க்கிங் ஏரியாவுக்கு செலுத்திக் கொண்டு சென்றான்.

"டயமண்ட் செக்ஷன்!" வித்யாவதி கூறியதும், இரண்டாம் மாடியில் லிஃப்ட்டை நிறுத்தினான், லிஃப்ட்டை இயக்குபவன்.

"கம் சுபாங்கி!" என்ற வித்யாவதி நேராக கடைச் சிப்பந்தியிடம் சென்றாள்.

"என்னோட பட்ஜெட் இருபத்தைந்து லக்ஷம்! அதுக்கு ஏத்த நெக்லஸ், டிராப்ஸ் செட்டை எடுத்து கொடுங்க!" என்றதும் சிப்பந்தி பணிவுடன் அவர்களை அமர சொன்னான்.

"அத்தை! நிகேத்துக்கு கல்யாணம் நிச்சயம் செய்துட்டியா? என்கேஜ்மெண்ட் நெக்லஸ் வாங்கறியா?" வியப்புடன் கேட்டாள்.

"உஷ்.. நோ குவஸ்டின்ஸ் சுபாங்கி. உனக்கு புடிச்ச மாதிரி ஒரு நெக்லஸ் செட் எடு. பட்ஜெட் 25 லக்ஷம்! யாருக்குன்னு அப்புறமா சொல்றேன்." வித்யாவதி கூறினாள்.

தொழிலதிபரின் பெண்தான் சுபாங்கி. அனால் அவள் அப்பா பணம் செலவழிப்பதில் சுருக்கு! இவளுக்கு இரண்டு லக்ஷத்தில் நெருக வாங்குவதற்கே ஆயிரம் முணுமுணுப்புகள். அனால் அத்தையோ வரப்போகும் மருமகளுக்காக இப்போதே இருபத்தைந்து லக்ஷத்தில் நெக்லஸ் வாங்குகிறாளே! நிகேத் ப்ரபோஸ் செய்தபோது அவளை அலக்ஷியப்படுத்தியது தவறோ!

மன உறுத்தலுடன்தான் நெக்லஸ் செட்டை தேர்ந்தெடுத்தாள், சுபாங்கி. சூரிய, சந்திர நக்ஷத்திர வடிவில் வைரங்கள் அடங்கிய மில்கி வே என்னும் நெக்லஸ் சுபாங்கியை பெரிதும் கவர்ந்தது. விலை சரியாக இருபத்தியாறு லக்ஷங்கள்! வித்யாவதி கறாராகப் பேசி ஒரு இருபத்தி ஐந்து ஆயிரத்தை குறைத்து அந்த நெக்லஸை வாங்கி விட்டாள்,

"கழுத்துல போட்டுப் பாரு!" வித்யாவதி கூறினாள்.

"நானா?"

"ஆமா.. நீதான்! நெக்லஸ் உனக்குத்தான்! சுபாங்கி, மால்டீவ் ஹோட்டல்ல நல்ல டர்ன் ஓவர் மா! நிகேத்க்கு இந்த வருஷம் 20 கோடி லாபம் கிடைச்சிருக்கு. எனக்கு அடையார்ல ஒரு ப்ளாட்டும், உனக்கு ஒரு வைர நெகலஸூம் வாங்கித் தரான்மா.."

"உனக்கு வாங்கித் தரலாம் அத்தை. எனக்கு எதுக்கு?" சுபாங்கி மலைத்தாள்.

"சுபாங்கி எனக்கும், நிகேத்துக்கும், யார் இருக்கா? என் அண்ணனையும், உன்னையும் தவிர! நிகேத் ஈஸ் மேட் ஆஃப்டர் யூ சுபாங்கி. நீ மட்டும் அவனை கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சிருந்தா, இந்த லாபம் 50 கோடியை எட்டியிருக்கும். நீ மறுத்திட்ட சோகத்துலதான் லாபம் குறைஞ்சுப் போச்சு! எனிவே, நீ கல்யாணத்துக்கு சம்மதிச்சி இருந்தாலும், சம்மதிக்கலேன்னாலும் என் அண்ணன் மகள் என்கிற பந்தம் விட்டுடுமா! கமான் சுபா! நெக்லஸ் போட்டுண்டு, ஒரு செல்ஃபி எடுத்து எனக்கு வாட்ஸ் அப்பில் அனுப்பு, நிகேத் ஈஸ் வெயிட்டிங் டு ஸீ யூ வேரிங் ஹிஸ் கிஃப்ட்!"

வித்யாவதி சொல்ல சுபாங்கி உருகிப்போனாள். கல்யாணம் செய்துக் கொள்ள மறுத்த இவளுக்காக நிகேத் லக்ஷங்களை வாரி இறைக்கிறான். ஆனால், இவள் விரட்டி விரட்டி காதலித்து மணம் செய்து கொண்ட சந்தீப் ஷங்கர் நேற்றிரவு இரண்டு லக்ஷம் கடன் கேட்டானே?

"டார்லிங் சுபா! அப்பாகிட்டே சொல்லி எனக்கு ஒரு இரண்டு லக்ஷம் கடன் வாங்கி தர்றியா? திருப்பி கொடுத்துடறேன். பெங்களூர் செலவுக்கு வேணும்!"

"என்கிட்டே ஒன்றரை லக்ஷம் இருக்கு! தரேன்! இதுக்கெல்லாம் அப்பாகிட்டே போய் நிக்க வேண்டாம்!" என்றபடி சுபாங்கி தன்னிடமிருந்த ஒன்றரை இலக்ஷ ரூபாயை அவனுக்கு திரட்டி தந்திருந்தாள்!

நெக்லஸ் அணிந்த சுபாங்கி தன்னை செல்ஃபி எடுத்துக்கொண்டாள். உண்மையிலேயே, அந்த மில்கி வே நெக்லஸ் சுபாங்கிக்கு கணகச்சிதமாக பொருந்தி யிருந்தது.

"யூ லுக் டாஸ்லிங்!" வித்யாவதி சுபாங்கி கையைப் பற்றி குலுக்கினாள்.

"தாங்க்யூ அத்தை!"

கடைக்காரரை நோக்கினாள் வித்யாவதி. "இதுக்கு பில் போட்டு ரெடியா வையுங்க! இந்தா சுபாங்கி! பையில கேஷ் இருக்கு பே.. பண்ணிடு! நான் ஸில்வர் செக்ஷனுக்கு போயிட்டு வரேன்! என் ஃபிரெண்டு பெண்ணுக்கு கல்யாணம்! குத்துவிளக்கு வாங்கணும்!" என்றபடி அகன்றாள் வித்யாவதி.

‘மில்கி வே’ நெக்லஸை எடைப்பார்த்துவிட்டு பில் போடுவதற்கு சென்றான் கடை சிப்பந்தி.

கேஷ் பேக்கை மார்போடு அணைத்தபடி சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருந்த சுபாங்கி, எதிரே இருந்த கண்ணாடியில் தென்பட்ட பிம்பங்களை கண்டதும், திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள்.

எதிர்புறம் சற்று தள்ளி இருந்த ஒரு கௌண்டரில் சந்தீப் ஷங்கரும், தான்யா சௌத்ரியும் அமர்ந்திருந்தனனர். கடை சிப்பந்தி எடுத்துத்தரும் நகைகளை ஒவ்வொன்றாக தான்யாவின் கழுத்தில் போட்டு அழகு பார்த்துக் கொண்டிருந்தான், சந்தீப்.

சுபாங்கியின் முகத்தில் ஜிவ்வென்று ரத்தம் பாய்ந்தது. சட்டென்று தன் முகத்தை வேறு பக்கமாக திருப்பிக் கொள்ள, அங்கு நின்றிருந்த மற்றொரு சிப்பந்தி வேகமாக முன்னேறி வந்தான்.

"இன்னும் ஏதாவது வேணுமாம்மா?"

"இல்லேப்பா! அங்க நகை வாங்கறாங்களே! அவரு..!" சுபாங்கி இழுத்தாள்.

"அவர்தாம்மா கிரிக்கெட் ப்ளேயர் சந்தீப் ஷங்கர்! அது நடிகை தான்யா சௌத்ரி!" கடைச் சிப்பந்தி கூறினான்.

"அது தெரியும்ப்பா! பட்.. அவங்க வாங்கற நகையெல்லாம் என்ன ரேஞ்ச் ஆவுது?" சுபாங்கி நூல் விட்டாள்.

"ரொம்ப விலை இல்லைம்மா! ஒரு லக்ஷம் ஒண்ணரை லக்ஷம்தான்!"

ஆக -

இவள் நேற்று கடன் தந்திருந்த ஒன்றரை லக்ஷத்தில் தான்யாவுக்கு நகை வாங்கி பரிசளித்துக் கொண்டிருக்கிறான். எழுந்து போய் அவனது சட்டை காலரைப் பிடிக்க வேண்டும் என்கிற வெறி அவளுள் எழுந்தது.

"மேடம்! பில் ரெடி"

வைர நெக்லஸ் பெட்டியை பெற்றுக்கொண்டு, பில் தொகை இருபத்தி ஐந்து லக்ஷத்தி எழுபத்தி ஐந்தாயிரத்தையும்

கட்டி விட்டு அத்தை வித்யாவதி இருந்த சில்வர் செக்ஷனை நோக்கி நடந்தாள், சுபாங்கி.

சில்வர் செக்ஷன் இருந்த நான்காம் மாடியை நோக்கி லிஃப்ட் நகர்ந்தபோது, நிகேத் அவள் மனதில் உயர்ந்து கொண்டிருந்தான். சந்தீப் அவள் மனதின் பேஸ்மெண்டை நோக்கி இறங்கிக் கொண்டிருந்தான்.

# அத்தியாயம் 26

**வ**ழக்கம்போல் சிவநேசன் பூஜையறையில் சாம்பிராணி புகையை பரப்பி கந்தர் சஷ்டியை ஒலித்துக் கொண்டிருந்தார். குலதனம் கிடைத்த காய்கறிகளை யெல்லாம் போட்டு கூட்டு தயாரித்துக் கொண்டிருந்தாள். அருந்ததி மகிழ மலர்களை பசி வழியாக நூலில் கோர்த்துக் கொண்டிருந்தாள், மூவரின் மனங்களும் நண்பனின் திருமணத்திற்காக கேரளா சென்றிருக்கும் காமேஷ் எப்போது திரும்பி வருவான் என்று அலை பாய்ந்து கொண்டிருந்தது. என்னதான் கோபக்காரன் என்றாலும், அவன் வெண்கல குரல் வீட்டில் ஒலிக்க வில்லையென்றால் இவர்களுக்கு என்னவோ போல் இருக்கும். அவன் வீட்டில் நடமாடினாலே இவர்களுக்கு தைரியம் வந்து விடும், 'காமேஷ் இருக்கிறான்' பார்த்துக் கொள்வான் என்கிற உள்ளுணர்வு எப்போதும் இவர்களுக்கு உண்டு.

முன் தினம் இரவு பத்தரை இருக்கும்! சமையலறையில் திடீர் சத்தம், பதறியடித்துக் கொண்டு ஓடினாள் குலதனம். பின்னாலேயே அருந்ததியும் சென்றாள். சாமி அலமாரியில் வைத்திருந்த மஞ்சள், குங்குமம் டப்பாக்கள் கீழே உருண்டு

கிடந்தன. சமையலறை முழுவதும் குங்குமம், மஞ்சளும் இறைந்து கிடந்தது.

"என்ன இது!" என்று பின்னால் வந்து நின்ற அருந்ததி கேட்டுக் கொண்டு இருக்கும் போதே காமதேனுவின் படத்திற்கு மாட்டியிருந்த பூச்சரம் திடீரென அவிழ்ந்து நேராக அருந்ததியின் இடத் தோளில் விழுந்தது.

பிரமித்துப் போய் நின்றனர், தாயும் மகளும்.

இரவு பதினொரு மணி இருக்கும் வீட்டுக்காரரர் ஐயரிடமிருந்து சிவநேசனுக்கு ஃபோன் என்று எதிர் வீட்டு கிட்டா ஐயர் வந்து அழைத்தார்.

'என்னவோ ஏதோ' என்று பதைபதைத்துக் கொண்டு ஓடிய சிவநேசன் வரும்போது வாயெல்லாம் பல்லாக வந்தார்.

"அடியே குலதனம்! வீட்டுக்காரரர் ஐயர்தான் ஃபோன்! அடுத்த தை மாசம் அவர் கோவூர் வர்றாராம்! எனக்கே வீட்டை கிரயம் பண்ணிக் கொடுத்துடறேன்னு சொல்லிட்டார்! என்னால முடிஞ்ச தொகையை கொடுத்தா போதுமாம்! ஆனா.. ஒரே ஒரு கண்டிஷன் தான் போடுறாரு! எப்போதாவது அவர் தேனுகாம்பா - காமேஷ்வரரை தரிசிக்க கோவூர் வந்தார்னா, அவர் தங்கறதுக்கு நான் இடம் கொடுக்கணுமாம்!" பரவசத்துடன் கூறினார் சிவநேசன்.

அன்றிரவு குடும்பம் தூங்கவேயில்லை! எதனால் திடீர் என்று இந்த அதிர்ஷ்டக் காற்று அடிக்கிறது? சமையலறையில் குங்குமமும், மஞ்சளும் இறைந்து, காமதேனுவின் படத்தில் இருந்து புஷ்பம் அருந்ததியின் மேல் விழுந்ததே! இவை நிகழ இருக்கும் சுப காரியங்களுக்கு கட்டியம் கூறுகின்றதா என்ன?

மூவருமே அமைதியாக தத்தம் பணிகளை செய்துக் கொண்டிருந்தாலும், முந்தைய தினம் நிகழ்ந்த சுப நிகழ்வுகள் அன்றும் தொடருமா என்று தங்களுக்குள் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"மேடம்"

வாசற்புறம் குரல் கேட்க, அருந்ததி எழுந்து போனாள்.

"யாருங்க?"

"நாங்க கௌரி ஜுவல்லரியிலேர்ந்து வர்றோம். இங்கே அருந்ததின்னு யாராவது இருக்காங்களா?"

"நான்தான் அது!"

"உங்க பேருல நகைச்சீட்டு கட்டறீங்களா?" அந்த நபர் கேட்டான்.

"ஆமா! நான்தான் என் பொண்ணு பேருல கட்டறேன்.. என்ன விஷயம்?" குலதனம் வாசலுக்கு வந்தாள்.

"எங்க கௌரி ஜூவல்லரியை பெரிசா கட்டி இருக்கோம். புது திட்டங்கள்ளாம் அறிவிச்சு இருக்கோம்! எங்ககிட்ட சீட்டுக் கட்டறவங்க நம்பரையெல்லாம் குலுக்கி போட்டு ஒரு நம்பருக்கு ஒரு கிலோ தங்கம் பரிசா அறிவிச்சிருந்தோம். 2332 என்கிற நம்பருக்கு கிடைச்சிருக்கு, பெயர் அருந்ததின்னு கொடுத்திருக்கு! கொஞ்சம் அட்டையை தர்றீங்களா?"

அந்த கடைக்கார சிப்பந்தி கேட்க, குலதனத்தின் கால்கள் துணியாகிப் போயின. என்ன நடக்கிறது இந்தக் குடும்பத்துக்கு?

நடுங்கும் கரங்களால் காமதேனு படத்தின் கீழிருந்த அலமாரியில் இருந்து கௌரி ஜூவல்லரியின் சீட்டு அட்டையை எடுத்தாள், காமதேனுவின் திருவடிகளில் வைத்து கண் மூடித் திறந்தவள், நம்பரை பார்த்தாள்.

நம்பர் எங்கே தெரிந்தது? கண்ணீர்தான் பார்வையை மறைத்தது.

பின்னால் வந்து நின்ற சிவநேசன் வெடுக்கென்று கார்டை பிடுங்கி அதிலிருந்த நம்பரைப் பார்த்தார்,

2332 -

"அப்பனே முருகா!" என்றபடி அப்படியே தரையில் அமர்ந்து விசும்பத் துவங்கிவிட்டார்.

அருந்ததிதான் உள்ளே வந்து கார்டை எடுத்துக் கொண்டு போக வேண்டியிருந்தது,

வரும் வெள்ளிக்கிழமை பரிசளிப்பு விழா என்று அழைப்பிதழை கொடுத்து விட்டுப் போனான், கௌரி ஜுவல்லரி மானேஜர்.

ஒரு கிலோவிற்கு நகைகளும் வாங்கிக் கொள்ளலாம், இல்லை தங்க நாணாயங்களைம் பெற்றுக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு, சென்றிருந்தான், அந்த மானேஜர்,

மானேஜர் சென்றதும், தந்தை தாய் மகள் மூவருமாக ஒரு மாட்டம் அழுதுவிட்டு, சிறப்பு பூஜை சேய்தனர், நல்ல செய்தி வரும்போது தங்களுடன் காமேஷ் இல்லையே என்கிற வருத்தத்துடன், அவனுக்காகக் காத்திருந்தனர்.

தாமேஷ் தேனுகாவுக்கு தந்திருந்த முத்தம்தான், இத்தனை மாற்றங்களுக்கும் காரணம் என்பது அறியாமல் அவனது வரவுக்காக வழிமேல் விழி வைத்துப் பார்த்திருந்தனர்.

மீண்டும் வாசலில் அரவம். எதிர் வீட்டு உமையாள்தான் கையில் தாம்பூலத் தட்டுடனும், தன்னை விட குள்ளமாக

தம்பியைப் போல காட்சியளித்த கணவன் கமலநாதனுடன் வந்து கொண்டிருந்தாள்.

"ஐயா! உங்க பொண்ணு அருந்ததியை என் மகள் செந்திலுக்கு பெண் கேட்டு வந்திருக்கேன்!" உமையாள் சொல்ல குடும்பம் அதிர்ந்தது.

"இருங்க., காபி கொண்டு வரேன்" என்று உள்ளே வந்த குலதனம் காமதேனுவின் முன்பாக தலை வணங்கினாள்.

'அன்னைக்கு தேனுகா சேலையை கட்டிக்க என் வீட்டுக்குள்ளே வந்தபோதே எனக்குத் தெரியும் இப்படியெல்லாம் நடக்கும்னு. காமதேனு! எனக்கு நீ செஞ்சதெல்லாம் போதும்! இனிமே எனக்கு ஏதாவது செய்யணும்னு நினைச்சேன்னா, ரேணுகா போல தேனுகா கண் நிறைஞ்ச புருஷனோட சந்தோஷமா வாழ வகை செய்யணும்! அது போதும் எனக்கு!' என்று கண்ணீர் மல்க பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

**ஹெ**ட்மாஸ்டர் வீட்டுக்கு சென்று வனமாலியை குசலம் விசாரித்து விட்டு வந்த அன்று இரவு மணி பத்தரை! சகோதரர்கள் தத்தம் ஜாகைகளில் செட்டில் ஆகி விட்டனர்.

வீட்டு முகப்பு சிவநேசன் அமர்ந்திருக்கும் திண்ணையில் இடைகழியின் மேலே மாட்டப்பட்டிருக்கும் காமதேனு படம் அறுந்து கீழே விழுந்து நொறுங்கியது.

திண்ணையில் படுத்துக் கொள்ளும் அங்காயி நடுநடுங்கிப் போனாள். உடனே வேலைக்காரன் தண்டபாணியை அழைக்க, அவன் ஓடோடிச் சென்று பெரிய பாண்டியின் போர்ஷன் கதவை தட்டினான்.

"என்னடா.. தண்டபாணி" அங்கயற்கண்ணி தூக்கம் சுழன்ற கண்களோடு கேட்டாள்.

"அம்மா! நுழைவு வாசலில் மாட்டியிருந்த காமதேனு படம் கீழே விழுந்து உடைச்சுடுச்சும்மா!"

தூக்கி வாரிப் போட்டது. அங்கயற்கண்ணிக்கு! தூக்கம் விடைபெற்றுச் சென்றுவிட அவசரமாக தன் கணவன் பெரிய பாண்டியை எழுப்பினாள்.

"எழுந்திருங்க! காமதேனு படம் உடைஞ்சுடுச்சாமில்லே!" அங்கயற்கண்ணி கூறியதும் பதறியடித்துக் கொண்டு எழுந்தார் பெரிய பாண்டி!

அதே சமயம் -

இருளடைந்த முகத்துடன் குணசேகர பாண்டி மூன்றாம் மாடியிலிருந்து இறங்கி வந்தான். அவனைப் பார்த்த பெரிய பாண்டி கலவரத்துடன் கேட்டார்.

"விஷயம் தெரியுமா உனக்கு!"

"எனக்கு இப்பத்தான் தெரியும்! உங்களுக்கு எப்படித் தெரியும்?" குணசேகரன் வியந்தான்.

"இப்பதான் பெரிய அண்ணி சொன்னாள். எப்படி திடீர்னு அறுந்து விழுந்தது?" பெரிய பாண்டி கேட்டார்.

குணசேகர பாண்டி, திகைத்தான்.

"நீ எதைப் பத்தி பேசறே!"

"நான் நம்ம காமதேனு படம் உடைஞ்சு போனதைப் பத்தி பேசறேன்!" பெரிய பாண்டி சொன்னார்.

"நான் பேசற விஷயமே வேற! நம்ம புது ஃபேக்டரில் தீ விபத்து! எல்லாம் நாசம்! இன்னும் நாம் ஃபேக்டரியை இன்ஷர் கூட பண்ணலே! இப்பத்தான் ஒரியண்டல்காரங்க கிட்டே பேசிக்கிட்டு இருக்கோம்! அதுக்குள்ளாற விபத்து!"

பெரியவன் முகத்தில் ஈயாடவில்லை!

"நான் அதுக்குத்தான் அப்பவே சொன்னேன். தேனுகாவை ஊரை விட்டு அனுப்பாதீங்கன்னு கேட்டீங்களா?"

தமயந்தி கூற, அனைவருமே மௌனம் சாதித்தனர்.

‘ஒருவேளை தேனுகாவை குருவாயூருக்கு அனுப்பியது தவறோ? அதனால்தான் இப்படியெல் நடக்கிறதோ?’

"எஜமான்!" கோனார் நவநீதம் ஓடோடி வந்தான்.

"என்னடா?"

"நம்ம கோசாலையில் மூணு பசுமாடு செத்துப் போச்சுங்க! பாம்பு கடிச்சிருக்கணும்! அந்த மூணு மாடு நம்ம திருமகளும் ஒண்ணுங்க!" கண்ணீருடன் கோனார் சொல்ல, பெரிய பாண்டி அச்சத்துடன் தண்டபாணியை பார்த்தார்.

"ஏலே தண்டபாணி! போய் அழகர் கோடாங்கியை கையோடு அழைச்சுட்டு வா!" என்றார்.

அதற்குள் மத்த சகோதர்களும் தத்தம் மனைவி மார்களோடு இறங்கி வர, பெரிய வீட்டில் அன்று யாருமே தூங்கவில்லை,

# அத்தியாயம் 27

குமாரகோம் -

கல்யாண பார்ட்டி கலகலவென்று பேசியபடி போட்டிங் செய்துக் கொண்டிருந்தனர். தேனுகா போட்டிங் செல்லவில்லை! கரையிலேயே ஒரு ப்ளாஸ்டிக் சேரில் அமர்ந்தபடி தொலைவில் சென்று கொண்டிருந்த படகுகளை பராக்குப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

காமேஷ், கன்னிகா-அர்ஜுன் உட்கார்ந்திருந்த படகில்தான் இருந்தான். தம்பதிகளுக்கு முதுகை காட்டியபடி படகு செலுத்திக் கொண்டிருந்தவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

முந்தைய தினம், தான் தேனுகாவுக்கு தந்திருந்த முத்தத்தை பற்றியே அவன் மனம் அசைப்போட்டுக் கொண்டிருந்தது. அவள் அந்த அதிர்ச்சியில் இருந்து இன்னும் விடுபடவில்லை என்பது அவள் போட்டிங் வராததில் இருந்தே இவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

இவன் மீது எந்த குற்றமும் இல்லை! இவன் மறுத்துதான் பார்த்தான். எல்லோரும்தானே வற்புறுத்தினார்கள். தேனுகாவாவது எழுந்து எதிர்ப்பு தெரிவித்திருக்கலாம்!

இவனது எதிர்ப்பைக் காட்டிலும், அவளது எதிர்ப்புக்கு இன்னும் மதிப்பு அளித்திருப்பாங்களே!

அவளை முத்தமிட்ட அந்த கணத்தை நினைத்துப் பார்த்தான். தேனுகா அதனை விரும்பி ஏற்றது போலதானே தோன்றியது. எப்படியிருந்தாலும் அந்த முத்தத்தை ஒரு விளையாட்டாகவே எல்லோரும் நினைத்து மறந்து விட்டார்கள். குமாரகோமோடு அந்த நினைவு மறக்கப் பட்டுவிடும்! இவனோ, தேனுகாவோ அதைப் பற்றி நினைத்து வருந்தி கோவூருக்கு அந்த வேதனையை எடுத்துச் செல்வதில் பயனில்லை.

தேனுகாவிடம் ஒரு சாரி சொன்னால் என்ன? கரையை அடைந்ததும் அவளைத் தேடிப் போய் சாரி சொல்லி விட்டால், பிரச்னை தீர்ந்தது. தானே ஆறுதல் செய்து கொண்டான், காமேஷ்.

கரையில் அமர்ந்திருந்த தேனுகாவும் தொலைவில் புள்ளியாக தெரிந்த காமேஷையே வெறித்துக் கொண்டி ருந்தாள். அவனை இவளால் குற்றம் சொல்ல முடியாது. அவன் மறுத்துதானே பேசினான். இல்லை! அவன் குற்றவாளிதான்! கள்ளன்தான்! அவன் நினைத்திருந்தால் நிச்சயமாக முத்தம் கொடுப்பதைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் அவனுக்கே

எப்படியாவது இவளுக்கு முத்தம் கொடுத்து விட வேண்டும் என்கிற ஆர்வம் இருந்திருக்கும். அவனது முத்தத்தில் தயக்கம் எதுவும் காணப்படவில்லையே! ஒருவித வேகத்தைத்தானே இவளால் உணர முடிந்தது.

தனக்கு டிரிங்க்ஸ் பரிமாற வேண்டும் என்கிற கட்டளை வந்தபோது, ஓடோடி வந்து அவள் தெய்வாம்சம் பொருந்தியவள் என்று கூறி இவளுக்காக டிரிங்ஸை வழங்கியவன் ஒரு தெய்வாம்சம் பொருந்திய பெண்ணிற்கு முத்தம் மட்டும் தரலாமா?

தான் காமேஷை மடக்குவதற்கு ஒரு பாயிண்ட்டை பிடித்துவிட்டோம் என்று மனதினுள் நினைத்துக் கொண்டாள். இப்போது இந்த முத்த விவகாரம் குமாரகோமுடன் முடிந்துவிட்டால் சரி! தன்னுடைய குடும்பத்திற்கு விஷயம் எட்டாமல் இருந்தால் போதும்!

இந்தப் பாவி காண்டீபன் காமதேனுவின் முத்தத்தை கண்டிருப்பானா? கண்டிருந்தான் என்றால் இவள் தொலைந்தாள்.

நடுக்க அலை ஒன்று இவளது இதயத்தைத் தாக்க, போட்டிங் சென்றவர்கள் கரைக்கு வருவதற்காகக் காத்திருந்தாள் தேனுகா.

லஞ்ச் முடிந்தவுடன் கல்யாண பார்ட்டி மீண்டும் குருவாயூருக்கு பயணிக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முன் கை கழுவ எண்ணி வாஷ் ஏரியாவுக்கு சென்றாள், தேனுகா. தள்ளுக்கதவை திறந்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

ஸ்ப்ரிங் கதவு தானாக 'கர்ர்ர்' என்று மூடிக்கொள்ள, வாஷ் ஏரியாவில் காமேஷ் நிற்பதைக் கண்டு திகைத்தாள்.

"என்னை மன்னிச்சுடு, தேனுகா! எனக்கு வேற வழித் தெரியலை!" காமேஷ் வருத்தத்துடன் அவளைப் பார்த்தான்.

தேனுகா அச்சத்துடன் தன் பின்னால் பார்த்தாள்.

"பயப்படாதே! காண்டீபன் நான்-வெஜ் செக்ஷன்ல சாப்பிட்டுகிட்டு இருக்கான்! உன்கிட்டே தனியா பேசத்தான் இந்த இடத்தை சூஸ் பண்ணினேன். உனக்கு என் மேல கோபம் இல்லையே!"

"சாரட் வண்டியில இருந்து விழாம என்னை காப்பாத்தினீங்க! இங்கே குமாரகோம்ல நீங்களே என்னை மண்ணுல தள்ளி விட்டுட்டீங்க! விஷயம் எங்க வீட்டுல தெரிஞ்சா என்ன நினைப்பாங்க!"

"எனக்கு தெரியும், தேனுகா! உனக்கு பிரச்னை! அதைவிட எனக்கு பெரிய பிரச்னை! என் அப்பாவோட வேலையே

போயிடும்! இருந்தாலும் அவங்க எல்லாரும் வற்புறுத்தினாங்க! நீதான் பார்த்துகிட்டு இருந்தியே, தேனுகா!" காமேஷ் தான் என்ன செய்ய முடியும் என்கிற பாவனையில் தோள்களை குலுக்கினான்.

"காமேஷ்! உங்களைச் சொல்லிக் குற்றமில்லை! உன் பெயர் ராசி அப்படி!" தேனுகா சற்று காட்டத்துடன் கூறினாள்.

"ஓ.. அப்படியா! அப்ப நீ யாரோட அம்சம், மேடம்! காமதேனுவின் அம்சம் இல்லியா! உன்னோட நேம் முடிவுல.. என்னோட நேம் துவக்கத்துல! ஸோ! நாம ரெண்டு பேருமே குற்றவாளிங்க!" காமேஷ் சற்றே உஷ்ணத்துடன் கூறினான்.

தேனுகா அரண்டு போனாள். காமேஷ் சாதாரண ஆள் கிடையாது. பொதுவாக கட்டான தேகமும், கம்பீர ஆண்மையும் கொண்ட வாலிபர்களுக்கு வாக்கு சாதுர்யம் இருக்காது! வேகம் இருக்கும். ஆனால், விவேகம் இருக்காது! ஆனால் காமேஷிடம் பேச்சு சாதுர்யமும் இருக்கிறதே!

மனதினுள் அவன் மீது இருந்த ஈர்ப்பு இன்னும் அதிகரித்தது. ஆனாலும் தேனுகாவுக்கே உரிய பெரிய வீட்டு குணம் அந்த சமயம் விஸ்வரூபம் எடுத்தது.

எல்லா விதத்திலும் பலம் பொருந்திய காமேஷை காயப்படுத்தி, தன் கையை ஓங்கச் செய்ய வேண்டும் என்று தோன்றிவிட்டது, தேனுகாவுக்கு.

"காமேஷ்! உங்க இரட்டை வேஷம் உங்களைக் காட்டி கொடுத்திடுச்சு! கட்டளைச் சீட்டு விளையாட்டுல, நான் எல்லோருக்கும் ட்ரிங்க்ஸ் பரிமாறணும்னு கட்டளை வந்தப்ப நான் தெய்வாம்சம் பொருந்தினவ. அவளுக்கு அந்த வேலை வேண்டாம்னு நீங்களே எல்லாருக்கும் டிரிங்க்ஸ் வழங்கினீங்க! ஆனா.. முத்தம் கொடுக்கணும்னு உங்களுக்குக் கட்டளை வந்தப்ப, நான் தெய்வாம்சம் பொருந்தின பொண்ணா உங்களுக்குத் தெரியலை இல்லை! தெய்வாம்சம் பொருந்திய பொண்ணு டரிங்ஸ் சர்வ் பண்ணக் கூடாது! ஆனால் அவளுக்கு முத்தம் மட்டும் கொடுக்கலாம் இல்லை?" கோபத்துடன் கேட்டாள், தேனுகா.

காமேஷ், தேனுகாவை அமைதியாகப் பார்த்து, "தேனுகா! நான் மதுசூதன் கிட்டே என்ன சொன்னேன்னு உன்கிட்ட சொல்ல வேண்டிய அவசியமில்லை! நான் உனக்கு எந்த விளக்கமும் தர வேண்டிய அவசியமும் இல்லை! உன் வீட்டு வழக்கப்படி உனக்குக் கல்யாணமே நடக்கப் போறதில்லை! என் வீட்டு சூழ்நிலைப்படி நான் கல்யாணமே செஞ்சுக்கப்

போறதில்லை! அதனால. நீயும் நானும் ரெயில்வே தண்டவாளம் மாதிரி இணையவே போறதில்லை."

"இப்ப நான் உனக்கு கொடுத்த முத்தம் கூட, ஒரு கேம்தான்! கட்டளையிட்ட சீட்டு குப்பையில கிடக்குது! நேத்து ராத்திரி நடந்ததையும் மனசுலேர்ந்து எடுத்து குப்பையில போட்டுடு! அவ்வளவுதான்! வேணுமின்னா இன்னொரு சாரி சொல்றேன்!"

காமேஷ் விர்ரென்று கதவைத் தள்ளி கொண்டு வாஷ் ஏரியாவை விட்டுப் போனான்.

உணவு சாப்பிடும்போது, தற்செயலாக மதுசூதனின் அருகில் அமர நேர்ந்தது தேனுகாவிற்கு. சற்று முன் காமேஷ் வாஷ் ஏரியாவில் கூறியது நினைவுக்கு வந்தது. காமேஷ் அவனிடம் என்ன கூறியிருந்தான் என்பதை அவனிடமே கேட்டு விடலாமா?

மதுசூதனின் பக்கமாக திரும்பி முறுவலித்தாள்.

"தேங்க்ஸ் மது! நேத்து கேம்ல, ட்ரிங்ஸ் சர்வ் பண்ண வைக்காம, என்னைக் காப்பாத்தினியே! எனக்கு குடிச்சும் பழக்கம் இல்லே! சர்வ் செஞ்சும் பழக்கம் இல்லை!" தேனுகா சிரித்தாள்.

"என்னை ஏன் தேங்க் பண்றீங்க! உங்க காதலர் காமேஷ்தான் வந்து சொன்னார். என் காதலி தேனுகா பார் மெய்ட் கிடையாது! அவ ட்ரிங்க்ஸ் சர்வ் பண்ண வக்காதீங்க! ஐ வில் டூ இட் ஃபார் ஹர்னு சொன்னாரு! நான் அவளை லவ் பண்ற விஷயம் யாருக்கும் தெரியகூடாது! ஸோ.. அவங்க டெம்பிள் கேர்ள்! அதனால ட்ரிங்க்ஸ் சர்வ் செய்ய மாட்டாள்னு சொல்ல சொன்னாரு! நானும் அப்படியே சொன்னேன். அவ்வளவுதான்!" அலக்ஷியமாக சொன்னான் மதுசூதன்.

தேனுகா சிலையாக அமர்ந்துவிட்டாள். இவள் மீதுள்ள காதலினால் தான் காமேஷ் இவளை ட்ரிங்க்ஸ் சர்வ் செய்வதற்கு தடை விதித்திருக்கிறான். அந்த காதலினால்தான், கட்டளை சீட்டு முத்தம் கொடுக்கச் சொன்ன போது, மனமுவந்து இவளை அணுகியிருக்கிறான்.

இதையறியாமல் இவள், அவன் மனதை நோகடித்து விட்டாளே! மீண்டும் அவனை தனியாக சந்தித்து பேச வேண்டுமே! ஆனால் அதன்பின் காமேஷ் இவளுக்கு தனியாகவே கிடைக்கவில்லை. மண்டும் குருவாயூர் வந்ததும், அவரவர்கள் தங்கள் இருப்பிடத்திற்குக் கிளம்ப வேண்டிய நேரம் வந்தது.

அர்ஜுன் தேனுகாவைப் பார்த்தான்.

"நீங்க கோவூருக்குத்தானே போறீங்க! என் ஃபிரெண்டு காமேஷை அழைச்சுட்டு போறீங்களா?"

"ஷ்யூர்!" என்று தேனுகா கூறினாளே காண்டீபன் அதற்கு தடை சொல்வானோ என்று தோன்றியது. இருந்தாலும் இவள் பெரிய வீட்டுப் பெண். இவள் உத்திரவிற்கு அடிபணிந்துதான் ஆக வேண்டும் அவன்.

"காண்டீபன்! இவர் மாப்பிள்ளையோட நண் நம்மை சாரட் விபத்துல காப்பாத்தினாரே, அவரேதான் அவரும் என்னோட கோவூர் வரப்போறார்!"

"தெரியும் மேடம்! நம்ம சிவநேசன் ஐயா பிள்ளைதானே!" என்றபடி இன்னோவா கார் கதவை திறக்க, தேனுகாவும், காமேஷும் காரில் ஏறிக் கொண்டனர். கார் கோவூருக்கு புறப்பட்டது.

"என்னை மன்னித்துவிடு! உன் உள்ளத்தைப் புரிந்துக் கொண்டேன்! மது உண்மையை கூறி விட்டான்! ஐ டூ லவ் யூ!"

'பீப்' என்கிற மெஸேஜ் ஒலிக்க, வெளியே பராக்கு பார்த்துக் கொண்டிருந்த காமேஷ், மெஸேஜை படித்து விட்டு இவள் பக்கமாக நோக்கி முறுவலித்தான்.

அவனது கடினமான உள்ளங்கை கார் சீட்டில் வளையமாய் கவிழ்ந்திருக்க, தேனுகாவினுடைய மிருதுவான கரம் மெதுவாக நகர்ந்து சென்று அதனுள் அடைக்கலம் ஆனது. பின் சீட்டில் காமதேனுவின் காதல் சாம்ராஜ்யத்திற்கு கடைக்கால் இடப்பட்டது தெரியாமல், காண்டீபன் அந்த இன்னோவாவை கோவூரை நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்தான்.

# அத்தியாயம் 28

இந்தியன் டீமின் ஆல்ரௌண்டர் அவினாஷ் தல்வார் ரன் ஓடும் பொழுது கீழே விழுந்து 'லிகமெண்ட் டேர்' ஆகிவிட்டதால் அவருக்கு பதிலாக நீங்கள் ஆஸ்திரேலியா டூர் ஸ்குவாட்டில் சேர்க்கப்படுகிறீர்கள். வரும் ஞாயிற்றுக் கிழமை ஸிட்னிக்கு கிளம்பத் தயாராகுங்கள்.

போர்டிலிருந்து வந்திருந்த தந்தியை பெருமையுடன் தன் மாமனார் நித்யமூர்த்தியிடம் நீட்டினான், சந்தீப் ஷங்கர்.

"நல்ல சான்ஸ் சந்தீப்! உன்னோட திறமையை காட்டறதுக்கு! பட்.. உனக்கு வாய்ப்புகள் நிறையவே கிடைக்குது. நீ தான் சொதப்பி அந்த வாய்ப்புகளைத் தட்டிக் கழிக்கறே! இந்த சான்ஸை விடாதே!" நித்யமூர்த்தி சொன்னாலும், தன் மாப்பிள்ளை நிச்சயம் எதையாவது செய்து, சொதப்பி இந்த வாய்ப்பினையும் கெடுத்துக் கொள்வான்! என்றே நம்பினார்.

"இன்னைக்கு வியாழக்கிழமை! அங்கிள்! சனிக்கிழமை பாம்பே போயிட்டு சண்டே ஸிட்னி கிளம்பிடுவேன்!.." சந்தீப் சொன்னான்.

"ஆல் தி பெஸ்ட்!" என்று வாழ்த்து கூறினார் நித்யமூர்த்தி.

சந்தீப்பும், சுபாங்கியும் நித்யமூர்த்தியின் வீட்டிலிருந்துக் கிளம்பி, டாக்டர் ஹம்ஸவர்த்தினியின் க்ளினிக் இருந்த டி.டி.கே.ரோட்டில் திரும்பினார்கள்.

"ஐ யாம் ஹேப்பி ஃபார் யூ சந்தீப்! இப்ப உன் திறமைகளை காட்டறதுக்கு ஒரு நல்ல ஆப்பர்சூனிட்டி கிடைச்சிருக்கு! நாளைக்கே நமக்கு குழந்தைகள் பிறக்கும்! அப்ப நீங்க பொறுப்பான அப்பாவா இருக்கணும்.. ஓகே! தான்யாவோட சங்காத்தத்தையெல்லாம் கட் பண்ணிட்டு, உன் கேரியர்ல கவனம் செலுத்து!" சுபாங்கி கூறினாள்.

"வாட் இஸ் திஸ், சுபாங்கி! இப்பல்லாம் நான் அவளை பாக்கறதேயில்லை தெரியுமா?" சந்தீப் சொன்னான்.

"சரி, முந்தா நாள் நீ அவளுக்கு வாங்கிக் கொடுத்த வைர நெக்லஸ் அவளுக்கு பிடிச்சிருக்கா?" சுபாங்கி வெறுப்புடன் மறுபக்கம் பார்த்தபடி கேட்டாள்.

வெலவெலத்துப்போனான் சந்தீப்!

# காமதேனுவின் முத்தம்!

**கா**ர் ஹம்ஸவர்த்தினியின் க்ளினிக்குள் நுழைய, இருவரையும் ஹம்ஸவர்த்தினியின் அசிஸ்டெண்ட் அவந்திகா அரவிந்த் வரவேற்றாள்.

"மிஸஸ் சந்தீப்! நான் டாக்டர் ஹம்ஸவர்த்தினி கிட்டே உங்க ப்ராப்ளம் என்னன்னு டிஸ்கஸ் பண்ணிட்டேன்! மிஸ்டர் சந்தீப் நீங்க கொஞ்ச நேரம் வெளியில இருங்க!" அவந்திகா சொன்னாள்.

சந்தீப் வெளியேறியதும், அவந்திகா சுபாங்கியின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"சாரி மிஸஸ் சுபாங்கி சந்தீப்! உங்களால் கன்சீவ் அக முடியாத காரணம் உங்க கருமுட்டைகள் பலமாவே இல்லை. எங்க மெடிக்கல் டெர்ம்ல ப்ரீமெச்சூர் ஓவரியன் ஃபெய்லியர்னு சொல்லுவாங்க! நீங்க அம்மா ஆகணும்னா இனி உங்க கருமுட்டைகளை நம்பி பிரயோஜனமில்லை. கருமுட்டைகளை தானம் வாங்கி, உங்க கணவர் ஸ்பெர்மை கொண்டு லாப்ல விட்ரோ ஃபெர்டிலைசேஷன் செய்யலாம்!"

சுபாங்கி இடிந்து போய் அமர்ந்திருந்தாள்.

"டாக்டர்! ஏற்கெனவே என் ஹஸ்பெண்ட் என் கண்ட்ரோலுல இல்லை! இப்ப இதை வேற சொன்னேனா, ஹி வில் டிட்ச் மீ..!"

"எனக்கு புரியுது, சுபாங்கி! அஸ் எ டாக்டர் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். அஸ் எ ஃபேமிலி ஃப்ரெண்டு ஒய் டோண்ட் யூ கன்சல்ட் டாக்டர் ஹம்ஸவர்த்தினி! அவங்க உங்களோட பிரச்னையை சரியான முறையில டீல் பண்ணுவாங்க!" அவந்திகா சுபாங்கிக்கு தைரியமளித்தாள்.

"என் ஹஸ்பெண்ட் கிட்டே இப்ப எதுவும் சொல்ல வேண்டாம்! அவரு இன்னும் ரெண்டு நாளுல் ஸிட்னி கிளம்பி போயிடுவார். தென், ஐ வில் டாக் டு டாக்டர் ஹம்ஸவர்த்தினி" என்றபடி எழுந்துகொண்டாள், சுபாங்கி!

சந்தீப் ஆவலுடன் எழுந்தான்.

"டாக்டர் சொன்னாங்க, சுபாங்கி!"

"பெரிசா ப்ராப்ளம் ஒண்ணுமில்லையாம்! முட்டைகள் வீக்கா இருக்காம்! ஒரு இன்ஜெக்ஷன் போட்டுகிட்டா சரியாகிவிடும். சொன்னாங்க!" சுபாங்கி சமாளித்தபடிச் சொன்னாள்.

டி.டி.கே.ரோடில் இருந்து புறப்படும்போது, சந்தீப், சுபாங்கி பக்கமாகத் திரும்பினான்.

"சுபா! மந்தவெளியில ஒரு ஜோஸ்யர் இருக்கார்! ஐ ஜஸ்ட் வாண்ட் டு கன்சல்ட்! அவர் ஃப்யூச்சர், பிக் கேரிர், பிக் மணி, ஹேப்பி சில்ட்ரன், இவைதான் நமக்குத் தேவை! நீயும் என் கூட வாயேன்!" சந்தீப் அழைக்க, சுபாங்கியும் தலையசைத்தாள்.

**தே**வநாதன் தெருவில் இருந்த ஒரு சிறிய சந்தில் வண்டியைத் திருப்பினான், சந்தீப்,

"இதுவா ஜோஸ்யர் வீடு? கூட்டமும் இல்லை! ஒரு போர்டு கூட இல்லையே?"

"அவன் புரொஃபஷனல் ஜோஸ்யர் இல்லை சுபா! அவன் ஒரு ஜர்னலிஸ்ட்! ஆனா ஜோஸ்யம் நல்லா பார்ப்பான்! நாம டைம் அண்டு டேட் ஆஃப் பர்த் சொன்னா போதும்!"

சுபாங்கியும், சந்தீப்பும் மாடியேறி போக, அழுக்கு ஜிப்பா, ஜீன்ஸ் அணிந்த ஒரு நெட்டையான கண்ணாடி ஆசாமி இருவரையும் வரவேற்றான்.

"சுபா! திஸ் இஸ் சாய் ராம்! என் மனைவி சுபா!"

"என்னோட டேட் ஆஃப் பர்த் 1990 ஜனவரி 4, காலை 6.00 மணி பிறந்த டைம்! இவ பிறந்த தேதி ஜூலை 7, 1992! எங்க ரெண்டு பேருக்கும் டைம் எப்படி இருக்கு?" சந்தீப் வினவினான்.

சற்று நேரம் அவர்களுடைய ஜாதகங்களைப் படித்தான் சாய்ராம்.

"இதோ சேன்ஜ் வந்தாச்சு! மேடம் ஜாதகப்படி அவங்க பெரிய தொழிலதிபரா இருப்பாங்க! ஆனா குழந்தை பிறந்தவுடனேதான் பவர் வரும்!"

"குழந்தை எப்பப் பிறக்கும்?" சுபாங்கி ஆவலுடன் கேட்டாள்.

"இன்னும் ஒரு வருஷத்துல நீங்க கன்சீவ் ஆயிடுவீங்க! இப்ப சந்தீப் ஸிட்னி போறான் இல்லையா! அப்புறம் நோ டர்னிங் பேக்! ஹி வில் பீ எ கிரேட் காப்டன் வெரி ஸூன்..!"

"நிஜமாகவா?" சுபாங்கி அயர்ந்தாள்.

"பார்த்துகிட்டே இருங்க! சந்தீப்புக்கு லாங் கேரிர் இன் கிரிக்கெட்!"

சந்தீப் மகிழ்ச்சியுடன் சாய்ராமுக்கு ஐநூறு ரூபாயை நீட்டினான்.

"ஆல் தி பெஸ்ட்! ஒரு சின்ன விஷயம்! சந்தீப் சாருக்கு ஒரு சின்னப் பிரச்னை இருக்கு! அவருக்கு கிரிக்கெட் ஆடும்போது காயம் ஏற்படலாம்! அதனால் தடைகள் வரலாம்! அதனால் அவர் நாளைக்கே சுசீந்தரம் அனுமார் கோவிலுக்கு போயிட்டு வர்றது நல்லது!" என்று சாய்ராம் சொன்னான்.

"நாளைக்கேவா?"

"ஆமாம்! ஏன்னா அவரு ஸிட்னி கிளம்பறதுக்கு முன்னாடி அங்கே போயிட்டு வர்றது நல்லது." சாய்ராம் சொன்னான்.

"சுபாங்கி! டோண்ட் ஒர்ரி! இனிமே நமக்கு நல்ல காலம்தான்! நாளைக்கே நான் சுசீந்திரம் போயிட்டு வந்துடறேன்!" சந்தீப் சொன்னான்.

இருவரும் வெளியே நடந்தனர்.

"நாளைக்கு உங்க ஃப்ரெண்டு நடிகர் அனுப்பின் பிறந்த நாளுக்கு கூப்பிட்ருக்கானே! நீங்க போக வேண்டாமா?"

"சாரி சுபா! நம்ம எதிர்காலம் முக்கியம்! என் சார்பா நீ போய் ஒரு பொக்கே கொடுத்துடு. ப்ளீஸ்!" என்றபடி காரை ஸ்டார்ட் செய்தான்.

நடிகர் அனுப்பின் பிறந்த நாள் வைபவம் நடக்கும் அந்த ஸ்டார் ஹோட்டலினுள் தன் காரை திருப்பினாள், சுபாங்கி, அத்தை வாங்கி கொடுத்திருந்த வைர நெக்லஸ் அந்த ஸ்டார் ஹோட்டலையே தகதகக்க செய்ய வேண்டும் என்பதற்காகவே அதனை அணிந்து வந்திருந்தாள், சுபாங்கி! சந்தீப்பின் மனைவி என்று சிலரும், தொழிலதிபர் நித்யமூர்த்தியின் மகள் என்று சிலரும் கிசுகிசுக்க, அவளை நன்கு தெரிந்தவர்கள் 'வெல்கம் சுபாங்கி' என்றே அழைத்தனர்.

நடிகர் அனுப் மிகவும் பழக்கமானவன் போல, 'ஹாய் சுபாங்கி' என்றபடி இவளது கன்னத்தோடு கன்னம் உரசினான்.

"சந்தீப் ஷங்கர் எங்கே?"

"ஸிட்னி போகணுமே? அந்த விஷயமா ரொம்ப பிஸி!" சுபாங்கி சொன்னாள்.

விருந்துக்கு வந்திருந்த பெரும்பாலானோர் சந்தீப்பின் ஸிட்னி விஜயத்தைப் பற்றியே கேட்க, பெருமையுடன் பதிலளித்துக் கொண்டிருந்தாள், சுபாங்கி.

டி.வி கேமராக்களும், பிரஸ் ஃபோட்டோகிராஃபர்களும் சுபாங்கியை சூழ்ந்து கொள்ள, தனக்கு கிடைத்த திடீர் முக்கியத்துவத்தை துளித்துளியாக ரசித்துக் கொண்டிருந்தாள், சுபாங்கி!

அப்போதுதான் -

கையில் பொக்கேயுடன் உள்ளே நுழைந்த அந்த நெட்டையான ஜிப்பா மனிதன் மூக்கில் வழிந்திருந்த கண்ணாடியை சுட்டுவிரலால், கண்களுக்கு நேராக தள்ளியபடி, அனுப்பின் முன்பாக நின்றான்.

"குட் ஈவினிங் சார்! நான் நடிகை தான்யா செளத்ரி பி.ஏ.! அவங்களால வர முடியலை! என்னை இந்த பொக்கேயை உங்ககிட்டே கொடுக்கச் சொன்னாங்க!" பி.ஏ. இளித்தான்.

"ஆக, சந்தீப்பும் வரலை! தான்யாவும் வரலை." அனுப் கிண்டலாக சிரித்தான்.

சற்றுத் தள்ளி நின்றிருந்த சுபாங்கியின் அனுப் கூறியது விழ, பார்வையை அவன் பக்கம் திருப்பினாள். நெட்டையான அந்த கண்ணாடி ஆசாமியைக் கண்டதும் அதிர்ச்சியில் உறைந்து போக நின்றாள். பொக்கேயை நீட்டிக் கொண்டிருந்த அந்த பி.ஏ. முந்தைய தினம், சுபாங்கிக்கு ஜோஸ்யம் சொல்லியிருந்த அதே சாய்ராம்தான்.

சுபாங்கியின் ரத்தம் கொதித்தது. ஓசைபடாமல் சாய்ராமின் பின்பாக சென்று நின்றாள்.

பொக்கேயை தந்துவிட்டு திரும்பிய சாய்ராம் சுபாங்கியைப் பார்த்ததும் வெலவெலத்துப் போய் நின்றான். பிறகு சமாளித்துக் கொண்டு நழுவ பார்க்க, சுபாங்கி, அவனை உறுத்துப் பார்த்தாள்.

"நான் யாருன்னு உனக்குத் தெரியும்! இப்ப நீ வெளியில லான்ல வந்து என்கிட்டே உண்மையை சொன்னேன்னா.. உன்னை மன்னிச்சு விட்டுடறேன்! இல்லேனா என்னோட வைர நெக்லஸை காணோம்னு இப்பவே சொல்லி, உன் மேல போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுப்பேன்! உன் வாழ்க்கையை நரகமாக்கிடுவேன்!" சுபாங்கி அச்சுறுத்த பயந்து போன சாய்ராம் அவளை பின் தொடர்ந்து வெளியே வந்தான்.

"உண்மையைச் சொல்லு? எதுக்காக ஜோஸ்யன் மாதிரி நடிச்சே?" சுபாங்கி கோபத்துடன் கேட்டாள்.

"உங்க ஹஸ்பெண்ட்தாம்மா அப்படி நடிக்கச் சொன்னாரு! உங்க அத்தை மகன் யாரோ உங்களுக்கு இருபத்தி அஞ்சு லக்ஷத்துல வைர நெக்லஸ் வாங்கி தந்தாராம். அவரு உங்களைக் கல்யாணம் செஞ்சுக்க ஆசைப்பட்டபோது நீங்க மறுத்துட்டு சந்தீப்பை கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களாம்! நான்

எடுத்த முடிவு தவறா?ன்னு உங்க டைரியில எழுதியிருந்தீங்களாம்! அதை படிச்சுட்டு சந்தீப்புக்கு பயம் வந்துடுச்சு! பணக்காரியான நீங்க அவரை கழட்டி விட்டுடு வீங்களோங்கற பயத்துல என்னை ஜோஸ்யரா நடிக்கச் சொன்னாரு!"

"எதுக்காக?" கோபம் அதிகரித்துக் கொண்டே போனது, சுபாங்கிக்கு.

"அவரு கிரிக்கெட் கேப்டனா ஆவாரு! குழந்தை பிறக்கும்! பெரிய பணம் சேரும்னு! ஜோஸ்யம் சொன்னா, நீங்க மனசு மாறாம அவரோட தொடர்ந்து குடித்தனம் நடத்துவீங்கன்னு எதிர்பார்த்துதான் அப்படி சொல்லச் சொன்னாரு!"

"ச்ச்சீ!" அருவருப்புடன் முகத்தை திருப்பிக் கொண்டாள், சுபாங்கி!

"அது கிடக்கட்டும்! சந்தீப் சுசீந்திரம் போகணும்னு சொன்னியே.. அது!"

"அதுவும் உங்க ஹஸ்பெண்ட் ஏற்பாடுதாம்மா! உங்க ஹஸ்பெண்டும், தான்யாவும் தேக்கடி போறங்கம்மா! சனிக்கிழமை காலைதான் வர்றாங்க!" சாய்ராம் பீதியுடன் சொன்னான்.

"இதோ பாரு! நாம பேசின விஷயம் ரகசியமா இருக்கட்டும்! எதையாவது சந்தீப் டேயோ, தான்யா கிட்டேயோ லீக் பண்ணினே, நீ ஜோஸ்யனா நடிச்சு பணம் பிடுங்க பார்த்தேனு, புகார் தருவேன்!" என்றபடி மீண்டும் பார்ட்டி ஹாலுக்கு செல்லாமல் தன் காரை நோக்கி நடந்தாள்.

'எங்கேயோ இருந்துக்கொண்டு இவளையே நினைத்து உருகும் நிகேத் எங்கே! கூடவே இருந்து குழி பறிக்கும் சந்தீப் எங்கே!' கோபாவேசத்துடன் காரை கிளப்பினாள் சுபாங்கி.

# அத்தியாயம் 29

"**வா**டா காமேஷ்!" இவ்வளவு குதூகலத்துடன் வரவேற்கும் அம்மா, காமேஷுக்கு புதிது! ஆயாசத்துடன் தனது முதுகில் சுமந்து கொண்டிருந்த பையை கிடாசியவன், அம்மாவின் இன்முகத்தைக் கண்டு விழித்தான். அருந்ததி இன்னும் அதிக ஆச்சரியத்தைத் தந்தாள். புன்சிரிப்புடனும் தன்னை விசேஷமாக அலங்கரித்துக் கொண்டும் சமையலறை வாசற்படியில் இருந்தபடியே வெட்கத்துடன் இவனைப் பார்ப்பதும், நிலத்தைப் பார்ப்பதுமாக இருந்தாள்.

"வாடா.. என் அருமை மகனே! பிரயாணமெல்லாம் எப்படி இருந்தது? அர்ஜுன் கல்யாணம் நல்லா நடந்துதா?" என்று அலுமனிய வெற்றிலைப் பெட்டியில் இருந்து இரண்டு தளிர் வெற்றிலைகளை வேஷ்டியில் துடைத்தபடி, சீவலுடன் வாயினுள் தள்ளினார், சிவநேசன்.

காமேஷ், வியப்பின் உச்சத்திற்கே போய் விட்டான்!

'என்ன நடக்கிறது வீட்டில்?'

"இந்தாடா காபி" என்றபடி குலதனம் நீட்டிய காபியை விழி பிதுங்க பார்த்தான், காமேஷ்.

புதிய டபரா டம்ளர் செட் கம்பீரத்துடனும் பளபளப்பாகவும் திகழ, அதன் விளிம்பு வரை கள்ளிச் சொட்டு காபி!

காபியை வாங்கி ருசித்தவன், தாயை விசித்திரமாகப் பார்த்தான்.

"இது நீ போட்ட காபியா? இல்லை விசாலா மாமி வீட்டுல கடன் வாங்கிட்டு வந்தியா?" காமேஷ் கேட்க, குலதனம் சிரித்தாள்.

"இனிமே நாம ஏன் கடன் வாங்கணும்? காமேஷ் தெரியுமா? நமக்கு நல்ல காலம் பொறந்தாச்சு! எல்லாம் அந்த மகராசி தேனுகா நம்ம வீட்டுல காலை வச்ச வேளை!"

"எதிர் வீட்டு உமையாளம்மா தன் மகன் செந்திலுக்கு அருந்ததியை கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டு போயிட்டாங்க?" குலதனம் கூறினாள்.

"அதை விட பெரிய விஷயம், தம்பி! எனக்கு கௌரி ஜுவல்லரி மார்ட் குலுக்கலுல ஒரு கிலோ தங்கம் பரிசா விழுந்திருக்கு! எவ்வளவு நகைகள் வேணும்னா வாங்கலாம்!" அருந்ததி உற்சாகத்துடன் கூறினாள்.

"அதெல்லாம் கிடக்கட்டும்டா! நம்ம வீட்டுக்காரர் ஐயர் அமெரிக்காவுல இருந்து போன் பண்ணினார். இந்த வீட்டை

குறைஞ்ச விலைக்கு எனக்கே வித்துடறேன்னு சொல்லிட்டாரு! டிசம்பர்ல வர்றச்சே ரிஜிஸ்டர் செஞ்சு கொடுத்துடறேன்னு சொல்லியிருக்கார்!" என்று சிவநேசன் கலகலத்தார்.

காமேஷ் அசந்து போய் அமர்ந்திருந்தான். எதனால் இந்த திடீர் திருப்பங்கள்?

வாசலில் சைக்கிள் பெல் கிணுகிணுக்க, காமேஷ் அவசரமாக எட்டிப் பார்த்தான்.

"டேய் பயலே! மெட்ராஸ்லேர்ந்து, தி ஹெரால்டு பேப்பர்காரங்க வந்தாங்க! நம்மளைதான் சிறந்த ஏஜெண்ட்னு சொல்லி, ஒரு ஐ ஃபோனும், கம்ப்யூட்டரும் பரிசா தந்தாங்க! கம்ப்யூட்டரை நான் எடுத்துக்கறேன். ஐ ஃபோனை நீ வச்சுக்க!" என்றபடி அவன் கையில் பார்சல் ஒன்றை திணித்தார்.

"தாங்க்யூ மாமா!" என்ற காமேஷை அன்புடன் பார்த்தார் ஐயர்.

"நீ நல்லா வருவேடா!" என்றபடி சைக்கிளுடன் நகர்ந்தார்.

உள்ளே சென்ற காமேஷ், ஐ ஃபோன் பார்சலை பிரிக்கக் கூட தோன்றாமல், அசந்து போய் அமர்ந்துவிட்டான்.

"என்னதான் நடக்குது நம்ம வீட்டுல?" காமேஷ் குழப்பத்துடன் தாயைப் பார்த்தான்.

"எனக்கே தெரியலை! முந்தா நாள் ராத்திரி மணி பத்தரை இருக்கும்! ஊரே அடங்கிடுச்சு! நாங்களும் படுத்துகிட்டோம்! திடீர்னு சமையலறையில சத்தம்! சாமி அலமாரி கதவு திறந்திருக்கு! குங்குமம் மஞ்சள் எல்லாம் தரையில சிதறி கிடந்துச்சு! நாங்க நின்னுகிட்டே இருக்கும்போது காமதேனு படத்துலேர்ந்து பூமாலை அருந்ததி மேல விழுந்தது!"

"அப்புறம் நம்ப முடியாத விஷயமெல்லாம் நடக்க ஆரம்பிச்சுது. அமெரிக்காவுல இருந்து ஐயர் ஃபோன் செஞ்சு வீடு தர்றேன்னு சொல்றார், கௌரி ஜுவல்லரில தங்கம் தர்றேன்னு சொல்றாங்க, உமையாள் அம்மா அருந்ததிக்கு தன் பிள்ளையை தர்றேன்னு சொல்றாங்க! இப்ப என்னடான்னா பேப்பர் ஐயர் உனக்கு ஃபோன் தர்றாரு! முந்தாநாள் ராத்திரி பத்தரை மணியிலேர்ந்து நமக்கு யோகம்தான் போ!" குலதனம் சொன்னாள்.

முந்தாநாள் ராத்திரி பத்தரை மணியா? காமேஷுக்கு தூக்கி வாரிப் போட்டது. சரியாக கட்டளைச் சீட்டு விளையாட்டு உச்சகட்டத்தை அடைந்த நேரம்! இவன் தேனுகாவின் இதழை முத்தமிட்ட நேரம்!

தேனுகா இவன் வீட்டில் சேலைக் கட்டுவதற்காக காலடி எடுத்து வைத்ததால் யோகம் பெருகவில்லை! இவன் தேனுகாவை முத்தமிட்டதாலேயே இவன் குடும்பத்துக்கு பாக்கியங்கள் பெருகி வருகின்றன. அப்படியானால், தேனுகா காமதேனு அம்சம் என்று ஊர்மக்கள் நம்புவது நியாயம்தான். ஒரு சிறு முத்தத்தினால் இத்தனை பாக்கியங்கள் உண்டாகும் என்றால், தேனுகாவின் கணவனாக வருபவன் உலகத்தையே ஆள மாட்டானா என்ன? அதனால்தான் பெரிய வீட்டில் ரேணுகாவுக்கு திருமணம் செய்ய மறுத்தார்களா?

மகன் யோசனையில் மூழ்கியிருப்பதைக் கண்ட சிவநேசன் அவனை கலகலப்பாக்க நினைத்தார்.

"மனசுல எந்த கவலையும் வச்சுக்காதே, காமேஷ்! இனிமே நல்ல காலம்தான்! இனிமே நீ பேப்பர் ஐயர் பின்னாடி எடுபிடி மாதிரி திரிய வேண்டாம்! ஏதாவது பிஸினஸ் ஆரம்பி! நான் பணம் தரேன்! நல்ல பெண்ணா பார்த்து கல்யாணம் பண்ணிக்கோ! நாம சந்தோஷமா இருக்கலாம்!" சிவநேசன் குதூகலித்தார்.

இவன் கொடுத்த ஒரு முத்தம் குடும்பத்திற்கு சௌபாக்கியங்களை அள்ளித் தருகின்றது! என்னவோ இவர்

சம்பாதித்தது போல, பிஸினஸ் துவங்க இவர் பணம் தருகிறாராமே!

தந்தையை அருவருப்புடன் பார்த்த காமேஷ், பிறகு அவர் மீது அனுதாபம் கொண்டான். முதன் முறையாக வாழ்க்கையில் சௌபாக்கியத்தை அனுபவிக்கிறார். என்ன பேசுவது என்று தெரியாமல் பேசுகிறார்! கிடக்கிறார்!

"பெரிய வீட்டுல ஏதாவது விசேஷம் உண்டாப்பா?" காரணத்தோடுதான் கேட்டான், காமேஷ்! காண்டீபன் மூலமாக முத்த விவகாரம் பெரிய வீட்டிற்கு எட்டி விட்டதா என்பதை அறியவே அப்பாவிடம் நூல் விட்டான்.

சிவநேசனின் முகம் மாறியது.

"ரெண்டு நாளாவே எல்லாமே ஏறுமாறா நடக்குதுடா, பெரிய வீட்டுல! நம்ம வீட்டுல முந்தா நாள் ராத்திரி பத்தரை மணிக்கு காமதேனு ஃபோட்டாவுல இருந்து பூமாலை கழண்டு விழுந்தது இல்லை! அதே நேரத்துல பெரிய வீட்டுல இடைகழில மாட்டியிருந்த காமதேனு படம் விழுந்து உடைஞ்சு போச்சு! பெரிய வீட்டு ஃபேக்டரில் தீ விபத்து ஏற்பட்டு எல்லாம் அழிஞ்சு போச்சு!"

"கலாவதி அண்ணி, மாடியில இருந்து கீழே இறங்கறச்சே தடுக்கி விழுந்து இடுப்பை உடைச்சுக்கிட்டாங்க!

எல்லாத்தையும் விட வருத்தம் பெரிய வீட்டு கோசாலையை சேர்ந்த மூணு பசுமாடு பாம்பு கடிச்சு செத்துப் போச்சுடா.. கோடங்கியை கூப்பிட்டாங்க! சமயம் பார்த்து அவரு கும்பகோணம் போயிட்டாரு! இன்னைக்குத்தான் அவரே ஊருக்கு வர்றாரு! அவர் வந்துதான் என்ன பிரச்னைன்னு சொல்லணும்!" சிவநேசன் கலங்கினார்.

காமேஷ் அதிர்ந்து போனான்! ஆண் வாடை தேனுகாவை அண்டாமல் இருக்கும் வரை அவளுடைய யோகங்கள் இருக்கும் என்று கோடங்கி சொல்லி வருவதாக ஊர்மக்கள் பேசி இவன் கேட்டிருக்கிறான்.

ஒருவேளை இவன் கொடுத்த முத்தத்தால், தேனுகாவிடமிருந்து சௌபாக்கியங்கள் இவனிடம் சேர்ந்து அவள் எல்லாவற்றையும் இழந்து விட்டாளா? சௌபாக்கியங்களை இழந்த அவளது அத்தை ரேணுகாவுக்கு ஏற்பட்ட கதி, தேனுகாவுக்கும் ஏற்பட்டு விடுமா?

காமேஷின் இதயத்தில் சற்றே பயம் தோன்றியது. அவசரப்பட்டு விட்டேன். தேனுகாவுக்கு முத்தம் கொடுப்பதற்குச் சம்மதித்திருக்க கூடாது! அவளுக்கு வீட்டில் என்ன பிரச்சனைகள் ஏற்படுகின்றதோ?

"அப்பா! இன்னைக்கு ஒரு நாள் நீ பெரிய வீட்டுக்கு போகாம வீட்டுலயே இருங்க! நாமெல்லாம் ஜாலியா எங்கேயாவது போயிட்டு வரலாம்!" காமேஷ் சொன்னான்.

"நிறைய வேலை இருக்குடா!" மகனின் திடீர் பாசத்தை ரசித்தபடி சொன்னார் சிவநேசன்.

"நீ சும்மா இருப்பா! வேலை தினமும்தான் இருக்கு! நான் போய் உனக்கு உடம்பு சரியில்லைன்னு லீவு சொல்லிட்டு வரேன்.." பெரிய வீட்டுக்கு செல்வதற்கு அவனுக்கு ஒரு காரணம் வேண்டுமே! குளித்து முடித்து வேஷ்டி சட்டை அணிந்து கொண்டு பெரிய வீட்டை நோக்கி நடந்தான், காமேஷ்.

**சி**வநேசனின் மகன் அவன் என்பது பலருக்கு தெரியும் என்பதால் யாரும் அவனைத் தடுக்கவில்லை! தோட்டத்தில் இருந்த காண்டீபன் கூட இவனை ஸ்னேஹத்துடன் பார்த்து சிரித்தான்.

"பெரிய ஐயா.. இருக்காரா?" திண்ணையில் இருந்த அங்காயி கிழவியை கேட்டான், காமேஷ்.

தனது இடுக்கிய கண்களால் அவனைப் பார்த்தாள் அங்காயி.

"கணக்குபிள்ளை ஐயா மவன்தானே!" என்று கேள்வி கேட்டாள்.

"ஆமா, பாட்டி!"

"உள்ளாற போ..! முற்றம் வரும்! துளசி மாடம் தாண்டி போனா ஒரு இரும்பு கதவு இருக்கும். அதை தள்ளு! கீழ் வீட்டுல ஐயா இருப்பாரு!" என்று அங்காயி சொன்னாள்.

திண்ணை இடைகழியை கடந்து முற்றத்தினுள் நுழைந்தவன் சிலையாக நின்று விட்டான்.

பட்டுப்பாவாடை தாவணி கட்டியிருந்த தேனுகா துளசி மாடத்தில் தீபமேற்றி பூஜை செய்து கொண்டிருந்தாள். குமாரகோம்மின் இரவு காட்சி காமேஷின் நினைவில் மீண்டும் வர, அவன் இதயம் துள்ளியது. ஒருமுறை தன்னைச் சுற்றிப் பார்த்தான், காமேஷ்.

தன் பின்னால் நின்று யாரோ தன்னை உறுத்துப் பார்ப்பதை உணர்ந்து திரும்பினாள், தேனுகா. அப்படியே மெய்மறந்து நின்று விட்டாள்.

வேஷ்டி சட்டையில் இன்னும் கம்பீரமாக திகழ்ந்தான் காமேஷ். திடீரென்று இங்கே எதுக்கு வந்தான்?

ஒருவேளை காமதேனுவின் முத்தம் பற்றி தகவல் அறிந்து அவனை விசாரிப்பதற்காக அப்பாவும், பெரியப்பாக்களும், வரச்சொல்லி இருக்கிறார்களா என்ன? பதைபதைப்புடன் அவனைப் பார்த்தாள் தேனுகா?

"இங்கே எதுக்கு வந்தீங்க?" கலவரம் மிகுந்த குரலில் கேட்டாள்.

"அப்பாவுக்கு உடம்பு சரியில்லை! அதான் லீவு சொல்லிட்டு போகலாம்னு வந்தேன்."

காமேஷ் சொல்ல, "அப்பாடா!" என்றிருந்தது தேனுகாவுக்கு.

"நான் பெரியப்பாக்கிட்டே சொல்லிக்கிறேன். நீங்க உடனே கிளம்புங்க! யாராவது வந்துடப் போறாங்க!" தேனுகா சொன்னாள்.

"கவலைப்படாதே! குமாரகோம்ல நடந்தது, உன் கூட வந்த காண்டீபனுக்கே தெரியாது! அவன் போதையில கிடந்தான்! அவனுக்கே தெரியாத விஷயம் இங்கே வேற யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை! இப்போதைக்கு நான் லீவு

சொல்ல வந்த கணக்குப் பிள்ளை மகன்! நீ துளசி பூஜை பண்ணிக்கிட்டிருக்கே. நாம் இந்த சூழ்நிலையில பேசறதுதான் பாதுகாப்பு! உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்..!" காமேஷ் எச்சரிக்கையுடன் அவள் கண்களைப் பார்த்தான்.

"என்ன விஷயம்?" தேனுகா அவனைக் கவலையுடன் பார்த்தாள்.

"உடனடியா நான் உனக்கு இன்னொரு முத்தம் கொடுக்கணும்! குமாரகோம்ல கொடுத்த அதே முத்தம்!" காமேஷ் அவளை நோக்கி இரண்டடி வைத்தான்.

"நான்சென்ஸ்! நான் துளசி பூஜை பண்ணிகிட்டி இருக்கச்சே.. என்ன பேச்சு பேசறே காமேஷ்! ஸோ, நீ இன்னும் அந்த முத்தத்தை பத்தியே நினைச்சுட்டு இருக்கே இல்லே?" அருவருப்புடனும், எரிச்சலுடனும் அவனைப் பார்த்தாள்.

"லூஸு மாதிரி பேசாதே! நாம் எவ்வளவு பெரிய விபரீதத்தை சந்திச்சுட்டு இருக்கோம்னு உனக்குத் தெரியாது. நாம் கொடுத்துகிட்ட முத்தத்துல..!"

"நான் கொடுக்கலை! நீ தான் கொடுத்தே!" தன்னை மறந்து கத்தினாள், தேனுகா.

அவளை அமைதிப்படுத்துவதற்கு இரண்டு கைகளையும் தரையை நோக்கி வீசியபடி கிசுகிசுத்த குரலில் பேசினான், காமேஷ்.

"சரி! நான்தான் கொடுத்தேன்!.. ஒப்புக்கறேன்! இப்ப பிரச்னை. அதுவல்ல! உனக்கு நான் முத்தம் கொடுத்ததால எல்லா யோகங்களும் எனக்கு வந்துடுச்சு! என் வீட்டுக்காரரர் வீட்டை தர்றேன்னு சொல்றார். என் அக்காவுக்கு ஒரு கிலோ தங்கம் பரிசு விழுந்திருக்கு! அவளுக்கு கல்யாணம் நிச்சயமாயிடுச்சு!"

"ஆனா.. என் அப்பா சொல்றாரு! உன் பெரியம்மா கீழே விழுந்து இடுப்பை உடைச்சுகிட்டாங்க! உங்க ஃபேக்டரியில் தீ விபத்து ஏற்பட்டுடுச்சு! உங்க கோசாலை பசுங்க இறந்துப் போச்சு!"

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?" தேனுகா குழப்பத்துடன் கேட்டாள்.

"நிறைய இருக்கு. உன்னால் உன் குடும்பத்திற்கு கிடைச்சுகிட்டு இருந்த யோகங்கள், இப்ப நான் கொடுத்த முத்தத்தால் எனக்குத் திரும்பிடுச்சு! அதனால நான் உனக்கு திரும்பி அந்த முத்தத்தை கொடுத்தேன்னா, உன் யோகங்கள்

உன்கிட்டேயே திரும்பி வந்துடும். என்ன சொல்றே?" காமேஷ் தேனுகாவை நெருங்கி வந்தான்.

"ஐயையோ! இங்கேயா முத்தம் கொடுக்க போறே! வேணாம்! யாராவது வந்துடுவாங்க!" தேனுகா அலறினாள்.

"சட்டுன்னு கொடுத்து முடிச்சுடறேன், தேனுகா. உன் வீட்டுல நீ யோகங்களை இழந்துட்டேன்னு தெரிய வர்றதுக்குள்ள, அதை நீ திருப்பி வாங்கறது நல்லது?"

காமேஷ் இன்னும் நெருங்கி வர, அவனை வரவேற்பது போன்று தேனுகா அசையாமல் நின்றாள்.

காமேஷ் அவளது முகத்தை நோக்கி குனிய, அவனுடைய மூச்சு காற்று தேனுகாவின் முகத்தை தாக்கியது. துடிக்கும் உதடுகள் அவனை வரவேற்க தயாராக -

சட்டென்று அந்தக் குரல் அவர்களை தடுத்து நிறுத்தியது.

"தம்பி நிறுத்துங்க!"

வராந்தாவின் இருட்டு பகுதியிலிருந்து தமயந்தி வெளிவர, காமேஷும், தேனுவும் திடுக்கிட்டார்கள்.

"தம்பி! முத்தம் கொடுக்கறீங்க! சரி! அந்த யோகங்கள் அவளுக்கு திரும்பி வர்றலேனா!" தமயந்தி கேட்டாள்.

"என்னை மன்னிச்சுடுங்கம்மா! ஏதோ விளையாட்டுல அந்த மாதிரி நடந்து போச்சு! என் மனசுல எந்த கெட்ட எண்ணங்களும் இல்லையம்மா! உங்க பொண்ணோட யோகங்கள் அவளுக்கு திரும்பி கிடைக்கட்டும்ங்கிற நல்ல எண்ணத்துலதாம்மா இப்ப அப்படி நடந்துக்கிட்டேன்!" காமேஷ் கலங்கினான்.

"கவலைப்படாதே தம்பி! உன்கிட்டே கெட்ட எண்ணம் இருக்குன்னு நான் சொல்லலியே! சாரட் விபத்துல இருந்து தேனுவை காப்பாத்தினே! அவ மனசையும் கவர்ந்துட்டே! விஷயம் பூதாகரமா போயிடப் போகுதோன்னு பயந்து கன்னிகா எல்லா விஷயத்தையும் ஃஎனக்கு போன் போட்டு சொல்லிட்டா! ரெண்டு நாளா எங்க வீட்டுல எல்லாமே எதிர் மறையா நடக்கறதை பார்த்துகிட்டுதான் வரேன்! அதுக்கு காரணம் உங்களோட முத்தம்தான்னு யூகிச்சிட்டேன்! அதனால.." என்று சற்றே இடைவெளி விட்டாள், தமயந்தி.

காமேஷ் அவளை வியப்புடன் பார்த்தான்.

"காமேஷ்! உனக்கு அவளோட யோகங்கள் உன்கிட்டே வந்திருக்கிறதா நம்பறியா?"

"ஆமாம்மா! ரெண்டு நாளா.. என் வீட்டுல எல்லாம் நல்லபடியாவே நடக்குது!" காமேஷ் சொன்னான்.

"அப்ப நீ தேனுகாவுக்கு திருப்பி முத்தம் தர வேணாம்!" தமயந்தி சொல்ல, காமேஷ் அதிர்ந்தான்.

"ஆமாம்! அவளோட யோகங்கள் உன்கிட்டேயே இருக்கட்டும்! நீ அந்த யோகங்களை வச்சு வளர்ந்து பெரிய ஆள் ஆகி, தேனுகாவை கல்யாணம் பண்ணிக்கிட்டு அவளை அழைச்சுட்டு போ! இப்ப நீ தேனுகாவுக்கு திரும்பி யோகங்களை கொடுத்தா, என் நாத்தி ரேணுகா மாதிரியே அவளும் வாழாம போயிடுவா!" தமயந்தியின் கண்களில் நீர் ததும்பியது.

சற்றே யோசித்தபடி தேனுகாவைப் பார்த்தான் காமேஷ், 'நீ என்ன சொல்கிறாய் என்பது போல்!'

"அம்மா சொல்றதுதான் சரி! பெரிய ஆளாகி என்னை அழைச்சுட்டு போ!" தேனுகா சொல்ல, சட்டென்று தமயந்தியின் காலில் விழுந்து எழுந்தான் காமேஷ்.

"அம்மா! நீங்க சொல்றபடியே நடந்துக்கறேன்.." என்று திரும்பிய அதே வினாடி, இரும்புக் கதவு திறக்க, பெரிய பாண்டியும், அங்கயற்கண்ணியும் முற்றத்திற்கு வந்தார்கள்.

"யாரும்மா தமயந்தி அது!" பெரிய பாண்டி கேட்டார்.

"நம்ம கணக்குப்பிள்ளை மகன்" தமயந்தி சொன்னாள்.

"என்னவாம்?"

இப்போது காமேஷ் பணிவுடன் பெரிய பாண்டிக்கு பதில் சொன்னான்.

"ஐயா! காலையிலேர்ந்து அப்பாவுக்கு நல்ல காய்ச்சல்! தலையை தூக்க முடியலை! உங்ககிட்டே லீவு சொல்லிட சொன்னாரு!" காமேஷ் கூற பெரிய பாண்டி தலையசைத்தார்.

அங்கயற்கண்ணி பெருமூச்செறிந்தாள். "ரெண்டு நாளா எல்லாமே தலைகீழா போய்கிட்டு இருக்கு! கணக்குப் பிள்ளையையும் அது விட்டு வைக்கலை போலிருக்கு! என்னைக்குமே லீவு போடாதவரு, காய்ச்சல் வந்து படுத்துகிட்டாரு, நம் குடும்பத்துக்கு என்ன ஆச்சோ தெரியலையே!"

அவளது பார்வை மட்டும் தேனுகாவின் இதயத்தை துளைப்பது போல பார்த்தது.

"நீ கிளம்புப்பா!" தமயந்தி சொல்ல காமேஷ் அங்கிருந்து நழுவினான்.

"தமயந்தி! அழகர் கோடங்கி இப்ப வருவாரு! வந்தா உட்கார வை! நான் மாடிக்கு போய் இடுப்பு ஒடிஞ்சு படுத்திருக்கிற கலாவதிக்கு ரெண்டு வார்த்தை ஆறுதலா

பேசிட்டு வரேன்!" பெரிய பாண்டி மனைவியுடன் மாடியேறினார்.

"ஜாக்கிரதை.. தேனு! கோடங்கி வந்து ஏதாவது கேட்டா, ஒண்ணுமே நடக்கலைன்னு அடிச்சு சொல்லு!" தமயந்தி மகளிடம் சொன்னாள்.

இடைகழி முற்றத்தை கடந்து திண்ணை வழியாக காமேஷ் தோட்டத்தினுள் நுழைய சரியாக, அழகர் கோடங்கி எதிரே வந்தார்.

அழகர் கோடங்கியை கடந்து காமேஷ் மூன்றடி நடந்திருப்பான். திடீரென அழகர் கோடங்கி நின்று திரும்பி பார்த்தார்.

"அடேய் தம்பி! கொஞ்சம் நில்லு!" கோடங்கி சொல்ல, காமேஷ் ஆணி அடித்தது போல நின்றான். அவனை நோக்கி நடந்து சென்ற கோடங்கி அவனைச் சுற்றி வந்து ஏற இறங்கப் பார்த்தார்.

"நீ யாரு?" கோடங்கி கேட்டார்.

"கணக்குபிள்ளை மகன்!" காமேஷ் அசரவில்லை.

"கொஞ்சம் உள்ளார வா! சில விஷயம் பேசணும்!" கோடங்கி அழைத்தார்.

"நீங்க சாமி விஷயம்தானே பேசுவீங்க! எனக்கு அதுல எல்லாம் நம்பிக்கையில்லை!" என்றபடி காமேஷ் நடையைக் கட்டினான்.

# அத்தியாயம் 30

ஹம்ஸவர்த்தினி தன் வீட்டு வாசல் கதவைத் திறந்த போது, நாலைந்து பேர் நின்றிருந்தகை கண்டு வியப்படைந்தாள்.

"எஸ்!"

"வணக்கம் மேடம்! நான் சந்திரசேகர்! மெட்ரோ ஹாஸ்பிட்டல் சேர்மேன். இவங்க டாக்டர் வின்செட், இவங்க டாக்டர் காத்யாயணி, இவரு டாக்டர் சுந்தரேசன்."

"வாங்க!" வந்தவங்களை உள்ளே அழைத்துச் சென்று அமர வைத்தாள்.

"நீங்களும், மனோதத்துவ நிபுணரான உங்க கணவர் ப்ரொஃபசர் வனமாலியும் கோஹூர்ல செட்டில் ஆனதை கேள்விப்பட்டு எங்களுக்கெல்லாம் சந்தோஷம் தாங்கலை. உங்களை எப்படியாவது சந்திச்சு, எங்க ஹாஸ்பிட்டலுக்கு உங்க சர்வீஸை வாங்கிக்கணும்தான் வந்திருக்கோம்!" சந்திரசேகரன் சொன்னார்.

"ஓ மை காட்! நாங்க ரெண்டு பேரும் கம்ப்ளீட் ரெஸ்டுக்காகத்தான் இங்கே வந்திருக்கோம்! இவருக்கு அமைதி தேவை.." ஹம்ஸவர்த்தினி சொன்னாள்.

"மேடம்! ஜஸ்ட் டூ அவர்ஸ் டெய்லி போதும்! இந்தப் பகுதில பெண்களுக்கு நல்ல கைய்னே கிடையாது. ஏதோ எனக்கு தெரிஞ்சதை வச்சு ஒப்பேத்திக்கிட்டு இருக்கேன்!" டாக்டர் காத்யாயணி கெஞ்சினாள்.

"சார்! இங்க மென்டல் ஹெல்த்துக்கும் நல்ல கேர் வேண்டியிருக்கு! தம்பதியா நீங்க ரெண்டு பேரும் எங்க ஹாஸ்பிட்டலுல காலை வச்சாலே போதும்! மிச்சத்தை நாங்க பாத்துக்கிறோம்!" டாக்டர் சுந்தரேசன் சொன்னார்.

"முதல்ல நீங்க டீ சாப்பிடுங்க!" ஹம்ஸா வந்தவங்களுக்கு தேநீர் கோப்பைகளை விநியோகித்தாள்.

"உண்மையை சொல்றேங்க! நான் மென்ட்டல் ஹெல்த் பற்றி ஒரு புஸ்தகம் எழுதறதுக்காகதான் கோவூர் வந்திருக்கேன். அதனாலதான் இந்த வீட்டை வாடகைக்கு எடுத்திருக்கோம்! புஸ்தக வேலை முடிஞ்சதுமே நாங்க கிளம்பிடுவோம்! அதனால் உங்களுக்கு ரொம்ப நாள் எங்க சர்வீஸ் கிடைக்காது!" வனமாலி சொன்னார்.

"நோ இஷ்யூஸ்! நீங்க கோவூர்ல இருக்கிற வரைக்கும், எங்க ஹாஸ்பிட்டலுக்கு வந்துகிட்டு போயிருந்தா போதும். இங்கிருந்து ஜஸ்ட் அஞ்சு கிலோ மீட்டர்தான் இருக்கு! நாங்க கார்ல அழைச்சுட்டு போய், திரும்பி டிராப் பண்ணிடறோம்!" டாக்டர் சந்திரசேகர் வற்புறுத்தினார்.

தம்பதிகள் சற்று நேரம் ஒருவரையொருவர் பார்த்தனர். பிறகு வனமாலி மெல்லிய குரலில் கூறினார்.

"ஓகே! ஜஸ்ட் டூ அவர்ஸ் டெய்லி! சனி, ஞாயிறு வர மாட்டோம்! புஸ்தக ஆராய்ச்சி வேலை இருக்கு.." வனமாலி சொன்னார்.

"தேங்க்யூ டாக்டர்!" என்றபடி வந்தவர்கள் விடை பெற்றுச் சென்றனர்.

அவர்கள் புறப்பட்டு சென்றதும், ஹம்ஸா சென்று வாசற்கதவைத் தாளிட்டாள்.

"நரேன்.. அவங்க போயாச்சு! நீ வெளியே வரலாம்!" என்று வனமாலி குரல் கொடுத்ததும், நரேந்திரநாத் வெளியே வந்தார்.

"என்னக்கா இது! முப்பது வருஷத்துக்கு முன்னாடி நடந்த விஷயமெல்லாம் ஊர் ஜனங்களுக்கு நினைவிருக்குமா, என்ன?

என்னை ஏன் பயமுறுத்தறே! சென்னையிலேர்ந்து நடு ராத்திரி என்னை வரவழைச்சுட்டு, உடனேயே என்னை சென்னைக்கு அனுப்பிட்டே! என்னை ரூம்ல ஒளிச்சு வெக்கறே. வாட்ஸ் ஹேப்பனிங்!" நரேன் எரிச்சலுடன் சோஃபாவில் சரிந்தார்.

"நரேன்! அன்னைக்கு பாண்டி பிரதர்ஸ் நம்ம வீட்டுக்கு வந்து ஹலோ சொன்னாங்க! அப்ப கடைசி தம்பி உன் ஃபோட்டோவை பார்த்துட்டு 'யார் இவரு?'ன்னு அவன் உன் ஃபோட்டோவை பார்த்த விதமே, உன்னை அடையாளம் கண்டுகிட்டான்னு எனக்கு தோணிச்சு.." ஹம்ஸா சொன்னாள்.

வனமாலி தலையசைத்தபடி நரேனை நோக்கினார்.

"நீ சொன்னபடி மென்ட்டல் ரிசர்ச்சுக்கு ஏத்த இடம்தான் கோவூர். அந்த சகோதரங்ககிட்டே சம்திங் ராங்! முகத்துலேயே ஒரு கொடூரம் இருக்கு, என்னோட புஸ்தகத்துக்கு நல்ல தீனி கிடைக்குது இங்கே!"

"உங்களை கோவூர் வர சொன்னதே அதுக்குத்தான். அக்கா! பதினெட்டு வருஷத்துக்கு ஒரு முறை, இந்த ஊர்ல சுபகாயை யாகம்னு ஒண்ணு நடக்குதாம்! பெரிய குடும்பத்து பெண்களுல யாராவது கர்ப்பமா இருந்தா அவங்க கண்ணுல மட்டும் காமதேனு தெரியுதாம்! அப்புறம் அவங்க குடும்பத்துக்கு மட்டும் செல்வம் கொழிக்குதாம்! பரம்பரை

பரம்பரையா அந்த குடும்பத்து பெண்களை ஊரே தெய்வமா, கொண்டாடுது! அந்த பொண்ணுங்களை கல்யாணம் செஞ்சுக்க விடறதில்லை! அதை மீறி கல்யாணம் செஞ்சுக்க, ரேணுகா மாதிரி பொண்ணுங்க முயற்சி செஞ்சாலும் அவங்க மர்மமான முறையில செத்துப் போறாங்க. இந்த காமதேனு விவகாரத்தை ஆராய்ச்சி செய்யணும்! நிஜமாவே காமதேனு அந்த கர்ப்பிணி பொண்ணுங்க கண்ணுல தெரியுதா இல்லை, எல்லாமே பெரிய குடும்பத்து செட்டப்பா?" நரேன் கேட்டார்.

"இப்ப அந்தக் குடும்பத்தை சேர்ந்த தேனுகா பொண்ணுக்கு அந்த தெய்வீக சக்தி இருக்கிறதா ஊருல பேசிக்கிறாங்க! வருஷக்கணக்கா மழை பெய்யாம இருந்த கோவூர்ல, தேனுகா பிறந்தப்புறம் ரெகுலரா மழை பெய்யுதாம்!" ஹம்ஸா சொன்னாள்.

"கிராமத்தையே தங்களோட கட்டுப்பாட்டுல வச்சுக்கறதுக்காக, பெரிய குடும்பம் உருவாக்கிய கதையா இருக்கலாம். இந்த காமதேனு விஷயம்! பார்க்கலாம்..

அந்தக் குடும்பத்தைச் சேராத கர்ப்பிணி பெண்கள் கண்ணுல அந்த காமதேனு தெரிஞ்சாதான் அந்த ஃபேமிலி சொல்றதை நம்ப முடியும்!" வனமாலி சொன்னார்.

"ரேணுகாவுக்கு என்ன ஆச்சுன்னு தெரிஞ்சாதான் நான் இந்த உலகத்தை விட்டு நிம்மதியா கிளம்புவேன்!" நரேன் சொல்ல, ஹம்ஸா அவனது தோளில் செல்லமாக தட்டினாள்.

"ரேணுகா கதையை நீ முன்னாடியே என்கிட்டே சொல்லியிருந்தா? நான் உனக்கு ஹெல்ப் பண்ணியிருப்பேன் இல்லை!" ஹம்ஸா கூறினாள்.

"கிழிச்சே! படிப்பை கவனி! காதலாவது கத்திரிக்காயாவதுன்னு பொங்கி எழுந்திருப்பே! சின்ன வயசுலதான் உனக்கு ஆம்பிளைங்கள் கண்டாலே பிடிக்காதே!" நரேன் சிரித்தார்.

"ஆம்பிளைங்கள பிடிக்காதா? அப்ப என்னை எப்படி பிடிச்சது?" வனமாலி போலி வியப்பைக் காட்டினார்.

"போதுமே! போய் புஸ்தகத்தை எழுதுங்க!" என்றபடி ஹம்ஸா எழுந்து செல்ல அவளைத் தொடர்ந்து சென்றான் நரேன்.

# அத்தியாயம் 31

அழகர் கோடங்கியைச் சுற்றி அமர்ந்திருந்த பாண்டி சகோதரர்கள். பெரிய வீட்டுப் பெண்கள் ஆங்காங்கே நின்றருக்க, தேனுகா அச்சத்துடன் தமயந்தியின் பின்பாக நின்றிருந்தாள்.

"ரெண்டு நாளைக்கு முன்னாலே ராத்திரி பத்து மணிக்கு இடைகழியில் மாட்டியிருந்த காமதேனு படம் கீழே விழுந்து உடைஞ்சுது. அதுக்கப்புறம் எல்லாமே கெட்ட சேதியா வர்றது, அழகரே!"

"ஃபேக்டரில தீ விபத்து, கோசாலையில பசுமாடுங்க பாம்பு தீண்டி செத்து போச்சுங்க! நம்ம இசக்கியோட பொஞ்சாதி இடுப்பு ஒடிஞ்சி படுத்த படுக்கையா கிடக்கிறா! என்னதான் நடக்குது புரியலை! இப்படி எல்லாம் ஏன் சேர்ந்து வருது? ஒருவேளை தேனுகா பொண்ணை குருவாயூருக்கு அனுப்பினது தெய்வ குத்தமா போச்சா?" பெரிய பாண்டி மன வருத்தத்துடன் பேசினார்.

சற்று நேரம் அமைதிக் காத்த கோடங்கி, திடீரென்று தேனுகா பக்கமாக திரும்பி தனது சிவந்த கண்களை உருட்டினார்.

"இப்படி என் முன்னாடி வந்து உட்காரும்மா!" தேனுகா தயக்கத்துடன் அவர் முன்பாக வந்து அமர்ந்தாள்.

"ஊருல ஏதாவது தப்பு நடந்துதா.. கண்ணு?" கோடங்கி அவளது கண்களுக்குள் ஆழமாக பார்த்தார்.

"இல்லையே! எனக்கு காவலா எப்பவும் காண்டீபன் பக்கத்திலேயே இருந்தாரே!" தேனுகா சொல்ல, தமயந்தியின் இதழோரம் ஒரு நக்கலான புன்னகை.

"பின்னே.. ஏன் இப்படி அசம்பாவிதங்கள் நடக்கணும்?" தன்னைத்தானே கேட்டுக் கொண்டார்.

தலையைக் குனிந்து எதையோ யோசித்தவர், மீண்டும் கண்களை உயர்த்தி தேனுகாவின் கண்களை நோக்கினார்.

"தப்பா நினைக்காத ஆயி! ஆம்பிளை எவனாவது உன்னை தொட்டு பேசினானா?"

"ம்ஹூம்! எந்த ஆம்பிளையும் கிட்டே பேசறதே இல்லை! அப்படியிருக்க எவன் தொட்டு பேசுவான்!"

மனதிற்குள் நிலவிய பயத்தை நிஷ்டூர வார்த்தைகளால் போக்க முயன்றாள், தேனுகா.

கோடங்கி அங்கயற்கண்ணியை பார்த்தார்.

"கொஞ்சம் திருநீறும், புஷ்பமும் கொண்டு வா தாயி!" என்றதும் அங்கயற்கண்ணி உள்ளே சென்றாள்.

தேனுகா குழப்பத்துடன் ஜாடையாக தமயந்தியை நோக்கினாள். அவள் ஒரு முறை தனது கண்களை மூடித்திறந்து மகளுக்கு தைரியம் சொன்னாள்.

அங்கயற்கண்ணி ஒரு கிண்ணத்தில் திருநீறும் ஒரு கூடையில் மல்லிகை சரத்தையும் கொண்டு வந்து கோடங்கியிடம் நீட்டினாள்.

தேனுகாவின் முன்பாக அவற்றை வைத்த கோடங்கி, தன் கழுத்தில் அணிந்திருந்த ருத்ராக்ஷ மாலையை கையிலெடுத்து கண்களை மூடியபடி உருட்டத் துவங்கினார். பின்பு மீண்டும் ருத்ராக்ஷத்தை அணிந்துக் கொண்டு கண்களைத் திறந்தார்.

"கண்ணு! முதலுல, இந்தப் பூவை எடுத்து தலையில வச்சுக்கம்மா! பொறவு, உன் கையால எல்லோருக்கும் திருநீறு கொடும்மா!" என்றார் கோடங்கி.

அந்த மல்லிகை சரத்தை தலையில் சூடிக் கொண்ட தேனுகா, கிண்ணத்தில் இருந்த திருநீற்றை அனைவருக்கும் அளித்தாள்.

"யாரும் பூசிக்க வேணாம்! அப்படியே திருநீற்றை வச்சுக்கங்க!" என்ற கோடங்கி, "நீ மாடிக்குப் போம்மா!" என்றார்.

தேனுகா அசைந்தாடியபடி மூன்றாம் மாடியில் இருந்த தன் போர்ஷனுக்கு நடந்தாள்.

அவள் போகும்வரை காத்திருந்த கோடங்கி, பாண்டி சகோதரர்களை கோபத்துடன் நோக்கினார்.

"பெரிய பாண்டி..! வில்லங்கமா ஏதோ நடந்திருக்கு! தேனுகாகிட்டே காமதேனு அம்சம் காணப்படலை.." கோடங்கி உறுமினார்,

அனைவரும் திகைத்து நின்றனர்.

"எதை வச்சு இப்படி அனுமானிக்கறீங்க, அழகரே!" குணசேகர பாண்டி பதறினார்.

"திருநீற்றை முகர்ந்து பாருங்கடா!" கட்டளையிட்டார், கோடங்கி.

அனைவரும் குழப்பத்துடன் திருநீற்றை முகர்ந்து பார்த்துவிட்டு, அழகர் கோடங்கியை கலக்கத்துடன் பார்த்தனர்.

"சந்தனம், பன்னீர் கலவை வாசனை வீசுதா?" கோடங்கி தலையசைத்தார்.

"இல்லை கோடங்கி!"

"முன்னேயெல்லாம் தேனுகா திருநீறு கொடுத்தா சந்தனம், பன்னீர் வாசம் வீசும். இல்லை! காரணம், காமதேனு நடமாடற இடத்துல ஒரு சுகமான வாசனை எப்பவும் வீசும். அதனாலதான் தேனுகா கொடுக்கிற திருநீற்றுல அந்த வாசம் வரும்! ஆனா.. அவ இப்ப கொடுத்த திருநீற்றுல அந்த வாசம் வரலை!" கோடங்கி விளக்கினார்.

"ஏலே.. இசக்கி! தேனுகா போன வழியா, நிலத்தை கவனிச்சுகிட்டே போ! போய் பார்த்துட்டு நீ என்னை பார்தேன்னு வந்து சொல்லு!" கோடங்கி உத்தரவிட, இசக்கி பாண்டி அகன்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்தான்.

"அழகரே! அவ போன வழியெல்லாம் மல்லிகைப்பூ சிதறிக் கிடக்குது!" இசக்கி சொல்ல, ஆவேசத்துடன் கையைத் தட்டிக் கொண்டார், அழகர் கோடங்கி.

"அதுதான் விஷயம்! வழக்கமா காமதேனு கணக்கா நடந்து போவா தேனுகா! அவ வச்சிருக்கிற பூ உதிராது! ஆனா.. இன்னைக்கு சாதாரண மனுஷியா நடமாடறா. அதனாலதான் அவ வச்சிருக்கிற பூ உதிருது."

"பாண்டி பயலுகளா! குல பெருமைக்கு அடுத்த சவால் வந்தாச்சு! ரேணுகா வழியில் தேனுகா போயிடப் போறா! உஷாரா இருங்கடா!"

"இந்த வருஷம் சுபகாயை யாகத்துல காமதேனுவை பாக்கறதுக்கு பெரிய குடும்பத்துல கர்ப்பவதி யாரும் இல்லை! அதனால், இருக்கிற சௌபாக்கியவதியை கெட்டியா பிடிச்சுக்கங்கடா! தேனுகா கிட்டே எவனோ அண்டியிருக்கான். அவன் யாரு? என்னன்னு கண்டு பிடிங்கடா? அப்புறமா என்ன செய்யணும்னு சொல்றேன்!" சாமியாடுவது போல வேகமாக பேசியதால் கோடங்கியின் கொண்டை அவிழ, அவர் மீண்டும் அதை முடிந்தார்.

"பொம்பளைங்க எல்லாம் உள்ளே போங்க!" பெரிய பாண்டி கூச்சலிட, பெரிய குடும்பத்து பெண்கள் அகன்றார்கள்.

"அழகரே! தேனுகாவுக்கு ஒண்ணும் பெரிசா ஆகலையே!" பெரிய பாண்டி கேட்டார்.

"தொடக்கம்தான் பெரிய பாண்டி! கட்டுப்படுத்திடலாம். கொஞ்சம் முன்னாடி வீட்டுக்கு ஒரு பையன் வந்துட்டு போனானே!" கோடங்கி மீசையை நீவி விட்டுக் கொண்டே கேட்டார்.

"சை.. சை.. என்ன கோடங்கி பேசறீங்க! அவன் நம்ம கணக்கு பிள்ளை மவன்! அவருக்கு உடம்பு சொகம் இல்லைன்னு லீவு சொல்ல வந்தான்! அவ்வளவுதான்.."

ஆனால், அந்தப் பையன் மேல சந்தனம், பன்னீர் ரவாசனை வீசினதே.. என்று சொல்லத் துடித்த நாவை அடக்கிக் கொண்டார், கோடங்கி.

"சரி.. நான் புறப்படறேன்!" என்று பெரிய வீட்டிலிருந்து கிளம்பினார், கோடங்கி!

"என்னண்ணே! கோடங்கி இப்படி சொல்லிட்டு போறாரு! நம்ம தேனுகா நல்ல பொண்ணாச்சே!" செந்தூரப் பாண்டி கூறினார்.

"ரேணுகாவும் நல்லபடியாதான் இருந்தாள். அந்த பைக்காரன் மோதுற வரை!" பெரிய பாண்டி பல்லைக் கடித்தார்.

"அதுதானே! தேனுகா போன சாரட் வண்டியும் ஆக்ஸிடெண்ட் ஆனது! நினைவிருக்கட்டும்!" இசக்கி சொன்னான்.

"மோதியவன் ஒரு டெம்போ டிரைவர்! கிழவன்! அதனால், அவன் நம்ம தேனுகாவை மயக்க வாய்ப்பேயில்லை!" செந்தூரப்பாண்டி சொன்னான்.

"அண்ணே ஏன் இப்படி மண்டைய போட்டு உடைச்சுக்கறீங்க! நாமதான் காண்டீபனை தேனுகாவுக்கு காவலா அனுப்பினோமே! அவனைக் கூப்பிட்டு விசாரிச்சுடலாமே!" குணசேகர பாண்டி சொன்னான்.

"கூப்பிடு அவனை!" பெரிய பாண்டி உத்தரவிட்டார்.

பணிவுடன் வந்து நின்ற காண்டீபனை தனது இடுங்கிய கண்களால் உறுத்தார், பெரிய பாண்டி.

"ஏலே.. காண்டீபா! ஒளிக்காம சொல்ல குருவாயூர்ல என்ன நடந்தது?"

ஏதோ பிரச்னை என்பதை உணர்ந்துக் கொண்ட காண்டீபன் எச்சரிக்கை அடைந்தான்.

"ஒண்ணுமே நடக்கலைங்க!" நான் தேனுகா பாப்பாவை விட்டு இந்தப்பக்கம், அந்தப்பக்கம் நகரலை! காண்டீபன் சொன்னான்.

"ஆனா.. ஏதோ பிரச்னை இருக்குன்னு கோடங்கி சொல்லுறாரே!" செந்தூர பாண்டி சொன்னான்.

"குருவாயூர்லேர்ந்து பாப்பா குமாரகோம் போனப்ப கூட நான் பின்னாடியே போனேங்க! நடு ராத்திரி வரையில பாப்பா ஃப்ரெண்ஸ்யோட விளையாடி கிட்டுதான் இருந்தது! நானும் அங்கேயே தான் உட்கார்ந்து இருந்தேன்!" காண்டீபன் கூறியதும் சகோதரர்கள் திகைத்துப் போனார்கள்.

"தேனுகா குமாரக்கோம் போனாளா?"

"ஆமாம் ஐயா! கல்யாண பார்ட்டிதான் அரேஞ் பண்ணியிருந்தாங்க! பையன்களும் பொண்ணுங்களுமா ஒரு பதினெட்டு பேர் போனாங்க?"

"அப்படியா? தேனுகா என்கிட்டே சொல்லவேயில்லையே!" குணசேகரன் ஆத்திரப்பட்டான்.

"யாராவது.. பையன் நம்ம தேனுகாகிட்டே நெருங்கி பழகினானா?" இசக்கி கேட்டான்.

"இல்லீங்க! பாப்பா பொண்ணுங்க கூடவேதான் இருந்தது! பையன்க கிட்டே பேசவேயில்லை!"

"சரி.. சரி.. நீ போ!" பெரிய பாண்டி கூற, காண்டீபன் சல்யூட் செய்து விட்டு அங்கிருந்து அகன்றான்.

"என்னடா தம்பிகளா! பொண்ணு குமாரகோம் போயிருந்ததாமே! எம்.பி. குடும்பம் இப்படி நம்மை கழுத்தை

அறுப்பாங்கனு, நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை!" பெரிய பாண்டி இரைந்தார்.

"கவலைப்படாதேன்ணே! அங்கே என்ன நடந்ததுன்னு கண்டுபிடிச்சுடுவோம்!" இசக்கி பெரிய அண்ணனுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்த போது, தேனுகாவின் பாதுகாவலர்களில் மற்றொருவனான தேனப்பன் அங்கே பிரசன்னமானான்.

"ஐயா!"

"என்னடா தேனப்பா! தங்கச்சி கல்யாணம் நல்லா முடிஞ்சுதா?"

"முடிஞ்சது ஐயா! உங்ககிட்டே ஒரு முக்கியமான சமாச்சாரம் சொல்லாம்னுதான் வந்தேன்!" தேனப்பன் தயங்கினான்.

"சொல்லுடா!"

"கல்யாணம் முடிஞ்சு, ஊருக்கு வந்து திருநெல்வேலி ஸ்டேஷன்ல இறங்கினேன். அப்ப.. தன் அப்பாவை வழியனுப்ப ஸ்டேஷனுக்கு வந்திருந்தா இன்மொழி. நம்ம பாப்பா கூட படிக்கும் பொண்ணு! குமாரகோம்ல ஒரு பையன் நம்ம பாப்பாவை.."

"மேலே சொல்லுடா!" பதைபதைத்தார், பெரிய பாண்டி.

"ஏதோ கேம் விளையாடரச்சே, அந்தப் பையன் 'டக்'னு நம்ம பாப்பாவுக்கு முத்தம் கொடுத்துட்டதா.. சொல்லுறா அந்தப் பொண்ணு!"

சகோதரர்களின் முகம் இருண்டது!

"அந்தப் பையன் யாரு?" பெரிய பாண்டி கர்ஜித்தார்.

"தெரியலை ஐயா! ஆனா.. இன்னொரு விஷயம்! நம்ம கணக்குபிள்ளை மவன் குருவாயூர்ல இருந்து நம்ம காருலதான் கோவூருக்கு வந்திருக்கான்!"

"உனக்கு யார் சொன்னா?"

"காண்டீபன்தான்" சொன்னான்.

"கூப்பிடு அவனை" பெரிய பாண்டி அலறினார். சகோதரர்களின் முகத்தில் பொங்கிய கோபத்தைக் கண்டு வெலவெலத்துப் போனான் காண்டீபன்.

"எலே! கணக்குபிள்ளை மவனை நம்ம காருல குருவாயூர்லேர்ந்து கூட்டிட்டு வந்தியா?" குணசேகரன் காண்டீபனின் சொக்காயை பிடித்து அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

"பாப்பாதாங்க சொல்லிச்சு!" காண்டீபன் பதறினான்.

"நீ ஏண்டா ஏத்தினே?"

'பளார்..' என்று மற்றொரு அறை.

"நம்ம கணக்குபிள்ளை மகன்னுதான் ஏத்திக் கிட்டேன்" காண்டீபன் கெஞ்சினான்.

"மரியாதையா சொல்லு! குமாரகோம்ல என்ன நடந்தது? நீ முழு விளையாட்டையும் பார்த்தியா?" காண்டீபன் மிடறு விழுங்கினான்.

"இல்லீங்கய்யா? சரக்கு போட்டதுல மயங்கிட்டேன்!" காண்டீபன் கதறினான்.

"துரோகி!"

குணசேகரன் காண்டீபனை தொடர்ந்து தாக்க அவனது அலறல் மூன்றாம் மாடியில் இருந்த தமயந்திக்கும், தேனுகாவுக்கும் கேட்டது. இருவரும் நடுக்கத்துடன் ஒருவரையொருவர் தாங்கிப் பிடித்துக் கொண்டனர்.

# அத்தியாயம் 32

**தே**க்கடிக்கு பறந்து கொண்டிருந்தனர், சந்தீப்பும் தான்யாவும் தனது கல்யாண பரிசான அந்த ஆடி Q7 கார் விமானமாக மாறிவிட்டதோ என்கிற அளவுக்கு சந்தீப் அதை விரைவாக செலுத்திக் கொண்டிருந்தான்.

"புவர் சுபாங்கி! நம்ம சாய்ராம் சொன்ன ஜோஸ்யத்தை அப்படியே நம்பிட்டாளா?" கலகல வென்று சிரித்தாள் தான்யா.

"யூ.. நோ.. தான்யா! அவ அப்படியெல்லாம் நம்பற பேர்வழியே கிடையாது! எல்லாத்துலேயும் லாஜிக், ரீஸனிங் பார்க்கிறவதான். ஆனா.. உன் பி.ஏ. சாய்ராம் செம ஆக்ட் கொடுத்து அவளை கவிழ்த்துட்டான்! என்னம்மா.. பேசினான்! நிஜ ஜோஸ்யன் கெட்டான்!"

"யாரோட பி.ஏ.! கலைமின்னல் தான்யோவோட ட்ரெய்னிங் அப்படி!" தான்யா சொல்ல, இருவரும் சிரித்தனர்.

"டியர்! எத்தனை நாளைக்கு நாம இப்படி ஊர் ஊரா யாத்திரைப் போய் லவ் பண்ணப்போறோம்? நிரந்தரமா எனக்குன்னு ஒரு இடம் எப்ப ஏற்படுத்தப் போறீங்க!" தான்யா சிணுங்கினாள்.

"லுக் தான்யா!" அவளை கரிசனத்துடன் பார்த்தான்.

"ஒரு கிரிக்கெட் வீரன்கிட்டே இந்த நாட்டுல பல எதிர்பார்ப்புகள் இருக்கு! ஸ்டைலா இருக்கணும்! விளம்பரங்கள்ல நடிக்கணும்! காதலி இருக்கணும்! கிசுகிசுல மாட்டிக்கணும்! அப்பதான் அவனுக்கு மௌஸ் இருக்கும். திறமையால் மேல வந்தவங்களை விட 'ஸீன்' காட்டி மேல வந்தவங்கதான் அதிகம். நானும் ஒரு காலத்துல, என் திறமையை மட்டும் நம்பித்தான் களத்துல இறங்கினேன். எவனும் திரும்பிக்கூடப் பாக்கலை! உன்னோட காதலனா அறிமுகம் ஆனப்புறம்தான் பாதி பேராவது என்னை திரும்பிப் பார்த்தாங்க!"

"நீ பார்ட்டிக்கு வராததால், தனியா உட்கார்ந்து இருந்த சுபாங்கிகிட்டே 'ஹாய்..' சொல்லிட்டு உட்கார்தேன். அவளையும் என் காதலின்னு போட்டு உனக்கும், சுபாங்கிக்கும் இடையே என்னை காதலிக்கிறதுல போட்டின்னு சொன்னாங்க! உனக்கு சினிமாவுல மார்க்கெட் ஏறிடுச்சு! நான் இதோ ஸிட்னி கிளம்பிட்டே இருக்கேன்."

"நம்மளை வச்சு மசாலா கதையை எழுதி பத்திரிகைக்காரங்க சம்பாதிக்கிறாங்க! இது நம்ம மூணு பேருக்கும் கன்வீனியன்டா இருக்கு!" சந்தீப் சொன்னான்.

"சுபாங்கிக்கு என்ன லாபம்?" தான்யா வியந்தாள்,

"அவளுக்கு புகழாசை! லைம்லைட்டுல இருக்கா இல்லே! இப்படியே நம்ம மூணு பேர் கதை போய்க்கிட்டே இருக்கட்டும்!"

"நிச்சயமா, ஆஸ்திரேலியா டூர்ல நான் நல்லா ஆடி வளருவேன்! எனக்கு வயசு இப்ப 27. இன்னும் இரண்டு வருஷத்துல நான் எப்படி கேப்டன் ஆகிடுவேன்! நான் கேப்டன் ஆகிற அன்னைக்கு நீ வைஸ் கேப்டன்! சுபாங்கி ரிட்டயர்ட் ஹர்ட்!" சந்தீப் கடகடவென்று சிரித்தான்.

"வொண்டர்ஃபுல்!" தான்யா சொல்ல ஸ்டீரியங்கின் மீது படிந்திருந்த தனது இடக்கையை அவள் தோளினில் படற விட்டான் சந்தீப்.

"வெய்ட்! உங்க ப்ளான் பிரமாதம்! அதற்கு இப்போ செலிபிரேஷன் தேவை!" என்றபடி பின்னால் திரும்பி, ஐஸ் பாக்ஸை திறந்தாள்.

திரும்பிப் பார்த்த சந்தீப் புருவத்தை நெறித்து விசிலடித்தான்.

"பால்கன், பக்கார்டி.. எல்லாமே டிரைவிங்குக்கு ஏத்த ட்ரிங்க்ஸ இல்லையே.." சந்தீப் வினவினான்.

"ஸ்ட்ராங்க் காதலுக்கு ஸ்ட்ராங்க் ட்ரிங்க்ஸ்தான் கரெக்டா இருக்கும்" என்று வோட்காவை திறந்தாள்.

"ஹேய்.. அது நான் குடிக்க வேண்டியது!" சந்தீப் சொல்ல,

"நான்தான்.. நீ.. நீதான் நான்.. அப்ப யார் எதை குடிச்சா என்ன?" என்றபடி தான்யா வோட்கா பாட்டிலை வாயில் கவிழ்த்துக் கொள்ள, அவளிடமிருந்து பிடுங்கி சந்தீப் குடிக்க, இப்படியே ஐஸ் பாக்ஸில் பாட்டில்கள் ஒவ்வொன்றாக காலியாயின. ஜெட் வேகத்தில் பறந்துக் கொண்டிருந்த ஆடி Q7, இப்போது தீனியை விழுங்கிய மலைபாம்பு வளைந்து ஊர்வது போல் சென்றுக் கொண்டிருந்தது.

"லெட் மீ ட்ரைவ் டார்லிங்! நீ கன்ட்ரோலுல இல்லை!" தான்யா சிணுங்கினாள்.

"ஹனி! கன்ட்ரோலுல இல்லைனாலும்.. ப்ரேக்குக்கும், ஆக்ஸிலேட்டருக்கும் என்னால வித்தியாசம் அறிய முடியும்.. உன்னால் முடியாது.." சந்தீப்பின் வாய் குழறியது.

"ஸ்டுபிட்! எம்.சி.பி.! என் கார்தானே.. நான்தான் ஓட்டுவேன்!.. நீ போய் சுபாங்கி காரை ஓட்டு மேன்..!" என்றபடி சந்தீப்பின் மீது விழுந்து ஸ்டிரியங்கைப் பற்றினாள். அவன் மடி மீது உட்கார முயன்றாள் தான்யா! அதனால் வண்டி தள்ளாட வேறு வழியின்றி பக்கத்து சீட்டில் நகர்ந்து

உட்கார்ந்தான், சந்தீப். தான்யாவின் டிரைவிங்கில் வெறித்தனமாக ஓடிக் கொண்டிருந்தது அந்த கார்.

இரவு மணி பத்து!

விச்சுவுடன் டௌனில் ஹேரி பாட்டர் படத்தை பார்த்து விட்டு வந்து கொண்டிருந்தான், காமேஷ்! பைக்கை ஓட்டிக் கொண்டிருந்த காமேஷின் இடுப்பைப் பற்றிக் கொண்டு விச்சு உட்கார்ந்திருந்தான்.

காமேஷ் கோவூரை நோக்கி சென்று கொண்டி ருந்தான். பொதுவாக பேப்பர் ஐயர் விச்சுவை அதிகம் சினிமாவுக்கு அனுப்புவதில்லை. ஹேரி பாட்டர் படத்தை பள்ளித் தோழர்கள் பார்த்துவிட்டு கதையாக சொன்னதால் ஐயரிடம் தான் அந்த படத்தை பார்த்தே ஆக வேண்டும் என்று விச்சு கூற, காமேஷிடம் அவனை அழைத்து போகும்படி சொல்லியிருந்தார் ஐயர்.

பழைய காமேஷாக இருந்திருந்தால், ஹேரி பாட்டரின் மாயா ஜாலங்கள் எல்லாவற்றையும் கேலி செய்திருப்பான். காமதேனுவின் முத்தத்திற்குப் பிறகு மனித செயல்களைத் தாண்டி சில சக்திகள் செயல்படுகின்றன என்னும் நம்பிக்கை

உண்டாகி யிருந்தது. எல்லா நிகழ்வுகளுக்கும், ஒரு காரண காரியம் உண்டு என்று அவன் எண்ணிக் கொண்டிருந்த போதுதான், முன்னால் சற்று தொலைவில் சென்று கொண்டிருந்த அந்த கார் கண்ணில் பட்டது.

பேய்த்தனமாக சென்று கொண்டிருந்தது அந்த ஆடி கார்! அதை ஓட்டிக் கொண்டிருந்த நபரின் கட்டுப்பாட்டில் அந்த வண்டி இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வெகுநேரம் ஆகவில்லை, காமேஷுக்கு.

"ஒருவேளை, டிரைவர் தூங்கிவிட்டானா?"

"விச்சு! என்னை கெட்டியா பிடிச்சுக்கோ! நான் வேகமாக போகப்போறேன்!" என்று காமேஷ் சொன்னதும், விச்சுவின் கைகள் அவன் சட்டையை இறுக பற்றின.

வளைந்து, தள்ளாடியபடியே செல்லும் அந்தக் காரை நோக்கி பாய்ந்தான் காமேஷ். பாதி கட்டப்பட்டு பணிகள் பாதிக்கப் பட்டதால், சிவப்பு ரிப்பனால் பாதை மறிக்கப்பட்டு, டேக் டைவர்ஷன் என்கிற பலகையுடன் நின்ற அந்தப் பாலத்தை ஆடி கார் நெருங்கியது.

தான்யா இருந்த நிலையில் எச்சரிக்கை பலகையையோ, சிவப்பு ரிப்பனையோ கவனிக்க வில்லை. விருட்டென்று ஆடி கார் பாலத்தின் மீது ஏறி பயணிக்க துவங்கியது.

"ஹேய்.. ஹேய்." தன் நிலை மறந்து காமேஷ் அலறினான். ஆனால், இவன் பாலத்தை நெருங்குவதற்குள் கார் மையப்பகுதிக்கு சென்று விட்டது.

பாலத்தின் இடப்புறமாக தன் பைக்கை திருப்பியபோதுதான், பயங்கர சத்தம் கேட்டது. அதோடு பளிச்சென்று தீ உண்டாவதும் தெரிந்தது. சற்று தொலைவிலேயே பைக்கை நிறுத்திய காமேஷ் விச்சுவை இறக்கி விட்டான்.

"விச்சு! நீ இங்கேயே நில்லு! பார்த்தா பயந்துடுவே!" என்றபடி விபத்து நடந்த பகுதிக்கு விரைந்தான்.

காரின் பெட்ரோல் டேங்க் பிளந்து தீ உருவாகி யிருந்தது. தீ பரவும் போது கார் நிச்சயம் வெடித்து சிதறும்.

அலறல் சத்தம் ஒன்று கேட்க கவிழ்ந்திருந்த காரின் முன்புறம் வந்தான். சந்தீப்தான் குற்றுயிரும், குலையுயிருமாக தத்தளித்துக் கொண்டிருந்தான்.

சற்றும் தாமதிக்கவில்லை காமேஷ். உடைந்திருந்த கார் கண்ணாடியை ஒரு கல்லினால் முழுவதுமாக உடைத்தான். பிறகு சந்தீப்பின் புஜத்தை பிடித்து இழுக்க, அவன் வலியால் கதறினான்,

நல்லவேளை! கார் விபத்தை பார்த்துவிட்ட அக்கம் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள் அங்கே குழு ஆரம்பித்தனர். கார் மெக்கானிக் ஒருவன் ஓடிவந்து முன் கதவை உடைக்கத் துவங்க இப்போது எளிதாக காமேஷினால் சந்தீப்பை வெளியே இழுக்க முடிந்தது. அதற்குள் யாரோ ஆம்புலன்ஸையும் அழைத்து விட்டார்கள்.

"என்ன காமேஷ்! என்ன ஆச்சு!" தங்களது வருங்கால மாப்பிள்ளை செந்தில் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் சற்றே நிம்மதியாக இருந்தது.

"மாப்பிள்ளே! நம்ம பேப்பர் ஐயர் பையன் அங்கே பைக்கிட்டே நிக்கிறான் கொஞ்சம் அவனை வீட்டுல விட்டுடுங்க! நான் இவரை மெட்ரோ ஹாஸ்பிட்டலுக்கு தூக்கிட்டுப் போறேன்!" என்ற காமேஷைத் தள்ளிக் கொண்டு எட்டிப் பார்த்தான், செந்தில்.

"இவரை.. எங்கேயோ.. பாத்திருக்கேனே.. அட...! கிரிக்கெட் ப்ளேயர் சந்தீப் ஷங்கர்!" என்றவன் காரின் உள்ளே மண்டை பிளந்து கோரமாக இறந்து கிடந்த தான்யாவைப் பார்த்தான்.

"சந்தீப்.. மனைவி.. சுபாங்கி.. போல இருக்கே!" செந்தில் கூற, ஆம்புலன்ஸ் சைரன் அலறலுடன் வந்து சேர்ந்தது.

விபத்தைப் பார்த்த ஒரே சாட்சியான. காமேஷும் ஆம்புலன்சில் தொற்றிக் கொண்டான்.

மெட்ரோ ஹாஸ்பிட்டல் பரபரப்படைந்தது. தேசிய நெடுஞ்சாலையில் எவ்வித கலகலப்புமின்றி அம்போ என்று காட்சி தரும் மெட்ரோ ஹாஸ்பிட்டல், ஸ்டார் நக்ஷத்திரம் அங்கே அட்மிட் ஆனதும், அதன் பெயர் பத்திரிக்கைகளில் அடிபட்டன.

"கார் விபத்தில் நடிகை தான்யா பலி.. காதலர் சந்தீப் உயிர் ஊசல். கோவூர் அருகே பயங்கர கார் விபத்து!" என்று செய்திகள் மாநிலத்தையே உலுக்கி விட்டன.

ஆஸ்பத்திரிக்கு சுபாங்கியே ஃபோன் செய்து இறந்து போனது நடிகை தான்யா என்றதும், மேலும் பரபரப்பை உண்டாக்கின பத்திரிக்கைகள்.

**க**டுகடுவென்ற முகத்தோடு தொழிலதிபர் நித்யமூர்த்தி, சுபாங்கியுடன் தன் காரில் கோவூருக்கு சென்று கொண்டிருந்தார்.

"ஐ டோல்ட் யூ! அவன் தனக்கு கிடைக்கிற வாய்ப்புகளை இப்படிதான் வீணடிக்கிறான், ஜம்முன்னு ஸிட்னிக்கு போய் தன் திறமைகளை காட்ட வேண்டியவன், அந்த கேடு கெட்டவளோட சுத்துவானேன். சந்தீப்புக்கு வாய்ப்புகள் கிடைச்சா மாதிரி வேற யாருக்கு வாய்ப்பு கிடைச்சிருக்கு! சொல்லு சுபாங்கி! அவினாஷ் தல்வாருக்கு, லிகமெண்ட் டேர் ஏற்பட்டதால், அவனைத் திருப்பி அனுப்பிட்டு சந்தீப்புக்கு சான்ஸ் கொடுத்தாங்க! நாளைக்கு பாம்பே போய் ஞாயிற்றுக்கிழமை ஸிட்னி கிளம்பணும்! இப்படி சொதப்பிட்டானே!"

கோபம் தலை உச்சிக்கேற டிரைவர் சீட்டின் பின்புறம் ஓங்கி குத்தினார் நித்யமூர்த்தி. டிரைவர் அதனால் அதிர்ந்து போய், வேகத்தைக் குறைத்தான்.

"அப்பா! நான் குழம்பிப்போய் இருக்கேன்! நீங்க சொல்றது எல்லாமே கரெக்ட்! பட் இந்த டைம்ல சாவு சந்தீப்பை சந்திக்க வந்திருக்கிற வேளையில் அவனை கரிச்சு கொட்டறதுல என்ன லாபம்?" சுபாங்கி கம்மிய குரலில் கூறினாள்.

"எந்த மடையானாவது இந்த டைம்ல தேக்கடி போவானா, சுபாங்கி! இதுல ஒரு நல்ல விஷயம் என்னன்னா தான்யா

இனிமே உன் வாழ்க்கையில குறுக்கிட மாட்டா!" நித்யமூர்த்தி சொன்னார்.

"குட் ரிட்டன்ஸ்ன்னு சொல்லத்தான் ஆசை! ஆனா என் சரக்கு சரயில்லை! தான்யா இல்லேனா வேற எவளையாவது தேடிகிட்டு போவான்!"

"நீயே உன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கிட்டே! நிகேத்தை கல்யாணம் பண்ணிக்கோன்னு கெஞ்சினேன்! நீ கேட்கலை, உன் கண்ணுல தண்ணி வர விட்டிருப்பானா, நிகேத்!"

"ப்ளீஸ்!"

ஏற்கெனவே நிகேத்தை திருமணம் செய்திருந்தால் தான் சுகப்பட்டிருப்போம் என்கிற மனநிலைக்கு வந்திருந்த சுபாங்கிக்கு, தந்தையின் வார்த்தைகள் காதுகளில் ஈயத்தை, காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது.

மகளின் வேதனை தோய்ந்த முகத்தைப் பார்த்ததும் கலங்கி போனார். நித்யமூர்த்தி அவளுக்கு விடிவு காலத்தை ஏற்படுத்தியே தீரவேண்டும் என்கிற உத்வேகம் அவருள் தோன்ற, கண்டிப்பு நிறைந்த பார்வையுடன் சுபாங்கியை பார்த்தார்.

"லிஸன் சுபாங்கி! உனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தேன்! அது பேக்ஃபயர் ஆயிடுச்சு! இனிமே என் சாய்ஸ்தான்."

"சந்தீப் பிழைக்கிறானோ, பிழைக்கலியோ! ஐ டோண்ட் சிம்ப்லி கேர்! பிழைச்சா டைவர்ஸ்! பிழைக்கலேனா நோ இஷ்யூஸ்! உன்னை நிகேத்துக்கு கல்யாணம் பண்ணித் தரப்போறேன்! வித்யா அத்தை பரந்த மனப்பான்மை கொண்டவ! உன்னை ரெண்டு கையை விரிச்சு மருமகளா வரவேற்பா! ஸோ! நான் சொல்றதை நீ கேட்கணும்!"

நித்யமூர்த்தி சொன்னதும் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் காரின் இருக்கையில் சாய்ந்து கண்ணை மூடினாள்.

மெட்ரோ ஹாஸ்பிட்டல் சென்றபோது அங்கே டாக்டர் நரேந்திரநாத், டாக்டர் ஹம்ஸவர்த்தினி மற்றும் ப்ரொஃபசர் வனமாலி ஆகியோரைப் பார்த்ததும், இதயமூர்த்திக்கும், சுபாங்கிக்கும் ஒன்றும் புரியவில்லை.

"நீ கேட்டதாலதான் சுபாங்கிய ப்ளாகாடுக்கு கொடுத்தேன், என் பொண்ணு லைஃப் இப்படி ஆயிடுத்தேடா.." என்று நரேந்திரநாத்தின் தோளில் தலை சாய்த்து கதறினார், நித்யமூர்த்தி.

அதைக் கண்டு துக்கம் தாளாமல் விசும்பி ஹம்ஸவர்த்தினியின் தோளில் சரிந்து அழத் துவங்கினாள், சுபாங்கி.

"எதுக்கு அழறே சுபாங்கி! சந்தீப் ஈஸ் சேஃப். காலுல சின்ன ஃப்ராக்சர்! கட்டுப் போட்டாச்சு! கொஞ்சம் ஷாக்ல இருக்கான்."

"கார் விபத்தால் ஷாக் இருக்காது! தான்யா போயிட்டாளேன்னு ஷாக்கா இருக்கும்!" சுபாங்கி சீறினாள்.

"இதோ பாரு சுபாங்கி! இந்த நேரத்துல பாயிண்ட் ஸ்கோர் செய்ய நினைக்காதே! கொஞ்சம் என்னோட வா சொல்றேன்!" என்ற ஹம்ஸா அவளை தனியாக அழைத்துச் சென்று ஒரு அறையில் அமர வைத்தாள்.

"நேத்துதான் அவந்திகாவிடம் உன்னோட கேஸை டிஸ்கஸ் பண்ணினேன். உன்னோட கருமுட்டைகள் வீக்கா இருக்கறதால. உன்னால கன்சீவ ஆக முடியலைங்கிறத கண்டுபிடிச்சாச்சு! சும்மா சந்தீப்கிட்டே மல்லுக்கு நிக்காம நடக்க வேண்டியதை பாரு. உனக்கு பிரச்னை தந்த தான்யா மார்ச்சுவரில் கிடக்கிறா? இனிமே உனக்கு என்ன ப்ராப்ளம்? ஜம்னு யார்கிட்டேயாவது கருமுட்டையை கடன் வாங்கு! உன் கணவன் வீர்யத்தை எடுத்து அதை ஃபர்டிலைஸ் செய்து உன் கர்ப்பப்பையில

வச்சுடறேன்! ஒரு பையனை பெத்து அவனை வச்சு சந்தீப்பை ட்ரில் வாங்கு! என்ன.. நான் சொல்றது புரியுதா?"

சுபாங்கி வாயடைத்துப் போய் நின்றாள். வரும்போது அப்பா தீர்மானமாக இவளை நிகேத்துக்கு கல்யாணம் செய்து வைக்கப் போகிறேன் என்கிறார். இங்கே டாக்டர் ஹம்ஸா சந்தீப்போடு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க சொல்கிறாரே!

"டாக்டர்! ஐ யாம் டோட்டலி கன்ஃப்யூஸ்ட்!" சுபாங்கி கூறினாள்.

"ஒரு குழப்பமும் இல்லை! போய் சந்தீப்பை பாரு! அவனோட மனசு விட்டு பேசு! இனிமே அவன் உன் கைக்குள்ள இருக்கிற மாதிரி வச்சுக்க! அவனுக்கு வயசும் இருக்கு! காலமும் இருக்கு! கேன்சரோட போராடிட்டு ஒரு கிரிக்கெட் ப்ளேயர் வெற்றிகரமா திரும்பி வர்றச்சே, சந்தீப்பால் முடியாதா? நல்ல குடும்பம், திறமையான தொழில் இவை ரெண்டும்தான் உங்களுக்குத் தேவை! போய் பழைய கதைய பேசாம, அவனுக்கு தைரியம் சொல்லு!"

"இதே வெராண்டாவுல லாஸ்ட் ரூம்ல ஐ.சி.யூ சட்டு புட்டுனு பேசிட்டு வா..! என் வீடு இங்கேதான் கோவூர்ல இருக்கு! நீ என் வீட்டுல வந்து தங்கலாம்!"

ஹம்ஸவர்த்தினி சொல்ல, சுபாங்கி ஐ.சி.யு.வை நோக்கி நடந்தாள்.

ஐ.சி.யு.வில் இரண்டு பேர் மட்டுமே இருந்தனர். சந்தீப்பின் காலில் பெரிய கட்டுப் போட்டு ஒரு வளையத்தில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது.

நேராக அவன் முன்பாகப் போய் நின்றாள். விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவன், பார்வையை நகர்த்தி, சுபாங்கியின் முகத்தைப் பார்த்தான், உடனே உடைந்து போனான்,

"ஐயோ! எல்லாத்தையும் நாசம் செஞ்சுட்டேனே. நாளைக்கு சிடளிக்கு கிளம்பற டைம்ல இப்படி ஆகி போச்சே! எனக்கு மன்னிப்பே கிடையாது!" சந்தீப் தேம்பினான்.

"நோ யூஸ் க்ரையிங், சந்தீப்! உன் மீது எனக்கிருந்த நம்பிக்கை, எதிர்பார்ப்புகள் எல்லாதே வத்தி போயாச்சு! என் அப்பா நம்ம டிவோர்ஸுக்கு ஏற்பாடு செய்யறேன்னு சொல்றாரு! அவரோட கருத்தை முறியடிக்க உனக்கு ஆதரவா எதையாவது ஆதாரம் காட்டலாமுன்னு பார்த்தா ஒன்றுமே இல்லை. என்னை தொடர்ந்து ஏமாத்திட்டு வர்றே! ஒண்ணறை லக்ஷம் கடன் வாங்கிட்டு போய், தான்யாவுக்கு நகை வாங்கினே! என் டயரியை படிச்சு, கீழ்த்தரமா தான்யாவோட

பி.ஏ.வை ஜோஸ்யன்னு சொல்லி ஏமாத்தினே! சுசீந்திரம் போறேன்னு சொல்லிட்டு, தேக்கடி போய்கிட்டு இருந்தே. என்னை தொடர்ந்து ஏமாத்தினதா நினைச்சு நீங்க ரெண்டு பேரும் உங்களையே ஏமாத்திக்கிட்டீங்க. தான்யா அவ செஞ்ச பாவங்களுக்கு தனக்கு தானே தண்டனை விதிச்சுக்கிட்டா, அவ்வளவுதான்!" காழ்ப்புணர்ச்சியுடன் கூறினாள், சுபாங்கி.

சுபாங்கியின் பேச்சு சந்தீப்பிற்கு பயத்தை உண்டு பண்ணியது. 'தான்யா பரலோகம் போய்விட்டாள். சுபாங்கியும், அவனை விவாகரத்து செய்துவிட்டு நிகேத்தை நாடி போய்விட்டால், கிரிக்கெட் துறையிலும் இவன் எதிர்காலம் கேள்விக் குறியாகி விட்டதே!'

"சுபாங்கி! ப்ளீஸ்! இன்னும் ஒரே ஒரு சான்ஸ் கொடு! இனிமே நீ கிழிச்ச கோட்டை தாண்டவே மாட்டேன்.." கண்களில் நீர் பெருக கெஞ்சினான்,

"நீ கிரிக்கெட் விளையாடி நான் பார்த்திருக்கேன் சந்தீப். லைன் உள்ளே நிக்காம இப்படியும் அப்படியும் திரிஞ்சுகிட்டே இருப்பே! அம்பயரை வார்னிங் கொடுத்து நீ கேட்காததால ரெண்டு தடவை அவுட் ஆகியிருக்கே!" சுபாங்கி கடுமையாகப் பேசி அவனுக்குள் இருந்த கொஞ்ச நஞ்ச சக்தியையும் கரைத்துக் கொண்டிருந்தாள்.

"ப்ளீஸ்.. டோண்ட் டிட்ச் மீ, சுபாங்கி! இனிமே உன் மனக, அறிஞ்சு நடக்கிறேன். நீ என்ன சொல்றியோ கேட்கறேன், ஐ யாம் ப்ரோக் நௌ! ஹாஸ்பிட்டல் செலவுக்கு கூட எனக்கு பைசா கிடையாது!"

முதல் முறையாக சந்தீப்பின் மீது ஒருவித அனுதாபம் தோன்றியது. ஆனால் இந்த முறை தன்னுடைய சட்ட திட்டங்களுக்கு ஏற்பதான் அவனை நடத்தப் போகிறாள். அவனுக்கு மன்னிப்புத் தருவாள். ஆனால் அவனை வைக்கும் இடத்தில் வைக்கப் போகிறாள்.

"சந்தீப் நல்லா கேளு! நீ ஒரு கிரேட் ப்ளேயர் கிடையாது! நல்ல ஹஸ்பெண்ட் கிடையாது! நம்பிக்கையான காதலன் கிடையாது! ஒரு ஜாக்கிரதையான டிரைவர் கிடையாது! ஒரு கம்பீரமான ஆணும் கிடையாது! இவை எதுவுமே இல்லாத உன் மேல நான் ஏன் காதல் கொண்டேன்னு தெரியலை! ஒரு வேளை உன்னைப் பிடிச்சா நான் செலிபிரிட்டி ஆகலாம் பேராசைபட்டதால்தான் உன்னை நான் கல்யாணம் செஞ்சுகிட்டேன்னு நினைக்கிறேன். இப்ப உன்னால எனக்கு எந்த பிரயோஜனமும் இல்லை."

"பட்! ஒரே ஒரு சான்ஸ் உனக்கு தரலாம்னு இருக்கேன்! ஏன் தெரியுமா? நான் அம்மா ஆகணும்! ஒரு பொண்ணு

அம்மா ஆனாதான் அவளுக்கு பூரணத்துவம் கிடைக்கும்னு என் அம்மா சொல்லுவாங்க! அதனாலதான் நான் அம்மா ஆகணும்னு ஆசைபடறேன்."

"அதுல நான் முழுமூச்சா இனிமே இறங்கப் போறேன்! இந்த விஷயத்துலயாவது உன்னோட முழு ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்."

"கடவுள் உன்னை சின்ன ஃப்ராக்சரோட மன்னிச்சு விட்டதற்கு காரணம், நீ என்னை அம்மாவாக்கணும் என்பதற்குத்தான்! இதை நீ புரிஞ்சுகிட்டு, இனிமே ஒழுங்கா புருஷனா நடந்துக்க!"

"இந்த முறையும் நீ என்னை ஏமாத்தினே, நான் அடுத்த விமானத்துல மால்டீவ்ஸ் போயிடுவேன். என்னடா ஒரு பொண்ணு இப்படியெல்லாம் பேசறாளேன்னு நினைக்காதே! இனிமே நான் என்னோட தேவைகளுக்கு மட்டும்தான் முக்கியத்துவம் தருவேன்! உன்னோட தேவைகளுக்கு.." என்று சுபாங்கி இடைவெளி தர, சந்தீப் அயர்ந்து போய் அவளைப் பார்த்தான்.

"இனிமேல் உனக்கு தேவைகளே இருக்கக்கூடாது.." அச்சுறுத்தும் குரலில் கூறி விட்டு, சுபாங்கி வெளியேற, அவள்

பின்னால் ஊசலாடும் அந்த ஐ.சி.யூ.வின் கதவையே திகைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தான் சந்தீப்.

# அத்தியாயம் 33

அழகர் கோடங்கி பாண்டியம்மனுக்கு தீபாராதனை காட்டிக் கொண்டிருந்தார்.

தங்களை நோக்கி கும்பிட்ட ஊர்மக்களை லக்ஷியம் செய்யாமல் மௌனமாக கோவிலின் வெளியே இருந்த வேப்பமரத்தடியில் ஒடுங்கினர் பாண்டிய சகோதரர்கள்.

அவர்களைப் பார்த்ததும், கோவில் பாராக்காரன் சன்னதிக்கு ஓடோடிப் போய் அழகர் கோடங்கியின் காதில் கிசுகிசுக்க, தீபாராதனை தட்டை பக்தர்களுக்கு காட்டிக் கொண்டிருந்த அழகர் கோடங்கி தனது உதவியாளனை அழைத்தார்.

"மாசானம்! சன்னிதியை பார்த்துக்க! ஒரு அவசர ஜோலி இருக்கு! இப்ப வந்துடறேன்!" என்றபடி வேப்ப மரத்தை நோக்கி நடந்தார்.

"வாங்க.. பாண்டி!" பெரிய பாண்டியை பார்த்து தலையசைத்தபடி வரவேற்றவர், தன் கையில் வைத்திருந்த குங்குமத்தை நால்வர் நெற்றியிலும் தீட்டினார்.

"பாண்டியம்மன் காப்பாத்துவா!" என்று கோடங்கி சொன்னதும், "நிச்சயம் காப்பாத்துவா!" என்றபடி கோவிலின் பின்னாடி இருந்த அழகர் கோடங்கியின் ஜாகையை நோக்கி நடந்தார்கள் பாண்டிய சகோதரர்கள்.

கோவிலின் பின்புறம் காணப்பட்ட நாகப்புற்றை கடந்து மதிற்சுவரில் ஒரு சிறிய கேட் இருந்தது, அதைத் திறந்து கொண்டு சிறிது தூரம் சென்றால், கோடங்கியின் இருப்பிடம் வந்துவிடும்.

வீட்டிற்குள் சகோதரர்களை அமர வைத்தார், கோடங்கி!

"யம்மா மருக்கொழுந்து!" என்றதும் கோடங்கியின் மருமகள் சொம்பு நிறைய நீர்மோருடன் வந்தாள்.

சீரகம், உப்பு, கொத்துமல்லி, பச்சை மிளகாய், மாங்கா இஞ்சி கலவையை அரைத்து, அந்த விழுதை மோரில் சேர்த்திருந்தார்கள். அந்த வெயிலுக்கு அமிர்தமாக இருந்தது மோர்.

கோபத்துடன் வந்திருந்த பாண்டி சகோதர்களுக்கு அந்த மோர் இதமாக இருந்தது.

"இன்னும் ஒரு குவளை கொடும்மா!" என்று கேட்டு வாங்கிக் குடித்தார், பெரிய பாண்டி.

மோரைக் குடித்து, முடித்து மேல் துண்டினால் வாயைத் துடைத்துக் கொண்ட பெரிய பாண்டி, காலி குவளைகளுடன் மருக்கொழுந்து, அகலும் வரை காத்திருந்தார்.

"அழகரே! என்ன நடந்ததுன்னு கண்டு பிடிச்சுட்டோம்."

"என்ன நடந்ததாம்!" கோடங்கி நிமிர்ந்து உட்கார்ந்தபடி சகோதர்களை ஏறிட்டார்,

"குருவாயூர் கல்யாணத்துக்கு போன தேனுகா, அங்கேயிருந்து குமாரகோம்ங்கிற இடத்துக்கு போயிருக்கா? உல்லாச பயணம் போறதுக்கு தகுந்த இடம்! படகு சவாரி எல்லாம் இருக்கும்! அங்கிட்டு ராவைக்கு தங்கியிருக்கானுங்க கல்யாண பார்ட்டி. அப்ப சும்மா ஜாலியா பயலுகளும், பொட்டை பிள்ளைகளும் ஏதோ விளையாட்டு விளையாடியிருக்காங்க! துண்டு சீட்டுகள்ல இதைச்செய் அதைச்செய் என்று எழுதி கண்ணாடி ஸீஸாவுல போட்டு, அவங்களுக்கு என்ன சீட்டு கிடைக்குதோ அதை செய்யணும்னு ஆட்டத்தின் விதி! எவனோ ஒரு பொசைகெட்ட பயல் சீட்டை எடுக்க அவனுக்கு ஏதாவது ஒரு பொண்ணுக்கு முத்தம் கொடுன்னு சீட்டுல சொல்லியிருந்துச்சாம்! அவ நம்ம பொண்ணுக்கு முத்தம் கொடுத்துட்டான்! அவ்வளவுதான்

விஷயம்! காதல் கீதல்லாம் ஒண்ணும் இல்லை." பெரிய பாண்டி சொன்னார்.

"இதை எப்படி கண்டுபிடிச்சே!" வியப்புடன் கேட்டார் கோடங்கி.

"கல்யாணத்துக்கு, தேனுகாவோட படிக்கிற பொண்ணும் போயிருக்கு! அதுவும் அந்த விளையாட்டுல கலந்து கிட்டு இருக்கு! அதுதான் தேனப்பன் கிட்டே விஷயத்தை சொல்லிச்சு! பொறவு தேனுகாவை அதட்டி கேட்டதுல விஷயத்தைக் கக்கிட்டா!"

"கம்மனாட்டிங்க! விளையாடறதுக்கு வேற விளையாட்டா கிடைக்கலை! கோணிப் பைய தச்சு ஜீன்ஸுன்னு போட்டுகிட்டு ராத்திரி தூங்காம வட்டமடிச்சா இப்படித்தான் நடக்கும்!" கோடங்கி தற்கால சமுதாயத்தையே சாடினார்.

சகோதரர்கள் அமைதியாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர். அவர் ஏதாவது தீர்வு செய்யக்கூடும் என்று.

"பையனை யாருன்னு கண்டுபிடிச்சிங்களா?" கோடங்கி கேட்டதும் கூனி குறுகினார்கள் பாண்டி சகோதரர்கள்.

"சொல்றதுக்கே கேவலமா இருக்கு அழகரே! எங்க கணக்குப்பிள்ளை மகன்தான் இந்தக் காரியத்தை

செஞ்சிருக்கான்.." குணசேகர பாண்டி முகம் அவமானத்தால் சிவந்து போனது. சகோதர்களிலேயே அவன்தான் சற்று சிவந்த நிறத்தை உடையவன். அதனால்தான் அவன் முகம் சிவக்க நேரிட்டதோ என்னவோ?

அழகர் கோடங்கி சகோதர்களை ஜாக்கிரதையாக பார்த்தார்.

"பயலுகளா! நான் சொல்றது அருவருப்பா கூட இருக்கும்! ஆபாசமாகவும் தோணும்! என்னடா அழகர் கோடங்கி இப்படி பேசறாருனு! வேற வழிஇல்லை. பேசித்தான் ஆகணும்!"

"கணக்குப்பிள்ளையோட மவனா இருக்கிறது ஒரு விதத்துல நல்லதுதான்! விஷயத்தை காது வச்சாப்பல அமுக்கிப்புடலாம். வெளி இருந்து ஒரு பையன் இதை செஞ்சிருந்தானா, பெரிய வீட்டு பெண்ணுக்கு முத்தமிட்டுட்டேன்னு வீறா ஊர் முழுக்க சொல்லிகிட்டு இருப்பான். அப்புறம் நாளைக்கு தேனுகாவோட மஹிமைகளுக்கு மதிப்பு இருக்காது!"

"நான் சொல்றபடி செய்யுங்க! அந்த கணக்கு பிள்ளையை அடிச்சு கிடிச்சு வக்காதீங்க! அப்புறம் பையன் எகிற ஆரம்பிச்சா நம்மால ஒண்ணும் செய்ய முடியாது. அன்னைக்கு உன் வீட்டுக்கு வந்த போது அந்தப் பையன் யாருன்னு

கேட்டேன்! நீதான் கணக்குப்பிள்ளை மவன்! அவன் அப்பாவுக்கு, உடம்பு சரியில்லை அதுதான் லீவு சொல்ல வந்திருக்கான்னு சொன்னே! அந்தப் பயமேல எனக்கு அப்பவே சந்தேகம்! அவன் மேல சந்தனபன்னீர் வாசனை வீசிச்சு! அந்த பையன்தான் சாரட் விபத்துல தேனுகாவை காப்பாத்தினவன். ரேணுகாவும், அந்த மோட்டார் பைக் பயலும் முறைச்சு பார்த்துகிட்டு நின்ன மாதிரிதான் இவங்களும் நின்னாங்க!"

"இப்பவும் ஒண்ணும் குடி முழுகலை! அந்த கணக்கு பிள்ளையை கூப்பிட்டு சம்பந்தம் பேசுங்க!" என்று கூறி முடித்திருக்க மாட்டார். உடனே,

"கோடங்கி" என்று அதிர்ந்து போனார்கள் பாண்டி சகோதரர்கள்.

"அட.. அவசரப்படறீங்களே! உங்களுக்கு தேனுகாவோட மஹிமைகள் தங்கணுமா வேணாமா?" கோடங்கி கேட்டார்.

"அவசியம் அவகிட்டேயே தங்கி இருக்கணும்.." குணசேகர பாண்டி கூறினான்.

"அப்ப நீங்க இதை செஞ்சுதான் ஆகணும். கணக்குப்பிள்ளையை அழைச்சு சம்பந்தம் பேசுங்க. பயலை

தேனுகாவோட நெருங்கி பழக விடுங்க. பையன் சும்மா இருக்க மாட்டான். நிச்சயம் இன்னொரு முத்தம் கொடுப்பான்."

"அந்த முத்தத்தோட தேனுகாவோட எல்லா மஹிமைகளும் திரும்பி வந்துடும். அப்புறம், அவனை இரும்பு கூண்டுல வச்சு பூட்டுங்க! அந்த கணக்குப் பிள்ளை குடும்பத்தை ஊரைவிட்டு அடிச்சு விரட்டுங்க! ரேணுகா வழியில தேனுகா போகவே கூடாது!"

கோடங்கி உறும, சகோதர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"சரி கோடங்கி? நீங்க சொன்ன மாதிரியே நடந்து கொள்கிறோம்!" என்று கை கூப்பியபடி எழுந்து கொண்டனர்.

**க**ழுநீர் பானை நீரை தெருவில் கொட்டுவதற்காக, வந்த உமையாள் சாக்கடையில் நீரைக் கொட்டிவிட்டு திரும்பியவள் திகைத்துப் போய் நின்றாள்.

பெரிய இன்னோவா காரில் நான்கு சகோதரர்களும், மூத்த மருமகள் அங்கயற்கண்கண்ணி கையில் தாம்பூலத் தட்டோடு சிவநேசன் வீட்டிற்குள் போவதைப் பார்த்தாள்.

"என்னங்க! சீக்கிரம் வாங்க!"

அன்றைய காலை பேப்பரை மேய்ந்துக் கொண்டிருந்த அவள் கணவன் ஓடி வந்தான்.

"என்னாச்சு உமையாள்?"

"பெரிய வீட்டுக்காரங்க கையில தாம்பூல தட்டோடு உள்ளே போறாங்க! ஒருவேளை, அந்த காமேஷூக்கு தங்க வீட்டு பொண்னை நிச்சயம் பண்ணறாங்களோ என்னவோ? ஆத்தாடி! அது மட்டும் நடந்ததுன்னா. என் பிள்ளை செந்தில் அதிர்ஷ்டக்காரன்தான்! என்னங்க! இந்த கழுநீர் பானையை உள்ளார கொண்டு வையுங்க! நான் செங்கமலத்தம்மா வூட்டு வரைக்கும் போயிட்டு வந்துடறேன்!" உமையாள் ஓடினாள்,

செங்கமலத்தம்மா கோவூரின் ந்யூஸ் ஏஜென்ஸி! பி.டி.ஐ, யூ.என்.ஐ எல்லாம் அந்தம்மாளிடம் பிச்சை வாங்க வேண்டும்.

**பெ**ரிய பாண்டி குடும்பத்தினர் கையில் தாம்பூலத் தட்டுடன் தங்கள் வீட்டினுள் வந்து நிற்பதை சிவநேசன் குடும்பத்தினால் நம்பவே முடியவில்லை. தங்கள் வீட்டுக்கு

தொடர்ந்து வரும் சௌபாக்கியங்களில் இதுவும் ஒன்று போலும் என்று அவர்களை பணிவுடன் வரவேற்றார்கள்.

"ஐயா! இந்த நாற்பது வருஷத்துல முதன் முறையா நீங்க எங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க!" பரவசப்பட்டார் சிவநேசன்.

"உம்ம பையன் என்னை வரவழைச்சுட்டான்யா!"

புன்முறுவல் பூக்கும் முகங்களுக்கு பின்னால் ஒளிந்திருக்கும் சூறாவளியை அவர்களால் காண முடியுமா.. என்ன?

அங்கயற்கண்ணிக்கு குமட்டிக் கொண்டு வந்தது. இவர்கள் வீட்டு இடைகழித் திண்ணையை விட சிறிய போர்ஷனில் வசிக்கும் காமேஷுக்கு பெரிய வீட்டு பெண்ணின் முத்தம் கேட்கிறதா என்ன?

"எலே சிவநேசா! நான் சொல்லற விஷயத்தைக் கேட்டு நீ அதிசயப்படக்கூடாது! அதிர்ச்சியும் அடையக் கூடாது என்ன?" பீடிகையுடன் துவக்கினார், பெரியபாண்டி.

"சொல்லுங்கய்யா!" சிவநேசன் கையை கட்டிக் கொண்டு பணிந்தார்.

"சிவநேசா! இனிமே நீ கையை எல்லாம் கட்டிக்க தேவையில்லை! நீ எங்க சம்மந்தி ஆகப்போறே!"

"ஐயா!"

சிவநேசன் தேகம் நடுங்கியது. குலதனமும், அருந்ததியும் கவலையுடன் அவரைப் பார்த்தனர்.

"ஆமாம் சிவநேசா! மன்மதன் மாதிரி ஒரு பையனை பெத்திருக்கீர்! அவன் நடந்தாலே பொண்ணுங்க மயங்கி விழுறாங்கலாம். அதுல என் வீட்டுப் பொண்ணு தேனுகாவும் அதாக்கம்! எம்.பி. வீட்டு கண்ணாலத்துக்கு உன் புள்ள வந்தானாமே! ரெண்டும் அங்கே நெருங்கி பழகிடுத்துங்க! பெரியவங்க நாமதானே அது சேர்த்து வைக்கணும்!"

"முதலில் எனக்கு கூட கோபம் வந்தது! என்கிட்டே சம்பளத்துக்கு வேலைப் பாக்கறவன்கிட்ட சம்பந்தம் பேசறதான்னு தோணுச்சு! ஆனா, உன் மவன் இல்லாம அந்த தேனுகா பொண்ணு செத்துடுமோன்னு பயமா இருந்துச்சு!"

"ஏற்கெனவே ரேணுகா விஷயத்துல நாங்க கடுமையை காட்டிட்டோம். ஏக்கத்துலேயே அவ செத்துட்டா! உன் பொண்டாட்டிதானே அவளோட தோழி! அவளுக்கு எல்லாம் தெரியுமே! இன்னொரு ரேணுகா உருவாகக் கூடாதுனுதான் நான் தட்டு மாத்த வந்திருக்கேன். என்ன புள்ளே அங்கயற்கண்ணி! பேசாம உக்காந்துக்கிட்டு இருக்க! தட்டு

எடுத்து குலதனம் கிட்டே கொடு! நம்ம தனத்தையே அவங்க குலத்துகிட்டே கொடுப்போம்!"

குலதனம் சிவநேசனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் அமைதியாக உட்கார்ந்திருக்க, "என்னங்க! அம்மா தட்டை நீட்டறாங்களே! நான் என்ன செய்யட்டும்!" என்றாள்.

"வாங்கிக்க!" என்று அவர் கூறியதும் அங்கயற்கண்ணியிடமிருந்து தட்டைப் பெற்றுக் கொண்டாள்.

சிவநேசன் பரவசத்துடன் பெரிய பாண்டியைப் பார்த்தார்.

"ஐயா! எல்லாமே தெய்வச்செயல்! ரெண்டு நாளாவே எங்களுக்கு எல்லாம் நல்லபடியாவே நடக்குது. ரெண்டு நாள் முன்னாடி ராத்திரி பத்தரை மணிக்கு எங்க வீட்டு காமதேனு படத்துல இருந்த பூமாலை அருந்ததி மேல விழுந்தது!" சிவநேசன் சொன்னார்.

"அதுதாங்க! நம்ம வீட்ல காமதேனு படம் விழுந்து உடைஞ்சு போச்சு இல்ல! அப்ப இவங்க வீட்டுல காமதேனு படத்துல இருந்து மாலை விழுந்துச்சாம்னு கணக்குபிள்ளை சொல்றாரு!" எகத்தாளமாக கூறினாள் அங்கயற்கண்ணி.

மற்ற சகோதரர்கள் ரசித்த அளவு பெரிய பாண்டி அந்த நக்கலை ரசிக்கவில்லை. காரணம், அவருடைய இதயத்தில் உக்கிரம் கனன்று கொண்டிருந்தது.

"இந்த வீட்டுக்கார ஐயரு, அமெரிக்காவுல இருந்து ஃபோன் பண்ணி இந்த வீட்டை எனக்கே தந்துடறேன்னு சொன்னாரு! கௌரி ஜூவல்லரில என் பொண்ணு கட்டிய சீட்டுக்கு ஒரு கிலோ தங்கம் பரிசு விழுந்தது! எதிர் வீட்டு உமையாள் அம்மா தன் பிள்ளைக்கு என் பொண்ணை கேட்டு வந்தாங்க! இப்ப நீங்க உங்க பெண்ணுக்கு என் பிள்ளையை கேட்டு வர்றீங்க! இதெல்லாம் எதைக் காட்டுது?" ஆனந்தத்துடன் கூறினார், சிவநேசன்.

"உங்க பையன் நல்லா முத்தம் தருவான்னு காட்டுது.." எரிச்சல் தாங்காமல் குணசேகரன் கூறினான்.

"ஐயா.. என்ன சொல்றீங்க..?"

"உம்ம பையனை கூப்பிடுய்யா! அவனை கட்டியணைச்சு ஆளுக்கொரு முத்தம் கொடுக்கணும்!" பெரிய பாண்டி கூறினார்.

"அவன் வெளியே போயிருக்கான்!" என்றார் சிவநேசன்.

"வந்தவுடன் விவரத்தை கூறி அவனை வீட்டுக்கு அழைச்சுட்டு வாய்யா! தேனுகா அவனைப் பார்க்க துடிச்சுகிட்டு இருக்கான்னு சொல்லு..!" பாண்டி சகோதரர்கள் கிளம்பி விட்டனர்.

"சம்பந்தி! சம்பந்தம் பேச வந்துட்டு, கையை நனைக்காம போனா எப்படி?" சிவநேசன் கேட்டதும், "ஹா.. ஹா.." என்று சிரித்தார்கள் பாண்டி சகோதர்கள்.

"சம்மந்தியாம்ல!" என்று மீண்டும் சிரித்தவர்கள்,

"கை என்ன சம்மந்தி! தலையையே நனைக்கிறோம்!" என்றபடி வெளியேறினார்கள்.

குலதனம் நீட்டிய குங்குமத்தை எடுத்து அருந்ததியின் நெற்றியில் தீற்றிவிட்டு அங்கயற் கண்ணியும் மௌனமாக கிளம்பினாள். குலதனத்திற்கு பின்னர் கழுத்தில் வேர்க்க துவங்கியது.

# அத்தியாயம் 34

"**சா**ர்.. எப்படி இருக்கீங்க?" காமேஷ் கேட்டதும், சந்தீப் அவனை உற்சாகத்துடன் வரவேற்றான், ஐ.சி.யூ.வில் இருந்து வார்டுக்கு மாறி விட்டான் சந்தீப்.

"வாப்பா.. காமேஷ்! உன்னைத்தான் எதிர்பார்த்து க்கிட்டு இருந்தேன், நீ இல்லேன்னா கார் வெடிச்சு சிதறினதுல, நான் பீஸ் பீஸா போயிருப்பேன்! நீ சரியான நேரத்துல வந்து என்னைக் காப்பாத்தினே!" அவன் கையை இறுகப் பற்றிக் கொண்டான் சந்தீப்.

அன்று ஆவேசமா பேசிவிட்டு சென்றிருந்த சுபாங்கி, அதற்கு பிறகு அவனைப் பார்க்க வரவில்லை! இத்தனைக்கும், கோவூரில் டாக்டர் ஹம்ஸவர்த்தினி வீட்டில்தான் தங்கி இருக்கிறாள். அவளாவது ஒரு முறை வந்து பார்த்தாள். நித்யமூர்த்தி இவனுக்கு பலத்த காயங்கள் இல்லை என்பதை அறிந்ததும் இவனைப் பார்க்காமலேயே சென்னை திரும்பி விட்டார். டாக்டர் நரேந்திரநாத்தும் இந்த காமேஷும்தான் தற்போது இவனை வந்து பார்க்கும் மனிதர்கள்.

தாலி கட்டிய மனைவி சுபாங்கியே தற்போது அன்னியமாகி போய்விட்ட நிலையில் தனக்கென்று யாரும்

இல்லையே என்கிற எண்ணத்தில் காமேஷிடம் மிகவும் நெருக்கம் காட்டினான் சந்தீப்.

"காமேஷ் பெரிய கிரிக்கெட் கனவுகளோட இருந்தேன். இந்நேரம் நான் ஸிட்னிக்கு பறந்துகிட்டு இருக்கணும்! இங்கே அனாதையா கிடக்கிறேன்!" என்று புலம்ப,

"சார்! நீங்க அனாதை இல்லை! உங்களுக்கு நான் இருக்கேன்!" என்ற காமேஷை கப்பென்று பிடித்துக் கொண்டான்.

"காமேஷ்! நீ என்ன வேலை பாக்குறே!"

"பெரிசா ஒண்ணுமில்லைங்க! ஒரு பேப்பர் ஏஜெண்ட் கிட்டே வேலை பாக்கறேன்!" காமேஷ் சொன்னான்.

"நீ என்னோட சென்னைக்கு வந்துடு! எனக்கு செக்ரட்டரியா இரு! உன்னை பெரிய ஆளா ஆக்கி காட்டறேன்."

காமேஷ் சந்தீப்பின் கையை ஆதரவாக பிடித்துக் கொண்டிருந்த போது, அவனுக்கு ஆஸ்பத்திரி நம்பரில் ஒரு கால் வந்தது. ஆப்ரேட்டர் அவன் ரூமிற்கே கனெக்ட் செய்தார். யாரோ ஒரு லாயர் கொல்கத்தாவில் இருந்து அழைத்தார். சந்தீப்பின் சித்தி, தனது சொத்தையெல்லாம்

அவர் பெயரில் எழுதி வைத்துவிட்டு இறந்து விட்டதாக தகவல் சொன்னார்.

"யாரு.. சந்தோஷி மோஷியா? அவளுக்கு என்னைக் கண்டாலே பிடிக்காதே!" என்று பிரமித்துப் போய் கூறிக் கொண்டிருந்த சந்தீப் காமேஷின் கையை விடவில்லை.

"காமேஷ்! உன் கையை பிடிச்ச வேளை எனக்கு லக் அடிக்குது பார்! உன் கையை இனிமே விடவே மாட்டேன். என் சித்தி சந்தோஷி மோஷி கோடீஸ்வரி! அவ சொத்தையெல்லாம் என் பெயர்ல எழுதி வச்சுட்டாள்னா நான் கோடீஸ்வரன்! உன் கையைப் பிடிச்ச வேளை நான் கோடீஸ்வரன்! இனிமே நான் உன்னை விட மாட்டேன்!" என்று பரவசத்துடன் காமேஷின் கைகளை கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"அதுதானே உண்மை! தேனுவுக்கு நான் கொடுத்த முத்தம் இன்னும் தன் வேலையை செய்துக் கொண்டிருக்கிறது!" மனதிற்குள் நினைத்தான், காமேஷ்!

'இனிமேல் சுபாங்கியின் உருட்டல் மிரட்டல்களுக்கு நான் பயப்படத் தேவையில்லை..' மனதினுள் நினைத்துக் கொண்டான், சந்தீப்.

டாக்டர் நரேந்திரநாத் சந்தீப் படுத்திருந்த அறையினுள் வந்தார்.

"சந்தீப்! நான் உன்கிட்டே தனியா பேசணும்!" நரேன் கூறினார்.

"டாக்டர்! காமேஷ் என் தம்பி போல! அவன் இருக்கட்டுமே!" சந்தீப் சொல்ல, நரேன் தலையசைத்தார்.

"உன் பொண்டாட்டியே இருந்தாலும் வெளியில் போகணும்! நாம பேசற விஷயம் உன் காதுகளுக்கு மட்டுமே!" டாக்டர் நரேன் கண்டிப்புடன் கூறினார்.

"நான் அப்புறம் வரேன், சார்!" காமேஷ் நாசூக்காக நகர்ந்து வெளியேறினான்.

"சந்தீப்! பீ ப்ரேவ்! நான் சொல்லப் போற விஷயம் ரொம்ப வருத்தத்தை தரக்கூடியது! நீ தைரியமா இருக்கறதை தவிர வேற வழியில்லை."

நரேந்திரநாத் சந்தீப்பின் காதுகளில் தான் சொல்ல வந்த விஷயத்தைப் பாய்ச்சினார்.

சுபாங்கி, வீட்டுக்குள்ளே நுழைந்த டாக்டர் நரேந்திரநாத்தை கேள்வியுடன் பார்த்தாள்.

"அங்கிள்! சந்தீப் எப்படி இருக்கார்?"

"நல்லாவே முன்னேறிட்டான்! உன்னைப் பார்க்கணும்னு துடியா துடிக்கிறான்?" நரேன் எச்சரிக்கையுடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினார்.

கையில் ஏலக்காய் டீக்கோப்பைகளுடன் வந்த ஹம்ஸா, நரேனுக்கும், சுபாங்கிக்கும் கோப்பைகளை தந்துவிட்டு தானும் எடுத்துக் கொண்டாள்.

"நரேன்! அனேகமாக அடுத்த வாரம் சுபாங்கிக்கு ட்ரீட்மெண்ட் ஆரம்பிச்சுடுவேன். தகுந்த எக் டோனருக்காக காத்திருக்கேன்.." ஹம்ஸா சொல்ல, டீயை உறிஞ்சியபடி தலையாட்டினார், நரேன்.

"சுபாங்கி! அவந்திகா லண்டன் போறா! அதனால் நீ இங்கேயே தங்கிட்டு என்கிட்டே ட்ரீட்மெண்ட் செஞ்சுக்கறதுதான் பெட்டர். இந்த கிராமத்துல தங்கறதுல உனக்கு பிரச்னை ஒண்ணுமில்லையே.." ஹம்ஸா கேட்டாள்.

"ஒரு ஆக்ஷேபணையும் இல்லை! ஆன்ட்டி! நான் ஒரு அம்மா ஆகணும். அவ்வளவுதான் என் தேவை!" சுபாங்கி கூறினாள்.

நரேன், சுபாங்கியை புன்னகையுடன் பார்த்தார்.

"சுபாங்கி! விஷயம் தெரியுமா? சந்தீப்போட சித்தி யாரோ.. அவன் பெயர்ல கோடிக்கணக்கான சொத்துக்களை எழுதி வச்சுட்டு இறந்துட்டாளாம்! லாயர் ஒருத்தர் மெட்ரோ ஹாஸ்பிட்டலுக்கு போன் பண்ணினாராம்!" நரேன் சொல்ல, சுபாங்கி யோசித்தாள்.

"சித்தியா? சந்தோஷின்னு ஒரு சித்தி இருந்தா சந்தீப்புக்கு! எங்க கல்யாணத்துக்கு கூட வந்திருந்தா! அவதான் அந்த சித்தினா.. இந்த ந்யூஸ் ஃப்ராடா இருக்கும்! தன் மேல எனக்கு பிடிப்பு உண்டாகணும்னு, சந்தீப்பே ஆளை வச்சு ஃபோன் பண்ணியிருப்பான்! அந்த சந்தோஷி சித்தி ஒரு மென்டல் கேஸ்..!" சுபாங்கி கூற, நரேனால் சிரிப்பை கட்டுப்படுத்த இயலவில்லை.

"சந்தீப்பை நல்லா அளந்து வச்சிருக்கே, சுபாங்கி!" என்றபடி எழுந்த நரேன் தன் அறையை நோக்கி நடந்தார்.

# அத்தியாயம் 35

**கா**மேஷ் வீட்டுக்குள் நுழைந்தபோது அவளால் அங்கு நிலவிய இறுக்கமான சூழ்நிலையை உணர முடிந்தது. தாய் மற்றும் அக்காவின் முகத்தில் கலவரத்தை கண்டதும், என்னவோ நடந்துள்ள என்பதை புரிந்துக் கொண்டான். யோசனையுடன் அமர்ந்திருந்த அப்பா சிவநேசனையும் பார்க்க தவறவில்லை!

"என்ன நடந்தது!"

சிவநேசன்தான் முணுமுணுத்தார்.

"பெரிய வீட்டுல இருந்து தேனுகாவுக்கு உன்னை சம்பந்தம் பேச வந்திருந்தாங்கடா! அந்தப் பொண்ணு உன் மேல ஆசைப்படறாளாம்! உன்னை அழைச்சுகிட்டு நாளைக்கு பெரிய வீட்டுக்கு வரச் சொல்றாங்க.."

கலவரப்பட்டு போனான், காமேஷ்.

"என்னம்மா இது நீங்க என்ன சொன்னீங்க?"

"தட்டை நீட்டிகிட்டு மாத்திக்கலாம் வான்னு சொல்லும் போது நாம் என்ன செய்ய முடியும்! தட்டை வாங்கிக்கிட்டேன்." குலதனம் சொன்னாள்.

"அம்மா! இதுல ஏதோ சதி இருக்கு! பெரிய வீட்டு மனுஷங்களாவது நம்ம கிட்டே தட்டு மாத்தறதாவது! நான் நம்ப மாட்டேன்!"

"இல்லேடா! தங்கை வாழ்க்கையை பத்திக் கவலைப்பட்டு, ரேணுகா வாழ்க்கை மாதிரி தேனுகா வாழ்க்கை அமையகூடாதுன்னு சொல்லி, பெரிய பாண்டி கரிசனத்தோட பேசினாருப்பா!"

காமேஷ் தன் செவிகளையே நம்பாமல் தாயைப் பார்த்தான்.

"நம்பாதேடா காமேஷ்! அவங்க நடவடிக்கை சந்தேகமாதான் இருந்தது. அப்பா அவங்களை சம்மந்தின்னு கூப்பிட்டதும், 'சம்மந்தியாம்ல'ன்னு அவங்க அண்ணன் தம்பிகள் நாலு பேரும் நக்கல் செஞ்சாங்க.! அவுங்க வீட்டுக்கு போகாதே! அப்புறம் உன்னை ஏதாவது செஞ்சுடப் போறாங்க!" அருந்ததியின் குரலில் பயம் பீறிட்டது.

"எந்த வேளையில் நான் முத்தம் கொடுத்தேனோ, இவ்வளவு பிரச்னையாயிடுச்சே!" காமேஷ் ஆயாசத்துடன் தரையில் அமர்ந்து சுவற்றில் சாய்ந்தான்.

"என்னடா சொல்றே! அவங்க கூட அடிக்கடி முத்தம்.. அப்படி.. இப்படின்னு ஏதோ சொல்லிக்கிட்டு இருந்தாங்க! என்னடா செஞ்சே?" குலதனம் கலவரப்பட்டாள்.

"அம்மா! அர்ஜுன் கல்யாணத்துக்கு போனோம்ல! குமாரகோம் ரிஸார்ட்டுல கல்யாணமான பார்ட்டி ஒரு நாள் ஸ்டேக்கு அரேஞ்ச் செஞ்சிருந்தாங்க! நான் அர்ஜுன் நண்பனா போயிருந்தேன்! தேனுகாவும் மணப்பொண்ணு தோழியா வந்திருந்தா. நாங்க எல்லோரும் ராத்திரி கட்டளைச் சீட்டு விளையாடினோம். கண்ணாடி ஸீஸால கட்டளைகளை எழுதின சீட்டு இருக்கும். ஆளுக்கொரு சீட்டு எடுத்து அதுல சொன்னபடி நடக்கணும்!"

"'யாராவது ஒரு பொண்ணுக்கு முத்தம் கொடு'ன்னு எனக்கு சீட்டு வந்தது! நான் தேனுகாவுக்கு முத்தம் கொடுத்தேன்!"

"அடப்பாவி!" குலதனம் அலறினாள்.

"நான் முத்தம் கொடுத்தப்ப மணி ராத்திரி பத்தரை. அந்த சமயம்தான் நம்ம வீட்டுல மஞ்சள் குங்குமம் சிதறியிருக்கு! காமதேனு படத்துல இருந்த பூமாலை கழண்டு அருந்ததி மேல விழுந்தது. கௌரி ஜுவல்லரி பரிசும் அதனாலதான் கிடைச்சது. வீட்டுக்கார ஐயரும் வீட்டை உங்களுக்கு தரேன்னு ஃபோன்

செஞ்சாரு! உமையாள் அம்மாவும் அருந்ததியை பெண் கேட்டு வந்தாங்க..!"

"நான் தேனுகாவுக்கு கொடுத்த முத்தம் அவளோட மஹிமைகளை நம்ம குடும்பத்துக்கு கொடுத்துடுச்சு! அவங்க வீட்டுல அதே சமயம் காமதேனு ஃபோட்டோ உடைஞ்சு, எல்லாம் அபசகுனமா நடக்குது! இதுதான் விஷயம்!" காமேஷ் சொன்னான்.

"அப்ப எதுக்குடா அவங்க உன்னை மாப்பிள்ளை கேட்டு வந்தாங்க!"

"யோசிச்சு பார்த்தா காரணம் தெரியும்!"

"திரும்பி நான் அவளுக்கு முத்தத்தைத் திருப்பிக் கொடுத்துட்டேன்னா, அவளுக்கு பழைய மஹிமைகள் திரும்பிடும். காமதேனுவோட அம்சமா தொடர்ந்து அந்த குடும்பத்துக்கு நல்லது செய்வா இல்லே.." காமேஷ் மனம் கசிய பேசினான்.

அங்கே பூரண அமைதி நிலவியது.

"இப்ப சொல்லுங்க.. என்ன செய்யலாம்?"

சிவநேசன் தன் மகனை ஆறுதலுடன் பார்த்தார்.

"காமேஷா! நிலைமை இவ்வளவு தூரத்துக்கு போனப்புறம் நாம இந்த ஊருலே இருக்க வேண்டாம். நம்ம குடும்பத்துக்கு என்னவோ சௌபாக்கியங்கள் ஏற்பட்டுக்கிட்டு வருது! பேசாம நாம நாலு பேரும் சென்னைக்கு கிளம்பிடலாம்!" சிவநேசன் கூறினார்.

"அப்ப தேனுகாவோட கதி!"

"அவ எப்படியாவது போகட்டும்! ரேணுகா, தேனுகான்னு அந்த குடும்பத்து பெண்கள் தலைவிதி இப்படிதான் முடியும்னு இருந்தா நாம என்ன பண்ண முடியும்?" சிவநேசனின் பக்தி முகத்தை தாண்டி அவருடைய பேராசை தெரிந்தது.

"அப்பா! பெரிய வீட்டு விஸ்வாஸம் என்ன ஆவுது? 40 வருஷமா அந்த வீட்டுல வேலை பார்த்திருக்கே! வீட்டுக்கார ஐயரோட முன் வீட்டு போர்ஷன் சாவியை கொடு! அங்கே படுத்துக்கறேன்னு சொன்னப்ப நம்பிக்கையை பத்தி பேசினே! இப்ப இப்படி சொல்றியே?" காமேஷ் பொங்கும் கோபத்தை அடக்கியபடிக் கேட்டான்.

"நான் செய்த பூஜைக்கு கடவுள் கொடுத்த வரம்தான்டா, குமாரகோம்ல நடந்த சம்பவம்! உனக்கு மஹிமைகள் வர்றணும்னு இருக்கிறப்ப அது வந்து தீரும்! பேசாம நாம சென்னைக்கு போயிடலாம் வா!"

"நான் அந்த பொண்ணுக்கு திருப்பி அவளோட யோகங்களை கொடுக்கலாம்னு இருக்கேன்!" காமேஷ் சொன்னதும் சிவநேசன் அதிர்ந்தார்.

"முத்தம் கொடுக்கப் போறியா! வெட்டி பொலி போட்டுடுவான், பெரிய பாண்டி!"

"வேண்டாம் காமேஷ்! அப்பா சொல்றபடி நாம சென்னைக்கு போயிடலாம்! பெரிய வீட்டுல போய் மாட்டிக்காதே!"

அருந்ததிக்கு தன் கல்யாணம் நின்று விடப் போகிறதே என்கிற கவலை. அதை காமேஷால் உணர முடிந்தது.

அம்மாவைப் பார்த்தான்.

"நீ என்னம்மா சொல்றே!"

"முதல்ல உள்ளே வந்து காபி குடி!" என்றவாறு சமையலறைக்குள் புகுந்தாள். சற்று நேரத்திற்கெல்லாம், குலதனம் அவனிடம் வந்து காபி டம்ளரை நீட்டினாள்.

பளபளக்கும் டபரா தம்ளரில் கள்ளிச்சொட்டு காபியை அவனுக்கு தரவில்லை. நசுங்கி கருத்துப்போன பித்தளை டம்ளரில் கருப்பட்டி காப்பியை அவன் முன்பாக நீட்டினாள்.

அந்த கருப்பட்டி காப்பியை தந்ததன் மூலம் குலதனம் தன் மனதிலிருப்பதை காமேஷுக்கு உணர்த்தி அவிட்டாள். நெகிழ்ச்சியுடன் தாயைப் பார்த்த காமேஷ், அந்த காபியை வாங்கி பருக ஆரம்பித்தான்.

முதல் முறையாக கருப்பட்டி காபியை ரசித்துக் குடித்தான்.

இரவு மணி 12 ஆகி விட்டது. பகலிலேயே அமைதி தவழும் கோவூரில் இரவில் ஏது நடமாட்டம்! இருள் தனது முழு ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருந்தது. கோவூர் கோயில் ராஜகோபுரத்தின் உச்சியில் அழுது வடிந்து கொண்டிருந்த அந்த பல்ப் ஒளியை தவிர வேறு வெளிச்சமில்லை. தெருவிளக்குகள் என்று ஆங்காங்கே ஒளிர்ந்துக் கொண்டிருந்த குண்டு பல்ப் விளக்குகளால், அந்த இருளை எதிர்க்க முடியவில்லை .

படுக்கையில் புரண்டுக் கொண்டிருந்த காமேஷ் மெதுவாக எழுந்தான், குலதனமும், அருந்ததியும் சமையலறை வாயிலில் தங்களை குறுக்கிக்கொண்டு படுத்திருக்க, மற்றொரு மூலையில் சிவநேசன் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார்.

படுக்கையிலிருந்து எழுந்த காமேஷ், கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான். முந்தைய இரவே கொடியில் தயாராக தொங்க வைத்திருந்த ஜீன்ஸை அணிந்து கொண்டவன், வேஷ்டியை கொடியில் போட்டு விட்டு, கேட்டைத் திறந்து கொண்டு நடந்தான்.

அவன் கால்கள் பெரிய வீட்டை நோக்கி நடந்தன. என்ன செய்ய வேண்டும் என்பதை முந்தைய இரவே தீர்மானித்து விட்டான்.

முதன் முதலாக சாரட் வண்டியில் செல்லும் தேனுகாவை கண்ட போதே அவள் இவனுடைய மனதில் வியாபித்துவி ட்டாள். பெரிய வீட்டுப் பெண் நமக்கு எங்கே கிடைக்கப் போகிறாள் என்று எண்ணி தன் காதலை வேரோடு பிடுங்கியிருந்தான். ஆனால் தியேட்டரில் தேனுகாவை சந்தித்தபோது மீண்டும் துளிர் விட்டது காதல்! அவளும் தன் பங்குக்கு இவனையே வெறித்துப் பார்த்து சங்கேத மொழியை கண்களால் பேச, இவனுக்கு சிறிது நம்பிக்கை வந்திருந்தது. அந்த நம்பிக்கையில்தான் தேனுகாவை குமாரகோம்மில் முத்தமிட்டு இருந்தான். காதலுடன்தான் அவளை அணுகினான். ஆனால் அவளது சௌபாக்கியங்களை தான் களவாடுவோம் என்று அவன் நினைத்துகூடப் பார்க்கவில்லை.

தேனுகாவை முத்தமிட்டதால் இவனுக்கு வளம் பெருகி, அதன் மூலம் இவன் சாம்ராஜ்யத்தை அமைத்தால், அதில் இவனுக்கு என்ன பெருமை? இவனது ஆண்மைக்கே அது இழுக்காயிற்றே!

தனது சௌபாக்கியங்களை எல்லாம் இவனுக்கு வாரி கொடுத்துவிட்டு, தனது அத்தையின் வழியில் தேனுகா செல்வதற்கு ஒரு போதும் தான் காரணமாக இருக்கக் கூடாது.

உன் வீட்டிலேயே பேராசைக்காரர்களும், சுயநலக் காரர்களும் இருக்கும்போது, பெரிய வீட்டு சகோதரர்களை குற்றம் சொல்லி என்ன ஆகப்போகிறது. இரவோடு இரவாக பெரிய வீட்டுக்குச் சென்று, தேனுகாவிடம் பெற்றுக் கொண்டதை அவளிடம் திருப்பி தந்துவிடப் போகிறான். அவளது சௌபாக்கியங்களுடன் அவள் என்றும் கோவூரில் போற்றப்படட்டும்! அவளுக்கு கல்யாணம் நடந்தால் நடக்கட்டும்! நடக்கவில்லையென்றால் போகட்டும்! சந்தீப் சார் இவனை சென்னைக்கு அழைத்துக் கொண்டு போக தயாராக இருக்கிறார்! அவருடன் சென்னைக்கு போய் ஏதாவது வேலையைத் தேடிக்கொண்டு குடும்பத்தையும் அழைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

தொலைவில் பெரிய வீடு தெரிய, காமேஷ் தனது நடையின் வேகத்தை அதிகரித்தான். மெயின் கேட்டை நாடி செல்லாமல் வீட்டின் பக்கமாக இருந்த வயல் வெளியின் வரப்பில் நடந்துச் சென்றான் காமேஷ்.

பெரிய வீட்டின் மதிற்சுவரே, கோட்டையின் மதில் போன்று உயரமாக இருந்தது. வீட்டைச் சுற்றி மூன்று புறம் வயல்வெளிகளே இருந்ததால், காமேஷால் எளிதாக பின்புற சுவரை அடைய முடிந்தது. பெரிய வீட்டின் அடுக்கு மாடி குடியிருப்பு பின்புறமாக இருந்ததால், தேனுகா இருந்த மூன்றாம் மாடியை அண்ணாந்து பார்த்தான், காமேஷ்,

அவ்வப்போது பெரிய வீட்டைப் பற்றி அப்பா சிவநேசன் கூறிய தகவல்களை இப்போது காமேஷுக்கு உதவின.

மூன்றாம் மாடியில் துணிகளை உலர்த்துவதற்காக ஒரு திறந்தவெளி உண்டு, அதன் வழியே சென்றால் சாப்பாட்டு அறை வரும். சாப்பாட்டு அறை கடந்ததும், வலது புறம் வரும் முதல் அறை தேனுகாவுடையது என்பதை அறிந்திருந்தான்.

சுற்றுமுற்றும் பார்த்தவன், ஓங்கி உயர்ந்திருந்தது. அந்த தென்னைமரத்தைப் பார்த்தான். மூன்றாம் மாடியை கடந்து மொட்டை மாடியையே எட்டியிருந்தது அந்த தென்னைமரம்.

# காமதேனுவின் முத்தம்!

கிராமத்து கட்டிளங்காளைக்கு மரம் ஏறுவதா பெரிய விஷயம்! விறுவிறுவென்று அந்த தென்னை மரத்தைப் பற்றிக் கொண்டு ஏறியவன், மூன்றாம் மாடியின் அந்த திறந்த வெளி அருகே வந்ததும், மரத்தில் இருந்து 'சன் ஷேடி'ல் தாவினான். பிறகு சுவற்றின் விளிம்பைப் பிடித்துக் கொண்டு அந்த திறந்தவெளி பகுதிக்கு தாவி குதித்தான்.

அங்கிருந்த கதவு மூடியிருந்தைக் கண்டு கவலைப் பட்டான். கதவை நோக்கி நடந்தவன் அதைத் தள்ள அது உடனே திறந்து கொண்டது. பெரிய வீட்டின் மூன்றாவது மாடிக்கு எந்தத் திருடன் வரக்கூடும் என்கிற அலக்ஷியம் காரணமாக இருக்கலாம்.

சாப்பாட்டு அறையைக் கடந்து ஹாலில் நுழைந்த காமேஷின் இதயம் படபடத்தது. அப்போது, கடிகாரம் பன்னிரண்டரை என்பதை குறிக்க, ஒரு முறை 'டாண்' என்று அடித்துவிட்டு அமைதியானது,

ஹாலின் வலப்புறம் இருந்த முதல் அறையில் நுழைந்தான், மெதுவாக கதவைத் திறந்துக் கொண்டு தன் பின்னால் சாற்றியவன், மங்கிய ஒளியில் கட்டிலில் படுத்திருக்கும் தேனுகாவை கண்டான்.

பேரழகு பெட்டகம் அமைதியாக துயில் செய்து கொண்டிருக்க, ஒருமுறை அவள் தூங்கும் அழகை ரசித்துப் பார்த்தான்,

'தேனுகா! என்னை தப்பாக நினைக்காதே.. உன் மேல இருக்கிற முழு காதலுலதான் நான் உனக்கு முத்தமிட்டேன், ஆனா இப்ப அதுக்காக வருத்தப் படறேன். உன்னை மாதிரி தேவதைகளுக்கெல்லாம் என்னை மாதிரி சாதாரண ஆளுங்க ஜோடியாக அமையக் கூடாது! வைரத்தை தங்கத்துல வச்சு நகையா போட்டுக்கணும்! என்னோட லெதர் பெல்ட்லயா பதிக்க முடியும், தேனுகா! நீ உன் வழியே போ! நான் என் வழியே போறேன்! உன்னை நான் சந்திக்கவேயில்லைன்னு நினைச்சுக்கறேன்! நீயும் அப்படியே நினைச்சுக்கோ!' என்று மனதிற்குள் கூறியவன் குனிந்து அவளது இதழ்களை நோக்கி நகர்ந்தான். குமாரகோமில் தான் அவளிடமிருந்து பெற்ற சௌபாக்கியங்களை மீண்டும் அவளிடமே கொடுத்து விட்டான் காமேஷ்!

அவன் பதித்த முத்திரையால் சற்றே தூக்கம் கலைய, தேனுகா முனகலுடன் புரண்டு படுத்தாள்.

காமேஷ் மெதுவாக அறையை விட்டு வெளியே மீண்டும் திறந்த வெளிக்கதவை சாற்றிக் சன்ஷேடில் மீண்டும் குதித்தான்.

அங்கிருந்த தென்னை மரத்தை பற்றிக் கொள்ள் தாவியபோது, பிடி கிடைக்காமல் தலைகுப்புற நோக்கி பாய்ந்தான். நல்ல காலம்! வேப்ப மரத்துக் கிளை ஒன்றை அவன் பிடிக்க, அந்த கிளை அவனது பாரம் தாங்காமல் முறிய, மெதுவாக நிலத்தில் வந்து விழுந்தான். காலில் நல்ல அடி! முதுகிலும், கைகளிலும் சிராய்ப்புகள்,

மிகவும் சிரமப்பட்டு எழுந்து நடந்தவன் விந்தியபடி வீட்டைப் நோக்கி நடந்தான். தேனுகாவை சந்திக்க சென்றபோது எளிதாக அவளை அடைந்தவன் திரும்பி வரும்போது விழுந்து அடிபட்டுக் கொள்வானேன்! ஒருவேளை, போகும்போது இருந்த காமதேனுவின் ஆசி வரும்போது இல்லாததால் இந்த நிலையோ?

வீட்டை அடைந்தவன், காலில் வடிந்த இரத்தத்தை கழுவிக்கொண்டு, ஜீன்சை அவிழ்த்து விட்டு மீண்டும் வேட்ஷ்டிக்கு மாறினான்.

"போன காரியம் ஆச்சாப்பா?" வாசலில் அம்மிக் குழவியின் மேல் உட்கார்ந்திருந்த குலதனத்தின் குரல் அவனை மிரளச் செய்தது,

சோகத்துடன் தாயின் மடியில் தலையை புதைத்தபடி, அப்படியே அமர்ந்துவிட்டான்.

அவனது முடியில் கைவிரல்களால் அளைந்தபடி குலதனம் அவனுக்கு ஆறுதல் சொன்னாள்.

"வருத்தப்படாதேடா காமேஷ்! என் தோழி ரேணுகாவை விரட்டி விரட்டி ஒருத்தன் காதலிச்சு, அவளை காப்பாத்த வேண்டிய சமயத்துல காப்பாத்தாம போயிட்டான். அதனாலே ரேணுகா தன் உயிரையே இழந்துட்டா! தேனுகாவுக்கு அப்படியில்லை! நீ பிரச்னை உண்டாகப் போறதுன்னு தெரிஞ்ச உடனேயே அவளைக் காப்பாத்திட்டே! அவ கொடுக்கிற சௌபாக்கியத்துல நாம வாழ்ந்தா நாம பிச்சைக்காரங்க! நீ கொடுத்த வாழ்க்கையில பெரிய வீடு இனிமே வாழப்போவுது! நீ போட்ட பிச்சையில அவங்க சௌபாக்கியமா வாழறாங்கன்னு மனசை தைரியப்படுத்திக்கோ, காமேஷ்!" குலதனம் கூற, காமேஷ் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"அம்மா! நான் சென்னைக்கு போய் நல்லா சம்பாதிச்சு உன்னையும் அப்பாவையும் காப்பாத்தறேன். அருந்ததிக்கும் கல்யாணம் செய்யறேன்! நீ தைரியமா இரும்மா! நாளை காலை நம்ம குடும்பம் நிறைய ஏமாற்றங்களை சந்திக்க இருக்கும்! நீ மனசை தளர விடாதே!" என்றபடி உள்ளே நுழைந்தவன் படுக்கையில் விழுந்தான்.

குலதனம் கண்களில் நீர் பெருக இருளையே வெறித்துப் கொண்டிருந்தான்.

"சிவநேசன், அமெரிக்காவுலேர்ந்து ஃபோன்." எதிர் வீட்டு கிட்டா ஐயர் அழைத்தார்.

காமேஷ் குலதனத்தை ஜாடையாக பார்த்து தலையசைத்தான்.

ஏமாற்றம் ஒன்று.

வரும்போது சிவநேசன் முகத்தை தொங்க போட்டுக் கொண்டு வந்தார்.

"வீட்டை விற்க வேண்டாம்னு வீட்டுக்கார ஐயரோட பையன் சொல்றானாம்! நீங்க சீக்கிரம் காலி செஞ்சுடுங்க! எங்க உறவுக்காரங்களே அங்கே வரப் போறாங்க.."ன்னு ஐயர் சொல்லிட்டார்.

சிவநேசன் புலம்பியபடி வந்தார்! எவ்வளவு காலம் வேண்டுமென்றாலும் அந்த வீட்டில் இருந்து கொள்ளுங்கள் என்று சொன்ன ஐயர் இப்போது காலி செய்ய சொல்லுகிறார்.

"உள்ளதும் போய்விட்டது!" காமேஷுக்கு சிரிப்புதான் வந்தது.

"மேடம்!"

"யாரு?" அருந்ததி வாசற்புறம் சென்றாள்.

"ஒரு சின்னத் தப்பு நடந்து போச்சுங்க! 2312 என்கிற நம்பர் சீட்டுக்குத்தான் பரிசு விழுந்தது. 2332 ன்னு தவறுதலா அறிவிச்சுட்டோம்! ஒரு கிலோ தங்கம் பரிசு உங்களுக்கில்லை!" என்று அடுத்த ஏமாற்றத்தை அளித்தான் கௌரி ஜுவல்லரி மானேஜர்.

அடுத்த ஏமாற்றம் வரைக்கும் காத்திருக்க பிரியப்படவில்லை குலதனம்.

"காமேஷ்! நான் உமையாள் அம்மாவை பார்த்துட்டு வரேன்!" என்று கிளம்பினாள்.

"நானும் வரேன்!" என்றபடி அவளுடன் சென்றான், காமேஷ்,

உமையாளும், கமலநாதனும் இருவரையும் வரவேற்க, செந்தில் வெளியே எட்டிப்பார்த்தான்.

"அம்மா! பெரிய வீட்டுக்காரங்களோட மதிப்புல நாங்க இறங்கிட்டோம்! இனிமே அவங்களோட எங்களுக்கு சங்காத்தம் கிடையாது! என் அப்பாவுக்கும் வேலை போயிடுச்சு! அதனால உங்க மகன் செந்திலுக்கு என் அக்காவை கல்யாணம் பண்ணி தர்றது கஷ்டம்! எங்ககிட்டே

பணம் கிடையாது. நான் சென்னைக்கு போய் ஏதாவது சம்பாதிச்சாதான் உண்டு! நீங்க உங்க மகனுக்கு வேற இடம் பார்த்துக்கோங்கோ!" என்றான் காமேஷ்,

"என்ன மச்சான், இப்படி சொல்லிட்டே! உன்னை மச்சானா அடைய நான் எவ்வளவு பாக்கியம் செஞ்சிருக்கணும்! என் அம்மா பார்க்க கோபக்காரி மாதிரி இருப்பா! ஆனா மனசு பத்தரை மாத்து தங்கம்! என்னம்மா சொல்றே!" செந்தில் உமையாளுக்கு ஐஸ் வைத்தான்.

"ஏன் குலதனம்! எதிர் வீட்டுலயே இருக்கேன். நீயும், உன் பெண்ணும் எப்படிப்பட்டவன்னு எனக்கு தெரியாது.. பணத்துக்காக நல்ல மனுஷங்களை இழக்கறதுக்கு நான் ஒண்ணும் பைத்தியக்காரி இல்லை."

"இதோ பாரு தம்பி காமேஷு! நாங்க அருந்ததிக்கு எவ்வளவு நாள் வேணும்னாலும் காத்திருக்கோம். நீ பட்டணத்துக் போய் வேலையைத் தேடு!" என்றபடி அவர்களை வழியனுப்ப வந்தாள்.

காமேஷின் வீட்டு வாசலில் பேப்பர் ஐயர் நின்றிருந்தார்.

"என்ன மாமா? ஏதாவது வேலையா?" காமேஷ் கேட்டான்.

"ஏண்டா! என்னை வேத்து மனுஷன் ஆக்கிட்டே இல்லை? எல்லா விஷயமும் எனக்குத் தெரியும். நான் ஒருத்தன் உனக்கு இருக்கேன்னு ஏன் நினைச்சு பாக்கலை? நீ மெட்ராஸ்ல போய் சம்பாதிக்கிற வரைக்கும் அருந்ததி காத்திருக்க வேண்டாம். அடுத்த மாசமே முகூர்த்தம் குறிச்சுடுங்கோ! நிலம் வித்த காசு பத்து லக்ஷம் இருக்கு! அது போதுமா?" என்று சொல்ல அது வரைக்கும் தைரியமாக இருந்த காமேஷ் கண்கலங்கத் துவங்கினான்.

# அத்தியாயம் 36

"**கா**மேஷ்! நீ செய்த உதவிக்கெல்லாம் என்னால இப்ப கைம்மாறு செய்ய முடியாது. ஆனா, காலமும் நேரமும் வரச்சே நிச்சயம் உனக்கு என் நன்றி கடனை செலுத்துவேன்!"

கண்ணீர் வழிய காமேஷின் கையை பற்றிக் கொண்டு குலுக்கினான் சந்தீப்.

"சார்! நீங்க சந்தோஷமா இருக்கணும்! ஆனா விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம் சார்!"

"தெரியாது காமேஷ்! கவலைப்படாதே! நான் சென்னைக்கு கிளம்பறப்ப நீயும் என்னோட வர்றே இல்லை!" சந்தீப் கேட்டான்.

"இனிமே உங்களை விட்டா எனக்கு வேறு யாரு சார்! நான் சென்னைக்கு வந்து உங்களை பார்த்துக்கறேன்! நீங்க நல்லபடியா திரும்பி கிரிக்கெட் விளையாடுவீங்க சார்!" காமேஷ் சொல்ல உருகிப் போனான், சந்தீப்.

டாக்டர் நரேன் உற்சாகத்துடன் வந்தார்.

"வெல்டன் மை பாய் எல்லாம் நல்லபடியா போகுது! இன்னும் ஒரு வாரத்துல நீ டிஸ்சார்ஜ் ஆகி, அப்புறம் புதிய வாழ்க்கையை தொடங்கு.." நரேன் சொன்னார்.

"தாங்க்யூ டாக்டர்!"

"கொஞ்ச நாளைக்கு ஸ்டிக்கோட நடக்க வேண்டியிருக்கும்! அப்புறம் நார்மலா நடக்கலாம்!" நரேன் சொன்னார்.

"ஸ்டிக் தேவையில்லை டாக்டர்! என்னோட வாக்கிங் ஸ்டிக் இதோ!" சந்தீப் காமேஷை சுட்டிக் காட்டினான்.

# அத்தியாயம் 37

இசக்கி பாண்டியன் தனது இரண்டாவது மாடியிலிருந்து படிகளில் ஓடோடி இறங்கி வந்தான். நேராக பெரிய பாண்டியின் காலில் விழுந்தான்.

"அண்ணே!" பரபரப்பில் அவனால் பேச இயலவில்லை.

"என்னடா தம்பி விஷயம்?" பெரிய பாண்டி அயர்ந்து போனார்.

"பொதுத்தேர்தலில் நம்ம தொகுதி வேட்பாளரா என்னை அறிவிச்சிருக்கு கட்சி!" இசக்கி சொன்னான்.

"பலே!" பெரிய பாண்டி மகிழ்ந்தார்.

"கற்பகம் அண்ணி, பெரியண்ணி" என்று இரண்டாவது மாடியிலிருந்து குரல் கொடுத்தாள் கலாவதி.

"என்ன.. கலாவதி! மாடி படியாண்ட வந்து நிக்கிறவ! நேத்து வரைக்கும் காலை அசைக்க முடியலைன்னு சொன்னே!" வியப்படைந்தாள், அண்ணி.

"இன்னைக்கு காலைலேர்ந்து நல்லா இருக்குது! காலை அசைக்க முடியுது! நடக்க முடியுது." என்றாள் கலாவதி.

"அண்ணே! தேனுகா கொடுத்த திருநீறு சந்தன வாடை அடிக்குதுண்ணே!" என்றபடி குணசேகரன் வந்தான்.

"எப்படிடா சாத்தியம்?" அனைவரும் அவர் கையிலிருந்த திருநீற்றை முகர்ந்து பார்க்க, அதில் சந்தன வாசம் வீசின.

"ஆக.. தேனுகாவுக்கு திரும்ப மஹிமை கிடைச்சுருச்சு! இனிமேலாவது புத்தியோட நடந்துக்க சொல்லு உன் பொண்ணை!" பெரிய பாண்டி சொன்னார்.

தமயந்தி தன் மகளை அதட்டிக் கேட்டாள்.

"என்னடி நடந்தது?"

"தெரியலம்மா! நான் நல்லா தூங்கிட்டேன்" தேனுகா குழப்பத்துடன் அவளைப் பார்த்தாள்.

"காமேஷ் வந்தானா?" தமயந்தி கேட்டாள்.

"தெரியலையேம்மா!"

"அப்படி என்னடி தூக்கம், நடக்கிறது தெரியாம? உன்னோட பவர் எல்லாம் உன்னை விட்டு போயிடுச்சு! இனிமே இந்த குடும்பத்து மனுஷங்க உன்னை தொந்திரவு செய்ய மாட்டாங்கன்னு நிம்மதியா இருந்தேன். இப்ப திரும்பி பவரை வரவழைச்சுட்டு நிக்கறியே! அண்ணிகளோட ஆட்டம் இன்னும் அதிகமாகிடுமே! நான் என்ன பண்ணுவேன்!" என்று

கூறியபடி திறந்த வெளி பால்கனியில் போய் நின்றாள். காமேஷ் வந்திருந்தால் இந்த வழியாகத்தான் வந்திருக்கக்கூடும்.

அப்போதுதான் -

சுவர் ஓரம் கிடந்த அந்த மணிபர்ஸை பார்த்தாள். கையிலெடுத்துப் பிரித்தாள் புகைப்படத்தில் காமேஷ் இவளைப் பார்த்துச் சிரித்தான். சுவர் ஏறி குதிக்கும் போது பர்ஸ் விழுந்துவிட்டிருக்க வேண்டும்.

அவசரமாக தனது மொபைலை எடுத்து யாருக்கோ ஃபோன் செய்தாள். நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தவள், மொபைலை கட் செய்து விட்டு தேனுகாவை தேடிச் சென்றாள். தேனுகாவுடன் பேசிக் கொண்டே படியிறங்கியவளை கீழ்ப்படியில் வரும்போது திடீரென நெஞ்சைப் பிடித்து கதறினாள்.

"ஐயோ.. நெஞ்சு வலிக்குதே!" என்று மாடிப்படியில் அப்படியே சரிந்து உட்கார, தேனுகாவும், குணசேகரனும் பதறி விட்டனர்.

"உடனே என்னை மெட்ரோ ஆஸ்பத்திரிக்கு அழைச்சுட்டு போங்க! இப்படியே வலிச்சுகிட்டு இருந்ததுனா நான் தாங்க மாட்டேன்.." வலியால் துடித்தபடி தமயந்தி கூற, அவளை

இன்னோவாவில் ஏற்றிக்கொண்டு தந்தையும், மகளும் மெட்ரோ ஹாஸ்பிட்டலுக்கு விரைந்தார்கள்.

"எலே தேனப்பா, காண்டீபா பாப்பா ஆஸ்பத்திரியில தங்குமோ என்னவோ! கண்கொத்தி பாம்பா கவனிங்க!" என்று பெரிய பாண்டி உத்தரவிட, ஒரு மோட்டார் சைக்கிளில் அவர்கள் மெட்ரோ ஆஸ்பிட்டலை நோக்கி வந்தனர்.

தமயந்தி மெட்ரோ ஆஸ்பட்டலின் ஐ.சி.யூ. அனுமதிக்கப்பட்டாள்.

குணசேகர பாண்டி. சுந்தரேசனிடம் பேசிக் கொண்டிருக்க, மருந்துகள் வாங்குவதற்காக ஃபார்மஸிக்கு செல்ல வேண்டி லிஃப்டுக்காக காத்திருந்தாள், தேனுகா.

லிஃப்ட் வந்ததும் உள்ளே நுழைந்தவள் திகைத்தாள். இரண்டு மூன்று நபர்களுடன் காமேஷும் நின்றிருந்தான். ஆனால் இவளைக் கண்டுக் கொள்ளவில்லை. அவனை நோக்கி முறுவலித்தும், அவன் இவளை லக்ஷியம் செய்யவில்லை! அதற்கு மேல் தேனுகாவால் அவனது அலக்ஷியத்தைத் தாங்க முடியவில்லை!

"அம்மா ஐ.சி.யூ.வுல இருக்காங்கன்னு நான் கலங்கிட்டு இருக்கேன்! ஆறுதலா ஒரு வார்த்தை கூட பேச மாட்டேங்கறியே காமேஷ்!"

லிஃப்டில் இன்னும் இருவர் இருப்பதைக் கூட லக்ஷியம் செய்யாமல், நேரிடையாகவே அவனிடம் கேட்டாள், தேனுகா.

"சௌபாக்கியங்கள் எல்லாம் திரும்பி வந்தாச்சு இல்லே! இன்னும் என்னவாம்!" பொதுவாக முணு முணுத்தபடி அடுத்த மாடியில் நின்ற லிஃப்டில் இருந்து இறங்கிப் போனான் காமேஷ்.

தேனுகா திகைத்துப்போய் நின்றிருந்தாள்.

# அத்தியாயம் 38

**தே**னப்பன் தனது ஸ்கூட்டியில் பெரிய வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். குமாரக்கோம் நிகழ்ச்சிக்கு பிறகு காண்டீபனுக்குத் தரப்பட்ட முக்கியத்துவம் குறைக்கப்பட்டு, இவனுக்கு மௌஸ் ஏறிவிட்டது. பாண்டி சகோதரர்கள் எல்லாவற்றிற்கும் இவனைத்தான் தேடினர். சிவநேசனை கணக்குப்பிள்ளை பொறுப்பிலிருந்து நீக்கியதும், பெரிய வீட்டார் அந்தப் பொறுப்புக்கு ஆள் தேட, தேனப்பன் தனது அண்ணனையே அந்தப் பதவிக்கு பரிந்துரைச் செய்தான். அவன் அண்ணன் மாதப்பனை பெரிய பாண்டிக்கும் அவன் சகோதரர்களுக்கும் உடனேயே பிடித்துப் போனது ஆக, தேனப்பனின் கொடிதான் பெரிய வீட்டில் பறந்து கொண்டிருந்தது. பாண்டி சகோதர்களின் அபிமானத்தைப் பெறுவதற்கு இன்னும் என்னவெல்லாம் செய்யலாம் என்கிற யோசனையோடு தேனப்பன் ஸ்கூட்டியை செலுத்திக் கொண்டிருந்த போது, முன்பாகச் சென்று கொண்டிருந்த அந்த 'ஸ்கார்ப்பியோ' அவனது கவனத்தை ஈர்த்தது. அதன் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் அவனது சிந்தையினுள் 'பல்ப்' ஒன்றை எரிய வைத்தது.

பெரிய வீட்டாரின் பரம வைரியும் அவர்களுடைய தாய்மாமனுமான காசிலிங்கத்தின் வண்டி அது. தேனுகா பிறந்தபோது தன் அக்கா பாஞ்சாலிக்கு சேர வேண்டிய நூறு ஏக்கர் மஞ்சக்காணி நிலங்களுக்கானப் பத்திரங்களை கிடாசிவிட்டு போனவர்தான் அதன்பிறகு கோவூர் பக்கமே வரவில்லை.

மாமன் மனமாற்றம் அடைந்து பத்திரங்களை ஒப்படைத்ததால், சந்தோஷமடைந்த பாண்டி சகோதரர்கள், தேனுகாவின் பெயர் வைக்கும் வைபவத்திற்கு அழைப்பு அனுப்பினர்.

"உடைந்த கண்ணாடி ஒட்டாது! நல்லா இருங்க!" என்கிற ஒரே வரியை பதிலாக அனுப்பியிருந்தார், காசிலிங்கம்.

"என்ன மனுஷன்! கூடப்பிறந்த அக்காவைப் பார்க்கணும்னு கூடவா ஆசை இருக்காது?" மாய்ந்து போயினர், பெரிய வீட்டு மருமகள்கள்.

அதற்கு பிறகு பதினெட்டு வருஷங்களாக கோவூர் பக்கமே தலைக் காட்டாத காசிலிங்கம் இப்போது கோவூர் சாலையில் எதற்கு போகிறார்?

ஒருவேளை, கடைசி மருமகள் தமயந்தி உடல் நிலை சரியில்லாமல் ஆஸ்பத்திரியில் இருப்பதையறிந்து மனம் மாறி பெரிய வீட்டுக்குச் சென்று குசலம் விசாரிக்கப் போகிறாரா?

மெயின் ரோடிலேயே பாலத்தினைக் கடந்து சென்று, இடது புறம் திரும்பினால் கோவூர் வந்துவிடும். நேராக சென்றால் கோவூர் கோவிலும், முதல் புறமாகத் திரும்பி வயல்வெளிகளைக் கடந்தால் பெரிய வீடும் வந்துவிடும். இதுவே எளிதான வழி.

ஆனால் பாலத்திற்கு முன்பாகவே இடது பறத்தில் ஒரு சாலை இறங்கும். இந்தச் சாலை ஆற்றோரமாகவே சென்று, ஒரு குறுகிய மரப்பாலத்தில் மடிந்து, காமேஷ்வரர் ஆலயத்தின் பின்புறமாக முடிந்து விடும். இந்த வழியில் ஆள் நடமாட்டமும் இருக்காது. சாலையும் குண்டுங்குழியுமாகவே இருக்கும்.

பாலத்தின் முன்பாக இடப்புறமாக சரியும் சாலையில் காசிலிங்கத்தின் கார் சரிய, குழம்பினான் தேனப்பன்.

பெரிய வீட்டுக்காரர்களுக்கு தன் வருகை தெரியக்கூடாது என்பதற்காக இந்தப் பாதையில் செல்கிறாரோ?

ஒரு வேளை கோவிலுக்குப் போகிறாரோ? யோசனை செய்தபடி தானும் ஸ்கூட்டியை ஸ்கார்ப்பியோ பின்பாகத் தொடர ஆரம்பித்தான்.

குண்டுங்குழியுமாக இருந்த சாலை ஸ்கார்ப்பியோவின் வேகத்தை மட்டுப்படுத்தி அதனை மேலுங்கீழுமாக உலுக்கியது. வண்டியை நெருங்கி விட்ட தேனப்பன் கண்களால் காரினுள் உற்று நோக்கினான்.

காசிலிங்கம் மட்டும்தான் பின்சீட்டில் உட்கார்ந்திருந்தார். டிரைவர்தான் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான்.

கார் மெதுவாக மரப்பாலத்தினைக் கடந்து மறுபுறம் சென்று ஒரு மரத்தின்கீழ் நின்றது. வண்டியிலிருந்து இறங்கிய காசிலிங்கம், தனது வேஷ்டி இறுக கட்டியபடி ஒத்தையடிப்பாதையில் நடக்க டிரைவர் பின்னாடி ஒரு பையைத் தூக்கிக் கொண்டு அவரைத் தொடர்ந்தான்.

கோவிலின் மதில் அருகே முடிவடைந்தது. அந்த ஒத்தையடிப்பாதை, பாதையின் முடிவில் வலப்புறம் திரும்பியவர் அங்கிருந்த முதல் வீட்டினுள் நுழைந்தான். அது பழைய ஹெட்மாஸ்டரின் வீடு.

டாக்டர் ஹம்ஸவர்த்தினியும், அவள் கணவன் வனமாலியும் தங்கியிருக்கும் அதே வீடு,

காசிலிங்கம் ஏன் டாக்டர்கள் வசிக்கும் வீட்டிற்கு போகிறார். வீட்டின் பின்புறமாக நகர்ந்த தேனப்பன், ஜன்னல் ஏதாவது தட்டுப்படுகிறதா என்று பார்க்க, அவன் உளவு பார்க்கத் தோதாக, ஒரு சிறிய ஜன்னல் ஒன்று அவனை என் அருகில் வா என்பது போல வரவேற்றது.

சுவரோரமாக ஒடுங்கிக் கொண்டு, அந்த ஜன்னலின் வழியாக உள்ளே நோக்கினான். அந்த வீட்டில் தங்கியிருக்கும் டாக்டர் ஹம்ஸாதான் காசிலிங்கத்திடம் ஆசி வாங்கிக் கொண்டு உற்சாகமாக பேசிக் கொண்டிருந்தாள்.

அப்போது -

மற்றொரு நபர் அந்த அறையினுள் பிரவேசிக்க, காசிலிங்கம் எழுந்து அவனை ஆரத்தழுவினார்.

தனது கணவர் என்று ஹம்ஸா அந்த நபரை அறிமுகப்படுத்துவதைக் கேட்டான், தேனப்பன்.

சரியாக -

அவன் பின்பாக நகர்ந்து வந்த டாக்டர் நரேன் அவன் பிடறியை நோக்கி தன் கையால் ஒரு வெட்டு வெட்ட, உணர்விழந்து நிலத்தில் சரிந்தான், தேனப்பன். அவன்

பாக்கெட்டில் இருந்த பர்ஸ் அவன் பெயர் தேனப்பன் என்பதை சொன்னது.

"ஹலோ ஹம்ஸா! இங்கே ஒரு ஸ்பை உள்ளே நடக்கிறதை படம் பிடிச்சுட்டு இருக்கான்!" என்று நரேன் குரல் கொடுத்ததும், திகைப்புடன் ஜன்னல் பக்கமாக திரும்பினார்கள் அனைவரும்.

நரேனைப் பார்த்து புன்னகைத்தார் காசிலிங்கம். அனைவரும் வெளியே வந்து கீழே சுருண்டு கிடக்கும் தேனப்பனை நோக்கினர்.

"பெரிய வீட்டு உளவாளி போல இருக்கு!" காசிலிங்கம் உறுமினார்.

"நான் அன்னைக்கே சொன்னேன் இல்ல நரேன். அவங்க உன் ஃபோட்டோவை வெறிச்சு பார்த்துக்கிட்டே இருந்தாங்க! நீதான் ரேணுகாவோட மாஜி காதலன்னு கண்டு பிடிச்சுட்டாங்களோ என்னவோ!" ஹம்ஸா சொன்னாள்.

"இவனை என்ன பண்ணுவது?" வனமாலி கேட்டார்.

"செல்ஃபோனை எடுத்து ஆத்துல தூக்கி போட்டுட்டு, இவனை மெயின் ரோட்ல கிடாசிட்டா ஒரு பாக்கெட் டாஸ்மாக் சரக்கை வாங்கி வாய்ல ஊத்திடுடா! குடிச்சுட்டு கிடக்கிறான்னு

எல்லாரும் நினைச்சுக்கட்டும்!" தன் டிரைவரிடம் காசிலிங்கம் கட்டளையிட, அவரது ஆஜானுபாவான டிரைவர் தேனப்பனை அனாயசமாக தூக்கி தோளில் போட்டுக் கொண்டு அகன்றான்.

"அந்த செல்ஃபோனை இப்படி கொடு! எங்க ஊர் ஆத்துல தூக்கி எறிஞ்சுடறேன்." என்று டிரைவரிடம் சொல்லி தேனப்பன் கையிலிருந்து ஃபோனைப் பிடுங்கி தனது ஜிப்பாவினுள் போட்டுக் கொண்டார், காசிலிங்கம்.

ஹம்ஸாவுக்கு உடனே ஒரு யோசனை. ஃபோனை எடுத்து யாரையோ அழைத்துப்பேசி தேனப்பனைப் பற்றி கூறினாள்.

அவன் பர்ஸ் மூலம் அவன் பெயர் தேனப்பன் என்பது தெரிந்தது என்று கூறி ஃபோனை கட் செய்தாள். பிறகு ஹம்ஸா நரேனைப் பார்த்தாள்.

"ஜாக்கிரதை நரேன்! நீ யார்னு அவங்க கண்டு பிடிச்சுடப் போறாங்க! அப்புறம் உனக்கு ஆபத்துதான்!" ஹம்ஸா சொல்ல நரேன் தனது தோள்களை அலக்ஷியமாக குலுக்கினார்.

ஹாஸ்பிட்டலில் தமயந்தியைப் பார்த்துவிட்டு தனது இன்னோவாவில் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தான் குணசேகர பாண்டி! ஹாஸ்பிட்டலில் காண்டீபனும், தேனப்பனும் மாறி மாறி தாயுடன் தங்கி இருக்கும் தேனுகாவுக்கு காவலாக இருக்க வேண்டும் என்பது உத்தரவு!

காண்டீபனை விடுவிப்பதற்காக, வீட்டுக்குப் போய்விட்டு ஆறுமணியளவில் வந்து விடுவதாக கூறிவிட்டு சென்றிருந்தான் தேனப்பன். இன்னும் வரவில்லை. எரிச்சலுடன் அவனுக்காகக் காத்திராமல் தன் காரை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான் குணசேகரன்.

டாக்டர் சுந்தரேசன் வேறு தமயந்திக்கு குறைந்த ரத்த அழுத்தமும், சர்க்கரை அளவும் கட்டுப்பாட்டில் இல்லை. எந்த நேரமும் ஸ்ட்ரோக் வரலாம் என்பதால் அவள் மருத்துவமனையிலேயே சிறிது நாட்கள் கழிக்க வேண்டி வரும் என்று கூறிவிட்டார்.

தேனுகாவை எந்த வேளையில் குருவாயூர் அனுப்பினோமோ அன்றிலிருந்துதான் பிரச்னை. இப்போது தேனுகாவிடம் மீண்டும் மஹிமைகள் தோன்றத் துவங்க பிரச்னைகள் ஒவ்வொன்றாக தீர்ந்து விடும் என்கிற நேரத்தில் தமயந்தி உடல் நிலையை கெடுத்துக் கொண்டு விட்டாள்.

'இந்தப் பாவி தேனப்பன் எங்கே தொலைந்தான்?' எரிச்சலுடன் ஆக்ஸிலரேட்டரை அழுத்த பாலத்தின் திருப்பத்தில் எதிர் திசையில் விழுந்த கிடந்த தேனப்பனின் மீது அவர் பார்வை படிந்தது.

"அடப்பாவி! தேனப்பன்தானே.. அது.. எதாவது விபத்தா?" தனக்குள் கேட்டபடி காரை நிறுத்திய குணசேகரன் நடந்து போய் தேனப்பனை நோக்கி குனிந்தான்.

குப்பென்று டாஸ்மாக் வாடை அவன் முகம் தாக்க, அருவெறுப்புடன் எழுந்தான், குணசேகரன்.

"நல்லவனாட்டம் பேச்சு! இப்படியா, குடிச்சுட்டு ரோட்டுல கிடப்பான் ஒருத்தன்!" என்றபடி மீண்டும் காரை நோக்கி நடந்தான்.

வீட்டை அடைந்ததும், திண்ணையில் அமர்ந்திருந்த மாதப்பனைப் பார்த்தான்.

"மாதப்பா! உன் தம்பி குடிச்சுட்டு பாலத்துக்கிட்டே விழுந்து கிடக்கிறான். நீ போய் என்ன.. ஏதுன்னு பாரு!" குணசேகரன் உத்தரவிட்டான்.

"என் தம்பிக்கு குடிக்கிற பழக்கமே இல்லையே!" மாதப்பன் கூற அவனை எரித்து விடுபவன் போல உறுத்துப் பார்த்தான்.

"அப்ப.. நான் என்ன பொய்யா சொல்றேன். போய் பாரு! உண்மை தெரியும்!" குணசேகரன் கூறினார்.

மற்றொரு திண்ணையில் அமர்ந்திருந்த அங்காயி, தனது கைப்பை, பர்ஸ், செல்போன் ஆகியவற்றை அப்படியே திண்ணையில் வைத்து விட்டு அவசரமாக மாதப்பன் ஓடுவதை கவனித்தாள். பிறகு நிதானமாக திண்ணையிலிருந்து இறங்கி எதிர்புற திண்ணைக்கு சென்றாள்.

தனக்கு இருந்த பரபரப்பில், கேஷ் டிராயரை மூடக்கூட செய்யாமல் சென்றிருந்தான் மாதப்பன்.

அங்காயி, கேஷ் டிராயரிலிருந்து பத்து ரெண்டாயிரம் ரூபாய் தாள்களை அடுக்கி மாதப்பனின் பர்ஸினுள் சொருகினாள். பிறகு சுற்றுமுற்றும் பார்த்தவள் ஒன்றுமே நடக்காதது போல் உள்ளே சென்று விட்டாள்.

மூன்றாம் மாடி இன்டர்காம் ஒலிக்க, குணசேகரன் ரிஸீவரை எடுத்தான்.

"எலே குணசேகரா! இங்கே தேனப்பன் ஒரு புதுக் கதையை அவிழ்த்து விடறான்! என்ன ஏதுன்னு கேளு!" பெரிய பாண்டி அழைத்தார்.

"என்னவாம் அந்த குடிகார பயலுக்கு?" குணசேகரன் கேட்டான்.

"நீயே வந்து கேளு!"

எரிச்சலுடன் சட்டையை அணிந்து கொண்டு கீழே வந்தான், குணசேகரன்.

"என்னடா தேனப்பா! குடிச்சுட்டு தெருவில கிடந்தே!" அவனைப் பார்வையால் சுட்டெரித்தான்.

"ஐயோ! எனக்கு குடிக்கிற பழக்கமே இல்லைங்க! உங்களுக்கு தெரியாதா? சாயந்தரம் ஹாஸ்பிட்டலேர்ந்து வர்றப்ப உங்க மாமன் வண்டி இந்த பக்கமா வந்தது! சரி.. நம்மூட்டுக்குத்தான் வர்றார்னு பார்த்தா, மரப்பாலம் ரோடு வழியா அவரு காரு போச்சு! பார்த்தா கோவில் பின்னாடி இருக்கிற முள்வேலி மைதானத்துல காரை நிறுத்திட்டு, அவரு அந்த டாக்டரம்மா வீட்டுக்கு போனாருங்க! உள்ளே என்ன நடக்குதுன்னு செல்ஃபோன்ல படம் பிடிக்கும் போது, யாரோ என்னை அடிச்சுப் போட்டுட்டு, வாயில சாராயத்தை ஊத்தி ரோட்டுல போட்டுட்டாங்க!" பரிதாபமாகப் புலம்பினான் தேனப்பன்

அங்காயி பின்தொடர கற்பகம் இரண்டாம் மாடியிலிருந்து இறங்கி வந்தாள்.

பெரிய பாண்டி மீசையை நீவியபடி அவனை உறுத்து பார்த்தார்.

"உன் கதையை எப்படிடா நம்பறது?"

"நம்புங்கய்யா! என் ஸ்கூட்டிகூட இப்ப முள் வேலி நிலத்துலதான் நிக்க வச்சிருக்கேன்! நீங்க வேணா போய் பாருங்க!"

"ஆமாய்யா! முள்வேலி நிலத்துலதான் சாராயம் காய்ச்சுவாங்க! அங்கிட்டு மரியாதைப்பட்ட எங்க ஊட்டு ஆம்பளைங்களை நிக்க சொல்லுதயாக்கும்! பெரியவரே! இந்த அண்ணன், தம்பி ரெண்டு பேருமே களவாணி பயலுங்க நம்பாதீங்க! அந்த சிவநேசன் இருந்த வரைக்கும் இந்த திண்ணைக்கு மருவாதை இருந்துச்சு! இப்ப இவங்க ரெண்டு பேரும் நாடகமாடி களவாணித்தனம் செய்யறானுங்க!"

"என்ன அண்ணி, சொல்லுறீங்க?" குணசேகரன் திகைத்தான்.

"இந்த மாதப்பன் கஜானாவுலேர்ந்து கத்தையாக ரூபாயை எடுத்து பர்ஸூல வச்சதை அங்காயி பார்த்துதாம்! அண்ணன் தம்பி நல்ல திட்டம்தான் போட்டிருக்கானுக! தேனப்பன் குடிச்சாப்பல ரோட்டுல கிடப்பான்! அண்ணன்காரன் அவனை அழைச்சுட்டு வர்ற சாக்குல, பணத்தைக் கொண்டு போய் கொடுப்பான்! அங்காயி ஏன் பாக்கறே! அந்த பர்ஸை சின்னவரு கையில கொடு!"

மாதப்பனும், தேனப்பனும் வாய் பிளந்து பார்க்க, அங்காயி பர்ஸை எடுத்து குணசேகரன் கையில் தந்தாள்.

பர்ஸினுள் கத்தையாக இரண்டாயிரம் ரூபாய் தாள்கள் அடுக்கப்பட்டிருந்தன.

"ஏதுடா? மாதப்பா உனக்கு இந்தப் பணம்?" குணசேகரனின் விழி கோபத்தில் உருண்டன.

"ஐயா.. எனக்கு ஒண்ணும் தெரியாதுய்யா?" மாதப்பன் அலற, தேனப்பன் சந்தேகத்துடன் தன் அண்ணனைப் பார்க்க அவர்களது சீட் கிழிக்கப்படும் ஒலி, மெட்ரோ ஹாஸ்பிட்டல் வரையில் கேட்டது.

காண்டீபனை தனியாக அழைத்தாள், தேனுகா.

"காண்டீபா! மாதப்பனையும், தேனப்பனையும் வேலையை விட்டு துரத்தியாச்சு! இனிமே நீதான் பெரிய வீட்டுல எல்லாம்! என் எதிர்காலத்துக்காக சில நடவடிக்கைகளை இந்த ஹாஸ்பிட்டலுல எடுக்கப் போறோம்! அதுக்கு உன் முழு ஒத்துழைப்பு தேவை!" தேனுகா சொல்ல, காண்டீபன் தலையசைத்து தன் இசைவினை தெரிவித்தான்.

அன்றிரவு -

சந்தீப்புடன் பேசிவிட்டு, காமேஷ் வழக்கம்போல் வீட்டுக்கு கிளம்புவதற்காக சென்றான். லிஃப்ட்டில் சென்றால் தேனுகாவை சந்திக்க நேரிடலாம் என்று படிகளின் வழியாக கீழே இறங்கினான்.

ஆள் அரவமற்ற ஒரு திருப்பதில் தேனுகா இவன் வருகைக்காகக் காத்திருந்தாள். அவளைக் கண்ட அவனது வேகம் குறைய, ஒரு தருணத்தில் இறங்குவதற்காக தூக்கப்பட்ட அவனது கால் அப்படியே அந்தரத்தில் நின்றது.

"காமேஷ்!" அவன் பதில் கூறாமல் மௌனமாக நின்றான்.

"சந்தீப் சார் நல்ல குணமடைஞ்சுட்டு வர்றாராமே!"

சந்தீப்பை பற்றி சம்பந்தமில்லாமல் அவள் பேசுவதைக் கேட்டு, காமேஷ் வியப்புடன் அவளை நோக்கினான்.

"மனசு ஒடிஞ்சு தற்கொலை எண்ணத்துல இருந்த அவருக்கு தைரியம் சொல்லி, நம்பிக்கையை ஏற்படுத்தி அவரை 'கலகல'ன்னு ஆக்கிட்டேன்னு டாக்டர்களும், நர்ஸுகளும் உன்னை புகழறாங்க! உன்னை எல்லா பேஷண்ட்கள் கிட்டேயும் பேச வச்சு, அவங்களுக்கு தன்னம்பிக்கையை உண்டாக்கனும்னு சொல்றாங்க!"

"ஆனா.. என்னை மட்டும் ஏன் அப்படியே விட்டுட்டே காமேஷ்! எனக்கு தைரியம் சொல்லி கவலைப் படாதே, உனக்கு நான் இருக்கேன்னு சொல்ல மாட்டியா?"

"லிஃப்ட்ல உன்னால இறங்கி வர முடியாது. ஆனா, என்னால இறங்கி வர முடியுமில்ல! நீ என் விஷயத்துல இறங்கி வர்றதா எடுத்துக்கலாமா?" துக்கம் தொண்டையை அடைக்க தேனுகா கேட்க, அவளது மனப்போராட்டம் காமேஷுக்கு நன்றாகப் புரிந்தது.

"இதோ பாரு! எனக்கும் மனசு இருக்கு! நான் அதை உன்கிட்டே நிரந்தரமாக கொடுக்கணும்னுதான் நினைச்சேன்! ஆனா அப்படி கொடுத்திருந்தேன்னா, நீ இப்ப சொன்னே பாரு. டாக்டர்களும், நர்ஸுகளும் என்னை பாராட்டறாங்கனு! அதெல்லாம் எனக்கு இல்லாம போயிருக்கும்! காரணம்! உன்னை அடையறதுதான் என் வாழ்க்கையோட ஒரே குறிக்கோள்னு இருந்தா என்னை சுத்தி இருக்கறவங்களை காயப்படுத்தி, முடிஞ்சா கொலையும் பண்ணிட்டு உன்கிட்டே வருவேன்! பட்.. உன்னை விட்டு தள்ளியே நின்னா, சௌபாக்கியங்களும் என்னை விட்டுத் தள்ளிப் போகும்னு எனக்குத் தெரியும்! அதனாலேயே உன்னை விட்டு எட்டிப்போறேன். எனக்கு தேவை சௌபாக்கியங்கள் இல்லே! மனநிம்மதி. உன்னை விட்டு தள்ளி நின்னா மனநிம்மதி

கிடைக்குது! அதனாலே தள்ளிப்போறேன்!" என்று தொடர்ந்து படிகளில் இறங்கி அவளைக் கடந்து சென்றான். அவன் வேகமாக செல்ல, விர்ரென்ற அவன் ஏற்படுத்திய வேகக்காற்று அவளது முகத்தைத் தாக்கியது.

"ஒரு நிமிஷம்! இதை மட்டும் கேட்டுட்டு போ காமேஷ்! முதல் தடவை விழிச்சுகிட்டு இருக்குறப்ப குமாரகோம்ல கொடுத்தே! இரண்டாவது தடவை ரூம்ல தூங்கிகிட்டு இருக்கிறப்ப கொடுத்தே! மூன்றாவது தடவை ஒருவேளை நான் நிரந்தரமாய் கண்ணை மூடின பிறகு வந்து கொடுக்கனும்னு நினைக்கறியோ என்னவோ?"

"நான் ரேணுகா அத்தை அளவுக்காவது போராடிட்டு அப்புறமாதான் மரணத்தை ஏற்பேன் நேரடியாகவே, மரணத்தை நாட மாட்டேன்!"

"இப்போ சொல்றேன் கேட்டுக்கோ!"

"காமேஷ்வரர் தேனுகாம்பாளை நாடி வர மாட்டேன்னு சொன்னார், இந்த தேனுகாம்பாள் காமேஷ்வரரை நாடி நிச்சயம் வருவா!"

வீறாப்புடன் தேனுகா சொல்ல, அவள் அவ்வளவு உறுதியாகப் பேசியது காமேஷிடம் சிலிர்ப்பினை உண்டு பண்ணியது.

"தேனுகாம்பாளுக்கு காமேஷ்வரர் கிடைக்கலாம்! ஆனா.. காமதேனுவுக்கு? புராணத்துல காமதேனுக்கு ஜோடி இருந்ததாக தெரியலையே!"

காமேஷ் பரிகாசத்துடன் கேட்டானா? அல்லது உண்மையிலேயே தெரிந்து கொள்வதற்காக கேட்டானா?

"தேனுகாதான் காமேஷ்வரனை கல்யாணம் பண்ணிக்கிட்டு காமதேனுவா வலம் வர்றா! நீதான் கோவிலுக்கே போகாதவனாச்சே! உனக்கு இதெல்லாம் எப்படி தெரியும்?" தேனுகா அலக்ஷியமாகச் சொல்லி விட்டுத் திரும்பினாள்.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த காமேஷ் புதிய உற்சாகத்துடன் படிகளில் இறங்கினான்.

# அத்தியாயம் 39

அருந்ததியின் கல்யாண வேலைகள் மளமளவென்று நடந்தேறின. கல்யாணம் முடிந்தவுடன் குடும்பத்தை அழைத்துக்கொண்டு சென்னைக்கு கிளம்ப முடிவு செய்திருந்தான், காமேஷ்! சந்தீப் அவனை கையோடு சென்னைக்கு அழைத்துச் செல்ல துடித்துக் கொண்டிருந்தான்.

பெரிய வீட்டு கணக்குப்பிள்ளை உத்தியோகத்திலிருந்து தான் நீக்கப்பட்டது, சிவநேசனை பெரிதும் பாதித்து விட்டது. நாற்பது வருஷங்களாக தான் அமர்ந்திருந்த அந்த திண்ணையை நினைத்து ஏங்கினார். கணக்குப்பிள்ளை உத்தியோகம் மட்டுமா பார்த்திருப்பார்? அந்தக் குடும்பத்தின் நல்லது, கெட்டது களுக்கு இவராகத்தானே முன் நின்றார்.

சரி சிவநேசா! உன் பையன் தப்பு பண்ணிட்டான்! அவனை கண்டிச்சு வை! எங்களுக்காக எவ்வளவோ செஞ்சிருக்கே! என்று பெரிய பாண்டியாவது ஒரு வார்த்தை கூறுவார் என்று மிகவும் எதிர்பார்த்தார் சிவநேசன். ஆனால், சாம்பாரிலிருந்து கருவேப்பிலையை எடுத்துப் போடுவது போல் அல்லவா இவர்களை வீசி எறிந்துவிட்டார்கள்.

அந்த புயல் வீசிய இரவில், ரேணுகாவை ஓட ஓட விரட்டி, அண்ணன்மார்கள் ஆடிய ஆட்டத்திற்கு சாட்சியாக தான் இருந்தும் வாய் மூடிய மௌனியாக இருந்து அவர்களுக்கு உடந்தையாக செயல்பட்டதற்கு இதுதான் தண்டனை போலும்.

தன்னைச் சுற்றி திருமண வேலைகள் நடக்க, அதற்கும், தனக்கும் இம்மியும் தொடர்பு இல்லை என்பது போன்று விட்டத்தைப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தார் சிவநேசன். அதனால் ஒன்றும் ஸ்தம்பித்து விடவில்லை திருமண வேலைகள்.

ஹாஸ்பிட்டலில் இருந்தபடி கல்யாண வேலைகளை பற்றி விசாரித்து தனது நண்பர்கள் மூலம் காமேஷ் உதவிக் கொண்டிருந்தான்.

பேப்பர் ஐயரும், அவர் மனைவி விசாலாக்ஷியும் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தனர். முக்கியமாக கோபக்கார உமையாளை மிக எளிதாக சமாளித்தார் பேப்பர் ஐயர்.

மணமேடையில் இருபக்கம் வண்ண வண்ண சட்டிப்பானைகளை அடுக்குவது உமையாள் வீட்டு வழக்கம்! காமேஷுக்கு அதுபற்றி கடைசி வரை யாருமே

சொல்லவில்லை. கடைசி நிமிஷத்தில்தான் யாரோ குலதனத்திடம் சொல்ல, சிறியதாக இரண்டு பானைகளை வாங்கி அவசரமாக அடுக்கி வைத்தாள் குலதனம்.

மாப்பிள்ளை செந்திலும், அருந்ததியும் ம. மேடையில் வந்து அமர்ந்துவிட்டனர். தாலி கட்டு நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

கூட்டத்தில் இருந்த கிழவி ஒருத்தி உமையாளின் காதைக் கடித்தாள்.

"ஏண்டி உமையாளு! உன் பிள்ளையும் மருமவளும் கல்யாணம் முடிஞ்சு சொப்பா விளையாட போறதுங்க! பானையெல்லாம் தக்குனூண்டு வச்சிருக்காளுங்க, பொண்ணு வீட்டுகாரங்க.." என்றதும் சர்ரென்று கோபம் வந்துவிட்டது, உமையாளுக்கு.

ரெண்டு கையிலும் ஒரு பானையைப் பிடித்துக் கொண்டு தாண்டவம் ஆடினாள்.

"கல்யாணத்துக்கு பானை வாங்கறவன்.. பெரிசா வாங்க வேணாம்? இப்படியா வாங்குவீங்க!" என்று தூக்கி எறிய, பேப்பர் ஐயர் அதனை லாவகமாகப் பிடித்தார்.

"சாரிம்மா! எங்க வழக்கப்படி சட்டிப்பானை உருண்டா, கல்யாணமான ஒரு மாசத்துல மாமியார், மண்டை உருளும்னு சாத்திரம் சொல்லுது! அதனால நான் பானையே வாங்கலை! உங்களுக்கு வேண்டாதவங்க யாரோ இப்படி பண்ணியிருக்காங்க! கவலைப்படாதீங்க! இப்பவே ஆளை அனுப்பிச்சு பெரிய பானைகளா வாங்கிடுறேன்! சாத்திரம் கெடக்குதுங்க!" ஐயர் சமாளிக்க, காற்று போன பலூனாகச் சட்டென்று இறங்கி வந்தாள்.

"வேணாங்க! சாத்திரம் சொல்லுதுனா வேணாம்" என்று சொல்ல காமேஷுக்கும், குலதனத்துக்கும் போன மூச்சு வந்தது.

"தம்பி! அவரை பேப்பர் ஐயருன்னு எல்லாரும் கூப்பிடறாங்க! அவர் பெயருதான் என்ன?" என்று உமையாள் காமேஷிடம் கேட்டாள்.

"உங்க புருஷன் பெயர்தாம்மா! கமலநாத ஐயர்" என்றான் காமேஷ்.

"அவரை நான் பேப்பர் ஐயர்னே கூப்பிடறேன்!" என்றபடி உமையாள் அகல, தனக்குள் எழுந்த சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

முகூர்த்தம் நெருங்க, செந்தில் ஒருவழியாக அருந்ததியின் கழுத்தில் மங்கல நாணைப் பூட்டினான்.

அதன் பிறகு அவன் மனதிலிருந்த பெரும் பாரம் இறங்கியதைப் போல் உணர்ந்தான்.

"காமேஷ்!" குரல் கேட்டுத் திரும்பினான், காமேஷ்!

கோவில் அர்ச்சகர் நாகநாத குருக்கள்தான் கையில் ஒரு பார்சலோடு நின்று கொண்டிருந்தார்.

"வாங்க, குருக்களே!" காமேஷ் கைகூப்பினான். காமேஷுக்கு அவருடன் பேசிப் பழக்கமில்லை! அவனுக்குதான் கோவிலுக்கு போகும் வழக்கம் இல்லையே! இருப்பினும், தொலைவில் இருந்து அவரைப் பார்த்திருக்கிறான். அவர்தான் நாகநாத குருக்கள் என்கிற வரையில் அவனுக்கு தெரியும்?

"தம்பி! வழக்கமாக நம்மூர்ல நடக்கிற கல்யாணங்களுல காமதேனு அம்சமான தேனுகா, ஆசிர்வதிச்சு தம்பதிகளை வாழ்த்துவது வழக்கமப்பா. நீங்க அவளை கல்யாணத்துக்குக் கூப்பிடலை போலிருக்கு! கூப்பிட்டிருந்தாலும் அவளால வந்திட முடியுமோ, முடியாதோ! நேத்து தேனுகா கோவிலுக்கு வந்தா! என் கிட்டே ஒரு ஒத்தாசை கேட்டாள்."

"உன் அக்கா அருந்ததிக்கு தன் சார்பா ஆசிர்வாதம் பண்ணி, வாழ்த்து சொல்ல சொன்னாப்பா! நீ அதுக்கு ஒத்துக்க மாட்டியோன்னு பயந்தா! உன்கிட்டே பர்மிஷன் வாங்கிண்டு

என்னை ஆசிர்வாதம் பண்ணச் சொன்னாள். உன் உத்தரவு இல்லாம எதையும் அவ செய்ய மாட்டாள்னு சொல்லச் சொன்னா!"

"இப்ப என்ன சொல்றே! நான் போய் ஆசிர்வாதம் பண்ணலாமா?" நாகநாத குருக்கள் கேட்டதும், தேகம் முழுவதும் ஒரு பரவசத்தை உணர்ந்தான், காமேஷ்.

தேனுகா இல்லாமல் தன்னுடைய அக்காவின் திருமணம் நடக்கிறதே என்கிற வருத்தம் அவனுள் இருந்தது. இப்போது அவளே தனது வாழ்த்துகளை குருக்கள் மூலம் அனுப்பியிருக்கிறாளே!

"வாங்க குருக்களே!"

காமேஷ் அவரை வழி நடத்திச் சென்று தம்பதிகளை அறிமுகப்படுத்த, குருக்கள் தன் கையில் இருந்த அட்டைப் பெட்டியை அருந்ததியிடம் நீட்ட, அருந்ததி அதை காமேஷிடமே கொடுத்து விட்டாள்.

புதுமண தம்பதிகளும், உறவினர்களும் கோவிலுக்கு போயிருக்க, கல்யாண மண்டபத்திலிருந்து தேனுகா அனுப்பியிருந்த அந்த அட்டைப் பெட்டியை வீட்டுக்கு எடுத்துச் சென்றான். ஆவலுடன் அதை பிரித்தான்.

உள்ளே மிகப்பெரிய தங்க முலாம் பூசப்பட்ட பித்தளை காமதேனுவின் பொம்மை அவனைப் பார்த்து சிரித்தது. கம்பீரமான அந்த காமதேனு மூர்த்தியின் காலில் ஒரு பேப்பரில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. அதை கையில் எடுத்துப் பிரித்தான்.

"இன்று இந்த காமதேனு வந்திருக்கிறாள். விரைவில் இன்னொரு காமதேனுவும் வருவாள் - தேனுகா" என்று தன் கைப்பட எழுதியிருந்தாள்.

காமேஷ் உருகிப்போனான்! உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி கல்லாகி, எப்போதும் கோபமும், கடுமையும் மட்டுமே பிரதிபலித்த அவனுடைய முகம் மென்மையாகி குழைந்தது. ஒரு பெண் இவ்வளவு உறுதியாக, சேதியனுப்பும் போது இவன் எதற்காக அவளை அலக்ஷியம் செய்து கொண்டு தன்னையே ஏமாற்றிக் கொள்ள வேண்டும்?

காமேஷ் அந்தச் சிலையை தானே வைத்துக் கொள்ள முடிவு செய்து விட்டான்! அந்த சிலை அவனைப் பொறுத்த வரை தேனுகாதான். அவள் இன்றே இவர்கள் வீட்டில் காலடி எடுத்து வைத்து விட்டாள்.

கல்யாணம் முடிந்து, அருந்ததியை அவள் புருஷன் வீட்டுக்கு அனுப்பும் நேரம் வந்தது.

அருந்ததி காமேஷிடம் விடைப்பெற்றுக் கொள்ள வந்தான்.

"காமேஷ்! ஒவ்வாரு தடவை நான் தோட்டத்துக்கு அரளிப்பூ பறிக்கப் போகும்போது அக்கா விதை பறிச்சுடப் போறா! பார்த்துக்கங்கன்னு அம்மாகிட்டே சொல்லுவேன்னு கேள்விப்பட்டேன். உண்மையை சொல்லட்டா! எனக்கு நீ இருக்கே! நல்ல வாழ்க்கையை அமைச்சு கொடுப்பேன்னு எப்பவும் தைரியம் இருந்தது. அதுவும் நான் ஆசைப்பட்ட வாழ்க்கையை அமைச்சு கொடுத்திருக்க!"

"நீயும் ஆசைப்பட்டியா? அவருதான் ஆசைப்பட்டார்னு தெரியும்!" காமேஷ் வியப்பு காட்டினான்.

செந்தில் அசடு வழிய, அருந்ததி வெட்கப்பட்டாள். பிறகு தொடர்ந்தாள்.

"நான் ஆசைப்பட்ட வாழ்வே எனக்குக் கிடைச்சா மாதிரி நீ ஆசைப்பட்ட வாழ்வு உனக்கும் கிடைக்கப்போறது!" என்றாள்.

"சந்தோஷமா இரு, அருந்ததி!" மனம் பூரிக்க அவள் கையைப் பற்றி குலுக்கினான்.

கணவன் பின்தொடர அங்கே வந்தாள் உமையாள்.

"நல்லா நடந்ததுப்பா கல்யாணம்! காமேஷு. அப்புறம் உங்கக்காவுக்கு வந்த பரிசு பொருட்களை எல்லாம் எங்களுக்கே கொடுத்திடு என்ன?"

"ஆஹா! அதோ எடுத்து வச்சாச்சுமா!" பேப்பர் ஐயரின் மனைவி விசாலாக்ஷி கூறினாள்.

"கோயில் குருக்கள் பெரிய பெட்டியில் ஒண்ணு கொடுத்துட்டுப் போனாரே, அது?" உமையாள் கேட்டதும், காமேஷின் மனம் படபடத்தது.

"காமதேனு கை விட்டு போய்விடுவாளோ! சோர்வுடன் தாய் குலதனத்தைப் பார்த்தான்."

"இதோ இருக்குங்களே.. பால் குக்கர்!" என்று காமதேனு வைக்கப்பட்டிருந்த அட்டை பெட்டியிலே பால் குக்கரை வைத்து தர, காமேஷ் தன் தாயை நன்றியுடன் பார்த்தான்.

# அத்தியாயம் 40

"**வா**ங்க அழகரே!" கோடங்கியை வரவேற்றார் பெரிய பாண்டி.

சகோதரர்கள் கோடங்கியைப் பார்த்ததும் கையைக் கூப்பி வணங்க, சுருக்குப் பையில் இருந்த திருநீற்றை அனைவரின் நெற்றியிலும் தீட்டினார் கோடங்கி!

"பெரிய பாண்டி! என்னை வரச் சொன்னீங்கன்னு மாசானம் சொன்னான்! என்ன சமாச்சாரம்?" என்றபடி பிரம்பு நாற்காலியில் தனது இரட்டை நாடி சரீரத்தை இருத்தினார், அழகர் கோடங்கி.

"முதலுல பாயசத்தை சாப்பிடுங்க! ஏய்.. அங்கு.." பெரிய பாண்டி அழைக்க, அங்கண்ணி ஒரு பெரிய லோட்டாவில் பாயசமும் ஒரு சிறுத்தட்டில் வறுத்த முந்திரியையும், அதிரசத்தையும் கொண்டு வந்து கோடங்கியின் முன்பாக ஸ்டூலின் மீது வைத்தாள்.

"என்ன விசேஷம்மா! பாயசமெல்லாம் வச்சு தடபுடல் பண்ணறே?" அழகர் கோடங்கி கை நிறைய வறுத்த

முந்திரியை அள்ளி வாயில் போட்டுக் கொண்டபடி ஒரு வாய் பாயசத்தை பருகினார்.

"கோடங்கி! சாமி புண்ணியத்துல எல்லாம் நல்ல சமாச்சாரமாகவே நடக்குது. சீமையில பையன் நல்லபடியா படிப்பை முடிச்சு ஏதோ கார் கம்பெனில வேலைக்கு சேர்ந்துட்டான். இங்கே நம்ம சின்னவரு துவக்கின ஃபேக்டரி அமோகமா நடந்து நல்ல லாபத்தை பார்த்திருக்காரு!"

"கற்பகத்தோட அப்பாரு இந்த வருஷம் விளைச்சல் அமோகமா இருந்துச்சுன்னு சொல்லி செந்தூர பாண்டிக்கு பெரிய தொகையா பேங்க்ல போட்டிருக்காரு.." அங்கண்ணி அடுக்கிகொண்டே போனாள்.

"இதெல்லாம் விடுங்க கோடங்கி! நம்ம இசக்கி எலக்ஷன்ல நிக்கப் போறான். இன்னும் கொஞ்ச நேரத்துல அமைச்சர் சந்திரசேகர பெருமாள் நம்மூட்டுக்கு வரப்போறாரு! கட்சியில மெம்பராக்குற ஃபாரம்ல தம்பிகிட்டே கையெழுத்து வாங்கிட்டு இங்கேயே பத்திரிகைகாரங்களை பார்த்துப் பேசப் போறாரு. நல்ல நேரத்துல அவன் கையெழுத்து போடணும்! போடும்போது நீங்க கூட இருந்தா நல்லாயிருக்கும்னு இசக்கி சொல்லிச்சு! அதான் கூட்டியாரச் சொன்னேன்!" பெரிய பாண்டி

வழக்கம் போல் தன் மீசையை சுட்டு விரலால் நீவியபடி மகிழ்ச்சி பொங்க கூறினார்.

"இசக்கி எம்.எல்.ஏ.வாகி அமைச்சரானால் அரசாங்கமே என் கையில்!" என்கிற எண்ணம் தோன்றி விட, அழகர் கோடங்கிக்கு அப்பொழுதே கர்வம் தோன்றி விட்டது.

"எலே இசக்கி இங்கே வா!" என்றார்.

இசக்கி அருகே வர, அவனை மார்போடு அணைத்துக் கொண்டு, உணர்ச்சிவசப்பட்டவராய் நடந்தபடி பேசினார்.

"இசக்கி! உங்கப்பன் தான்தோணி ஒரு நாள் பாண்டியம்மனை தரிசனம் பண்ணிக்கிட்டிருந்தப்ப, ஆத்தா சிலை மேல ஒரு நாகம் படம் எடுத்து ஆடிச்சு! அதைப் பார்த்த தான்தோணி என்னவோ.. ஏதோன்னு பயந்து போய் கூப்பாடு போட, அப்ப மாசானத்தோட ஆத்தாகாரி பிச்சம்மா அருள் வந்து ஆட ஆரம்பிச்சா!"

"அப்ப.. உன் குடும்பம் இந்த நாட்டையே ஆளப் போகுதுன்னு சொன்னாடா! அப்ப யாரும் அதை பெரிசா எடுத்துக்கலை! இப்ப நிலைமை அதுக்கு சாதகமா மாறிகிட்டு வருது. நீ உத்திராட நக்ஷத்திரக்காரன். அரசியலுல பெரிய இடத்தை பிடிப்பே! அமைச்சராக நாட்டுக்கு நல்லது பண்ணு! நிச்சயம் முதலமைச்சரே ஆகிடுவே! நீங்க ராஜவம்சமாக

இருக்கவேதான் உங்க குடும்பத்துக்கு தெய்வ கடாக்ஷம் பொண்ணுங்க ரூபத்துல வர்றது! நீ பாத்து கிட்டே இரு! ரொம்ப சீக்கிரத்துல நீ முதலமைச்சரா ஆகிடுவே! பாண்டி ராஜ்யம்தான் இந்த ராஜ்யத்தையே ஆளப்போவுது!"

அழகர் கோடங்கி இசக்கி பாண்டியை உச்சி முகர்ந்து வாழ்த்தி மீண்டும் அவன் நெற்றியில் கூற்றினை அப்ப, குடும்பத்தினர் அனைவரும் உற்சாகத்தில் திளைத்திருந்தனர்.

"ஏய்.. கலாவதி! முதலாமைச்சர் பொண்டாட்டியா ஆயிட்டேன்னா.. எங்களையெல்லாம் கண்டுப்பியா?" கற்பகம் கிண்டல் செய்தாள்.

"ம்ஹூம்! இசக்கி முதலமைச்சரு ஆகிட்டார்னா.. கலாவதியால அவ புருஷனை நெருங்க முடியுமா என்ன? பீப்பாய் மாதிரி உடம்பை வச்சுகிட்டு, கோடங்கிசாமி அவரை கட்டியணைச்சு நசுக்கறதைப் பார்த்தாள். இவளுக்கு ஒண்ணும் தேறாதுவ.. கோடங்கியாரு இப்பவே கொழுந்தனாரை அமுக்க பாக்கறாரு.." அங்கண்ணி சொல்ல உள்ளேயிருந்த பெண்கள் சிரித்தார்கள்.

"சார்! வெளியே குரல் கேட்க, சின்ன பாண்டி குணசேகரன் எட்டிப் பார்த்தான். தொகுதி செயலாளர் மருதமுத்துதான் நின்றிருந்தார். கட்சிகாரங்க, பத்திரிகையாளுங்க எல்லாம்

வெளியில் தோட்டத்துல காத்திருக்காங்க! அவங்களை கொஞ்சம் உட்கார வச்சிட்டிங்கன்னா நல்லா இருக்கும்!" மருதமுத்து கூற, இசக்கி பரபரப்படைந்தான்.

"குணசேகரா! துளசி மாட முத்தத்துல எல்லோரையும் சேரு போட்டு உட்கார வை! கலா! அவங்களுக்கு காப்பித்தண்ணி பிஸ்கெட் எல்லாம் கொடுக்க ஏற்பாடு பண்ணு!" என்று உத்தரவிட்டான்.

அவர்களுக்கு மரியாதை செய்தால்தானே தேர்தலின் போது உதவிக்கு வருவார்கள்.

பெரிய பாண்டி சற்றே வருத்ததுடன் இசக்கியை பார்த்தார். சிவநேசன் இருந்தா எல்லாத்தையும் சொல்லாமலே செய்வான்.

"பெரியண்ணே! எனக்கு இனிமே அரசியல் வேலைகள் அதிகம் இருக்கும்! குணசேகர தம்பி ஃபேக்டரியை கவனிக்கிறான். செந்தூர அண்ணன் விவசாயத்தை கவனிக்கிறான். உமக்கு வயசாயிடிச்சு வீட்டை பார்த்துக்க ஒரு நல்ல மானேஜரை வச்சுக்கலாம்! வீட்டையும் கவனிச்சுட்டு வெளி வேலைகளையும் பார்க்கணும்..!" இசக்கி சொன்னான்.

"பேசாம.. சிவநேசனையே கூப்பிடலாமா?" பெரிய பாண்டி கேட்க, கோடங்கி தலையசைத்து மறுத்தார்.

"இப்பதான் தலைக்கு வந்தது தலைப்பாகையோட போச்சுங்கறேன்! அந்த பையன் போன முறை சில்மிஷம் ஏதோ பண்ணவே, நம்ம தேனு பாப்பாவோட மஹிமை திடீர்னு காணாம போச்சு! திரும்பி நீ சிவநேசனை இந்த வீட்டுக்குள்ளாற கொண்டு வந்தே அவன் பையன் இங்கேயே வட்டமிடுவான் புரிஞ்சுக்க!"

"நல்லா சொன்னீங்க, கோடங்கி சாமி! வேலியில போற ஓணானை எதுக்கு மடியில கட்டிக்க நினைக்கறீங்க?" அங்கண்ணி கேட்டாள்.

வெளியில் பரபரப்பும் ஆரவாரமும் கேட்க, பிறகு வாழ்க கோஷமும் ஒலித்தது. அமைச்சர் வந்துட்டாரு. இசக்கி சகோதர்களுடன் வாயிலுக்கு ஓடினான். அமைச்சரின் கார் தோட்டத்தின் வழியாக இடைகழி திண்ணைக்கு அருகே வந்து நின்றது. அமைச்சர் சுந்தரபெருமாள் அந்த வீட்டை அதிசயத்துடன் பார்த்தார்.

"இந்த மாதிரி வீடெல்லாம் இந்த காலத்துல எங்கே இருக்குங்க! என்னங்க இசக்கி? இந்த தூண்கள் திருமலை நாயக்கர் மஹால் தூண்களை விட பெரிசா இருக்கே!" என்று தூண்களை அமைச்சர் தட்டிப்பார்க்க பெரிய பாண்டி கர்வத்துடன், தனது மீசையை நீவினார்.

பின்னர் கட்சியின் வட்டமும், மாவட்டமும் ரகசியமாக கிசுகிசுத்துக் கொண்டிருந்தன.

"இவர் எதையாவது தட்டிப் பார்த்தாருன்னா? அந்த பொருளை லவட்ட போறாருன்னு அர்த்தம். பாண்டி சகோதரங்க எதுக்கும் ஜாக்கிரதையா இருக்கணும்.." தங்களுக்குள் கூறி சிரித்துக் கொண்டனர், அந்த கட்சிகாரரர்கள்.

"உள்ளே வாங்க அமைச்சரே!" என்றபடி அவரை பணிவுடன் அழைத்துச் சென்றவர்கள், வழக்கமாக பெரிய பாண்டி அமரும் பரம்பரை நாற்காலியில் அமைச்சரை அமர வைத்தனர்.

பரஸ்பர குசல விசாரிப்புக்கு பிறகு, குடும்ப உறுப்பினர்களை அறிமுகம் செய்வித்தனர் பாண்டி சகோதரர்கள்.

"இவன்தான் என் கடைசி தம்பி குணசேகரன்." அமைச்சர் அவனை நோக்கி கும்பிட்ட போதே சட்டென்று பின்னால் நின்றிருந்த எடுபிடி குனிந்து அவர் காதில் கிசுகிசுத்தான்.

"அமைச்சரே! இவரு பொண்ணுதாங்க! தெய்வாம்சமான பொண்ணுன்னு சொன்னேனே! அதிர்ஷ்ட தேவதைங்க! இதை பக்கத்துல வச்சுகிட்டா பிரதமர் பதவி கூட கிடைக்கும்னே!" எடுபிடி மந்திரம் ஓத கண்கள் விரிய குணசேகரனை பார்த்தார்.

"உங்க பாப்பா லக்ஷ்மிகரமா இருப்பாளாமே? இசக்கி! பிரசாரத்துக்கு கூட அழைச்சுட்டு வாப்பா! பாப்பாவைப் பார்த்தால் ஓட்டு குவியும்!" அமைச்சர் சொல்ல, சகோதரர்கள் பெருமையுடன் ஒருவரை யொருவர் நோக்கினர்.

பூஜை புனஸ்காரங்கள் என்று குடும்பத்தினர் படுத்தும்பாடு போதாது என்று இப்போது அரசியலிலும் இழுத்து, தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுத்தினால் அவள் நிலைமை என்ன?

"இசக்கி! நல்ல நேரம் வந்தாச்சு! கையெழுத்துப் போடு!" என்று நினைவுப்படுத்தினார்.

அமைச்சர் கட்சி மெம்பர்ஷிப் ஃபார்ம்மை எடுத்து இசக்கி பாண்டியனிடம் நீட்ட இசக்கி அதில் கையெழுத்துப் போட்டு விட்டு, அமைச்சரிடம் நீட்ட, பத்திரிக்கையாளர்களின் கேமராக்கள் அதனை படம் பிடித்தன.

உடனே அமைச்சர் எடுபிடி நீட்டிய ஷாலையும், சந்தன மாலையையும் இசக்கிக்கு அணிவிக்க, அங்கே குழுமியிருந்தவர்கள் கைகளைத் தட்டினர். அமைச்சர் சந்திரசேகர பெருமாள் பத்திரிகையாளர்களை நோக்கி பேச, அவர் முன்னாடி மைக்குகள் நீண்டன.

"பாண்டி ராஜ்ய குடும்பம் பாரம்பரியம் மிக்க குடும்பம். அவர்கள் மூதாதையர்கள் சுதந்திர போராட்டத்துல

பங்கேற்றவர்கள், பாண்டி சகோதரர்களின் தந்தை பல சமூக சேவைகளையும் பெண்களின் உரிமைக்காவும் போராடியவர்! அவரின் வாரிசுகள் பெரிய பாண்டி, செந்தூர பாண்டி, இசக்கி பாண்டி மற்றும் குணசேகர பாண்டி நால்வரும் எங்கள் கட்சியின் கொள்கைகளின் மீது பிடிப்பு உள்ளவர்கள்தான் என்றாலும், துடிப்பும் செயல் திறனும் கொண்ட இசக்கிப் பாண்டியினை வரும் இடைத் தேர்தலில் அம்பா சமுத்திரம் தொகுதி வேட்பாளராக நிற்க வைக்க உள்ளோம். அதிகாரபூர்வ அறிவிப்பு பின்னர் வரும் என்றாலும், கட்சித் தொண்டர்கள் இப்போதே இசக்கி பாண்டி அவர்களுக்காக தேர்தல் பணியினை மேற் கொள்ளலாம்" என்று அறிவித்ததும், ஒரே கரகோஷம்.

அமைச்சர் விடைப்பெற்ற பிறகு வீட்டில் ஒரே கொண்டாட்டம்தான்.

"இசக்கி! எங்கேயோ போயிட்டே!" குணசேகரன் சொல்ல, இசக்கி நினைவு வந்தவனாகச் சொன்னான்,

"குணா! தேனுகாவை பிரச்சாரத்துக்கு அனுப்பணும்! அப்பதான் நான் ஜெயிக்க முடியும்!"என்று சொல்ல,

"தாராளமா அனுப்பறேன்!" என்றான் குணசேகரன்.

# அத்தியாயம் 41

**மெ**ட்ரோ ஹாஸ்பிட்டல் -

டாக்டர் காத்யாயனி டாக்டர் ஹம்ஸவர்த்தினியின் வருகைக்காக காத்திருந்தாள்.

இரவு படர்ந்துவிட்டது. விஸிட்டர்களும், காலை ட்யூட்டிக்கு வந்திருந்தவர்களும் கிளம்பி விட்டிருந்தனர். நோயாளிகளும் இரவு உணவை அருந்தி விட்டு உறங்கச் சென்று விட்டனர். நைட் ட்யூட்டி நர்ஸுகள் மட்டும் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தனர்.

இரண்டாம் மாடியில் இருந்த ஃபார்மஸியும் கூட மூடப்பட்டுவிட்டது. மருந்துவமனையில் ஒளிர்ந்து கொண்டிருந்த பெரிய விளக்குகளையெல்லாம் அணைத்து விட்டார்கள். வராந்தாக்களில் ஆங்காங்கே ஜீரோ வாட்ஸ் பல்ப் மட்டும் எரிந்துக் கொண்டிருந்தன.

மருத்துவமனை பார்க்கிங் ஏரியாவில் பெரிய வீட்டு இன்னோவா காரும் ஒன்றிரண்டு டாக்டர்களின் கார்கள் மட்டும் நின்று கொண்டிருந்தன.

ஹாஸ்பிட்டலின் ஆபரேஷன் தியேட்டர் மட்டும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டது. ஹெட் நர்ஸ், சோஃபியா ஸ்டீஃபன் நைட் டியூட்டி நர்ஸ்களுக்கு உத்திரவு பிறப்பித்துக் கொண்டிருந்தாள்.

"ரூம் நம்பர் 210ல இருக்கிற மிஸஸ் சுபாங்கி சுமார் பத்தரை மணிக்கு ஆபரேஷன் தியேட்டர்க்கு மூவ் பண்ணிடுங்க. அதே டைம்ல அவங்களோட டோனர் ஆபரேஷன் தியேட்டருக்கு வந்துடறேன்னு என்கிட்டே கன்ஃபர்ம் பண்ணிட்டாங்க! டோனர் வில் பி அன்கான்ஸியஸ் ஸ்டேஜ் த்ரு ஔட் த பிராசஸ். கருமுட்டை டோனேட் பண்ற லேடிகிட்டேயிருந்து டிரான்ஸ் வெஜைனல் அல்ட்ரா சௌண்ட் அஸ்பிரேஷன் மூலமா டாக்டர் ஹம்ஸவர்த்தினி கருமுட்டைகளை சேகரிப்பாங்க!"

"ரூம் நம்பர் 108ல சுபாங்கியோட ஹஸ்பெண்ட் சந்தீப் ஷங்கர் இருக்காரு! டாக்டர் நரேந்திரநாத் அவரோட விந்தணுக்களை சேகரிச்சுட்டு லாப்புக்கு வருவாரு!"

"அப்புறம் டோனாரோட முட்டைகளை சந்தீப்போட விந்தணுக்களால் லாப்ல விட்ரோ ஃபர்டிலைசேஷன் பிராசஸ்ல ஃபர்டிலைஸ் செஞ்சு சுபாங்கியோட கருப்பைல அந்தக் கருமுட்டையை செலுத்தப் போறாரு டாக்டர் ஹம்ஸவர்த்தினி!"

"ஆபரேஷன் தியேட்டர்ல என்னோட சாண்ட்ரா, மஹாலக்ஷ்மி, வெண்ணிலா மூணு பேரும் ட்யூட்டி பாருங்க! காஞ்சனாவும், சத்தியதேவியும் லாப்ல ட்யூட்டி!"

"ஃபரீதா! நீ பேஷண்ட்களை டிரான்ஸ்போர்ட் பண்ணு! அவங்களோட பீபி, சுகர்லெவல் செக்கப் பண்ணு! நான் சொன்னது புரிஞ்சுதா? ஏதாவது டௌட் இருக்கா?" சோஃபியா ஸ்டீஃபன் கேட்டதும் நர்ஸ்கள் தலையசைத்தனர்.

சரியாக ஃபோன் மணியடிக்க, சோஃபியா எடுத்து பேசினாள்.

"எஸ் டாக்டர் காத்யாயணி! எல்லாம் ரெடியா இருக்கு! சிஸ்டர்ஸ்களுக்கும் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்தாச்சு! சத்தியாவும், காஞ்சனாவும் டாக்டர் நரேனுக்கு ஹெல்ப் பண்ணுவாங்க! மத்தவங்க ஆபரேஷன் தியேட்டர்ல இருப்பாங்க, டாக்டர்!" என்று சொல்லி ரிஸீவரை வைத்தாள்.

தமயந்தி ஐ.சி.யூ.வில்தான் இருந்தாள். குடும்ப உறுப்பினர்கள் தங்குவதற்காக என்று அடுத்த ரூம் 102ஐ அவர்களுக்கு ஒதுக்கியிருந்தார் டாக்டர் சந்திரசேகர். இரவு வேளைகளில் தேனுகா அந்த அறையில்தான் படுப்பது வழக்கம். வெளியே வெராந்தாவில் இருந்த சோஃபாவில் படுத்தபடி காண்டீபன் அவளுக்குக் காவலாகத் திகழ்ந்தான்.

குணசேரகன், தமயந்தியிடம் அமைச்சர் சந்திரசேகர பெருமாள் வந்த கதையை கூறிவிட்டு, இரவு வீட்டுக்கு கிளம்பினான். அறை எண் 102இல் உட்கார்ந்திருந்த தேனுகாவைக் கதவைத் தள்ளிக் கொண்டு, எட்டிப் பார்த்தார்.

"தேனுக்கண்ணு! நான் வீட்டுக்கு போய்ட்டு, காலையில ஃபேக்டரிக்கு போறதுக்கு முன்னாடி வரேன். நாளைக்கு அம்மாவை ரூமுக்கு மாத்திட்டு, ரெண்டு நாளைல டிஸ்சார்ஜ் பண்ணிடறேன்னு பெரிய டாக்டர் சொல்லிட்டார்! நீ கவலைப்படாம தூங்கு!"

குணசேகரன் சொல்ல, தேனுகா தலையசைத்தாள். குணசேகர பாண்டி கதவைச் சாற்றிக் கொண்டு வெளியே வராந்தாவில் சோஃபாவில் அமர்ந்திருந்து காண்டீபனைப் பார்த்தான்.

"காண்டீபா! பத்திரம்!" என்று சொல்லிவிட்டு குணசேகர பாண்டி அந்த நீண்ட வெராந்தாவை கடக்கத் துவங்கினான்.

103, 104 என்று அறைகளைக் கடந்தபடி கம்பீரமாக நடந்தான் குணசேகர பாண்டி. சரியாக அதே சமயம், அதே கம்பீரத்துடன் கையில் மினரல் வாட்டர் பாட்டிலுடன் காமேஷ் நடந்து வந்து கொண்டிருந்தான்.

112, 111 என்று அறைகளை கடந்தபடி அவன் எதிரே வந்து கொண்டிருந்தான்.

காமேஷின் கண்கள் எதிரே வரும் குணசேகர பாண்டியை தொலைவில் வரும்போதே அடையாளம் கண்டு கொண்டு விட்டன. அவனைக் கண்டதும் காமேஷின் வழக்கமான கோபம் பீறிட்டு எழுந்தது. 'இப்போதைக்கு பிரச்னை எதுவும் செய்யாமல் அடங்கு' என்று மனம் உத்தரவு இட, சற்று வேகமாக நடந்தான் காமேஷ்.

104ஆம் எண் அறையை கடந்து 105ஆம் எண் அறையை கடக்கும்போது, குணசேகரனின் பார்வை காமேஷின் மீது விழுந்தது.

யார் இந்தப் பையன்? தெரிந்தவன் போல் இருக்கிறானே. அவன் முகம் பரிச்சயமாக காணப்படுவதை உணர்ந்து அந்த மங்கிய ஜீரோ வாட்ஸ் ஒளியில் கூர்ந்து கவனித்தான். இருளில் முகம் சரியாக புலப்படவில்லை.

அருகில் வரும்போது கவனிப்போம் என்று அவனைத் தொடர்ந்து கவனித்தபடி 105ஆம் அறையை கடந்து 106 ஆம் அறையை கடக்கும் போது, காமேஷ் 110, 109 என்று அறைகளை வேகமாக கடந்தான்.

குணசேகர பாண்டி 107ஆம் எண் அறையை கடக்க துவங்கும்போது சட்டென்று 108ஆம் அறைக்குள் நுழைந்த காமேஷ் தன் பின்னால் கதவை சட்டென்று சாற்றிக் கொண்டான்.

குணசேகரன் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தன் முகத்தில் அறைந்து சாற்றப்பட்டது போன்று மூடப்பட்ட அந்தக் கதவைக் கூர்ந்து கவனித்தான்.

அறை எண் 108 என்று கண்ணில்பட, கீழே இறங்கியதும், ரிசப்ஷனில் இருந்த நைட் ட்யூட்டி க்ளார்க் கார்த்திகாவிடம் விசாரித்தான்.

"ஏம்மா! 108ஆம் எண் அறையில் யார் தங்கியிருக்காங்க!"

"கார் விபத்துல அடிபட்ட கிரிக்கெட் ப்ளேயர் சந்தீப் ஷங்கர் அட்மிட் ஆயிருக்காரு! அவர்கூட அவரது செகரட்டரி இருக்காரு!" என்றாள் க்ளார்க் கார்த்திகா.

"யாரு.. இப்ப ஒரு தம்பி தண்ணீர் பாட்டிலே போனாரே! அவருதான் செக்ரட்டரியா?" குணசேகரன் கேட்க, 'ஆம்' என்ற பாவனையில் அந்தப் பெண் தலையசைத்தாள்.

தான் பார்த்த வாலிபன் யாரோ ஒரு புதிய நபர் என்று நினைத்தபடி பார்க்கிங் பகுதியை நோக்கி நடந்தான் குணசேகரன். இவன் இன்னோவா காரின் டிரைவர் சீட் பக்கமாக நகர்ந்து, கார் கதவைத் திறக்க முற்பட்டபோது, ஒரு ஸ்கார்ப்பியோ கார் உள்ளே வேகமாக நுழைந்து, இன்னோவாவின் பக்கத்தில் இருந்த ஐ20 காருக்கு அடுத்ததாக நின்றது. காரிலிருந்து இறங்கிய உருவத்தைக் கண்டு திகைத்துப் போனார், குணசேகரன்.

இவர்களுடைய தாய்மாமன் காசிலிங்கம்தான் டிரைவரின் பக்கத்து இருக்கையிலிருந்து இறங்கினார்.

சட்டென்று, தன் தலையைச் குனிந்து கொண்டு ஐ20யின் பின்பாக ஒளிந்துக் கொண்டார், குணசேகர பாண்டி.

டாக்டர் காத்யாயணி என்று அந்த ஐ20யின் பின்பாக ஸ்டிக்கர் ஒட்டியிருக்க, காத்யாயிணியின் கார் பின்பாக மாமன் கிளம்பி போகும்வரை காத்திருப்போம் என்று பதுங்கினார்.

**ஆ**னால் -

மாமன் உடனடியாக புறப்படவில்லை. காரிலிருந்து இறங்கிய இன்னும் இருவருடன் நடக்கத் துவங்கினார் மாமா!

"ஹம்ஸா! நரேந்திரா! இவ்வளவு தூரம் வந்துட்டு, நம்ம ஊர் திருவிழாவுக்கு வரலைன்னா எப்படி? இதோ கூப்பிடு தூரத்துல இருக்கு அம்பாசமுத்திரம்..!" காசிலிங்கம் கூறினார்.

"அப்பா! டிரை பண்றேன்! ஆனா வரலைன்னா கோவிச்சுக்காதீங்க! என் புருஷன் ஒரு ஆராய்ச்சிக்காகத்தான் இந்த கோவூருக்கு வந்திருக்காரு! அவருக்கு உதவியாதான் நான் வந்திருக்கேன்!" ஹம்ஸவர்த்தினி சொன்னாள்.

"நரேன்! நீயாவது வாயேண்டா?"

"சாரிப்பா! அக்கா வந்தால் நான் வரேன்! இல்லேன்னா நான் வரலை!"

காசிலிங்கம் நொந்து போனார்.

"நீங்க சொல்லுறதை எல்லாம் நான் கேட்கணும்! நீங்க 100 ஏக்கரா மஞ்சகாணி நிலத்தை பாஞ்சாலியத்தைக்கு கொடுத்துடுங்கன்னு சொன்ன வார்த்தைக்கு மரியாதை வச்சு நான் கொடுத்தேன் இல்லே! ஆனா நான் உங்களை ஊருக்கு வான்னு கூப்பிட்டா நீங்க வரமாட்டீங்க! அவ்வளவுதானே நீங்க

எனக்கு வச்சிருக்கிற மதிப்பு!" காசிலிங்கம் பொரிந்து தள்ளினார்.

"அப்பா! இன்னும் ஒரு வருஷம்தான்! அப்புறம் நான் நிரந்தரமா உங்க பிள்ளையா அம்பாசமுத்திரத்தோட வந்து உங்களோட தங்கிடப் போறேன்.." நரேந்திரநாத் சொல்ல, காசிலிங்கம் அதிசயத்துடன் அவனைப் பார்த்தார்,

"நிஜமாவா?"

"சத்தியமாப்பா! நான் உங்களோடதான் வந்து தங்கப் போறேன்!" நரேந்திரநாத் சொன்னதும் அகமகிழ்ந்து போனார் காசிலிங்கம்.

"ரொம்ப சந்தோஷம்பா! உனக்காக நான் காத்திருப்பேன். சீக்கிரம் இந்த ஊர்ல ஆராய்ச்சியை முடிச்சுகிட்டு கிளம்பு ஹம்ஸா! பாண்டி ராஜ்ய சகோதரர்களுக்கு நீங்க யாருன்னு தெரிய வேண்டாம்!" காசிலிங்கம் சந்தோஷத்துடன் கிளம்பிப்போனார்.

தன் மாமன் மக்களை பார்க்க வேண்டும் என்கிற ஆவலில் எட்டிப் பார்த்த குணசேகரன் திடுக்கிட்டு போனான்.

ஹெட்மாஸ்டர் வீட்டில் வாடகைக்கு, தங்கியிருக்கும் ஹம்ஸவர்த்தினி, காசிலிங்க மாமாவின் மகளா? தலைச்

சுற்றியது குணாவுக்கு. அவள் பக்கத்தில் நின்றிருந்த அந்த நெடிய உருவத்தைப் பார்த்த குணாவுக்கு மயக்கமே வந்து விட்டது. இவனுடைய ஃபோட்டோவை அன்று ஹம்ஸாவின் வீட்டில் பார்த்தானே. அமெரிக்காவில் வசிக்கும் தன் கணவனின் மாணவன் என்றாளே ஹம்ஸா!

இவன் மாமன் மகன் நரேந்திரனா? மாமாவின் கல்யாணத்தில் இருந்தே இவர்கள் குடும்பம் மாமன் குடும்பத்திற்கும் உறவு முறிந்து விட்டதால் ஒருவருக்கொருவர் பார்த்தது கிடையாது.

கடைசியில் ரேணுகா மாமன் மகன் நரேந்திரநாத்தைதான் காதலித்து மணந்திருக்கிறாள். ஆனால், அவன் யார் என்பது தெரியாமலேயே!

குணசேகரன் அதிர்ச்சியுடன் அந்த ஐ20 காரில் சரிந்தான். இவர்கள் ஒன்று நினைக்க, விதி வேறு மாதிரி நினைக்கிறதே?

ரேணுகா மாமன் மகனைத்தான் மணந்திருந்தாள் என்பது தெரிந்திருந்தால், அந்த புயல் வீசிய இரவு அன்று நடந்த சம்பவத்தை இவர்கள் தவிர்த்திருப்பார்களோ?

கடைசியில் தேனப்பன் உண்மையைத்தான் கூறியிருக்கிறான். அவன் காசிலிங்கம் மாமாவை தொடர்ந்து வந்து அவர் ஹம்ஸாவின் வீட்டிற்குள் நுழைவதைப்

பார்த்திருக்கிறான் அவன் பெரிய வீட்டில் விஷயத்தை கூறிவிடப் போகிறானே என்கிற கவலையில் அவனைத் தாக்கியுள்ளனர்.

நரேந்திரநாத்தும், ஹம்ஸவர்த்தினியும் இந்நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு எதற்கு வந்தார்கள்?

தமயந்தியும், தேனுகாவும் அதே ஆஸ்பத்திரிக்குள் இருக்கும் வேளையில் இவனால் கவலைப்படாமல் இருக்க முடியவில்லை.

தண்ணீர் வாங்கிக் கொண்டு சென்ற அந்த கிரிக்கெட் ப்ளேயரின் செக்ரட்டரி இவனைக் கண்டதும் அவசரமாக ரூம் நம்பர் 108க்குள் ஒளிந்து கொண்டது போல இருக்கிறதே! என்ன நடக்கிறது ஆஸ்பத்திரியில்?

சட்டென்று குணசேகரனுக்கு ஒரு யோசனை தேனப்பனுக்கு அவசரமாக ஃபோன் செய்தான்.

ஃபோனில் அவன் குரல் கேட்டதும் குணசேகர பாண்டி மெதுவான குரலில் பேசினான்.

"தேனப்பா! பழசையெல்லாம் மனசுல வச்சுக்காதே! உடனே வேலையில சேரு! இசக்கி அண்ணன் வேற எலக்ஷனுல நிக்கப்போறாரு! உன் திறமை எங்களுக்குத்

தேவை! இப்ப உடனடியா நீ மெட்ரோ ஹாஸ்பிட்டலுக்கு வா! நீ ரிவால்வர் லைசென்ஸ் வச்சிருக்கே இல்லே! ரிவால்வரை லோட் செஞ்சு எடுத்துகிட்டு வா!" என்றான் குணசேகரன்.

பிறகு வீட்டுக்கு போகும் எண்ணத்தை கைவிட்டு விட்டு, மீண்டும் ஹாஸ்பிட்டலினுள் நுழைந்தான். நேராக தேனுகா இருந்த ரூம் நம்பர் 102க்குள் நுழைந்தான். அறையில் யாருமில்லை. திடுக்கிட்டு உள்ளே பரபரப்புடன் நுழைந்தான். பாத்ரூம் கதவு சாற்றப்பட்டு உள்ளே தண்ணீர் பெருகியோடும் சத்தம் கேட்டது.

தேனுகா பாத்ரூம் உள்ளே இருப்பதை புரிந்துக் கொண்டு, நிம்மதியுடன் வெளியே வந்தான்.

காண்டீபன் சோஃபாவில் தூங்கிக் கொண்டிருந்தான். எரிச்சலுடன் அவனை எழுப்பினான்.

"என்னடா தூங்கிட்டு இருக்கே! காவலுக்கு வந்த இடத்துல! காண்டீபா! டாக்டர் நரேனும், ஹம்ஸ வர்த்தினியும் என் மாமன் பிள்ளைங்க. அவங்க இந்நேரத்தில் ஆஸ்பத்திரில என்ன செய்றாங்க தெரியலியே?"

குணசேகரன் கேட்டுக் கொண்டிருந்தபோதே நர்ஸ் சத்தியதேவி அந்தப் பக்கமாக ஏதோ ட்ரேயுடன் சென்றாள். அவளை வழி மறித்தான் குணசேகர பாண்டி.

"டாக்டர் நரேந்திரநாத், ஹம்ஸா ரெண்டு பேரும் எதுக்கு ஆஸ்பத்திரிக்கு வந்திருக்காங்க மேடம்! ஏதாவது எமர்ஜென்ஸியா?" குணா கேட்டான்.

"மிஸ்டர் சந்தீப்புக்கும், அவர் மனைவி சுபாங்கிக்கும் முக்கியமான ஆபரேஷன். அதுக்குத்தான் வந்திருக்காங்க!" என்றதும் குணசேகரன் மனதிலிருந்து பெரும் பாரம் இறங்கியது போல் இருந்தது.

மீண்டும் தேனுகாவின் அறைக்குள் எட்டிப் பார்த்தான் குணசேகர பாண்டி! இன்னும் அவள் பாத்ரூமினுள்தான் இருந்தாள். தண்ணீர் பெருகியோடிக் கொண்டிருந்தது. ஒருவேளை குளிக்கிறாளோ என்னமோ?

இவன் பயந்தது போல் ஹாஸ்பிட்டலில் ஒன்றும் நடக்கவில்லை! காசிலிங்கம் குடும்பத்தைக் கண்டதும் அனாவசியமாக பயந்து விட்டிருந்தான். வீட்டுக்கு போகலாம் என்கிற முடிவோடு, கடைசியாக தமயந்தியை ஒருமுறைப் பார்த்துவிட்டு போகலாம் என்று ஐ.சி.யூ.வை நோக்கி நடந்தான்.

நர்ஸ் ஃபரீதா ஓடிவந்தாள்.

"சார்! பேஷண்ட் தூங்கறாங்க! நாளைக்கு வாங்க!" என்றதும் தலையசைத்து விட்டு 102ஆம் எண் அறை கதவைத் திறந்து உள்ளே பார்த்தான்.

தேனுகா பாத்ரூம் கதவைத் திறந்து தனது பச்சை பாவாடையையும், தாவணியையும் வெளியே தூக்கிப் போட்டாள்.

"என்னம்மா தேனு! குளிக்கிறியா?" குணா கேட்டான்.

"ம்" என்று பதிலளித்தாள் தேனுகா.

"நான் வரேம்மா!" என்றபடி அறைக்கதவை சாற்றிக் கொண்டபடி, காண்டீபனிடம் விடை பெற்றுக் கொண்டு, பார்க்கிங் ஏரியாவை நோக்கி நடந்தான் குணா.

கீழே ரிசப்ஷனில் பென்சில் நுனியை கடித்தபடி க்ளார்க் கார்த்திகா உட்கார்ந்திருந்தாள். இவரைப் பார்த்ததும் லேசாக புன்னகைத்தாள்.

குணா இறங்கி போனதும், ரும் நம்பர் 102க்கு போன் செய்தாள், கார்த்திகா! பாத்ரூம் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள் தமயந்தி. ஃபோனை எடுத்தவள், கார்த்திகாவின் குரலைக் கேட்டதும் புன்னகைத்தாள்.

"கிளம்பிட்டாரா?"

"கிளம்பிட்டார், மேடம்!"

"தாங்க்யூ கார்த்திகா! நீ அலர்ட் பண்ணலைனா நிலமை விபரீதமாக போயிருக்கும்!" என்றபடி ரிஸீவரை வைத்தாள், தமயந்தி.

# அத்தியாயம் 42

"**ஹா**ய்! சந்தீப் ஹௌ ஆர் யூ?" என்றபடி டாக்டர் நரேன் 108ஆம் எண் அறையினுள் நுழைந்தார்.

"நல்லாயிருக்கேன் டாக்டர்! சோர்வுடன் சொன்னான் சந்தீப்!"

"சியர் அப் மை பாய்!" என்றபடி சந்தீப்பின் புஜத்தில் தட்டினார். சிஸ்டர் காஞ்சனா உள்ளே எட்டிப் பார்த்ததும், டாக்டர் நரேன் அங்கிருந்த காமேஷைப் பார்த்தார்.

"நீ வெளியே போ, காமேஷ்! சந்தீப்பை பற்றி கவலைப்படாதே! ஹி வில் பி அப்சல்யூட்லி ஆல்ரைட்!" டாக்டர் நரேன் சொன்னதும், காமேஷ் அறையை விட்டு வெளியேறி லிஃப்டை நோக்கி நடந்தான்.

அப்போது -

பேஷண்ட் ஒருவரை ஸ்டெச்சரில் தள்ளியபடி நர்ஸ் ஃபரீதாவும், ஆயா ஒருத்தியும் லிஃப்ட்டை நோக்கி வந்தனர்.

காமேஷ் அவர்களுக்கு வழிவிட்டு, ஒரு ஓரமாக ஒதுங்கிக் கொண்டான்.

"ஆபரேஷன் தியேட்டருக்கு அழைச்சுட்டு போறதுக்கு முன்னாடியே சேடிஷன் கொடுத்துடச் சொன்னாங்க டாக்டர் காத்யாயிணி. அதனால ரூம்லயே கொடுத்துட்டோம்னு ஹெட் நர்ஸ் சோஃபியா கிட்டே சொல்லு!" நர்ஸ் ஆயாவிடம் சொன்னாள்.

காமேஷ் அவர்களின் பேச்சை கவனித்தபடி பேஷண்டின் முகத்தை தற்செயலாக நோக்கினான்.

ஆயிரம் தேள்கள் கொட்டியது போல உணர்ந்தான், காமேஷ்.

நரேன் சந்தீப்பின் அறையில் இருந்து வெளியேறியவர் நேராக லாபரட்டரியை நோக்கிச் சென்றார்.

லாபரட்டரியில் நர்ஸ் காஞ்சனாவும், சத்தியதேவியும் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தார்கள். உடனே காரியத்தில் இறங்கினார், டாக்டர் நரேன்.

108ஆம் அறையில் சந்தீப் ஷங்கர் விட்டத்தில் ஊர்ந்து கொண்டிருந்த அந்த பல்லியையே பார்த்துக் கொண்டிருந்தான். வயதாகி விட்டபடியால் அந்த பல்லியினால் பூச்சி ஒன்றை பிடிக்க முயன்று தொடர்ந்து தோல்வியை தழுவிக் கொண்டிருந்தது. அதை நோட்டம் விட்டுக் கொண்டிருந்த சந்தீப்பின் கண்களில் ஈரம் கசிந்தது.

ஆபரேஷன் தியேட்டரில் சுபாங்கி மயக்கத்தில் படுத்திருந்தாள். அவளது கருமுட்டைகள் பயனளிக்காத நிலையில், இன்னொரு பெண்ணின் கரு முட்டையை சுமப்பதற்காக காத்திருந்தாள்.

டாக்டர் நரேந்திரநாத் கர்மமே கண்ணாக இருந்தார்.

காமேஷ் மனக்குழப்பத்துடன் உட்கார்ந்திருந்தான். சந்தீப்புக்காக அவன் மனம் வருந்திக் கொண்டிருந்தது. அவன் மனம் எப்படியாவது சந்தீப்புக்கு மகிழ்ச்சி கிடைக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தது.

டாக்டர் காத்யாயணி, ஹெட் நர்ஸ் சோஃபியா ஸ்டீஃபன், சிஸ்டர்ஸ் சாண்ட்ரா, மஹாலக்ஷ்மி, காஞ்சனா, சத்தியவதி, வெண்ணிலா என்று அத்தனை பேரும் சக்கரமாக சுற்றினர்.

நடு இரவு -

டாக்டர் நரேனும், டாக்டர் ஹம்ஸவர்த்தினியும் கை குலுக்கிக் கொண்டனர்.

"சந்தீப்! யூ ஆர் கோயிங் டு பி எ ஃபாதர்!" ஹம்ஸவர்த்தினி சந்தீப்பிடம் அறிவித்தாள்.

"கங்கிராட்ஸ் சுபாங்கி! நீ அம்மாவாகப் போறே!" சுபாங்கியிடம் அறிவித்தார் டாக்டர் நரேன்.

சந்தீப் நீட்டிய கையை ஆவலுடன் பாய்ந்து பிடித்தான் காமேஷ். சந்தீப்பின் கண்களில் நிலவிய சந்தோஷத்தைக் கண்டு போன உயிர் வந்தது காமேஷுக்கு.

# அத்தியாயம் 43

**வி**டியற்காலை -

அங்காயி எழுந்து ஒரு பிடி சாணியை வாளி நீரில் கரைத்து கீழ் போர்ஷன் வாசலில் தெளிப்பதற்காக படியில் வைத்து விட்டு கோலமாவு கலயத்தை எடுப்பதற்காக உள்ளே சென்றாள்.

அங்கண்ணி எழுந்து நெகிழ்ந்திருந்த கூந்தலை கொண்டையாக முடிந்தபடி, கரித்தூள் மற்றும் உப்பை எடுப்பதற்காக கொல்லைப்புறம் சென்றாள்.

என்றும் இல்லாத திருநாளாக அவள் மாமியார் ஜன்னல் பக்கமாக வந்து தன் மூத்த மருமகளைப் பார்த்தாள்.

"மூத்த மருமவளே! நேத்து நடுராத்திரி ரேணுகா கனவுல வந்தா! என்னை பாயாசம் செஞ்சு சாப்பிடச் சொன்னா! எனக்கு பாயசம் செஞ்சு கொடு!" என்று கேட்டாள்.

கரித்தூளையும், உப்பையும் கலந்து ஆள்காட்டி விரலால் எடுத்து, பற்களில் தேய்க்கத் துவங்கினாள், அங்கயற்கண்ணி.

'இந்த கிழவிக்கு வேற வேலை இல்லை. எப்பப் பார்த்தாலும் ரேணுகா... ரேணுகா..' மனதிற்குள் கருவினாள் அங்கயற்கண்ணி.

'கெட்டகேட்டுக்குப் பாயசம் வேணுமாம்.' மாமியாரை மனதினுள் திட்டிக் கொண்டிருக்கும் போதே ஹாலில் ஃபோன் அடித்தது.

பெரிய பாண்டி மெதுவாய் போய் ஃபோனை எடுத்து 'ஹலோ' என்று கூறும் குரல்தான் கேட்டது.

அடுத்த நிமிஷம் "ஐயோ.. மகனே!" என்றொரு ஓலம் அவரிடமிருந்து எழுந்தது. வாயைக் கொப்பளிக்க கூட தோன்றாமல் கூடத்திற்கு ஓடினாள், அங்கயற்கண்ணி.

"என்ன ஆண்டே! என்னாச்சு!" அங்கண்ணி அலறினாள்.

"நம்ம மவன் பட்டமளிப்பு விழாவுக்கு போகச்சே, கார் விபத்துல பலியாயிட்டானாம்டி அங்கு!" என்று கதற,

அங்கண்ணி. "ஐயோ.. கருத்திரு பாண்டி!" என்று ஓலமிட்டபடியே சுருண்டு விழுந்தாள்.

அண்ணன் குடும்பத்தின் அலறல் கேட்டு மாடியில் இருந்து இறங்கி ஓடோடி வந்த செந்தூர பாண்டி அங்காய் தண்ணீர் வைத்திருந்த இரும்பு வாளியை கவனியாமல் அதன் மேல்

இடறி விழ அப்படியே உருண்டு சென்று இரும்புக் கதவின் மீது விழுந்தான்.

"ஐயோ!" என்று கற்பகம் அலறியபடி அவனை தூக்க முயல, வலித்தாங்காமல், "ஹா" என்று அலறினான் செந்தூரம். அவனால் இடுப்பையே அசைக்க முடியவில்லை.

அவனது அலறலைக் கேட்ட அங்காயி பரபரப்புடன் கோலமாவு கலயத்துடன் வர, கற்பகம் அவள் மீது பாய்ந்தாள்.

"கிழவி! இரும்பு வாளியை இப்படியா நடு வீட்டு முன்னால வப்பே!" என்று அவள் கர்ஜிக்க, அங்காயின் சப்தநாடியும் ஒடுங்கி போனது.

கீழே ஏதோ பிரச்னை என்பதைப் புரிந்து கொண்டு கீழே வந்தான் குணசேகரன். பெரியவர் மற்றும் செந்தூரப்பாண்டியின் நிலைமையைப் பார்த்து பதறி, டிரைவரை அழைத்தான்.

கீழே வந்த கலாவதி சமயோசிதமாக, ஆம்புலன்ஸை அழைக்க, பெரியவரையும் செந்தூரப் பாண்டியையும் அள்ளிப் போட்டுக் கொண்டு மெட்ரோ ஆஸ்பிடலை நோக்கி பறந்தது ஆம்புலன்ஸ். உடன் சென்றனர் கற்பகமும், குணசேகர பாண்டியும்.

மயங்கிக் கிடந்த அண்ணியை மூர்ச்சை தெளிவித்து கலாவதி அவளை கொல்லைக்கு அழைத்துச் சென்று வாயை கொப்பளிக்கச் செய்தாள். அழுது கொண்டிருந்த அங்கண்ணியை படுக்கையில் படுக்க வைத்து விட்டு, காபி தயாரிப்பதற்காக சமையலறைக்குச் சென்றாள்.

அங்காயி கவலையுடன் கலாவதியைப் பார்த்தாள்.

"என்னம்மா நடக்குது, வீட்டுல!"

"தெரியலை அங்காயி! அங்கண்ணி மவன் விபத்துல இறந்துட்டானாம்! அந்த அதிர்ச்சியில பெரிய ஐயாவுக்கு மார்வலி வந்துடுச்சு! அவரை சமாதானம் செய்ய வந்த சின்ன ஐயா வாளி தடுக்கி விழுந்து இடுப்பை உடைச்சுகிட்டாரு!" கலாவதி கவலையுடன் சொன்னாள்.

"நான் ஒரு கூறு கெட்டவ! இரும்பு வாளியை அங்கிட்டா வப்பேன்!" அங்காயி தன்னையே நொந்து கொண்டாள்.

வாசலில் ஏதோ அரவம். கலாவதி எட்டிப் பார்த்தாள். அவளது கணவன் இசக்கி முத்துதான் கோபாவேசமாக, கையில சுருட்டிய செய்தியத்தாளுடன் வேகமாக உள்ளே வந்தான்.

கலாவதியை கீழே பார்த்ததும் வியப்புடன் கீழ்ப் போர்ஷனில் உள்ளே நுழைந்தான்.

சென்னைக்கு முந்தைய தினம் சென்றிருந்தவன், எதற்காக இப்படி அடித்துப் பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்திருக்கிறான்.

"எல்லாம் போச்சு கலா!" பேப்பரை அவள் முன்பாக காட்டினான், இசக்கி.

'அமைச்சர் சந்திரசேகர பெருமாள் கைது! நில அபகரிப்பு செய்தார்!'

'ஆதரவாளர்களுடன் கட்சியை விட்டு நீக்கம்!'

'முதல்வர் நடவடிக்கை' என்று இருந்தது.

நீக்கிய ஆதரவாளர்களில் 'இசக்கி பாண்டி'யின் பெயரும் இருந்தது.

"அதிர்ந்து போனாள் கலாவதி! என்னங்க! எல்லாமே தலை கீழா நடக்குது!"

கண்களில் நீர் பெருக கலாவதி கதறினாள்.

"என்னாச்சு கலா! அண்ணன் எங்கே?" நடந்ததை விவரித்தாள், கலாவதி. இசக்கி நடுநடுங்கிப் போனான்.

"நான் இப்பவே ஹாஸ்பிட்டலுக்கு போறேன்!" என்று காபி கூட அருந்தாமல் வெளியே ஓடினான் இசக்கி.

அங்காயி கலாவதியைப் பார்த்தாள்.

"சின்னம்மா! நான் போய் கோடங்கியை கூப்பிட்டு வரட்டா! அவர் வந்தால் பிரச்னையை சமாளிப்பாரோ என்னவோ! பரிகாரம் ஏதாவது சொல்லுவாரு?"

"உடனே செய்!"

கலாவதி சொல்லிவிட்டு திரும்பினாள்.

அங்காயி நிதானமாக தோட்டத்தை கடந்து கேட்டை நெருங்க சரியாக மாசானம் வந்து கேட்டருகே நின்றான்.

"அங்காயி பாட்டி! பெரிய பாண்டிகிட்டே சொல்லு! கோடங்கி காலையில இறந்துட்டாராம்! திடீர்னு மாரடைப்பு வந்துடுச்சாம்!" சொல்லிட்டு ஓடினான் மாசானம்.

அங்காயி பேயறைந்தவளைப் போல திரும்பி உள்ளே வருவதைக் கண்ட கலாவதித் திகைத்தாள்.

"என்ன அங்காயி திரும்பி வந்துட்ட! கோடங்கியை கூப்பிட கிளம்பின?" கலாவதி கேட்க அங்காயின் மேனி நடுங்கியது.

"சின்னம்மா..! கோடங்கி இறந்துட்டாராம்.." அங்காயி சொல்ல, விதிர்விதிர்த்து நின்றாள் கலாவதி.

"அங்காயி!"

கொல்லையிலிருந்து பாஞ்சாலியின் குரல் கேட்டது.

அங்காயி அமைதியாக சென்று பாஞ்சாலி அமர்ந்திருந்த ஜன்னலின் அருகே சென்றாள்.

"அங்காயி! மருமவளை பாயாசம் செய்ய சொல்லு! எனக்கு பாயாசம் சாப்பிடணும் போல இருக்கு!" அவளை உறுத்துப் பார்த்தபடி சொன்னாள், பாஞ்சாலி.

கலாவதியின் முதுகுத்தண்டு ஜில்லிட்டது. ஹாஸ்பிட்டலில் தமயந்தி மற்றும் தேனுகாவை சந்தேகத்துடன் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான் குணசேகரன்.

ஆஸ்பத்திரியில் நடு இரவில் என்ன நடந்திருக்கக் கூடும்? காண்டீபன் ஒன்றுமே நடக்கவில்லை என்கிறான். ஆனால் ஒரே நாளில் பாண்டி ராஜ்ய குடும்பமே நிலை குலைந்து ஒன்றுமில்லாமல் ஆகிவிடும்படி என்ன நடந்தது? தேனுகாவின் சௌபாக்கியங்கள் எங்கே போனது.

காலண்டரில் தேதியைப் பார்த்தான்.

'ஜூலை 27'

அன்றுதானே கன்னியாகுமரிக்கு சென்று தனித்திருந்த ரேணுகாவை பலவந்தமாக இழுத்து வந்து அவளை கட்டாயப்படுத்தி அரளி விதை விழுதை உண்ண வைத்த நாள். புயல் வீசிய அந்த இரவில்தானே அவளது கணக்கை சகோதரர்கள் முடித்த நாள்.

குணசேகரன் செய்வதறியாது நின்றிருந்தான்.

# அத்தியாயம் 44

**சு**பாங்கி டாக்டர் ஹம்ஸவர்த்தினி வீட்டின் முன்பாக பரவிக் கிடந்த புல்வெளியில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்திருந்தாள். செல்ஃபோனில் வீணை இசையை ஒலிக்கச் செய்து, அதனை ஹெட் ஃபோனில் செவிமடுத்தபடி ஜில்லென்று வீசிய இனிமையான காலைத் தென்றலை அனுபவித்துக் கொண்டிருந்தாள். இது சுபாங்கிக்கு புது அனுபவம்.

நகர வாழ்க்கையின் அன்றாட ஆர்ப்பாட்டங்களில் மூழ்கி திளைத்தவளுக்கு தாய்மை அனுபவமே, வாழ்க்கையின் மறுபக்கமாக கிராமத்தின் அமைதியானச் சூழ்நிலையை அவளுக்கு வாரி வழங்கியது. போலித்தனமில்லாத அந்தக் கிராம மக்களின் எளிய நடவடிக்கைகளை அவளுள் வியப்பை ஏற்படுத்தியிருந்தது.

ஒருநாள் -

காலை வாக்கிங் சென்று கொண்டிருந்த சுபாங்கியின் பின்பாக ஒரு பெண்மணி ஓடோடி வந்தாள்.

இந்தாம்மா பொண்ணு! முழுகாம இருக்கியா! எங்க தோட்டத்துல விளைஞ்சது என்று சொல்லி மாங்காய், சப்போட்டா, வாழைப்பழம் என்று கூடை நிறைய கனிகளைத் தந்தாள்.

சுபாங்கிக்கு ஆச்சரியமாக இருந்தது. முன் பின் அறியாத தன்னிடம் கிராம மக்கள் உதவி புரிவதும், அன்பு வார்த்தைகளைப் பேசுவதும் அவளும் வியப்பை அளித்தது.

வேகம் விவேகமில்லை என்பது போக்குவரத்துக்காகச் சொல்லப்பட்டது மட்டுமல்ல. நகர வாழ்க்கைக்கும் சேர்த்துதான்.

வேகமாக கடிகார முள்ளிற்கு ஏற்றது போல காரியமாற்றுவதால் பணம் வேண்டுமானால் நிறைய கிடைக்கலாம்! ஆனால் மனதில் நிம்மதி நிரம்ப வேண்டுமே!

அந்த நிம்மதியை முதன் முறையாக கோவூரில் அனுபவித்தாள். சுபாங்கி! புகழ் முக்கியத்துவம், செலிபிரிட்டி ஸ்டேட்டஸ் எல்லாமே அவளுக்கு போலித்தனமாக தோன்றி விட்டது.

கையில் ஃபோன் எப்போதும் இருந்தால் பொழுது போகாமல் சட்டென்று ஏதாவது எண்ணுக்கு அழைத்து பேசுவது, முக நூலில் போஸ்ட் செய்து, அதை குறித்து

கமெண்ட் செய்பவர்களிடம் மல்லுக்கு நிற்பது, வாட்ஸ் அப்பில் பரவும் விஷமச்செய்திகளுக்கு பரபரப்புடன் ரியாக்ட் செய்து, டிவிட்டரில் ட்ரோல் செய்வது என்று எல்லாவற்றையும் விட்டொழித்து விட்டு, பறவைகளின் கூக்குரலையும், மாடுகள் கத்தலையும் அணு அணுவாக ரசித்துக் கொண்டிருந்தாள், சுபாங்கி.

தொழிலதிபர் நித்யமூர்த்தியின் ஒரே மகள். அவரது பரந்து விரிந்த சாம்ராஜ்யத்திற்கு ஏக போக வாரிசு, என்றெல்லாம் தன்னை நினைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறாள். ஆனால் இந்த கோவூர் கிராமத்தில், எத்தனை முறை அந்த சாம்ராஜ்யத்தை பற்றியோ தனது தந்தையைப் பற்றியோ நினைத்திருக்கிறாள்?

கோவூரைப் பற்றியோ, அதில் வசிப்பவர்களைப் பற்றியோ யாருக்குத் தெரியும்? உயர்ந்த கோபுரமும், பிரம்மாண்ட மதில் சுவர்களுடனும், பாரம்பரியப் பெருமைகளை தன்னில் கொண்டிருந்தும், வெளியுலகத்திற்குத் தன்னை முன்னிறுத்தாமல், மோன நிலையில் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கும் இந்த கோவூர் கோவிலே ஒரு பாடத்தைத்தானே புகட்டுகிறது. வீடுகள் இடிக்கப்பட்டு ப்ளாட்டுகள் ஆவதும், பழைய ப்ளாட்டுகள் இடிக்கப்பட்டு அங்கே புதிய குடியிருப்புகள் எழுவதும், வாடிக்கையாகி விட்ட

இந்நாளில், ஆயிரம் வருஷங்கள் கழிந்தும், இன்னும் ஆயிரம் வருஷங்கள் இருக்கப் போகிறது என்கிற போதும், இந்தக் கோவில்கள் அமைதியை கடை பிடிக்கின்றனவே!

மனதில் கோவூரின் ரம்யமான சூழ்நிலையில் அவளது சிந்தனை குதிரை வேகத்தில் நேர்மறை எண்ணங்களில் மேய்ந்து கொண்டிருக்க, கோவூரின் கோபுரத்தினையே நோட்டம் விட்டபடி வீணையிசையில் லயித்திருந்தாள்.

"ம்யூஸிக்ல ஆழ்ந்து போயிட்டே போல இருக்கே!"

ஹம்ஸவர்த்தினி அவள் முகத்திற்கு நேராக கையை ஆட்டியபடி எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

"நிஜமாகவே டாக்டர்! இந்த கிராமத்து சூழ்நிலை என் மனசுக்கு இதமாக இருக்கு! என்னோட வந்து ஸ்டே பண்ணுன்னு நீங்க அட்வைஸ் செஞ்சதும் முதலுல நான் தயங்கினேன். பட்! இங்கே வந்து தங்கினதும், மனசுல நிம்மதிதான் இருக்கு!"

"எஸ் சுபாங்கி! நானும் வந்த உடனே இந்த நிம்மதியை உணர்ந்தேன். சக்ஸஸ்ஃபுல் கைனோங்கிற ஈகோவை சென்னையிலேயே கழட்டி வச்சுட்டு, இங்கே வந்திருக்கேன். இப்ப திரும்பிப் போய் அந்த ஈகோவை எடுத்து

மாட்டிக்கணுமேன்னு வெறுப்பா இருக்கு!" ஹம்ஸவர்த்தினி சொன்னாள்.

"எனக்கும் திரும்பி போகணும்னு நினைக்கறச்சே கஷ்டமா இருக்கும்னு ஃபீல் பண்ணறேன்!" சுபாங்கி சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவள் வயிற்றில் சில அசைவுகள்.

அதை ரசித்தபடி சுபாங்கி ஹம்ஸாவைப் பார்த்துச் சிரித்தாள்.

"என்ன உதைக்கிறானா?" ஹம்ஸா நகைத்தாள்.

தலையசைத்த சுபாங்கி, ஹம்ஸாவை மீண்டும் வியப்புடன் பார்த்தாள்.

"டாக்டர்! உங்களோட பெரிய க்ளினிக் அப்படியே அம்போன்னு விட்டுட்டு, இந்த கிராமத்துல வந்து தங்கியிருக்கறதுக்கு உண்மையான காரணம் என்ன? ப்ரொஃபசர் வனமாலியோட ஆரோக்கியத்துக்காக அவர் எழுதற புத்தகத்துக்கு உதவி செய்யறதுக்காகன்னு நீங்க சொல்றது எல்லாம் ஓகே! பட்.. எனக்கு இந்த ரீஸன் எல்லாமே புகைத்திரையாதான் படறது! புக் எழுதணும்னா கோவூருக்கு ஏன் வரணும்? ஊட்டி கொடைக்கானல் போகலாமே!" சுபாங்கி கேட்க, ஹம்ஸா கோவில் கோபுரத்தை வெறித்துப் பார்த்தாள்.

"இது சின்னஞ்சிறு உலகம், சுபாங்கி! நான் கோவூர் வந்த முக்கிய காரணம் பின்னாடி ஒரு பெரிய கதை இருக்கு!"

"நானும் நரேனும் ஒரு காரணத்தோடத்தான் கோவூருக்கு வந்தோம்! எங்க அப்பா காசிலிங்கம், பெரிய வீட்டு எஜமானி பாஞ்சாலியம்மாவோட சொந்தத் தம்பி. அவங்க எனக்கு அத்தை! என் அப்பா காசிலிங்கத்துக்கு அவங்க அக்கா மேல கொள்ளை பிரியம்! நரேனும் நானும் மாதிரிதான். ஆனா.. பாஞ்சாலியத்தை பெரிய குடும்பத்து மருமகளா மாறின உடனே நிலைமை தலைகீழா மாறிப் போச்சு! அத்தை கணவர் தான் தோணி பாண்டி பொல்லாத மனுஷன் பாட்டி அழகா டிரஸ் பண்ணிகிட்டா பூவை பிச்சு போட்டு, கூந்தலை கலைச்சுடுவாராம்! அதனால் என் அத்தை அவ்வளவு அழகா இருந்தும், அலங்காரமே செஞ்சுக்க மாட்டாங்களாம். அவங்க புருஷன் எங்க அத்தையை நடத்தின விதத்தை கேட்டு எங்க அப்பா காசிலிங்கம் கலங்கி போயிட்டாரு! ஒரு முறை எங்கப்பா நியாயம் கேட்க போயி அவமானப்பட்டு வந்தாரு!"

"அதனால எங்க தாத்தாகிட்டே, பாஞ்சாலி அத்தையை ஒழுங்க நடத்தினாதான்.. அவளுக்கு சேர வேண்டிய 100 ஏக்கர் மஞ்சகாணி நிலத்தை கொடுப்பேன்னு கண்டிஷன் போட்டாரு!"

"ஆனா.. தாத்தா ஒப்புக்கலை! கொடுத்து தொலைச்சுடலாம்னு அதற்கான ஏற்பாடுகளை செஞ்சுகிட்டு இருந்தப்ப தாத்தா இறந்துட்டாரு!"

"தாத்தாவோட சாவுக்குக் கூட பாஞ்சாலி அத்தையை அனுப்பலே! அதனால் அப்பா அத்தைக்குத் தரவேண்டிய மஞ்சகாணி சொத்தை தர மறுத்துட்டாரு!"

"எங்கப்பாவுக்கு அப்புறம்தான் கல்யாணமே நடந்தது. கல்யாண பத்திரிகையை நேரா போயி தாம்பூலத்துல வச்சு கொடுத்தாரு!"

"அந்த சமயத்துல வண்ணான் கழுதை மேல சலவைத் துணியை வச்சுகிட்டு வந்தான்! தான் தோணி பாண்டி கழுதைக்கிட்டே போனாரு,"

"கழுதையே கழுதையே.. காசிலிங்கத்துக்கு கல்யாணம்! போய் வரவான்னு சொல்லி அந்த கல்யாண பத்திரிகையை கழுதை வாய்கிட்டே கொண்டு போக, அது அந்த இன்விடேஷனை தின்னுடுச்சு!"

ஹம்ஸா சிறிய இடைவெளி விட, ஆர்வமாக கேட்டுக் கொண்டிருந்த சுபாங்கியின் முகம் மாறியது.

"ஹவ் க்ரூயல்?"

"இதனால் எங்க அப்பா மனசு நொந்து போய் பெரிய குடும்பத்து உறவையே அறுத்துட்டாரு. பாஞ்சாலி அத்தையை பார்க்கவே முடியலைன்னு குமுறி அழுவாரு!"

"அத்தை பாவம்! பொறந்த வீட்டு உறவும் முறிஞ்சு போச்சு! புகுந்த வீட்டுலயும் சுகமில்லை. அவங்களுக்கு நாலு பிள்ளை, ஒரு பொண்ணு. பொண்ணுக்கு ரேணுகான்னு பெயர் வச்சு செல்லமா வளர்த்தாங்க. ஒரு திருவிழாவுல அவளை பார்த்ததோடு சரி! பேசினது கிடையாது. சொந்த அத்தை பிள்ளைகளைப் பார்த்ததும் கிடையாது. பழகினதும் கிடையாது."

"நாங்க மேல்படிப்புக்காக சென்னைக்கு போயிட்டோம். அப்பாவும் கோவூருக்கு போறதே இல்லை."

"அப்பதான் பாஞ்சாலியத்தைக்கு கோவிலுல காமதேனு தரிசனம் கிடைச்சு, ரேணுகா பிறந்து அவங்க குடும்பம் பெரிசா வளர்ந்துடுச்சு."

"நானும், நரேனும் டாடக்டர்களாகிட்டோம். பெருமை இருந்தாலும், ரெண்டு பேரும் கல்யாணம் ஆகாம தனிமரமா இருக்கோம்னு அவருக்கு ரொம்ப வருத்தம். மஞ்சகாணி சொத்தை அத்தைக்கு கொடுக்காததாலதான் நாங்க கல்யாணம் ஆகாம இருக்கோம்னு, ஜோஸ்யன் சொன்னதை நம்பி பயந்து

போய், ரேணுகாவை பெண் கேட்டு உறவுக்காரரை அனுப்பினார். சகோதரர்கள் அந்த உறவுக்காரரை அடிச்சு அனுப்பிட்டாங்கன்னு எங்கப்பாக்கு ஒரே வருத்தம்! ரேணுகா திடீர்னு தற்கொலை பண்ணிக்கிட்டா! எங்களுக்கு ஷாக்!"

"இந்த நிலையில என்னோட ஹாஸ்பிட்டல்ல டாக்டர் ஜெகதான்னு என் ஃபிரெண்ட் வேலைப் பார்த்தாள். அவங்களோட தங்கையோட சின்னப்பொண்ணு தமயந்தியை அந்த வீட்டு கடைசி மகன் குணசேகரனுக்கு சம்பந்தம் பேசினாங்க! நல்ல இடமான்னு ஜெகதா என்னை கேட்க, நான் சூப்பர் இடம்னு சொல்லிட்டேன். கல்யாணமும் நடந்து போச்சு!"

"திடீர்னு ஒரு நாள், ஜெகதா தன் தங்கையை அழைச்சுகிட்டு என்னைப் பார்க்க வந்தாங்க!"

"அவங்க கோபமா பேசினாங்க! நல்ல இடம்னு சொன்னியே! என் தங்கை பொண்ணு கஷ்டப்படறாள்! அவ கர்ப்பவதியா இருக்கச்சே கோவிலுல அவளுக்கு காமதேனு தரிசனம் ஆனதாம். அவளுக்கு பிறந்தப் பொண்ணை சாமியாகவே மாத்திட்டங்க! தன் பொண்ணுக்கு நார்மல் வாழ்க்கையே இல்லைன்னு அழறான்னு புகார் சொன்னா."

"அப்பதான் ரேணுகாவோட திடீர் தற்கொலையால நாங்க எல்லாரும் வருத்தப்பட்டுக்கிட்டு இருந்த சமயம்! பாஞ்சாலி

அத்தைக்கு பேரழகியா ஒரு பொண்ணு பிறந்து, நாங்க எல்லாரும் யாருன்னு தெரிஞ்சுக்காமலே இறந்துட்டாளேன்னு எங்க மனசு ஆறவே இல்லை."

"என்னால அப்ப ஜெகதாவுக்கு பதில் சொல்லவே முடியலை."

சுபாங்கி அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

"சுபாங்கி! உனக்கு ஞாபகம் இருக்கா! தாஜ் க்ளப் ஹோட்டல், ஒயாஸிஸ் ரெஸ்டாரெண்ட்ல நரேன் சந்தீப்புக்கும், உனக்கும் பார்ட்டி கொடுத்தானே! அப்ப அவன் தன்னோட லவ் ஸ்டோரியை முதல் முதலா சொன்ன போதுதான் அவன் ரேணுகாவை காதலிச்ச விஷயமே எனக்கு தெரிந்தது. அத்தைக்கு ரேணுகாங்கிற பொண்ணு இருக்கிறதே அவனுக்கு தெரியாது! ஏன்னா அவன்கிட்டே நாங்க குடும்ப விஷயங்கள் ரொம்ப பேசமாட்டோம்."

"சொந்த அத்தைப் பெண்ணையே அவன் விரும்பியிருக்கான். பெரிய குடும்பத்து உறவு அறுந்து போன பிறகு நரேன் பிறந்ததால் அவனுக்கு கோஹூர் குடும்பத்தை பத்தி ஒண்ணுமே தெரியலை."

"அப்பப்ப ஜெகதா மூலமா, தமயந்திகிட்டே பேசி பெரிய குடும்பத்து விஷயங்களை வாங்குவேன்! அப்புறம் தமயந்தியே எனக்கு நெருக்கமாயிட்டா."

"ஒருநாள், நரேன்கிட்டே எல்லா கதையும் சொன்னேன். தான் லவ் பண்ணி கல்யாணம் பண்ணிகிட்ட ரேணுகா, தன்னோட சொந்த அத்தைப் பொண்ணுன்னு தெரிஞ்சதும் நொறுங்கிப் போயிட்டான். பாஞ்சாலி அத்தையை பைத்தியமா அடைச்சு வச்சிருக்கிறது, ரேணுகாவுக்கு நேர்ந்த கொடுமையான முடிவு, தேனுகா படற கஷ்டங்கள் எல்லாத்தையும் நரேன் கிட்டே சொன்னேன்."

"அக்கா! நடந்ததெல்லாம் போகட்டும்! அட்லீஸ்ட் தேனுகாவையாவது வாழ வைப்போம்னு சொன்னான். நரேன். அதனாலதான், வனமாலி புத்தகம் எழுதணும்னு சொன்னப்ப கோவூரை தேர்ந்தெடுத்தோம்."

"எப்படியாவது தேனுகாவை அந்த குடும்பத்துப் பிடியில இருந்து காப்பாத்தி, அவளுக்கு ஒரு நல்ல மண வாழ்வு அமைச்சு தரணும்னுதான் நானும், நரேனும் கோவூர்லயே திரிஞ்சுகிட்டு இருக்கோம். என் அத்தையை பார்க்கணும்னு எனக்கு ஆசை! என்னை யாருன்னு தெரியாம பார்க்க வந்த சகோதரர்கள் என்னை விருந்துக்கு கூப்பிட்டாங்க! ஆனா,

எங்க அப்பா போக விரும்பாத இடத்துக்கு நாங்களும் போக விரும்பலை!"

ஹம்ஸா கதையை கூறி முடித்ததும் இறுக்கமான முகத்துடன் அமர்ந்திருந்தாள், சுபாங்கி.

"டாக்டர்! அன்னைக்கு நரேன் அங்கிள் சொன்ன கதை ரொமான்டிக்கா இருந்தது! உங்க கதை சோகமா இருக்கு!" சுபாங்கி சொன்னாள்.

"எல்லா குடும்பங்களையும் இந்த மாதிரி கதை இருக்கும், சுபாங்கி. நாமதான் ரிக்கார்டு செய்யறதில்லை..!" ஹம்ஸா சொன்னாள்.

"டாக்டர்! தேனுகாவுக்கு நானும் உதவி செய்யக் தயார்! என்ன ஹெல்ப் வேணுமானாலும் செய்யறேன்." என்றாள் சுபாங்கி.

"நீ ஏற்கெனவே அவளுக்கு பெரிய ஹெல்ப் செஞ்சிருக்கே!" என்று விஷமத்துடன் கூறினாள் ஹம்ஸா.

"என்ன ஹெல்ப், டாக்டர்?" வியப்புடன் கேட்டாள் சுபாங்கி.

"இப்ப ஒண்ணும் கேட்காதே! நேரம் வர்றச்சே நானே சொல்றேன்!" என்று தன் நாற்காலியை விட்டு எழுந்தாள் ஹம்ஸா.

# அத்தியாயம் 45

**செ**ன்னை -

சந்தீப்பின் செல்ஃபோனில் அழைப்பு வர, காமேஷ் செல்லை எடுத்துப் போய் நீட்டினான்.

கிரிக்கெட் பயிலும் மாணவர்களுக்கு 'லெக்சர் டெமான்ஸ்டரேஷன்' ஒன்றை நடத்திக் கொண்டிருந்த சந்தீப் தனியா சென்று மொபைலில் பேசினான்.

கொல்கத்தாவில் இருந்து சந்தீப்பின் சித்தி சந்தோஷி மோஷியின் வக்கீல்தான் சந்தீப்பை அழைத்திருந்தார். கோடிக்கணக்கான தனது சொத்துக்களை சந்தீப் ஷங்கரின் பெயரில் எழுதி வைத்து விட்டு இறந்து விட்டாராம் சந்தோஷி! அவர் அப்படி சந்தீப்புக்கு தன் சொத்துக்கு எழுதி வைத்தது செல்லாது என்று அவரது புகுந்த வீட்டில் வழக்கு போட்டுள்ளார்களாம்.. சின்ன வயசுலயே விதவையாகிவிட்ட அவள் சொத்துக்கள் தங்களையே சேர வேண்டும் என்று அவர்கள் சித்தியின் உயிலுக்கு 'ஸ்டே' வாங்கி இருப்பதாக வக்கீல் சொன்னார்.

சந்தீப்பின் முகத்தில் எவ்வித மாறுதலும் இல்லை.

"கவலைப்படாதீங்க! சந்தீப் கேஸை நாம ஜெயிச்சுடலாம். ஏன்னா.. இது சித்தியோட பூர்வீக சொத்து.." லாயர் சொன்னார்.

"நோ ப்ராப்ளம் சார்! எனக்கு சித்தியோட சொத்துக்கள் வரலேனா கூட பரவாயில்லை! எனக்கு மனநிம்மதி கிடைச்சா போதும்! அது இப்ப நிறைய கிடைச்சிருக்கு!" என்று காமேஷை மதிப்புடன் பார்த்தவன் மொபைலை கட் செய்துவிட்டு காமேஷிடம் நீட்டினான்.

"கமான் பாய்ஸ்!" என்று மாணவர்களை நாடிச் சென்றான்.

ஒரு மனிதன் சாதிப்பதற்கு அவனுடைய சகவாசங்கள் நன்கு அமைய வேண்டும். தான்யா இருந்த வரை அவன் முன்னேறாமல் இருப்பதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் செய்திருந்தாள் தான்யா.

சுபாங்கி மனைவியாக இருந்தும், அவனை நல்வழியில் திருப்பாமல், தனக்கும், தான்யாவுக்கும் இடையே உள்ள ஒரு தன்மான பிரச்னையாகத்தான் சந்தீப்பை நினைத்திருந்தாள், சுபாங்கி.

ஆனால் -

உறுதியும் தன்னம்பிக்கையும் செயல் வேகமும் கொண்ட காமேஷின் சகவாசம் சந்தீப்பை புதிய திசையில் திருப்பி விட்டது.

கோடிக்கணக்கான சொத்துக்களை வேண்டாம் என்று கூறுமளவுக்கு தன்னம்பிக்கை பெற்றிருந்தான், சந்தீப்.

இதை சுபாங்கி உணர்ந்து கொண்டால் நன்றாக இருக்கும் என்று காமேஷ் நினைத்தான்.

சந்தீப்புக்கு உறுதுணையாக இருந்து கொண்டு அவரை கிரிக்கெட் அகாடமியின் செயலாளராக திறம்பட நடத்தி வருகிறான் காமேஷ்.

கோவூர் வீட்டை காலி செய்து விட்டு சென்னை மயிலையில் குடியேறிவிட்டான் காமேஷ். குலதனத்துக்கும் சிவநேசனுக்கும் கபாலி கோவிலும் அதனைச் சார்ந்து உள்ள நிகழ்வுகளுமே பொழுது போக்காகி விட்டது.

தேனுகாவை மட்டுமல்ல! கோவூரையே நினைத்து பார்க்க நேரமில்லை காமேஷுக்கு. சந்தீப்பின் அகாடமியில் அன்றாடம் நிறைய மாணவர்கள் சேர்ந்து கொண்டு இருக்கிறார்கள். சந்தீப்பின் அகாடமி வேகமாக, வளர்ந்து வருகிறது. அவனும் புதிய உத்வேகத்துடன் எழுந்து விட்டான்.

சந்தீப்பை புது மனிதனாக மாற்ற வேண்டி காமேஷ் செய்த தியாகங்கள் அநேகம்! எனவேதான் இனி தன் வாழ்க்கைக்கு தேனுகா தேவையில்லை என்கிற முடிவுக்கு வந்துவிட்டான்.

இனி பாண்டி சகோதரர்களே இவன் கையைப் பிடித்து தேனுகாவை தாரை வார்த்து கொடுத்தாலும், இவனுக்கு தேனுகா வேண்டாம்!

# அத்தியாயம் 46

ஆவணி அஷ்டமி -

தேனுகாவுக்கு 18 வயது நிரம்பப் போகிறது!

இன்னும் சிறிது நேரத்தில் கோவூர் தேனுகாம்பாள் - காமேஷ்வரர் ஆலயத்தில் சுபகாயை யாகம் துவங்க உள்ளது. பெரிய வீட்டில் இந்த முறை யாரும் காமதேனுவை தரிசிக்கும் நிலையில் இல்லை! என்ன நடந்தது என்பது தெரியாமல் தேனுகா அத்தனை சௌபாக்கியங்களையும் இழந்து விட்டாள்.

பெரிய பாண்டிக்கு மார்பு வலியில் துவங்கி, பாரிச வாயு தாக்கி கைகால் இழுத்து, வாய் கோணி பேச்சிழந்து, அவரது கம்பீரத்தை இழப்பதற்கு என்னவெல்லாம் நிகழ வேண்டுமோ அவை நடந்து விட்டன.

இசக்கி பாண்டியின் அரசியல் ஆசைகள் புஸ்வானம் ஆகி விட்டன. கட்சிக்கு விரோதமாக செயல்பட்டதாக கட்சியை விட்டு நீக்கப்பட்டதை பெருத்த அவமானமாக நினைத்தான் இசக்கி.

செந்தூர பாண்டி இப்போது விந்தி விந்தி நடக்கிறார். செந்தூரப்பூவே பாடிய பாண்டி இப்போது சப்பாணியாகி விட்டார் என்று கோவூரில் கிண்டல் செய்கிறார்கள்.

பிள்ளையை இழந்த சோகத்தில் பாஞ்சாலியைப் போலவே தனது படுக்கையறையில் தனக்குத் தானே சிறைவாசத்தை விதித்துக் கொண்டு விட்டாள் அங்கண்ணி. மற்ற இருவரின் பிள்ளைகளும் இருந்தும் புண்ணியமில்லை என்கிற நிலை.

பெரிய குடும்பத்தின் நிலங்களில் விளைச்சலே இல்லை.

தேனுகாவை சுற்றி காவலைப் பலப்படுத்தியிருந்தும், எப்படி அவளது மஹிமைகள் மாயமாக மறைந்தன என்பது குடும்பத்தாருக்கு இன்னும் புலப்படவில்லை. அதைக் கண்டுபிடித்துச் சொல்வதற்கு அழகர் கோடங்கியும் இல்லை.

காமேஷின் குடும்பமே ஊரை விட்டு போய் விட்டதில், தேனுகாவுக்கு ஏன் இந்த கதி!

எல்லாம் மாயமாகவே உள்ளது! பெரிய வீட்டில் எல்லோருமே நொடித்து போய்விட்டனர். இந்த வருஷம் கர்ப்பவதி யாரும் இல்லாத காரணத்தால், காமதேனுவின் தரிசனம் யாருக்கு கிட்ட போகிறதோ என்று நாகநாத குருக்கள் யோசித்துக் கொண்டிருந்தார்.

நடைபிணமாக நடந்துக் கொண்டிருந்தனர் பெரிய வீட்டார்! எல்லாம் செய்த பாவங்கள். ஒரே தங்கையை தகப்பனுடன் சேர்ந்து விஷம் வைத்து தற்கொலை செய்ய வைத்தது அவர்களை ஆட்டத் துவங்கியது. தாயை பைத்தியம் என்றி அறைக்குள் வைத்து பூட்டி, பணத்தின் பின்னாலே அலைந்தவர்கள் இன்று என்ன செய்வதென்று திகைத்துப் போய் உள்ளனர். சுருக்கமாக சொன்னால் அடங்கி ஒடுங்கிப் போய் விட்டனர்.

குடும்பத்துக்கு என்ன நேர்ந்தது என்பது, தனக்குள் அடிக்கடி சிரித்துக் கொள்ளும் தமயந்திக்குத்தான் தெரியும்.

தேனுகா இப்போதெல்லாம் தன் அறையை விட்டு வெளி வருவதில்லை. இனி காமேஷ் அவளை நாடி வந்தால்கூட இவள் அவனுக்கு பிரயோஜனப்பட போவதில்லை.

மஹிமைகள் இருந்தபோது கல்யாணத்தை எண்ணி பார்க்க முடியவில்லை! இப்போது மஹிமைகள் போய்விட்ட நிலையில் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் நிலையில் இவள் இல்லை..

# அத்தியாயம் 47

**சு**பகாயை யாகம் தொடங்கிவிட்டது. இந்த முறை பெரிய குடும்பத்துக்கு வழக்கமான வசதிகள் செய்து கொடுத்தும் அவர்கள் யாரும் யாகத்தில் கலந்துக் கொள்ள வரவில்லை. கற்பகம் மட்டும் வந்து சிறிது நேரம் பெயருக்கு அமர்ந்து விட்டு சென்று விட்டாள்.

இந்த வருஷம் காமதேனுவின் தரிசனத்திற்கு யாருமில்லை என்று கிராம மக்கள் பேசிக் கொண்டிருந்த போதுதான் டாக்டர் ஹம்ஸவர்த்தினியும், சுபாங்கியும் யாகம் நடைபெறும் மஹாமண்டபத்திற்கு வருவதைக் கண்டனர்.

"அதோ ஒரு கர்ப்பவதி வர்றாளே!" யாரோ ஒரு கிழவி கூவ, அனைவரின் கவனமும் சுபாங்கியின் மீது பதிந்தன.

"அம்மா இரு! அவள் ஒண்ணும் பெரிய வீட்டுப் பெண் கிடையாது! பெரிய வீட்டுப் பொண்ணுங்க கர்ப்பிணியாக இருந்தாதான் காமதேனுவை தரிசிக்க முடியும்!" இன்னொரு கிழவி சொன்னாள்.

சிறிது நேரம் யாகத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஹம்ஸாவும், சுபாங்கியும் பூர்ணாஹுதி

சமயத்தில் கூட்டம் முண்டியடிக்க, நெரிசலை தவிர்க்கும் பொருட்டு அவர்கள் இருவரும் கூட்டத்தை விட்டு, விலகி நடக்கத் தொடங்கினர்.

மாலை வேளைகளில் பார்ட்டி, செமினார், சினிமா என்று சுற்றி வந்த சுபாங்கிக்கு இதெல்லாம் ஒரு புதிய அனுபவம். கோவிலை வலம் வரும் எண்ணத்துடன் இருவரும் பிரஹாரத்தைச் சுற்றி வந்து பின்புறம் இருக்கும் நந்தவனத்தில் திரும்ப, அப்போது -

பின்னால் 'ஜல்.. ஜல்..' என்னும் சத்தம் கேட்க, சுபாங்கி திரும்பிப் பார்த்தாள். பார்த்தவள் திகைத்துப் போய் நின்றாள்.

'தெய்வீகமாக காட்சி தந்தது அந்த மாடு! மாடா! இல்லை! இல்லை! அந்த மாட்டின் முகம் அழகிய பெண்ணாக அல்லவா இருந்தது. பால் வெள்ளை நிறம்! முகத்திலும், கழுத்திலும், ஆபரணங்கள்! நீண்டு பின்னலிட்ட வால் முடி! மயிற்தோகை! முதுகில் அழகிய திமில்! திமிலைச் சுற்றி நவரத்ன ஹாரம்!'

'காமதேனுவின் மடி நிலத்தினை தொடுமளவுக்கு வழிந்திருந்தன. அந்தக் காமதேனு, சுபாங்கியை பார்த்து புன்னகைத்தபடியே அவளைக் கடக்க இனிமையான நறுமணம், சுபாங்கியின் நாசியை வருடியது.'

டாக்டரின் கையை இறுகப் பற்றியிருந்த சுபாங்கி, அவரது கையை உதறிவிட்டு, இரு கைகளையும் கூப்பி நிற்க, காமதேனு மீண்டும் அவளை ஒரு முறை பார்த்து புன்னகைத்து விட்டு நந்தவனத்தினுள் மறைந்து விட்டது.

"டாக்டர்!" பிரம்மிப்பிலிருந்து மீளாமல் ஹம்ஸாவை அழைத்தாள்.

"என்னாச்சு சுபாங்கி! அப்படியே நின்னுட்டே! அன்ஈசியா இருக்கா என்ன?" ஹம்ஸா கவலைப்பட்டாள்.

"இல்லை டாக்டர்! அவள் என் கண்ணுக்கு காட்சி தந்தாள்!" சுபாங்கியின் குரல் தழுதழுத்தது.

"யாரு?"

"காமதேனு! நீங்க சொன்னீங்களே! பாஞ்சாலியம்மாவுக்கு தெரிஞ்ச, தமயந்திக்கு தெரிஞ்ச அதே காமதேனு எனக்கும் தெரிஞ்சா! எனக்கு அவ காட்சி கொடுத்துட்டா! நான் எவ்வளவு பெரிய பாக்கியசாலி! இதெல்லாம் தெரியாம, சென்னையில கேவலமான ஒரு வாழ்க்கை வாழ்ந்திருக்கேன்! என்னையும் ஒரு பொருட்டா மதிச்சு, காமதேனு என்னை ஆசிர்வாதம் செஞ்சிருக்காளே!"

சுபாங்கியின் கண்களில் ஆனந்த கண்ணீர் பெருகுவதை கவனித்தாள், ஹம்ஸா.

வீட்டுக்கு திரும்பும் வழியில் தன் சந்தேகத்தை எழுப்பினாள், சுபாங்கி!

"டாக்டர்! பெரிய வீட்டு கர்ப்பவதிகளுக்குதான் காமதேனு தரிசனம் தருவாள்னு சொல்றாங்க! எனக்கு எப்படி தரிசனம் கொடுத்தாள்! பெரிய வீட்டுக்கும் எனக்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லையே! ஸோ.. அவங்க இத்தனை நாளா ஊரை ஏமாத்திட்டு வர்றாங்களா?" சுபாங்கி கேட்டாள்

சற்று நேரம் அமைதி காத்த ஹம்ஸா நின்று அவளை ஆழமாகப் பார்த்தாள்.

"பெரிய வீட்டுக்கும் உனக்கும் தொடர்பு இல்லைன்னு யார் சொன்னது? இப்ப நீ பெரிய வீட்டு பொண்ணுதான்! காரணம், உனக்கு கருமுட்டைகளை தானம் கொடுத்தது யாருன்னு நினைக்கிறே? பெரிய வீட்டு பொண்ணு தேனுகாதான்! அவ கருவைதான் நீ உன்னோட கர்ப்பத்துல சுமக்கறே!"

ஹம்ஸா சொன்னதும் சுபாங்கிக்கு ஏதோ புரிவது போல இருந்தது.

# அத்தியாயம் 48

**செ**ன்னை -

டாக்டர் ஹம்ஸவர்த்தினியின் கிளினிக்! சுபாங்கி அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்திருந்தாள். ஹம்ஸாவும் அவள் உதவியாளர் அவந்திகாவும் விசேஷ கவனம் செலுத்தி அவள் பிரசவத்தை பார்த்திருந்தனர்.

தனக்கு பெண் குழந்தை பிறந்திருக்கிறது என்பதை அறிந்ததும், அதற்கு 'காமினி' என்கிற பெயரை சூட்ட வேண்டும் என்று தீர்மானித்து விட்டாள் சுபாங்கி!

சுபாங்கிக்கு பெண் குழந்தை பிறந்திருப்பதை அறிந்து, அவள் அப்பா நித்யமூர்த்தியே கிளினிக்குக்கு வந்து விட்டார்.

வெளியே வராந்தாவில் நின்றிருந்த, சந்தீப்பை பார்த்ததும், "கங்கிராஜுலேஷன்ஸ்" என்று முணு முணுத்தார் நித்யமூர்த்தி.

பதிலுக்கு 'தேங்க்ஸ்' கூட சொல்லாமல் காமேஷிடம் ஏதோ பேசிக் கொண்டிருப்பது போல் பாவனை செய்தான், சந்தீப்.

"சந்தீப் கோ அண்ட் டாக் டு சுபாங்கி!" டாக்டர் நரேன் சொல்ல, ஒருவித தயக்கத்துடன் உள்ளே சென்றான் சந்தீப்.

சந்தீப் உள்ளே வந்ததை அயர்ச்சி மிகுந்த கண்களால் கவனித்தாள் சுபாங்கி.

"ஹலோ சந்தீப்!"

"ஹலோ சுபாங்கி!"

"மீட் யுவர் டாட்டர், காமினி! காமினின்னு பெயர் வைக்கலாம்னு நினைக்கிறேன்! பட்.. நீ தான் அப்பா! நீ என்ன பெயரை சொல்றியோ அதையே வைக்கலாம்!" புன்முறுவலித்தபடி கூறினாள், சுபாங்கி.

"இல்லை சுபாங்கி! பெயர் வைக்கிற முழு உரிமையும் உனக்குதான் இருக்கு. எனக்கு கொஞ்சம் கூட இல்லை!" சந்தீப் கூறினான்.

சுபாங்கி, அவனை நன்றியுடன் நோக்கினாள்.

"சந்தீப்! நீ எனக்கு எல்லா விதத்துலயும் ஏமாற்றங்களைத்தான் கொடுத்தே! முதல் தடவையா, என்னை ஏமாத்தாம, நான் கேட்டதை செய்து காட்டியிருக்கே!"

பெருமிதத்துடன் அவனைப் பார்த்தாள், சுபாங்கி.

சந்தீப்பின் முகம் கடுகடுத்தது! அவள் எங்கே வருகிறாள் என்பதும் புரிந்தது.

"என்னை அம்மாவாக்கணும்னு உன்னைக் கேட்டேன். அந்த ஆசையை நிறைவேத்தி இருக்கே! முதல் தடவையா நான் ஒண்ணு கேட்டு, நீ கொடுத்திருக்கே!"

சுபாங்கி சொல்ல, சந்தீப்பின் முகத்தில் எவ்வித உணர்ச்சியுமில்லை. சுபாங்கியை வெறுமையுடன் பார்த்தான்.

"பட் சந்தீப்! நீ இவ்வளவு காலம் என்னை ஏமாத்தினே! இந்த முறை, முதல் தடவையா நான் உன்னை ஏமாத்தி இருக்கேன்! அதுக்காக நீ என்னை மன்னிப்பியா?" சுபாங்கி அவனைத் தயக்கத்துடன் பார்த்தாள்.

"என்னை நீ ஏமாத்தினியா? எப்போ?" சந்தீப் குழப்பத்துடன் அவளை ஏறிட்டான்.

"சந்தீப்! கல்யாணமாகி எனக்கு குழந்தை பிறக்கலியான்னு என் ஃப்ரெண்ட்ஸ் கேட்டுகிட்டே இருந்தாங்க! டாக்டர் ஹம்ஸவர்த்தினிகிட்டே சோதனை செஞ்சுக்கிட்டேன். அவங்க என்னை டெஸ்ட் பண்ணிட்டு என்னோட கருமுட்டைங்க பலவீனமா இருக்கிறதால குழந்தை பிறக்கிறது கஷ்டம்னு சொன்னாங்க! யாராவது ஒரு லேடிகிட்டே கருமுட்டைகளை தானம் வாங்கி, உன்னோட விந்தணுக்களால் அதை ஃபர்டிலைஸ் செஞ்சு, என் கருப்பைல வச்சுடலாம்னு சொன்னாங்க! விந்தணுக்களால் அந்த பொண்ணோட

கருமுட்டையை விட்ரோ ஃபர்டிலைஷன் செஞ்சு, என் கருப்பைல வச்சாங்க, டாக்டர் ஹம்ஸா! அந்த கருவைதான் நான் சுமந்தேன்! அதுதான் நம்ம காமினி! உன்கிட்டே விஷயத்தை மறைச்சதுக்கு மன்னிச்சுடு!"

சந்தீப்பை கண்கலங்க பார்த்தாள், சுபாங்கி.

சற்று நேரம் அமைதி காத்த சந்தீப், பின் மெதுவான குரலில் பேசத் துவங்கினான்.

"சாரி சுபாங்கி! நீ மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் இல்லை! காரணம் என் அளவுக்கு வேறு யாராலயும் ஏமாத்த முடியாது. ஏமாற்றங்களை கொடுத்துக்கிட்டு இருக்கவும் முடியாது."

சுபாங்கி அவனை விசித்திரமாக பார்த்தாள்.

"இப்பவும் நான் ஏமாறலை சுபாங்கி! நீதான் ஏமாந்து இருக்கே!"

"என்ன சொல்றே சந்தீப்!" சுபாங்கி கண்களை பயத்துடன் விரித்தாள்.

"தான்யாவுக்கும், உனக்கும் என் விஷயமா, போட்டி நடந்தது இல்லே! அவ செத்ததால் உனக்கு வெற்றின்னு நீ நினைச்சுட்டே இல்லே! ஆனா செத்தாலும் வெற்றி

தான்யாவுக்குத்தான்! கார் விபத்துல அவ செத்து போனப்போ என்னோட ஆண்மையையும் கூடவே எடுத்துகிட்டு போயிட்டா! எஸ்! டாக்டர் நரேன் என் ப்ராப்ளம் பத்தி என்கிட்டே சொன்னபோது எனக்கு என்ன செய்யறதுனே தெரியலை!"

"அட்லீஸ்ட் என்னை அம்மாவாக்குன்னு நீ போட்ட கண்டிஷன் என் நினைவுக்கு வந்தது."

"ஏற்கெனவே நான் எல்லாத்தையும் இழந்து உன் முன்னாடி கேவலப்பட்டு நின்னேன். ஆண்மையையும் இழந்துட்டேன்னு சொன்னா நீ நிகேத்கிட்டே போய்டு வியோன்னு பயந்து என் செக்ரட்டரி காமேஷ் கிட்டே அவனோட ஸ்பர்மை டோனேட் செய்து என்னை அப்பாவாக்கும்படி கெஞ்சினேன்."

"அவன் முடியாதுன்னு சொன்னான். தான் தன் காதலிக்கு துரோகம் செய்ய முடியாதுன்னு சொன்னான். நான் அவனை கெஞ்சிக்கிட்டே இருந்தேன். யார் வீர்யத்தையோ என் மனைவி சுமக்கிறதைவிட என் உயிரைக் காப்பாற்றினவனோட வீர்யத்தின் மூலமா, நான் தகப்பன் ஆகறது தப்பில்லைன்னு சொன்னேன்."

"அவன் அப்படி செய்யலேன்னா, நீ என்னை விட்டுட்டு போயிடுவேன்னு சொல்லி அழுதேன்! வேற வழியில்லாம, காமேஷ் ஒப்புகிட்டான்."

"டாக்டர் நரேன் அவனோட விந்தணுக்களை சேகரிச்சுதான் இந்த கர்ப்பத்தை உருவாக்கினார். இப்ப அந்த கருமுட்டை உன்னுடையது இல்லேன்னு சொல்றது ஆறுதலான விஷயம்தான்! யாரோ ரெண்டு பேர் நமக்கு குழந்தைய உருவாக்கி தந்திருக்காங்க! அவ்வளவுதான்!" சந்தீப் சொல்ல, சுபாங்கியின் முகத்தில் நிலவிக் கொண்டிருந்த அத்தனை சந்தோஷங்களும் வடிந்தன.

"சந்தீப்! காமேஷ் விடாப்பிடியா மறுத்திருந்தா, ரோட்டுல போய் நின்று யாராவது விந்தணுக்கள் பிச்சை போடுங்கய்யா! நான் அப்பா ஆகணும்னு கேட்டிருப்பே இல்லை?" அருவருப்புடன் அவனை வெறித்தாள்.

"சுபாங்கி!" சந்தீப் அதிர்ந்தான்.

"நீ ரன் ஓடறதுல ரொம்ப வீக்னு உனக்கு வெற ரன்னர் தருவாங்க, பாத்திருக்கேன்! ஆனா, அப்பா ஆறதுல கூடவா உனக்கு ஹெல்ப் ரன்னர் வேணும். ச்சே! கிரிக்கெட் கேரியர்ல ஏமாத்தினே! பொறுத்துக்கிட்டேன்! என் டயரியை படிச்சே! பொறுத்துக்கிட்டேன்! ஜோஸ்யம்னு ஏமாத்தினே! பொறுத்துக்

கிட்டேன்! ஆனா.. இப்ப நீ செஞ்ச காரியம்.. எந்த ஆம்பிளையும் செய்ய மாட்டான்!" என்ற சுபாங்கி, அடுத்த வினாடி, "டாடி..!" என்று அலறினாள். அவளது அலறலைக் கேட்டு அத்தனை பேரும் அறைக்குள் ஓடி வந்தனர்.

# அத்தியாயம் 49

**ஹ**ம்ஸவர்த்தினி கிளினிக் -

ஹம்ஸவர்த்தினி எவ்வளவு தடுத்தும், சுபாங்கி தந்தை நித்யமூர்த்தியுடன் வீட்டுக்கு புறப்பட்டு விட்டாள். குழந்தையை திரும்பிப் பார்க்கக்கூட இல்லை.

"என்னம்மா சுபாங்கி! குழந்தையை விட்டுட்டு கிளம்பிட்டே?" நித்யமூர்த்தி அதிர்ந்தார்.

"அப்பா! அந்த குழந்தை கிடத்தப்பட்டிருக்கிற தொட்டிலுக்கு என்ன ரோலோ, அதே ரோல்தான் எனக்கும்! தேனுகாவோட கருமுட்டை! காமேஷோட வீர்யம்! உருவான குழந்தையை மட்டும்தான் நான் சுமந்தேன்! குழந்தையை சுமக்கிற நர்ஸ் ஆயா, மாதிரிதான் நானும்! இந்தக் குழந்தைக்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை!"

"டாடி! நீங்க சொன்னதுதான் கரெக்ட்! எனக்காகவே வாழற நிகேத்தான் எனக்கு தேவை! என் தேவைக்கு நான் தேர்ந்தெடுத்த ஆள் ஒரு 420!" என்றாள்.

டாக்டர் ஹம்ஸவர்த்தினியை பார்த்தாள், சுபாங்கி.

"டாக்டர்! எனக்கு உலகத்தை புரிய வச்சது நீங்கதான்! கோவூர்ல உங்களோட தங்கினது என்னோட பொற்காலம்! சாமியாவது பூதமாவதுன்னு அடிக்கடி நினைச்சுகிட்டு இருந்தவளுக்கு, கோவூர்ல இனிமையான அனுபவங்கள் கிடைச்சது! ஒரு வேளை, என்னை நல்வழிப்படுத்தத்தான் காமதேனு தரிசனம் கிடைச்சதோ என்னமோ?"

"காமேஷ்! நீயும் தேனுகாவும் சேரணும்னு அந்த காமதேனுவே நினைச்சப்புறம் யாரால் தடுக்க முடியும்!"

"உன் காதலியும், நீயும் சேர்ந்து உருவாக்கின குழந்தை! ஒருவருக்கொருவர் தெரியாம! எனக்கு காமதேனு தரிசனம் கிடைச்சதால, இப்ப காமினி தெய்வாம்சம் பொருந்தினவளா இருப்பான்னு நினைக்கிறேன்."

"சாரி காமேஷ்! காமினின்னு நான் ஏற்கெனவே பெயர் வச்சுட்டேன். நீதான் இந்தக் குழந்தைக்கு அப்பா! தேனுகாவோட டிஸ்கஸ் பண்ணி நல்ல பெயரா வச்சுடு! எல்லோருக்கும் போயிட்டு வரேன்!" என்ற சுபாங்கி, தந்தையுடன் தள்ளாடியபடியே நடந்து போக, சரியாக நிகேத் நித்யமூர்த்திக்கு ஃபோன் செய்ய, அவர் ஃபோனை சுபாங்கியிடம் நீட்டினார். நிகேத்திடம் பேசிக் கொண்டே, சுபாங்கி காரை நோக்கி நடந்தாள்.

தன் தலையில் கைவைத்தபடி சோர்ந்து அமர்ந்திருந்த சந்தீப்பின் கை வைத்தான் காமேஷ்!

"காமேஷ்! கேவலத்துக்கு நான் ஒரு அடையாளமாக போயிட்டேன்! இனி என் கிரிக்கெட் அகடாமிதான் என் வாழ்க்கை!" என்றபடி கையை குலுக்கி விட்டு வெளியேறினான்.

கையில் குழந்தையுடன் ஹம்ஸவர்த்தினி காமேஷை அழைத்துக்கொண்டு, முதல் மாடிக்கு சென்றாள். உள்ளே தேனுகா சோகமாக உட்கார்ந்திருந்தாள். காமேஷைக் கண்டதும், கதறியபடி அவனை நோக்கி ஓட, அவன் இரு கைகளையும் விரித்து அவளை ஏற்றுக் கொண்டான்.

காதலர்களின் உணர்ச்சி பிரவாகத்தில், தான் நனைந்து விடாமல், குழந்தையுடன் வெளியே ஒதுங்கிய ஹம்ஸவர்த்தினி, பிறகு மீண்டும் குழந்தையை தேனுகாவிடம் நீட்டினாள்.

"ரெண்டு பேரும் முதல்ல கல்யாணம் பண்ணிக்கணும்! குழந்தைய கொஞ்சறதுல, கல்யாணத்தை மறந்துட போறீங்க!" ஹம்ஸா சிரித்தாள்.

"டாக்டர்! சுபாங்கிக்கு என் கருமுட்டையை கொடுக்கணும்னு எப்படி யோசனை வந்தது?" தேனுகா கேட்டாள்.

ஹம்ஸா சிரித்தாள்.

"இதை நீ கேட்பேன்னு எதிர் பாத்தேன். சுபாங்கிக்கு இயற்கையிலேயே கருமுட்டைகள் வீக்கா இருந்தது. அதனால் சுஜாதாங்கற பொண்ணு அவளுக்கு கருமுட்டை தர முன் வந்தாள். நாங்களும் ரெடியாகிட்டு இருந்தோம்."

"இந்த நிலையிலதான் உன் அம்மா தமயந்தி என் கிட்டே வந்து அழுதாள்! என் பெண்ணை அவங்க கல்யாணம் செய்யாம சாமியாக்கிடுவாங்க! அவளோட கன்னித்தன்மை இருக்கிற வரைக்கும்தான் அவளும் மஹிமைகள் இருக்கும்னு தெரிஞ்சுக்கிட்டேன் என்றாள். பிறகு, நீயும் காமேஷை லவ் பண்ற விஷயத்தை என்னிடம் தமயந்தி சொன்னாள்."

"இந்த நேரத்துலதான் என் தம்பி நரேன் சுபாங்கி ஆபரேஷனை தள்ளிப் போடு! சந்தீப்பால விந்தணுக்கள் தர இயலாதுன்னு சொல்லிட்டான்! அப்பதான் சந்தீப்,

காமேஷ்கிட்டே பேசி அவனை தனக்காக விந்தணுக்களை தானம் பண்ண ஏற்பாடு செய்திருந்தது நரேன் மூலமா தெரிஞ்சது. உடனே சுஜாதாவை கேன்சல் செய்துட்டு, அந்த இடத்துல உன்னை அரேஞ்ச் பண்ணிட்டேன்."

"உன்னோட கருமுட்டையை காமேஷோட விந்தணுக்களால் ஃபர்டிலைஸ் செய்து, சுபாங்கி கருவுல வச்சுட்டேன்."

"லாப்ல விட்ரோ ஃபர்டிலைசேஷன் முடிஞ்ச அதே நேரம், பெரிய குடும்பம் எல்லா சௌபாக்கியங்களையும் இழந்துடுச்சு!" ஹம்ஸா விளக்க, காமேஷும், தேனுகாவும் குழந்தையுடன் அவள் காலில் விழுந்தனர்.

"தேனுகா! நியாயப்படி நான் உனக்கு அத்தை! ஆனா.. நான் உனக்கு இப்ப மாமியார்! ஏன்னா நானும், என் கணவர் வனமாலியும் காமேஷை தத்து எடுக்கப் போறோம், பிள்ளையா..!" ஹம்ஸா சொன்னாள்

"அப்படியா.. ஹம்ஸா! அப்ப நீ என் சம்பந்தி, காரணம் நான் தேனுகாவை தத்து எடுக்கப் போறேன். மகளா!" என்றார் நரேன்.

"ஓ.. அப்படியா? அப்படின்னா தேனுகாவுக்கு சொந்தமான 100 ஏக்கர் மஞ்சகாணியை மரியாதையா என் பிள்ளைக்குக்

கொடு," சம்பந்தி ஹம்ஸா மிரட்ட அங்கே 'குபீர்' சிரிப்பு கிளம்பியது.

தேனுகாவை பெரிய வீட்டுக் கெடுபிடியிலிருந்து மீட்டு அவளுக்கு மாமூல் குடும்ப வாழ்க்கையை அமைத்து தருவதற்காக, தாங்கள் மேற்கொண்ட திட்டங்கள், பலித்தமானதைக் கண்டு பெருமையுடன் ஹம்ஸவர்த்தினியும், நரேனும், வனமாலியும் கைகளை குலுக்கிக் கொண்டனர்.

"காமினி..!" இதுதான் நம் பெண்ணின் பெயர் காமேஷ் சொன்னதும், தலை அசைத்து சம்மதத்தை தெரிவித்தபடி அவன் தோளில் சாய்ந்தாள் தேனுகா.

ஒரு கையில் குழந்தையுடனும், மறுகையில் தேனுகாவையும் அணைத்தபடி காமேஷ் வெளிவந்த காட்சி கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது.

ஹம்ஸவர்த்தினி செல்ஃபோனில் தமயந்தியை தொடர்பு கொண்டாள்.

"தமயந்தி! ஆபரேஷன் காமதேனு சக்சஸ்! குழந்தையோடு தேனுகா தன் மாமியார், மாமனாரிடம் மாமா ஆசி வாங்க மயிலாப்பூர் கிளம்பரா! அப்புறமா கோவூர் வருவாங்க, பாஞ்சாலி அத்தைகிட்டே ஆசி வாங்க! கூட நானும், நரேனும்

வர்றோம்! என்னோட அப்பா காசிலிங்கத்தை அழைச்சுகிட்டு!" என்று ஃபோனை கட் செய்தாள் ஹம்ஸா.

சுபாங்கி மால்டீவ்ஸ் புறப்படும் அன்றைக்கு காமேஷ், தேனுகா, ஹம்ஸா, நரேன், வனமாலி ஆகியோர் ஏர்போர்ட் சென்று வழியனுப்பி வைத்தனர்.

# அத்தியாயம் 50

"அங்காயி..!"

"பெரியம்மாவின் ரூம் கதவைத் திற.." ஹாரத்துடன் ஒலித்தது தமயந்தியின் குரல்.

அவளுக்கு இனி அந்த வீட்டில் ஒரு பயமுமில்லை.

பாஞ்சாலி தளர்ந்து விட்டாள். இப்போதெல்லாம் அழுது புலம்புவதும் கிடையாது. வெறித்தப் பார்வையுடன் அம்போ என்று அமர்ந்திருக்கிறாள்.

"அத்தை!" அவளை உலுக்கி நிஜ உலகத்திற்கு வரவழைத்தாள், தமயந்தி.

"உங்க பேத்தி, என் பொண்ணு தேனுகாவுக்கு கல்யாணம் நிச்சயமாயிடுச்சு! இந்தப் பெரிய வீட்டுலதான் கல்யாணம் நடக்கப் போகுது!"

"நிஜமாவா..?" பாஞ்சாலியின் குரல் பலவீனமாக ஒலித்தது.

"ஆமாத்தை! உங்க தம்பி காசிலிங்கம். அவரு பொண்ணு ஹம்ஸவர்த்தினி, பையன் நரேன் இவங்க எல்லோரும் கூட நம்ம வீட்டுக்கு வந்து கல்யாணத்துல கலந்துக்கப் போறாங்க.

உங்க தம்பி மஞ்சகாணி சொத்துக்களை திருப்பி தந்ததுக்கும் அவங்கதான் காரணம்."

தமயந்தி கூறியதும் தான் பார்த்திராத தம்பியின் செல்வங்களை நினைத்துக் கண்ணீர் உகுத்தாள் பாஞ்சாலி.

"எழுந்திருங்கத்தை! நீங்க முதலில் இந்த இருட்டு ரூமை விட்டு வெளியே வாங்க!" என்றபடி பாஞ்சாலியின் கரத்தைப் பற்றி லிஃப்ட்டை நோக்கி சென்றாள்.

இனி பாஞ்சாலி அவளுடன் மூன்றாவது மாடியில்தான் வசிக்கப் போகிறாள். அவளுக்கு துணையாக என்றுமே விஸ்வாசமாக இருக்கும் அங்காயி. ஆம், அங்காயியின் நல்ல மனதும், துணையும் இல்லாமல், அந்த வீட்டில் அவளால் இவ்வவளவு பெரிய காரியத்தை சாதித்து இருக்க முடியுமா.

பாஞ்சாலியின் உடைமைகளை எடுத்துக் கொண்டு அங்காயி அவர்களைப் பின் தொடர்ந்தாள். அவள் வலது கையில் சுமந்திருந்த புகைப்படத்தில் ரேணுகா சிரித்துக் கொண்டே இருந்தாள். உடன் பிறந்த சகோதரர்களால், வலுக்கட்டாயமாக விஷம் குடிக்க வைக்கப்பட்டவள்தான்! ஆனால் காமதேனுவாக குடும்பத்திற்கு நல்ல வழியைக் காட்டிவிட்டாள். ஆட்டம் போட்டவர்களை எல்லாம் அடக்கி

வைத்து, நல்ல சிந்தனை உள்ளவர்களை புதிய நம்பிக்கையுடன் நடமாட வைத்து விட்டாள்.

குழந்தை காமினி பிறந்த வேளை. இப்போது பெரிய குடும்பத்தில் மனநிம்மதியும் சந்தோஷமும் குடி கொண்டுள்ளது..

# அத்தியாயம் 51

**பா**ண்டி ராஜ்யம் வீடு வண்ண விளக்குகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வீட்டின் நுழைவாயில் மைதானத்தில் பெரிய பந்தல் போடப்பட்டிருந்தது.

பந்தலின் மையத்தில் அமைந்திருந்த மணமேடை, மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

திருமணத்திற்கு ஊரே திரண்டு வந்திருந்தது. தேனுகாவின் தோழிகள் அனைவரையும் அவள் அழைத்திருந்தாள். கன்னிகா கணவன் அர்ஜுனுடன் வந்திருந்தாள். மற்ற தோழிகள் கூட திருமணமாகி, தத்தம் கணவன்மாருடன் வந்திருந்தனர். சாருலதா, மஞ்சு, இன்மொழி, வெண்ணிலா என்று ஒருவரை விடவில்லை.

காமேஷும் தன் பங்குக்கு தனக்கு வேண்டிய அத்தனை பேரையும் அழைத்திருந்தான். மஞ்சப்பையை பத்திரப்படுத்தி வைத்திருந்த ராஜம்மா, சுடலை கிழத்தம்பதியரையும் விட்டு வைக்கவில்லை. பேப்பர் ஐயரும், விசாலாக்ஷியும் விச்சுவுடன் வந்திருந்தனர்.

சந்தீப் ந்யூஸிலாந்தில்.. ஃபீல்டிங் கோச்சாக நியமிக்கப்பட்டு, அங்கே ஆக்லாண்டில் வசித்ததால் திருமணத்திற்கு அவன் வரவில்லை.. வாழ்த்து அனுப்பியிருந்தான்.

சுபாங்கி மால்டீவ்ஸிலிருந்து வாழ்த்து அனுப்பியிருந்தாள். தந்தை மூலம் தேனுகாவுக்கு ஒரு வைர நெக்லஸும், காமேஷுக்கு ஒரு காரும் பரிசளித்தாள்.

டாக்டர் நரேன், ஹம்ஸவர்த்தினி இருபுறமும் காசிலிங்கத்துடன் நடந்து வர, அவர்கள் வருவதைப் பார்த்து ஊரே பரபரப்படைந்தது. காட்டன் புடவையில், தலைசீவி, முகமெல்லாம் மலர்ச்சியுடன் அமர்ந்திருந்த பாஞ்சாலி, தன் தம்பி காசிலிங்கம் தன் முன் வந்து நின்றதும், அவன் யார் என்பதை உணர்ந்தவுடன், தன் வயதையும், உடல் நிலையையும் மறந்து, பாய்ந்துப் போய் அவனை அணைத்துக் கொண்டாள்.

தம்பியிடம் அவள் அறுபது வருஷங்களாக பேசத் துடித்திருந்த அத்தனை விஷயங்களையும், அக்கா - தம்பியின் அந்த ஒரு அணைப்பில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மெட்ரோ ஹாஸ்பிட்டல் டாக்டர்களும், நர்ஸுகளும் கூட கும்பலாக டாக்டர் காத்யாணியியின் தலைமையில் வந்தனர். கேரள எம்.பி.பணிக்கரும் குடும்பத்துடன் வந்திருந்தார்.

ஆட்டம் போட்ட பாண்டி சகோதர்கள் அடங்கி விட்டார்கள். மணமேடையில் அவர்கள் அமைதியாக அமர்ந்து கொண்டு வருவோர், போவோரை வணங்கிக் கொண்டிருந்தார்கள். காசிலிங்கம் மாமாவின் காலில் விழுந்து, தாங்கள் செய்திருந்த பாவங்களுக்கு மன்னிப்பு கோரினார்கள்.

தன் சோகங்களை மறந்து, அங்கண்ணி, கற்பகம் மற்றும் கலாவதி வருபவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தனர். தமயந்தியும், குணசேகரனும் திருமண மேடையிலேயே ஐக்கியமாகி விட்டனர்.

அங்காயி கிழவியும் அனைவருக்கும் தண்ணீரை விநியோகிக்க காண்டீபனும், தேனப்பனும் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தனர்.

தான் அமர்ந்து வேலை பார்த்திருந்த திண்ணையை அவ்வப்போது பார்த்து மகிழ்ந்த சிவநேசன், அவ்வப்போது அங்கே போய் அமர்ந்து விடுவார். அருந்ததி பல்லை கடித்தபடி, "மானத்தை வாங்காதப்பா..!" என்று அவரை மேடையின் முன்னால் குலதனத்துடன் அமர வைத்தாள்.

அவள் மகன் கண்ணனை சுமந்தபடி உமையாள் இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தாள்.

நாகநாத குருக்கள் தேனுகாம்பாள் - காமேஷ்வரர் கோவிலில் இருந்து பிரசாதங்களை கொண்டு வந்திருந்தார். மாசான கோடங்கி பாண்டியம்மன் கோவிலில் இருந்து பிரசாதங்களை கொண்டு வந்திருந்தார்.

கன்யா லக்னத்தில் தேனுகாவின் கழுத்தில் மங்கல நாணைப் பூட்டினான் காமேஷ்!

கல்யாணம் நடந்த இரவு, காமேஷ், தேனுகாவின் நண்பர்கள் அனைவரும் தோட்டத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது, "கெட் ரெடி ஃப்ரெண்ட்ஸ்!" என்று கன்னிகா கையில் ஒரு கண்ணாடி ஸீஸாவுடன் அங்கே வந்தாள்.

"கட்டளைச் சீட்டு விளையாடப்போறோம்..!" என்று கன்னிகா சொன்னதுதான் தாமதம், "ஆளை விடுங்கடா சாமி..!" என்று அலறிய காமேஷ், தேனுகாவை இழுத்துக் கொண்டு, மூன்றாவது மாடியில் இருந்த தேனுகாவின் குடியிருப்பை நோக்கி ஓடினான்.

அங்கே -

ஹாலில் அங்காயி அமர்ந்து அருந்ததியின் மகன் கண்ணனுக்கும், தேனுகாவின் மகள் காமினிக்கும் விளையாட்டு காட்டிக் கொண்டிருந்தாள்.

தேனுகாவை இழுத்துக் கொண்டு திறந்தவெளி பால்கனிக்கு சென்றான் காமேஷ்.

காமேஷ்வரர் கோவிலின் உயர்ந்த கோபுரத்தின் மீது ஒளிர்ந்து கொண்டிருந்த நிலவைப் பார்த்த இருவரின் மனங்களிலும் அதன் குளுமை பரவியது.

காமேஷ், தேனுகா பக்கம் திரும்பி நின்றான்.

"முதன் முறை குமாரகோம்மில் கொடுத்தது. உன்னை பார்த்து ஏற்பட்ட பிரமிப்பினால்.."

"இரண்டாவது முறை உன் பெட்ரூம்ல கொடுத்தது. என்னால உனக்கு பிரச்னை வேண்டாம் என்கிற வேதனையில் கொடுத்தது.."

"ஆனா, இப்ப கொடுக்கப் போறதுதான், உண்மையான காதலோட, மனநிறைவோட, மனநிம்மதியோட சாதிச்சு ட்டோம்கிற களிப்புல கொடுக்கப் போறேன்.." என்றபடி அவளை நோக்கி குனிய, அவளும் அதே உணர்வுகளுடன் அவனை வரவேற்றாள்.

காமேஷ்வரன் என்கிற காமேஷ், தேனுகாம்பாள் என்கிற தேனுவுக்கு கொடுத்த அந்த மூன்றாவது முத்தம் நிகழ்ந்த அதே சமயம், தேனுகாம்பாள் சிலையில் அணிவிக்கப் பட்டிருந்த பூமாலை ஒன்று தானாக கீழே விழுந்தது.

காமதேனுவின் முத்தம் நிச்சயம் இனி கோவூருக்கு மட்டுமல்ல, இந்த உலகத்திற்கே சௌபாக்கியங்களை அள்ளித் தரும் என்றே நம்புவோம்..

# முற்றும்

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. காலச்சக்கரம்
2. ரங்கராட்டினம்
3. சங்கதாரா
4. கர்ணபரம்பரை
5. குபேரவன காவல்
6. பஞ்சநாராயண கோட்டம்
7. அந்தப்புரம் போகாதே அரிஞ்சயா..



'காலச்சக்கரம்' நரசிம்மா என்கிற டி.ஏ. நரசிம்மன் 'தி இந்து' பத்திரிகையில் நிர்வாக ஆசிரியராக பணிபுரிகிறார். காலச்சக்கரம் இவரது முதல் நாவல். இதுவரை ஏழு நாவல்களை எழுதி, தனக்கு என்று ஒரு வாசகர் வட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு விட்ட அவரது எட்டாவது நாவல் காமதேனுவின் முத்தம்.

காலச்சக்கரம், ரங்கராட்டினம், சங்கதாரா, குபேர வன காவல், பஞ்சநாராயண கோட்டம், கர்ணபரம்பரை மற்றும் அந்தப்புரம் போகாதே அரிஞ்சயா! ஆகிய இவரது நாவல்கள் எல்லாமே
சரித்திரம் + மர்மம்,
அரசியல் + மர்மம்,
ஆன்மீகம் + மர்மம்,
குடும்பம் + மர்மம் என்கிற ரீதியில் உருவாக்கப் பட்டவை.



காமதேனுவின் முத்தத்தை காதல் + மர்மம் என்கிற ரீதியில் எழுதியுள்ளார். பல்வேறு பத்திரிகைகளில் இவரது கதைகள், கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

சின்னத்திரையிலும், கிருஷ்ணா காட்டேஜ், அபிராமி உள்ளிட்ட தொடர்களுக்கு கதை வசனம் எழுதியுள்ளார்.

இவரது தந்தை பிரபல இயக்குநர் சித்ராலயா கோபு. தாய் மறைந்த நாவலாசிரியை கமலா சடகோபன். குடும்பத்துடன் சென்னை திருவான்மியூரில் வசித்து வருகிறார்.

Rs.300/-